வெளியீடு : 16-06-2021 Issued: 16-06-2021

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு
(பதினைந்தாவது பேரவை)

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT
(FIFTEENTH ASSEMBLY)

வியாழக்கிழமை, மார்ச் 12, 2020—தொகுதி 73—எண் 3

Thursday, the 12th March 2020—Volume 73—No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

12–3–2020

உள்ளடக்கம்

	பக்கங்கள்
1. வினாக்கள்-விடைகள்—	
உடுக்குறியிட்ட வினாக்கள்	407-477
2. தகவல் கோரல்—	
கன்னியாகுமரி மாவட்டம், இரப்பர் தோட்டக் கழகத் தொழிலாளர்களின் தொடர் வேலைநிறுத்தப் போராட்டம்	477-481
திரு. என். சுரேஷ் ராஜன்	477-478
திரு. எஸ். ஆஸ்டின்	479
திரு. செ. ராஜேஷ் குமார்	479
மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்	479-481
3. சிறப்புக் கவன ஈர்ப்பு—	
தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கம் குறித்து	482-506
டாக்டர் V.P.B. பரமசிவம்	482-485
*டாக்டர் ப. சரவணன்	485-488
திரு. கரி. இராமசாமி	489-490
*திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்	490-491
மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்	491-501
*திரு. துரைமுருகன்	501-505
மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி	503-505

பக்கங்கள்

4. மானியக் கோரிக்கைகள், 2020-2021, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 43-பள்ளிக் கல்வித் துறை *(ஆ) கோரிக்கை எண் 49-இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை* *(இ) கோரிக்கை எண் 20-உயர் கல்வித் துறை*	*506-734*
**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்*	*506, 529, 570, 571, 573, 586-592, 597-599, 624-629, 631, 643, 650, 653-661, 665, 669-670, 672-673, 699-730*
**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்*	*549,571, 579-580, 594-595, 597, 601-602, 634-635, 675-699, 731*
**முனைவர் க. பொன்முடி*	*572-577, 579, 581, 586-596, 598-602, 729-730*
மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி	*574-579, 662-665, 667-668*
மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்	*580-581, 666*
மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்	*581-585*
திரு. மு.க. ஸ்டாலின்	*582-583*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

4. மானியக் கோரிக்கைகள், 2020-2021, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

*திரு. துரைமுருகன்	585, 661-662, 667, 698-699, 729
*திரு. C.V. சேகர்	602-611
*திரு. ஆ. கோவிந்தசாமி	611-622
திருமதி எஸ். விஜயதரணி	523, 545, 565, 622-634, 637-638, 731
திருமதி ம. கீதா	636-647
திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்	528, 570, 647-652, 654-656, 659-665, 667-669, 671-675, 730
டாக்டர் ஆர்.டி. அரசு	648
திரு. தங்கம் தென்னரசு	657-658
மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	670-671

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 734-735

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, மாசி 29, திருவள்ளுவர் ஆண்டு—2051

2020 மார்ச் 12, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

படிப்பதற்குரிய நூல்களைக் குற்றம் இல்லாமல் கற்க வேண்டும். அதன்பிறகு கற்ற நூல்களில் அறிந்து கொண்டதற்குத் தக்கவாறு வாழ்க்கையில் அவற்றைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

76—

நியாய விலைக் கடையைப் பிரித்தல்

*55012—**திரு. பெ. சுப்ரமணி**:

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, டொக்குபோதனஅள்ளி ஊராட்சி, சிவலக்கலைகொட்டாய் நியாய விலைக் கடையைப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் சிவலக்கலைகொட்டாய் பகுதியைச் சேர்ந்த 100 குடும்ப அட்டைகளையும் சேர்த்து 641 குடும்ப அட்டைகளுடன் பூவல்மடுவு பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் சிவலக்கலைகொட்டாய் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.*

திரு. பெ. சுப்ரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். தருமபுரி தொகுதி, டொக்குபோதனஅள்ளி ஊராட்சி, பூவல்மடுவு நியாய விலைக் கடையிலிருந்து சிவலக்கலைகொட்டாய்க்கு ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை வேண்டும் என்று அந்த சுற்று வட்டாரத்தில் உள்ள பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். பூவல்மடுவு நியாய விலைக் கடையில் 641 குடும்ப அட்டைகள் உள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிவலக்கலைகொட்டாய் பகுதியில் 100 குடும்ப அட்டைகள் உள்ளதாகச் சொல்லியிருக்கிறார்கள். அங்கு 160–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் உள்ளதாக நான்* CSR *இடத்திலும்* Joint Registrar–*அவர்களிடத்திலும்* proposal *வழங்கியுள்ளேன். பூவல்மடுவு நியாய விலைக் கடைக்குச் செல்ல வேண்டுமென்றால் சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் நடந்து செல்ல வேண்டிய சூழ்நிலையில் அந்தப் பகுதி மக்கள் இருக்கிறார்கள். ஆகவே, அங்கே 160–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் உள்ளதால் அந்தப் பகுதி மக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

2020 மார்ச் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தப் பகுதியில் இரண்டு பகுதிநேர நியாய விலைக் கடைகள் மற்றும் தாய்க் கடையையும் சேர்த்து 3 நியாய விலைக் கடைகள் உள்ளன. இரண்டாவது, குடும்ப அட்டைகளும் குறைவாக இருக்கின்றன. நேற்றையதினம் துறையினரிடம் பெற்ற புள்ளிவிவரங்களின்படி, பூவல்மடுவு பகுதிநேர நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகளுக்குமேல் உள்ளன. அது கிராமப்புறக் கடையாக இருப்பதால் அதனை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றி, இதைப் பகுதிநேர நியாய விலைக் கடையாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதே நேரத்தில், இங்கே மாண்புமிகு மக்கள் பிரதிநிதிகள் அனைவருமே அதிகமான பகுதிநேரக் கடைகள் வேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு வைக்கிறார்கள். மக்கள் நலன்தான் இந்த அரசுக்கு முக்கியம். எனவே, அனைத்து மக்களுக்கும் இந்த அரசினுடைய நியாய விலைக் கடைப் பொருட்கள் தங்குதடையின்றி உரியவர்களுக்கு சென்றடைய வேண்டும் என்ற அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்கள் துறைக்கு நல்லதொரு ஆலோசனையை வழங்கியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில், துறை ரீதியாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிச்சயமாக விரைவில் நிறைவேற்றிக் கொடுக்கப்படும். ஏனென்றால், மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, அங்கிருக்கின்ற கடைக்கு அந்தப் பகுதி மக்கள் 3 கிலோ மீட்டர் மற்றும் அதற்கு மேலும் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, அதனைக் கருத்திற்கொண்டு அந்தப் பகுதியில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையோ அல்லது ஒரு நகரும் கடையோ கொண்டுவருவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு உறுதியாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.*

[2020 மார்ச் 12

திரு. பெ. சுப்ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது உண்மைதான். நானும் துறை அதிகாரிகளிடத்தில் விசாரித்தபொழுது பகுதிநேரக் கடையாக இருக்கும் நியாய விலைக் கடையை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றுவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்திருக்கிறோம் என்று தெரிவித்தார்கள். ஆகவே, விரைவிலே அந்த இடத்தில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை வழங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்து, தடங்கம் கிராமத்திலுள்ள நியாய விலைக் கடையில் 812 குடும்ப அட்டைகள் உள்ளன. அது என்னுடைய கிராமம். தோக்கம்பட்டி, கக்கன்ஜிபுரம், தோக்கம்பட்டி மேட்டுக்கொட்டாயிலிருந்து வருகின்ற பொதுமக்கள் தேசிய நெடுஞ்சாலை மற்றும் சேலம்-பெங்களூரு செல்லும் சாலைகளைக் கடந்துதான் தடங்கம் கிராமத்திற்கு வர வேண்டும். அந்தப் பகுதியிலே 197 கார்டுகள் உள்ளன. அனைத்து கார்டுகளுக்குண்டான proposals-ம் துறை சார்ந்த அதிகாரியிடத்திலே வழங்கியுள்ளோம். ஆகவே, அந்தத் தோக்கம்பட்டி கிராமத்திற்கு ஒரு புதிய நியாய விலைக் கடை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

அதேபோன்று, அதியமான்கோட்டை ஊராட்சி, ஏலகிரியான்கொட்டாயில் 700–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் உள்ளன. ஜீவா நகரில் 170–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் உள்ளன. எனவே, அந்தக் கடையிலிருந்து பிரித்து ஜீவா நகருக்கு ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை திறக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மிட்டஅள்ளி ஊராட்சி, கொமத்தம்பட்டி கிராமத்திலிருந்து வத்தல்மலை அடிவாரம் வரை இருக்கின்ற பொதுமக்கள் எல்லாம் கொமத்தம்பட்டியில் உள்ள நியாய விலைக் கடைக்குத்தான் வர வேண்டும். அது மலை சார்ந்த பகுதி. ஏறத்தாழ 160–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் அந்த வத்தல்மலை அடிவாரத்தில் இருக்கின்றன. ஆகவே, கொமத்தம்பட்டி கிராமத்திலிருந்து, அந்த நியாய விலைக் கடையினைப் பிரித்து, வத்தல்மலை அடிவாரத்திற்கு ஒரு

2020 மார்ச் 12]

பகுதிநேர நியாய விலைக் கடையை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கைகளை, இதுபோன்ற மக்கள் நலன் சார்ந்து வைக்கின்ற கோரிக்கைகளை ஏற்றுத்தான் கடந்த 2011 முதல் 29-2-2020 வரை ஏறத்தாழ 676 முழுநேர நியாய விலைக் கடைகளையும், 1,752 பகுதிநேர நியாய விலைக் கடைகளையும், ஆக மொத்தம் 2428 நியாய விலைக் கடைகளை மக்களுடைய பயன்பாட்டுக்காக இன்றைக்கு திறந்திருக்கிறது. ஆக, முழுநேர நியாய விலைக் கடைகள் மட்டும் 23,486, பகுதிநேர நியாய விலைக் கடைகள் 9,479 என 32,965 கடைகள் கூட்டுறவுத் துறையால் மட்டும் இன்றைக்கு நடத்தப்படுகின்றன. ஆனால், 1964ஆம் ஆண்டில் வெறும் 4,441 நியாய விலைக் கடைகள் மட்டும்தான் இருந்தன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக வரும்வரை, 1978 வரைக்கும் 4,441 கடைகள்தான் இருந்தன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக வந்த பிறகுதான், ஒரு கிராமத்திற்கு ஒரு கடை என்ற அளவில் 15,501 நியாய விலைக் கடைகளைக் கொண்டு வந்தார்கள். கார்டுகளை எல்லாம் கணக்கில்கொள்ளாமல், அனைத்து கிராம மக்களும் பயனடைய வேண்டுமென்று இதனைக் கொண்டு வந்தார்கள்.*

அதற்கடுத்து, படிப்படியாக இன்றைக்கு கூட்டுறவுத் துறையின் மூலமாக 32,965 கடைகள் வந்திருக்கின்றன. இருந்தபோதிலும், இன்றைக்கு அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் அவர்களின் பகுதியில் நியாய விலைக் கடைகள் வேண்டும், கடைகளைப் பிரிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதற்கென்று சட்ட விதிகள் இருக்கின்றன. என்னதான் கூட்டுறவுத் துறையின்மூலம் அனுப்பினாலும், நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரை இருந்தாலும், விதிகளுக்குட்பட்டு, சென்னையில்

[2020 மார்ச் 12

உள்ள உணவுப் பொருள் வழங்கல் ஆணையாளருடைய உத்தரவு இருந்தால்தான் புதிய நியாய விலைக் கடையைத் திறக்க முடியும்.

சட்ட விதிகள் இடம் கொடுக்காததால் நியாய விலைக் கடைகளைத் திறக்க இயலாத சூழ்நிலை இருக்கிறது என்பதை அறிந்துதான் துறை ரீதியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துச்சொல்லியதன் அடிப்படையில், இப்பிரச்சினைகளைக் களைகின்ற வகையில் இப்போது நகரும் கடைகளை அமைப்பதற்கு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதிவிரைவிலே நல்ல செய்தி மாமன்றத்தில் உள்ள எல்லா உறுப்பினர்களும் மகிழ்ச்சியடைகின்ற வகையில் துறையின் மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இயக்கத்தின் தலைவர், எங்களை இயக்குகிற தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். பொதுவாக, ரேஷன் கடைகளில், பொதுமக்கள் பயன்படுத்துகிற அரிசி மற்றும் உணவுப் பொருட்கள் நூற்றுக்கு 65 முதல் 70 சதவீதம் வழங்கப்படுவதாக அறிகிறேன். கிராமப்புறத்தில் என் தொகுதியில் கூட, ஒருசில பொதுமக்கள் சென்று கேட்கிறபோது, M.L.A., M.P. மூலமாக உங்கள் மேலதிகாரியை அணுகுங்கள் என்று சொல்கிறார்கள். எனவே, 100–க்கு 90 சதவிகிதம் குறையாமல் உணவுப்பொருட்களை வழங்க வேண்டும். மாதம் 30 நாட்களில், எல்லா நாட்களிலும் உணவுப் பொருட்கள் கொடுக்கப்படுவதில்லை. 30 நாட்கள் பணி நாட்கள். சனி, ஞாயிறு போக என்று பார்த்தாலும்கூட 15 நாட்களாவது கொடுக்கலாம். 3 நாட்கள், 4 நாட்கள் மட்டும்தான் நியாய விலைக் கடைகளில் உணவுப்பொருட்கள் வழங்கப்படுகின்றன. எனவே, உணவுப்பொருட்களை வழங்குகிற நாளை கூடுதலாகவும், உணவுப்பொருட்களுடைய அளவை 90 சதவிகிதம் குறையாமலும் கொடுக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

2020 மார்ச் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–10

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக முனைவர் கோவி. செழியன் அவர்கள் நல்ல கருத்து சொல்பவர். இதுபோன்று நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் கொடுக்கப்படவில்லை என்று தயவுசெய்து பேச வேண்டாம். யாருக்காவது, எந்த ரேஷன் கார்டுக்காவது உரிய பொருள் வழங்கப்படவில்லையென்று ஏதாவது ஒரு கடையைச் சுட்டிக்காட்டுங்கள். அப்படி யாரையாவது சுட்டிக்காட்டினால், உறுதியாக அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படும். இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில் ஒவ்வொரு கடைக்கும் உணவுப்பொருள் நகர்வு 5 சதவிகிதம் கூடுதலாக செய்யப்படுகிறது. ஒரு சிலபேர் வெளியூர் சென்றிருப்பார்கள். வெளியூர் சென்றவர்கள் அந்த மாதம் வாங்காமல் விட்டிருப்பார்கள். அடுத்த மாதம் அவர்களுக்குக் கொடுக்கும்போது, பற்றாக்குறை வந்துவிடக் கூடாது என்பதற்காக அவ்வாறு செய்யப்படுகிறது. முன்பெல்லாம் கடையில் உள்ள விற்பனையாளர் நினைத்தால் கொடுக்கலாம். அதுபோன்ற நிகழ்வுகளில் சில தவறுகள் எல்லாம் நடந்தன. இப்போது அவ்வாறு நடப்பதற்கான வாய்ப்பே கிடையாது. தற்போது* point of sales-*ல்* machine *வந்துவிட்டது. அவர்கள்* smart card–*ஐ காண்பித்து, அதன்மூலமாகத்தான்பொருட்கள் வழங்கப்படுகின்றன. இரண்டாவது, யார் உரிய* card *வைத்திருக்கிறார்களோ, அவர்களுக்கு* sms alert *சென்று விடுகிறது. வாங்காதவருக்குப் போயிருந்தால், உடனே அவர் வந்து* complaint *செய்யலாம். அதனால் தயவுசெய்து, தவறான தகவலை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டாம். யாராவது சொல்கிறார்கள் என்பதற்காக இந்த மாமன்றத்தில் தவறான தகவல்களைச் சொல்லவும் கூடாது. எந்த இடத்திலும், எந்தக் கடைக்கும், எந்தவிதமான குறைபாடும் இல்லாமல் அனைவருக்குமே பொருட்கள் சென்றடைகின்றன என்பதை இந்த மாமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்*

[2020 மார்ச் 12

வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன் அவர்கள்.*

திரு. அ.செ. வில்வநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். எனது ஆம்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பேரணாம்பட்டு ஒன்றியம், சின்னவரிக்கம் வேளாண்மை கூட்டுறவுச் சங்கத்தின்கீழ் இயங்கும் மிட்டாளம் ஊராட்சி, குட்டகந்தூர் நியாய விலைக் கடையிலிருந்து மலைவாழ் மக்கள் வாழ்கின்ற மலைப் பகுதியில் இருக்கின்ற பைரபல்லி பகுதிக்கு பகுதிநேர நியாய விலைக் கடையைப் பிரித்துத் தர வேண்டும் என்றும், அதேபோன்று மாதனூர் ஒன்றியத்திற்குட்பட்ட சாணாங்குப்பம் வேளாண்மை கூட்டுறவுச் சங்கத்தின்கீழ் இயங்கும் நாயக்கனேரி ஊராட்சி, பனங்காட்டேரி நியாய விலைக் கடையிலிருந்து காமனூர்தட்டு மலைவாழ் மக்கள், மலைப்பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் இருக்கின்ற பகுதியி ல் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையைத் திறக்க வேண்டும் என்றும் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் நான் கோரிக்கை வைத்தேன். அதனை சிறப்பு அனுமதியுடன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலோசித்து, ஆய்வு செய்து திறப்பதாகத் தெரிவித்தார்கள். பொது மக்கள் 4 கிலோ மீட்டர் தூரம் சென்று மிகவும் அவதிப்படுகின்ற காரணத்தினாலும், மலைவாழ் பகுதியான இவ்விரு பகுதிகளில் மக்கள் வாழ்கின்ற காரணத்தினாலும், மலைப் பகுதியில் இருக்கின்ற காரணத்தினாலும் சிறப்பு அனுமதியுடன் இந்தக் கூட்டத் தொடரிலேயே அதனை அறிவிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

2020 மார்ச் 12]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது உண்மைதான். காமனூர்தட்டு பகுதிக்கு ஏற்கெனவே நான் சென்றிருந்தேன். நாடாளுமன்றத் தேர்தல் பணிக்காகப் பொறுப்பேற்றிருந்தபோது, மாவட்ட ஆட்சித் தலைவருடன் நான் அங்கு சென்றிருந்தேன். இரண்டு மலைகளைத் தாண்டி அந்த மக்கள் அங்கு சென்று வருகிறார்கள். எனவே, சிறப்பினமாகக் கருதி அங்கே நியாய விலைக் கடையை அமைக்க வேண்டும், ஏற்கெனவே கடை கட்டியிருப்பதைத் திறக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அது விரைவாகத் திறக்கப்படும். அதில் மாற்றுக் கருத்து ஏதுமில்லை. சில சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. இரண்டாவது, இன்னொரு கடை பைரபல்லிக்குக் கேட்டீர்கள். மேலும், நகரும் கடையின் மூலமாகவும் மக்கள் வாங்குகின்ற பொது விநியோகத் திட்டப் பொருட்கள் தங்குதடையின்றி அந்தப் பகுதி மக்களுக்குச் சென்றடைய வேண்டும். சில சட்ட விதிகளைச் சொன்னால்கூட, அதை நீங்கள் தவறாக நினைப்பீர்கள். ஏனென்றால், உங்கள் ஆட்சிக் காலத்தில் நீங்கள் கொண்டுவந்த சட்ட விதிகள்தான். 150* cards, *500* cards, *1000* cards *இருக்க வேண்டும்; இவையெல்லாம் நீங்கள் கொண்டு வந்ததுதான். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) அதைத்தான் நான் சொல்கிறேன். (குறுக்கீடு) அதைத்தான் நான் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) நான் சொல்கிற பதிலிலேயே சொல்லிவிட்டேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட விதிகள் இருந்தாலும் சிறப்பினமாகக் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். நிறைய இடங்களில் 50 cards, *60* cards, *4 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர், ஏரி, குளங்கள், ஆறுகள், நெடுஞ்சாலை என சாலைகள் எல்லாம் வருகின்றன. இதையெல்லாம் கடந்து போகும்போது உயிரிழப்பு ஏற்படுகிறது. எனவே, இதையெல்லாம் கருத்தில்கொண்டு, நாம் கொடுக்கும் பொருட்கள் அந்தப் பகுதி மக்களுக்குச் சென்றடைய வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், சிறப்பாக, எல்லா உறுப்பினர்களும் மகிழ்ச்சியடைகின்ற*

வகையில் அறிவிப்பு விரைவில் வரும். துறை ரீதியாக ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள்; அறிவிப்பு விரைவில் வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

77—

பள்ளிக்குக் கட்டடம்

***6114—திரு. எம். செல்வராசு:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, பாப்பாப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, பூலாஞ்சேரி ஊராட்சி, பாப்பாப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ஏற்கெனவே போதுமான அளவில் 4 வகுப்பறைகள் கொண்ட இரண்டு கட்டடங்கள் பயன்பாட்டில் உள்ள நிலையில், கூடுதல் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 மார்ச் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு அவர்கள்.*

முற்பகல் 10–15

திரு. எம். செல்வராசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா உறங்கும் திசை நோக்கி வணங்குகிறேன். காவேரி டெல்டா பகுதி விவசாயிகளின் நெடுநாளைய கனவான காவேரி டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து, அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிசெய்த எளிமையும், இனிமையும் நிறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை அன்போடு வணங்குகின்றேன்.(மேசையைத்தட்டும் ஒலி) அமைதியும், அடக்கமும் நிறைந்து இந்த நல்லாட்சிக்குத் துணை நிற்கும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது முசிறி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பூலாஞ்சேரி ஊராட்சி, பாப்பாப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 85 குழந்தைகள் படித்து வருகின்றனர். அப்பள்ளியில் இருக்கக்கூடிய பள்ளிக் கட்டடம் மிகவும் மோசமாக பழுதடைந்த நிலையில் உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அப்பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டித் தருவாரா என்று கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முசிறி சட்டமன்றத் தொகுதி, தாத்தியாரம்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பூலாஞ்சேரி ஊராட்சி, பாப்பாப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 85 மாணவ, மாணவியர் 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயின்று வருகின்றனர். இந்த ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ஏற்கெனவே மொத்தம் 1,500 சதுர அடி பரப்பளவில் 4*

வகுப்பறைகள் கொண்ட 2 பள்ளிக் கட்டடங்கள் பயன்பாட்டில் உள்ளன. 2 பள்ளிக் கட்டடங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் 2003–2004 மற்றும் 2005–2006 ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்டு, நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளுக்கு தண்ணீர் வசதி மற்றும் கழிப்பிட வசதி ஏற்படுத்தித் தரப்பட்டிருக்கின்றன. மேலும், இப்பள்ளிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சியில் 2018–2019 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் சுற்றுச் சுவர் கட்டித் தரப்பட்டிருக்கின்றது. பாப்பாப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் பயிலும் 85 மாணவ, மாணவியர்களுக்கு தற்போது பயன்பாட்டிலுள்ள 4 வகுப்பறைகள் கொண்ட 2 பள்ளிக் கட்டடங்கள் போதுமான அளவில் உள்ளதால், கூடுதலாகக் கட்டடம் கட்டும் அவசியம் இல்லையென்று துறையின்மூலம் பதில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழுதடைந்துள்ளதாகச் சொல்லியிருக்கின்றார்கள். எனவே, அப்பள்ளி துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு அவர்கள்.

திரு. எம். செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பாப்பாப்பட்டி ஊராட்சி ஒன்றியம், வேலம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 110 குழந்தைகள் படித்து வருகின்றனர். அப்பள்ளியில் போதுமான கட்டட வசதி இல்லை. ஆகவே, அப்பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

2020 மார்ச் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் 2011 ஆம் ஆண்டிலிருந்து 5 ஆண்டுக் காலத்தில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மட்டும் ஒருங்கிணைந்த பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 946 ஊரகப் பள்ளிகளில், 11 பணிகள், 9 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதேபோல், நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசின் நான்காண்டு காலத்தில், ஒருங்கிணைந்த பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூபாய் 3 கோடியே 1 இலட்சம் மதிப்பீட்டில் 96 ஊரகப் பள்ளிகளுக்கு புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அப்பள்ளியில் 110 மாணவர்கள் படித்து வருவதாகக் கூறியிருக்கிறார்கள். கண்டிப்பாக, அப்பள்ளி துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியின் கல்வித் துறை நிருவகித்துக் கொண்டிருக்கிற தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் என்று அனைத்து பள்ளிகளுக்கான கட்டடங்கள், இதற்கு முன்னர் மாநகராட்சி நிதிநிலை அறிக்கையில், மூலதன நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டு, அது கூடுதல் வகுப்பறைகளாக இருந்தாலும், ஆய்வரங்கங்களாக இருந்தாலும், விளையாட்டுத் திடல்களாக*

இருந்தாலும், அந்த நிதியிலிருந்து செயல்படுத்தப்படுவதென்பது தொடர் வாடிக்கையாக இருந்து கொண்டிருந்தது. ஆனால், கடந்த 4 ஆண்டுகளாக, மாநகராட்சிப் பள்ளிகளைப் பொறுத்தவரை, அந்தந்தத் தொகுதிகளிலிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலேயே பள்ளிக் கட்டடங்கள் வேண்டும், ஆய்வகங்கள் வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை விடுத்து, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மட்டுமே கட்டப்படுகிற சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, முன்னர் இருந்ததைப்போலவே, மூலதன நிதியிலிருந்து அந்தப் பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை, குறிப்பாகக் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு நிதியினை ஒதுக்கீடு செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், மூலதன நிதியிலிருந்தும் கட்டப்படுகின்றன, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் நிதியிலிருந்து அவரவர்கள் பகுதியிலிருக்கக்கூடிய மக்கள் கோரிக்கை வைக்கின்றபோது, அந்தக் கட்டடங்களைக் கட்டிக் கொடுக்கிறார்கள். அப்பள்ளிகளில், நீண்ட காலமாக அவர்களுடைய பெயர்கள் நிலைத்திருக்கக்கூடிய அளவிற்குக் கொடுக்கிறார்கள். நீர்நிலைத் தொட்டி, கட்டடங்கள், ஆய்வகங்கள் அனைத்திற்கும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கொடுக்கிறார்கள். இருந்தாலும்கூட, கல்வித் துறையின்கீழ் 119 தொடக்கப் பள்ளிகள், 92 நடுநிலைப் பள்ளிகள், 38 உயர்நிலைப் பள்ளிகள் உள்ளிட்ட 281 பள்ளிகள் சென்னைப் பெருநகர மாநகராட்சியின்மூலம் செயல்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 12]

முற்பகல் 10–20

இதில், 2011 முதல் 2016 வரையுள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் 5 ஆண்டுக் கால பொற்கால ஆட்சியில், சென்னைப் பள்ளிகள் ரூ.29.51 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக 33 பள்ளிக் கட்டடங்கள், வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகளை தேவைப்படும் இடங்களில் மூலதன நிதி மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி என இரண்டிலிருந்தும் கட்டிக் கொடுத்திருக்கிறோம். அதுபோல், தொடர்ந்து அவசியமான இடங்களிலும் கட்டப்படுகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை கவனத்தில்கொண்டு அதன் அடிப்படையில் மூலதன நிதியிலிருந்தும் ஒதுக்கித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கடையநல்லூர் தொகுதிக்குட்பட்ட சுந்தரேசபுரத்தில் ஊராட்சி ஒன்றியப் பள்ளி மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதை நான் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் சென்ற வருடமே சொல்லியிருந்தேன். அந்தப் பகுதி என்பது ஏற்கெனவே கேரளாவோடு இருந்த பகுதி, ஓட்டுக் கட்டடங்களையுடைய பள்ளி. அந்த ஓடுகள் எல்லாம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், தற்போது அந்தப் பள்ளிக்கூடங்களில் யாரும் இல்லை. தற்போது அந்தக் குழந்தைகள் சமுதாய நலக் கூடங்களில் படித்துக் கொண்டிருக்கக்கூடிய நிலை உள்ளது. இது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக இருப்பதன் காரணமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் சொன்னார்கள். ஆனால், இதுவரையிலும் அங்கு பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. இதுகுறித்து எந்த அறிவிப்பும் வரவில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். எனவே, சுந்தரேசபுரம் பள்ளிக்கூடத்தில், போர்க்கால அடிப்படையில் பணிகளைத் தொடங்க வேண்டும்*

என்று இரண்டு வருடங்களாக நான் சொல்லி வருகின்றேன். அதுபோல, இலத்தூர் பகுதியிலும் கேரளாவைப்போல் இருக்கக்கூடிய ஓடு வேய்ந்த பள்ளிக் கட்டடங்கள்தான் உள்ளன. இதுவும் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்ற காரணத்தினால், இதுபோன்ற பள்ளிக்கூடங்களை சரி செய்யக்கூடிய வகையில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் சம்பந்தப்பட்ட கோரிக்கையினை வைத்தார்கள். கட்டமைப்புகள் மற்றும் வசதிகள் எங்களது உள்ளாட்சித் துறையின்கீழ்தான் இருக்கின்றன. தொடர்ந்து உள்ளாட்சித் துறைதான் மேற்கொண்டு வருகின்றது. அதனை எங்களிடம் அனுப்பிவிடுவார்கள். எனவே, அவர்கள் சொன்ன கோரிக்கை முழுமையாக எங்களிடம் வந்து சேர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊரகப் பகுதிகளில் உள்ள பல்வேறு ஆரம்பப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மாணவர்களுக்குப் போதிய அளவில் புதிய கட்டடங்கள் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளும்பொருட்டு பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. ஆண்டுதோறும் பழுதடைந்த பள்ளிக் கட்டடங்கள் மற்றும் அவற்றிற்கான உட்கட்டமைப்புகள், பழுதுபார்த்தல், பராமரிப்புப் பணிகள், இன்றைக்கு பல்வேறு நிதிகளின்கீழ், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் உள்ளூர் மேம்பாட்டுத் திட்டம், மாவட்ட ஆட்சித் தலைவர் தனி விருப்ப நிதி, தன்னிறைவுத் திட்டம், ஒருங்கிணைந்த பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், வட்டார, ஊராட்சி பொது நிதிகள் ஆகியவற்றின்மூலம் மாண்புமிகு புரட்சித் தலைவி

2020 மார்ச் 12]

அம்மா அவர்களின் 2011–2012 முதல் 2015–2016 வரையுள்ள ஐந்து ஆண்டுகளில் மட்டும் ரூ.390 கோடியே 39 இலட்சம் மதிப்பீட்டில் 21,650 பள்ளிகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்குப் பின்னர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மா அரசில் 2016–2017 முதல் கடந்த நான்கு ஆண்டுகளில் கிட்டத்தட்ட ரூ.198 கோடியே 68 இலட்சம் மதிப்பீட்டில் 7,877 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 6,833 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 1,044 பணிகள் மீதம் இருக்கின்றன. ஆக, கடந்த 9 ஆண்டுக் காலத்தில் ரூ.589 கோடியே 7 இலட்சம் மதிப்பீட்டில் சுமார் 29,554 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கடையநல்லூர் ஊராட்சி சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் கண்டிப்பாக துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்படும். அதுபோல், கேரளா ஓடுகள் உள்ள அந்தப் பள்ளிக் கட்டடங்களும் நன்றாக இருந்தால் விட்டுவிடலாம்; சரியில்லை என்றாலோ அல்லது பழுதுகள் இருந்தாலோ அவையும் கண்டிப்பாக தனிக் கவனமாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்கள் வாயிலாகத்தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.*

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது இயக்கத் தலைவர் தளபதி, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். நத்தம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் இரண்டு வருடங்களுக்கு முன்பு இடிக்கப்பட்ட கட்டடம் கட்டித் தரப்படுமா என அறிய விரும்புகிறேன். அங்கு சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் மரத்தடியில் பயில்கின்றார்கள். நத்தத்தில் வட்டாரக் கல்வி அலுவலகம் இடிந்துபோகின்ற நிலையில் உள்ளது. அதுவும் கட்டித் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகளை மனதில்கொண்டுதான் இந்த ஆண்டு நபார்டு திட்டத்தில் அது இணைக்கப்பட்டிருக்கின்றது. செப்டம்பர் மாதத்திற்குள் நபார்டு திட்டத்தில் அந்தப் பணிகள் நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

முற்பகல் 10–25

திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள குருமணாங்குடி மற்றும் நீலப்பாடி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு பள்ளிக் கட்டடங்கள் 60 ஆண்டுகளுக்கு முன்பாக ஓடு வேய்ந்த கட்டடங்களாகக் கட்டப்பட்டிருக்கின்றன. பருவமழை காலத்தில் மாணவர்கள் மழையில் நனையக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. எனவே, எங்களுடைய டெல்டா மாவட்டங்களில் ஒரு சிறப்புத் திட்டத்தை எடுத்துக்கொண்டு, 50 ஆண்டுகள், 60 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்டுள்ள அந்தக் கட்டடங்களுக்குப் பதிலாக புதிய கட்டடங்களை பள்ளிகளுக்குக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதியிலே உள்ள

2020 மார்ச் 12]

பள்ளிக் கட்டடங்கள் 60 ஆண்டுகளாக ஓட்டுக் கட்டடங்களாக இருக்கின்றன, பழுதடைந்து இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் கூறியிருக்கிறார்கள். அவரது கோரிக்கை துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, பழுதடைந்திருப்பின் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

கீழ்வேளூர் தொகுதியைப் பொறுத்தளவில், கஜா புயலால் பாதிக்கப்பட்ட சமயத்தில் எல்லா ஊர்களுக்கும் சென்றபொழுது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் எங்களுடன் வந்திருந்தார். அந்தப் பகுதியில் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கும் மக்கள் அதிகமாக இருப்பதால், கண்டிப்பாக உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.*

திரு. வெ. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டக்குடி சட்டமன்றத் தொகுதியில் உள்ள கழுதூர் அரசு மேல்நிலைப் பள்ளி, திட்டக்குடி அரசு மேல்நிலைப் பள்ளி, பெண்ணாடம் அரசு மேல்நிலைப் பள்ளி, ம. பொடையூர் அரசு மேல்நிலைப் பள்ளி, இந்தப் பள்ளிகளெல்லாம் துவங்கி சற்றேறக்குறைய 60 ஆண்டுகளுக்குமேல் ஆகின்றன. குறிப்பாக, அந்தப் பள்ளிகளில் உள்ள ஆய்வகங்கள் இருக்கக்கூடிய கட்டடங்களெல்லாம் இடிந்து, கூரைகளெல்லாம் மிகவும் பழுதடைந்துள்ளதால் ஆய்வகப் பொருட்களையெல்லாம் வைக்க முடியாமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் நேரடியாகச் சென்று அந்தப் பள்ளிகளை ஆய்வு செய்த காரணத்தால் அமைச்சர் அவர்களுக்கு இதனைச் சொல்கின்றேன். ஆகவே, நான் குறிப்பிட்ட இந்தப் பள்ளிகளில் உள்ள ஆய்வகங்களுக்கு கூடுதலாகக் கட்டடம் கட்டித் தரப்படுமா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி உள்ளாட்சித் துறைக்கான கேள்வி இல்லை. உள்ளாட்சித் துறையில் இருக்கிற நடுநிலைப் பள்ளிகள் வரையிலும் உள்ளாட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. ஆய்வுக்கூடம் என்பது உயர்நிலைப் பள்ளிகளில், மேல்நிலைப் பள்ளிகளில்தான் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை இந்த அரசு பரிசீலிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ், மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

78—

மீன் இறங்குதளம்

***35806—திரு. எஸ். பவுன்ராஜ்:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி வட்டம், சந்திரப்பாடியில் மீன் இறங்குதளம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி வட்டம், சந்திரப்பாடியில் மீன் இறங்குதளம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2020 மார்ச் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.

திரு. எஸ். பவுன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடமும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களிடமும், கடந்த 8 ஆண்டுகளுக்கு மேலாக நான் தொடர்ந்து வைத்த கோரிக்கையினை ஏற்றதற்கு நன்றி. பூம்புகார், மயிலாடுதுறை மற்றும் சீர்காழி சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள், மாவட்டத்தின் தலைநகருக்குச் செல்ல வேண்டுமென்றால், புதுச்சேரி மாநிலத்தைக் கடந்துதான் செல்ல வேண்டுமென்ற நிலையினை மாற்றி, நாகப்பட்டினம் மாவட்டத்தைப் பிரித்து, மயிலாடுதுறையை தலைமையிடமாகக் கொண்டு, புதிய மாவட்டம் தோற்றுவிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது என அறிவித்து, எங்கள் 3 தொகுதி மக்களையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியிருக்கும் டெல்டா மக்களின் பாதுகாவலர், விவசாயிகளின் தோழர், கலியுகம் கண்ட இரண்டாம் கரிகாற்சோழன், மக்களின் முதல்வர், சேலத்துச் சிங்கம், கொங்கு நாட்டுத் தங்கம், (மேசையைத் தட்டும் ஒலி) குடிமராமத்து நாயகன், காவேரி காப்பாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், எங்கள் கோரிக்கையை நிறைவேற்ற உறுதுணையாக இருந்த ஜல்லிக்கட்டு நாயகன், தென்பாண்டிச் சிங்கம், தேனி தந்த சொக்கத் தங்கம், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் O.P.S. அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அண்ணன் O.S.M. அவர்களுக்கும் மற்றும் அனைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் எனது சார்பாகவும், எனது பூம்புகார் தொகுதி மக்கள் சார்பாகவும், நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மயிலாடுதுறையை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க என்னோடு இணைந்து போராடிய அன்புச் சகோதரர்கள், மயிலாடுதுறை மற்றும் சீர்காழி தொகுதி சட்டப்

பேரவை உறுப்பினர்களுக்கும், 3 தொகுதிகளையும் சார்ந்த வர்த்தகச் சங்கம், வழக்கறிஞர்கள் சங்கம் மற்றும் விவசாயச் சங்கங்களைச் சேர்ந்தவர்களுக்கும், பொதுமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பூம்புகார் தொகுதிக்குட்பட்ட சந்திரப்பாடி மீனவர் கிராமம், ஏறக்குறைய 900 குடும்பங்களைச் சார்ந்த மீனவ மக்கள் வாழ்கின்ற கிராமம். அந்தக் கிராமம் காரைக்காலுக்கு அருகில் தனியாக இருக்கிறது. அங்கே செல்ல வேண்டுமானால் காரைக்காலை கடந்துதான் செல்ல வேண்டும். எனவே, அங்கே வசிக்கின்ற மீனவர்களின் வாழ்வாதாரமாக இருக்கின்ற முத்துக்காணை ஆற்றின் குறுக்கே மீன் இறங்குதளம் அமைக்க வேண்டும். மீனவர்கள், தாங்கள் கொண்டுவரும் மீன்களை இறக்குவதற்கு ஏதுவாக அந்த இறங்குதளத்தை அமைப்பது குறித்து மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலனை செய்து, அதுகுறித்து ஆய்வு செய்து, அங்கு மீன் இறங்குதளம் அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், 18 மீனவக் கிராமங்களைக் கொண்ட தொகுதி. எங்கள் மீனவ மக்களுடைய கோரிக்கையை ஏற்று, தமிழகத்தின் ஒப்பற்ற தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பூம்புகார் பகுதியில் ஒரு துறைமுகம்அமைக்கஉத்தரவிட்டு,தற்போதுமாண்புமிகுமுதலமைச்சர் அவர்கள் தங்கள் கரங்களால் திறந்து வைக்கவிருக்கிறார்கள். அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பிறந்தநாள் விழாவில் தரங்கம்பாடியில் மீன் இறங்குதளம் அமைத்திட அறிவிக்கப்பட்டு, அதற்காக ரூ.120 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, டெண்டர் கோரும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாங்கள் கேட்டதையெல்லாம் செய்து கொடுக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, எங்கள் தொகுதி மீனவ சமுதாய மக்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதியாக இருக்கின்ற

2020 மார்ச் 12]

காரணத்தினால், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதை எடுத்துச் சென்று, சந்திரப்பாடியில் மீன் இறங்குதளம் அமைத்துக் கொடுக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *அதற்கு இவ்வளவா! (சிரிப்பு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பூம்புகார் பகுதியில் ரூ.178 கோடியில் மீன்பிடி துறைமுகம் அமைக்க அறிவிக்கப்பட்டு, பணிகள் நிறைவு பெற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கவுள்ளார்கள்; அது அவருடைய தொகுதியில்தான். அதன்பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தில், தரங்கம்பாடியில் ரூ.132 கோடியில் மீன் இறங்குதளம் அமைக்க உத்தரவிட்டு, மத்திய அரசின் நிதியுதவி கோரி, நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு, தற்பொழுது அரசாணை பிறப்பிக்கப்பட்டு, பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. தரங்கம்பாடிக்கும், சந்திரப்பாடிக்கும் இடையில் 8 கி.மீ. இடைவெளிதான் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 8 கிலோ மீட்டர் தொலைவு செல்லாமல், அந்த இடத்திலிருந்து காரைக்கால் பகுதிக்குத்தான் செல்கிறோம் என்கிறார்கள். காரைக்காலுக்குச் செல்ல வேண்டாம் என்பதால்தான் நம்முடைய மாநிலத்திலேயே சந்திரப்பாடியிலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ள தரங்கம்பாடியில் ரூ.132 கோடி செலவில் மீன் இறங்குதளம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன. அங்கே 126 விசைப் படகுகளும், 180 நாட்டுப் படகுகளும் இயக்கப்படுகின்றன. அதாவது, பாரம்பரிய மீனவர்கள்,* Fibre Reinforced Plastic *என்று சொல்லக்கூடிய கட்டுமரங்களை உபயோகப்படுத்துகிறார்கள். 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தரங்கம்பாடி*

மீன் இறங்குதளத்தை இவர்கள் ஏன் use செய்யக் கூடாது? எனவே, சந்திரப்பாடியில் மீன் இறங்குதளம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. மேற்கொண்டு தேவைப்பட்டால், future-ல் பார்த்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.

திரு. எஸ். பவுன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு அந்த ஊரைப் பற்றித் தெரியும். காரைக்காலைக் கடந்து, 2 கிலோ மீட்டர் தூரம் ஊருக்குள்ளே சென்றுதான் சந்திரப்பாடிக்கே செல்ல முடியும். அங்கு சின்னூர்பேட்டை என்ற மற்றொரு கிராமமும் இருக்கிறது. அந்தக் கிராமத்தில் 180 குடும்பங்கள் இருக்கின்றன. அங்கு செல்ல வேண்டுமென்றாலும் 6 கிலோ மீட்டர் தூரம் காரைக்கால் பகுதியைக் கடந்துதான் போக வேண்டும். கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் சந்திரப்பாடி கிராமத்திற்கு தண்ணீரைக் கொண்டு செல்ல, அந்த 2 கிலோ மீட்டர் தூரத்தைக் கடந்துதான் செல்ல வேண்டும். அவர்களிடம் permission கேட்டுத்தான் அங்கு pipe line போடப்பட்டிருக்கிறது. எனவே, அங்கு இத்தகைய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், அங்கு வசிக்கின்ற மீனவர்கள் மீன் பிடிக்க வேண்டுமானாலும், பிடித்த மீன்களை விற்பதற்கும் காரைக்காலைக் கடந்துதான் செல்ல வேண்டும். எனவே, அங்கு ஒரு மீன் இறங்குதளம் அமைத்துத் தர வேண்டும். அந்த முகத்துவாரத்தில் முத்துக்காணை என்கிற ஆறு ஓடுகிறது. அந்த ஆற்றின் முகத்துவாரத்தைத் தூர் வாரிக் கொடுக்க வேண்டும். அங்கே 300 FRP boats-ம், 16 பெரிய படகுகளும் இருக்கின்றன. அங்கே இருக்கின்ற 900 குடும்பங்களில் 800 குடும்பங்கள் மீனவ சமுதாயக் குடும்பங்கள்தான். இவை அனைத்துமே மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, அவர்கள் இதுகுறித்து பரிசீலனை செய்து, தனிக் கவனம் செலுத்தி, இந்த நிதியாண்டிற்கான மானியக் கோரிக்கையிலேயே அதற்கான நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, இன்னொரு கோரிக்கை. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டில் நாகப்பட்டினம்

2020 மார்ச் 12]

மாவட்டத்திற்கு மட்டும் மீனவ மக்களின் கோரிக்கையினை நிறைவேற்ற ரூ.452 கோடி அளவிற்கு மீன் வளத் துறைக்கு ஒதுக்கீடு செய்து கொடுத்திருக்கிறார்கள். அதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நாகப்பட்டினம் மாவட்டம், சமந்தான்பேட்டையில் உள்ள மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்கப்படும் என்று நம்மைவிட்டுப் பிரிந்தாலும் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விதி 110–ன்கீழ் அறிவித்திருந்தார்கள். நம்முடைய மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கனிவோடு பரிசீலனை செய்து அதையும் நிறைவேற்றித் தருவார்களா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்காலும் இந்தியாவில்தான் இருக்கிறது. அது* foreign country *கிடையாது. எனவே, அதைக் கடந்து போவதில் ஒரு பிரச்சினையும் இல்லை. இருந்தாலும், 8 கிலோ மீட்டர் போவதில் என்ன கஷ்டம் என்றே தெரியவில்லை? எதிர்காலத்தில் நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து ஆய்வு செய்யப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக நாம் என்ன செய்திருக்கிறோமென்றால், நம்முடைய உள்நாட்டு மீனவர்களுடைய அடிப்படை கட்டமைப்பு வசதிகள், அதேபோன்று, ஒரு கோடி ரூபாய் செலவில் கடலோர மாவட்ட மீனவர்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகள், தங்கு தளங்கள், மீன் வலை பின்னும் கூடம், ஏலக்கூடம் போன்ற பல்வேறு வசதிகள் செய்து தர வேண்டுமென்பது குறித்து அரசுக்கு அறிவுரை வழங்குவதற்காக* Consultants *நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். எனவே, அந்த* report*–ல் 100*

[*2020 மார்ச் 12*

சதவிகிதம் இவையெல்லாம் வருமென்று நினைக்கிறேன். கண்டிப்பாக வரும்; வரும்போது கண்டிப்பாகச் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி தொகுதி, இனிகோ நகர் கடற்கரைப் பகுதியில் கடலரிப்பு மிக அதிகமாக உள்ளது. மீனவர்களுடைய குடியிருப்புகளுக்கும், அவர்களுடைய படகுகளுக்கும் பாதுகாப்பற்ற சூழ்நிலை உள்ளது. கடலரிப்பினால் படகுகள் ஒன்றோடொன்று மோதி அவை சேதமடைகிற நிலையில் உள்ளன. மேலும், இனிகோ நகர் கடற்கரைப் பகுதியில் கடலரிப்பைத் தடுத்திட தடுப்புச் சுவர் கட்டித் தந்து, மீனவர்களின் குடியிருப்புகளுக்கும், படகுகளுக்கும் பாதுகாப்பை ஏற்படுத்தித் தர வேண்டும். மேலும், திரேஸ்புரம் கடற்கரையில் ஏற்கெனவே அமைந்துள்ள தூண்டில் வளைவினை நீட்டித்துத் தருமாறும் மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள்மூலம் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Anti-Sea Erosion Wing *என்று கடலரிப்பைத் தடுக்கின்ற ஒரு* Wing PWD*-ன் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. எனவே, கடலரிப்பையெல்லாம்* PWD *கவனத்தில்கொள்ளும். இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அதேபோன்று, வளைவுகளை நீட்டிப்பது என்பது மீன் வளத் துறை செய்கின்ற பணி. அதை ஆய்வு செய்து,* viability, *அதாவது,* feasibility *இருந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.*

2020 மார்ச் 12]

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது செய்யூர் தொகுதியானது சற்றேறக்குறைய 16 மீனவக் கிராமங்களை உள்ளடக்கிய பகுதி. மிகவும் ஏழையெளிய மீனவர்கள் வசிக்கக்கூடிய பகுதியாகும். ஆதலால், அந்தப் பகுதியில் வாழ்கின்ற மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்குகின்ற வகையிலே, ஒரு மீன் இறங்குதளம் அமைக்க வேண்டும். அதேபோல, ஆண்டுதோறும் அந்தப் பகுதியிலே அதிகமாக கடலரிப்பு ஏற்பட்ட வண்ணம் இருப்பதால், அவர்களுடைய வாழ்வாதாரமான படகுகள் மற்றும் வீடுகளெல்லாம் சேதமடைந்து விடுகின்ற ஒரு நிலை இருக்கிறது. அதேபோல, இந்த நேரத்திலே அரசின் கவனத்தை ஈர்க்கின்ற வகையிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது விற்கப்படுகின்ற மீன்களெல்லாம் formalin என்ற ஒரு preservative-ஐப் பயன்படுத்தி விற்கப்படுவதாக ஒரு தகவல் வந்துள்ளது. அதனை அரசு கூர்ந்து கவனித்து அதன்மீது நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல, கடலரிப்பு ஏற்படுவதால் மீனவக் கிராமங்கள் பாதிக்கப்படுகின்ற நிலை இருக்கிறது. அதேபோன்று, தங்கு தளம் அமைப்பது குறித்து நிதிநிலைக்கேற்ப ஒவ்வோர் ஆண்டும் நாம் அறிவித்துக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பது ஒன்று. இரண்டாவதாக, formalin கிடையாது. அதனால் கண்டிப்பாக அச்சம் கொள்ளத் தேவையில்லை. ஒரு வதந்தியைப் பரப்பிவிட்டிருக்கிறார்கள். எல்லா அளவிலும் நம்முடைய சுகாதாரத் துறையும், உணவுத் துறையும் மீன் வளத் துறையுடன்

இணைந்து எங்கெல்லாம் end point sales இருக்கிறதோ, அங்கெல்லாம் check செய்து தரமான மீன்களைத்தான் கொடுக்கிறார்கள். அதனால் வீண் வதந்தியைக் கண்டிப்பாக நம்பத் தேவையில்லை. வெளி மாநிலங்களிலிருந்து வருகிற மீன்கள், பொதுவாக மதுரையிலிருந்து transportation செய்யப்பட்டு, வருகின்ற வழியில் 2, 3 நாட்கள் ஆவதால் அது கெட்டுப்போகிற நிலை இருக்கிறது. அதை seize செய்து, மார்க்கெட்டில் விற்காத அளவுக்கு அரசு நடவடிக்கை எடுத்தது. அதைத்தான் ஊடகங்களில் formalin என்று பெரிய அளவில் விளம்பரப்படுத்தினார்கள். அது formalin கிடையாது. எந்த அமிலமும் கிடையாது. மீனை தைரியமாகச் சாப்பிடுங்கள். மீனைச் சாப்பிட்டால் கண்டிப்பாக நீங்கள் 100 வருடங்கள் நீண்ட ஆயுளோடு வாழலாம், வாழ்த்துகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

79—

மகளிர் தங்கும் விடுதி

***38457—திரு. சி. சந்திரசேகரன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை–செம்மேடு பகுதியில் மகளிர் தங்கும் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

2020 மார்ச் 12]

(அ) மற்றும் (ஆ) சமூக நலத் துறையின்கீழ் 18 மாவட்டங்களில், 28 அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகள் துவங்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகின்றன. சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதி, கொல்லிமலை-செம்மேடு பகுதியில் தொழில் நிறுவனங்கள் எதுவும் இல்லாததால், இங்குள்ள பெண்கள் பணிபுரிவதற்கு வெவ்வேறு இடங்களுக்கு இடம்பெயர்கின்றனர். எனவே, சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை-செம்மேடு பகுதியில் பெண்களுக்கு தங்கும் விடுதி அமைக்கும் தேவை ஏதும் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்ணை விட்டுப் பிரிந்தாலும், மக்கள் மனதில் என்றைக்கும் நீங்கா இடம் பெற்றிருக்கின்ற இதய தெய்வம் அம்மா தெய்வத்தை வணங்கியும், பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தெய்வத்தை வணங்கியும், அந்த இருபெரும் தெய்வங்களினுடைய அருளாசியோடு, மாண்புமிகு இதய தெய்வம் இந்த நாட்டு மக்களுக்கு என்னென்ன திட்டங்களைத் தந்தார்களோ, அயராது பாடுபட்டு, தினந்தோறும் ஆயிரம் கோப்புகளில் கையொப்பமிட்டு, அனைத்துத் திட்டங்களையும் தமிழக மக்களுக்காக நிறைவேற்றித் தந்து, மக்கள் விரும்பும் முதல்வராக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களை வணங்கியும், (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு உறுதுணையாக இருந்து பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களை வணங்கியும், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குவதோடு, தங்களையும் வணங்குகிறேன்.*

இன்றைக்கு, கொல்லிமலையில் 100–க்கு 99 சதவிகிதம் மலைவாழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அங்குள்ள மலைப் பகுதியில் தொழிற்சாலை இல்லை என்று சொன்னாலும், அங்கே மூன்று மேல்நிலைப் பள்ளிகளும், இரண்டு நடுநிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் அரசு மருத்துவமனை ஆகியவை இருக்கின்றன. இப்படி பல்வேறு அரசு அலுவலகங்களில் இன்றைக்கு பெண் பணியாளர்கள் அதிகளவில் இருப்பதால், அவர்கள் தங்குவதற்கு போதிய இடவசதி இல்லாமல் 30, 40 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்ற நாமக்கல், சேந்தமங்கலம் பகுதிகளில் தங்கியிருந்து, மீண்டும் பணிக்கு மலைப் பகுதிக்கு வருகின்றனர். எனவே, அங்கேயிருக்கின்ற கல்வி வளர்ச்சியைக் கருதியும், மலைவாழ் மக்களின் நலன் கருதியும், அங்கே பெண்கள் தங்கும் விடுதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தர ஆவன செய்வார்களா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் நலம் என்பது தமிழக அரசின் வளர்ச்சித் திட்டங்களில் இதயமாகத் திகழ்கிறது. பெண் குழந்தைகள், மகளிர் மற்றும் சமூகத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளவர்களின் மேம்பாட்டினை உறுதிசெய்யும் வகையிலும், நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை (*Sustainable Development Goals*) எட்டும் வகையிலும், தமிழக அரசின் மகளிர் நலத் திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை–செம்மேடு பகுதியில் அரசுப் பணியில் பணிபுரிகின்ற மகளிருக்கு தங்கும் விடுதி கட்டப்படுமா என்று சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார். துறை ரீதியாக ஆய்வு மேற்கொண்டு, அந்த ஆய்வின் அடிப்படையில் அங்கே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்

2020 மார்ச் 12]

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையின் பொற்காலம் என்றால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி நடைபெறும் இந்தக் காலம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே ஒரு மாநில அரசு ஒரே காலத்தில், ஒரே நேரத்தில் 11 மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளை

2020 மார்ச் 12]

உருவாக்கி, சாதனை படைத்திருக்கிற அம்மா அரசின் சுறுசுறுப்பான நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் 3 ஆண்டுகாலமாக ஒரு கோரிக்கையை வைத்துக் கொண்டிருக்கிறேன். பொள்ளாச்சி பகுதியில் கேரள மாநில எல்லையில் அமைந்திருக்கிற ராமபட்டணம் ஆரம்ப சுகாதார நிலையம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்பகுதியில் அடிக்கடி விஷப் பாம்புக் கடி ஏற்படுகின்ற காரணத்தினால், ராமபட்டணம் ஆரம்ப சுகாதார நிலையத்தை இந்த ஆண்டே, இந்தக் கூட்டத் தொடரிலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கொடுத்த வாக்குறுதியின்படி, 30 படுக்கை வசதிகொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித் தருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, நல்ல பதிலை எதிர்பார்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் தங்கள் தொகுதிக்கு பல்வேறு கோரிக்கைகளைத் திறம்பட கேட்டுப் பெறுவதில் மிகப் பெரிய சாமர்த்தியத்தைக் கொண்டு, எங்களுக்கெல்லாம் வழிகாட்டக்கூடிய மூத்த உறுப்பினர் ஆவார். அவர் ஏற்கெனவே இந்தச் சட்டமன்றப் பேரவையில் மக்கள் நல்வாழ்வுத் துறையிடம் இதேபோன்று, சாதுர்யமாக இரண்டு கோரிக்கைகளை வைத்ததன் அடிப்படையில் ரூ.20 கோடியில் பொள்ளாச்சியில் மகப்பேறு CEmONC Centre-க்காக அவரே அடிக்கல் நாட்டி, அதற்குப் பூமி பூஜை போட்டு அப்பகுதியில் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர் சொன்னதுபோல், விஷக் கடிக்கு பொள்ளாச்சி மருத்துவமனையை Research Centre ஆக உருவாக்கி நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதேபோன்று அவர் கேட்ட ஆரம்ப சுகாதார நிலையம் கொடுக்கப்பட்டு, நானும், மாண்புமிகு பொள்ளாச்சியாரும் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அண்ணன் திரு. வேலுமணி அவர்களுடன் சேர்ந்து அதனைத் திறந்து வைத்திருக்கின்றோம். அதோடு சேர்த்து அவருடைய சாமர்த்தியத்தின் பேரில் கேட்ட இந்தக் கோரிக்கையும் நிறைவேறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன் *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாய்க் கடிக்கு மருந்து கொடுப்பது இருக்கட்டும். பொதுவாகவே, முன்பெல்லாம் கிராமங்களில் 10 நாய்கள் அல்லது 20 நாய்கள் இருக்கும். தற்போது பார்த்தோமானால், 200 நாய்கள், 300 நாய்கள் இருக்கின்றன. தெருக்களில் எங்கு பார்த்தாலும் நாய்கள் ஓடுகின்றன. ஒன்றை ஒன்று கடித்துக்கொண்டிருக்கின்றன. அவற்றிற்கு யாரும் எந்த ஊசியும் போடுவதில்லை. இவற்றில் வெறி நாய் எது, நல்ல நாய் எது என்று தெரிவதில்லை. அவை பல நபர்களை ஓடிச்சென்று கடித்து விடுகின்றன. எனவே, நீங்கள் கடித்த பிறகு மருந்து போடுவதற்குப் பதிலாக, ** மேனகா காந்தி அம்மையார் அவர்கள் அவற்றையெல்லாம் கொல்லக் கூடாது என்று சொல்வார்கள். ** உள்ளபடி உண்மையைச் சொல்கிறேன். ஊர்களில் பார்த்தால் நாய்கள் மந்தை மந்தையாகப் போய்க் கொண்டிருக்கின்றன. தெருக்களில் சிறிய குழந்தைகள் விளையாடிக் கொண்டிருக்கின்றன; பல ஊர்களில் இதுதான் சவாலாக இருக்கின்றது. எனவே, நாய்க் கடிக்கு மருந்து கொடுப்பதைவிட, நாய்களுடைய பெருக்கத்தைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது அவைக் குறிப்பில் வேண்டாம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேள்விக்குப் பதில், நாய்களுக்கும் கால்நடை பராமரிப்புத் துறையில்* family planning, *குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். நாய்களுக்கும் குடும்பக் கட்டுப்பாடு செய்யப்படுகிறது. (சிரிப்பு) அதன் எண்ணிக்கையைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எனது பக்கத்திலிருக்கக்கூடிய மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாக எடுத்துக்கொண்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2020 மார்ச் 12]

ஏற்கெனவே, இந்த வெறிநாய்க் கடி அனைத்திற்கும் பொதுவாக Anti Rabies Vaccine போடப்படுகிறது. ஒரு காலத்தில் இந்த வெறிநாய்க் கடி அதிக அளவில் இருந்தது. ஆனால், தற்போது அந்த நிலை இல்லை. முன்பெல்லாம் நாய்க் கடி என்றால் நாம் அனைவருமே பயப்படும் சூழ்நிலை இருந்தது. நாய் கடித்தால் தொப்புளைச் சுற்றி 16 ஊசிகள் போட வேண்டும் என்று நம்மை பயமுறுத்துவதுண்டு. தற்போது அதுபோன்ற நிலை இல்லை. Anti Rabies Vaccine தற்போது போடப்படுகின்றது. அதன்மூலம் நாய்க்கடிக்கான மருந்துகள் செலுத்தப்படும்போது, அந்த நாய்க் கடியின்மூலம் பரவக்கூடிய கிருமியால் ஏற்படக்கூடிய இறப்பே இல்லாத நிலையை இன்றைக்கு உறுதிப்படுத்தியிருக்கிறோம். இருப்பினும் தாங்கள் குறிப்பிடுகின்ற அந்த மருந்துகள் தாலுகா அளவில் additional P.H.C.-ல் இருப்பதைத் தொடர்ந்து அரசு உறுதி செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

83—

உலர்களம்

***48509—திரு. சபா. ராசேந்திரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், கீழக்குப்பம் ஊராட்சி, காலனி பகுதியில் உலர்களம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், கீழக்குப்பம் ஊராட்சி, காலனி பகுதியில் உலர்களம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2020 மார்ச் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.

முற்பகல் 11–35

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், கீழக்குப்பம் ஊராட்சி, நடுக்குப்பம் ஊராட்சி மற்றும் மருவூர் ஊராட்சி உள்ளிட்ட பகுதிகளில் அதிகமாக விளைகின்ற முந்திரியினை உலர வைப்பதற்கு உலர்களம் தேவைப்படுகிறது. அதேபோன்று மானாவாரிப் பயிர்களான உளுந்து, கொள்ளு, கேழ்வரகு போன்றவற்றை அறுவடை செய்கிறபோதும் அவற்றை உலர வைப்பதற்கு உலர்களம் தேவைப்படுகின்றது. முந்திரியைப் பொறுத்தவரை அறுவடை செய்கின்றபோது 15 சதவிகிதம் ஈரப்பதமாக இருப்பதை 2, 3 நாட்களாக உலர வைத்து, 7 சதவிகிதத்திற்குக் குறைத்தால்தான் அந்த முந்திரியைப் பாதுகாத்து, சேமித்து வைத்து, நல்ல விலை வருகின்றபோது விற்பதற்கு விவசாயிகளுக்கு வசதியாக இருக்கும். அதற்குத் தேவையான 2 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் கீழக்குப்பம் பகுதியில் உள்ளது. எனவே, ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் பயன்பெறுகின்ற வகையில் உலர்களத்தை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். 'சாத்தியம் இல்லை' என்று கூறியிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய கோரிக்கையை மறுபரிசீலனை செய்து, அந்த உலர்களத்தை அமைத்துத் தருவதற்கு உரிய முயற்சிகளை மேற்கொள்வாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலமாக மொத்தம் 105 உலர்களங்கள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், கீழக்குப்பம் ஊராட்சி, காலனி பகுதியிலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மருவூர் கிராமத்தில் உலர்களம் ஒன்று அமைக்கப்பட்டு, விவசாயிகளின்

2020 மார்ச் 12]

பயன்பாட்டில் உள்ளது. மேலும், கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, கீழக்குப்பம் ஊராட்சி, காலனி பகுதியிலிருந்து அப்பகுதியிலுள்ள பாலிக்குளம் கிராமத்தில் கடலூர் விற்பனைக் குழு நிதியிலிருந்து ரூபாய் 8 இலட்சம் மதிப்பீட்டில் உலர்களம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. எனவே, கீழக்குப்பம் ஊராட்சி, காலனி பகுதிக்கு அருகில் உள்ள மேற்கூறிய உலர்களத்தை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளலாம். இருப்பினும், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், கீழக்குப்பம் ஊராட்சி, காலனி பகுதியில் உலர்களம் அமைப்பதற்குத் தேவையிருப்பின், இடம் கிடைக்கும்பட்சத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, விற்பனைக் குழு நிதியின் மூலமாக உலர்களம் அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.*

திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பரிசீலிக்கப்படும்' என்று அறிவித்திருக்கிற மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அங்கு தேவையான நிலம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். அதற்கு நிதி ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், கடலூர் மாவட்டத்தில் முந்திரி அதிகமாகப் பயிரிடப்படுகின்ற பகுதி பண்ருட்டி ஒன்றியப் பகுதி. நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தோட்டக்கலை விவசாயிகளை ஊக்குவிக்கின்ற வகையிலே, முந்திரிக்கான சிறப்பு மையத்தை கடலூர் மாவட்டத்திற்கென அறிவித்திருக்கின்றார்கள். 75 சதவிகிதம் முந்திரியை விளைவிக்கின்ற பண்ருட்டி ஒன்றியப் பகுதியில், முந்திரி சிறப்பு மையத்தை அறிவித்து செயல்படுத்தினால், தோட்டக்கலை விவசாயிகளை அது ஊக்குவிப்பதாகவும், அவர்களுக்குப் பயனுள்ளதாகவும் அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு முந்திரி சிறப்பு மையத்தை நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், காடாம்புலியூரிலோ அல்லது பேர்பெரியான்குப்பம் ஊராட்சியிலோ அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

[2020 மார்ச் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தரிசு நிலத்தின் தங்கச் சுரங்கம்' என்றழைக்கப்படும் முந்திரி, தமிழ்நாட்டில் 90,058 ஹெக்டேர் பரப்பளவில் கடலூர், விழுப்புரம், புதுக்கோட்டை, அரியலூர் போன்ற மாவட்டங்களில் சாகுபடி செய்யப்பட்டு, 57,988 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. கடலூர் மாவட்டத்தில் மட்டும் 28 ஆயிரத்து 258 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி முந்திரிக்கொட்டைகளை விற்பனை மற்றும் ஏற்றுமதி செய்து விவசாயிகள் பயன்பெறும் வகையில், பண்ருட்டி வட்டாரம், காட்டாண்டிகுப்பத்தில் 'Sattva' என்னும் முந்திரி ஏற்றுமதி மண்டலம் அரசின் நிதியுதவியுடன் ஏற்படுத்தப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. இதன்மூலம் முந்திரி விவசாயிகள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் முந்திரி பதப்படுத்தும் தொழிலாளர்கள் பயன்பெற்று வருகின்றனர். மேலும், தற்போது இந்த ஏற்றுமதி மண்டலத்திற்குட்பட்ட 30 முந்திரி விளைபொருள் குழுக்களுக்கு, 30 முந்திரி பதப்படுத்தும் இயந்திரங்கள் ரூபாய் 4 கோடியே 4 இலட்சம் அரசால் வழங்கப்பட்டு, முந்திரி விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். முந்திரி விவசாயிகளின் பொருளாதாரத்தை உயர்த்தும் வகையிலும், அந்நியச் செலாவணியை அதிக அளவில் ஈட்டித்தரும் வணிகப் பயிரான முந்திரி சாகுபடியைமேம்படுத்தவும், அகில இந்திய அளவில் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடனும் ரூபாய் 3 கோடி செலவில் கடலூர் மாவட்டத்தில் முந்திரிக்கான சிறப்பு மையம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அமைக்கப்படவுள்ளது. இம்மையத்தின்மூலம், முந்திரி பயிர் உற்பத்தியை அதிகரிக்க, நவீன தொழில்நுட்பமான அடர் நடவு முறை, கிளை மேலாண்மை, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை ஆகியவை குறித்து விவசாயிகளிடம் பெயர் விளக்கம் அளித்தல் மற்றும் பயிற்சி வழங்கி, எதிர்காலத்தில் முந்திரி உற்பத்தியை அதிகரித்து விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதிக்கு முந்திரி சிறப்பு மையத்தை ஏற்படுத்துவதற்கு சாத்தியக்கூறுகள் இருந்தால், அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 மார்ச் 12]

முற்பகல் 11–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

84—

தொழிற்பயிற்சி நிலையம்

***58923—திரு ஆர்.எம். சின்னதம்பி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் மற்றும் கெங்கவல்லி தொகுதிகளுக்கு இடையே தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் மற்றும் கெங்கவல்லி தொகுதிகள் அமைந்துள்ள சேலம் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 4 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 17 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் ஒப்பளிக்கப்பட்ட 4,361 இருக்கைகளில், மொத்தம் 1,293 இருக்கைகள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. இக்காலியிடங்களில், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50% இடங்களை அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாவட்ட கலந்தாய்வுமூலம் நிரப்பி பயிற்சிக் கட்டணத்தை அரசே ஏற்கும் என்ற திட்டத்தின்கீழ், சேலம் மாவட்டத்தில் செயல்படும் 3 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கான 104 இருக்கைகளில் 46 இருக்கைகள் நிரப்பப்பட்டு, 58 இருக்கைகள் காலியாக உள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளன. எனவே, சேலம் மாவட்டத்தில் உள்ள ஆத்தூர் மற்றும் கெங்கவல்லி தொகுதிகளை மையமாகக் கொண்டு, அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள்.

திரு ஆர்.எம். சின்னதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என்று வாழ்ந்தும், மறைந்தும் வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் இதய தெய்வம் அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா வழியில் இந்தியாவே போற்றும் வகையில் சிறப்பாக நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு குடிமராமத்து நாயகர்; காவேரி மீட்பு நாயகர்; காவேரியின் காப்பாளர்; விவசாயிகளின் விடிவெள்ளி; வாழும் கரிகாலன்; எளிமையின் அடையாளம்; சேலம் தந்த தங்கமகன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் டாக்டர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன். ஒரு கொடியில் பூத்த இரு மலர்களைப்போல விளங்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், தங்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும்; தேடுங்கள் கிடைக்கும்" என்பார்கள். அதைப்போல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் கேட்காமலேயே அள்ளிக் கொடுக்கும் வள்ளல். நல்ல மனம் படைத்த எடப்பாடியார் அண்ணன் அவர்கள், ஆசிய கண்டத்தில், எங்குமே இல்லாத அளவில், ஆத்தூர், தலைவாசல் கூட்டுரோடு பகுதியில் சுமார் 1,000 கோடி ரூபாய் மதிப்பில் கால்நடை ஆராய்ச்சி பூங்கா மற்றும் பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், புத்திரகவுண்டம்பாளையம், உமையாள்புரம் கிராமத்தில் ஒரு சிப்காட் தொழிற்சாலையை 4.5 கோடி ரூபாய் மதிப்பில் அமைத்துக் கொடுக்க உத்தரவு வழங்கியதற்காக சேலம் மாவட்ட அம்மா பேரவைச் செயலாளர் இளங்கோ அவர்களும், எனது தொகுதி மக்களும், நானும் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் 11 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. சேலம் கிழக்கு பகுதியில், வாழப்பாடி, பெத்தநாயக்கன்பாளையம், ஆத்தூர், கெங்கவல்லி ஆகிய நான்கு வருவாய் வட்டங்களும், ஆத்தூர் நகராட்சி, நரசிங்கபுரம் நகராட்சி மற்றும் எட்டு பேரூராட்சிகளும் கொண்ட மூன்று சட்டமன்ற தனித் தொகுதிகளும் உள்ளன. மக்கள்தொகை சுமார் 10 இலட்சத்திற்கும் அதிகமாக உள்ளது. இப்பகுதி விவசாயம் நிறைந்த பகுதியாகும். இந்தப் பகுதியில் உள்ள மாணவ, மாணவிகள், 75 கிலோ மீட்டர் தூரம் சென்று தொழிற்பயிற்சி படிக்க வேண்டியுள்ளது. (குறுக்கீடு)

2020 மார்ச் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி, மற்றொரு கேள்வி உள்ளதால், கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. ஆர்.எம். சின்னதம்பி: *ஆத்தூர் தொகுதியின் அருகே உள்ள விதைப் பண்ணையில் 250 ஏக்கர் நிலம் போதுமானதாக உள்ளது. ஏழையெளிய மாணவர்களின் நலன் கருதி, அரசு தொழிற்பயிற்சி நிலையத்தை மீண்டும் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின்கீழ் 89 அரசு மற்றும் 476 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்படுகின்றன. இதில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், 9 ஆண்டுகளில் 28 புதிய தொழிற்பயிற்சி நிலையங்களை உருவாக்கி, சாதனை படைத்துள்ளார், காவேரி காப்பாளர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எடப்பாடியார் அவர்கள்.

முற்பகல் 11–45

மேலும், ஸ்ரீவெங்கடேஸ்வரா ஐ.டி.ஐ., நாகையம்பட்டி, 27 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இதில் 86 இடங்கள் காலியாக உள்ளன. சாரதா மெமோரியல் ஐ.டி.ஐ., ஆத்தூர் 6 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இதில், 86 இடங்கள் காலியாக உள்ளன. தியாகராஜா ஐ.டி.ஐ., வாழப்பாடி 23 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது; 47 இடங்கள் காலியாகவுள்ளன. புஷ்பம்மாள் ஐ.டி.ஐ., ஆத்தூர் 7 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது; 20 இடங்கள் காலியாகவுள்ளன. எனவே, மாணவர்கள் இந்த இடங்களில் சேர்ந்து படிக்கலாம். ஆயினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற பகுதியில் அவசியம் ஏற்படின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள்.

திரு. ஆர்.எம். சின்னதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், கிழக்குப் பகுதியில் சுமார் 50 மேல்நிலைப் பள்ளிகளும், 50-க்கும் மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. ஒரு வருடத்திற்கு 10,000 மாணவ, மாணவிகள் படிக்கிறார்கள். இவர்களுடைய நலன்கருதி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, நிறைவேற்றித் தருவேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியதற்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

85—

பேருந்து வசதி

***38088—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டியிலிருந்து ஒட்டக்கோவில்பட்டி, அலங்கம்பட்டி, கம்பூர், கேசம்பட்டி, வெள்ளிமலைப்பட்டி மற்றும் புலிப்பட்டி வழியாக அழகர்கோவிலுக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மூலமாக அழகர்கோவிலிலிருந்து வள்ளாலப்பட்டி வழியாக மேலூருக்கு 26 தனி நடைகளும், மேலூரிலிருந்து வள்ளாலப்பட்டி வழியாக புலிக்குடிக்கு 16 தனி நடைகளும், மேலூரிலிருந்து வள்ளாலப்பட்டி, புலிக்குடி வழியாக வெள்ளிமலைப்பட்டிக்கு 6 தனி நடைகளும், மேலும்

2020 மார்ச் 12]

மேலூரிலிருந்து கேசம்பட்டி, சானிப்பட்டி வழியாக சேக்கிப்பட்டிக்கு 28 தனி நடைகளும், மேலூரிலிருந்து நத்தத்திற்கு கேசம்பட்டி, சானிப்பட்டி, சேக்கிப்பட்டி வழியாக 14 நடைகளும், மேலூரிலிருந்து அலங்கம்பட்டி, கம்பூர் வழியாக சேக்கிப்பட்டிக்கு 4 நடைகளும் என பகுதி பகுதியாக அனைத்து கிராமங்களுக்கும் தினசரி பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், கொட்டாம்பட்டி மற்றும் புலிப்பட்டி வழியாக அழகர்கோவில் செல்வதற்கான வழித்தடம் 41.3 கி.மீ. ஆகும். தற்போதுள்ள விதிகளின்படி, இவ்வழித்தடம் 35 கி.மீ.–க்கு மேல் உள்ளதாலும், வெள்ளிமலைப்பட்டிக்கும் கேசம்பட்டிக்கும் இடைப்பட்ட 6 கி.மீ. தூரம் செம்மண் சாலையாகவும், கனரக வாகனங்கள் இயக்க இயலாத சூழ்நிலையில் உள்ளதாலும் நகரப் பேருந்து இயக்க வழிவகையில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.*

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நல்லாசியோடும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடும் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மேலூர் தொகுதி, அதிக கிராமங்களைக் கொண்ட தொகுதியாகும். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களும், அனைத்துக் கிராமங்களுக்கும் தார்ச்சாலை வசதி செய்து கொடுத்துள்ளார்கள். எனது மேலூர் தொகுதியிலுள்ள அழகர்கோவிலில் தென்திருப்பதி எனப் போற்றப்படும் பிரசித்தி பெற்ற பெருமாள் கோயிலும், பதினெட்டாம்படி கருப்பண்ணசாமி கோயிலும், ஆறாவது படைவீடான பழமுதிர்சோலை முருகன் கோயிலும், ராக்காயி அம்மன் கோயிலும், நூபுரகங்கை தீர்த்தமும் அமைந்துள்ளன. தற்போது அழகர்கோவிலுக்கு மேலூரிலிருந்தும், மதுரையிலிருந்தும், நத்தத்திலிருந்தும், வாடிப்பட்டியிலிருந்தும் பேருந்து வசதிகள் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனது மேலூர் தொகுதி அதிகமான கிராமங்களைக் கொண்ட பகுதியாக இருப்பதால், கிராமங்களிலிருந்து அதிகமான பக்தர்கள் சாமி

தரிசனம் செய்வதற்கு அழகர்கோவிலுக்கு வருகை தருகிறார்கள். மேலும்,கேசம்பட்டியிலிருந்துவெள்ளிமலைப்பட்டிக்குஇப்பொழுது தார்ச்சாலை போடப்பட்டுள்ளதால், கொட்டாம்பட்டியிலிருந்து ஒட்டக்கோவில்பட்டி, அலங்கம்பட்டி, கம்பூர், கேசம்பட்டி, வெள்ளிமலைப்பட்டி, புலிப்பட்டி வழியாக அழகர்கோவிலுக்கு பேருந்து வசதி செய்து கொடுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களை தங்கள் வாயிலாக மீண்டும் வலியுறுத்திக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கக்கூடிய வழித்தடத்தில் தார்ச்சாலை அமைக்கப்பட்டிருந்தால், அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, அந்த வழித்தடத்தில் பேருந்துகள் இயக்குவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.

முற்பகல் 11–50

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் கனவை நிறைவேற்றும் வகையில் கிராமங்களிலிருந்து அதிகமான மாணவிகள் மேல்நிலைப் பள்ளிக்கும், கல்லூரிக்கும் செல்கின்றனர். மேலூரிலிருந்து, மேலவளவு அரசு மேல்நிலைப் பள்ளி, முத்துக்கருப்பன்பட்டி, கம்பூர் வழியாக கருங்காலக்குடிக்கும், தும்பைபட்டி அரசு மேல்நிலைப் பள்ளி, பூதமங்கலம், நல்லசுக்காம்பட்டி, மூவன்சீவல்பட்டி வழியாக சிங்கம்புணரிக்கும், அய்யாபட்டி ஊராட்சி, மலம்பட்டி, சொக்கலிங்கபுரம் வழியாக சிங்கம்புணரிக்கும், அழகர்கோவிலிலிருந்து புழுதிபட்டி வழியாக பொன்னமராவதிக்கும் காலையிலும், மாலையிலும், பள்ளி மற்றும் கல்லூரி நேரங்களில் பேருந்து வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் கேட்டு அமர்கிறேன்.

2020 மார்ச் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில வழித்தடங்களைக் குறிப்பிட்டு, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளின் வசதிக்காக பேருந்து வசதிகளைச் செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார். பள்ளி மற்றும் கல்லூரி நேரங்களில் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற வழித்தடங்களை எழுத்துபூர்வமாகக் கொடுத்தால், அதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வழங்கி, ஆய்வு செய்து, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளின் வசதிக்கேற்ப, அந்த வழித்தடங்களில் பேருந்து வசதிகள் இல்லையென்று சொன்னால், அந்த வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

கன்னியாகுமரி மாவட்டம், இரப்பர் தோட்டக் கழகத் தொழிலாளர்களின் தொடர் வேலைநிறுத்தப் போராட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.*

திரு. என். சுரேஷ் ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய இரப்பர் தோட்டக் கழகத்தின்கீழ் பணியாற்றக்கூடிய சுமார் 2,000–க்கும் மேற்பட்ட இரப்பர் தோட்டக்*

கழகத் தொழிலாளர்கள், கடந்த 5 ஆண்டுகளாக ஊதிய உயர்வு குறித்து பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், பேச்சுவார்த்தை 50 முறை நடைபெற்றும் அதில் எந்தவிதமான பயனும் இல்லாத காரணத்தால், அந்தத் தொழிலாளர்கள் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். இதுகுறித்து, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையில்கூட இரண்டு முறை பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. 23 ரூபாய் நிவாரணமாக வழங்கப்படும் என்று 27-7-2018 அன்று முடிவு செய்யப்பட்டது. ஆனால், இதுவரையிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. கலைஞர் அவர்களுடைய கடந்த ஆட்சிக் காலத்திலும் இரப்பர் தோட்டக் கழகத் தொழிலாளர்கள். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.என். சுரேஷ் ராஜன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கின்றவிதமாக இரண்டு வார்த்தைகளில் பேச வேண்டும். நீங்கள், மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பேசுவது போன்று பேசினால் எப்படி? இதே பொருள் குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். ஆஸ்டின் மற்றும் திரு. செ. ராஜேஷ் குமார் ஆகியோரும் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அதனால் உங்களது உரையைச் சுருக்கமாக முடியுங்கள்.*

திரு. என். சுரேஷ் ராஜன்: *கடந்த காலங்களில், இரப்பர் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு நஷ்டம் ஏற்பட்ட காலகட்டங்களில், அரசாங்கமே, இரப்பர் தோட்டக் கழகத்திற்கு நிதியை வழங்கி, இரப்பர் தோட்டக் கழகத் தொழிலாளர்கள் பாதுகாக்கப்பட்டனர். எனவே, இரப்பர் தோட்டக் கழகத் தொழிலாளர்களுடைய நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி, போராடக்கூடிய அந்தத் தொழிலாளர்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டு, அரசாங்கம் அவர்களுக்கு நியாயமான ஊதிய உயர்வை வழங்க முன்வர வேண்டுமென்று கேட்டு, அரசினுடைய கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின், நீங்களும் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள் என்று நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) மாண்புமிகு வனத் துறை அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், இதே பொருள் குறித்துதானே பேசப் போகிறீர்கள்!*

2020 மார்ச்12]

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 17–2–2020 முதல் அரசு இரப்பர் தோட்டக் கழகத்தினுடைய தொழிலாளர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறார்கள். இதனால், நிருவாகத்திற்கு ஒரு நாளைக்கு 14 டன் உற்பத்தி இழப்பு ஏற்படுகிறது. ஏற்கெனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தொழிற்சங்கத்தினுடைய நிருவாகிகள் பேசுகின்றபோது, 40 ரூபாய் வழங்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அதைத் தொழிற்சங்கங்களும் ஒத்துக்கொண்டன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதை, ஒத்துக்கொண்டதை, அதிகாரிகள் தற்போது மறுக்கிறார்கள் என்றால், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்தான் அதற்கு இறுதி முடிவு எடுக்க வேண்டும். எனவே, அந்தத் தொழிலாளர்களைப் பாதுகாக்கின்ற வகையிலும், அந்த நிருவாகத்தினுடைய இழப்பீட்டைத் தடுக்கின்ற வகையிலும் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக இன்றே அதற்கு ஒரு தீர்வினை ஏற்படுத்தித் தர வேண்டும். மேலும், அந்தத் தொழிற்சங்கத்தினுடைய போராட்டத்தினை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு வழி ஏற்படுத்தித் தர வேண்டுமென தங்கள் வாயிலாக அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17–2–2020 அன்று முதல், இரப்பர் தோட்டக் கழகத் தொழிலாளர்கள் தொடர் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆகவே, தமிழக அரசு இதில் தலையிட்டு, அரசு வழங்கலாம் என தெரிவித்த நிலுவைத் தொகை 17 ரூபாயை உடனடியாக வழங்க வேண்டுமென தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–55

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இரப்பர் தோட்டக் கழகத் தொழிலாளர்களுடைய நலனைக் காக்கின்ற வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள், அவர்களுடைய ஊதிய உயர்வு பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இரப்பர் தொழிலில் உலகளாவிய அளவில் ஏற்பட்ட விலை வீழ்ச்சியின் காரணமாக, அரசு இரப்பர் தோட்டக் கழகம் நஷ்டத்தில் இயங்கிவரும் நிலையில், தொழிலாளர்கள் நலன்

கருதி, அடிப்படை ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூபாய் 250/–லிருந்து, 303/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. நாட்டிலேயே, தமிழ்நாடு அரசு இரப்பர் கழகத்தில்தான் தினசரி ஊதியம் அதிகமாக வழங்கப்பட்டு வருகிறது என்பதைப் பேரவைக்கு உங்கள் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு இரப்பர் கழகத்தின் மூலமாக 477.24 ரூபாய் சம்பளமாக வழங்கப்படுகின்றது. தனியார் துறையில் 449.95 ரூபாயாக வழங்கப்படுகின்றது. அதுபோல் கேரளா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் இதைவிட குறைவாக வழங்குகிறார்கள். நம்முடைய தமிழ்நாடு அரசின் minimum wage 362.74 ரூபாய். இதில் பல கட்டங்களாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதிலே நமது தொழிற்சங்க சட்ட ஒப்பந்தப்படி தொழிலாளர்களுக்கு 1–12–2016 முதல் 30–11–2019 வரை வழங்கப்பட வேண்டிய ஊதிய உடன்பாடுகள் குறித்து உயர்மட்ட அளவில் பேச்சுவார்த்தை பல கட்டங்களாக நடைபெற்ற பிறகு, தொழிலாளர் துணை ஆணையர் திரு. சமரசம், நாகர்கோவில் அவர்கள் முன்னிலையில் தொழில் தகராறு சட்டத்தின்படி, ரூ.23/– உயர்வு வழங்க, 27–7–2018 அன்று ஓர் இடைக்கால ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்தச் சரத்து 5–ன்படி இரப்பர் கழகத் தொழிலாளர்களின் தின ஊதிய உயர்வு உள்ளிட்ட இதர கோரிக்கைகள்மீது வழங்கிய இறுதி உத்தரவு (final order) அடிப்படையில் தொழிலாளர்களுக்கு தின ஊதிய உயர்வு மற்றும் இதர கோரிக்கைகள்மீது அரசின் இறுதி உத்தரவின் (final settlement) அடிப்படையிலேயே ஏற்படுத்தப்படும் என்பது இருதரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. அதன்படி அரசுக்கு நிருவாகத்தின்மூலம் கருத்துரு அனுப்பப்பட்டது. பலகட்ட பரிசீலனைக்குப் பிறகு, இக்கருத்துருவின்படி இடைக்கால ஊதிய உயர்வை இறுதிப்படுத்தியும், இதர கோரிக்கைகளைப் பரிசீலித்தும் அரசாணை எண் 2119 வெளியிடப்பட்டது. இந்த அரசாணையின் அடிப்படையில், இறுதி ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துமாறு தொழிலாளர் துறை நிருவாகம் தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது. இதனை நிருவாகத் தரப்பில் நடைமுறைப்படுத்த பலமுறை முன்வந்துள்ள நிலையில், தொழிற்சங்கம் தரப்பில் இதனை ஏற்காமல், தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். 17–2–2020 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தத்தினை அறிவித்து, தொடர்ந்து அது நடைபெற்று வருகின்றது. இது தொடர்பாக தொழிலாளர் துணை ஆணையர் திரு. சமரசம், நாகர்கோவில் அவர்களால் நடத்தப்பெற்ற பேச்சுவார்த்தையில், அரசாணையின் அடிப்படையில், இறுதி ஒப்பந்தம் ஏற்படுத்த முன்வருமாறு நிருவாகம் தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது. தொழிற்சங்கம்

2020 மார்ச்12] [திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்]

தரப்பில், தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட ஆணையை இரத்துச் செய்து, மீண்டும் 17+23 வழங்க வேண்டும் எனவும், இதர இனங்கள்மீது பேச்சுவார்த்தைமூலம் தீர்வு ஏற்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்துகிறார்கள். அறிவிக்கப்பட்ட காலவரையற்ற வேலைநிறுத்தத்தினை கைவிட இயலாது என்று தெரிவித்துள்ளனர். இந்தநிலையில், அரசு இரப்பர் கழகத்தின் 2018–2019 ஆம் நிதியாண்டின் ஒட்டுமொத்த நஷ்டமானது ரூ.23.24 கோடியாகும். மேலும், 2019–2020 ஆம் நிதியாண்டில் 5.94 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அரசு இரப்பர் கழகத்திற்குக் கிடைக்கும் வருவாயில் 65 சதவிகிதம் தொழிலாளர் ஊதியம், சலுகைகள் மற்றும் இதர பணப் பயன்கள் போன்றவற்றுக்காக வழங்கப்பட்டு வருகின்றது. இந்தச் சூழ்நிலையிலும் அரசு இரப்பர் கழகம், அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையான ரூ.20 கோடிக்கும் மேல் உள்ளவற்றை உரிய காலத்தில் செலுத்தாமல், அரசு இரப்பர் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தில் ரூ.23/– உயர்வு வழங்கி, அதிகப்படியான ஊதியம் உரிய நேரத்தில் வழங்கி வருகின்றது. அடிப்படை ஊதியத்தில் ஒரு ரூபாய் உயர்வடைந்தால்கூட, ஒரு வருடத்திற்கு ரூ.4 இலட்சம் கூடுதல் நிதிச் சுமை ஏற்படுகின்றது. 1–12–2016 முதல் 30–11–2019 வரையிலான ஒப்பந்த காலங்களுக்கு சுமார் 10 இலட்சம் ரூபாய் வழங்க வேண்டியது நிலுவையில் இருக்கின்றது. இந்தக் கடுமையான நஷ்டத்தில்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொழிலாளர்களுக்கு வருடா வருடம் தீபாவளி போனசை சட்டப்படி 8.33 சதவிகிதம் உயர்த்தி வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சரின் கனிவான நடவடிக்கை மூலமாக, கருணைத் தொகை 11.67 சதவிகிதம் என 20 சதவிகிதமாக உயர்த்தி ஒரு வருடத்திற்கு 1.97 கோடி ரூபாய் அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். இந்த நிலையில், தொழிலாளர்கள் ஒத்துழைக்காமல் தொடர்ந்து போராடுகிறார்கள். இங்கே கோரிக்கை வைத்த மாண்புமிகு உறுப்பினர்கள், தனியார் துறை வழங்குகிற சம்பளத்தையும், அரசு வழங்குகிற சம்பளத்தையும் குறித்து அவர்களிடம் நியாயப்படுத்திப் பேசி, அவர்களை வேலைக்குச் செல்லுமாறு நீங்கள் பணிவோடு கேட்டுக்கொள்ள வேண்டும். இருந்தாலும், ஊதிய உயர்வினைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறீர்கள். முறைப்படி அதற்கு ஒரு கமிட்டியினை அமைத்து அந்தக் கமிட்டியினால் விசாரிக்கப்பட்டு, அந்தக் கமிட்டி தருகின்ற முடிவிற்கு ஏற்ப அரசு நடவடிக்கை எடுக்க பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் 12–00

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கம் குறித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன், மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி ஆகியோரும் விதி 55–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள் விதி 56–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனை நான் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.

டாக்டர் V.P.B. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் உலகளவில் 110 நாடுகளுக்கும் மேலாக வேகமாகப் பரவி வருகின்ற கொரோனா வைரஸினால், உலக சுகாதார நிறுவனம் global disaster என்ற அவசர நிலையை சுகாதாரத் துறையிலே பிரகடனப்படுத்தியிருக்கிறது. இந்த கொரோனா வைரஸினால் ஏற்படுகின்ற பாதிப்பு குறித்து மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற அச்சத்தைத் தாண்டி, கொரோனா

வைரஸ் குறித்து தவறான செய்திகள் சமூக வலைதளங்கள் மூலமாக பரப்பப்படுகின்றன அல்லவா! அதனால் மக்களிடம் ஏற்படுகின்ற பீதியும், அச்சமும்தான் அதிகமாக இருக்கின்றது. இயற்கையாக அந்த வைரஸினால் என்ன பாதிப்பு வருமோ அதைத்தாண்டி, அந்த வைரஸ் குறித்த தவறான செய்திகள் மக்களுடைய கவனத்திற்குச் சென்று அதுதான் அவர்களை இன்று அச்சப்படுத்திக் கொண்டிருக்கிறது. அதைத்தான் நான் இந்தநேரத்தில் நம்முடைய அரசின் கவனத்திற்கு எடுத்துவர விழைகிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், நம்முடைய எதிர்க்கட்சியினுடைய கொறடா அவர்கள்கூட சட்டமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பிக்கும் நாளில் வந்தார். "என்னப்பா, எல்லோரும் ஒரே இடத்தில் கூடக் கூடாது என்கிறார்கள். கூட்டத்தொடரை வேண்டுமானால் இரத்து செய்யச் சொல்லலாமா" என்று கேட்டார்; யதார்த்தம். அவர் பார்த்த செய்திகள், அந்த மாதிரி வீரியமான செய்திகள். அதனால் அந்த மாதிரி கேட்டிருக்கிறார். எங்கள் அமைச்சர் பெருமக்கள் எல்லோரும் எப்பொழுதும் வந்தவுடன் 'வணக்கம்' என்று கை கொடுப்பார்கள். இப்பொழுது 'வாழ்க வளமுடன்' என்று கை காண்பித்துவிட்டு போய்க்கொண்டே இருக்கிறார்கள். கை கூட கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். இது, இந்த வைரஸ் குறித்து பரவியிருக்கிற செய்திகளுடைய வீரியம். ஆனால், இன்று நாம் முக்கியமாக இரண்டு விஷயங்களை எடுத்துக்கொள்ள வேண்டும். எந்தவிதமான தவறான செய்திகள் என்பதை இங்கே நான் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

ஒன்று, இன்றைக்கு நாம் whatsapp–ஐ எடுத்துக்கொண்டோமென்றால், 'இந்த மாவட்டத்தில் புதியதாக ஒருவருக்கு வைரஸ் தொற்று; இந்த இடத்தில் இருந்த 70 வயது முதியவர் இன்று இறந்துவிட்டார்' என்றும் வேகமாக அது பரவி வருவதாகவும், அங்கே ஒருவர், இருவர் இறந்து போவதாகவும் ஒரு தவறான செய்தி பரப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு சிறப்பான ஆணையை வழங்கி, நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய சுகாதாரத் துறை அலுவலர் அவர்களும், அனைத்து நிலை சுகாதாரப் பணியாளர்களும் தங்களுடைய வாழ்க்கையை துச்சமாக மதித்து, risking their lives, இந்த Corona Virus prevention வேலையை இன்று செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதுவும் குறிப்பாக, screening. இன்றைக்கு வெளிநாட்டிலிருந்துதான் இது வருகிறது. நம்முடைய நாட்டில் இது இல்லை. இன்று Airport–ல் 1½ இலட்சம் பேர் இரவு பகலாகக் கண் விழித்து, screening செய்கிறார்கள். அதில் யாருக்காவது Corona பாதிப்புஇருப்பதாகசந்தேகம்ஏற்பட்டால்,உடனேஇரத்தமாதிரிகள் Lab–க்கு எடுத்துக்கொண்டு போய் தேனியிலும், King Institute–லும் check செய்கிறார்கள். Viral Research Diagnostic Lab International Standard–ல் King Institute–லும் இருக்கிறது. உடனே check செய்கிறார்கள். விழிப்புணர்வை அற்புதமாக ஏற்படுத்தியிருப்பதால்தான் இன்றைக்கு 60 பேர் இந்தியாவில் பாதிக்கப்பட்டும் ஒரேயொருவர்தான் தமிழ்நாட்டில் பாதிக்கப்பட்டிருக்கிறார். அதில் சுவாரசியமான விஷயம் என்னவென்றால், அவரே தன்னுடைய உடம்பில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றத்தைக் கண்டு, இந்த விழிப்புணர்வு ஏற்படுத்தியதன் விளைவாக, 'இந்த அறிகுறிகள் இருக்கின்றன, தனக்கு கொரோனா இருக்குமோ' என்றுஎண்ணி,அவரேதன்னை அரசுமருத்துவர்களைக் கொண்டு ஆய்வுக்குட்படுத்தி, சிறப்பான முறையில் குணமாகி வீடு திரும்பக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார். இப்படி சிறப்பான infrastructure இருக்கும்போது தவறான செய்திகள் பரப்பப்படுகின்றன.

இதில் இன்னொன்று என்னவென்றால், விலங்குகள் மூலமாகப் பரப்பப்படுகிறது என்ற ஒரு தவறான செய்தி. ஏனென்றால் China–விலேயே Wuhan மாநிலத்தில் விலங்குகளால் வந்திருக்கலாம் என்று சந்தேகம்தான்படுகிறார்கள். ஆனால், இங்கே விலங்குகளால் பரப்பப்படுகிறது என்று, 'உதயகீதம்' படத்தில் வருவதுபோல், கவுண்டமணி ஜெயிலிலிருந்து வந்தவுடன் தேங்காய் கடைக்காரரிடம் போய் 'ஒரு ரூபாய்க்கு தேங்காய் கொடு' என்று சொன்னதும், அதற்கு கடைக்காரர் 'ஜெயிலிலிருந்து வந்தாயா' என்பான். உடனே தேங்காய்க்குள் குண்டு இருக்கிறது என்று சொல்வார். உடனே தேங்காய் விலை குறைந்துவிடும். அதுபோல் யாரோ கோழிக் கடைக்குப்போய் குறைந்த விலைக்கு கோழி கேட்டிருப்பார். கொடுக்கவில்லை என்றதும் 'கோழிமூலம் கொரோனா வருகிறது' என்று கூறியதால், இன்றைக்கு இதன்மூலம் பரவுகிறது என்று செய்தி வருகிறது. ஏனென்றால், 100 சதவிகிதம் தமிழ்நாட்டில் மனிதனிலிருந்து மனிதன் மூலமாகத்தான் கொரோனா வைரஸ் வருகிறது, கோழியினால் வருவதில்லை என்பதைத் தயவுசெய்து நம்முடைய அரசாங்கம் உடனடியாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, social media–ல் இருக்கும் விஷயங்களுக்கு கட்டுப்பாடு

விதிக்க வேண்டும். ஏனென்றால் இன்றைக்கு droplet infection*தான். இருமல், தும்மல் மூலமாக எதிரில் இருப்பவர் முகத்தில்படுவதில் 20 சதவிகிதம். இப்பொழுது நான் தும்மி இந்த மைக்கில் பட்டதை இன்னொருவர் பிடித்து கை, கால், கண்களில் தொடுவதால் 80 சதவிகிதம், மரணம் என்பதற்கு வாய்ப்பு ரொம்ப குறைவு. 3 வயது, 3 மாதத்திற்கு கீழேயுள்ள குழந்தைகள், 70 வயதிற்குமேல் உள்ள வயதானவர்கள்,* diabetes, steroid *எடுக்கிற* immunocompromised *இவர்களுக்கு மட்டும்தான் இந்த வியாதியால் மரணம் வருமே தவிர, எல்லோருக்கும் மரணம் வராது. தேவையில்லாத ஓர் அச்சத்தை சமூக வலைதளங்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இந்த அச்சத்தைத் தவிர்க்க அரசு உடனடியாக முன்வர வேண்டும். எந்தவொரு எதிர்பார்ப்பும் இல்லாமல் இரவு பகலாக உழைக்கின்ற சுகாதாரத் துறை ஊழியர்களுடைய உழைப்புக்கு இங்கே அங்கீகாரம் கொடுக்கப்பட வேண்டும். அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியையும் சொல்லி அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன் அவர்கள்.*

***டாக்டர் ப. சரவணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களையெல்லாம் வழிநடத்தும், மறைந்தும் மறையாமல் தமிழர்களின் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய தமிழினத் தலைவர் அவர்களையும், எங்கள் இனமான பேராசிரியர் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களையும் வணங்கி, எனது உரையைத் தொடங்குகின்றேன்.*

நாம் எல்லோரும் இன்றைக்கு கொரோனா வைரஸ் பற்றி இந்த அவையில் பேசுகிறோம். சரியாக ஒரு மாதத்திற்கு முன்னால் Diamond Princess Cruise *என்ற கப்பல்* Tokyo *துறைமுகத்தில் நிறுத்தப்பட்டது. 1,300 பயணிகளோடு பயணித்த அந்தக் கப்பலில் 13 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பதாக அறிவிக்கப்பட்டது. அவர்களில் 6 பேர் இந்தியர்கள். அதில் தமிழகத்தைச் சேர்ந்த 2 பேர் இருந்தார்கள். ஒருவர், எனது தொகுதியைச் சேர்ந்த திரு. அன்பழகன் என்பவரும் இருந்தார். அவருக்கு அந்தப் பாதிப்பு இல்லை. ஆனால், அவருடைய குடும்பத்தினர் பயந்து, அவருடைய மனைவி எங்களைத் தொடர்பு கொண்டு பேசினார்கள். எங்கள் கழகத் தலைவர் அவர்கள்*

[டாக்டர் ப. சரவணன்] [2020 மார்ச் 12

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தைத் தொடர்பு கொண்டு, Tokyo-ல் உள்ள Indian Embassy-யுடன் தொடர்பு கொண்டு பேசி, அவர்கள் அங்கு சென்று பார்த்து, தற்போது அவர்கள் அந்த quarantine period முடிந்து, புதுதில்லி வந்து சேர்ந்திருக்கிறார்கள். அங்கு further quarantine period ஆன 14 நாட்கள் கழித்து, அவர்களை தமிழ்நாட்டிற்கு அனுப்புவதாக புதுதில்லியிலிருந்து செய்திகள் வந்திருக்கின்றன. எங்கள் கட்சியின் சார்பில் முதலிலேயே இதுபோன்று நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்துவிட்டோம். இது பொதுவான ஒரு பிரச்சினை என்பதால் கட்சிக்கு அப்பாற்பட்டு எல்லோரும் செய்ய வேண்டிய ஒரு விஷயம் இது.

தமிழ் இந்து நாளிதழில் நல்லதொரு article வெளிவந்திருந்தது. அதில், இதுபோன்று பெருநோய் தாக்கக்கூடிய சமயத்தில் இதற்கு தனி நபர், சமூகம், அரசு ஆகிய மூன்று தளங்களில் வேலை செய்தால்தான் இதைக் கட்டுப்படுத்த முடியும் என்ற ஒரு செய்தி வந்திருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது, கொரோனா வைரஸ் பற்றிய ஒரு கவலையான செய்தி என்னவென்றால், கொரோனா வைரஸ் பற்றி பல தவறான செய்திகள் சமூக வலைதளங்களில் வருகின்றன. இதுபற்றி இதற்கு முன்பு பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்கூட இங்கே குறிப்பிட்டார்கள். இதில் நாம் கவனிக்க வேண்டிய மூன்று செய்திகள் என்னவென்றால், அது ஒரு communicable disease. அதன் தொற்று விகிதம் அதிகம். அதற்கு vaccine கிடையாது. இன்றைய நிலையில் அதற்கு தடுப்பு ஊசியோ, தடுப்பு மருந்தோ கிடையாது. இதற்கு specific drug இல்லை. இந்த மருந்து கொடுத்தால் இந்த நோய் சரியாகிவிடும் என்று சொல்வது போன்ற நிலை இல்லை. இதை நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதே நேரத்தில், கொரோனா வைரஸ் பற்றிய ஒரு நல்ல விஷயம் என்னவென்றால், mortality rate, இறப்பு விகிதம் less than 2% என்று சொல்கிறார்கள். அதாவது, 100-க்கு 98 பேருக்கு பயம் வேண்டாம். அந்த 2%-லும் பார்த்தோமென்றால் 70, 80 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் பாதிப்பு. அத்தகைய வயது முதிர்ந்தவர்களுக்கும் hypertension என்கிற pressure, sugar complaint, heart attack, heart disease போன்ற co-morbid conditions இருப்பவர்களுக்குத்தான் இறப்பு ஏற்படுவதாகச் சொல்கிறார்கள். அதனால், நாம் தைரியமாக இருக்கலாம். தனிப்பட்ட முறையில் இதற்கு மருந்து இல்லை, vaccine இல்லை என்று சொல்லப்படுகின்ற நிலையில், இந்த நோய்த் தொற்றை தமிழகத்தில் எவ்வாறு கையாள வேண்டும் என்பதை நாம் விவாதிக்கவிருக்கிறோம். ஏனெனில், உலக

சுகாதார நிறுவனம் அனைத்து நாடுகளுக்கும் இதை பொது சுகாதார நெருக்கடியாக அறிவித்திருக்கிறது. இந்த நிலையில் நாம் இன்றைக்கு இதைப்பற்றிப்பேசிக்கொண்டிருக்கிறோம். ஆகவே, இதற்கான தடுப்பு நடவடிக்கைகளை நாம் எவ்வாறு கையாளப்போகிறோம்? தனி நபருக்கு எளிதாக இருக்கலாம். 9–3–2020 ஆம் நாளன்று சட்டமன்றக் கூட்டத் தொடருக்கு வரும்பொழுது அரசு சார்பாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் செவிலியர்களை வழியில் நிறுத்தி வைத்து, 60% alcohol கொண்ட sanitizer–ஐ எங்கள் கைகளின்மீது தெளிக்க வைத்தார்கள், விழிப்புணர்வுக்கான Pamphlets கொடுத்தார்கள். இவற்றை மக்கள் கூடும் இடங்களான விமான நிலையம், railway junction, bus stand, schools, colleges போன்ற இடங்களில் விநியோகம் செய்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தலாம் என்பது எங்களுடைய கருத்தாக இருக்கிறது.

இந்த வைரஸின் size 200 microns என்று சொல்கிறார்கள். நாம் பயன்படுத்தக்கூடிய mask பற்றிக்கூட சில கருத்துகள் இருந்தன. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்கூட ஒரு பேட்டியில் சொல்லும்போது, CDC-Centers for Disease Control and Prevention, நோயால் தாக்கப்பட்டவர்கள் மட்டும் mask பயன்படுத்தினால் போதும், மற்றவர்களுக்கு அந்தக் கிருமியின் தொற்று பரவாமல் தடுக்கலாம் என்று சொல்லியிருந்தார்கள். ஆனால், scientific ஆக, practical ஆகப் பார்த்தோமென்றால், இந்த வைரஸ் 200 to 300 microns size–ல் இருக்கிறது. நாம் சாதாரணமாக operation theatre–ல் பயன்படுத்தக்கூடிய mask–ல் இருக்கக்கூடிய ஓட்டையின் அளவு 2 to 10 microns. அப்படியானால், சாதாரண mask–னால் இந்த வைரஸை filter செய்ய முடியும். இதுவே, N95 என்ற mask 0.3 micron size என்று சொல்கிறார்கள். அப்படியென்றால், சாதாரண mask–னால் இந்த வைரஸை பரவாமல் செய்ய முடியும். இன்றைக்கு face mask தட்டுப்பாடு ஏற்படுகிறது என்ற காரணத்தினால் நாம் அனைவரும் mask பயன்படுத்த வேண்டாம் என்று சொல்கிறோம். நாம் helmet பயன்படுத்துகிறோம். அதனால் கட்டாயம் accident நடந்துவிடும் என்பதற்காக அல்ல; ஒருவேளை accident நடந்தால், ஒருவேளை தலையில் அடிபட்டுவிட்டால் பாதுகாப்பதற்காகத்தான் helmet அணிகிறோம். அதுபோலவே, mask வாங்கக் கூடியவர்கள், mask பயன்படுத்தக்கூடியவர்கள் பயன்படுத்தலாம். அதனால், mask–ன் விலையை அரசாங்கம் கட்டுப்படுத்தலாம். மத்திய அரசு ஆரம்பித்திருக்கக்கூடிய generic மருந்தகங்கள் இருக்கின்றன. அங்கேயும் குறைந்த விலையில் mask கொடுக்கலாம். நம்முடைய

ரேஷன் கடைகளில் mask கிடைப்பதற்குக்கூட தமிழக அரசு ஏற்பாடு செய்யலாம். இந்த நோய் சம்பந்தமான சந்தேகங்கள் இருப்பவர்களுக்கு, பயம் இருப்பவர்களுக்கு, இதற்கான investigation, பரிசோதனைகளை அரசு காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கொண்டு வந்தால்கூட பெரும்பான்மையான மக்கள் அரசு மருத்துவமனைகளுக்கு வரக்கூடிய வாய்ப்பு இருக்கும்.

பிற்பகல் 12–10

இப்போது தமிழகத்தில் முக்கியமான தகவல் மையத்தை, தலைமைச் செயல் மையத்தை நாம் Centre of the City–ல் வைத்திருக்கிறோம். அதை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் வைத்திருக்கிறோம். ஒருநாளைக்கு 5 இலட்சம் பேர் அரசு மருத்துவமனையைப் பயன்படுத்துகிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களே சொன்னார்கள். ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் 5,000, 10,000 பேர் வருவார்கள். அங்கே ஒரு Isolation Ward வைக்கிறோம். இதை சென்னை நகரத்திற்குப் பதில் ஒரு புறநகரில் வைத்திருந்திருக்கலாம். ஏனென்றால், எதிரிலே Central Station இருக்கிறது. அங்கு 5 இலட்சம் பேர் தினமும் வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். மக்கள் ஜன நெருக்கடி உள்ள ஒரு பகுதியிலே ஒரு Isolation Ward–ஐ வைப்பதைவிட இன்னும் கொஞ்சம் தள்ளி வைத்திருக்கலாமோ என்ற ஓர் எண்ணம் இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

டாக்டர் ப. சரவணன்: இத்துடன் உரையை முடித்துவிடுகிறேன். தமிழகத்தில் நாம் இதுகுறித்துப் பேசிக் கொண்டிருக்கிறோம். NEET என்ற ஒரு பரீட்சையைக் கொண்டு வந்ததனால் இங்கே இருக்கக்கூடிய பல மாணவர்கள் அதை இங்கே எழுத முடியாமல் வெளிநாடுகளில் குறிப்பாக, China–வில் நிறைய students படிக்கிறார்கள். இந்த நோய் China–வில்தான் ஆரம்பித்திருக்கிறது. அவர்களுடைய பாதுகாப்பு எப்படி இருக்கிறது என்பதை அறிவதற்கு அரசு எதுவும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பன போன்ற விஷயங்களை மாண்புமிகு அமைச்சர்மூலம் அறிவதற்கு அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

2020 மார்ச் 12]

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவைப் பொறுத்தமட்டில் 60-க்கும் மேற்பட்டவர்கள் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உலகத்தைப் பொறுத்தமட்டில், உலக அளவிலே மிகப் பெரிய இழப்பை* China *போன்ற நாடுகள் சந்திக்க வேண்டிய இக்கட்டான ஒரு நிலை. தமிழகத்தைப் பொறுத்தமட்டில், தமிழகத்தில் இந்த* Virus *இல்லையென்று நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சர் நேற்று தொலைக்காட்சியிலே அறிவித்தார்கள். உண்மையிலேயே இந்த அளவிற்கு தமிழகத்திலே பாதிப்பு இல்லை என்று சொல்வதை நான் வரவேற்கிறேன். ஆனால்,* Virus *பரவாத நிலையை ஏற்படுத்துவதற்கு அரசு இன்னும் நிறைய முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக, வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்குத்தான் இந்த* Virus *தொற்று இருக்கிறதா அல்லது தமிழகத்திலே இருக்கக்கூடியவர்களுக்கும் இந்த* Virus *தொற்று பரவுவதற்கு வாய்ப்பிருக்கிறதா என்பதை நீங்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது முகக்கவசம் போன்ற பொருள்களின் விலை அதிகமாக இருக்கிறது, கிடைப்பதில்லை. நீங்கள் என்னதான் முகக்கவசம் தேவையில்லையென்று சொன்னாலும் மக்கள் அதை விரும்புகிறார்கள். தற்காப்பிற்காக, தன்னைக் காத்துக்கொள்வதற்காகவாவது வேண்டுமென்று விரும்புகிறார்கள். அதேபோல,* sanitizer *என்ற திரவ வடிவிலே இருக்கக்கூடிய பொருள் கிடைக்கவில்லை. எந்தவிதமான* medical store-*லும் கிடைக்கவில்லை. அதற்கும் உரிய ஏற்பாடுகளை நீங்கள் செய்ய வேண்டும். இப்போது பேருந்துகளை குறிப்பாக, சென்னையிலே இருக்கக்கூடிய பேருந்துகளை கிருமிநாசினிகளை வைத்து சுத்தப்படுத்துவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இதே திட்டத்தைத் தொடர்ந்து செய்து தமிழகத்தில் இருக்கக்கூடிய அத்தனை பேருந்துகளையும் சுகாதார முறைப்படி சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு நீங்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சரைப் பொறுத்தமட்டில் மிக மிக வேகமாகச் செயல்படுகிறார் என்பது எல்லோருக்கும் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) இத்துடன் உரையை முடித்து விடுகிறேன். அவர்* China *நாட்டிற்கு உரிய ஆலோசனைகளைச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இவர் தமிழ்நாட்டிற்கு மாத்திரம் அல்ல. நீங்கள் உலக நாடுகள் அளவிலே சிறந்த ஓர்*

அமைச்சராக ஆக வேண்டுமென்ற என்னுடைய நோக்கத்தை உங்களிடம் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) இல்லை, சீனாவிற்குக் கிடையாது. சீனா, உலகத்திலுள்ள ஒரு நாடு. அந்த நாட்டிலே இதுபோன்றதொரு பிரச்சினை ஏற்படும்போது, அதிலே நாமும் பங்கெடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு சொல்கிறேன். (குறுக்கீடு) அடுத்தகட்டமாக இதைச் சுகாதார ரீதியாக, கிராமப்புறங்களிலும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும்; உடனடியாக இதைக் கவனிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பிற்பகல் 12–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா வைரஸ் சம்பந்தமாக சென்ற கூட்டத்திலேகூட நான் பேசியிருக்கின்றேன். இந்தியாவிலே முதன்முறையாக கேரளாவில்தான் அந்தப் பாதிப்பு ஏற்பட்டது. கேரளாவை ஒட்டிய பகுதிதான், என்னுடைய தொகுதி கடையநல்லூர். அங்குள்ள புளியரை பகுதியிலே விழிப்புணர்வுப் பணி நடைபெறுவதாக அந்த நேரத்திலே தெரிவித்தார்கள். நானே நேரடியாகச் சென்று பார்க்கும்போது, அங்கே விழிப்புணர்வுப் பிரசுரங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டு வந்தன. அங்கே அவற்றை தமிழிலே விநியோகிக்கின்றார்கள். ஆங்கிலத்திலும் சில பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. கேரளாவிலிருந்து வரக்கூடியவர்கள் தமிழ் மொழியைப் படிக்க முடியாது. மலையாள மொழியிலேயும் அதை அச்சிட்டுக் கொடுத்தால் அங்கே உள்ளவர்களுக்கெல்லாம் பயனளிக்கக்கூடியதாக இருக்கும் என்று அன்றே நாம் சொன்னோம். எனக்கு முன்பு பேசிய அ.தி.மு.க.வினுடைய உறுப்பினர், மருத்துவர், அதேபோன்று திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினரும் மருத்துவர். இருவரும் பல்வேறு கருத்துகளைச் சொன்னார்கள். அவர்கள் கூறியதைப் போல, இதுசம்பந்தமாக மக்கள் மத்தியிலே ஒரு பீதி இருக்கின்றது. என்னுடைய ஊரைச் சேர்ந்த ஆயிரம் குடும்பங்கள் சீனா மற்றும் ஹாங்காங்கில் வாழ்கின்றன. அங்கேகூட, பதற்றத்தின் காரணமாக,இந்த நோய் பரவி விடுமோ என்ற அச்சத்தில், இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களெல்லாம் பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக இறக்கக்கூடிய, செயற்கையாக அவர்களெல்லாம் மரணிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி

வருகின்றனர். எனவே, 'வருமுன் காப்போம்' என்ற அடிப்படையில், நாம் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதிலும், குறிப்பாக என்னுடைய தொகுதியில் உள்ள புளியரை, கேரளா border-ல் இருக்கிறது. அங்கே கேரளாவிலிருந்து மனிதக் கழிவுகளை, மருத்துவக் கழிவுகளை நம்முடைய பகுதிகளில் வந்து அடிக்கடி கொட்டிச் செல்கிறார்கள். அதற்கு அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டும் வருகிறது. எனவேதான், நான் தொடர்ந்து வலியுறுத்தி வரக்கூடிய ஒரு செய்தி என்னவென்று சொன்னால், புளியரை பகுதியில் உள்ள checkpost-ஐ ஒரு integrated checkpost-ஆக, ஒருங்கிணைந்த ஒரு சோதனைச் சாவடியாக மாற்றினால் இதுபோன்ற கழிவுகளைக் கொட்டாமல் தடுக்க முடியும். அதேபோன்று, மணல் கடத்தலைத் தடுக்க முடியும். எனவே, அங்கே integrated checkpost-ஐ ஏற்படுத்த வேண்டும். அதே பகுதியில் நிரந்தரமாகவே ஒரு மருத்துவ உதவி மையத்தையும் நீங்கள் ஏற்படுத்தினால், இதுபோன்ற ஒரு பதற்றமான சூழ்நிலையில் நாம் ஒரு நல்ல பணியைச் செய்ததாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கொரோனா வைரஸ் சம்பந்தமாக மக்களுக்கு மேலும் என்னென்ன வகைகளில் விழிப்புணர்வுப் பிரச்சாரங்களைச் செய்ய முடியுமோ, முன்னெச்சரிக்கைப் பணிகளைச் செய்ய முடியுமோ அதை இந்த அரசு செய்ய வேண்டுமென்பதை வலியுறுத்தி தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–20

அதுமட்டுமல்ல, நானும் கிராமத்தில் இருந்துதான் வந்திருக்கிறேன். ஆகவே, கிராமங்களில் இருக்கின்ற சூழ்நிலையை அறிந்துதான் நான் இதனைச் சொல்கிறேன். ஏனென்றால், கிராமப்புறங்களில் இருக்கின்ற மாணவர்களெல்லாம் போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ள வேண்டுமென்று சொன்னால், அவர்களைத் தயார் செய்ய வேண்டும். அவர்களை எப்படித் தயார் செய்வது? ஒரு மாணவனுடைய தரத்தை எப்படி அறிந்துகொள்வது? பரீட்சை எழுதினால்தான் அந்த மாணவன் என்ன மதிப்பெண் பெறுகிறான் என்று தெரியும். அந்த மதிப்பெண்களின் அடிப்படையில், மதிப்பெண்களைக் குறைவாக வாங்கினால், அவர்களுக்கு அதிகமான கல்வியைக் கொடுத்து, அவர்களைத் தயார் செய்ய வேண்டும். அதுதான் அரசினுடைய கடமை. (மேசையைத் தட்டும் ஒலி) அதனடிப்படையில்தான், நல்ல கல்வியறிவு பெறுவதற்கும்,

கூடுதலான மதிப்பெண்களைப் பெறுவதற்கும், இந்தத் தேர்வு முறைகளைக் கொண்டுவருகிறபொழுது, அவர்கள் அச்சமில்லாமல் தேர்வெழுதி, மற்ற நகர்ப்புற மாணவர்களோடு போட்டியிட்டு, அவர்களுக்கு இணையாக மதிப்பெண்களைப் பெற்றால்தான் போட்டித் தேர்வில் வெற்றி பெற முடியும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் இதனைக் கொண்டு வந்தோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.

முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது என்னவென்றால், 5–வது, 8–வது வகுப்புகளுக்கு பொதுத் தேர்வுகள் வேண்டாம் என்றுதான் சொல்கிறேன். தேர்வே வேண்டாம் என்று சொல்லவில்லை. தேர்வு எழுதட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களும் சொன்னார்கள். 'தேர்வு எழுதலாம், fail ஆக்கவில்லை' என்று சொல்லிவிட்டார்கள். ஆனால், அதனை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையே! '5 ஆம் வகுப்புக்கும், 8 ஆம் வகுப்புக்கும் தேர்வுகள் எழுதட்டும்; யாரையும் fail பண்ண மாட்டோம்' என்று தெளிவாகச் சொல்லியாகிவிட்டது. அதனையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மத்திய அரசானது தமிழகத்தில் புதிதாகக் கல்லூரிகளைத் தொடங்க உள்ளது. அதனை விட்டுக்கொடுக்கக் கூடாது' என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அரசு எந்த நோக்கத்தோடு அதனைச் சொன்னது என்று நமக்குத் தெரியாது. இருந்தாலும் ஒரு குறிப்பை

மட்டும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். திருவாரூர் மாவட்டத்தில், மத்திய பல்கலைக்கழகம் 30–9–2009 அன்று உங்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் தொடங்கப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், இன்றைய சூழ்நிலையிலே நம்முடைய gross enrolment ratio-ஐப் பொறுத்தவரையில், MHRD report-ன்படி பார்த்தோமென்றால், இந்தியளவில் 26.3 சதவிகிதமாக இருக்கிறது. நம்முடைய தமிழகம் அந்த gross enrolment ratio-ல் 49 சதவிகிதம் பெற்று முதன்மை இடத்தில் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய உயர் கல்வித் துறையின்கீழ் 2011 ஆம் ஆண்டுக்குப் பிறகு, 85 கல்லூரிகளை நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தமிழகத்தில் வழங்கியிருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல் 1,666 புதிய பாடப் பிரிவுகளை வழங்கியிருக்கிறது. மத்திய அரசு, 2035 ஆம் ஆண்டில்தான் gross enrolment ratio-ல் 50 சதவிகிதத்தை எட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. ஆகவே, நம்முடைய மாநிலத்தில் மத்திய அரசு கல்லூரிகளை தொடங்கினாலும் நம்முடைய உரிமைகளைப் பறிக்கின்ற சூழ்நிலை இல்லை. நம்முடைய கல்லூரிகளை நாம் தொடங்குவதில் மத்திய அரசு எந்தவிதத்திலும் தடையாக இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு தமிழகத்தைப்போல gross enrolment ratio-வை இந்தியா முழுவதுமுள்ள மற்ற மாநிலங்களிலும் கொண்டு வர வேண்டுமென்ற நோக்கத்தோடு, கல்லூரிகளைத் தொடங்குவதற்காக மத்திய அரசு அறிவித்திருக்கலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–05

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, 'திராணி இருந்தால்' என்கிற ஒரு வார்த்தையைப் பயன்படுத்தினார்கள். 'திராணி இருந்தால்' என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மல்யுத்தத்திற்கு ஆள் வேண்டுமென்று சொல்கிறாரா? அரசை நடத்துவதற்கு மதிநுட்பம்தான் வேண்டும்; அரசை நடத்துவதற்கு இராஜதந்திரம்தான் வேண்டும். 'திராணி இருந்தால்' என்கிற

அந்த வார்த்தையை மாண்புமிகு உறுப்பினர் பயன்படுத்தினார். அதோடுமட்டுமல்லாமல், 'எப்போதும்போல் இல்லாமல் எதிர்கொள்ள வேண்டும்' என்றும் சொல்கிறார். நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவதென்னவென்றால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தமிழகத்தினுடைய ஜீவாதார உரிமைகளை ஒருபோதும் விட்டுக்கொடுத்ததில்லை. பெற்றுக் கொடுத்ததுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, அம்மா அவர்களது அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) எல்லா உரிமைகளையும் கெடுத்தது, கொண்டு வராமல் பேசாமல் இருந்தது, மத்தியிலேயும் மாநிலத்திலேயும் இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.

முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே மனசாட்சியோடு பார்த்தால் தெரியும், நாங்கள் ஆட்சியில் இருந்தவரையில் NEET தேர்வை நுழைய விடாமல் பார்த்துக்கொண்டோம். நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் NEET தேர்வை வரவிடாமல் பார்த்துக்கொள்வோம் என்று சொன்னீர்கள், கொண்டு வந்துவிட்டீர்கள். இதற்கு என்ன செய்வது? நீங்கள் சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டு அனுப்பியும் வரவில்லையே! (குறுக்கீடு) நீங்கள்தான் NEET தேர்வைப் பற்றி அதிக அளவில் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூத்த உறுப்பினர் ஆவார். தங்களுக்கு எல்லாமே தெரியும். நாங்கள் இருந்தவரை NEET தேர்வை நுழைய விடவில்லை என்று சொல்லிய கருத்து ஏற்புடையதல்ல. 27–12–2010 அன்று முதன்முதலாக NEET தேர்வு என்ற ஒரு policy; முதன்முதலில் NEET என்றால் யாருக்குமே என்னவென்றே தெரியாது. National Eligibility cum Entrance Test என்பதை யாருமே யோசிக்கவில்லை, யாருமே சிந்திக்கவில்லை, யாருடைய மனதிலும் இல்லை. முதல்முதலில் மத்தியில் காங்கிரஸ்

ஆட்சிபுரிந்துகொண்டிருந்தபோது, அப்போது நீங்கள் கூட்டணியில் இருந்தபோதுதான் MCI-ல் Notification-ஐ போட்டு, நாட்டிற்கே, இந்தியாவிற்கே அறிமுகப்படுத்தினீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது கொரோனா வைரஸ் எங்கு இருந்ததென்று யாருக்காவது தெரியுமா? இரண்டு மாதங்களுக்கு முன்பு கொரோனா வைரஸ் பற்றி இந்த நாட்டில் யாருக்குமே தெரியாது. தற்போது China-வில் Wuhan மாநிலத்தில் முதன் முதலில் வந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது. அதுபோன்று, NEET என்ற ஒரு virus காங்கிரஸ் ஆட்சியிலிருந்தபோது, நீங்கள் கூட்டணியிலிருந்தபோதுதான் முதன்முதலில் வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அதன் பிறகு நாங்கள் விடவில்லை, நீங்கள் விடவில்லை என்று சொல்வதெல்லாம் ஏற்புடைய கருத்தல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்து குறித்து பல முறை இந்த அவையில் விவாதித்திருக்கிறோம். பலமுறை நான் அழுத்தந்திருத்தமாக இதற்கு பதில் சொல்லியிருக்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மூத்த உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, NEET பிரச்சினை குறித்து பல நேரங்களில் பல்வேறு விவாதங்கள் இதே அவையில் நடைபெற்றிருக்கின்றன. மீண்டும் இப்போது கிளம்பியிருக்கிறது. அதற்கான ஒரு விளக்கத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறிய காரணத்தால் நான் கூற விரும்புகிறேன். NEET-ஐப் பொறுத்தவரைக்கும் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த வரையில் தமிழ்நாட்டில் நுழைய விடாமல் பார்த்துக் கொண்டிருந்தோம் என்பது உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் சொல்வதுபோல் இருக்கலாம், நான் மறுக்கவில்லை. ஆனால், அந்தந்த மாநிலம் விரும்புகிறவரையில்தான் விரும்பக்கூடிய நிலையில்தான் அது ஏற்றுக்கொள்ளப்படும் என்ற சூழ்நிலையில்தான் அது நிறைவேற்றப்பட்டது. அதுமட்டுமல்ல. கடைசிவரையில் அதைத் தொடர்ந்து நாம் எதிர்த்திருக்கிறோம். இதே அவையில் பல நேரங்களில் எடுத்துச்சொன்னபோது, எந்தக் காரணத்தைக்கொண்டும் NEET வராது, அதைத் தடுக்கின்ற முயற்சியில்தான் நாங்கள் ஈடுபடுவோம் என்று நீங்களே பலமுறை

இதே அவையில் உறுதிமொழி தந்திருக்கிறீர்கள். உங்களுடைய தேர்தல் அறிக்கையிலும் உறுதிமொழி அளித்திருக்கிறீர்கள். உங்களுடைய கட்சி பொதுக் குழுக் கூட்டத்திலும் நீங்கள் தீர்மானம் போட்டிருக்கிறீர்கள். நீதிமன்றம் வரை சென்ற விவகாரங்கள் அனைத்தும் தெரியும். அதைப்பற்றியெல்லாம் பேச வேண்டிய அவசியம் நிச்சயம் ஏற்பட்டுவிடும். எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், NEET–ஐ அன்றைக்கும் எதிர்த்தோம், இன்றைக்கும் எதிர்க்கிறோம், என்றைக்கும் எதிர்ப்போம், எப்போதும் எதிர்ப்போம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, உங்கள் நிலை என்ன? அதைத்தான் எங்கள் உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள் எடுத்துச்சொல்லியிருக்கிறார்களே தவிர, வேறு அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் பலமுறை பதிலளித்திருக்கிறேன். நான் மீண்டும் மீண்டும் தெளிவுபட தெரிவித்துக்கொள்கிறேன், நீங்கள் ஒரே ஒரு கருத்து சொல்கிறீர்கள் அது என்னவென்றால், நாங்கள் NEET–ஐ அன்றைக்கு எதிர்த்தோம், இன்றைக்கு எதிர்க்கிறோம், என்றைக்கும் எதிர்ப்போம். அப்படி அல்ல. நீங்கள் அன்றைக்கும் எதிர்க்க வேண்டியதில்லை, இன்றைக்கும் எதிர்க்க வேண்டியதில்லை, என்றைக்கும் எதிர்க்க வேண்டியதில்லை, 27–12–2010 அன்று முதன்முதலில் notification போட்ட அன்றைக்கு நீங்கள் அதிகாரத்தின் உச்சத்தில் இருந்தபோது அன்றைக்கு இதனை எதிர்த்திருந்தால் தொடர்ந்து இந்தப் பிரச்சினையே நாட்டிற்கு வந்திருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல் அடிக்கடி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிற கருத்து, நாங்கள் ஆட்சியில் இருந்தவரைக்கும் NEET–ஐ நாங்கள் நுழையவிடவில்லை என்பதாகும். அப்படி அல்ல. நீங்கள் 27–12–2010–க்குப் பிறகு, நீங்கள் notification போட்ட பிறகு பல்வேறு காலகட்டங்களில் உயர் நீதிமன்றத்தில், உச்ச நீதிமன்றத்தில் மக்கள் கருத்துக் கேட்பில் பல்வேறு விதமாக NEET சுற்றிக் கொண்டேயிருக்கிறது. சுற்றிக்கொண்டேயிருந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவியாக இருந்தபோது, உச்ச நீதிமன்றத்தில் போட்ட வழக்கில்தான் ஒரு மிகப் பெரிய வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பைப் பெற்று நாம் NEET–ஐ இல்லாமல் செய்தோம்.

பிற்பகல் 1–10

அதற்குப் பிறகு அந்த case–ஐ ஒரு தொண்டு நிறுவனம், நீதியரசர் Dave அவர்களிடம் suo moto ஆக எடுத்துச்சென்றது. இதற்குப் பிறகு, உச்ச நீதிமன்றத்தின் Bench–ல் அதற்கு இறுதியான தீர்ப்பைக் கொடுத்துவிட்டார்கள். அந்தத் தீர்ப்பைக் கொடுத்த காரணத்தினால்தான் அனைத்து மாநிலங்களிலும் NEET–ஐ நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இது ஒன்று. மற்றொன்று, நீங்கள் சொல்வதுபோல 'விரும்புகின்ற மாநிலங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்ற அந்தக் கருத்து இல்லை. National Entrance cum Eligibility Test ... (குறுக்கீடு) இல்லை, இல்லை, என்னிடம் முழுமையான ஆதாரம் இருக்கிறது. (குறுக்கீடு) இல்லை, இல்லை, என்னிடம் முழுமையான ஆதாரம் இருக்கிறது. தேதிவாரியான புள்ளிவிவரங்கள் உள்ளன. ஏனென்றால், மாண்புமிகு அம்மா அவர்கள் notification–ஐ கொண்டு வந்தபோது, என்ன சொன்னார்களென்றால், 'நீங்கள் notification கொண்டு வாருங்கள், குறைந்தபட்சம் தமிழகத்திற்காவது இதில் விலக்கு கொடுங்கள்' என்று கேட்டார்கள். Exemption for Tamil Nadu என்று கேட்டார்கள். அதுவும் கொடுக்கப்படவில்லை. எனவே, தாங்கள் கூறிய அந்தக் கருத்து இல்லை. 'விரும்புகிற மாநிலம் மட்டும் வைத்துக்கொள்ளலாம், மற்ற மாநிலங்கள் விட்டுவிடலாம்' என்ற நிலை இல்லை. ஏனென்றால், அதை அம்மா அவர்களே கேட்டார்கள். அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோத 'exemption for Tamil Nadu' என்று கேட்டார்கள். குறைந்தபட்சம் தமிழகத்திற்காவது இந்தச் சட்டத்திலிருந்து விலக்குக் கொடுங்கள், ஏற்கெனவே ஒரு transparent examination +2–வில் நடந்துகொண்டிருக்கிறது என்று கேட்டார்கள். அதனால், எல்லா காலகட்டங்களிலும், நீங்கள் கொண்டுவந்த காலகட்டத்திலிருந்து, அதன் பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட எல்லா காலகட்டங்களிலிருந்து, தொடர்ந்து அன்றும், இன்றும், என்றும், NEET தேர்வு எதிர்ப்பிலே உறுதியாக இருப்பது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

*திரு. **துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மையார் இருக்கிறவரையிலே எதிர்த்தார்கள். அவர்களுக்குக் கொஞ்சம் தைரியம் உண்டு. ஆனால், உங்களுக்கு அந்த 'தில்' இல்லை. அதனால் நீங்கள் ஒத்துக்கொண்டீர்கள். இரண்டாவது, நாங்கள் அவர்களுடன் கூட்டணியில் இருந்தபோது, விரும்புகிற மாநிலங்களில்தான் அமல்படுத்தினார்கள். (குறுக்கீடு) திரு. செம்மலை இல்லையென்றால். . . (குறுக்கீடு) நான் சொல்கிறேன், விரும்புகிற மாநிலத்திற்கு மட்டும்தான்... (குறுக்கீடு) இதை நீங்கள்* T.V.–*ல் சொல்லுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் காலத்தில் ஓராண்டிற்கான விலக்கை மத்திய அரசிடம் கேட்டுப் பெற்றோம். ஏனென்றால், அம்மா அவர்கள் நெஞ்சுரத்தோடு எதையும் எதிர்கொள்ளக்கூடியவர்கள். அவர்களின் வழியில்தான் நாங்களும் செயல்படுகிறோம். அந்த விலக்கை அம்மா அவர்கள் பெற்றார்கள். நான் உங்களுக்கு திரும்ப ஞாபகப்படுத்துவதற்காகச் சொல்கிறேன், அம்மா அவர்களுடைய வழியில், அதே விலக்கைப் பெறும் வகையில், தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு விலக்குக் கேட்டோம். மத்திய அரசு, நாங்கள் ஓர் ஆண்டிற்கு விலக்குக் கொடுப்போம் என்று அறிவித்தது. மத்திய அரசு கூறியவுடன்* overnight–*ல்* resolution–*ஐ மாற்றி மத்திய அரசிற்கு விண்ணப்பித்தோம். திரும்பவும் நான் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. கரி. இராமசாமி அண்ணன் அவர்கள் இப்போதுதான் என்னைப் பாராட்டியிருக்கிறார்கள். திரும்பவும் என்னைக் கோபித்துக்கொள்வார்கள். ஏனென்றால், உங்களுக்குத் தெரியும். விலக்குக்கு,* Ministry of Human Resource Development *மற்றும்* Law Ministry *ஆகிய இரண்டு அமைச்சகங்களிலும் ஒப்புதல் பெற்றதற்குப் பிறகு, அன்றைக்கு* Supreme Court–*ல் திருமதி நளினி சிதம்பரம் அவர்கள் தொடர்ந்த வழக்கில்தான் அந்த ஓராண்டு வழக்கு நிறுத்தப்பட்டது என்பதை மீண்டும் இந்த அவைக்கு நான் பணிவோடு நினைவுப்படுத்துகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.*

முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், போதும். மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்* NEET*–ஐப் பற்றி இங்கே பேசினார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அப்போது மத்தியிலே உங்கள் கூட்டணிக் கட்சிதான் ஆட்சியிலே இருந்தது. நீங்கள் அதை மறந்துவிடக் கூடாது. அப்போது உங்களுடைய நிலை என்ன? அன்றைக்கு அங்கே எதிர்த்தீர்களா? எதிர்த்து, அதை இந்தியா முழுவதும் அமல்படுத்தக் கூடாது என்று வலியுறுத்தினீர்களா? அன்றைக்கு ஆட்சியிலே அமர்ந்துகொண்டு வேடிக்கை பார்த்துவிட்டு, இன்றைக்கு இங்கே பேசிகொண்டிருக்கிறீர்கள். இதுதான் வேடிக்கையாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, பேசுங்கள்.*

முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு எதிர்த்ததால்தான்* NEET *தமிழ்நாட்டிற்குள் நுழையவில்லை. அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களும் 'தரத்தை உயர்த்தப் போகிறோம்; தரத்தை உயர்த்தப் போகிறோம்' என்று சொன்னார்கள். கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருக்கும்போதுதான் சமச்சீர் கல்வி கொண்டு வரப்பட்டு, தமிழகத்தில் பல்வேறு நலத் திட்டங்கள் கொண்டு வரப்பட்டன என்பதை யாரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) சமச்சீர் கல்வி கொண்டு வந்தோம் என்று சொல்லும்போது, நீங்கள் என்ன சொன்னீர்கள்? மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள், 'நாங்கள் அதற்கும் மேலே* CBSE syllabus*–ஐ ஒத்திருக்கின்ற அளவிலே எல்லா* schools*–க்கும் கொண்டுவரப்போகிறோம்' என்று சொன்னார்கள். சரி. ஆனால், இன்றைக்கு இருக்கின்ற புள்ளிவிவரத்தின்படி, 2011–2012 ஆம் ஆண்டில்* NAS–National Achievement Survey *எடுத்ததில், அதில் கற்றலின் வெளிப்பாடு, சேர்க்கை, அடிப்படைக் கட்டமைப்பு, சம வாய்ப்பு என்ற அடிப்படையில்* census *எடுத்து,*

2011–2012 ஆம் ஆண்டில் தமிழ்நாடு 2வது இடத்தில் இருந்தது. அதற்கடுத்து, 2016–2017 ஆம் ஆண்டில் 8–வது இடத்திற்குச் சென்றுவிட்டது. இதுதான் தரத்தினுடைய உயர்வா? தயவுசெய்து நினைத்துப் பாருங்கள். தரத்தை உயர்த்த வேண்டுமென்பதற்காக தேர்வு வைக்க வேண்டும் என்கிறீர்கள். இப்போது இந்த அளவிற்குக் குறைந்திருப்பதை புள்ளிவிவரமே சுட்டிக்காட்டுகிறது. அதேமாதிரிதான் இடைநிற்றல், dropouts. . .

பிற்பகல் 1–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, சமச்சீர் கல்வி முறையைப் பற்றிச் சொன்னார். 12 ஆண்டுக்காலம் சமச்சீர் கல்வி என்ற முறையில் அதே syllabus–ஐதான் நீங்கள் நடத்தி வந்தீர்களே தவிர, வேறொன்றுமில்லை. இப்போது புதிதாக syllabus மாற்றப்பட்டு, CBSE syllabus–ஐ மிஞ்சுகின்ற வகையில், syllabus தமிழகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் உணர்வீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்களும் அதைத்தான் பாராட்டினார். உங்களுக்குப் பாராட்டுவதற்கு மனம் இல்லையென்று சொன்னாலும், இங்கே நடைபெறுகின்ற நல்ல மாற்றங்களுக்கு வாழ்த்துகளை சொல்லுங்கள்.

முனைவர் க. பொன்முடி: தமிழகம் இரண்டாவது இடத்திலிருந்து 8–வது இடத்திற்குச் சென்றுள்ளது. அதற்கு நான் எப்படிப் பாராட்டைத் தெரிவிக்க முடியும்? புள்ளிவிவரக் கணக்கின்படி இரண்டாவது இடத்தில் இருந்த தரம், இப்போது 8–வது இடத்திற்குச் சென்றிருக்கிறது.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் ஆட்சிக் காலத்தில் இருந்த கல்வி முறைக்கும், இப்போதுள்ள கல்வி முறைக்கும் பல்வேறு மாற்றங்கள் இருக்கின்றன. அதைப் புரிந்துகொள்ள வேண்டும். ஏனென்றுசொன்னால்,புதிதாகsyllabus–ஐக்கொண்டுவருகிறபோது, அதில் பல்வேறு பணிகளை ஆற்ற வேண்டிய கடமை ஆசிரியர்களுக்கு உள்ளது. மாணவர்களும் தெரிந்துகொள்ள வேண்டிய கடமைகள்

உள்ளன. இப்போது கொண்டு வந்திருக்கும் இந்தக் கல்வி முறையில் உள்ள syllabus–ஐ படிக்கும்போது, இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில், மத்திய அரசு நடத்துகின்ற எந்தத் தேர்வாக இருந்தாலும், தமிழகத்தில் உள்ள மாணவர்கள் அதனைச் சந்திக்கின்ற துணிச்சலை உருவாக்கியிருக்கிறது, ஒரு மாற்றத்தை தமிழகத்தில் ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.*

முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் இடையில் நிற்கின்ற அந்த* dropouts *குறித்த விவரங்களை நான் கொடுக்கவில்லை, புள்ளிவிவரங்கள் சொல்கின்றன.* U.D.I.S.E. *என்ற நிறுவனம், அவர்களே ஒரு கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள்.* Dropouts *எப்படி இருக்கின்றன என்ற விவரத்தினைக் கொடுத்திருக்கிறார்கள். 9th மற்றும் 10th* class–*ல் 2015–2016 ஆம் ஆண்டில் 8%* dropouts. *2017–2018 ஆம் ஆண்டில் 16.2%* dropouts. *ஏன் இதுபோன்று நடக்கிறது? இந்தச் சூழ்நிலைகள் எல்லாம் வரக் கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறோம். கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும், எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்பதில் எந்த மாறுபட்ட கருத்தும் இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில புள்ளிவிவரங்களைத் தந்திருக்கின்றார். இம்மாமன்றத்தில் உங்களுடைய உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு, சரியான விளக்கத்தை ஏற்கெனவே தந்திருக்கிறோம். அதுபோன்ற நிலைகள் தமிழகத்தில் இல்லை. டெல்லி, உத்தரப்பிரதேசம், ஹரியானா ஆகிய மாநிலங்களோடு ஒப்பிடுகின்றபோது, 2017–2018 ஆம் ஆண்டில் இருக்கிற புள்ளிவிவரத்திற்கும், மேற்சொன்ன மாநிலங்களின் புள்ளிவிவரங்களுக்கும் வேறுபாடுகள் இருக்கின்றன. அப்போது எடுக்கப்பட்டிருக்கிற புள்ளிவிவரம்,* manual *ஆக அங்கிருந்த ஆசிரியர்களால் எடுக்கப்பட்டது. இப்போது* online *மூலமாக விவரங்கள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்தப் புள்ளிவிவரங்களைப்*

பார்க்கின்றபோது, 2016–2017 மற்றும் 2017–2018 ஆம் ஆண்டைய புள்ளிவிவரங்களை மத்திய அரசு கொடுத்திருக்கின்ற புள்ளிவிவரங்களோடு ஒப்பிடுகையில் அவர்களுக்குள்ள வேறுபாடுகள் 7 சதவிகிதம் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. இதுபோன்று எல்லா மாநிலங்களிலும் வேறுபாடுகள் இருக்கின்றன. எனவே, அதை வைத்து மாண்புமிகு உறுப்பினர் பேசுவது சரியாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.

முனைவர் க. பொன்முடி: மத்திய கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்தில் புள்ளிவிவரத்தைக் கொடுத்து பேசியதைத்தான் நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். பரவாயில்லை. Dropouts-ஐ நீங்கள் குறைத்தால் நன்றாக இருக்கும். ஆனால், புள்ளிவிவரங்களைப் பார்த்து நீங்கள் தயவுசெய்து சரி செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளை நான் இங்கே வைக்கிறேன். அதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன்.

அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை இப்போது குறைந்துள்ளது. அரசு உயர்நிலைப் பள்ளிகளில், 2009–2010–ல் 28.60 இலட்சம் மாணவர்கள் படித்தார்கள். 2015–2016 ஆம் ஆண்டில் 17.45 இலட்சமாகக் குறைந்திருக்கிறது. தனியார் பள்ளிகள் அதிகளவில் வந்துவிட்டன. அதனால் மாணவர்கள் அங்கு போகிறார்கள் என்று சொல்லலாம். ஆனால், அரசுப் பள்ளிகளில் முறைகேடுகள் நடந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால், இது நடந்துள்ளது. தளபதி மேயராக இருந்தபோது, அவர் எடுத்த முயற்சிகளின் காரணமாகத்தான், இன்றைக்கு Corporation Schools–ல் admission எல்லாம் அதிகமாகியிருக்கிறது; அதுதான் காரணம். ஆனால், இன்றைக்கு Government Schools–ல் admission குறைந்திருக்கிறது என்று சொன்னால், அங்கே தரம் குறைந்திருக்கிறது என்பதுதான் காரணம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு விஷயங்களைப் புரிந்துகொள்ள வேண்டும். ஒன்று, மக்களுடைய உணர்வுகள்,

பெற்றோர்களுடைய உணர்வுகள் எப்படி இருக்கின்றன என்பதைச் சொல்கிறேன். ஆங்கில கல்வி முறையில் கல்வி கற்க வேண்டுமென்பதற்காக, பல ஆண்டு காலமாக மாணவர்கள் Matriculation மற்றும் CBSE பள்ளிகளில் சேர்ந்து படிக்கிறார்கள் என்பதை உங்களால் உணர முடியும். அதை உணர்ந்த காரணத்தினால்தான், இந்த அரசு கடந்த ஆண்டு L.K.G. மற்றும் U.K.G. ஆகிய வகுப்புகளில் மாணவர்கள் சேர்கின்ற முறையை கொண்டு வந்தது. மக்கள் மனதில் என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டு, அதற்கான பணிகளை ஆற்றி வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல், இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகின்றபோது தமிழ்நாட்டில் மட்டும்தான் ஜனத்தொகை ஆண்டுக்காண்டு குறைந்து வருகின்றது என்பதை உங்களால் புரிந்துகொள்ள முடியும். ஆகவே, பிறக்கின்ற குழந்தைகளின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் குறைந்திருக்கிறது என்று புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. ஆகவே, இந்தப் புள்ளிவிவரங்களை எல்லாம் வைத்துக்கொண்டு உறுப்பினர் அவர்கள் பேசினால் சரியாக இருக்கும்.

முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன புள்ளிவிவரம் என்பது புரியவில்லை. 17–25 age group–ல் dropouts அதிகளவில் இருக்கிறார்கள். ஆகவே, அரசுப் பள்ளிகளின் தரத்தை இன்னும் உயர்த்த வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்க வேண்டுமென்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். நீங்கள் ஒரேமாதிரி system-ஐ கொண்டு வந்தால் உயரும் என்று சொல்வதைவிட, ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுத்து, அதிகமான ஆசிரியர்களை நியமித்து இதைச் செய்தால் மிகச் சிறப்பாக இருக்கும் என்பதுதான் என்னுடைய கருத்து. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–20

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற யோசனை நல்ல யோசனைதான். நீங்களும் அதற்கு முன்வர வேண்டும். ஏனென்றால், ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமென்று சொன்னாலும் சரி, எந்தப் பணிகளை ஆற்ற வேண்டுமென்று சொன்னாலும் சரி, முன் நின்று போராட்டக்

களத்தில் அவர்களை இறக்கி விடுகிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட நிலை இருக்கின்றபோது, ஆசிரியர்களை சரியான முறையில் வழிநடத்திச் செல்வதற்கு இருவரும் ஒன்றுபட்டிருந்தால்தான் அது சரியாக இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.

முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, 2023 தொலைநோக்குத் திட்டம். 2012 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தொலைநோக்குத் திட்டம் 2023-ல், மேல்நிலைப் பள்ளிகளின் உட்கட்டமைப்புகளுக்கு 10,000 கோடி ரூபாய் வழங்கப்படும் என்றும், மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு 5,000 கோடி ரூபாய் வழங்கப்படும் என்றும், 2012–2014 ஆம் ஆண்டுகளுக்குள் 14 முதல் 17 வயது வரையுள்ள மாணவர்களுக்குத் தொழிற்பயிற்சிக் கல்வி வழங்க 6,000 கோடி ரூபாய் வழங்கப்படும் என்றும், 2020 ஆம் ஆண்டுக்குள் கோயம்புத்தூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் உலகத்தரம் வாய்ந்த அறிவு மையம் அமைக்க 750 கோடி ரூபாய் வழங்கப்படும் என்றும், 2012–2014 ஆம் ஆண்டுகளுக்குள் கல்வி நிலையங்களில் பயிற்சி மேம்பாட்டுக்கு 1,600 கோடி ரூபாய் வழங்கப்படும் என்றும், கல்லூரிகளுக்கு சிறப்பு வசதி செய்ய 1,600 கோடி ரூபாய் வழங்கப்படும் என்றும், 2015 ஆம் ஆண்டுக்குள் பொறியியல் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு பெற திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்கு 6,000 கோடி ரூபாய் வழங்கப்படும் என்றும் மொத்தத்தில் கல்வித் துறைக்கென அதில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தத் தொகை 58,100 கோடி ரூபாயாகும். இவை அனைத்தும் தொலைநோக்குத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன. தொலைநோக்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, பயன்பாட்டுக்கே வராமல் தொலைவிலேயே நிற்கிறது என்பதுதான் அனைவருடைய ஆதங்கமும். இதிலே, எவ்வளவு நிதி செலவு செய்யப்பட்டுள்ளது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைநோக்குத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது படிப்படியாகத்தான் வளர்ச்சியடையும்.

பிறந்தவுடனேயே யாரும் சட்டமன்றத்தில் உரையாற்ற முடியாது. வயது வரம்பிற்கான வரையறை அதற்கு வைக்கப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினராகப் போட்டியிடுவதற்கு எந்த வயதில் மனுத் தாக்கல் செய்ய வேண்டுமென்று வரையறை இருப்பதுபோல, படிப்படியாகத்தான் வளர்ச்சியடையுமே தவிர, நிதி ஒதுக்கப்பட்டவுடனேயே அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, உடனடியாக வளர்ச்சியடைந்துவிடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.*

முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது 2012 ஆம் ஆண்டு தெரிவிக்கப்பட்டது. தற்போது, 2020 ஆம் ஆண்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 8 வருடங்கள் ஆகிவிட்டன. 2023 ஆம் ஆண்டுக்குள் இந்தப் பணிகள் அனைத்தும் முடிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த 8 வருடங்களில் எவ்வளவு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்ற விவரங்களை வைத்துள்ளீர்களா? இப்போது சொல்ல முடியவில்லை என்றாலும்கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையின்போது தெரிவித்தால் போதும். இப்போது சொல்ல வேண்டாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதிலுரையாற்றும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துகள் அனைத்திற்கும் உரியவிளக்கம்அளிப்பேன்.அவையனைத்திற்குண்டானவிளக்கங்கள் என்னிடம் தயார் நிலையில்தான் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றி கவலைப்பட வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமர்ந்து, நான் அளிக்கும் விளக்கங்களைக் கேட்டுவிட்டுச் செல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.*

முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வியைப் பொறுத்தவரையில், 2006 முதல் 2011 ஆம் ஆண்டுகளில் நடைபெற்றதுபற்றி குறிப்பிட விரும்புகிறேன். அரசு பொறியியல் கல்லூரிகளில் கல்விக் கட்டணம் ரூபாய் 12,500/–லிருந்து 7,500/– ரூபாயாகக் குறைக்கப்பட்டது. 2007–2008 ஆம் ஆண்டு அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் கல்விக் கட்டணம் முழுமையாக இரத்து செய்யப்பட்டது. 2007–2008 ஆம் ஆண்டில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டன. 2007–2008 ஆம் ஆண்டு அரசு கலைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டை வழங்கப்பட்டது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் தளபதி அவர்கள்தான், “பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மட்டும் இலவச பேருந்து பயண அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன; கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கும் இலவச பேருந்து பயண அட்டைகள் வழங்க வேண்டும்” என்று பேசினார். அதை ஏற்றுக்கொண்டு, கலைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கும் இலவச பேருந்து பயண அட்டைகளை வழங்கியது தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தின்போதுதான். 2010–2011 ஆம் ஆண்டில் பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் இரத்து செய்யப்பட்டது. முதலில், B.A. and B.Sc. படித்தவர்களுக்கு மட்டும் கட்டணம் இரத்து செய்யப்பட்டது. 2010–2011 ஆம் ஆண்டில் P.G. படித்தவர்களுக்கும் கட்டணம் இரத்து செய்யப்பட்டது. First generation, முதல் தலைமுறையாக கல்லூரியில் பயில வருபவர்களுக்கு இடம் வழங்க வேண்டும், உதவித் தொகை வழங்கப்பட வேண்டுமென்று சட்டம் இயற்றியதும் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தின்போதுதான். இதையெல்லாம் செய்ததனால்தான் இன்று உயர் கல்வியில் நாம் உயர்ந்த நிலையில் இருக்கிறோம்.

2017–2018 ஆம் ஆண்டு உயர் கல்வித் துறையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பில், “உயர் கல்வி பயில விரும்பும் இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கட்டணச் சலுகை, பொறியியல் கல்லூரிகளில் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்குக் கல்விச் சலுகை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை உயர் கல்வித் துறை செயல்படுத்தி வருகிறது” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நாங்கள் போட்ட திட்டத்தை நீங்களும் செயல்படுத்தியுள்ளீர்கள். அதில் ஒன்றும் தவறு இல்லை. இன்றும் அது continue ஆகிக்கொண்டிருக்கிறது.

பிற்பகல் 1–25

மேலும், "சலுகைகள், பொருளாதாரத் தடைகளை நீக்கி, உயர் கல்வி பயில வாய்ப்பு நல்குவதுடன் மாணவர் சேர்க்கை விகிதத்தில், நிலையான முன்னேற்றத்திற்கு ஏதுவாக இருக்கிறது" என்று அரசினுடைய கொள்கை விளக்கக் குறிப்பில்தான் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆக, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் செயல்படுத்திய திட்டங்களை, தொடர்ந்து செயல்படுத்தி வருவதால் இந்தியாவில் உயர் கல்வியில் நாம் உயர்ந்த இடத்தில் இருக்கிறோம். அதில் ஒன்றும் தவறு இல்லை. ஆனால், பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரையில், இன்று பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினை அரசுடைமையாக்கப் போகிறோம் என்று சொல்கிறீர்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலுள்ள non teaching staff, அவர்களையும் அரசு ஊழியர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அங்குள்ளவர்கள் மற்ற கல்லூரிகளுக்கு மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதுபோலல்லாமல் அதனையே ஓர் அரசு பல்கலைக்கழகமாக மாற்றி அங்குள்ள பேராசிரியர்கள் அங்கேயே பணியாற்றுகின்ற வகையில் நீங்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினைப் பொறுத்தவரையில், அங்கே பணியாற்றுவதற்கு 6,000 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்கள்தான் தேவைப்பட்டன. ஆனால், அவர்கள் 12,005 பேரை அன்றைக்கு பணியில் அமர்த்தியிருந்த காரணத்தினால்தான் இன்றைக்கு அரசானது அந்தப் பல்கலைக்கழகத்திலிருந்து மாற்றுப் பணி மூலமாக அரசு கல்லூரிகள் மற்றும் பல்வேறு நிறுவனங்களில் அவர்களை அமரச் செய்திருக்கிறது. 2013–ல் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றைக்கு அந்தப் பல்கலைக்கழகத்தினை எடுக்கும்போது, அங்கு பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கெல்லாம் இந்த அரசு என்றைக்குமே பாதுகாவலராக இருக்கும் என்று சொல்லிய ஒரே காரணத்திற்காகத்தான் தேவைக்கு அதிகமாக இருக்கின்ற 6,000 பேரை வீட்டுக்கு அனுப்பாமல் தொடர்ந்து அவர்களை

பணியமர்த்தி அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு கொடுத்துக் கொண்டிருக்கின்ற அரசாக இன்றைக்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு திகழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.

முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது non teaching staff. நீங்கள் சொல்வது teachers, அவர்களை கொஞ்சம் மாற்றி, engineering college-ல் பணியமரச் செய்கிறீர்கள். நான் சொல்வது அங்குள்ள non teaching staff குறித்து. எங்களுக்கு எந்தப் பலனும் கிடைக்கவில்லை என்று ஒரு போராட்டமே நடத்தியிருக்கிறார்கள். இதுகுறித்த அறிவிப்பு உங்களுக்கு வந்திருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சிறிய அளவில் தற்காலிகப் பணியாளர்களாக சிலர் இருக்கிறார்கள்; அவர்கள்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்தில் சொல்லியிருப்பார்கள். அவர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக உயர் கல்வித் துறையின்கீழ் இருக்கின்ற 13 பல்கலைக்கழகங்களிலுமே அதுபோன்ற நிகழ்வு இருக்கின்றது. இதுபற்றி அரசானது தற்போது பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.

முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழகத்தினைப் பொறுத்தவரையில், கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருக்கின்றபோது முதலில் சென்னை பல்கலைக்கழகம் மட்டும்தான் இருந்தது. பின்னர் கல்லூரிகளின்

எண்ணிக்கை வளர வளர, அது பல்வேறு பல்கலைக்கழகங்களாகப் பிரிக்கப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். அதுபோல்தான் அண்ணா பல்கலைக்கழகத்தினையும் நாங்கள் இருந்தபோது 4, 5 பல்கலைக்கழகங்களாகப் பிரித்து வைத்தோம். நீங்கள் வந்தவுடன் அதனை ஒன்றாக்க வேண்டும் என்று அதனை ஒன்றாக்கினீர்கள். இப்போது மத்திய அரசாங்கம் இரண்டாகப் பிரிக்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள். அண்ணா பெயரையே எடுப்பதற்கு அவர்கள் முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, அண்ணா பல்கலைக்கழகத்தினை நம்முடைய மாநிலத்தின் கட்டுப்பாட்டில் இருக்குமாறு உருவாக்க வேண்டும் என்று மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், மத்திய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் எல்லாம் அப்படி இருக்கின்றன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதனை இரண்டாக்க வேண்டும், மூன்றாக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதிகமாக ஆக்குவதில் எந்தத் தவறும் இல்லை. பிரித்து வைப்பதில் எந்தவிதத் தவறும் இல்லை. ஆனால், அதற்கு என்றைக்கும் அண்ணா பல்கலைக்கழகம் என்ற பெயர் இருக்க வேண்டும். நாங்கள் நான்கு ஆக்கியபோதுகூட அதற்கு அண்ணா பல்கலைக்கழகம், கோவை, அண்ணா பல்கலைக்கழகம், மதுரை, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை என்றுதான் வைத்தோம். அதுபோல் பெயர் வைத்துவிட்டுப் போங்கள். அதில் ஒன்றும் தவறும் இல்லை. அந்த அளவிற்கு நீங்கள் செய்ய வேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து உள் ஒதுக்கீடு. கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் அதிகமாக இடம் கிடைத்தது உள் ஒதுக்கீடு கொடுத்ததனால்தான். உள் ஒதுக்கீட்டினை இஸ்லாமியர்களுக்குக் கொடுத்தோம். அதுபோல் அருந்ததியினருக்குக் கொடுத்தோம். அருந்ததியினருக்குக் கொடுத்ததனால்தான் பல பேர் இன்றைக்கு பட்டதாரிகளாக, டாக்டர்களாக, இன்ஜினியர்களாக, பல நிலைகளில் வந்திருக்கிறார்கள். தளபதி அவர்கள், அருந்ததியர் சமுதாயத்தினைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் ஓட்டையே எதிர்பார்க்காமல் ராஜ்ய சபா எம்.பி.-க்கு ஒரு அருந்ததியினரை அனுப்பியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) சபாநாயகர் அவர்கள் இருக்கையில் இல்லை. அவர் இருக்கையில் இருந்திருந்தால் அவருக்கும் ஒரு வாழ்த்து சொல்லியிருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் அனுப்பியதற்குப் பிறகுதான் எங்கள் வழிகாட்டுதலின்பெயரில்தான் நீங்கள் அனுப்பியிருக்கிறீர்களே தவிர, வேறு ஒன்றும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்னும் 5 பேர் பேச வேண்டும். கொஞ்சம் வேகமாக முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அண்ணா பல்கலைக்கழகத்தினை இரண்டாகப் பிரிப்பதாகவும், மத்திய அரசு அதனை எடுத்துக்கொள்வதாகவும் இங்கே வலியுறுத்திச் சொன்னார்கள். அப்படி அல்ல. சீர்மிகு பல்கலைக்கழகமாக அறிவிக்கின்ற வகையில், மத்திய அரசாங்கம் தெரிவித்த காரணத்தினால் இதுபோன்ற நிகழ்வுகளை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஐந்து அமைச்சர்களைக் கொண்ட குழுவினை அமைத்து அதன் மூலமாகக் கல்வியாளர்களிடமும் ஆலோசனை கேட்டு, அதனுடைய சாதக, பாதகங்களையெல்லாம் அவர்கள் அறிந்து தகவல் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் இன்றைய நிலை இருக்கின்றதே தவிர, அதனைப் பிரிக்கின்ற எண்ணமோ, மத்திய அரசுக்கு அதனைத் தாரை வார்க்கின்ற எண்ணமோ, அண்ணா பல்கலைக்கழகம் என்ற பெயரை விட்டுக்கொடுக்க வேண்டுமென்ற எண்ணமோ அம்மா அவர்களின் வழியிலே தமிழகத்தில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியாருக்கோ, இந்த அரசுக்கோ இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.

முனைவர் க. பொன்முடி: நன்றி. இன்னொன்று, பகுதிநேர ஆசிரியர்கள். அதைப் பற்றி மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்குத்தான் சொல்ல வருகிறேன். கிட்டத்தட்ட 58,000 பகுதிநேர ஆசிரியர்களை முன்னாள் அமைச்சர் அவர்கள், அம்மா இருக்கும்போது நியமித்தார்கள். கலைஞர் வந்தபிறகு அந்த 58,000 தற்காலிக ஊழியர்களையும் நிரந்தர ஊழியர்களாக ஆக்கினார். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் அவர்கள் அந்த நன்றியோடு இருக்கிறார்கள். ஆனால், நீங்கள் என்ன செய்தீர்கள்? உங்கள் ஆட்சியில் நியமித்தது 16,000 பேர். அந்த 16,000 பேரில் 4,000 பேர் வேறு வேலைக்குப் போய்விட்டார்கள். இன்று இன்னும் 12,000 பேர் இருக்கிறார்கள். 2 வருடங்களுக்கு முன்பு நான் பேசும்போது நீங்கள்தான் சொன்னீர்கள், "எப்படியும் இன்னும் 3 மாதங்களுக்குள் ஒரு Committee போடப்போகிறோம். அவர்களையெல்லாம் நிரந்தரமாக்கிவிடுவோம்" என்ற வாக்குறுதியை அமைச்சர் அவர்கள் இதே சட்டமன்றத்தில் கொடுத்தார்கள். Record-ஐ எடுத்துப்பாருங்கள். நான் கேட்ட கேள்விக்கு, ஒரு Committee போட்டு 3 மாதங்களில் செய்கிறோம் என்று அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். 3 வருடங்கள் ஆகிவிட்டன, இன்னும் அதுபற்றி ஒன்றும் செய்யவில்லை என்று அவர்கள் வருந்துகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசுகின்றபொழுது, பகுதிநேர ஆசிரியர்களை நிரந்தரப்படுத்திய வரலாறு எங்கள் கையில் இருக்கிறது என்று குறிப்பிட்டீர்கள். அதைக்காட்டிலும், ஒரே நேரத்தில் 24,000 பேருக்கு வேலைவாய்ப்பைக்கொடுத்து ஒரு வரலாற்றைப் படைத்தவர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இறுதியாக நான் சொல்கிறேன், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு ஏறத்தாழ 53,242 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களை நிரப்பியிருக்கிறோம் என்ற ஒரு வரலாறும் இருக்கிறது. நான் அதைப் பிறகு சொல்கிறேன். அன்றைக்கு TRB மூலமாக தேர்வு செய்ய உங்களால் இயலவில்லை. ஆகவேதான், அப்பொழுது ஆசிரியர் பணியிடம் காலியாக இருந்ததால் அவர்களை நிரந்தரமாக்கினீர்கள். ஆனால், இன்றைக்கு

இருக்கிற நிலைமைகள் வேறு, அன்றைய நிலைமைகள் வேறு. அன்று ஒரு தேர்வு நடைபெற்றால் இறுதி முடிவுகள் வருவதற்கு 1½ ஆண்டு காலம் ஆகும். ஆனால், இப்போதெல்லாம் அப்படி அல்ல. 51 நாட்களிலே ஆசிரியர் தேர்வை முடிக்கின்ற ஒரு வரலாற்றைப் படைக்கின்ற அளவுக்கு online மூலமாகவே அந்தப் பணிகளை மேற்கொண்டிருக்கின்ற அரசாக நம்முடைய அரசு இருந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.

முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேமாதிரி ஜேக்டோ-ஜியோ. (குறுக்கீடு) நீங்கள் புதிதாக நியமித்ததாகச் சொன்னதெல்லாம் சரி. TRB-ல் இப்பொழுது என்ன சொல்கிறார்கள் என்றால், முதலில் ஒரு தேர்வில் pass செய்துவிட்டார்கள், Pass செய்தவர்களுக்கு இன்னொரு தேர்வு நடத்தப்போகிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அது என்னவென்று கேட்டுக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போல 2013, 2014, 2017-ல் தேர்வு பெற்றவர்கள் இருக்கிறார்கள். இல்லையென்று நான் சொல்லவில்லை. ஏனென்று சொன்னால், தேர்வு முடிந்தவுடனே பணி நியமனம் செய்ததற்குப் பிறகு அவர்கள் தேர்வு எழுதுவது ஒரு தகுதித் தேர்வுதான். அதேநேரத்தில் தேர்வு எழுதி pass ஆன அத்தனை பேருக்கும் வேலைவாய்ப்பு கொடுப்பது என்பது இயலாது. அது போட்டித் தேர்வு அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தயவுசெய்து உரையை முடியுங்கள்.

முனைவர் க. பொன்முடி: இதோ உரையை முடித்துவிடுகிறேன். அடுத்து ஜேக்டோ-ஜியோ. சிட்டிபாபு கமிட்டி என்று ஒரு கமிட்டியைப் போட்டீர்கள். ஓராண்டாகியும் இன்னும் கமிட்டியின் அறிக்கை வரவில்லை. அதேமாதிரி Sridhar குழு என்ற ஒன்றை

போட்டீர்கள். அதுவும் வரவில்லை. ஜேக்டோ–ஜியோ சார்பாகப் போராட்டத்தில் ஈடுபட்ட 5,000 ஆசிரியர்கள் மீதுள்ள நடவடிக்கைகள் இன்னும் குறைக்கப்படவில்லை. அவர்கள் எல்லோரும் சொன்னதைத்தான் நான் சொல்கிறேன். அரசு ஊழியர்கள் மற்றும் போராட்டக் குழுவினர் வைக்கின்ற கோரிக்கைகளை நீங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, என்னுடைய தொகுதிக்கு வந்துவிடுகிறேன். அவரும் நேரமாகிறது என்கிறார். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் 3 கோரிக்கைகளை நான் கொடுத்தேன். நீங்கள் ஒவ்வொரு மாவட்டத்தைப் பிரிக்கும்போதும் Consultative கூட்டம் வைக்கிறீர்கள். ஆனால், அங்கே சொல்வது எதுவும் நடைபெறுவதில்லை. எல்லோரும் அவர்கள் இஷ்டத்திற்கு எதையாவது எழுதிக் கொடுத்துவிடுகிறார்கள். கொடியூர் என்னும் ஒரு கிராமம் திருவெண்ணெய்நல்லூருக்குப் பக்கத்தில் இருக்கிறது. அதைத்தாண்டி இருக்கின்ற எடப்பாளையம் என்கின்ற ஊரை திருவெண்ணெய்நல்லூரில் சேர்த்திருக்கிறார்கள். ஆனால், இந்த ஊரைச் சேர்க்க மாட்டேன் என்கிறார்கள். நான் பல தடவை சொல்லிவிட்டேன். அந்த ஊர் மக்கள் முழுவதும், எல்லா கட்சிகளிலிருந்தும், குறிப்பாக ஆளுங்கட்சியிலிருந்தும் வந்து பேசினார்கள். எப்படியாவது திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியத்துடன் சேர்த்துவிடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். நான், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கையைக் கொடுத்திருக்கிறேன்; அதைச் செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, எடப்பாளையம் 15 வருடங்களாக ஊராட்சியாக இருக்கிறது. President எல்லாம் elect ஆகிறார்கள். ஆனால், அந்த ஊரை இன்னும் revenue village ஆக announce செய்யவில்லை. அங்கே VAOகூட இன்னும் நியமிக்கப்படவில்லை. அதையும் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுத்தால் நன்றாக இருக்கும். மேலும், இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசியவர்கள் மணலூர்பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு ஓர் ஒன்றியத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னார்கள். ADMK–லிருந்து வந்த நகரச் செயலாளரே அந்தக் கூட்டத்தில் பேசினார்கள். ஆனால், இதற்கெல்லாம் இந்த அரசு செவி சாய்க்கிற

மாதிரியே தெரியவில்லை. கருத்துக் கேட்புக் கூட்டம் எதற்கு? எதுவும் புரியவில்லை. அதனால், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், கட்சி சார்பாகக்கூட அல்லாமல், அந்த ஊர் மக்கள் பெரும்பாலானவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைக் கேட்டறிந்து, மாவட்ட பிரிவினையைச் செய்ய வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–35

கல்வித் துறையைப் பொறுத்தவரையில், இறுதியாக நான் சொல்ல விரும்புவது, இன்றைக்கு மத்திய அரசில் இடம்பெற்றிருப்பவர்கள் கல்வித் துறையின் மூலமாக பல்கலைக்கழகத்திற்குத் துணைவேந்தரை நியமிப்பதற்கு, RSS–ஐச் சார்ந்த, தில்லி பல்கலைக்கழகத் துணைவேந்தரை இங்கே நியமிக்கிறார்கள் என்று சொன்னால், இதையெல்லாம் நாம் கட்டுப்படுத்த வேண்டுமா, வேண்டாமா? (மேசையைத் தட்டும் ஒலி) அதை எதிர்த்து இந்த அரசு குரல் கொடுக்க வேண்டுமா, இல்லையா? அதுவும், மாணவர்களை அடித்து, துன்புறுத்தி— புதுதில்லியிலிருந்து இங்கே வந்து பணியமர்த்துகிறார்கள் என்றால் என்ன அர்த்தம்? சென்னை பல்கலைக்கழகத்திற்கு துணைவேந்தரை நியமிப்பதற்கு இவர்கள் யார்? R.S.S.–ஐச் சேர்ந்த ஒருவரை பணியமர்த்துவதற்காகவா அங்கிருந்து துணைவேந்தர் இங்கு வர வேண்டும்? இவற்றையெல்லாம் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் மேதகு ஆளுநர் அவர்களிடம் தெரிவித்து, இதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் துறையின் அமைச்சராக இருந்தவர். சென்னை பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில், அதில் Search Committee அமைப்பது என்றால், அதில் Governor அவர்களுடைய nominee ஒருவர், Syndicate nominee ஒருவர், Senate nominee ஒருவர் இருப்பார்கள். இதில் அரசினுடைய பங்கு எதுவும் இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில்,Senateமூலமாகத்தேர்வுசெய்யப்பட்ட ஒருவரை நியமனம் செய்துவிட்டார்கள். Syndicate மூலமாகத்

தேர்வு செய்யப்பட்ட ஒருவரையும் நியமனம் செய்திருக்கிறார்கள். Governor nominee ஆக சென்னை பல்கலைக்கழகத்தின் Search Committee–க்கு தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்டிருப்பவர், அந்தப் பல்கலைக்கழகத்திலேயே பிரச்சினைக்குரியவர் என்று சொல்கிறார்கள். கடந்த 4, 5 மாதங்களுக்கு முன்பாக, தமிழகத்தில் இருக்கக்கூடிய B.Ed. கல்லூரியில் Search Committee–ல் அவரும் ஒரு Member ஆக இருந்து, B.Ed. கல்லூரிக்கான துணைவேந்தரை நியமனம் செய்துவிட்டுச் சென்றவர்தான் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, உரையை முடியுங்கள்.

முனைவர் க. பொன்முடி: உரையை முடித்துவிடுகிறேன். நான் கேட்பது என்னவென்றால், இந்த அரசு மேதகு ஆளுநரிடம் ஒரு எதிர்ப்பையாவது தெரிவிக்கலாம் இல்லையா? புதுதில்லியிலிருந்து ஏன் இங்கே வந்து ஆட்களை நியமிக்கிறீர்கள் என்று கேட்கலாம் அல்லவா? தமிழ்நாட்டில் இதற்குத் தகுதியான ஆட்களே இல்லையா? எவ்வளவு பெரிய, பெரிய தகுதியான ஆட்களெல்லாம் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இருப்பவர்களை நியமிக்காவிட்டாலும்பரவாயில்லை; அப்போது அந்தக் குற்றச்சாட்டு இல்லை. மாணவர்களை அடித்து, துன்புறுத்தியதெல்லாம் இப்போது சமீபத்தில் நடந்தவை; மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோன்று, அவர் இங்கு பணியாற்றிய காலங்களில் இந்தக் குற்றச்சாட்டு அவர்மீது கிடையாது. ஆகவே, அத்தகைய குற்றச்சாட்டுக்குள்ளான அவரை சென்னை பல்கலைக்கழகத்தின் Search Committee–ன் தலைவராக நியமனம் செய்வதற்கு இந்த அரசு மேதகு ஆளுநரிடம் எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டு, இந்த அளவோடு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.

***திரு. C.V. சேகர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கத்தின் பிதாமகன், வெண்தாடி வேந்தர், பகுத்தறிவுப் பகலவன், தந்தை பெரியார் அவர்களையும், மாட மாளிகைகளில் தவழ்ந்த பெருந்தனக்காரர்களின் அரசியலை

சாதாரண, சாமானிய மக்கள் வாழ்கின்ற பகுதிகளுக்குக் கொண்டு வந்த ‘தென்னாட்டு காந்தி’ என மக்களால் போற்றிப் புகழப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்களையும் இந்த நல்ல வேளையில் நினைவுகூர்ந்து வணங்குகிறேன். வாழ்க்கைக்கும், வார்த்தைக்கும் வேறுபாடின்றி வாழ்ந்த மகான், சத்துணவு தந்த சரித்திர நாயகன், *(மேசையைத் தட்டும் ஒலி)* ஏழைக் குடிசைகளுக்கு மின் விளக்கு தந்த தமிழகத்தின் ஒளிவிளக்கு, கழகத்தின் நிரந்தர நிறுவனத் தலைவர், பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும் வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

காலக் கருவூலமாய், கற்பூரப் பெட்டகமாய் வாழ்ந்திட்ட கருணை தெய்வம், கழகத்தையும், கழகத் தொண்டர்களையும் கண்ணின் இமைபோல் இருந்து காத்திட்ட நம் குடும்ப தெய்வம், குல தெய்வம், விடியலை நோக்கிய நம் அரசியல் பயணத்திற்கு வெளிச்சம் காட்டிய வேதா நிலையத்து வீரத்தாய், பூமித்தாய் நமக்களித்த பொன் வசந்தம், *(மேசையைத் தட்டும் ஒலி)* பொற்கால ஆட்சி தந்திட்ட புதுமைத் தலைவி, தமிழக அரசியல் வரலாற்றில் தனக்கென தனிச் சிறப்பிடத்தைப் பெற்று, தரணி போற்றும் சரித்திர சாதனைகள் பல படைத்திட்ட நம் இதய தெய்வம், புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் துயிலும் இடம் நோக்கி என் கண்ணீர் மலர்களைக் காணிக்கையாக்கி வணங்குகிறேன்.

சேலம் தந்த சீலர், எடப்பாடி எனும் ஊரை உலக சரித்திரத்தில் இடம்பெறச் செய்த வேளாண் மண்டலம் காத்த விவசாயப் பெருங்குடி மகன், *(மேசையைத் தட்டும் ஒலி)* எளிதாக எடை போட்ட மனிதர்களையெல்லாம் நாளும் தம் அதிரடிச் செயலால் அலற வைத்துக்கொண்டிருக்கும் ஆற்றலாளர், இந்த மண்ணும், மக்களும் மேன்மையுற வேண்டும் என பாடுபட்ட நம் இதய தெய்வம் அம்மா அவர்களின் வழியில் அரசாட்சி நடத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர், அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், *(மேசையைத் தட்டும் ஒலி)* பாண்டிய நாட்டுப் பண்பாளர், அடக்கமும், அமைதியுமே தமது அணிகலன் என வாழ்ந்துவரும் அன்பு அண்ணன் மாண்புமிகு துணை முதலமைச்சர், அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும் என் பணிவான வணக்கங்கள்.

பிற்பகல் 1–40

இதய தெய்வம் அம்மா அவர்களின் நன்மதிப்பையும், நம்பிக்கையையும் பெற்ற அவரது அன்புக்குப் பாத்திரமான

பண்பாளர், பேரவையை அமைதி வழியில் மரபுகளுக்கும், விதிகளுக்கும் உட்பட்டு, நேர்மைத் திறத்தோடும், நெஞ்சுறுதியோடும் நடத்திச் செல்லும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அவருக்குத் துணை நிற்கும் பொள்ளாச்சியின் புகழ் மைந்தன், சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் எதிரிகளுக்குச் சாட்டையடி கொடுக்கும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அண்ணன் பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) பேரவையின் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி கண் போன்றது என்பார்கள். கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதை நாம் அறிவோம்.

"கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு;
மாடுஅல்ல மற்றை யவை."

அதாவது, பொன்னும் மணியும் செல்வம் அல்ல. ஒருவன் பெற்ற கல்வியே அழியாத செல்வம் என்று வள்ளுவம் பேசுகிறது. அத்தகைய உயர்ந்த, சிறந்த கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேசுகின்ற அரிய வாய்ப்பினை வழங்கிய உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை என் நன்றியையும், வணக்கத்தையும் கூறி, பள்ளிக் கல்வி, உயர் கல்வி மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை தொடர்பான சில கருத்துகளை இந்த அவையில் பதிவு செய்யும் முன் என் தொகுதியின் முக்கிய கோரிக்கைகளை நான் இங்கே சுட்டிக்காட்டி, அதற்குத் தீர்வு காணுமாறு கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிராம்பட்டினம்-மதுக்கூர் இடையே பேருந்து வசதி செய்து தர வேண்டுமென்றும், அதைப்போல, பட்டுக்கோட்டை-சிலம்பவேளாண்காடு இடையே பேருந்து வசதி செய்து தர வேண்டுமென்றும் கோருகிறேன். செல்லிக்குறிச்சி ஏரிக்கு மாளியக்காடு கிராமம் அருகில் மகாராஜசமுத்திரம் ஆற்றில் நீரேற்றுத் திட்டம் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று வேண்டுகிறேன். அண்டமி அருகிலே கண்ணனாற்றில் தடுப்பணை கட்டித்தரக் கோருகிறேன். அதிராம்பட்டினத்தில் கால்நடைகள் தடுப்பு மையம் அமைத்துத்தர வேண்டுகிறேன். அதிராம்பட்டினம் பொது நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித்தர வேண்டுகிறேன். செங்கப்படுத்தான்காடு உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர்

அமைத்துத்தர வேண்டுகிறேன். செங்கப்படுத்தான்காடு ஊராட்சி, மீன் மார்க்கெட் பகுதி மற்றும் புளியடிக்கொல்லை ஆகிய இரு இடங்களிலும் சூரப்பள்ளம் ஊராட்சி, பிள்ளையார் கோவில் அருகிலும், பொன்னவராயன்பேட்டை ஊராட்சி, வடக்குத் தெருவிலும், ஏனாதி ஊராட்சி, வையாபுரிகுளம் அருகிலும், அணைக்காடு ஊராட்சி, வாடியக்காடு தெரு ஆகிய இடங்களிலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர வேண்டுகிறேன். அதிராம்பட்டினம், கரையூர் தெரு உயர்நிலைப் பள்ளிக்கு கட்டட வசதி செய்து தர வேண்டுகிறேன். மதுக்கூர் பேரூராட்சியில் பஸ் நிலையம் அமைத்துத் தரவும், சாக்கடை வசதி செய்து தரவும் வேண்டுகிறேன். கோட்டாகுடி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வேண்டுகிறேன். மதுக்கூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்டித்தர வேண்டுகிறேன். மதுக்கூர் பேரூராட்சி மற்றும் சிரமேல்குடியில் ஒரு துணை மின் நிலையத்தை அமைத்துத்தர வேண்டுகிறேன்.

சொக்கனாவூர் அருகே காட்டாற்றின் குறுக்கே உயர் மட்டப் பாலம் அமைத்துத்தர வேண்டுகிறேன். படப்பைக்காடு அருகே காட்டாற்றின் குறுக்கே பாலம் அமைத்துத்தர வேண்டுகிறேன். பழஞ்சூர் மற்றும் கோட்டாகுடி கிராமங்களில் கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர வேண்டுகிறேன். நரசிங்கபுரம் அருகே நசுவினியாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைத்துத்தர வேண்டுகிறேன். அத்திவெட்டி கிராமத்தில் புதிய நூலகக் கட்டடம் அமைத்துத்தர வேண்டுகிறேன். வாட்டாகுடி வடக்கு கிராமத்தில் கிராம நிருவாக அலுவலர் கட்டடம் மற்றும் சமுதாயக்கூடம் பழுதுநீக்கம் செய்து தர வேண்டுகிறேன். ஆலடிக்குமுளை ஊராட்சி, நல்வழிக்கொல்லை பகுதியில் புதிய ரேஷன் கடைக் கட்டடம் கட்டித்தர வேண்டுகிறேன். பட்டுக்கோட்டையில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்கிட வேண்டுகிறேன். பட்டுக்கோட்டை–தஞ்சாவூர் சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றித்தர வேண்டுகிறேன். பட்டுக்கோட்டையில் புதிய பஸ் நிலையம் அமைத்துத்தர வேண்டுகிறேன். தட்கல் முறையில் வழங்கப்படும் விவசாய மின் இணைப்புகளை விரைந்து வழங்கிட வேண்டுகிறேன். மதுக்கூர் வடக்கு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு பள்ளிக் கட்டடம் மற்றும் கழிப்பறை வசதி செய்துதர வேண்டுகிறேன்.

காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வரும் இவ்வேளையில், அதில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதியம் இன்னும் வழங்கப்படாமல் இருந்து வருகிறது.

அதை வழங்கிட ஆவன செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, ஊர்ப்புற நூலகர்கள் சிறப்புக் காலமுறை ஊதியத்திலிருந்து அவர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கப்பட வேண்டுமென்று கோருகிறார்கள். அதையும் அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஒரு விழாவில் பேசும்போது, "கல்லாதவர்களே தமிழகத்தில் இருக்கக்கூடாது என்பதே எனது கோட்பாடாகவும், எனது அரசின் குறிக்கோளாகவும் அமைந்துள்ளது" என்று குறிப்பிட்டிருந்தார்கள். அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் மாணவ–மாணவியர்களுக்கு பஸ் பாஸ், மிதிவண்டி, லேப்டாப், சீருடைகள், பாடப் புத்தகங்கள், 16 வகையிலான கல்வி உபகரணங்கள், உதவித்தொகை, ஊக்கத் தொகை, விருதுகள், பரிசுகள் என பல்வேறு நலத் திட்டங்களை இதய தெய்வம் அம்மா அவர்கள் செயல்படுத்தினார்கள். அம்மா அவர்களின் அரசை நடத்தி வரும் நம் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும் அந்த நலத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். அதனால்தான், இந்த பட்ஜெட்டில் மற்ற துறைகளை விடக் கூடுதலாக, அதாவது 34 ஆயிரத்து 181 கோடியே 73 இலட்சம் ரூபாய் அளவிற்கு அம்மாவின் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

பிற்பகல் 1–45

அதுமட்டுமல்ல, உயர் கல்விக்கென தனியாக 5 ஆயிரத்து 52 கோடியே 84 இலட்சம் ரூபாயும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு 218 கோடியே 66 இலட்சம் ரூபாய் நிதியையும் ஒதுக்கி மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையிலான நம் அம்மாவின் அரசு சிறப்பு செய்துள்ளது. இது வரவேற்கத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி)

'தமிழகம் வீறுபெற்று உலக அரங்கில் தனிச் சிறப்புடன் விளங்க வேண்டும் என்றால், உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி வளர்ச்சி பெறுதல் வேண்டும்' எனவும் இதய தெய்வம் அம்மா அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். அந்த இலட்சியத்தை நோக்கி நம் கல்வித் துறை சென்று கொண்டிருப்பது சிறப்புக்குரியதாகும். பள்ளிக் கல்வித் துறையைப் பொறுத்தளவில், கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும், 250 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும்,

202 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரமுயர்த்தப்பட்டுள்ளன. மேலும், புதிதாக 20 தொடக்கப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. அதுமட்டுமல்ல, 33 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் 120 அரசு மேல்நிலைப் பள்ளிகள் உலகத்தரம் வாய்ந்த மாதிரிப் பள்ளிகளாக மாற்றப்பட்டிருப்பது போற்றதலுக்கும், பாராட்டுதலுக்கும் உரியதாகும்.

நவீன விஞ்ஞான வளர்ச்சியைக் கல்விக்காகப் பயன்படுத்தும் நோக்கத்துடன், மாணவ, மாணவியருக்காக மட்டுமே 24 மணி நேரமும் செயல்படக்கூடிய கல்வித் தொலைக்காட்சியை அம்மாவின் அரசு தொடங்கியிருப்பது மாணவச்செல்வங்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

இதய தெய்வம் அம்மா அவர்களின் வழியில், கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 5 ஆயிரத்து 822 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில் விலையில்லா பாடப் புத்தகங்கள், மடிக்கணினி, சீருடைகள், கல்வி உபகரணங்கள் உள்ளிட்ட நலத் திட்டங்களைச் செயல்படுத்தியிருப்பது, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான நம் கழக அரசு மாணவ-மாணவியர் நலனில் எவ்வளவு அக்கறை கொண்டுள்ளது என்பதை விளக்குகிறது.

முன் மழலையர் (Pre–K.G.) கல்வியை மேம்படுத்துவதற்காக 2,381 நடுநிலைப் பள்ளிகளில் L.K.G., U.K.G. வகுப்புகளைத் தொடங்கியிருப்பது மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. தொடக்கக் கல்வியில் மாணவர் நிகர சேர்க்கை 99.88 சதவிகிதத்தை எட்டியிருப்பதும், இடைநிற்றல் 0.8 சதவிகிதமாகக் குறைந்திருப்பதும் வரவேற்கத்தக்கது. வரும் நிதியாண்டில் 158 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 277 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் நடைபெறவிருப்பதும், மாணவ, மாணவிகளின் நலன்பேணும் அரசுதான் நம் அம்மாவின் அரசு என்பதைப் பறைசாற்றுகிறது.

தமிழ்நாட்டில் மாணவர், ஆசிரியர் விகிதம், இலவச மற்றும் கட்டாயக் கல்விச் சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட விகிதத்தைக் காட்டிலும் போதுமான அளவில் இருப்பதும், கற்பித்தல் தரத்தை மேம்படுத்துவதற்காக அனைத்து அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் 530 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் நிறுவயிருப்பதும் கல்வித் துறையை மேலும் மேம்படுத்தும் என்பது உறுதி.

இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்கீழ் தனியார் பள்ளிகளில், 76 ஆயிரத்து 927 மாணவ, மாணவியர்கள் அனுமதிக்கப்பட்டிருப்பதும், இதுவரை 644 கோடியே 69 இலட்சம் ரூபாய் கல்விக் கட்டணம் திருப்பி அளிக்கப்பட்டிருப்பதும், குழந்தைகளின் கல்வித் தரத்தை உயர்த்தவும், அவர்களுக்கு கற்பதற்கான வாய்ப்புகளை வழங்கவும் அம்மா அவர்களின் நல்லரசு எடுத்துவரும் நடவடிக்கைகளாகும். இது பாராட்டுக்குரியதாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர் கல்வியைப் பொறுத்தளவில், இந்தியாவிலேயே தமிழகம் முன்னணியில் இருக்கிறது. நாடு முழுவதும் கல்லூரிக்குச் செல்பவர்கள் 25 சதவிகிதத்தினர் என்றால், தமிழ்நாட்டில் மட்டும் கல்லூரிக்குச் செல்பவர்கள் 49.6 சதவிகிதம் என்பது (மேசையைத் தட்டும் ஒலி) மிகவும் பாராட்டுக்குரியது, பெருமைக்குரியது. இத்தகைய சாதனைகளை நமது அரசு படைத்துள்ளதென்றால், அது மிகவும் பாராட்டுக்குரியது.

இதய தெய்வம் அம்மா அவர்கள் கடந்த முறை ஆட்சிப் பொறுப்பேற்ற 2011 ஆம் ஆண்டு முதல் நடப்பாண்டு வரையிலும் 30 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், 27 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளையும் உருவாக்கி நம் கழக அரசு சாதனை படைத்துள்ளது. இந்தச் சாதனைகளுக்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் எடுத்த முன்முயற்சியின் காரணமாக இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, எங்கும் இதுவரையிலும் படைத்திராத சாதனையாக ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரிகளை (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய அம்மா அவர்களின் அரசு பெற்று வரலாற்றுச் சாதனையை சிறப்பாக நிகழ்த்தியுள்ளது. இதற்காக, இப்போது இருப்பவர்கள் மட்டுமல்ல, எதிர்கால சந்ததியினரும், மாண்புமிகு அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களைப் பாராட்டுவார்கள்.

2019–2020 ஆம் ஆண்டில் 14 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் அரசுக் கல்லூரிகளாக மாற்றம் செய்யப்பட்டிருப்பதும், கடந்த 5 ஆண்டுகளில் 21 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்கப்பட்டிருப்பதும், நான்கு புதிய அரசு பொறியியல் கல்லூரிகள் அமைத்திருப்பதும் உயர் கல்வித் துறையின் முன்னேற்றத்திற்குச் சான்றாக அமைந்துள்ளன.

பிற்பகல் 1–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் அம்மா அவர்களது அரசின் ஆட்சிக் காலமான 2011 தொடங்கி இதுவரையிலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1,577 புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. அனைவருக்கும் அனைத்து விதமான படிப்புகளும் கிடைக்க வேண்டும் என நம் அம்மாவின் அரசு இத்தகைய நடவடிக்கைகளை எடுத்துவருவது ஏழை, எளிய கிராமப்புற மாணவர்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. ஏழை மாணவர்களும் உயர் கல்வி பெறும் வகையில் முதல் தலைமுறை மாணவர்களின் கல்விக் கட்டணச் சலுகைகள் தொடர்ந்து வழங்கப்பட்டுவருவது நிச்சயம் பாராட்டத்தக்கது.

இந்த ஆண்டு 75 ஆண்டுகளை நிறைவு செய்யும் கோவை அரசு பொறியியல் கல்லூரியின் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகளைத் தரமுயர்த்துவதற்கு மாண்புமிகு முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மாவின் அரசு 10 கோடி ரூபாய் சிறப்பு மானியம் வழங்கியிருப்பது வரவேற்கத்தக்கது. சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நிதி நெருக்கடியிலிருந்து மீண்டுவருவதற்கு நம் கழக அரசு 225 கோடியே 78 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பது மிகவும் பாராட்டுக்குரியதாகும். இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், 1993 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சென்னை பொருளியல் பள்ளி, இன்று இந்தியாவில் உள்ள பொருளாதாரத்தில் உயர் கல்வி அளிக்கும் நிறுவனங்களில் எல்லாம் சிறப்பான ஒன்றாகப் புகழ்பெற்று விளங்குகிறது. இந்த நிறுவனத்தின் பெருமையை அங்கீகரிக்கும் விதமாகவும், சுயமாக பட்டயங்களையும், பட்டங்களையும் வழங்க வழிவகை செய்யும் வகையிலும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் என்ற தரநிலையை வழங்குவதற்கான சட்டம் இயற்றப்படுவது இந்நிறுவனத்தின் புகழை மேலும் உயர்த்தும்.

உயர் கல்வித் துறையின் மூலமாக 5,31,349 முதல் தலைமுறை பட்டதாரி மாணவ, மாணவியருக்கு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான நம் அம்மாவின் அரசு 1,111 கோடியே 78 இலட்சம் ரூபாயை கல்விக் கட்டண நிதியாக வழங்கி பெருமை சேர்த்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. C.V. சேகர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதாரண, மிகச் சாமானிய குடும்பத்தில் பிறந்து இந்திய ஜனாதிபதி என்கிற மிக உயர்ந்த பொறுப்பை வகித்த டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் பெயரில் இராமேஸ்வரம் பகுதியில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கியிருப்பது அப்பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. பேரவை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கைகளை ஏற்று, 41 பல்கலைக்கழக உறுப்பு/கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதல் கட்டமாக 14 கல்லூரிகள் அரசு கல்லூரிகளாக மாற்றம் செய்யப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடல் உறுதி மற்றும் ஆரோக்கியத்திற்கு விளையாட்டு முக்கியம் என்பதை உணர்ந்து நம் அம்மாவின் அரசு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மூலமாக பல நல்ல நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. அந்தவகையில், வேளாண் மண்டலம் காத்த விவசாயி, மக்கள் நலனில் அக்கறை கொண்ட மகத்தான முதல்வர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் தேதி 76 கோடியே 23 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் துவக்கி வைத்த அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டத்திற்கு பெரும் வரவேற்பு கிடைத்து வருகிறது. 12,524 கிராம ஊராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிப் பகுதிகளில் வாழும் கிராமப் பகுதி இளைஞர்களிடையே மிகவும் பிரபலமாகி அவர்களைப் பெரிதும் உற்சாகப்படுத்தியுள்ள இந்தத் திட்டத்தின்கீழ் கூடுதல் விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதற்கும், விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கும், வருகிற நிதி ஆண்டிற்கான பட்ஜெட்டில் 45 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பது பெரிதும் வரவேற்கத்தக்கது.

மேலும், தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கக்கூடிய உயரிய செயல்திறன் மையம் ஒன்று உருவாக்கப்படுவது விளையாட்டு வீரர்களுக்கு வரப்பிரசாதமாக அமையும். அரசுப் பணிக்கான வேலைவாய்ப்பில் திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்களுக்கு மூன்று சதவிகித இட ஒதுக்கீடு வழங்குவதும், பொதுத் துறை நிறுவனங்களில் தலைசிறந்த வீரர்களைப் பணியில் அமர்த்துவதும் விளையாட்டு வீரர்களை

மேலும் உற்சாகப்படுத்தும் செயலாகும். இதன்மூலம் மிகச் சிறந்த விளையாட்டு வீரர்கள் உருவாகும் நிலை ஏற்படும் என்பது உறுதி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துறைதோறும் எண்ணற்ற வளர்ச்சித் திட்டங்களை, மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்தி மக்களின் ஆதரவைப் பெற்றுவரும் நம்முடைய கழக ஆட்சி, மீண்டும் 2021-க்குப் பிறகும் தொடரும் என்பது உறுதி. (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சி மாற்றம் வரும், முதல்வர் நாற்காலி கிடைக்கும் என்ற கனவுகளோடு சிலர் மலிவான அரசியல் செய்துகொண்டிருக்கிறார்கள். அம்மாவின் அரசுக்கு எதிராக, மக்களின் முதல்வர், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எதிராக, மக்களைத் திசை திருப்ப எண்ணி எத்தனையோ மாயாஜாலங்களைச் செய்துவருகிறார்கள். அவை எதுவுமே எடுபடப் போவதில்லை என்பதை காலம் அவர்களுக்கு நிச்சயம் உணர்த்தும். அவர்களின் கோட்டைக் கனவை தகர்த்தெறிய மக்கள் இப்போதே தயாராகிவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பீகார் அல்ல, பிரிட்டனிலிருந்து வல்லுநர்கள் வந்தாலும், கழகத்தை ஒருபோதும் அவர்களால் வெல்ல முடியாது (மேசையைத் தட்டும் ஒலி) எனக் கூறி, மிக முக்கியமான துறையான கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த உங்கள் அனைவருக்கும் மீண்டும் நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.

*__திரு. ஆ. கோவிந்தசாமி:__ மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வந்தான், வாழ்ந்தான், போனான் என்றா உலகம் நினைக்க வேண்டும்; சொன்னான், செய்தான் என்றே நாடும், ஊரும் சொல்ல வேண்டும் என்று இந்த நாடும், நாட்டு மக்களும் வாழும்வரை மறக்க முடியாத மக்கள் பணி பல செய்து, அஞ்சாத நெஞ்சமதில் அன்பிற்கு இடம் கொடுத்து, அறம் காக்கும் தமிழக மக்களின் பேராதரவோடு, (மேசையைத் தட்டும் ஒலி) தான் வாழும் காலம் வரை தன்னை வெல்வார் யாரும் இல்லை என்று தமிழக வரலாற்றில் தனி முத்திரை பதித்த புரட்சித் தலைவர் பொன்மனத் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உறங்கும் திசையை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பொன்மனச் செம்மல் காட்டிய சீரிய பாதையில் காண்போரைக் கட்டிப்போடும் வசீகரம், மக்கள் மனங்களைக் கட்டியாளும் மந்திரப் புன்னகை, எதற்கும் அஞ்சிடாத ஆற்றல்மிகு சிந்தனையும், யாவரையும் பணிய வைக்கும் அறிவார்ந்த செயல் திறனும், காலமெல்லாம் மாறாத மங்காத பெரும் புகழும், அன்றும், இன்றும், என்றும் மக்கள் மனதைக் கொள்ளை கொள்ளும் மாதரசியாய், "எத்தனை காலம் மனிதன் வாழ்ந்தான் என்பது கேள்வி இல்லை, அவன் எப்படி வாழ்ந்தான் என்பதை உணர்ந்தால் வாழ்க்கையில் தோல்வி இல்லை" (மேசையைத் தட்டும் ஒலி) என்று மக்கள் மனம் கவர்ந்த தங்கத்தாரகை தாயின் வடிவில் வந்துதித்து, கண்முன்னே தெய்வமாய்க் காட்சி தந்து, எதிர்ப்புகளை ஏணியாக்கி, ஏழைகளின் தோணியாக்கி, தடைக் கற்களைப் படிக்கற்களாக்கி, மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்த தலைவியே! கல்லை கனியாக்க கற்றவள் நீ! கனவை நனவாக்க அறிந்தவள் நீ! பூமியிலே பிறந்து வந்த திருமகளே! புவியாள வந்த பொன்மகளே! ஆலமரம் போல நீ வாழ! அங்கு ஆயிரம் பறவைகள் இசை பாட! கலைமகள் உன்னைத் தாலாட்ட! உந்தன் கருணையை நாங்கள் பாராட்ட! உன்னத வாழ்வினை அளித்திட்டாய், உன்னை நினைத்து நித்தம் போற்றுகின்றோம் தாயே! உந்தன் நினைவில் வாழ்கிறோம்! (மேசையைத் தட்டும் ஒலி) வானும், மண்ணும் உள்ளவரை உன்னை வணங்கி நிற்கும்! நீரும், காற்றும் உள்ளவரை நிந்தன் புகழே நிலைத்திருக்கும் தாயே!

அம்மா அவர்களின் வழியில் அணுவளவும் அடிபிறழாமல், இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும், இவர்போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும் என்ற சிந்தனையோடு, (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி டெல்டா பகுதிவாழ் மக்களின் நீண்ட காலக் கோரிக்கையை உடனடியாக ஏற்று, பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் என அறிவித்து, பல மாவட்ட விவசாயிகளின் குடும்பங்களில் நம்பிக்கை தீபம் ஏற்றி வைத்து, அதை நிறைவேற்ற அல்லும் பகலும் ஆலோசித்து செயலாற்றும் காவேரி காப்பாளர் என்ற பட்டம் பெற்ற செயல் வீரரே! (மேசையைத் தட்டும் ஒலி) காட்டை மேட்டை தோட்டமாக்க, நாட்டு மக்களின் வாட்டம் போக்க, காவேரியின் உபரி நீரை கரை தாண்டி கொண்டு வந்து, வரப்பிலும் வாய்க்காலிலும் வாழ்க்கையைத் தேடிக் கொண்டிருக்கும் ஏழையெளிய விவசாயிகளின் இல்லங்களிலே ஒளியேற்றிட திட்டம் வகுத்த ஏழைப் பங்காளனே! விவசாயிகளின் உற்ற தோழனே! காண்போர் வியக்கும் வகையில் கால்நடை ஆராய்ச்சி மையம் கொண்டு வந்த கரிகாலனே! (மேசையைத்

தட்டும் ஒலி) தமிழக மருத்துவத் துறையில் ஈடில்லா சாதனையாக ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரிகளைக் கொண்டு வந்த தனிப் பெரும் தலைவனே! தங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தங்களுக்குத் துணையாய் நின்று கட்சியையும், ஆட்சியையும் வழிநடத்திச் சென்றுகொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

'சரியான வாய்ப்பு கிடைக்குமேயானால், சாதாரண மனிதனும் சாதனை மனிதனாக முடியும்' என்ற அறிஞரின் கூற்றை உண்மையாக்கும் வகையில், உயர் கல்வித் துறை என்ற உன்னதத் துறையை இந்தியத் திருநாட்டில் தலைதூக்கி நிறுத்தியிருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) மட்டற்ற மரியாதைக்குரிய எங்கள் மாவட்டக் கழகச் செயலாளர் மாண்புமிகு அண்ணன் உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் பணிவாக வணங்குகிறேன். மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களையும், இந்த அவையை கண்ணியத்தோடு வழிநடத்திச் சென்று கொண்டிருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும் பணிவோடு வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த அவைக்கு வந்திருக்கும் நான் பேசுவது மிகப் பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன். ஏனெனில், தமிழக மக்களால் 'வாத்தியார்' என்று அன்போடு அழைக்கப்பட்ட மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வார்ப்பாக நாங்கள் இங்கே வந்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறையை எடுத்துக் கொண்டோமென்றால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனவு தற்போது நனவாகிக் கொண்டிருக்கிறது. மாநிலத்திலுள்ள அனைத்துக் குழந்தைகளும் உயர்தரமான கல்வியை அடைய வேண்டும் என்பது அம்மா அவர்களின் கனவு. இந்தக் கனவை நிறைவேற்றுகின்ற வகையில், பள்ளிக் கல்வித் துறைக்கு 2020–2021 ஆம் ஆண்டில் மட்டும் 34,181.73

கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே மிக அதிகமான நிதியை ஒதுக்கீடு செய்து பள்ளிக் கல்வித் துறையைத் தூக்கி நிறுத்தியிருக்கிற இந்த அரசு பாராட்டத்தக்கது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோன்று, மாணவர்கள் உடனடியாக உயர் கல்வியைப் பயில வேண்டும், மேல்நிலைக் கல்வியைப் பயில வேண்டுமென்பதற்காக, அவர்கள் வசிக்கின்ற இடங்களுக்கு அருகிலுள்ள பள்ளிகளைத் தரமுயர்த்திக் கொடுத்த அரசு இந்த அரசு. *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஆ. கோவிந்தசாமி: இதன்மூலமாக மட்டும் 2011–2012 ஆம் ஆண்டிலிருந்து 1,079 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் 604 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்திய அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு. பள்ளியின் தரம் உயரும்பொழுது அதன் உட்கட்டமைப்பு வசதியை செய்து தர வேண்டுமென்பது அரசின் நோக்கம். அதை நிறைவேற்றுகின்ற வகையில், 2012 முதல் 2019 வரையில் 1,670 பள்ளிகளுக்கு அம்மாவின் அரசு 1,953.29 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்து கட்டடங்களும் கட்டிக் கொடுத்திருப்பது பாராட்டுக்குரியது.

அதுமட்டுமல்ல, மாணவர்கள் போட்டித் தேர்வுகளை எளிதாக சந்திக்க வேண்டுமென்பதற்காக தமிழ்நாட்டில் ஏறக்குறைய 412 மையங்கள் கடந்த 2018–2019 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டு, இந்த அரசு மாணவர்களை ஊக்குவித்துக் கொண்டிருக்கிறது என்பது மிகவும் வரவேற்கத்தக்கது. மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டுமென்பதால் அவர்களுக்கு கல்வியைச் சொல்லிக் கொடுக்கின்ற ஆசிரியர்களுக்கும் ஏதாவது விருது வழங்கினால்தான் அவர்கள் அந்த மாணவர்களுக்கு நன்றாக கல்வியைச் சொல்லிக் கொடுப்பார்கள் என்பதனால் அந்த ஆசிரியர்களுக்கு 'கனவு ஆசிரியர்' விருதை இந்த அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. கனவு ஆசிரியர் விருது எப்படியென்று சொன்னால், மாணவர்களின் கல்வி மேலாண்மை, மாணவர்களின் சேர்க்கை, அந்த ஆசிரியர்கள் கணினியைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு கற்பித்தல் போன்ற

சிறந்த பணிகளை மேற்கொள்ளும் ஆசிரியர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ.10,000/, அதேபோல, அவர்களுக்கு விருதுகளும் இந்த அரசு வழங்கிக் கொண்டிருப்பது ஆசிரியர்கள் மட்டத்திலே நல்ல வரவேற்பைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாழ்ந்த காலத்தில், 2011–ல், 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 11 மற்றும் 12 ஆவது படிக்கும் மாணவ மாணவிகளுக்கு விலையில்லாமல் மடிக்கணினி வழங்குவோம்' என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டாவது முறையாக மீண்டும் ஆட்சிக்கு வந்தது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்ன தேர்தல் வாக்குறுதியை உடனடியாக நிறைவேற்றுகின்ற வகையில், 11 ஆவது, 12 ஆவது படிக்கின்ற மாணவ மாணவிகளுக்கு விலையில்லாமல் மடிக்கணினியை, அம்மா இல்லையென்று சொன்னாலும் அம்மாவின் அரசை வழிநடத்திச் சென்றுகொண்டிருக்கும் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு இன்றுவரையில் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருப்பது மிகவும் பாராட்டுக்குரியது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஓராண்டில் மட்டும் பார்த்தோமென்று சொன்னால், 15 இலட்சத்து 31 ஆயிரம் மாணவ, மாணவிகள் பயன்பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவர்களுக்கும் இந்த 2020–2021 ஆம் ஆண்டிலும் இந்தத் திட்டத்தினைத் தொடர 949.30 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மிகவும் பாராட்டுதலுக்குரியது.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசை வலிவோடும் வலுவோடும் வழிநடத்திக் கொண்டிருக்கின்ற அண்ணன் எடப்பாடியார் அவர்கள், தனியார் பள்ளிக்கு இணையாக அந்த மாணவர்களின் சீருடை இருக்க வேண்டுமென்ற தொலைநோக்குப் பார்வையில், அப்படிப்பட்ட சீருடையை கடந்த ஆண்டில் அறிமுகப்படுத்தி, 38.70 இலட்சம் மாணவ மாணவிகளுக்கு அந்தச் சீருடை வழங்கப்பட்டு, இன்று அந்த மாணவர்கள் பள்ளிக்குப் போவதைப் பார்த்தால், அவர்கள் தனியார் பள்ளிகளில் படிக்கிறார்களா, அரசுப் பள்ளிகளில் படிக்கிறார்களா என்ற வேறுபாடே தெரியாத நிலையை இந்த அரசு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக இந்த அரசை நாங்கள் மனதார பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். இது கிராமப்புறங்களில் இருக்கின்ற

மாணவர்களுக்குமட்டுமல்லாமல்,மலைவாழ்பகுதிகளில்இருக்கின்ற மாணவ, மாணவிகளுக்கும் மழைக்கால ஆடைகளையும், உறை காலணிகளையும், காலுறைகளையும் இந்த அரசு வழங்கி வருகிறது. அவர்களும் நல்ல கல்வியைத் தொடர வேண்டுமென்பதற்காக கடந்த ஓராண்டில் மட்டும் 1 இலட்சத்து 16 ஆயிரம் மாணவ மாணவிகள் இந்தத் திட்டத்தின்மூலம் பயன்பெற்றிருக்கிறார்களென்று சொன்னால், இந்த அரசு பள்ளிக் கல்வித் துறையின்மீது எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் நன்றாக சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதேபோல, கிராமப்புறங்களிலிருந்து வந்திருக்கின்ற மாணவ மாணவிகள் தொலைதூர கிராமங்களிலிருந்து நடந்து பள்ளிக்கு வந்து சேரும்பொழுது அவர்கள் களைப்படைந்து விடுவார்கள். அவர்கள் பள்ளியில் ஆசிரியர்கள் சொல்வதைக் கவனிக்கின்ற சூழ்நிலை இருக்காது என்பதைக் கருத்தில்கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்த மாணவர்களுக்கு விலையில்லாமல் மிதிவண்டி வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதன்மூலம் கடந்த ஓராண்டில் மட்டும் பார்த்தோமென்று சொன்னால், 5 இலட்சத்து 29 ஆயிரம் மாணவ மாணவிகள் பயன்பெற்று, இன்று அந்த மாணவர்கள் சைக்கிளில் செல்கின்ற நிலையை பார்த்தோமென்று சொன்னால், பட்டாம்பூச்சிகள் போல சிறகடித்துச் செல்கின்ற நிலையில் இந்த அரசு அந்த மாணவர்களை ஊக்குவித்துக் கொண்டு வருவதை பாராட்ட நாங்கள் கடமைப்பட்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல அந்த மாணவர்கள் மேல் படிப்பைத் தொடர வேண்டுமென்று சொன்னால், இடைநிற்றலைத் தடுக்க வேண்டும். அந்த இடைநிற்றலைத் தடுக்க வேண்டுமென்று சொன்னால், அந்த மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டுமென்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனவு. அதனால் அந்த மாணவர்கள் 10 ஆவது படிக்கின்றபோது 1,500 ரூபாயும், 11 ஆவது படிக்கின்றபோது ரூ.1,500/-ம், அதேபோல அந்த மாணவர்கள் 12 ஆம் வகுப்பு படிக்கின்றபோது 2,000/- ரூபாயும் சேர்த்து அந்த மாணவனின் பெயரில் 5,000/- ரூபாய் வைப்புத் தொகை வைத்து, அந்த மாணவன் மேல்படிப்புக்குச் செல்வதற்கு இந்தப் பணம் ஊக்கத் தொகையாக இருக்கிறது. இதனால்தான் அந்த மாணவன் உயர் கல்வி படிக்கின்றபொழுது தன் பெற்றோரை நாட வேண்டிய

சூழ்நிலை இல்லாமல் இந்தப் பணத்திலிருந்து அவன் உயர் கல்விக்குத் தேவையான, ஆண்டுக்கு ஏறக்குறைய 700 ரூபாய் அல்லது 800 ரூபாய் என அந்தக் கட்டணத்தை மட்டும் செலுத்தி, அந்த மாணவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றிய அரசு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அரசை வழிநடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அரசு.

பிற்பகல் 2–05

அதுமட்டுமல்ல, உயர் கல்வித் துறையைப் பார்த்தோமென்று சொன்னால், இன்று உயர் கல்வித் துறையில் ஏற்கெனவே எனக்கு முன்னர் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர், உயர் கல்வித் துறையில் இப்படி இருக்கிறது, அப்படி இருக்கிறது என்று பேசினார். நிலை அப்படி இல்லை. ஏதாவது பேசுவதற்காக அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் நாங்கள் சொல்ல வேண்டும். ஏனென்று சொன்னால், இந்த அரசைப் பொறுத்தமட்டில் மாணவர்களை படி, படி என்று சொல்லிக் கொண்டிருக்கிறது. ஆனால், அந்தப் படிப்பு சொல்லிக் கொடுக்கின்ற ஆசிரியர்களை அடிக்கின்றவர்கள்தான் அவர்கள் என்று நாங்கள் ஆதாரத்தோடு சொல்ல முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், அவர்கள் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தராக இருந்த ஒருவரை, அவர்கள் கட்சியைச் சேர்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தாக்கிய நிகழ்ச்சி இந்த நாட்டில் நடைபெற்றிருக்கிறது என்பதை நாங்கள் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

உயர் கல்வித் துறையைப் பார்த்தோமென்று சொன்னால், விஷன் 2023–ல் உயர் கல்வியில் தமிழகம் முதல் மாநிலமாக வர வேண்டுமென்பது புரட்சித் தலைவி அம்மாவின் கனவு. அந்தக் கனவை நிறைவேற்றுகின்றவகையில், இன்று இந்த அரசை பார்த்தோமென்று சொன்னால், உலக அளவில் உயர் கல்வி படிக்கின்றவர்களின் எண்ணிக்கை 36 சதவிகிதம் பேர் மட்டும் தான். ஆனால், தமிழகத்தில் உயர் கல்வி படிக்கின்றவர்களின் எண்ணிக்கை இன்றே 49.6 சதவிகிதத்தை எட்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசே இன்னும் 15 ஆண்டு காலங்கள் கழித்துதான் அந்த 50 சதவிகிதத்தை எட்டும் நிலையில் இருக்கிறது. இதற்கு ஒரு படி மேலே சொல்ல வேண்டுமென்று சொன்னால், எங்கள் மாவட்டத்தின் மண்ணின் மைந்தர், என் மட்டற்ற மரியாதைக்குரிய

அண்ணன் அவர்களின் சீரிய பாதையில், சீரிய சிந்தனையில், (மேசையைத் தட்டும் ஒலி) தருமபுரி மாவட்டத்தில், உலக அளவில் யாரும் உயர் கல்வி படிக்காத நிலையில், 98.41 சதவிகிதம் பேரின் தரத்தை உயர்த்தியிருக்கின்ற எங்கள் மண்ணின் மைந்தர் அவர்களை, எங்கள் மாவட்ட கழக மக்களின் சார்பாக நாங்கள் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அம்மாவின் இந்த அரசு, புதிய பாடத் திட்டங்களையெல்லாம் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறது. அதன்மூலம் பார்த்தோமென்று சொன்னால், அம்மாவின் அரசு 961 புதிய பாடத் திட்டங்களைத் தொடங்கி, 1,934 பேராசிரியர் பணியிடங்களை நிரப்ப ஒப்பளித்தது. 2017–2018–ல் பார்த்தோமென்று சொன்னால், 705 புதிய பாடத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு, 960 உதவிப் பேராசிரியர் பணியிடங்களை நிரப்ப இந்த அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல, ஆசிரியர் தேர்வு வாரியத்தின்மூலம் உதவிப் பேராசிரியர்களை நிரப்புகின்ற வரையில், அந்த மாணவர்கள் அந்தப் பாடத்தைத் தொடர ஏதுவாக 1,661 கௌரவ விரிவுரையாளர்களை (Guest Lecturers) நியமித்து, 59 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் shift–II–ன்மூலம் அவர்கள் செயல்பட அந்தப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன என்பதை இங்கே நாங்கள் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

தேசிய கல்வி நிறுவனங்களின் தர வரிசைப் பட்டியலைப் பார்த்தோமென்று சொன்னால், தமிழகத்தைச் சேர்ந்த 35 அரசு கல்லூரிகள், 1—100 என்ற தர வரிசைப் பட்டியலில் இடம் பெற்றிருக்கின்றன என்பதை, இந்த அரசு உயர் கல்வியில் பெற்றிருக்கின்ற சாதனையாகத்தான் நாங்கள் பார்க்க முடிகிறது. அதற்கு மேலும் ஒரு மணிமகுடம் வைத்தது போன்று, சென்னை மாநிலக் கல்லூரி, தேசிய கல்வி நிறுவனங்களின் தர வரிசைப் பட்டியலில் மூன்றாம் இடத்தைப் பிடித்திருப்பது இந்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு சிறந்த அத்தாட்சியாக இருக்கிறது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும்

அரசு பல்கலை உறுப்புக் கல்லூரிகளை தமிழ்நாட்டிற்குக் கொடுத்தார்கள். எங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தருமபுரி மாவட்டம், அரூரில் சுற்றுப் பயணம் சென்றபோது அவரிடத்திலே ஒரு மாணவி, ஒரு கோரிக்கை வைத்தார். தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் படிக்கின்றவர்களுக்கு ஒரு கல்விக் கட்டணம் இருக்கிறது, அரசு உறுப்புக் கல்லூரியில் படிக்கின்றவர்களுக்கு ஒரு கல்விக் கட்டணம் இருக்கிறது. ஏன் இந்த நிலை? எங்களுக்கு சிரமமாக இருக்கிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். அந்த மாணவியின் கோரிக்கையை ஏற்று, பரிசீலனை செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) இனி தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து கல்லூரிகளும் ஒரே கட்டணத்தில் செயல்படும் என்ற ஓர் உத்தரவைப் பிறப்பித்த அரசு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. இந்த அரசை நாங்கள் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

மேலும், எங்கள் மாவட்டத்திற்கான சில கோரிக்கைகளை மட்டும் சொல்லிவிடுகிறேன். மீதியை நான் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முக்கியமான ஜீவாதார பிரச்சினை. தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் பார்த்தோமென்று சொன்னால், தமிழ்நாட்டில் தருமபுரி மாவட்டத்தில்தான் ஒகேனக்கலில் காவேரி ஆறு நுழைகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் ஒரு பணிவான கோரிக்கை. கல்லணையைக் கட்டினான் கரிகாலன். காலம் உள்ளவரை அவர் பெயர் நிலைத்திருக்கும். அதேபோல, தஞ்சை பெரிய கோயிலைக் கட்டினான் ராஜராஜ சோழன். இன்றும் அவரது புகழை அது பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. காவேரி ஆறு எங்கள் தருமபுரி மாவட்டத்தில்தான் நுழைகிறது. ஆனால், எங்கள் மாவட்டத்தில் உள்ள மக்கள், விவசாயத்திற்கு அந்த நீரைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி டெல்டா பகுதிகளில் இருக்கின்ற அத்தனை மாவட்டங்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்காமல் பல கோடி ரூபாய் நிதியை எடுத்துக் கொடுத்திருக்கிறார். அவர் புரட்சித் தலைவரின் வழி வந்தவர். புரட்சித் தலைவி அம்மாவின் வழியில் வந்த, வாரி வாரிக் கொடுக்கின்ற கரத்திற்குச் சொந்தக்காரர்.

அதனால், எங்கள் மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையான ஒகேனக்கல் உபரி நீர்த் திட்டத்தை நிறைவேற்றி, அங்கிருக்கின்ற ஏரிகளுக்கு அந்த நீரைக் கொண்டு வந்தார் என்று சொன்னால், எங்கள் மாவட்டத்தில் உள்ள அத்தனை விவசாயிகளினுடைய பிரச்சினையும் நிச்சயமாகத் தீர்ந்துவிடும். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய மாவட்ட மக்களின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே அவருடைய பொற்பாதங்களைத் தொட்டு, இக்கோரிக்கையை வைக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுடைய மாவட்டத்தைச் சார்ந்த அமைச்சர் மிகவும் சந்தோஷமாகிவிட்டார். உரையை முடியுங்கள்.

திரு. ஆ. கோவிந்தசாமி: அதேபோல, எங்கள் மாவட்டத்தில் 98.4 சதவிகிதம் பேர் உயர் கல்வி படிக்கின்றார்கள் என்று நான் ஏற்கெனவே பேசும்போது சொன்னேன். அதனால் எங்களுடைய மாவட்டத்திற்கு ஒரு பல்கலைக்கழகத்தை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், எங்கள் மாவட்டத்தில் இருக்கின்ற மாணவர்கள் அத்தனை துறைகளிலும் நன்றாக, சிறப்பாகப் படிக்கின்றார்கள். எனவே, பெரியார் பல்கலைக்கழகத்திலிருந்து பிரித்து ஒரு பல்கலைக்கழகத்தைத் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதோடு மட்டுமல்லாமல், அம்மாவின் பெயரிலேயே அந்தப் பல்கலைக்கழகத்தைத் தொடங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வேளாண்மை சம்பந்தமான படிப்பைப் படிக்க வேண்டுமென்று சொன்னால், நாங்கள் எல்லோரும் ஒன்று, திருவண்ணாமலைக்கு வர வேண்டும் அல்லது கோயம்புத்தூருக்குச் செல்கின்ற நிலை இருக்கிறது. கிருஷ்ணகிரியில் இல்லை, தருமபுரியில் இல்லை, சேலத்தில் இல்லை, நாமக்கல்லில் இல்லை. ஆகவே, எங்களுடைய மாவட்டத்தை மையமாகக் கொண்டு, ஒரு வேளாண்மைக் கல்லூரியை எங்கள் மாவட்டத்திற்குக் கொடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், என்னுடைய தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளை நான் அவையில் படித்ததாக ஏற்றுக்கொண்டு, அவற்றைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு நேரம் நான் பேசுவதற்கு வாய்ப்புத் தந்த தங்களுக்கும், இந்த அரசுக்கும் நன்றி சொல்லி, வாய்ப்புக்கு நன்றி பாராட்டி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த சிப்காட் தொழிற்சாலையை விரைந்து செயல்படுத்திட ஆவன செய்ய வேண்டும். எனது தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணாபுரம் மற்றும் சோலக்கொட்டாய் அரசு மேல்நிலைப் பள்ளிகளைப் பிரித்து மகளிர் பள்ளிகளாகத் துவக்க வேண்டும்.

இலக்கியம்பட்டி ஊராட்சிக்கு ஐந்து குப்பை வண்டிகளையும், 60 துப்புரவுப் பணியாளர்களையும் வழங்க வேண்டும். காரிமங்கலம் ஒன்றியத்தில் மாட்லாம்பட்டியைத் தலைமையிடமாகக்கொண்டு ஒரு காவல் நிலையமும், கடத்தூர் ஒன்றியத்தில், சிந்தல்பாடியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு காவல் நிலையமும் அமைத்துத் தர வேண்டும்.

வடகரையில் ஒரு கால்நடைக் கிளை மருத்துவமனையும், பருத்திநத்தம் மற்றும் செல்லன்கொட்டாய் (கோணங்கிநாய்க்கனஅள்ளி) ஆகிய கிராமங்களில் கால்நடைக் கிளை மருத்துவமனையும் அமைத்துத் தர வேண்டும்.

தருமபுரியில் அரசு முதியோர் காப்பகம் ஏற்படுத்தித் தர வேண்டும். இளம் வயது பெண்களுக்கு ஒரு பாதுகாப்பு இல்லம் தொடங்க வேண்டும். தருமபுரி ஊராட்சி ஒன்றியம், உங்கரான்அள்ளி ஊராட்சி, உத்தனூர் கிராமத்திற்கு கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

தாளநத்தம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தைப் பிரித்து நத்தமேடு கடன் சங்கமும், N.S. ரெட்டியூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தைப் பிரித்து முக்கல்நாய்க்கன்பட்டி கடன் சங்கமும் ஏற்படுத்தித் தர வேண்டும்.

கடத்தூர் ஒன்றியத்தில் கோம்பை மலைக் கிராமம் உள்ளது. எனவே, கோம்பையைத் தலைமையிடமாகக் கொண்டு துவக்கப்

பள்ளி ஒன்றினைத் துவக்க வேண்டும். பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியம், B .துரிஞ்சிப்பட்டி ஊராட்சி, வேப்பாடி ஆற்றின் குறுக்கே தடுப்பணை ஒன்றைக் கட்டி அதிலிருந்து 6 ஏரிகளுக்கு கால்வாய்மூலம் நீரேற்றித் தர வேண்டும்.

தருமபுரி, சனத்குமார நதிநீரை அருகிலுள்ள செட்டிக்கரை ஏரி, பக்கிக்குட்டை ஏரி, குப்பூர் ஏரி ஆகிய ஏரிகளுக்கு நீரேற்றக் குழாய்மூலம் கொண்டுசென்று அந்த ஏரிகளை நிரப்ப வேண்டும். கே. நடுஅள்ளி ஊராட்சி, கொளகத்தூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள். இதற்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் எல்லாம் எந்த முறையைக் கையாண்டார்களோ அதே முறையைக் கையாளுங்கள். அதிகபட்சம் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 13 நிமிடங்கள். (குறுக்கீடு) ரொம்பக் குறைவு. இல்லை, எல்லோரும் அதைத்தான் கையாண்டிருக்கிறார்கள். சரி, OK.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் உயர் கல்வித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் பங்கேற்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். தங்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பள்ளிக் கல்வித் துறை. புதிய ஓய்வூதியத் திட்டத்தை கைவிட்டு, பழைய ஓய்வூதியத் திட்டத்தைக் கடைபிடிக்க வேண்டுமென்று அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் நெடுங்காலமாகக் கோரிக்கை வைத்து வருகிறார்கள். அதை அரசு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பள்ளிக் கல்வித் துறையின்கீழ் பணிபுரியும் ஆசிரியர்கள் 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற தொடர் வேலைநிறுத்தத்தில் பங்கெடுத்ததையடுத்து, ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள்மீது வழக்குகள் புனையப்பட்டன. துறை நடவடிக்கையாக, பிரிவு 17(b)–ன்கீழ் charges புனையப்பட்டன. அந்த வழக்குகளையும் மற்றும் 17(b) charges அனைத்தையும் இரத்துச் செய்து, அந்த நாட்களை அவர்களின் பணி நாட்களாக அறிவித்து, ஆசிரியர்கள் மீதான வழக்குகளை கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போதுள்ள கற்றல், கற்பித்தல் அடர்வுத் திறன் மேலும் சிறப்பாக தமிழகத்தில் அமைந்திட, ஆசிரியர்கள்–மாணவர்களின் விகிதாச்சாரம் என்பது 1:25 என்ற விகிதத்தில் அமைந்திட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். புதிய பாடத் திட்டத்தில் அமையப்பெற்றுள்ள பாடப் பொருளைக் கருத்தில்கொண்டு, 9, 10 ஆம் வகுப்புகளுக்கு ஒரு பாடத்திற்கு ஓர் ஆசிரியர் என்ற அளவில் 5 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள், 6, 7, 8 ஆம் வகுப்புகளுக்கு தலா ஒரு பட்டதாரி ஆசிரியர் பணியிடம் என்ற விகிதத்தில் நியமனங்கள் உறுதி செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் கலந்தாய்வு, பதவி உயர்வுகளுக்கான கலந்தாய்வுகளை எல்லாம் ஒவ்வொரு கல்வியாண்டின் தொடக்கத்திலேயே நடத்த வேண்டுமென்று கோரிக்கை விடுக்கிறேன். அதேபோல, அவர்களுக்குண்டான பணியிடைப் பயிற்சிகளும், பிற பயிற்சிகளும் தரமானதாக அமைய புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, கல்வியாண்டின் தொடக்கத்திலேயே அந்தப் பயிற்சிகளை வழங்க ஏற்பாடுகளைச் செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நவீன தொழில்நுட்பத்துடன் கற்றல், கற்பித்தல் பணியினை சிறப்பாகச் செய்திட ஆசிரியர்களுக்கு மடிக்கணினி (laptop) வழங்கி, ஆசிரியர்களையும் இன்னும் கொஞ்சம் தேர்ச்சி பெற வைக்கலாம். அந்த வகையில், மாணவர்களின் சேர்க்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பிருக்கும். ஆசிரியர்களின் தரத்தை உயர்த்துவதால், அந்தப் பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை அதிகமாகலாம்.

பிற்பகல் 2–15

அதேபோல, 2011–2012 ஆம் ஆண்டில் இந்தச் சட்டமன்றப் பேரவையில் அரசுப் பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்வி புகுத்தப்பட வேண்டுமென்று என்னால் தொடர்ந்து வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று, முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் அதை நிறைவேற்றித் தந்தார்கள். அதனடிப்படையில் ஒவ்வோராண்டும் படிப்படியாக அரசுப் பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்வி கொண்டு வரப்பட்டது. ஆசிரியர் பெருமக்கள் அந்தப் பணிகளுக்கு நியமனம் செய்யப்பட்டனர். தற்போது அந்தப் பணிகள் முழுமையாக நிறைவடைந்து விட்டன என்று நான் நினைக்கிறேன். அந்த வகையில் ஆங்கில வழிக் கல்வி புகுத்தப்பட்ட பின்னர் ஓரளவிற்கு அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை அதிகமாகியிருக்கிறது. அதில் மாற்றுக் கருத்து இல்லை. அதற்காகத்தான் நான் அந்தக் கருத்தை மிகவும் வலியுறுத்திப்

பேசினேன். அகில உலக அளவில் தரம் வாய்ந்த கல்விக்கு அரசுப் பள்ளிகளிலிருந்து நம்முடைய மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் நான் பேசியதை அரசு ஏற்றுக்கொண்டு, அன்றைய முதல்வர் அவர்கள் அதற்கு ஆவன செய்தார். தற்பொழுது மீண்டும் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை விகிதம் குறைந்துகொண்டு வருவதாகக் கூறுகிறார்கள். அதை மேலும் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, இன்னும் தரமான கல்வியை வழங்க, ஆசிரியர்களுக்கு தரமான பயிற்சியை எவ்வாறு வழங்க வேண்டுமென்பதை அரசு மேலும் சிந்தித்து, கவனம் செலுத்தி, நடைமுறைப்படுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபொழுது மாணவர் சேர்க்கை குறைந்து கொண்டு வருவதாகக் கூறினார்கள். நீண்ட காலமாக தனியார் பள்ளிகளில் தங்களுடைய பிள்ளைகள் ஆங்கில வழிக் கல்வி கற்க வேண்டுமென்று பெற்றோர்கள் விரும்புகிறார்கள். கிராமத்தில் இருப்பவர்கள்கூட, தனியார் பள்ளிகளிலிருந்து வருகின்ற வேன்களில் அவர்களை ஏற்றி விடுவதும், இறக்கி விடுவதும், அந்தப் பள்ளிகளில் பிள்ளைகளைப் படிக்க வைக்க வேண்டுமென்று அதிக கட்டணத்தைச் செலுத்தக்கூடிய நிலையும் இருக்கிறது. ஆகவே, அதை மாற்றுவதற்காகத்தான் அம்மா அவர்கள் பொறுப்பில் இருக்கின்றபோது அன்றைய நிலையிலே அரசுப் பள்ளியின் ஒவ்வொரு வகுப்பிலும் ஆங்கில வழிக் கல்வியைக் கொண்டு வந்தார்கள். இப்போது அந்த நிலையை மாற்றுவதற்காகத்தான் எங்கெங்கு நடுநிலைப் பள்ளிகள் இருக்கின்றனவோ, அந்தப் பள்ளிகளை ஒருங்கிணைத்து, இருக்கின்ற இடங்களில், 2,000–க்கும் மேற்பட்ட அங்கன்வாடி மையங்கள் இருக்கின்ற அந்தப் பள்ளிகளில், ஏறத்தாழ 58,000–க்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்போது சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் 4,000 பள்ளிகள் இருக்கின்றன. அவற்றையும் ஒருங்கிணைத்து வருகின்ற ஆண்டிலே அதைச் செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அப்படி செயல்படுத்துகின்றபொழுது, அடுத்த ஆண்டில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் அதில் இடம் பெறுகிற வாய்ப்பும் உருவாகும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது எல்லா பள்ளிகளிலும் smart class கொண்டு வந்திருக்கிறீர்கள். எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து smart class–க்கு நிதி வழங்க அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். அதையும் நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். Computer–ம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதுபோல, Glass board with stage குறித்த கோரிக்கைகள் வந்தவண்ணம் இருக்கின்றன. அதற்கும் அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கற்றல், கற்பித்தல் பணிகளைத் தவிர்த்து பிற பணிகளில் ஆசிரியர்களை ஈடுபடுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் அந்தப் பணியிலேயே கூடுதலாக ஈடுபட வேண்டுமென்ற கோரிக்கையை விடுக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் பிற மாவட்ட ஆசிரியர்கள். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபொழுது, ஆசிரியர்களுக்கு அந்தப் பணிகளை வழங்குவதாகக் கூறினார்கள். அந்தப் பணிகளை வழங்குகிறபொழுது அவர்களுக்குத் தேவையான ஊதியத்தையும் நாம் தருகிறோம். அவர்களுக்கு மொத்தம் 210 பணி நாட்கள் மட்டும்தான். ஆனால், மற்ற பணியாளர்களை நீங்கள் பார்க்கிறபொழுது, உதாரணமாக காவல் துறையை எடுத்துக்கொண்டால், அவர்கள் 24 மணிநேரமும் பணியாற்ற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. அவர்களுடைய ஊதியத்தையும், இவர்களுடைய ஊதியத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அதன் காரணமாகத்தான் ஆசிரியர்கள் மனிதநேயத்தோடு கிராமங்களில் இருக்கின்ற census பணிகளைச் செய்வதோடு, தேர்தல் நேரங்களில் தேர்தல் பணிகளையும் ஆற்றி வருகிறார்கள். அதற்கான ஊதியத்தை நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, குறிப்பிட்ட காலங்களில்தான் ஆசிரியர் பணி இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இங்கே மாணவர்களுக்குக் கொடுப்பதைப்போல ஆசிரியர்களுக்கும் மடிக்கணினிகள் வழங்க வேண்டுமென்று குறிப்பிட்டீர்கள். முதல்நிலை ஆசிரியர்களுக்கு சென்ற ஆண்டு 28,514 மடிக்கணினிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. வருகின்ற ஆண்டிலும் பட்டதாரி ஆசிரியர்கள் அத்தனை பேருக்கும் மடிக்கணினிகள் வழங்குவதற்கான பணிகளை அரசு மேற்கொள்ளவிருக்கிறது. அதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, கரும்பலகைகளில் எழுதிக் கொண்டிருக்கிற நிலையை மாற்றுவதற்காக 72,000 Smart boards வழங்குவதற்கும், 7,200 பள்ளிகளிலே smart class கொண்டு வருவதற்கும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பிற மாவட்ட ஆசிரியர்கள் பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் தங்கும் வண்ணம் இல்லங்கள் அமைத்துத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்பகல் 2–20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். முதன்முதலில் ஆசிரியர்கள், அதேபோன்று வேளாண்மைத் துறையைச் சேர்ந்த அலுவலர்கள், மருத்துவத் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் ஆகியோர் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் இருந்தார்கள். ஆசிரியர்கள் தவிர்த்து, மற்றவர்களுக்கு அவர்களுடைய seniority என்பது மாநில அளவில் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. ஆனால், ஆசிரியர்களுக்கு மட்டும்தான், seniority ஊராட்சி மன்ற அளவிலும், மாவட்ட அளவிலும் இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு ஊராட்சி மன்றங்களையும் பார்க்கின்றபோது அன்றைக்கு எங்கெங்கே பள்ளிகளைக் கட்டினார்களோ அங்கங்கே

ஆசிரியர்கள் பணியாற்றுவதற்கும், குடியிருப்பதற்கும் வசதிகளைச் செய்தார்கள். ஆனால் அங்கு யாரும் இருப்பதில்லை. அத்தனைபேரும் நகரத்தை நோக்கி வந்து கொண்டிருக்கின்றார்கள். ஏனென்றுச் சொன்னால், அவர்களது குழந்தைகள் அத்தனைபேரும் தனியார் பள்ளிகளில் படிக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுப் பள்ளிகள், கட்டடங்களைச் சீரமைப்பு செய்திடும் வகையில், வகுப்பறைகள், கழிவறைகள் பராமரிப்புப் பணிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் PWD வாயிலாக பள்ளி நிருவாகத்தோடு இணைந்து, பணிகளைக் கேட்டுப் பெற்று உரிய மதிப்பீடுகளுடன் அரசுக்கு அனுப்பி, கட்டடங்களைச் சீரமைப்புச் செய்ய நிதிகள் பெற்று அந்தப் பராமரிப்பைச் செய்ய வேண்டும். ஆகவே, அதற்காக தனி maintenance fund வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விடுக்கின்ற கோரிக்கை எல்லோருடைய மனதிலும் இருக்கின்ற ஒன்றுதான். கழிப்பிட வசதி என்பது எல்லோருக்கும் முக்கியமான ஒன்று. புதியதாக NABARD திட்டத்தின் மூலமாகக் கட்டப்படுகின்ற அனைத்து இடங்களிலும் அதுபோன்ற பணிகள் இப்போது நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இன்றைய காலகட்டத்தில், ஊராட்சி ஒன்றியங்களில், நடுநிலைப் பள்ளிகள் வரை இருக்கின்ற இடங்களில்தான் கழிப்பிட வசதியும், குடிநீர் வசதியும் சரியாக இல்லை என்ற நிலை இருக்கின்றது. தேவையான குடிநீர் வசதியை ஏற்படுத்தித் தர இந்த அரசு ஆய்ந்துகொண்டிருக்கின்றது. அதற்காகத்தான் நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, தனியாரை நாங்கள் நாடி வருகின்றோம். CSR fund, அதைப்போல அங்கே படித்து முடித்துவிட்டுச் சென்றிருக்கின்ற முன்னாள் மாணவர்கள், சமூக நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் என அத்தனை பேருடைய உதவியோடு தமிழக

முதலமைச்சர் EPS அவர்களுடைய தலைமையில் நடைபெறுகின்ற பள்ளிக் கல்வித் துறை, இன்றைக்கு 482 கோடி ரூபாய் நிதியினைப் பெற்று அந்தப் பணிகளை ஆற்றி வருகிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள், தனியார் சுயநிதிப் பள்ளிகள் மாணவர்களுக்கு நடத்தும் போட்டிகளைப் பொறுத்தவரையில், பேச்சு, ஓவியம், பாட்டு, கட்டுரை மற்றும் விளையாட்டுப் போட்டிகளை வெளியிலிருந்து நடத்தும் அமைப்புகள், மாணவர்களின் கல்வியில் பாதிப்பு ஏற்படாதவாறு ஒரே channel வாயிலாக நடத்த வேண்டும். அதேநேரத்தில் இதுபோன்ற ஓவியம், இசை, உடற்கல்வி போன்ற பல்வேறு ஆசிரியர்களுக்கான தேர்வு என்பது 2017–ல் நடைபெற்றது. TRB மூலமாக நடந்த அந்தத் தேர்வில் சான்றிதழ் சரிபார்ப்புப் பணியில் ஒன்றிரண்டு தரப்பு ஆசிரியர்களுக்குக் குளறுபடிகள் இருந்து, அவர்கள் Court–க்கு போனதால், கொஞ்ச நாட்களுக்கு அத்தேர்வு நிறுத்தி வைக்கப்பட்டது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் எப்போது கல்லூரிக்கு வரப் போகின்றீர்கள்?*

திருமதி எஸ். விஜயதரணி: *அதில் சில points தான் இருக்கின்றன. இதோ வந்துவிடுகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நீங்கள் சீக்கிரம் வாருங்கள். இல்லையென்றால் time முடிந்துவிடும். நான் குறிப்பிட்ட நேரத்தில் சபையை முடிக்க வேண்டும்.*

திருமதி எஸ். விஜயதரணி: *எனக்குக் கொஞ்சம் time கொடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *இல்லை, இல்லை, அதெற்கெல்லாம் வாய்ப்பு இல்லை. அதனால்தான் கல்லூரிக்கு வாருங்கள் என்று சொல்கின்றேன்.*

திருமதி எஸ். விஜயதரணி: *சரி. அதாவது உடற்கல்வி ஆசிரியர்களுடைய சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு, இன்னும் நியமனங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றார்கள்.*

அவர்களுக்கு வயதானது 40, 45-ஐ நெருங்கிக் கொண்டிருக்கின்றது. எனவே, விரைவில் அந்த நியமனங்களைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் ஆசிரியர்களை நாம் தேர்வு செய்கிறபோது அதில் ஒரு சில ஆசிரியர்கள் வழக்கு மன்றத்திற்குச் செல்கின்ற நிலை இருக்கின்றது. ஆசிரியர்களைத் தேர்வு செய்கின்றபோது நாம் விதிமுறைகளை வகுத்துத் தருகின்றோம். அந்த விதிமுறைகள் இருந்தாலும்கூட, தங்களையே தேர்வு செய்ய வேண்டும் என்று சொல்கிற ஒரு சில பேரை நீங்கள் பார்த்திருக்கக்கூடும். கர்நாடக மாநிலத்தில் தமிழ் கற்றுவிட்டு, தமிழ் கற்றதாக ஒரு சான்றிதழைப் பெற்று, நான் தமிழ் கற்றிருக்கின்றேன் என்று சான்றிதழை வழங்குகின்றார்கள். இதுபோன்ற குறைபாடுகள் வரக் கூடாது என்று நாங்கள் கண்காணித்துக் கொண்டிருக்கின்றோம். அப்படி சில தவறுகள் வருகின்றபோதுதான், இதுபோன்று அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் செல்லவில்லை என்று சொன்னால், உடனடியாக நாம் நடவடிக்கை எடுக்க முடியும். நம்முடைய ஆசிரியர் தேர்வு வாரியம் என்பது முன்பு இருந்ததைப்போல் அல்ல. தேர்வு முடிவதற்கும், பயிற்சி முடிப்பதற்கும் அவர்களைத் தேர்வு செய்வதற்கும் ஓராண்டு கால அவகாசம் தேவைப்பட்டது. இப்போது தேர்வு முறைகள் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. Online மூலமாகவே அவர்கள் பதிவு செய்துகொள்ளலாம். கணினி ஆசிரியராக இருந்தாலும் சரி, மற்ற ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, உடனுக்குடன் நியமிப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. 51 நாட்களிலேயே கணினி ஆசிரியர்களை நாங்கள் தேர்வு செய்தோம். தேர்வு செய்ததற்குப் பிறகு, அதிலே ஏறத்தாழ 23 பேர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்ற காரணத்தின் அடிப்படையில் அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்த 23 நபர்களை நிறுத்திவிட்டு, மற்றவர்களை பணியில் அமர்த்தலாம் என்பது குறித்து அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

பிற்பகல் 2–25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் தயவுசெய்து உரையை முடியுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்குள்ளாக முடிக்கச் சொல்கிறீர்களே! 5 நிமிடங்களில் வேகமாக உரையை முடித்து விடுகிறேன். இது முக்கியமான கோரிக்கை. என்னுடைய விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட திருவட்டாறு கல்வி மாவட்டம், மேல்புறம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்பள்ளியில் போதுமான இட வசதி, கட்டட வசதி, வகுப்பறைகள் உள்ளன. Endowment கட்டவும் P.T.A. தயாராக உள்ளது. குழித்துறை கல்வி மாவட்டம், என்னுடைய விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட கல்வி மாவட்டம். அந்த மாவட்டத்திற்கு jeep இல்லாமல் இருக்கிறது. அதற்கு jeep வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பள்ளிக் கல்வித் துறை சம்பந்தமான தொகுதி சார்ந்த கோரிக்கைகளை தனியாக எழுதிக் கொடுத்துவிடுகிறேன்.

அடுத்து பொது நூலகத் துறையில் 12 ஆண்டுகளுக்கு மேலாக சுமார் 1,500 ஊர்ப்புற நூலகர்கள் சிறப்பு காலமுறை ஊதிய அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர். இதுபோல், தமிழகத்திலுள்ள ஊராட்சிகளில் சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணிபுரிந்த 12,600 ஊராட்சிச் செயலாளர்களுக்கு 7 ஆண்டுகளிலேயே பதிவுரு எழுத்தர்களாக (Record Clerk) காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்து அரசாணை வழங்கப்பட்டுள்ளது. இதுபோல், பொது நூலகத் துறையில் 12 ஆண்டு காலமாகப் பணிபுரிந்துவரும் 1,500 ஊர்ப்புற நூலகர்களை மூன்றாம் நிலை நூலகர்களாகத் தரம் உயர்த்தி காலமுறை ஊதியம் வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், இடைநிலை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், ஊதிய முரண்பாடுகள் நிறைய இருக்கின்றன. இவை களையப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள். இன்னும் 3 உறுப்பினர்கள் பேசி, இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். 21,000

ஆசிரியர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 'Equal pay for equal work' என்ற அடிப்படையில் இதற்குத் தீர்வு காண வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் seniority குறித்து இரு வேறு கருத்துகளை இங்கே குறிப்பிட்டிருக்கிறீர்கள். அரசுப் பள்ளியிலே பணியாற்றுகிற ஆசிரியர்களின் seniority வேறு, ஆதி திராவிடர் நலத் துறையில் பணியாற்றுகிற ஆசிரியர்களுடைய seniorityவேறு.கள்ளர் பள்ளியிலே பணியாற்றுகிற ஆசிரியர்களுடைய seniority வேறு. அதேபோல மூன்று மாநகராட்சிகள் இருக்கின்றன. சென்னை, கோவை, மதுரை, அதனுடைய seniority என்பது வேறு. ஆகவே, இந்த முரண்பாடுகளின் அடிப்படையிலேதான் அவர்கள் அன்றைக்கு பணியிலே அமர்த்தப்பட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறையில் இரண்டு points தான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லுங்கள், இல்லையென்றால் நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைத்துவிடுவேன். நன்றி சொல்லுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2 points தான். எங்களுக்கு daily பேச வாய்ப்பு கிடையாது. குறைவான நாட்கள்தான் எங்களுக்குப் பேச வாய்ப்பு தரப்படுகிறது. அதனால் கொஞ்சம் time ஆவது கொடுங்கள். உயர் கல்வியைப் பொறுத்தவரை, அரசு கல்லூரிகளில் சுழற்சி முறையைக் கைவிடப்போவதாகக் கூறிக்கொண்டிருக்கிறார்கள். இதனால் ஏழை மாணவர்கள் பெரிதும் பாதிப்படைய வாய்ப்பிருக்கிறது. அதேபோல், இரு சுழற்சி முறையைக் கைவிட்டால், கௌரவ விரிவுரையாளர்களின் வேலைவாய்ப்பு பாதிக்கப்படும். மேலும் கௌரவ விரிவுரையாளர்களுக்கு, கடந்த term–ல் என்னுடைய கோரிக்கையை ஏற்று, 10,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாக

ஊதிய உயர்வு தந்தீர்கள். நான் இன்றும் மறக்கவில்லை, அதனை நன்றியோடுதான் பார்க்கிறேன். இன்றைக்கு இருக்கிற விலைவாசியில் கஷ்டம் நிறைய இருக்கிறது. ஆகவே, 15,000 ரூபாயை வைத்து ஒரு பேராசிரியரால் பெரிதாக ஒன்றும் குடும்பம் நடத்த முடியாது. அதனால் அவர்களுடைய ஊதியத்தை மேலும் உயர்த்தித் தர ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி முடியுங்கள், please.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரையை முடிக்கிறேன், கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் 18 நிமிடங்கள் பேசி விட்டீர்கள். எல்லோரும் 13 நிமிடங்கள் பேசினார்கள். (குறுக்கீடு) அதைப்பற்றி நான் விளக்கம் சொல்ல விரும்பவில்லை. நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேசுகிற நாட்கள் எங்களுக்குக் குறைவுதான். அதனால் atleast time ஆவது கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், எண்ணிக்கையின் அடிப்படையில்தான் வாய்ப்பு தரப்படுகிறது. ஆகையால், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதனால் time ஆவது கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரையை முடிக்கிறீர்களா, இல்லையா? மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள். (குறுக்கீடு) ஒரே point–ஐச் சொல்லி உரையை முடியுங்கள்.

பிற்பகல் 2–30

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கௌரவ விரிவுரையாளர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு நிரந்தரப் பணியை வழங்கும்

வகையில், 2,300 பேராசிரியர் பணியிடங்களுக்கு நியமனம் நடைபெறவுள்ளது. TRB மூலமாக தகுதியானவர்களுக்கு அதில் பணி நிரந்தரம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல இன்னும் ஒரேயொரு கோரிக்கை. Anna University–ன் ஒரு பிரிவாக Institutes of Eminence, IoE–ஐக் கொண்டு வருவதற்கு மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அது வருவதனால், ஏதும் தவறு இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், அதில் இருக்கிற ஒரு பிரச்சினை என்னவென்றால், 69 சதவிகித இடஒதுக்கீடு பின்பற்றப்படுவதைக் கைவிட்டுவிடுவார்களோ என்ற ஒரு சந்தேகம்தான் இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் 69 சதவிகிதம் மாணவர்கள் சேர்க்கை மற்றும் 69 சதவிகிதம் பேராசிரியர்கள் நியமனம் என நடைமுறையில் உள்ளது. ஆனால், எல்லாமே IoE என்று வரும்போது, '50 சதவிகிதத்தை follow செய்யுங்கள்' என்று Central Government சொல்லிவிட்டால் நமக்கு நெருக்கடி வரும். மேலும், Institutes of Eminence வரும்போது, தமிழ்நாட்டில் Anna University என்கிற பெயரும் மாற்றப்படக் கூடாது; அதேநேரத்தில் Institutes of Eminence வரும்போது Central Government–லிருந்து நமக்கு நிறைய funds கிடைக்கும். அதையும் நாம் வேண்டாம் என்று சொல்லக் கூடாது. அதேநேரத்தில் தமிழ்நாட்டிற்கேற்றாற்போல இடஒதுக்கீடும் உறுதி செய்யப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: உரையை முடித்துவிடுகிறேன். அந்தத் திட்டம் வந்தாலும், அந்தத் திட்டத்தை தமிழ்நாடு அரசு முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக இருக்க வேண்டுமே தவிர மத்திய அரசின் நேரடிக் கொள்கையை ஏற்று நடத்துவதாக இருக்கக் கூடாது என்பது என்னுடைய கோரிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: Last point தான். உரையை முடித்துவிடுகிறேன். 2012–2017 ஆம் ஆண்டுகளில் மத்திய அரசிடமிருந்து மாநில அரசு வாயிலாக U.G.C.Grants, financial assistance, அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளுக்கு வந்தன. இதனால் கல்லூரி உட்கட்டமைப்புகள் மற்றும் கல்விப்

பணிகள் சுணக்கமின்றி நடைபெற்று வந்தன. ஆனால், கடந்த மூன்று ஆண்டுகளாக கல்லூரிகளுக்கு நிதியுதவிகள் வரவில்லை. எனவே, நிதியுதவிகளைப் பெறும்வண்ணம், அரசு U.G.C. funds–ஐக் கேட்டுப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்று; ஜவஹர் நவோதயா பள்ளிகளை ஏன் அமல்படுத்தக் கூடாது என்ற கேள்வி எங்களைப் போன்றோரின் மனங்களில் இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கடைசியாக, N.P.R.–ஐப் பொறுத்தவரையில்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உரையை முடிக்க வேண்டாம். Please, நீங்கள் உட்காருங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: நன்றி சொல்லி உரையை முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் நன்றியே சொல்ல வேண்டாம். நானே உங்களுக்காக நன்றியைச் சொல்லிவிடுகிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அண்ணா பல்கலைக்கழகம், சீர்மிகு பல்கலைக்கழகத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது நான் ஏற்கெனவே பதில் சொன்னேன். அதிலுள்ள சாதக, பாதகங்களையெல்லாம் கண்டறிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஐந்து அமைச்சர்களைக் கொண்ட குழுவினை அமைத்து ஆய்வை மேற்கொண்டிருக்கின்றார். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கொண்டு வரப்பட்ட 69 சதவிகித இடஒதுக்கீட்டை எந்தக் காலத்திலும் இந்த அரசு விட்டுக்கொடுக்காது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, சுழற்சி 1, சுழற்சி 2 ஆகிய இரண்டையும் ஒன்றாக இணைப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். காலை 8–30 மணிக்கு கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டு, மாலை 5–30 மணி வரை கல்லூரிகள் நடக்கின்றபட்சத்தில் மாணவர்கள் காலையில்

வருவதற்கு சிரமங்கள் இருக்கின்றன. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேருகின்ற மாணாக்கர்களுடைய எண்ணிக்கை திடீரென்று கூடுதலாகிவிட்டது. மேலும், புதிய பாடப் பிரிவுகளும் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அதோடுமட்டுமல்லாமல், மாணவர்களைச் சேர்க்கின்ற வகையிலே அரசுக் கல்லூரிகளிலே 20 சதவிகித இடம் கூடுதலாக வழங்கப்பட்டது. இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் இணைந்து ரூ.210 கோடி அளவிற்கு "பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாக் கட்டடங்கள்" என்ற பெயரில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு கட்டடங்களைக் கட்டுவதற்காக நிதி வழங்கியிருக்கிறார்கள். அந்தக் கட்டடங்களில் வகுப்பறைகள், ஆய்வகங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

மேலும், 106 கல்லூரிகளிலே 56 கல்லூரிகளில் மட்டும்தான் சுழற்சி 1, சுழற்சி 2 என்ற வகையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆக, அந்த 56 கல்லூரிகளுக்கு வேண்டிய உட்கட்டமைப்புகளை உருவாக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தக் கட்டமைப்புப் பணிகள் முடிவடைந்த பிறகு, சுழற்சி 1, சுழற்சி 2 என்றிருப்பது ஒரே சுழற்சியாக மாற்றப்பட்டு, கல்லூரிகளில் காலையில் ஆரம்பித்து மாலையில் முடிவடையும் சூழ்நிலையை உருவாக்க அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இரண்டு சுழற்சிகளாக நடத்தப்படுவதாலோ அல்லது அவற்றை ஒன்றாக இணைப்பதாலோ, மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எந்தப் பாதிப்பும் இல்லை. சுழற்சி 2–ல் இருக்கக்கூடிய கௌரவ விரிவுரையாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். கௌரவ விரிவுரையாளர்களாக சுழற்சி 1–ல் 2,423 பேரும், சுழற்சி 2–ல் 1,661 பேரும் தற்போது பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அரசானது 2,331 பேரை ஆசிரியர் தேர்வு வாரியம் அதாவது, T.R.B. மூலமாகத் தேர்வு செய்வதற்கு வழிவகைகளைச் செய்திருக்கிறது. அந்தப் பணி முடிந்த பிறகு, மீதம் இருக்கின்ற மாணவர்களுக்கு அந்தப் பாடப் பிரிவுகள் ஏதும் குறைக்கப்பட மாட்டாது. ஆகவே, ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக 2,331 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்ட பிறகு, மீதம் இருக்கின்ற கௌரவ விரிவுரையாளர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள். (குறுக்கீடு) உங்களுடைய நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) ஒன்றும் வேண்டாம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி கீதா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) போதும், நீங்கள் 22 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள், உட்காருங்கள்.

பிற்பகல் 2–35

திருமதி ம. கீதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அகிலத்தின் ஆணிவேராய்த் தோன்றி, எங்கள் அன்பிற்கு ஆதாரமாய் இருக்கும் ஓர் உன்னத உயிர் எங்கள் அம்மா! ஆதரவற்றோருக்கு அன்னையாக இருந்து அருள்கொடை வழங்கும் இதய தெய்வம் எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) இயல்பான குணம், இணையற்ற மனம் கொண்டு அனைவரையும் அரவணைக்கும் கருணைக் கடல் எங்கள் அம்மா! கற்றோரின் வாழ்வைச் சிறப்பாக்க வேலைவாய்ப்பு. . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, இங்கே பாருங்கள். எங்கள் உறுப்பினர் எவ்வளவு நேரம் பேசுகிறார்கள் என்று நீங்களே பாருங்கள். வாருங்கள், வந்து பாருங்கள். (குறுக்கீடு) இல்லை, வேண்டாம். (குறுக்கீடு) அவர்கள் என்ன பேசுவார்கள் என்று எனக்குத் தெரியும். (குறுக்கீடு) உட்காருங்கள்.

திருமதி ம. கீதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி கற்போரின் நிலையை மேம்படுத்த மடிக்கணினி, படிப்பற்ற பாமரருக்கும் பசு மாடு, மணமாகும் மங்கைக்கு மாங்கல்யம், ஆதரவற்ற உயிர்களுக்கெல்லாம் வாழ்வாதாரம், (மேசையைத் தட்டும் ஒலி) அனுதினமும் மக்களின் நலனுக்காகப் பாடுபட்ட தியாகச் சுடரான எங்கள் அம்மா அவர்களின் அன்புடனும் ஆசியுடனும் அவர்களின் திருவுருவத்தை என் மனதில் நிறுத்தி, உங்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாயைப் போல பிள்ளை என்பதுபோல் அம்மாவின் வழிவந்த அற்புதத் தலைவர், வெற்றி எனும் வேட்கை உன்னுள் இருக்கும்வரை தோல்வி எனும் தடைகள் உன்னை நெருங்காது என்பதற்கேற்ப வெற்றி வேட்கையோடு தன் பணியைச் சீர்படச் செய்பவர், (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி மட்டும் சொல்வார்களா? (குறுக்கீடு)

திருமதி ம. கீதா: உள்ளத்தில் தெளிவும், செயலில் துணிவும். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, நன்றி மட்டும் சொல்வதானால் சொல்லட்டும், வேறு எந்தக் கருத்து சொன்னாலும் பதியப்பட மாட்டாது. நன்றி மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) வேறு எந்தக் கருத்து சொன்னாலும் பதியப்பட மாட்டாது.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நன்றி சொல்வதே ஒரு point சொல்லி நன்றி சொல்லத்தான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இல்லை, நீங்கள் நன்றி மட்டும் சொல்லலாம்,

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் NPR-ஐ அமல்படுத்தக்கூடாது. நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

விளவங்கோடு அரசு மேல்நிலைப் பள்ளியில் Science Lab மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கப்பட வேண்டும்.

அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளி, polytechnic மாணாக்கர்களுக்கு அரசு விலையில்லா மடிக்கணினியை கல்வி ஆண்டு தொடக்கத்தில் வழங்கிட வேண்டும்.

பள்ளிகளின்மூலம் மாணவர்களிடம் வசூல் செய்யும் சந்தா ரூ.100/– ஆக அதிகரித்து school Development fund உருவாக்கி toilet cleaning போன்ற பணிகளுக்கான acid மற்றும் soap ஆகியவற்றை வாங்கலாம்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் Adul Tinkering Lab திட்டத்தின்கீழ் ரூ.25 இலட்சம் வழங்கி, computer Basic studies, Robotic activity கல்வி கற்பிக்கப்பட வேண்டும். நாகர்கோவில் stadium–ஐச் சீரமைத்துப் புனரமைக்க

வேண்டும். நாகர்கோவில் விளையாட்டு அரங்கம் அருகே Multi purpose (Volley Ball, Basket Ball, Badminton) Indoor Stadium உருவாக்க வேண்டும். செயற்கை ஓடுதளம் (Synthetic Track) அமைக்க வேண்டும். விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டத்தில் Mini Stadium அமைத்திட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி கீதா, பேசுங்கள்.

திருமதி ம. கீதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாயைப் போல பிள்ளை என்பதுபோல் அம்மாவின் வழிவந்த அற்புதத் தலைவர், வெற்றி எனும் வேட்கை உன்னுள் இருக்கும்வரை தோல்வி எனும் தடைகள் உன்னை நெருங்காது என்றும் (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றி வேட்கையுடன், தன் பணியை சீர்படச் செய்பவர், (குறுக்கீடு) உள்ளத்தில் தெளிவும், செயலில் துணிவும், சிந்தனையில் வேட்கையும், எண்ணத்தில் தூய்மையும், முகத்தில் புன்னகையும், பழக்கத்தில் இனிமையும் கொண்டு புதியதோர் எதிர்காலத்தைப் படைக்க அயராது உழைக்கும் போராளி, வேங்கைபோல் மிடுக்கான செயலால் தனித்துவம் பெற்று, தமிழகம் எனும் மலரின் மறுமலர்ச்சிக்கு வித்திடும் இனிய பண்பாளர்,

> “தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
> மெய்வருத்தக் கூலி தரும்”

என்ற வள்ளுவரின் வாக்கின்படி தன் அயராத முயற்சியால் இன்று சாதனை படைத்த ஓர் உன்னத மனிதர், மரத்தைத் தாங்கும் விதைபோல், அனைத்துப் பளுவையும் தன் தோள்மீது கொண்டு, புதுமலராய் நாம் மலர பல தியாகங்கள் செய்யும் ஒப்பற்ற குணத்திற்கு உரிமையாளர், அம்மா காட்டியதே அறவழி, அவ்வழியில் பயணிப்பதே தன் வாழ்க்கை நெறி என்று தன் வாழ்க்கைப் பயணத்தை அறவழியில் அமைத்து, அதில் அடிபிறழாமல் பயணிக்கும் மாங்கனி மாநகரத்து மாமன்னர், விவசாயிகளின் மூத்த குடிமகன், விவசாயிகளின் பாதுகாவலர், காவேரி காப்பாளர் என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் எங்கள் அன்பு அண்ணன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்த் தாயின் தவப்புதல்வர், அமைதிக்கு உறைவிடமானவர்,

அனைத்திற்கும் இணை அகிலத்தில் உண்டு, அன்னை அன்பிற்கு நிகர் தரணியில் இல்லையென்று, அன்னை வழிவந்த அறப் போராளி, இன்முகம் காட்டி, இன்சொல் பேசி, தேடி வந்தோரின் வேதனை போக்கும் அற்புத மனிதர், இதய தெய்வம் அம்மாவின் குருகுல மாணவனாய் சிறப்புறக் கல்வி கற்று, இன்று அம்மாவின் வழியில் அணுவளவும் அடிபிறழாமல் நடக்கும் நம் அனைவரின் அன்பிற்கும், மரியாதைக்கும் பாத்திரமான மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். மேலும், கானகத்தில் கரூர் என்ற ஓர் ஊரில் MRV Trust நிறுவி அதன் மூலமாக நகரங்களை கண்குளிரும் கானகமாய் மாற்ற மீண்டும் ஒரு பசுமைப் புரட்சியைத் துவக்கிவைத்த இயற்கைப் போராளி, வனங்களின்பால் தீராத காதல் கொண்டு, மக்கள் நலனுக்காக இன்றே விதை விதைக்கும் இயற்கை அன்னையின் இளைய மகன், பல வேடிக்கை மனிதரைப்போல் நான் வீழ்வேனென்று நினைத்தாயோ என்ற ஆழ்ந்த வரிகளின் சிறந்த உதாரணமாய் தடைகளைக் கடந்து சரித்திரம் படைத்து அனைவரின் நட்பிற்கும் ஏற்பாளரான மரியாதைக்குரிய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆலைகள் செய்வோம் கல்விச் சாலைகள் செய்வோம் என்று காணும் இடமெல்லாம் கல்விச் சோலையாக மாற்ற பல திட்டங்கள் வகுப்பவர், கல்வி என்பது கண் அல்ல, அது உயிருக்கு இணை என்று தன் ஒவ்வொரு செயலிலும் பறைசாற்றும் அறிவாளர், இன்றைய மாணவர்களே, எதிர்கால நாட்டின் நம்பிக்கை என்று கல்வியில் இனிமை, பாடத் திட்டத்தில் புதுமை, மாணவர்களுக்கு மடிக் கணினி, தமிழ்வழியில் ஆங்கிலக் கல்வி, அம்மாவின் பாதையில் பல புதுமைகளைப் புகுத்தி, சிறப்பாகச் செயல்படும் சிந்தனையாளர், “பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்” என்பதை உணர்த்தும்விதமாக கல்விக்குப் பின்னரே இறையாண்மை என்ற குறிக்கோளோடு செயல்படும் சாதனையாளர், ஏழை மாணவர்களின் கல்விக்குக் காவலராய், மாணவர்களுக்கு முதன்மை குருவாய், நம் அனைவருக்கும் உற்ற நண்பராய் இருந்து அம்மாவின் அறவழியில் முழுமனதோடு பயணிக்கும் மாண்புமிகு தமிழக பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

அமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

பிற்பகல் 2–40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவின் பிறந்த நாளை "பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினமாக" அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். கரூர் மாவட்டத்தில் அனைவரும் பாராட்டும் வகையில், புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அரசு மருத்துவக் கல்லூரியைத் திறந்து வைத்ததற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்கள் மாவட்ட அமைச்சர் அவர்களுக்கும்,எங்கள் கரூர் மாவட்ட மக்களின் சார்பாகவும், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்த "காவேரி காப்பான்" மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்:

கடவூர் ஒன்றியம், தரங்கம்பட்டியில் புதிதாக நீதிமன்றம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கடவூர் ஒன்றியம், 20 ஊராட்சிகளுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். தாந்தோணி ஒன்றியம், மேலப்பாளையம் மற்றும் கோயம்பள்ளி இடையே அமராவதி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம், தரங்கம்பட்டியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கடவூர் ஒன்றியம், தரங்கம்பட்டி மற்றும் கிருஷ்ணராயபுரத்தில் தீயணைப்பு நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெள்ளியணை, ஜெகதாபி, வீரராக்கியம், உப்பிடமங்கலம் ஆகிய பகுதிகளுக்கு திண்டுக்கல்

மாவட்டம், குடகனாறு வாய்க்கால் அழகாபுரி தடுப்பணையிலிருந்து 26-வது கி.மீ. இடையில் ஈசநத்தம் முதல் அரவக்குறிச்சி சாலை அமராவதி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்து, உள்ளூர் நதிநீர் இணைய திட்டத்தின் வாய்க்கால் அமைத்துத் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றியம், மாயனூர் ஊராட்சி, மாயனூர், மதுக்கரை செல்லாண்டியம்மன் கோவிலுக்கு சமுதாயக்கூடம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றியம், மாயனூர் ஊராட்சி, மாயனூர் காவேரி ஆற்றுப்படுகையில் மீன் விற்பனை நிலையம் மற்றும் மீன் பதப்படுத்தும் நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கடவூர் ஒன்றியம், கடவூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் தனி வட்டாட்சியரைப் பணியமர்த்தித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணராயபுரம் பேரூராட்சி, கிருஷ்ணராயபுரத்தில் புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். தாந்தோணி மேற்கு ஒன்றியம், மூக்கணாங்குறிச்சி ஊராட்சி, விஜயபுரத்தில் உள்ள அரசு ஆரம்ப துணை சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்தித் தருமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன். கடவூர் ஒன்றியம், கீழப் பகுதி ஊராட்சி, மைலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு ஸ்கேன் சென்டர் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம், காணியாளம்பட்டி அரசு மருத்துவமனையில் இயங்கிவரும் அறுவை சிகிச்சை நிலையத்தைத் தரமுயர்த்தித் தருமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றியம், சேங்கல் அரசு மருத்துவமனையில் இயங்கிவரும் பிரசவ சிகிச்சைப் பிரிவு அறையை விரிவுபடுத்தித் தருமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன். முத்துரெங்கப்பட்டி ஊராட்சி, பம்பரமுத்தம்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். குடிநீர்த் திட்டப் பணிகள் செய்வதற்கு திட்ட உருவாக்கக் கோட்ட அலுவலகம் அமைத்துத் தருமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணராயபுரம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் விவசாயிகளின் நலன் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் புதிய மின்வாரிய கோட்ட அலுவலகம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். காவேரி ஆற்றுப் பாதுகாப்பு கோட்டத்தை உள்ளடக்கிவரும் கட்டளை, மாயனூர், திருக்காம்புலியூர், சித்தலவாய், பொய்கைபுத்தூர், மகாதானபுரம் ஆகிய ஊராட்சிகளில் புதிதாக

படிக்கட்டுத்துறை கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணராயபுரம் பேரூராட்சி, பிச்சம்பட்டியில் மரப்பாலத்திற்குப் பதிலாக புதிதாக பாலம் அமைத்துத் தருமாறும், மலையப்பபுரம் காலனியில் மரப்பாலத்திற்குப் பதிலாக புதிதாக பாலம் அமைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன். தாந்தோணி ஒன்றியம், மூக்கணாங்குறிச்சி ஊராட்சி, விஜயபுரத்தில் ஏற்கெனவே உள்ள ஆரம்ப துணை சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்தி, ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றியமைத்துத் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கரூர் மாவட்டத்தில் நெற்பயிர்கள் அதிகம் பயிரிடப்படும் வேளாண் பகுதிகளில் பார்வைக்கு அழகூட்டும் நமது தேசிய பறவையான மயில்கள் நெற்பயிர்களை சேதப்படுத்தி வருகின்றன. ஆகையால்,தேசியப் பறவையான மயில்களையும்,நெற்பயிர்களையும் விவசாயிகளின் நலன் கருதி, பாதுகாத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறையில் புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், நான் ஆசிரியராக இருந்து பணிபுரிந்தபோது, என்னுடன் சக ஆசிரியர்களாகப் பணிபுரிந்தவர்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று மாணவர்கள் எந்தப் பொதுத் தேர்வாக இருந்தாலும் சரி அல்லது போட்டித் தேர்வுகளாக இருந்தாலும் சரி, மாணவர்கள் அதனை எதிர்கொள்ளும் வகையில் பாடத்திட்டத்தினை மாற்றியமைத்து,அவர்களுடைய முன்னேற்றத்திற்குவழிக்காட்டியாக இருந்துவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், சக ஆசிரியர்கள் வாய்ப்பிருந்தால், சட்டமன்றப் பேரவையில் எங்கள் சார்பாக, எங்களுடைய பாராட்டுக்களை, எங்களுடைய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள வேண்டுமென்று கூறியதன் அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள அந்த syllabus–ன்படி மாணவர்கள் புரிந்துகொள்வதற்காக QR code என்ற திட்டத்தை உருவாக்கிக் கொடுத்த நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித்

துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் அந்த QR code பற்றிய பயிற்சிகளை வழங்க வேண்டுமென்று அந்த ஆசிரியர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மட்டும் அந்தப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறியதைப்போல, நான் ஆசிரியராக இருந்தபோது 2004 ஆம் ஆண்டில், 11 ஆம் மாதம் +1, +2–ல் அந்த syllabus–ல் மாற்றத்தைக் கொண்டு வந்தார்கள். தவறாக நினைக்க வேண்டாம். அவர்கள் அந்த CBSE பாடத் திட்டத்தில் என்ன பாடங்கள் இருந்தனவோ, அந்த CBSE content–லிருந்து ஒரு பகுதி, Matric content–லிருந்து ஒரு பகுதியை copy அடித்ததன் அடிப்படையில் சமச்சீர் கல்வி முறை என்ற திட்டம் கொண்டு வரப்பட்டது. நிச்சயமாக அந்தத் தருணத்தில், அந்தச் சமச்சீர் கல்வி முறையில், எந்த மாணவர்களும், அவர்களுடைய தனித் திறனை வெளிப்படுத்தினார்களா என்பது சந்தேகத்துக்குரியது. (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் வட்டாரத்தைத் தவிர, நான் நெருக்கமாக சக ஆசிரியர்களோடு பேச வாய்ப்பு அமைந்ததன் அடிப்படையில், அவர்கள் கூறிய கருத்தாவது, CBSE–க்கு மேலாக நம்முடைய தமிழக அரசின் பாடத் திட்டங்கள் அமைந்திருக்கின்றன என்ற பாராட்டுகளைக் கூறும்போது, அதனை இந்த அவையில் கூறுவதற்கு நான் பெருமையடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இந்த வருடம் Orientation programme என்று சொல்லப்படும் அந்தப் பயிற்சியை அளிக்குமாறு மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் மட்டும்தான் அந்தப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.

திருமதி ம. கீதா: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யப்படும் என்று கூறியதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பள்ளிக் கல்வித் துறை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவின் அரசு ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான கல்வியை வழங்குவதற்கு அதிமுக்கியத்துவம் அளித்து வருவது பாராட்டுக்குரியது. 2020–2021 ஆம் நிதியாண்டில் பள்ளிக் கல்வித் துறைக்கு அதிகபட்சமாக 34,181 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு அம்மாவின் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொடக்கக் கல்வியில் மாணவர் நிகர சேர்க்கை 99.88 சதவிகிதத்தை எட்டியுள்ளது. மேலும், இடைநிற்றல் 0.8 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. இதற்காக மாண்புமிகு அம்மாவின் அரசுக்குப்பாராட்டுகளைத்தெரிவித்துக்கொள்கிறேன்.2019–2020 ஆம் கல்வி ஆண்டில் பள்ளி செல்லாக் குழந்தைகளின் எண்ணிக்கை 30,104 ஆகக் குறைந்து, அவர்களில் 29,740 குழந்தைகள் தற்போது பள்ளியில் சேர்க்கப்பட்டுவிட்டனர். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசிற்கு இந்தத் திட்டத்திற்காக பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு புத்தகப் பைகள், பள்ளிச் சீருடைகள், காலணிகள், குறிப்பேடுகள், பாடப் புத்தகங்கள், வடிவியல் பெட்டிகள் மற்றும் வண்ணப் பென்சில்கள் ஆகிய படிப்புக்குத் தேவையான பொருட்களை விலையின்றி வழங்கும் மாண்புமிகு அம்மாவின் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிப்பறைகள் மற்றும் பிற வசதிகளை அமைப்பதன்மூலம் பள்ளி உட்கட்டமைப்பு மேம்படுத்தப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 158 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 277.88 கோடி ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை, ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் மேற்கொள்ள நபார்டு வங்கி அண்மையில் ஒப்புதல் வழங்கியுள்ளது. இதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கற்பித்தல் தரத்தை மேம்படுத்துவதற்காக அனைத்து அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் 520.13

கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் நிறுவப்படுகின்றன. 2009 ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் பிரிவு 12(1)(சி)–ஐ மிகவும் திறம்படச் செயல்படுத்தி வருகிறது. நடப்பு கல்வியாண்டில் 76,927 மாணவ, மாணவியர் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்கீழ் தனியார் பள்ளிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

2020–2021 ஆம் நிதியாண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த 304.14 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் பள்ளிக் கல்வித் துறை சார்பாக தலைமை ஆசிரியர் கூட்டம் மாதந்தோறும் இரண்டு முறை நடத்துவதற்கு நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய சுமார் 500 பேர் அமரும் இருக்கைகள் கொண்ட கூட்ட அரங்கம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–50

தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பள்ளிக் கல்வித் துறையின்கீழ் செயல்படும் மாவட்டக் கல்வி அலுவலர் ஒருவர் மட்டுமே பணிபுரிந்து வருகிறார். எனவே, கூடுதலாக உதவி மாவட்டக் கல்வி அலுவலர்களை நியமனம் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறை. உயர் கல்வியில் தேசிய மற்றும் பன்னாட்டு வளர்ச்சி இலக்குகளை அடைவதற்காக புதிய உத்திகளை உருவாக்குதல், இடைவெளிகளைக் கண்டறிந்து சிறந்த கொள்கைகளை முன்மொழிதல் மற்றும் திறன் செயல்படுத்துதல், தரமான நிறுவனங்கள் மற்றும் வழிகாட்டிகளின் உதவியுடன் உலகத் தரம் வாய்ந்த உயர் கல்விக்கு விரும்பிய இடமாக தமிழகத்தை அமைத்திட உயர் கல்வித் துறை பல முயற்சிகளை மேற்கொள்வதற்காக இந்த நிதியாண்டில் 5,052.84 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் மற்ற கருத்துகளைப் பதிவு செய்துகொள்ளலாம். நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) அந்தப் பேப்பரை வாங்கிப் படியுங்கள். (குறுக்கீடு)

திருமதி ம. கீதா: ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். மாநிலத்திலுள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகளிலும், ஒற்றைச்சாளர கலந்தாய்வுமூலம் நேரடி சேர்க்கை பெறும், முதல் தலைமுறை பட்டதாரி மாணாக்கர்களுக்கு, கல்விக் கட்டணச் சலுகையாக இதுவரை 5,72,071 மாணவ, மாணவியருக்கு ரூ.1,205.19 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில், ஆங்கிலப் பாடம் பயிற்றுவிக்கும் 2,000 ஆங்கில ஆசிரியர்களுக்கு, ஆங்கிலம் கற்பிக்கும் திறனை மேம்படுத்தும் பயிற்சித் திட்டம் என்ற திட்டத்தினை அறிவித்தமைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 1-6-2018 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாட்டிலுள்ள 40 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள், 152.20 கோடி ரூபாய் செலவில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார். இந்த அறிவிப்பின்படி, 14 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள், அரசுக் கல்லூரிகளாக மாற்றப்பட்டு, இக்கல்லூரிகள் 2019–2020 ஆம் ஆண்டு முதல் அரசுக் கல்லூரிகளாக செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திருமதி ம. கீதா: இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன். மாநிலத்திலுள்ள 1050–க்கும் மேற்பட்ட கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் மனித வளம் மற்றும் நிதி மேலாண்மையைச் சிறப்புற நிருவகிக்க, சிறந்த நிருவாகத்தை அளித்திட ஏதுவாக கல்லூரிக் கல்வி இயக்குநகரகத்தில் “மின் ஆளுமைத் திட்டம்” என்ற திட்டத்தினை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், 2–7–2019 அன்று நடந்த மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது அறிவித்தார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீரத்தில் ஜான்சிராணியாக; அன்பில் அன்னை தெரசாவாக; தைரியத்தில் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக; திரையுலகில் புரட்சித் தலைவியாக; கருணையில் அம்மாவாக; அரசியல் உலகில் சாதனை புரிந்த முதல் இரும்புப் பெண்ணாக; ஏழைப் பெண்களுக்கு

தாலி வழங்கிய தெய்வமாக; ஏழை மாணவர்களின் நிறைவேறா கனவான மடிக்கணினியை வழங்கிய தொழில்நுட்ப தெய்வமாக; (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுக்கு ஆடுகளை வழங்கிய தலைவியாக; அம்மாவை சிறிதுநேரம் காணாவிட்டாலும் குழந்தை, 'அம்மா; அம்மா'; என்று துடிக்கும்; அதுபோல், இன்று உன்னைக் காண இயலாத நிலையில், உன் நினைவுகளை மட்டும் நெஞ்சில் சுமந்து, கண்ணீரை கண்ணில் சுமந்து, எனது நன்றியை உங்கள் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன் அம்மா;

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

நயனொடு நன்றி புரிந்த பயன்உடையார்
பண்புபா ராட்டும் உலகு.

நீதி வழுவாமல் நன்மைகளைச் செய்து பிறருக்குப் பயன்படப் பணியாற்றுகின்றவர்களின் நல்ல பண்பை உலகம் பாராட்டும். இந்த வாய்ப்பை எனக்கு வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் இந்தச் சபையில் உள்ள அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் குறுக்கீடுகள் இல்லாமல் பேசுங்கள்.

திரு. ஜே.எல்.ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் உயர் கல்வித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் உரையாற்றுவதற்கு வாய்ப்பு வழங்கிய, ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு தொடக்கப் பள்ளியும், மூன்று கிலோ மீட்டருக்கு ஒரு நடுநிலைப் பள்ளியும், ஐந்து கிலோ மீட்டருக்கு ஓர் உயர்நிலைப் பள்ளியும் மற்றும் ஏழு கிலோ மீட்டருக்கு ஒரு மேல்நிலைப் பள்ளியும் என செயல்பட வைத்த முத்தமிழறிஞர், சமச்சீர் கல்வித் தந்தை, எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள். சுருக்கமாகக் கேளுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு, வாய்ப்புக் கேட்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு சந்தேகம். இதற்கு முன்பு பேசிய கிருஷ்ணராயபுரம் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், "நான் ஒரு பள்ளி ஆசிரியராக இருந்து பேசுகிறேன்" என்று இங்கே குறிப்பிட்டார். அவர், பள்ளி ஆசிரியராக இருந்து பேசினாரா அல்லது பள்ளியினுடைய தாளாளராக இருந்து பேசினாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இரண்டும் ஒன்றுதான். நீங்கள் உட்காருங்கள்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, age is inversely proportional to hard and smart work and youthfulness. அதாவது வயது அதிகரிக்க, அதிகரிக்க உழைப்பும், இளமையும் மனிதர்களுக்குக் குறைந்து கொண்டே போகும். ஆனால், ஒருசில உலகத் தலைவர்களுக்கு மட்டும்தான் age is directly proportional to hard and smart work and youthfulness. வயது அதிகரிக்க, அதிகரிக்க உழைப்பும், இளமையும் அதிகரித்துக்கொண்டே இருக்கும். அத்தகைய தலைவர்களில் ஒருவரான தளபதியார் அவர்களை வணங்குகிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 2–55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மைக்கை தள்ளி வைத்துப் பேசுங்கள்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் சமூகநீதி மற்றும் மத நல்லிணக்கத்தினை நிலைநாட்டும் உந்து சக்தியாக இருந்து எங்களை இயக்கிக்கொண்டிருக்கும் வருங்கால தமிழகம், கழகத் தலைவர் பாசமிகு தளபதியார் அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) எங்களைப் போன்ற இளைஞர்களுக்குப் பாதுகாவலராக

விளங்கிக் கொண்டிருக்கும் அண்ணன் உதயநிதி அவர்களையும் வணங்கி, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களையும் வணங்கி, இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. காந்தி அவர்களையும் வணங்கி, எதிர்க்கட்சிக் கொறடா அவர்களையும் வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்கி, என் பெற்றோரையும் வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேசுங்கள்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் எனது வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலில் நான் எனது ஆற்காடு தொகுதியில் உள்ள ஒருசில பிரச்சினைகளைச் சொல்லிவிட்டு அதன்பிறகு மானியக் கோரிக்கை விவாதத்திற்குள் செல்கிறேன். ஆற்காட்டில் புறவழிச் சாலைப் பணிகள் கடந்த ஏழு வருடங்களாக நிலுவையில் உள்ளன. அதுகுறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம், வெட்டுத் தீர்மானம் கொடுத்தும் இதுவரையிலும் அது நிலுவையில் உள்ளது. அதனை உடனடியாகச் செயல்படுத்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திமிரி பேரூராட்சிக்குப் பேருந்து நிலையம் அமைக்கப்படாமல் உள்ளது. அதனையும் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். ஆற்காடு நகரின் மத்தியில் மூன்று கால்வாய்கள் உள்ளன. அந்தக் கால்வாய்களை பொதுப் பணித் துறைமூலம் சீரமைத்துத்தர கேட்டுக்கொள்கிறேன். பொன்னாமங்கலம் ஆற்றுப்பாலம் உள்ளது; அங்கு ஒரு பாலம் அமைத்துத்தர கேட்டுக்கொள்கிறேன். அதுபோல், கனியம்பாடி ஒன்றியத்தில் இருபாலர் படிக்கும் மேல்நிலைப் பள்ளியை ஆண்கள் மற்றும் பெண்கள் பயிலும் பள்ளிகளாக தனித் தனியாகப் பிரித்து செயல்படுத்திட கேட்டுக்கொள்கிறேன். மூஞ்சூர்பட்டு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், கடியனூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், ஆற்காடு நகராட்சி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், ஆற்காடு ஒன்றியம், அரும்பாக்கம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், எனது தொகுதி சார்ந்த கோரிக்கைகளை எழுத்துப்பூர்வமாக தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அதனை நான் இங்கு படித்ததாக எண்ணி பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகையில் ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு தொடக்கப் பள்ளியும், மூன்று கிலோ மீட்டருக்கு ஒரு நடுநிலைப் பள்ளியும், ஐந்து கிலோ மீட்டருக்கு ஓர் உயர்நிலைப் பள்ளியும் மற்றும் ஏழு கிலோ மீட்டருக்கு ஒரு மேல்நிலைப் பள்ளியும் என்று அன்றைக்கு நாங்கள் அமைத்தோம் என்று சொன்னார்கள். தற்போது கூடுதலாக பள்ளி வேண்டுமென நீங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். அதுதான் வேடிக்கையாக இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 102D, 202M, 102A, 416B ஆகிய ஆற்காடு முதல் சென்னை வரை செல்லும் நான்கு பேருந்துகளை தற்போது நிறுத்தியிருக்கிறார்கள். ஏற்கெனவே run ஆகிக்கொண்டிருந்ததை நிறுத்தியிருக்கிறார்கள். அதனை ஏன் நிறுத்தினார்கள் என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து, மீண்டும் இயக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நான் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குள்ளே செல்ல விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

> "கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
> மாடுஅல்ல மற்றை யவை."

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். கல்வி தவிர மற்ற பொருட்கள் யாவும் செல்வம் அல்ல.

பள்ளிக் கல்வித் துறையின் மானியக் கோரிக்கை விவாதத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள் அன்றாடம் சந்திக்கின்ற பிரச்சினைகளை அரசுக்குத் தெரிவிப்பதை எனது கடமையாக நினைக்கின்றேன். தொகுதியிலுள்ள அனைத்து மேல்நிலைப் பள்ளிகளுக்கும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து

இரண்டு வருடங்களுக்கு முன்பே நான் ஸ்மார்ட் கிளாஸ்–க்கு நிதி கொடுத்துவிட்டேன். TATA ClassEdge–னுடைய ஸ்மார்ட் கிளாஸ்–க்காக கொடுத்திருக்கிறேன். ஆக, 22 மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கொடுத்திருக்கிறேன். 22 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் ஸ்மார்ட் கிளாஸ்–க்கு நிதி கொடுத்ததோடு நான் அங்குபோய் கிளாஸ் எடுத்திருக்கிறேன். +1, +2 Physics, Chemistry, Maths class எடுத்திருக்கிறேன். அப்போது அங்கிருந்த Students, Teachers என்ன feedback கொடுத்தார்களோ அதைத்தான் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். மேலும், அவர்களின் எண்ண ஓட்டங்கள் என்ன என்பதையும் நான் இங்கே பதிவு செய்கிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய கேள்விகளுக்கெல்லாம் தங்களுடைய பதிலுரையில் பதில் கொடுத்தால் மிகுந்த பயனுள்ளதாக இருக்கும். ஏனென்றால் உண்மையாகவே அங்குள்ள கள நிலவரம் என்ன என்பதைச் சொல்ல முற்படுகிறேன். அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து உள்வாங்கிக்கொண்டு பதிலுரையில் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி ஒன்றினால் மட்டும்தான் சமுதாய ஏற்றத்தாழ்வுகளை அதாவது, ஜாதி, மதம், இனம் இவற்றை அறவே ஒழிக்க முடியும். அதுபோல் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நீக்கி சமூக நீதியினை நிலைநாட்ட முடியும். ஏனென்றால் Oxfam–படி இந்தியத் திருநாட்டில் ஏழையெளிய மக்களின் பொருளாதார சமநிலையை மேம்படுத்துவதற்குப் பதிலாக கடந்த சில ஆண்டுகளாக பெரும் கோடீஸ்வரர்களை உருவாக்கி வருவதாக உள்ளது. இதனால் நாட்டில் 73 சதவிகித செல்வச்செழிப்பு ஒரு சதவிகிதம் மக்கள்தொகை கொண்ட பெரும் கோடீஸ்வரர்கள் கையில் சிக்கித் தவிக்கின்றது. இப்படிப்பட்ட பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தியுள்ளது. தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் கூற்றின்படி நான் என்றால் உதடுகள் ஒட்டாது, நாம் என்றால்தான் உதடுகள் ஒட்டும். நாம் என்பது சமுதாயத்தை உள்ளடக்கியது. கல்வியும் அப்படித்தான். சமூக உணர்வை, சமுதாய நலனை உள்ளடக்கியது. எந்தவொரு அரசாங்கத்தினைப் பார்த்தாலும், கல்வியினை மூன்று விஷயங்களில் அளவீடு செய்யலாம். ஒன்று Availability. இரண்டாவது Affordability இன்னொன்று Quality. Availability–ஐப் பொறுத்தவரையில் பார்த்தீர்கள் என்றால், எனது துவக்க உரையிலேயே கூறினேன்; எங்களது தலைவர் கலைஞர் அவர்களது முயற்சியாலும், கடந்த 50 ஆண்டுகளாக தமிழகத்தை ஆட்சி செய்த பல்வேறு அரசியல் இயக்கங்களின் முயற்சியாலும் இன்று கல்வியானது அனைவருக்கும்

எளிதில் கிடைக்கக்கூடிய இடத்தில்தான் இருக்கின்றது. Availability–ஐப் பொறுத்தவரையில் எந்தவித பிரச்சினையும் இல்லை. Affordability–ஐப் பொறுத்தவரையில் தனியார் கல்வி மையங்கள்மூலம் கிடைக்கக்கூடிய கல்வி இன்றைக்கு ஏழையெளிய மக்களுக்குக் கிடைப்பது எட்டாக்கனியாக உள்ளது. இதைத்தான் மகாகவி பாரதியார் அவர்கள் சொல்லியிருக்கிறார்.

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்,
ஆலயம் பதி னாயிரம் நாட்டல்,
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்,
பெயர்வி ளங்கி ஒளிர நிறுத்தல்,
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்"

என்று மகாகவி பாரதியார் சொல்லியிருக்கிறார். எனவே, Quality–யைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கத்திற்கு மிகப் பெரிய சவாலாகத்தான் அமைந்திருக்கின்றது. ஏனென்றால் ஒரு மாணவன் இரவு பகலாகப் படித்து அவன் கற்கும் கல்வி அவன் தேர்வில் பெறும் வெற்றியைப் பொறுத்தே அமைகிறது. இந்த வெற்றியானது ஒரு மாணவன் பாடத்தை எவ்வாறு உள்வாங்கிப் படித்தான் என்பதைப் பொறுத்தே அமைகிறது.

பிற்பகல் 3–00

கடந்த நூற்றாண்டில் தமிழகத்தில் கல்வி பயின்றோர் பல்வேறு துறைகளில் சாதனையாளர்களாக வலம் வந்துள்ளார்கள். உதாரணமாக, இயற்பியல் படிப்பில் Nobel பரிசு பெற்ற சர். சி.வி. ராமனைச் சொல்லலாம். கணித மேதை ராமானுஜர் ஐயாவைச் சொல்லலாம். நம்முடைய பாரத ரத்னா ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களைச் சொல்லலாம். அவர்கள் எல்லோரும் சாதாரண கல்விதான் படித்து வந்தார்கள். தமிழ் முறை கல்விதான் படித்து வந்தார்கள், அதே நேரத்தில், பெரிய பெரிய மேதைகளாகத் திகழ்ந்திருக்கிறார்கள். ஆனால், இன்றைய நிலைமையில், மாணவர்கள் பாடங்களை ஆழமாகப் புரிந்து, உள் வாங்கிப் படிப்பதற்கு ஏற்ற சூழ்நிலையை இந்த அரசாங்கம் உறுதி செய்திருக்க வேண்டும்.

ஏனென்றால், 2019–ல் 1,38,997 பேர் NEET எழுதினார்கள். அதில் 19,669 பேர் அரசாங்கப் பள்ளியில் படித்த மாணவர்கள். இதில் 48.57 சதவிகித மாணவர்கள் மட்டும்தான் technically qualified. அதனால், இந்தியாவில் தமிழகம் 23–வது இடத்தில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடித்த பிறகு இறுதியாகப் பேசலாம் என்று நான் கருதினேன். அவர் தொடர்ந்து ஒவ்வொரு கோரிக்கையையும் இங்கே குற்றச்சாட்டுகளாக வைக்கின்றபோது அதற்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த ஆட்சியில் மாணவர்களுக்கு மருத்துவக் கல்வி எட்டாக்கனியாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். மனசாட்சியோடு நீங்கள் சொல்ல வேண்டும். மாணவர்களைக் கூடுதலாகச் சேர்ப்பதற்கும், கிராமத்திலிருக்கின்ற மாணவர் ஒருவருக்குகூட கல்வி இல்லை என்ற நிலையைப் போக்குவதற்கும், 14 பொருட்களை வழங்கி வரலாற்றைப் படைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது ஒரு வரலாற்றைப் படைத்திருக்கிற அரசு.

நீங்கள் ஆட்சியில் இருக்கின்றபொழுது மடிக்கணினி வழங்கினீர்களா, சைக்கிள் வழங்கினீர்களா, இதையெல்லாம் இப்போது வழங்கிக் கொண்டிருக்கிறோம்; ஒரு வரலாறு படைக்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. நோட்டுப் புத்தகத்திலிருந்து காலணி வரை அனைத்தும் வழங்கப்படுகின்றன, பாடப் புத்தகங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகின்றன, அதை எடுத்துச் செல்வதற்கு bag வழங்கப்படுகிறது. அதேபோல் geometry box வழங்கப்படுகிறது. ஆக, 14 பொருட்களை வழங்கிக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டில் ஒரு வரலாறு படைக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் இருக்கின்ற மாணவர்களைப் பள்ளிக்கு அழைக்க, மறைந்தும் மறையாமல் நம்முடைய நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மதிய உணவுத் திட்டத்தை 1982–ல் கொண்டு வந்ததன் அடிப்படையில்தான், கிராமங்களில் இருக்கின்ற அனைத்து மாணவர்களும் இன்றைக்குச் சரியான முறையில் தங்கள் கல்வியைக் கற்கின்ற நிலைமை உருவாக்கப்பட்டிருக்கின்றது.

NEET தேர்வைப் பற்றி நீங்கள் சொன்னீர்கள். நீங்கள் ஒருபுறத்தில், NEET தேர்வு வரக் கூடாது என்று பேசுகிறீர்கள்; NEET தேர்வு வந்த பிறகு, 'நீங்கள்தான் கொண்டு வந்தீர்கள்' என்பதுபோன்ற ஒரு மாயையை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். அதற்குப் பயிற்சி

அளித்தாலும், அது சரியில்லை என்று நீங்களேதான் சொல்கிறீர்கள். எங்களைப் பொறுத்தவரையில் அதைப்பற்றி தெளிவாக இன்றைக்கு உங்களிடத்தில் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆண்டுக்கான +2 பாடத் திட்டத்தைப் படித்தாலே NEET தேர்வு மட்டுமல்ல, மத்திய அரசு கொண்டு வந்திருக்கிற எந்தப் பொதுத் தேர்வாக இருந்தாலும் அதைச் சந்திக்கின்ற அளவிற்கு, (மேசையைத் தட்டும் ஒலி) 75 சதவிகித விடைகள் அதில் இருக்கின்றன என்பதை நான் மட்டுமல்ல கல்வியாளர்களே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆண்டுக்காண்டு NEET தேர்வுக்காக முழு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த ஆண்டு 7,500 மாணவர்களை நாங்கள் தேர்வு செய்து கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பொதுத் தேர்வு முடிந்தவுடனே 3,000 மாணவர்களைத் தேர்வு செய்ய இருக்கிறோம். தேர்வு செய்ததற்குப் பிறகு, 35 நாட்கள் தனியார் கல்லூரிகளில் தங்கும் வசதியுடன் உணவும், முழு பயிற்சியும் அவர்களுக்கு வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. நான் இன்றைக்கு இந்த இடத்தில் சொல்கிறேன்; இந்த ஆண்டு நம்முடைய தமிழ்நாட்டு மாணவர்களைப் பொறுத்தவரையிலும் குறைந்தது 100 பேராவது அரசு மருத்துவராக வருகிற வரலாறு தமிழ்நாட்டில் படைக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவில் NEET தேர்விற்குப் பதிவு செய்த ஏறத்தாழ 16,000 மாணவர்கள், தங்களால் தேர்வு எழுத முடியும் என்ற நம்பிக்கை இழந்து தேர்விற்கே செல்ல முடியாத அளவிற்கு மன அழுத்தத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். 2019–ல் அரசுப் பள்ளிகளில் படித்த 19,680 மாணவர்கள் NEET தேர்வு எழுதியிருக்கிறார்கள். அதில் technically qualified 2,757 பேர். இதில் மிகப் பெரிய வேதனை என்னவென்றால், கடந்த ஆண்டு அரசுப் பள்ளியில் படித்த மாணவர்களில் ஒருவர்கூட NEET தேர்வின்மூலம் மருத்துவப் படிப்பில் சேர முடியாத அவல நிலை உள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அரசுப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்கள் பொதுத் தேர்வு எழுதுகிறார்கள். பொதுத் தேர்வு எழுதுகிறபோது தனியார் பள்ளியில் எழுதுகிற மாணவர்களுக்கும், அரசுப் பள்ளியில் படித்து எழுதுகிற மாணவர்களுக்கும் வேறுபாடுகள் உள்ளன. அந்த மாணவர் மருத்துவப் படிப்பு மட்டும் படிக்க வேண்டுமென்று அவர்களது பெற்றோர்கள் விரும்புகிறார்கள். அவர் ஒரு ஆண்டில் தேர்வில் வெற்றி பெறவில்லை என்றாலும், 2–வது முறையும் படிப்பதற்காக 2 இலட்சம் ரூபாய், 3 இலட்சம் ரூபாய் கட்டணத்தை வழங்கி பயிற்சி பெறச் செய்கிறார்கள். இதைப் பொதுத் தேர்வு என்ற முறையில் நீங்கள் பார்த்திருக்கக்கூடும். இன்று இருக்கின்ற நிலைகள் வேறு. ஆகவே, தனியார் பள்ளியில் படிக்கின்றவர்கள் முழுமையாக மருத்துவக் கல்லூரிக்குச் செல்லக்கூடிய நிலை இருக்கிறது. நம்முடைய மத்திய அரசு கொண்டு வந்திருக்கின்ற திட்டத்தின் அடிப்படையில் நாம் எவ்வளவு மதிப்பெண் பெற்றாலும் அந்த மதிப்பெண் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. ஆகவே, மருத்துவக் கல்லூரியில் சேர வேண்டுமென்றால் அவர்கள் பயிற்சி பெற்று, NEET தேர்வில் மதிப்பெண் பெற்றால் மட்டும்தான் வாய்ப்பளிக்கப்படுகிறது. ஆகவே, தனியார் பள்ளிகளில் இருக்கின்ற நிலை வேறு; நம்முடைய அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற குழந்தைகளின் நிலை வேறு. மருத்துவக் கல்லூரியில் படிக்க இடம் கிடைக்கவில்லை என்றால், பொறியியல் கல்லூரிகளுக்கோ, மற்ற துறைகளுக்கான கல்லூரிகளுக்கோ செல்ல வேண்டுமென்ற நோக்கத்தோடு, அந்த மாணவர்கள் பொதுத் தேர்வுக்காக தங்களைத் தயார் செய்து கொண்டிருக்கும்போது, இடையில் இருக்கின்ற நாட்களில் மட்டும்தான் NEET தேர்வுக்காக எங்களால் பயிற்சி அளிக்க முடியும்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

பிற்பகல் 3–05

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: கடந்த 2017 ஆம் ஆண்டு I.I.T. எனும் பெருமைவாய்ந்த பொறியியல் கல்லூரியில் தமிழகத்திலிருந்து வெறும் 253 மாணவர்கள் மட்டுமே தேர்வாகியிருக்கிறார்கள். இவர்களில் 20 மாணவர்கள் மட்டுமே அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்கள். நம் அண்டை மாநிலமான தெலுங்கானாவில் அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்களில் 161 பேர் தேர்வாகியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவது நன்றாகத்தான் இருக்கிறது. ஆந்திர மாநிலத்தில் எதிர்க்கட்சிகள் அதற்காகப் போராடுவதும் இல்லை; அதற்காகக் கோரிக்கை வைப்பதும் இல்லை; சட்டமன்றத்தில் குரல் எழுப்புவதும் இல்லை. ஆனால், நீங்கள் சட்டமன்றத்தில் ஒருபுறம் குரல் எழுப்பிக்கொண்டிருக்கின்றீர்கள்; மறுபுறத்தில் NEET தேர்வில் தேர்வு செய்யப்படவில்லை என்றும் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். இதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: இதில் முக்கியமான விஷயம் என்னவென்று பார்த்தால், கடந்த 9 ஆண்டுகளாக மாணவர்களின் கல்வித் தரத்தை உறுதிசெய்வதில் இந்த அரசாங்கம் கவனம் செலுத்தத் தவறிவிட்டது. அப்படித்தான் நான் சொல்வேன். பட்ஜெட்டைப் பொறுத்தமட்டில், அரசாங்கம் மற்ற துறைகளைப்போல் நிதி ஒதுக்கிவிட்டால் மட்டுமே கல்வியின் தரத்தை மேம்படுத்த முடியாது. இதில் பார்த்தீர்களென்றால். . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்வதைத் தவிர வேறு வழியே இல்லை. கல்வியின் தரத்தை உயர்த்த கடந்த 9 ஆண்டுகளாக கவனம் செலுத்தவில்லை என்று குற்றச்சாட்டு சொல்வது சரியல்ல. நீங்கள் ஆட்சியில் இருந்தபோது இருந்த நிலை வேறு; சமச்சீர் கல்வி என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து, 12 ஆண்டுக் காலம் ஒரே பாடத் திட்டத்தில் மாணவர்கள் படித்து, எதிர்காலமே இல்லாத நிலை அவர்களுக்கு உருவாக்கப்பட்டது. ஆனால், தற்பொழுது நிலைமை மாறிக்கொண்டிருக்கிறது. இன்றைக்கு புதிய syllabus கொண்டுவந்ததன் அடிப்படையில், இன்றைக்குப் படிக்கின்ற

மாணவர்களுக்கும், மற்ற மாணவர்களுக்கும் உள்ள வேறுபாடு உங்களுக்குத் தெரியும். ஏனென்று சொன்னால், இந்த அரசு புதிதாகப்பொறுப்பேற்றதற்குப்பிறகுதான் உயர்கல்விக்குச்செல்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 49 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது என்ற வரலாறு இன்றைக்கு படைக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் கல்வியின் தரம் உயர்ந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார். திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன், பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது, எங்கள் ஆட்சிக் காலத்தில் 12 வருடங்களாக சமச்சீர் கல்வித் திட்டத்தை வைத்ததால்தான் இப்படியாகிவிட்டது என்று சொன்னார்கள். சமச்சீர் கல்வித் திட்டத்தை எங்களுடைய ஆட்சிக் காலத்தில் introduce செய்தோம். உங்கள் ஆட்சி வந்த பிறகு, அம்மையார் அவர்கள் சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்தக்கூடிய காலம் வந்தபோது அதை நடைமுறைப்படுத்த மாட்டேன் என்று இந்தச் சட்டமன்றத்தில் சட்டம் கொண்டு வந்தார்கள். சமச்சீர் கல்வி சிறந்தது என்றும், அந்தத் திட்டத்தில் எந்தவிதமான பின்னோக்குப் பார்வையும் இல்லை என்றும், மிகச் சிறந்த திட்டம் என்றும், இங்கிருக்கக்கூடிய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் certificate மூலமாகவோ அல்லது வேறு யாருடைய certificate மூலமாகவோ அல்ல; உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) இதே சட்டமன்றத்தில், மறைந்த முதலமைச்சர் அவர்கள் இந்த இடத்தில் நின்று கொண்டுதான், தமிழக அரசு சமச்சீர் கல்வியை ஏற்றுக்கொள்கிறது என்று அறிவித்தார்கள். அதற்குப் பிறகு நீங்கள்தான் ஆட்சியில் தொடர்ந்து இருக்கிறீர்கள். நான் கேட்க விரும்புவது, சமச்சீர் கல்வியில் என்ன தவறு இருந்தது ? சமச்சீர் கல்விப் பாடப் புத்தகங்கள் வந்ததால்தான் தமிழ்நாட்டிலிருந்து எண்ணற்ற மாணவர்கள் மருத்துவக் கல்விக்கே வர முடிந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) எண்ணற்ற மாணவர்கள் பொறியியல் கல்விக்கே வர முடிந்தது. இப்போது பாடத்திட்டத்தை மாற்றிவிட்டோம்; syllabus–ஐ

மாற்றிவிட்டோம்; எல்லாவற்றையும் மாற்றிவிட்டோம் என்று நீங்கள் சொல்கிறீர்களே! இப்பொழுது பேசிய எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் கேட்டார்களே! அரசுப் பள்ளியில் படிக்கின்ற ஒரே ஒரு மாணவன்கூட அரசு மருத்துவக் கல்லூரிக்குத் தேர்வாகவில்லை என்று நாங்கள் அதை மாற்றிவிட்டோம், இதை மாற்றி விட்டோம், syllabus-ஐ மாற்றி விட்டோம் என்று திரும்பத் திரும்பச் சொல்கிறீர்களே! இந்தியாவே தமிழ்நாட்டைத் திரும்பிப் பார்க்கிறது என்று சொல்கிறீர்களே! இந்தியா உங்களைத் திரும்பிப் பார்க்கிறது. எதற்காகப் பார்க்கிறது என்று சொன்னால், இத்தனை வருடங்களாக தமிழ்நாட்டிலிருந்து இத்தனை பேர் மருத்துவக் கல்லூரியில் படிக்கச் சென்றார்கள். இத்தனை வருடங்களாக தமிழ்நாட்டிலிருந்து இத்தனை பேர் பொறியியல் கல்லூரியில் படிக்கச் சென்றார்கள். தமிழ்நாட்டிலிருந்து இத்தனை விஞ்ஞானிகள் வந்தார்கள், அமெரிக்காவிற்கு இத்தனை பேர் சென்றிருக்கிறார்கள் என்பதற்காகப் பார்த்தது. இதெல்லாம் அமெரிக்காவில் இருக்கின்ற தகவல் தொழில்நுட்பமே நம் கையில் வரக்கூடிய அளவிற்கு சமச்சீர் கல்வி வந்ததற்குப் பிறகு நடந்தது. ஆனால், இப்போது ஒரு ஆள்கூட இங்கிருந்து மருத்துவக் கல்லூரிக்குப் போக முடியாத அளவிற்கு இருக்கிறது என்று இந்தியா உங்களைத் திரும்பிப் பார்க்கிறது என்பதை நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். மருத்துவக் கல்லூரியைப் பற்றி மட்டும் நீங்கள் பேசினீர்கள். மருத்துவக் கல்லூரிக்கு அவர்கள் தேர்வாகாததற்கு என்ன காரணம்? கிராமங்களில் இருக்கின்ற மாணவர்கள்தான் அரசுப் பள்ளிகளில் படிக்கின்றார்கள். இதை நீங்கள் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். தனியார் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கும், அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கும் உள்ள வேறுபாடுகளை உண்மையிலே மனசாட்சியோடு நீங்கள் சொல்லுங்கள். தனியார் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு NEET தேர்வுக்காகவே தனியாக பயிற்சி அளிக்கப்படுகிறது. அதை இல்லை என்று நீங்கள் மறுக்க முடியாது. அவர்கள் NEET தேர்வில்

தேர்ச்சி பெற்று மருத்துவக் கல்லூரிக்குச் செல்லலாம். நம்முடைய அரசுப் பள்ளி மாணவர்களின் நிலை அப்படி இல்லை. அரசுப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்கள் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை என்று சொன்னால், பொறியியல் கல்லூரிக்கோ, மற்ற கல்லூரிகளுக்கோ செல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் பொதுத் தேர்வை அவர்கள் எழுதுகிறார்கள். அதிலே இருக்கின்ற 2 வேறுபாடுகளை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஆகவே, NEET தேர்வைப் பொறுத்தவரையில், நாம் படிப்படியாகத்தான் கொண்டுவர முடியுமே தவிர வேறு ஒன்றும் இல்லையென்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பாட மாற்றத்தை சென்ற ஆண்டு கொண்டு வந்தோம். இந்த ஆண்டுதான் முழுமையாக முடிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசினுடைய கொள்கை 3 ஆண்டுகாலக் கொள்கை. முதலில், 4 பாடத் திட்டங்கள் என்று 4 வகுப்புகளுக்கு மாற்றிக் கொண்டிருந்தோம். ஆனால், இந்த ஆண்டு 8 பாடத் திட்டங்களாக மாற்றி அது அமல்படுத்தப்பட்டிருக்கிறது. இதில் ஒரு வரலாறு படைக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் நான் சொல்கிறேன். நீங்கள் மனசாட்சியோடு கல்வியாளரையும் கேளுங்கள்; தொலைக்காட்சி, பத்திரிகை நண்பர்கள், மற்ற எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள்கூட கல்வித் துறையைப்பற்றி விமர்சனம் செய்வதில்லை என்பதை நீங்கள் மனசாட்சியுடன் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நான் கருதுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 3–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 9 வருடங்களாக நீங்கள்தான் ஆட்சியில் இருக்கிறீர்கள். கல்வியின் தரத்தினை உயர்த்துகிறேன் என்று மாணவர்களின் கற்றல் திறனைவிட மிகுதியாகவும், ஆசிரியர்களின் கற்பித்தல் திறனைவிட மிகுதியாகவும் தற்போதைய பாடத் திட்டங்கள் அமைந்திருக்கின்றன. அதிலே, இங்கே ஒருசில datas–ஐ சொல்வது எனது கடமையென்று நினைக்கிறேன். இப்போது +2 Maths–ஐப் பார்த்தீர்களென்றால், 2 Volumes ஆக book-ஐ கொடுத்திருக்கிறீர்கள்.

(மாண்புமிகு உறுப்பினர் அவையில் ஒரு புத்தகத்தை உயர்த்திக் காண்பித்தார்.)

இந்த 2 Volumes of book–ஐ ஒரு Teacher–ஆல் சத்தியமாக cover செய்யவே முடியாது. எப்படி cover செய்ய முடியும்? ஒரு வருடத்திற்கு எத்தனை periods இருக்கின்றன? Maths Volume–I–க்கு ஒரு வருடத்திற்கு 147 periods தேவை. Volume–II–க்கு 152 periods தேவை. இதிலே, shortage பார்த்தீர்களென்றால், Volume–I–க்கு 31 நாள் shortage வருகிறது. Volume–II–க்கு 36 நாள் shortage வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) அதற்குப் பதில் சொல்லிவிட்டால் better. (குறுக்கீடு) இல்லை. இல்லை. அது continuation ஆகும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப் போல, அனைவரும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் அதில் பக்கங்கள் கூடுதலாக இருக்கின்றன. பாடத் திட்டம் மாற்றம் என்பது சிறந்த கல்வியாளர்கள் குழுவை அமைத்து மேற்கொள்ளப்பட்டது. அடுத்த ஆண்டு வருகிறபோது இது சரியான முறையிலே, குறிப்பிட்ட நாட்களுக்குள்ளே ஆசிரியர்களுக்கும் அந்தப் பயிற்சியை அளிக்க முடியும். ஏனென்று சொன்னால், அதற்கான தேவைகளை நாங்கள் பூர்த்தி செய்துகொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல, இங்கே இருக்கின்ற ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குக் கொடுப்பதைப்போல, மடிக்கணினி வழங்க வேண்டும். அப்படி வழங்குகிறபோதுதான் நீங்கள் சொல்வதைப்போல இருக்கின்ற சில குறைபாடுகளையும் களைவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். குறைபாடுகளைச் சொல்லிக் கொண்டிருப்பது வேறு, ஆனால் குறைகளை நிவர்த்தி செய்வது என்பது வேறு. நாங்கள் புதிதாகப் பாடங்களைக் கொண்டு வந்தாலும், குறைகளை நிவர்த்தி செய்வதற்காக இந்த அரசு முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறதே தவிர, நீங்கள் சொல்வதைப்போல் அல்ல.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரியான குறைபாடுகள் இருக்கின்றன என்று அமைச்சர் சொன்னார். என்னுடைய கேள்வி என்னவென்றால், இந்த வருடம் இந்தக் கல்வியாண்டில் படிக்கிற மாணவர்களுக்கு, அவர்களுடைய எதிர்காலத்திற்கு யார் பொறுப்பு? அரசு பொறுப்பேற்றுக்கொள்ளுமா? (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். போன ஆண்டு +1 தேர்வு இந்தப் பாடத் திட்டத்திலேதான் கொண்டு வரப்பட்டது. அப்படிக் கொண்டுவருகிறபோது, 95 சதவிகித மாணவர்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்பதை முதலில் மறந்துவிடக் கூடாது. ஏனென்று சொன்னால், 95 சதவிகித மாணவர்கள் அங்கே தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரம் என்னிடத்திலே இருக்கிறது. ஆகவே, நீங்கள் அதைப்பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. இந்த மாணவர்களுக்கு இந்த அரசு என்ன செய்யப் போகிறது என்ற கவலை உங்களுக்குத் தேவையில்லை. (குறுக்கீடு) மன்னிக்க வேண்டும். அதை மாற்றிக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், அந்த வருத்தங்கள் குறித்து இங்கே குரல் கொடுக்கத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செங்கோட்டையன் அவர்கள் மூத்த அமைச்சர். நீண்ட நெடுங்காலம் அமைச்சராக இருந்தவர். பொறுமையின் சிகரம். யாரிடத்திலும் அதிர்ந்து பேசாதவர். யாரையும் பகைக்கத் தெரியாது. காரணம், அவரை நான் 1977–லிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், பேசுகிற உறுப்பினர் ஒரு புதிய சட்டமன்ற உறுப்பினர், இப்போதுதான் வந்தவர். அவருக்கு தங்களின் நிலைமை தெரியும். இப்போது அல்ல, அந்தக் காலத்தில் எல்லாம் நாங்கள் என்ன பேசினாலும் பேச விட்டுவிட்டு, பதில் சொல்கிறபோதுதான் சொல்வார்கள். இப்படி

ஒவ்வொரு வரிக்கும் பதில் சொல்வதில்லை. ஆகவே, மாண்புமிகு திரு. செங்கோட்டையன் அவர்கள் கொஞ்சம் allow செய்துவிட்டு, பெருந்தன்மையோடு இருந்து, பிறகு நீங்கள் பதில் சொல்லலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போது நீங்கள் சொன்னீர்கள்; குறைகளை ஒத்துக்கொண்டார் என்று சொன்னீர்கள். கல்வியாளர்களை வைத்து இந்தப் பாடத் திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. சாதாரணமாக அரசு உருவாக்கவில்லை. கல்வியில் சிறந்த கல்வியாளர்கள் மூலமாக குழு அமைக்கப்பட்டுத்தான் இந்தப் பாடத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, இதிலே சில குறைபாடுகள் இருந்தால், அந்தக் குறைபாடுகளைச் சரி செய்துகொள்ளலாம் என்ற அடிப்படையில்தான் மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பிற்பகல் 3–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.*

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கல்வியாளர்களை வைத்துதான் பாடத் திட்டத்தினை உருவாக்கினார்கள் என்று சொன்னார்கள். என்னுடைய கருத்து என்னவென்றால், சாதாரண* Maruti car *ஓட்டுபவரிடம்* Formula 1 race car*–ஐக் கொடுத்து* road*–ல் ஓட்டச் சொன்னால் கண்டிப்பாக* accident *தான் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதலால், அதற்கு ஆசிரியர்களுக்கு முதலிலே முறையான பயிற்சியைக் கொடுத்துவிட்டு, அதற்குப் பிறகு, இந்தக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்திருந்தால், சாலச் சிறந்ததாக இருந்திருக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய சூழ்நிலைக்கு என்ன கல்வி தேவை? இன்றைய சூழ்நிலைக்குத் தகுந்த கல்வியை மாணவர்களுக்குக் கொடுத்தால்தான், உலகத்தரக் கல்வி நம்முடைய மாணவர்களுக்குக் கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில்தான் கல்வியாளர்கள் குழு அமைக்கப்பட்டு, அதன் மூலமாகப் பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டு, நம்முடைய மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு வெளிநாட்டில் படித்தார்கள், அங்கே படித்தார்கள், இங்கே படித்தார்கள் என்று நீங்கள் சொன்னீர்கள். அங்கேயெல்லாம் எப்படிப் போக முடியும்? தரமான கல்வி இருந்தால்தான் வெளிநாட்டிற்குப் போக முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி தரமான கல்வி கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் கல்வியாளர்கள் குழு அமைக்கப்பட்டு, அவர்களுடைய அறிவுபூர்வமான திறன்களையெல்லாம் அதிலே ஒருங்கிணைத்து, பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டு, அவை அந்த syllabus–ல் இடம்பெற்றிருக்கின்றன. இந்தத் திட்டம் சிறந்த திட்டம். நீங்கள் சொன்னதுபோன்று, இன்றைக்குக் குறைபாடுகள் இருந்தாலும்கூட, அதைக் களைவதற்கும் அந்தக் கல்வியாளர்கள் குழுமத்திலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன், பேசுங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை. (குறுக்கீடு) திரு. தங்கம் தென்னரசு, உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை. (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) மணி என்னவென்று பாருங்கள். Point of Order கொடுத்துக் கொண்டே இருந்தால், நான் அவை அலுவல்களை எப்படி முடிப்பது? (குறுக்கீடு) அனுமதிக்க முடியாது. திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன், பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. தங்கம் தென்னரசு, தவறாகப் பேசமாட்டார் என்று எனக்கும் தெரியும். ஆனால், நேரமில்லை. (குறுக்கீடு) அனுமதியில்லை, விவாதம் செய்வதற்கு இப்போது நேரமில்லை. திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன், பேசி முடியுங்கள்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். நான் public–ல் செல்வதைவிட, பள்ளி மாணவர்களின் கல்வியின்மீது எனக்கு ஈடுபாடு அதிகம். ஏனென்றால், நான்

+2 வகுப்பு வரை தனியார் பள்ளியில் படித்தாலும், tuition அரசுப் பள்ளி ஆசிரியர்களிடம்தான் படித்தேன். தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளி ஆசிரியர்களைப்போன்று கல்வியில் தரம் வாய்ந்த ஆசிரியர்கள் வேறு எங்கேயும் கிடையாது. ஏனென்றால், அந்தளவிற்கு qualified teachers இங்கு இருக்கிறார்கள். இருந்தாலும், அவர்களுக்கும் இந்த subject, மன அழுத்தமாக இருக்கிறது; அவர்களுக்கே ஒரு சில subjects புரியவில்லை, ஒரு சில portions புரியவில்லை. அதனால்தான் சொன்னேன், நீங்கள் முதலிலே அவர்களுக்கு training class எடுத்துவிட்டு, எதிர்க்கட்சியிலுள்ள ஒருசில உறுப்பினர்களைகுழு உறுப்பினர்களாகப் போட்டு, இதை எப்படிச் செய்யலாம் என்று கலந்தாலோசித்து முடிவு செய்திருந்தால், இது இன்னமும் சிறப்பாக வந்திருக்கும் என்றுதான் சொல்கிறேன். நம்முடைய மாணவர்களின் நலன் கருதித்தான் நான் சொல்கிறேன். ஒரு தலைமுறையை பாதிக்கக்கூடிய விஷயம். ஒரு மாணவன் 3 ஆம் வகுப்பு படிக்கின்றபோது, 2011 ஆம் ஆண்டில் நாங்கள் எங்கள் ஆட்சியை விட்டோம். இன்றைக்கு 12-வது வகுப்பு படிக்கும் அந்த மாணவன், 8 வருடங்களாக உங்களுடைய கையில்தான் இருக்கின்றான். அவனுடைய கல்வித் தரத்தை நிர்ணயிக்க வேண்டியது இந்த அரசாங்கத்தினுடைய கடமை. எதிர்க்கட்சியினராகிய நாங்கள் கேள்வியைத்தான் கேட்க முடியும். அந்தத் தரத்தை நீங்கள்தான் நிர்ணயித்துக் கொடுக்க வேண்டும். நான் சாதாரணமாக, general ஆகப் பேசுவேன். நான் சென்று Smart Class-ல் class-ஏ எடுப்பேன். ஏனென்று சொன்னால், நான் எல்லா பள்ளிகளுக்கும் சென்றபோது, ஒரு 12-வது வகுப்பு மாணவனிடம், ஒரு பொருளினுடைய Mass என்ன, Volume என்ன, Density என்ன என்று கேட்டால் அவனுக்குத் தெரியவில்லை, யாருக்குமே தெரியவில்லை. யாரோ ஒரு குழந்தைதான் எழுந்து, பதில் சொல்கிறது. அதைப்போன்று, Physics-ல் basic concepts, Speed என்றால் என்ன, Velocity என்றால் என்ன, Acceleration என்றால் என்ன என்று கேட்டால், அவர்களுக்குத் தெரியவில்லை, அவர்கள்மீது எந்தக் குறை சொல்லியும் பயனில்லை. 12 ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவனுக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க.பொன்முடி அவர்கள் பேசுகின்றபோது, Exam-ஏ வைக்கக் கூடாது

என்று சொன்னார்கள். எப்படி அந்த மாணவனுடைய தரத்தினைக் கண்டுபிடிக்க முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) சொல்லுங்கள் பார்க்கலாம். இன்றைக்கு 12 ஆம் வகுப்பு மாணவர்களிடத்தில் தரம் இல்லை என்று சொல்கிறீர்கள். இப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் முயற்சி செய்தோம். அந்த முயற்சியிலும் சில தடைகள் வந்த காரணத்தினால்தான் அதுவும் நீக்கப்பட்டுவிட்டது. ஆகவே, நீங்கள் சொல்வதையெல்லாம் நாங்கள் செய்யலாம் என்றுதான் ஆசை. அதற்கு ஒத்துழைப்புக் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.*

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: நான் சொல்வது, நீங்கள் exam வைத்திருந்தால்கூட, ஒருசில மாணவர்கள் fail ஆகியிருக்கலாம். நிறைய பேர் pass செய்திருப்பார்கள். 100 பேர் இருக்கிறார்கள் என்றால், 100 பேரில் 99 பேருக்குத் தெரியவில்லை. அதை அவர்களால் விளக்கக்கூட முடியவில்லை. ஏனென்றால், அடிப்படை concept இல்லாமல். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு செய்தியைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். அவர் தொகுதியில் சென்று பள்ளியைப் பார்த்ததாகவும், பள்ளியில் படிக்கின்ற மாணவர்களின் கல்வித் தரத்தில் குறைபாடுகள் இருப்பதாகவும் சொல்கிறார்கள். இதுபோன்ற குறைபாடுகளை தமிழ்நாடு முழுவதும் யாருமே எங்களிடத்தில் சொல்லவில்லை. பேசுகிற நேரத்தில் ஏதாவது குறைகளைச் சொல்ல வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் நீங்கள் மட்டும் இங்கே சொல்கிறீர்களே தவிர, வேறொன்றுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 3—20

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முன்னாள் முதலமைச்சர், நம்முடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் ஒரு மேம்பட்ட கல்வியை குழந்தைகளுக்குத் தர வேண்டும் என்பதற்காகவே, ஆசிரியர்கள் மிகச் சிறப்பானவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காகவே ஆசிரியர் தகுதித் தேர்வு என்கிற ஒரு அற்புதமான புதிய முறையை தமிழகத்திலே அறிமுகப்படுத்தி, கல்வியில் அவர்கள் மிகச் சிறந்தவர்களாக இருக்க வேண்டும் என்கிற எண்ணத்தோடு ஆசிரியர் தகுதித் தேர்வை அறிமுகம் செய்து, அதன்மூலமாக ஆசிரியர்களைத் தேர்வு செய்து, இன்றைக்கு மிகச் சிறந்த ஆசிரியர்களை மாண்புமிகு அம்மாவின் அரசு தமிழகம் முழுவதும் பணிக்கு அமர்த்தியிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத்தெரிவித்துக்கொள்கிறேன்.அதேநேரத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசில் மேம்படுத்தப்பட்ட கல்வியை சிறப்பாகக் கொடுத்ததாக இங்கே சொன்னார்கள். நான் அவர்களுக்காக ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் அன்றைக்கு ஆசிரியர்களைத் தேர்வு செய்யும்போது எந்த முறையைப் பின்பற்றினீர்கள் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வேலைவாய்ப்பு அலுவலகத்தின் பதிவின் மூப்பின் அடிப்படையில் எவர் வரிசையிலே வந்தாரோ அவரையெல்லாம் கண்ணை மூடிக்கொண்டு பணியிலே அமர்த்திய அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு ஆசிரியர் தகுதித் தேர்வின் அடிப்படையில் number one teachers என்கிற அளவில் சிறப்பான ஆசிரியர்களைக் கொண்டு அருமையாக இன்றைக்கு பாடத் திட்டங்களை அமல்படுத்துகிறது. தனியார் பள்ளிகளைவிட இன்றைக்கு அரசுப் பள்ளிகளில் அற்புதமான பாடத் திட்டம் வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணத்திற்கு என்னுடைய தொகுதியில் தோப்புத்துறை என்கிற ஒரு மேல்நிலைப் பள்ளியில் 2,000 மாணவர்கள் படிக்கிறார்கள். ஆயக்காரன்புலம் என்கிற அரசு மேல்நிலைப் பள்ளியில் 3,000 மாணவர்கள் படிக்கிறார்கள். தகட்டூர் என்கிற அரசுப் பள்ளியில் 2,500 மாணவர்கள் படிக்கிறார்கள். ஆக, அரசுப் பள்ளிகளில் நீங்கள் சொல்வதுபோல அல்லாமல் மிகச் சிறந்த முறையில் இப்போது கல்வி போதிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நல்ல விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள், ஏற்றுக்கொள்கிறோம். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், அந்த இலாகாவைப் பார்க்கிறவர், அந்த இலாகாவில் எல்லாம் தெரிந்தவர். அவர் சொல்கிறார், ஏற்றுக்கொள்கிறோம். உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் அந்த இலாகாவையே பார்க்கிறவர், அவர் சொல்வதையும் ஏற்றுக்கொள்கிறோம். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியைப் பொறுத்தவரையில் அரசியலே கிடையாது. எந்தத் தரப்பிலிருந்து நல்ல ஆலோசனைகள் வந்தாலும் அதை அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, மாணவர்களின் நலன் காக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் அந்தப் பக்கம், இந்தப் பக்கம் என்பது கிடையாது. கல்வி என்பது ஒரு மனிதனுக்கு உயிர் போன்றது. ஆகவே, எந்த இடத்திலிருந்து நல்ல ஆலோசனைகள், கருத்துகள் வந்தாலும் எங்களுடைய அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 9 ஆண்டுகளாக கல்வியின் தரம் ஏன் குறைந்தது என்பதற்கு என்னுடைய கருத்துகளைச் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதால் நான் ஆலோசனைகளைச் சொல்கிறேன். கேட்காத கடனும் வராது, பார்க்காத பயிரும் வளராது,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியின் தரம் குறைந்துபோனது என்று சொல்கிறார்கள். கல்வியின் தரம் எங்கேயும் குறையவில்லை. கல்வியின் தரம் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் கல்வியின் தரத்தை சிறப்பாகக் கொண்டு வருவதற்கு நீங்கள் விடமாட்டேன் என்கிறீர்கள். அதுதான், வேறொன்றும் இல்லை. இன்னும் கூடுதலாக, மாணவர்களின் திறனை உயர்த்துவதற்கு அரசு பல்வேறு முயற்சிகளை எடுக்கிறது. அதற்குத்தான் ஒத்துழைப்புக் கொடுங்கள் என்று சொல்கிறோம். நீங்கள் கல்வியின் தரம் குறைந்துவிட்டது என்று சொல்கிறீர்கள். நீங்களே பள்ளியில் போய்க் கேட்டேன் என்று சொல்கிறீர்கள். 'இந்தமாதிரி எல்லாம் இருக்கின்றது' என்று நீங்களே சொல்கிறீர்கள். அதற்குண்டான முயற்சியை நாங்கள் எடுத்தால் அதற்கு ஒத்துழைப்புக் கொடுங்கள் என்று சொல்கிறோம், வேறு ஒன்றும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 9 வருடங்களாக அரசுப் பள்ளிகளில் செய்யப்பட வேண்டிய ஆய்வுகள் வரைமுறைப்படி நடைபெற்றதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். ஒரு DEO ஒரு நாளைக்கு 5 பள்ளிகளையாவது visit செய்ய வேண்டும். இரண்டு பள்ளிகளையாவது inspect செய்ய வேண்டும். அப்படியென்றால்தான் entire system-மும் correct ஆக இருக்கும். அவர்கள் எல்லா பள்ளிகளையும் ஆய்வு செய்தார்களா, visit செய்தார்களா என்று பார்த்தால்தான் systematic Government நடத்த முடியும். மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் புரிதல் இருக்கின்றதா, ஆய்வு செய்தார்களா என்பது billion dollar கேள்வியாகத்தான் இருக்கின்றது. சொன்னால், குறை சொல்வதாகச் சொல்வீர்கள். அடுத்ததாகப் பார்த்தால், ஆசிரியர்கள் பற்றாக்குறை இன்னொரு காரணம். நான் பார்த்ததைத்தான் சொல்ல முடியும். ஒருசில பள்ளிகளில் Physics class-ஐ Chemistry teacher எடுக்கின்றார். Maths class-ஐ Biology teacher எடுக்கின்றார். Biology class-ஐ Chemistry teacher எடுக்கின்றார். இந்தமாதிரி சூழ்நிலை இருக்கின்றது.

பிற்பகல் 3–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு) இல்லை, இல்லை, நான் சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது குற்றச்சாட்டை சொல்ல வேண்டுமென்பதற்காக, தொடர்ந்து குற்றச்சாட்டைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். உண்மையாக எந்தப் பள்ளியில் அதுபோன்று நடைபெற்றது என்பதை நீங்கள் எழுத்துபூர்வமாக எங்களிடத்தில் தந்தீர்களேயானால், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளை உடனடியாக அங்கு ஆய்வுக்கு அனுப்பி, ஆய்வு செய்து, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பொத்தாம்பொதுவாக எதையும் சொல்லிக்கொண்டே இருக்காதீர்கள். தயவுகூர்ந்து, உங்களிடம் கேட்டுக்கொள்வது என்னவெனில், புதிதாக வந்த ஒரு சட்டமன்ற உறுப்பினர் நீங்கள்; நான் சென்றேன், அங்கே பார்த்தேன் என்று சொன்னால் எப்படி? உங்களை ஆதரித்துக் கொண்டிருக்கிற ஆசிரியர் சொல்வதை சரி என்று கருதி, எங்களைக் குற்றம் சாட்டுவது எப்படி சரியாக இருக்கும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் நியமனத்தைப் பொறுத்தவரையில், கடந்த இரண்டு வருடங்களாகத்தான் நிறைய ஆசிரியர்களை நியமனம் செய்திருக்கிறார்கள். நான் 3 வருடங்களுக்கு முன்பிருந்த நிலையைக் கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணன் அவர்கள் சொன்னதற்காக எழுந்திருக்கக் கூடாது என்று நான் நினைத்தேன். நீங்கள் சொல்வதைத்தான் தொடர்ந்து சொல்லிக்கொண்டேயிருக்கிறீர்கள். ஒரு இடத்திலிருந்து நீங்கள் நகரவில்லை. ஒரே படியிலே ஓடிக்கொண்டேயிருக்கிறீர்கள்.

மாடி ஏற வேண்டுமென்று நாங்கள் விரும்பினால், நீங்கள் அந்தப் படியிலேயே குதித்துக் கொண்டிருக்கிறீர்களே தவிர, அந்தப் படியை விட்டு மேலே வரவில்லை. இதையே தொடர்ந்து சொல்லிக் கொண்டிருப்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது. எந்த இடத்தில் அப்படியிருக்கிறது என்ற விவரத்தை நீங்கள் எங்களிடத்தில் தாருங்கள். உங்கள் ஆட்சிக் காலத்தில் வேண்டுமானால் அப்படியிருந்திருக்கலாமே தவிர, நாங்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, அதுபோன்ற நிலைமை தமிழ்நாட்டில் இல்லை. இப்போது, ஆசிரியர்களை நாங்கள் தேர்வு செய்து கொண்டிருக்கிறோம். அவ்வாறு தேர்வு செய்துகொண்டிருக்கும்போது, உடனடியாக ஆசிரியர்களை நியமிக்கின்றபோது, அந்த ஆசிரியர்களுக்காக சிலர் வழக்கு மன்றத்திற்குச் சென்றதன் காரணமாகத்தான், சிறிது காலதாமதம் ஏற்பட்டிருக்கிறதே தவிர, வேறொன்றும் இல்லை.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அதற்காகவே ஓர் ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள். எங்கெங்கு ஆசிரியர்கள் இல்லையோ, அங்கே ஆசிரியர்களை நியமனம் செய்துகொள்ளலாம் என்றும், அங்கேயிருக்கின்ற பெற்றோர்–ஆசிரியர் சங்கத்தின் சார்பாக பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்தால் ஒரு மாதத்திற்கு 10,000 ரூபாயை வழங்கலாம் என்றும், இளநிலை ஆசிரியர் இல்லையென்றால், 7,500/– ரூபாயில் அவர்களை அங்கு நியமித்துக்கொள்ளலாம் என்றும் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். ஆகவே, தமிழ்நாட்டில் ஆசிரியர் பற்றாக்குறை என்பதே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரப்பன் அவர்கள் பேசும்போது, ஆசிரியர்கள் சப்ஜெக்ட் விட்டு சப்ஜெக்ட் teach செய்கிறார்கள் என்ற ஒரு கருத்தை இங்கே பதிய வைத்தார். அது தவறான கருத்து. தி.மு.க. ஆட்சியில்தான் அவ்வாறு இருந்தது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பையேற்றதற்குப் பிறகு, பணி நிரவல் என்ற ஒரு முறையைக் கடைப்பிடித்து, பௌதீகத்திற்கு அந்தப் பள்ளி அனுமதி பெற்றிருந்தால், பௌதீக ஆசிரியர்தான் போவார், இரசாயனத்திற்கு அந்தப் பள்ளி அனுமதி பெற்றிருந்தால், இரசாயன ஆசிரியர்தான் போகக்கூடிய ஒரு முறையை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம்

ஆண்டு கொண்டு வந்தார்கள். அதன் அடிப்படையில், எந்தப் பள்ளி எந்தப் பாடப் பிரிவிற்கு அனுமதி பெற்றிருக்கிறதோ, அந்தப் பள்ளிக்கு அந்தப் பாடப் பிரிவில் தேர்வு பெற்ற ஆசிரியர்தான் பணி நியமனம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) Vacancy பற்றி சொல்லவில்லை. அவர் சொன்னது, பௌதீகம் படித்த ஆசிரியரை இரசாயனம் எடுக்கச் சொல்கிறார்கள், இரசாயன பாடம் படித்தவரை பௌதீகம் எடுக்கச் சொல்கிறார்கள், Biology படித்தவரை Maths எடுக்கச் சொல்கிறார்கள் என்று சொன்னார். அதுபோன்ற நிலை முன்பு இருந்தது. (குறுக்கீடு) அதைத்தானே நீங்கள் சொன்னீர்கள். (குறுக்கீடு) அதைத்தானே சொன்னார். (குறுக்கீடு) 2011-ல் மாண்புமிகு அம்மா அவர்கள், இதுபோன்று இருக்கக் கூடாது, எந்தப் பள்ளி, எந்த சப்ஜெக்ட் கேட்டிருக்கிறதோ, அதன் அடிப்படையில் பணி நிரவல் மூலமாக எந்தப் பாடப் பிரிவில் ஆசிரியர் தேர்ச்சி பெற்றிருக்கிறாரோ, அந்தப் பாடப் பிரிவில் தமிழகம் முழுவதும் நியமிக்க வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையில், அந்தக் குறை நிவர்த்தி செய்யப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரப்பன், கொஞ்சம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் உரையை முடியுங்கள்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தொடக்கப் பள்ளிகளில் 46 பள்ளிகளை மூடியிருக்கிறார்கள். 500 பள்ளிகளில் 5 மாணவர்களுக்குக் குறைவாக இருக்கிறார்கள். தொடக்கப் பள்ளிகளில் சுற்றுச் சுவர் இல்லாததால், அந்தப் பகுதியிலுள்ள அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் மாடுகளைக் கட்டுகிறார்கள், சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகிறது, இதுதான் காரணம். அந்தப் பள்ளியின் தலைமையாசிரியரால் அவர்களிடம் அதுபற்றி கேட்க முடியவில்லை, local-ல் contradiction ஆகிறது. இதுபற்றி அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியும். ஏனெனில், ground-ல் இதுபோன்ற நிலையை அவர்கள் face பண்ணுகிறார்கள். அதனால்தான், தொடக்கக் கல்வியில், hygiene இல்லாததால், தண்ணீர் வசதி இல்லாததால், சுற்றுச் சுவர் இல்லாததால், கழிவறைகள் இல்லாததால், நிறைய மாணவர்களைச் சேர்க்கவில்லை என்பது எங்களுடைய கருத்து. அதை நிவர்த்தி செய்வதற்கு ஏதாவது வழிவகைகள் இருந்தால், அதைச் செய்து தர ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, சுற்றுச் சுவர் இல்லை என்று கூறினார்கள். உள்ளாட்சித் துறையின் சார்பாக, இந்த ஆண்டு 7,000 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குச் சுற்றுச் சுவர் கட்டுவதற்கும், உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், 1,500 பள்ளிகளில் எங்கு சுற்றுச் சுவர் இல்லையோ, அங்கு சுற்றுச் சுவர் கட்டுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, படிப்படியாக நாங்கள் இந்தப் பணிகளை நிறைவேற்றி வருகிறோம். இந்த ஆண்டு அல்ல, நீங்கள் ஆட்சியில் இருந்தபோதும், இந்த நிலைதான் இருந்திருக்கிறது. அன்றைக்கு ஆரம்பிக்கப்பட்ட தொடக்கப் பள்ளி, அன்றைக்கு ஆரம்பிக்கப்பட்ட நடுநிலைப் பள்ளிதான் பல இடங்களிலே உள்ளது. சுதந்திரம் பெற்றதற்குப் பிறகும் சரி, சுதந்திரத்திற்கு முன்னாலும் சரி, என்றைக்கு பள்ளிகள் துவங்கப்பட்டனவோ அதே நிலைதான் அன்றைக்கும் இருந்திருக்கிறது; உங்கள் காலத்திலும் இருந்திருக்கிறது. நீங்களும் 5 முறை இங்கே ஆண்டிருக்கிறீர்கள், உங்களுக்கும் தெரியும். ஆகவே, குற்றச்சாட்டுகளைச் சொல்வதைக் காட்டிலும், தயவுகூர்ந்து உங்களைக் கேட்டுக்கொள்வது, தேவையே இல்லாமல் ஏதோ இரண்டு மூன்று குறைகளை வைத்துக்கொண்டு அந்தக் குற்றச்சாட்டுகளைச் சொல்லிக்கொண்டே நேரத்தை வீணாக்குவது சரியானதல்ல.

பிற்பகல் 3–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஈஸ்வரப்பன், உங்கள் உரையை முடியுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து 40 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் 2 அமைச்சர்கள் பதிலுரை வழங்க வேண்டியுள்ளது. உரையை முடியுங்கள்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: ஒருசில விஷயங்களை, குறிப்பாக co-curricular activities-ஐ பள்ளிகளில் செயல்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும். அதாவது, இலக்கிய மன்றங்களில் மாணவர்களையே seminar class எடுக்கச் சொல்லலாம். ஒரு +2 படிக்கின்ற மாணவனைக் கூப்பிட்டு seminar class எடுக்கச் சொன்னால்தான் அவன் அந்த subject-ஐ நடத்தும்போது, நாம்

புரிந்துகொண்டு படிக்கிறோமா இல்லையா என்பது ஆழமாக மனதினுள் புரியும். இந்தக் கருத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். Students should take the seminar classes in all schools. இப்போது Engineering Colleges–ல் Ist year போகும்போதும், II year போகும்போதும் seminar–க்கு யார் யார் வருகிறீர்கள், பெயர் கொடுங்கள் என்று சொல்வார்கள். அந்தமாதிரி +1 students–க்கும், +2 students–க்கும் seminar class எடுங்கள் என்று நீங்கள் அறிவுறுத்தலாம்.

அடுத்து, சிறப்பு எழுத்தறிவுத் திட்டத்தில் நீங்கள் 2 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். ஒன்று, விருதுநகர், மற்றொன்று இராமநாதபுரம். தருமபுரி பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. இந்தத் திட்டத்தில் அந்த மாவட்டம் எடுக்கப்பெறாமல் இருக்கிறது. ஏன் அந்த மாவட்டம் எடுக்கப்பெறாமல் இருக்கிறது, என்ன காரணத்திற்காக எடுக்கப்பெறவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் சொன்னால் நன்றாக இருக்கும். ஏனென்றால், கல்வியில் பின்தங்கிய மாவட்டமாக தருமபுரி மாவட்டம்தான் உள்ளது. ஆனால், அதை விட்டுவிட்டு விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களை எடுத்திருக்கிறீர்கள். அதை வரவேற்கிறோம். ஆனால், தருமபுரி மாவட்டம் எடுக்கப்படாமல் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் சார்பாக ஒரு மாநிலத்திற்கு 2 மாவட்டங்களைத் தேர்வு செய்யலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் எடுத்தோம். விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் இப்போது எடுக்கப்பட்டிருக்கின்றன. மீண்டும் எந்தெந்த மாவட்டங்களில் செயல்படுத்த வேண்டுமோ அந்த மாவட்டங்களை அடுத்த ஆண்டில் செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். தருமபுரி மாவட்டத்தைப் பற்றி நீங்கள் சொன்னீர்கள். (குறுக்கீடு) இல்லை, மத்திய அரசின் நிதியை வைத்துத்தான் நாம் செய்கிறோம். ஆனால், இன்றைக்கு கல்வியின் நிலைமைகளைப் பார்க்கின்றபோது, தருமபுரியிலே நமது உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் வந்ததற்குப் பின்னர்தான் உண்மையிலேயே கல்வி அங்கே எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறது என்பது தெரியும். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது நீங்கள் கேட்டுக்கொண்டுதான் இருந்தீர்கள். ஆகவே, அதுவே உங்களுக்குப் பொருந்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஈஸ்வரப்பன், உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு)

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: உரையை முடித்துவிடுகிறேன். இனிமேல் கோரிக்கைகள்தான். ஆய்வக உதவியாளர்கள் பணியை நீங்கள் 2017–ல் கொடுத்திருக்கிறீர்கள். அவர்களை நேரடி நியமனம் செய்திருக்கிறீர்கள். அவர்களுக்கு promotions இல்லை, ஊதிய உயர்வு இல்லையென்று அவர்கள் மிகவும் கஷ்டத்தில் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு promotions, ஊதிய உயர்வு வழங்குவதற்கு இந்த அரசு முன்வர வேண்டும். பகுதிநேர ஆசிரியர்கள் குறித்து எங்கள் உறுப்பினர், முனைவர் பொன்முடி அண்ணன் அவர்கள் பேசிவிட்டார்கள்.

அடுத்து, பெற்றோர்–ஆசிரியர் கழகம். பெற்றோர்–ஆசிரியர் கழகத்தில் ஒரு மாணவனுடைய பெற்றோர்தான், பெற்றோர்–ஆசிரியர் கழகத்தினுடைய உறுப்பினராக இருக்க வேண்டும்; ஆசிரியர் இருக்க வேண்டும். மாணவனுடைய பெற்றோர் இல்லாதபட்சத்தில் யார் guardian ஆக உள்ளாரோ அவர்கள் இருக்க வேண்டும். மகளிர் படிக்கும் பள்ளியாக இருந்தால் 75 சதவிகிதம் பெண் உறுப்பினர்கள் இருக்க வேண்டும். ஆண்கள் படிக்கும் பள்ளியாக இருந்தால் 25 சதவிகிதம் பெண் உறுப்பினர்கள் இருக்க வேண்டும். இப்படித்தான் இருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து ஆய்வு செய்து, அதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஈஸ்வரப்பன், உங்கள் உரையை முடியுங்கள்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: கடைசி பாயின்டுக்கு வந்துவிட்டேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் ஒருசில datas கொடுத்திருக்கிறார்கள். அதை அமைச்சர் அவர்கள் பார்த்தார்களா என்று தெரியவில்லை. Higher Secondary Schools–ல் மொத்தம் 71 இலட்சம் மாணவர்கள் என்று கொடுத்திருக்கிறார்கள். அதற்கு வாய்ப்பே கிடையாது. தவறுதலாக print ஆகியிருக்கிறது. ஏனென்றால், அதைப் பார்க்கிற மற்றவர்களுக்கு, அரசாங்கப் பதிவுகளில் பதிவான datas தவறாக இருந்தால் அது நன்றாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஈஸ்வரப்பன், உங்கள் உரையை முடியுங்கள்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: நிருவாகத்தைப் பொறுத்தவரையில், appointments, transfers and promotions ஆகியவற்றை வெளிப்படைத் தன்மை நிருவாகத்தோடு செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஈஸ்வரப்பன், உரையாற்றியது போதும், உட்காருங்கள்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: ஒரே நிமிடம். உரையை முடித்துவிட்டேன். Last point-க்கு வந்துவிட்டேன். உயர் கல்வியைப் பற்றியதுதான். வேறு ஒன்றுமில்லை. சாதாரண விஷயம்தான். இப்போது Engineering Colleges-ல் நிறையபேர் சேரவில்லை என்பதால் நிறைய Colleges-ஐ மூடும் தருவாயில் இருக்கிறார்கள். நிறைய Colleges-ஐ surrender செய்யும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அரசாங்கமே அந்த College Owners-ஐக் கூப்பிட்டு, நீங்களே Arts College நடத்துங்கள், நீங்களே Polytechnic Colleges நடத்துங்கள் என்று அந்த வாய்ப்பை அவர்களுக்குக் கொடுத்தது என்றால், அந்த Colleges-ஐ surrender செய்யாமல் நடத்துவதற்கு நிறையபேர் தயாராக இருக்கிறார்கள். இதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இல்லை, last point ஒரே நிமிடம். Medicine சம்பந்தப்பட்டது. இத்துடன் முடித்துவிடுகிறேன். Medicine பார்த்தீர்களென்றால், 5,007 medical. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஈஸ்வரப்பன், உட்காருங்கள். (குறுக்கீடு) நன்றி, நன்றி. திரு. ஈஸ்வரப்பன் சார்பாக நன்றி. அவ்வளவுதான், உட்காருங்கள். பதிலுரை, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 3–35

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா என்ற புது ஒளியை, இந்தப் புவிக்குக் காட்டிய புரட்சித் தலைவரைப் போற்றி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, நீங்கள் எப்போதும் அறிவாய் இருந்தீர்கள், அழகாய் இருந்தீர்கள், இப்போது அருளாய் இருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, நீங்கள் கடவுள் கொடுத்த வரம் அல்ல, கடவுளாய் வந்த வரம். கழகத்தை தங்கள் உயிருக்குள் அடைகாத்து, உங்கள் உதிரத்தைப் பாலாக்கி

வளர்த்தீர்கள். பாசத்தால் தாலாட்டி வளர்த்தீர்கள். அம்மா, உங்கள் அடி-முடி தேடினாலும், உங்கள் ஆளுமையின் ஆழத்தை யாராலும் அறிய முடியாது. ஆற்றலை அளவிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, இந்த அவையில் இப்போது நீங்கள் காற்றாய் நிறைந்திருக்கிறீர்கள், என் உயிர் மூச்சாய் உறைந்திருக்கிறீர்கள். என் பேச்சின் ஒலியும், என் மூச்சின் ஒலியும் நீங்களே! (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் ஒளியில் நிலைக்கிறேன், உங்கள் தாள் பணிந்து வணங்குகிறேன்.

உங்கள் வழியில் நடந்து, கழகமே கடமை என்று கிடந்து, எத்தனை துயர் வந்தபோதும் தன் நெஞ்சுரத்தால் வென்று நின்றவர், ஏழைகளின் கண்ணீரைக் கண்டுணர்ந்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இனி எடப்பாடியார் என்பது பெயர்ச்சொல் அல்ல, எங்களின் உயிர்ச்சொல். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்பம், துன்பம் எது வந்தபோதும் எதிர்கொள்ளும் துணிவு, எப்போதும் பணிவு மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) புவி ஈர்ப்பு விசைபோல இயல்பாய் அமைந்த எங்களின் திசை, புது விசை அண்ணன் இ.பி.எஸ்., அண்ணன் ஓ.பி.எஸ். இருவரையும் பணிந்து வணங்கி, நேர்கோட்டில் நெறியோடு நிற்கும் நியாயத் தராசு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பணிந்து என்னுடைய பதிலுரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி'

என்கிறது கொன்றை வேந்தன்.

'எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்,

அக்குடியில் கற்றோரை மேல் வருக என்பர்'

என்கின்றது வெற்றி வேற்கை.

அடித்தள மக்கள், பின்தங்கிய பகுதியினர், மலைவாழ் மக்கள், மாற்றுத் திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர், மெதுவாகக் கற்பவர்கள், உயர் கல்வி வாய்ப்புக் கிடைக்கப் பெறாதவர்கள் என்று அனைவரையும் உள்ளடக்கிய உயர் கல்வியுடன் மென் திறன், தொழில் திறன், ஆளுமைப் பண்புகளை வளர்க்கும் சிறப்புப் பயிற்சிகள், நவீன உலகத்தின் தேவைக்கேற்ப அறிவுத் திறன் கொண்ட

ஆற்றல்மிக்க இளைய சமுதாயத்தினை உருவாக்குதல் என்பதை நோக்கமாகக் கொண்டது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“என்னருந் தமிழ்நாட்டின் கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலை ஞானத்தால்
பராக்கிரமத்தால் அன்பால்
உன்னத இமய மலைபோல்
ஓங்கிடும் கீர்த்தி எய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிடல் எந்நாளோ?”

என்று ஏங்கினார் புரட்சிக்கவி பாரதிதாசன். புரட்சிக் கவிஞருடைய கனவு, புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்டு, தற்போது தமிழகத்திற்குப் புகழ் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தினுடைய அறிக்கையின்படி, உயர் கல்வியில் இந்தியாவின் தலைசிறந்த எட்டு மாநிலங்களில் தமிழகம் முதன்மை இடம் பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 18 வயது முதல் 23 வயதுக்குட்பட்டவர்களில் உயர் கல்வியில் சேர்பவர்களுடைய மொத்த எண்ணிக்கையில் (Gross Enrollment Ratio) தமிழகம் முதன்மை இடத்தில் உள்ளது.

உயர் கல்வியில் அதிக மாணாக்கர்களைக் கொண்ட மூன்று மாநிலங்களில் தமிழகம் முன்னோடியாக உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) உயர் கல்வியில் மாணாக்கர்கள் சேர்வதில் மட்டுமல்லாமல், தேர்ச்சி பெறுவதிலும் தமிழகம் முதன்மை இடத்தில் உள்ளது. உயர் கல்வியின் அடிப்படையே ஆராய்ச்சிப் படிப்புதான். இதில், இந்திய அளவிலே தமிழ்நாடுதான் முதலிடத்தில் உள்ளது. ஆசிரியர்கள்-மாணாக்கர்கள் விகிதத்தில் இந்திய சராசரியைவிட தமிழகம் முதன்மை இடத்தில் உள்ளது. மாணாக்கர்கள் தங்கிப் பயிலும் விடுதி வாய்ப்பு வசதிகளிலும் தமிழகம்தான் முதலிடத்தில் உள்ளது. சராசரியாக ஒரு இலட்சம் மக்கள்தொகைக்கு 35 கல்லூரிகள், ஒரு கல்லூரிக்கு 924 மாணாக்கர்கள் என்ற நிலையை அடைந்துள்ளோம். ஒட்டுமொத்தத்தில் இந்திய உயர் கல்வியில் தமிழகம் தலைசிறந்து விளங்குகிறது. இவற்றையெல்லாம் நான் சொல்லவில்லை. சமீபத்தில் இந்திய அரசு வெளியிட்ட அறிக்கை தெளிவாகச் சொல்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பயிற்றிப் பல கல்வி தந்து
இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்"

என்கின்றார் மகாகவி. தமிழ்நாட்டில் 59 பல்கலைக்கழகங்கள், 2,466 கல்லூரிகள் உள்ளன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, 2011 முதல் 2020 வரை உயர் கல்வித் துறையில் மொத்தம் 85 புதிய கல்லூரிகளைத் தொடங்கி மகத்தான சாதனையைப் படைத்துள்ளது. மேலும், இன்றைய தேவைக்கேற்ப 1,666 புதிய பாடப் பிரிவுகளைத் தொடங்கியுள்ளது. தமிழக வரலாற்றில் இப்படி ஒரு சாதனை நிகழ்ந்ததில்லை. இது ஒரு மறுமலர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வீடு தோறும் கலையின் விளக்கம்
...தேடு கல்வியி லாததொ ரூரைத்
தீயி னுக்கிரையாக மடுத்தல்"

என்கின்றார் மகாகவி பாரதியார்.

பிற்பகல் 3—40

தமிழக உயர் கல்வி வரலாற்றில் ஒரு மைல் கல்லாக புதிய, புதிய கல்லூரிகள் தொடக்கம், நவீன பாடத் திட்டங்கள் அறிமுகம், புது அணுகுமுறைகள் காரணமாக உயர் கல்வியில் சேர்ந்து பயில்வோர்களுடைய, 18 வயது முதல் 23 வயதிற்குட்பட்ட மாணாக்கர்களின் எண்ணிக்கை அதாவது, Gross Enrollment Ratio கடந்த 8 ஆண்டுகளில் வரலாறு காணாத அளவு உயர்ந்து, தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கிறது. தமிழகத்தில் 2010—2011 ஆம் ஆண்டு காலகட்டத்தில் 32.9 சதவிகிதமாக இருந்த GER இப்போது 49 சதவிகிதமாக உயர்ந்துள்ளது என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணாக்கர் சேர்க்கையில் மட்டுமல்ல, தரத்திலும் தமிழகம் உயர் கல்வியில் முதன்மை இடத்தில் உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 21 பல்கலைக்கழகங்கள், 35 கல்லூரிகள், தேசிய கல்வித் தர கட்டமைப்பு– NIRF, தரவரிசைப் பட்டியலிலே முதல் 100 இடங்களுக்குள் இடம் பெற்றுள்ளன. இந்திய அளவில் அண்ணா பல்கலைக்கழகம் தொழில்நுட்பப் பிரிவில் 9–வது இடத்தில் உள்ளது. சென்னை மாநிலக் கல்லூரி 3–வது இடத்தில் உள்ளது. சென்னை பல்கலைக்கழகம்

தேசிய அளவில் 20-வது இடத்தில் உள்ளது. இலண்டனில் உள்ள Quacquarelli Symonds, 2020 ஆம் ஆண்டிற்கான உலகத் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் கல்விசார் பெருமை என்ற வகைப்பாட்டில் 90-வது நிலைக்குள் இடம் பெற்றுள்ளது. அண்ணா பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் மற்றும் சென்னைப் பல்கலைக்கழகம் என 6 பல்கலைக்கழகங்களுக்கு தர மேம்பாட்டுப் பணிக்காக RUSA திட்டத்தின்கீழ் தலா ரூபாய் 50 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர் ஆராய்ச்சியின்மூலம்சமூகம்நிலையானநீடித்தவளர்ச்சிகாணமுடியும். உயர் கல்வியின் அடிப்படையே ஆராய்ச்சிதான். அந்த வகையில், இந்திய அளவிலே ஆராய்ச்சிப் படிப்புகளில் தமிழ்நாடு உயர்வான நிலையைப் பெற்றுள்ளது. 2018-2019, Ministry of Human Resource Development-MHRD அறிக்கையின்படி, இந்திய அளவிலே அதிகளவு ஆராய்ச்சிப் படிப்பு மாணாக்கர்களைக் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. இதன்படி, 2018-2019 ஆம் கல்வியாண்டில் மட்டும் 25,820 ஆய்வாளர்கள் Ph.D. படிப்பிலே சேர்ந்துள்ளனர். இவர்களில் 13,699 பேர் ஆண்கள், 12,121 பேர் பெண்கள். இதேபோல, M.Phil. படிப்பிலே 12,425 பேர் சேர்ந்துள்ளனர். இவர்களில் 3,281 பேர் ஆண்கள், 9,144 பேர் பெண்கள். இதுமட்டுமல்ல, ஆராய்ச்சிப் படிப்புகளில் சேர்பவர்களுடைய எண்ணிக்கை மட்டுமல்ல, வெற்றிகரமாகப் படிப்பை முடிப்பவர்களுடைய எண்ணிக்கையிலும் தமிழகம்தான் உயர்ந்துள்ளது. 2018-2019 ஆம் ஆண்டுகளில் மட்டும் 5,844 பேர் Ph.D. பட்டத்தினையும், 17,566 பேர் M.Phil. பட்டத்தினையும் வெற்றிகரமாகப் பெற்றுள்ளார்கள் என்பதை பெருமையோடு இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கெல்லாம் உயர் கல்வி ஆய்வுப் படிப்புகளுக்காக வழங்கும் ஊக்கமும், உதவியும், வாய்ப்பும், வசதியும்தான் மூலக் காரணம்.

உயர் கல்வியின்கீழ் உள்ள 13 பல்கலைக்கழகங்களுக்கு ஆண்டுதோறும் தேவைக்கேற்ப ஆராய்ச்சி நிதியாக ரூ.25 கோடி வழங்கப்படுகிறது. தேர்வு செய்யப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்களுக்கு 100 சதவிகிதம் ஆராய்ச்சி நிதி வழங்கப்படுகிறது. 70-க்கும் மேற்பட்ட நாடுகளுடன் ஆராய்ச்சிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. இணையவழியில் ஆராய்ச்சி நெறிமுறைகள், படிப்புகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாடு மாநில உயர்

கல்வி மன்றம்மூலம் ஒவ்வொரு கல்வியாண்டும் சிறு, குறு ஆராய்ச்சித் திட்டங்களுக்கு கலை, அறிவியல் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் 50 மாணாக்கர்களுக்கு தலா 15,000 ரூபாய் வீதம், ஏழரை இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. TEQIP–III திட்டத்தின்கீழ் உள்ள கல்லூரிகளில் பயிலும் Ph.D. மாணாக்கர்களுக்கு TEQIP நிதியிலிருந்து உதவித்தொகை வழங்கப்படுகிறது. அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் ஆராய்ச்சிப் படிப்புகளில் சேர்ந்துள்ள தகுதியான மாணாக்கர்களுக்கு 60,000 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படுகிறது. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் முழுநேர ஆராய்ச்சிப் படிப்பில் சேரும் அனைத்து மாணாக்கர்களுக்கும் ஆய்வு உதவித்தொகை வழங்கப்படுகிறது. அறிவியல் ஆய்வுகளை ஊக்கப்படுத்த அறிவியல் அறிஞர் விருதுகள், சிறந்த அறிவியல் ஆசிரியர் விருதுகள் மற்றும் ஊரகக் கண்டுபிடிப்பாளர் விருதுகள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் சார்பில், தொழில்நுட்பப் பாடங்களிலே இறுதி ஆண்டு பயிலும் மாணாக்கர்களின் ஆராய்ச்சித் திட்டங்களுக்கு தலா 10,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இதற்காக 53.68 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோ ரணிகலம் வேண்டாவாம்–முற்ற”

என்கிறது நீதிநெறி விளக்கம். இன்றைய உலகை வெல்ல அறிவுத் திறனோடு தொழில்திறனும் தேவை, வேலைவாய்ப்புகளைப் பெற ஏதுவாக.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் வாயிலாக SIEMENS மற்றும் Design Tech. Ltd. ஆகிய தொழில் நிறுவனங்களுடன் இணைந்து, ரூபாய் 546.84 கோடி மதிப்பீட்டில் திறன் மேம்பாட்டு சிறப்பு மையம் ஒன்றும், 5 திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையங்களும் தொடங்கப்பட்டுள்ளன. உலக முதலீட்டாளர் மாநாடு 2019–ல் நடத்தப்பட்டது. உயர் கல்வி நிறுவனங்கள்மூலம் ரூ.339.49 கோடிக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதன் வாயிலாக 3,275 பேர் வேலைவாய்ப்பினைப் பெறுவர். 62 அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் ‘மென்திறன் பயிற்சி மையங்கள்’ ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாணாக்கர்களின் தொடர்புத் திறனை மேம்படுத்தும் வகையில் டேனி (TANII) திட்டத்தின்மூலம் ‘ஒருங்கிணைந்த மொழி கற்றல் மையம்’ உருவாக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 3–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விதி என்று நொந்தவர்களையும் மதி கொண்டு எழச் செய்து, வாழ்வை உணரச் செய்து, வழிகாட்டி ஒளியூட்டுபவர்கள் ஆசிரியர்கள்'. 2018–2019 ஆம் ஆண்டு மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் அறிக்கையின்படி இந்தியாவிலேயே உயர் கல்வியில் ஆசிரியர்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில்தான் அதிகம். தமிழகத்தில் உயர் கல்வியில் 1,45,993 பேர் பணியில் உள்ளனர். இவர்களில் 95,560 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் 1,060 விரிவுரையாளர் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 2,331 உதவி பேராசிரியர்கள் ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் விரைவில் நியமிக்கப்பட உள்ளனர். ஆசிரியர்–மாணவர் விகிதம் இந்திய அளவிலே சராசரியாக 18:1 ஆகும். இது தமிழ்நாட்டில் 15:1 ஆக உள்ளது. அதாவது, 15 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கடைநிலத்தோ ராயினும் சுற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப்படும்'

என்கிறது நாலடியார். காலத்திற்கேற்ப கல்வியில் மாற்றம்; வாழ்வில் ஏற்றம். அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலே சேரும் அனைத்து மாணாக்கர்களுக்கும் விலையில்லா பாடநூல் வழங்கப்படுகிறது. ஒரே பாடத் திட்டத்தில் இரு வேறு பெயர்களிலே நடத்தப்படும் படிப்புகளை ஒப்பிட்டு மேற்படிப்பு, வேலைவாய்ப்பிற்கு உதவும் வகையிலே Equivalence Committee உருவாக்கப்பட்டு, 372 பொருட்களுக்கு தீர்வு காணப்பட்டு சமநிலை சான்று வழங்கப்பட்டுள்ளது. அறிவியல், மனிதநேயம், மாணவர் நலன் இவற்றில் தீவிரம் காட்டும் வல்லுநர்களுக்கு ரூ.5 இலட்சம் தொகை, 8 கிராம் தங்கப் பதக்கத்துடன் டாக்டர் அப்துல் கலாம் விருது ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. மெதுவாகக் கற்கும் மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. சென்னையிலே 5,000 பேர் பங்கேற்கும் அறிவியல் திருவிழா நடத்தப்படுகிறது. அரசு மற்றும் அரசு உதவிபெறும் 200 பள்ளிகளிலே 'அறிவியல் கண்டுபிடிப்பாளர் மையம்' உருவாக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக மேம்பாட்டிற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் உந்து சக்தியாக இருப்பது, அறிவும், திறனும்; உலகநுட்பங்களைக் கற்க உன்னத வாய்ப்பு. பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலே பயிலும் 100 மாணாக்கர்கள் 15 நாட்களுக்கு வெளிநாடுகளுக்குச் சென்று இப்பயிற்சியைபெறுவதற்குரூ.1.5கோடிஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது. ‘சகுரா மாணவர் பரிமாற்றத் திட்டத்தின்மூலம்’ ஜப்பான் நாட்டு அறிவியல் ஆய்வகக் கூடங்களை 2019 ஆம் ஆண்டு 15 மாணவர்கள் கண்டு வந்துள்ளனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தரமான உட்கட்டமைப்பு வசதி, நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய ஆய்வகங்கள், மகிழ்வாகக் கற்கும் சூழல். 2011 முதல் 2018 வரை தொடங்கப்பட்ட அனைத்துக் கல்லூரிகளுக்கும் கட்டட வசதி, ஆய்வக வசதி, சுற்றுச் சுவர் வசதி உள்ளிட்ட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன. அதோடுமட்டுமல்லாமல், அனைத்துக் கல்லூரிகளுக்கும் மரத் தளவாடங்கள், உபகரணங்கள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. வரலாற்றுச் சிறப்புமிக்க கல்லூரிக் கல்வி இயக்ககத்திற்கு இதுவரை சொந்தக் கட்டடங்கள் இல்லாத நிலையை மாற்றி, சென்னை, சைதாப்பேட்டையிலே கல்லூரிக் கல்வி இயக்ககம் கட்டுவதற்காக ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. அதே வளாகத்தில் சென்னை மண்டலக் கல்லூரி கல்வி இயக்ககமும் அமையப்பெறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளில் சமுதாயக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதுவரை திறந்தநிலைப் பல்கலைக்கழகம்மூலம் 1,350 கைதிகள் பட்டயப் படிப்புகளை முடித்துள்ளனர். 51 நபர்கள் தொழில் திறன் பயிற்சி பெற்று வருகின்றனர். பொருளாதாரத்தில் பின்தங்கிய பொறியியல் பட்டப் படிப்பு படிக்கும் மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை ரூ.25,000/–, 2017–2018 முதல் ரூ.50,000/– ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலே பயிலும் மாணாக்கர்களுக்கு கல்விக் கட்டண விலக்கு, கட்டணமில்லா பேருந்து பயணச் சலுகை மற்றும் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்படுகின்றன. 2011–லிருந்து சமூக நிலையில் பின்தங்கிய மாணாக்கர்களுக்கு Post Matric கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. முதல் தலைமுறை

பட்டதாரி மாணாக்கர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை; ஒற்றைச் சாளர முறையிலே தனியார் கல்லூரிகளிலே சேரும் இலங்கைத் தமிழ் அகதி மாணாக்கர்களுக்கும் கல்விக் கட்டணச் சலுகை; அரசு பொறியியல் கல்லூரிகளிலே பயிலும் முதுநிலை பட்டப் படிப்பு மாணாக்கர்களுக்கு மாதாந்திர கல்வி உதவித் தொகை 2017–2018 முதல் மாதம் ரூ.6,000/– ஆக வழங்கப்பட்டு வருகிறது. அரசு உதவிபெறும் கல்லூரிகளிலே பயிலும் மாணாக்கர்களுக்கு கட்டணமில்லா கல்வி சலுகையால் 2017 முதல் 2020 வரை 14,89,896 பேர் பயனடைந்துள்ளனர். சென்னை பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்திலே ரூ.10 கோடி மதிப்பீட்டில் எண்ணிலக்க கோளரங்கம் மற்றும் 2.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோளத்தில் அறிவியல் என்ற அமைப்பினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் 8–11–2019 அன்று திறந்து வைத்தார். கன்னியாகுமரியிலே 15.2 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே இந்த ஆண்டு அறிவியல் மையம் நிறுவப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடலுக்கு உயிர் போல, உலகுக்கு ஒளிபோல, பயிருக்கு மழை போல, அறிவுக்குத் திருக்கோயில் பல்கலைக்கழகங்கள். சென்னைப் பல்கலைக்கழகம் 2020–2021 ஆம் கல்வியாண்டு முதல் NCT, UGC அனுமதியுடன் தொலைநிலைக் கல்வியில் பி.எட். படிப்பினை வழங்கும். மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் பல்லுயிர் பெருக்கத்திற்காக UGC மூலம் 'ஒருங்கிணைந்த வளர் மையம்' நிறுவ உள்ளது. தொன்மையான 1,272 பழந்தமிழ் இலக்கிய நூல்களை மின்னணு நூல்களாக ஆவணப்படுத்தியுள்ளது.

பிற்பகல் 3–50

அண்ணா பல்கலைக்கழகம், இந்திய விமானப் படை பாதுகாப்பு அமைச்சகம் நடத்திய Aero India-2019 'Drone Olympics' போட்டியில், ஒரு தங்கப் பதக்கமும், 2 வெள்ளிப் பதக்கங்களையும் வென்றுள்ளது. பாரதியார் பல்கலைக்கழகம் சூரிய ஆற்றல் குறித்து ஆய்வு செய்ய ரூ.3.64 கோடியை UGC வழங்கியுள்ளது. பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் தொழில்முனைவோர் புதுமை மற்றும் தொழில் மையம் தொடங்கப்பட்டுள்ளது. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் 27 கிராமங்களைத் தத்தெடுத்து மேம்பாட்டுப் பணிகளைச் செய்து வருகிறது. அழகப்பா பல்கலைக்கழகம் D.Litt. மற்றும் D.Sc. ஆய்வுப்படிப்புகளை புதியதாக அறிமுகப்படுத்தியுள்ளது. 2019 முதல் மாணவர்களுடைய தேர்வு விடைத்தாள்களை

மின் மதிப்பீடு செய்து விரைவாக 15 நாட்களுக்குள் தேர்வு முடிவுகளை அறிவித்து வருகின்றது. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், ரூ.5.25 கோடி மதிப்பீட்டில் 3 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு மெகா வாட் சூரிய மின் உற்பத்தி அமைப்பை உருவாக்கியுள்ளது. பெரியார் பல்கலைக்கழகம், கணிதம், இயற்பியல், புவி அமைப்பியல், நுண்ணுயிரியல், உணவு அறிவியல் மற்றும் ஊட்டச் சத்துவியல், உயிரி தொழில்நுட்பவியல் ஆகிய துறைகளுக்கு இந்திய அரசின் தொழில்நுட்பத் துறையின் நிதியைப் பெறுகிறது. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் கல்விப் புல வளாகத்தில், கூடுதலாக 3 தளங்கள், பாடநூல் தயாரிப்பு மற்றும் வழங்கல் பிரிவு கட்டடம், 650 பேர் அமரக்கூடிய கலையரங்கம், விருந்தினர் இல்லம் புதிதாகக் கட்டப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்மூலம் திறக்கப்பட்டுள்ளது.

திருவள்ளுவர் பல்கலைக்கழகம், DST–SERB அமைப்பின்மூலம் முது முனைவர் ஆராய்ச்சி உதவித் தொகையாக ரூ.19.2 இலட்சம் பெற்றுள்ளது. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் மேம்பாட்டு மையம் தொடங்க மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் ரூ.5.38 கோடியினை வழங்கியுள்ளது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில், உயர்தர மாநாட்டுக்கூடம் அமைப்பதற்கும், தொன்மையான கட்டடங்களைப் புனரமைக்கவும், பழைய மாணாக்கர்கள் உதவி வருகின்றனர். 2019–2020–ல் மட்டும் பழைய மாணாக்கர்களிடமிருந்து ரூ.2.2 கோடி நிதி பெறப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய உயர்கல்வித் திட்டம், RUSA தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு 60 சதவிகிதமும், மாநில அரசு 40 சதவிகிதமும் வழங்குகிறது. 2015 முதல் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்கப் பணிகள் இத்திட்டத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: நான் படித்துவிட்டேன். அவைக்குறிப்பை வாங்கிப்பார்த்துக்கொள்ளுங்கள். முதல் கட்டமாக மத்திய அரசின் பங்கு ரூ.256.98 கோடி, மாநில அரசின் பங்கு ரூ.171.32 கோடி. இரண்டாவது கட்டமாக மத்திய அரசின் பங்கு ரூ.370.58 கோடி, மாநில அரசின் பங்கு ரூ.245.20 கோடி. 66 நிறுவனங்கள்

இதன்மூலம் ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் தர மேம்பாட்டிற்கான பணிகளை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காணும் இடமெல்லாம் கல்லூரிகள், கலை அழகோடு கல்வி வளாகங்கள், கல்வியின் தரத்தைக் கூட்டி, அறிவினை ஊட்டி, கற்க வேண்டும் என்ற வேட்கையைக் கூட்டி, மலையென மாணவர்களுடைய சேர்க்கை, அறம் சொல்லும் கல்வி, அகிலம் வெல்லும் கல்வி, வந்தவர் எல்லாம் வென்றவர் என்ற நிலை, தரத்தில் உயர்ந்த நிலை, அறிவின் சுடர் ஆராய்ச்சி, அதிலும் நம் ஆட்சி, நம் தேசத்திற்கே உயர் கல்வியில் நாம்தான் உயர்ந்த சாட்சி. எல்லோர் இதயத்தையும் தன் ஈகை குணத்தால், ஈர மனதால் ஈர்த்து, இலையை அலையாக மலரச் செய்த மாதரசி, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திட்டங்களால், (மேசையைத் தட்டும் ஒலி) நாம் உச்சத்தைத் தொட்டுள்ளோம். புதிய தடம் பதித்து, தலை நிமிர்ந்துள்ளோம். இந்த வெற்றி, இந்தப் புகழ் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருவடி மலருக்கு சமர்ப்பணம். (மேசையைத் தட்டும் ஒலி) சொல்லில் உறுதி, செயலில் வலிமை, இலக்கை நோக்கிய பயணம் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொட்ட பணியைத் தொடர்ந்து செய்து தமிழகத்தைத் தலை நிமிரச் செய்துள்ள அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என்னுடைய நன்றி மலர்களைச் சமர்ப்பித்து, உயர் கல்வித் துறைக்கான புதிய அறிவிப்புகளை அறிவிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிப்புகளின் தலைப்புகளை மட்டும் நான் தற்போது வாசிக்கின்றேன். அறிவிப்புகளை நான் முழுமையாகப் படித்ததாகக் கருதி, அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்

1. 23 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு 100 MBPS அளவிலான தொடர் இணையதள வசதி ஏற்படுத்துதல்

(Provision of leased line internet facility with 100 MBPS in 23 Government Polytechnic Colleges)

அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி குழுமத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டும், மாணாக்கர்கள் அரசால்

வழங்கப்பட்டுள்ள விலையில்லா மடிக்கணினிகளை நன்முறையில் பயன்படுத்தவும் 51 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் 28 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு இணையதள வசதி ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில் மீதமுள்ள 23 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு 100 MBPS அளவிலான தொடர் இணையதள வசதி ரூ.4.60 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

2. வேலூர், தந்தை பெரியார் அரசினர் தொழில்நுட்பக் கல்லூரியில் அமைப்பியல் துறையில் முதுநிலை பட்டப்படிப்பு (கட்டுமான பொறியியல்) துவங்குதல்

(Starting of Post Graduate Course (Structural Engineering) in the Department of Civil Engineering, in Thanthai Periyar Government Institute of Technology, Vellore)

வேலூர், தந்தை பெரியார் அரசினர் தொழில்நுட்பக் கல்லூரியில் 5 இளங்கலை பாடப் பிரிவுகளும், 3 முதுநிலை பாடப் பிரிவுகளும் நடத்தப்பட்டு வருகின்றன. அமைப்பியல் துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுவதால், கட்டுமான பொறியியல் (Structural Engineering) என்ற முதுநிலை பட்டப்படிப்பு துவங்கப்படும். இப்பாடப் பிரிவிற்காக 5 பணியிடங்கள் தோற்றுவிக்கப்படவும், உள்கட்டமைப்புகளை ஏற்படுத்தவும், கணினி உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை கொள்முதல் செய்வதற்கும் தொடரும் மற்றும் தொடரா செலவினமாக ரூ.3.13 கோடி வழங்கப்படும்.

பிற்பகல் 3—55

3. தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்திற்கு மதுரை மண்டல இணை இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்துதல்

(Establishment of Office of Regional Joint Director at Madurai for Directorate of Technical Education)

தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் பணியினை செம்மைப்படுத்த ரூ.1.14 கோடி செலவில் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்திற்கு ஒரு மண்டல இணை இயக்குநர் அலுவலகம் மதுரையில் ஏற்படுத்தப்படும்.

4. தொன்மை வாய்ந்த உதகமண்டலம், அரசுக் கலைக் கல்லூரிக் கட்டடங்களை புனரமைத்துப், பாதுகாத்தல்.

(Conservation and Restoration of Heritage Buildings in the Government Arts College at Uthagamandalam)

உதகமண்டலம், அரசுக் கலைக் கல்லூரியின் பாரம்பரியமிக்க கட்டடங்களை அதன் தொன்மை மாறாமல் மீட்டமைக்க வேண்டியதன் அவசியத்தினைக் கருதி ரூ.8.20 கோடியினை ஒதுக்கீடு செய்து இப்புராதனக் கட்டடங்கள் புனரமைத்துப் பொலிவு பெறச் செய்யப்படும்.

5. தொன்மை வாய்ந்த புதுக்கோட்டை, மாட்சிமைதங்கிய மன்னர் கல்லூரிக் கட்டடங்களை புனரமைத்துப் பாதுகாத்தல்.

(Conservation and Restoration of Heritage Buildings in the H.H. The Rajah's College, Pudukottai)

புதுக்கோட்டை, மாட்சிமைதங்கிய மன்னர் கல்லூரியின் பாரம்பரியமிக்க கட்டடங்களை அதன் தொன்மை மாறாமல் மீட்டமைக்க வேண்டியதன் அவசியத்தினைக் கருதி ரூ.2.40 கோடியினை ஒதுக்கீடு செய்து இப்புராதனக் கட்டடங்கள் புனரமைத்துப் பொலிவு பெறச் செய்யப்படும்.

6. கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் மின் ஆளுமைத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் செயல்படுத்துதல்

(Implementation of e-Governance-Phase II in the Directorate of Collegiate Education)

தமிழ்நாடு மின் ஆளுமைத் திட்ட முகமை, கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் 2019–2020 ஆம் நிதியாண்டில் மின் ஆளுமைத் திட்டத்தை செயல்படுத்த முதற்கட்டமாக ரூ.99.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் முழுமையாகச் செயல்படுத்த இரண்டாம் கட்டமாக ரூ.2.65 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

7. கல்லூரி வளாகங்களில் கண்காணிப்பு கேமராக்கள் நிறுவுதல்

(Installation of CCTV facilities in College Campuses)

அரசுக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர் மற்றும் ஆசிரியப் பணியாளர்களின் பாதுகாப்பிற்காக அனைத்து அரசுக்

கல்லூரிகளிலும் கண்காணிப்பு கேமராக்கள் முதற்கட்டமாக ரூ.2.50 கோடி செலவில் பொருத்தப்படும்.

8. மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்தில் ஒரு சட்ட அலுவலர் பணியிடம் தோற்றுவித்தல்

(Creation of one Law officer Post in the office of the Joint Director, Collegiate Education, Madurai Region)

சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் கல்லூரிக் கல்வித் துறை தொடர்பான வழக்குகளை எதிர்கொள்ளவும், உச்ச நீதிமன்ற வழக்குகளுக்கான ஆணை உறுதிப் பத்திரம் தயாரித்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளவும், அரசு சிறப்பு வழக்குரைஞர் மற்றும் பிற சட்ட அலுவலர்களுடன் இணைந்து பணியாற்றவும் மதுரை மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்திற்கு அரசு சார்புச் செயலாளர் நிலையில் ஒரு சட்ட அலுவலர் பணியிடம் ரூ.12.50 இலட்சம் செலவில் தோற்றுவிக்கப்படும்.

9. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குதல்

(Training to the Government Arts and Science College Teachers)

தற்போது நிகழ்ந்து வரும் அறிவுப் பெருக்கத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில் ஆசிரியர்கள் தங்களை தயார்படுத்திக் கொண்டு அதன் அடிப்படையில் மாணாக்கர்களுக்கு கற்பிக்க வேண்டி ரூ.2.05 கோடி செலவில் ஆசிரியர்களுக்கான பயிற்சி தகுதியான பாட வல்லுநர்களைக் கொண்டு வழங்கப்படும்.

10. அரசு கலைக் கல்லூரிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.16.00 கோடி நிதி வழங்குதல்

(Grant of Rs.16.00 crore for infrastructure development for Government Arts and Science Colleges)

அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி, அரசினர் கலைக் கல்லூரி, தருமபுரி, அரசினர் கலைக் கல்லூரி, சிதம்பரம், சேதுபதி அரசு கலைக் கல்லூரி, இராமநாதபுரம், அரசினர் பெண்கள் கலைக் கல்லூரி, சிவகங்கை, அரசினர் பெண்கள் கலைக் கல்லூரி, இராமநாதபுரம், அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி,

செய்யாறு மற்றும் பெரியார் அரசு கலைக் கல்லூரி, கடலூர் ஆகிய 8 கல்லூரிகளுக்கு ஆய்வக உபகரணங்கள் வாங்குவதற்கும் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் தலா ரூ.2.00 கோடி வீதம் ரூ.16.00 கோடி வழங்கப்படும்.

11. திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.20.00 கோடி நிதி வழங்குதல்

(Grant of Rs.20.00 crore for upgradation of infrastructure to Thiruvalluvar University, Vellore)

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணாக்கர்களின் உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சித் திறனை மேம்படுத்தும் பொருட்டு ஆய்வக உபகரணங்கள் வாங்குவதற்கும் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் ரூ.20.00 கோடி நிதி வழங்கப்படும்.

12. தமிழ்நாடு ஆவணக் காப்பக ஆவணங்களை செப்பனிடுதல் மற்றும் மின்னுருவாக்கம் செய்தல்

(Mending and Scanning of Records at Tamil Nadu Archives)

தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் 1670 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலான மதிப்பு மிக்க அரசாணைகள், அரசிதழ்கள், நில ஆவணங்கள், நூலக புத்தகங்கள் ஆகிய ஆவணங்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. இதில் 62 இலட்சம் பக்கங்கள் கொண்ட (10 TB தரவுகள்) மின்னுருவாக்கம் செய்யப்பட்ட ஆவணங்களை செப்பனிடவும் மேலும் மின்னுருவாக்கம் செய்யவும் ரூ.16.00 கோடி வழங்கப்படும்.

13. தமிழ்நாடு ஆவணக் காப்பகம், சென்னை கட்டடம் புனரமைத்தல்

(Restoration of existing building of Tamil Nadu Archives at Chennai)

சென்னையின் மையப் பகுதியான எழும்பூரில் அமைந்துள்ள தமிழ்நாடு ஆவணக் காப்பகக் கட்டடம் 1909-ல் கட்டப்பட்டது. இதனைப் பாதுகாப்பதன் அவசியத்தை கருதி ரூ.9.41 கோடி செலவில் தமிழ்நாடு ஆவணக் காப்பகக் கட்டடம் புனரமைத்துப் பராமரிக்கப்படும்.

14. எண்ணிலக்க ஒளிப்படக் கருவி அமைப்புடன் திருச்சிராப்பள்ளி அண்ணா அறிவியல் மைய கோளரங்கத்தைப் புதுப்பித்தல்

(Modernisation of Anna Science Centre Planetarium at Tiruchirapalli with Digital Projection System)

கோளரங்கத்தில் வான் பொருட்களின் படங்களைத் தெளிவாகக் காண்பிப்பதற்கும், வானவியல் நிகழ்வுகளின் இயங்குபடங்களை பொதுமக்களுக்குக் காண்பிக்கும் வகையிலும் எண்ணிலக்க ஒளிப்படக் கருவி அமைப்புடன் திருச்சிராப்பள்ளி அண்ணா அறிவியல் மைய கோளரங்கம் ரூ.3.00 கோடி செலவில் புதுப்பிக்கப்படும்.

15. தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் வழியாக தேசிய மற்றும் பன்னாட்டு கருத்தரங்குகள், மாநாடுகள், பயிற்சிப் பட்டறைகள் நடத்த நிதியை உயர்த்தி வழங்குதல்

(Enhancement of grant for conducting National and International conferences, Seminars, Workshops through Tamil Nadu State Council for Higher Education)

மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்களின் கல்வி மற்றும் ஆராய்ச்சித் திறனை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் நடத்தப்படும் தேசிய மற்றும் பன்னாட்டு கருத்தரங்குகள், மாநாடுகள், பயிற்சிப் பட்டறைகள் ஆகியவற்றிற்கு வழங்கப்படும் நிதி ரூ.5.00 இலட்சத்திலிருந்து ரூ.25.00 இலட்சமாக உயர்த்தி தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்திற்கு வழங்கப்படும்.

16. சென்னைப் பல்கலைக்கழகத்தின் அனைத்து வளாகங்களிலும் மகளிர் பாதுகாப்பு வசதி மையம் நிறுவுதல்

(Establishment of Facilitation Centre for Women Safety in all the campuses of University of Madras)

சென்னைப் பல்கலைக்கழகத்தின் அனைத்து வளாகங்களிலும் மகளிர் பாதுகாப்பு வசதி மையம் நிறுவப்பட்டு அதன்மூலம் பல்கலைக்கழகத்தின் 5 வளாகங்களிலும் சுமார் 150 CCTV *கேமராக்கள் 24 மணி நேரமும் இயங்கும்படி ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.*

17. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மையப்படுத்தப்பட்ட சிறப்புக் கருவிகள் மையக் கட்டடம் கட்டுதல்

(Construction of Building for Centralized Instrumentation Centre at Annamalai University)

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் 90 ஆம் ஆண்டு கல்விச் சேவையை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கொண்டாடும் இவ்வேளையில் சுமார் 4.80 கோடி ரூபாய் செலவில் 24,000 சதுர அடியில் மையப்படுத்தப்பட்ட சிறப்புக் கருவிகள் மையக் கட்டடம் ஒன்று கட்டப்படும்.

18. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் உள்ள மைய நூலகத்தை நவீனமயமாக்கல்

(Modernization of Central Library at Annamalai University)

*அண்ணாமலைப் பல்கலைக்கழக மைய நூலகத்தில் உள்ள சுமார் 1,70,000 ஆவணங்கள் மற்றும் 3,16,000 புத்தகங்களுக்கு வானலை அதிர்வெண் அடையாளம் (*RFID-Radio Frequency Identification*) பொருத்தப்படும். இந்த நவீன தொழில்நுட்பமானது ரூ.1.55 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.*

19. அழகப்பா பல்கலைக்கழகத்தில் தாவர நெகிழி பயன்பாட்டு மையத்தை நிறுவுதல்

(Establishment of "Bio-Plastic Centre" at Alagappa University)

*மக்களிடையே நெகிழி பயன்பாட்டைத் தவிர்ப்பதற்கும், தாவர நெகிழி (*Bio-Plastic*) பயன்பாட்டை அதிகரிப்பதற்கும், அது தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும் அழகப்பா பல்கலைக்கழகத்தில் தாவர நெகிழி மையம் ரூ.3.00 கோடி செலவில் அமைக்கப்படும்.*

20. அழகப்பா பல்கலைக்கழகத்தில் தமிழ்த் தொன்மை, பண்பாடு மற்றும் வரலாற்று மையம் நிறுவுதல்

(Establishment of "Centre for Tamil Antiquity, Culture and History" at Alagappa university)

தமிழின் தொன்மை, பண்பாடு மற்றும் வரலாறு இவற்றின் சிறப்புகளைப் பற்றி அனைவரும் அறியும் வகையில் அழகப்பா

பல்கலைக்கழகத்தில் தமிழ்த் தொன்மை, பண்பாடு மற்றும் வரலாற்று மையம் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

21. அழகப்பா பல்கலைக்கழகத்தில் பாக்டீரியா நோய்சார் மேலாண்மையில் நுண்ணுயிர் எதிர்ப்பிகளுக்கு மாற்று மூல வழியை ஆராய்வதற்கான திட்டம்

(Scheme for Alternative strategy to antibiotics in bacterial disease Management at Alagappa University)

அழகப்பா பல்கலைக்கழகத்தில் கடல் மற்றும் நன்னீர் வளங்களிலிருந்து உண்ணக்கூடிய நுண்ணுயிரினங்களைக் கண்டறிந்து, பாக்டீரியா தொற்றுநோய்களுக்கு எதிரான தயாரிப்புகளை உருவாக்குவதற்கும் அவற்றின் தொற்று எதிர்ப்புத் திறனை ஆராய்வதற்கும் ரூ.1.00 கோடியில் திட்டம் உருவாக்கப்படும்.

22. பாரதியார் பல்கலைக்கழகத்தில் நூலகம் மற்றும் உயிர் அறிவியல் துறைகளுக்குப் புதிய கட்டடங்களைக் கட்டுதல்

(Construction of New Buildings for Library and Life Science Department in Bharathiar University, Coimbatore)

பாரதியார் பல்கலைக்கழகத்தில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய ஒரு புதிய நூலகக் கட்டடமும் ஆராய்ச்சி மாணாக்கர்கள் பயனடையும் வகையில் உயிர் அறிவியல் துறைக்கு ஒரு புதிய கட்டடமும் ரூ.20.00 கோடி செலவில் கட்டப்படும்.

23. பாரதியார் பல்கலைக்கழகத்தில் மகாகவி பாரதியார் உயராய்வு மையம் மற்றும் அருங்காட்சியகம் நிறுவுதல்

(Establishment of Mahakavi Bharathiar Advanced Research Centre and Museum at Bharathiar University)

மகாகவி பாரதியின் வாழ்வியல் சிந்தனைகளையும் படைப்பிலக்கிய மேன்மையையும் அனைவரும் அறிந்து பயன்பெறும் வகையில் பாரதியார் பல்கலைக்கழகத்தில் உலகத் தரத்தில் "மகாகவி பாரதியார் உயராய்வு மையம்" மற்றும் அருங்காட்சியகம் ரூ.2.50 கோடி செலவில் அமைக்கப்படும்.

24. பாரதியார் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள ஆண்கள் விடுதிகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரை மறு சுழற்சி செய்வதற்கான கருவியை நிறுவுதல்

(Erection of Sewage Treatment Plant for recycling of waste water from Boys Hostels at Bharathiar University)

பாரதியார் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் விடுதிகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரை மறு சுழற்சி செய்வதற்காகக் கழிவுநீரைச் சுத்திகரிப்பதற்கான கருவி ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

25. கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு மையம் நிறுவுதல்

(Establishment of the Centre for Research and Technology Development (CRTD) in Bharathiar University, Coimbatore)

பாரதியார் பல்கலைக்கழகத்தில் நிதியுதவி பெற்ற ஆராய்ச்சித் திட்டங்களை விரைவாக செயல்படுத்தவும், தொழில்நுட்பப் பரிமாற்றம் மற்றும் சிறப்பு மனிதவள மேம்பாட்டிற்குத் தொழில் துறையுடன் வலுவான தொடர்புகளை வளர்ப்பதற்காகவும் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு மையம் நிறுவப்படும்.

26. பாரதியார் பல்கலைக்கழகத்தில் திறந்தவெளி பல்நோக்கு அரங்கு கட்டுதல்

(Construction of Multipurpose Open Auditorium in Bharathiar University)

பாரதியார் பல்கலைக்கழகத்தில் 7200 ச.மீ. பரப்பளவில் மூவாயிரம் உறுப்பினர்கள் அமரக்கூடிய ஒரு திறந்தவெளி பல்நோக்கு அரங்கம் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

27. பாரதியார் பல்கலைக்கழகத்தில் தொழில் கூட்டிணைவு மையத்தை நிறுவுதல்

(Establishment of University Industry Collaboration Centre at Bharathiar University)

பாரதியார் பல்கலைக்கழகத்தில் தனிச்சிறப்பு தொழில் ஆய்வக மையம், மின்தொழில் மையம், தொழில் முனைவோர் ஆலோசனை

சேவை மற்றும் வெளிநாட்டில் வேலைவாய்ப்பிற்கான மையம் ஆகியவற்றைக் கொண்டு ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் தொழில் கூட்டிணைவு மையம் அமைக்கப்படும்.

28. பாரதியார் பல்கலைக்கழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் அழிவின் விளிம்பில் உள்ள தாவர இனங்களைப் பாதுகாப்பதற்காக தாவரவியல் பூங்காவை நிறுவுதல்

(Establishment of Botanical Garden in Bharathiar University for Conserving the endangered plants from the Habitat destruction)

மேற்குத் தொடர்ச்சி மலைகளில் அழிவின் விளிம்பில் உள்ள தாவர இனங்களைப் பாதுகாக்கும் வகையில் பாரதியார் பல்கலைக்கழகத்தில் 40,000 சதுர மீட்டர் பரப்பளவில் தாவரவியல் பூங்கா சுமார் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

29. பாரதிதாசன் பல்கலைக்கழகம், பல்கலைப்பேரூர் வளாகத்தைச் சுற்றி சுற்றுச்சுவர் அமைத்தல்

(Construction of compound Wall at Palkalaiperur campus of Bharathidasan University)

பாரதிதாசன் பல்கலைக்கழகம், பல்கலைப்பேரூர் வளாகத்தின் பாதுகாப்பு கருதி 5.75 கி.மீ. நீளத்திற்கு ரூ.7.50 கோடி செலவில் சுற்றுச்சுவர் அமைக்கப்படும்.

30. பாரதிதாசன் பல்கலைக்கழகம், பல்கலைப்பேரூர் வளாகம் மற்றும் காஜாமலை வளாகத்திலுள்ள மாணவியர் விடுதிகளை விரிவுபடுத்துதல்

(Extension of Girls Hostel at Palkalaiperur and Khajamalai Campus of Bharathidasan University)

பாரதிதாசன் பல்கலைக்கழகம், பல்கலைப்பேரூர் வளாகம் மற்றும் காஜாமலை வளாகத்திலுள்ள மாணவியர் விடுதிகள் ரூ.5.40 கோடி மதிப்பீட்டில் விரிவாக்கப்படும்.

31. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் 300 கணினிகளுடன்கூடிய மொழி ஆய்வகத்தை ஏற்படுத்துதல்

(Establishment of Language Laboratory with 300 computers in Madurai Kamaraj University)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் மாணாக்கர்களின் அயல்மொழித் திறனை மேம்படுத்தவும், புதிய வேலைவாய்ப்பினை

ஏற்படுத்தவும் ரூ.2.24 கோடி மதிப்பீட்டில் 300 கணினிகளுடன்கூடிய மொழி ஆய்வுக்கூடம் அமைக்கப்படும்.

32. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் உயிர் மருத்துவ அறிவியல் புலம் உருவாக்குதல்

(Creation of School of Bio Medical Sciences in Madurai Kamaraj University)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நோயெதிர்ப்பு, மூலக்கூறு உயிரியல், உயிர்தகவலியல், தடய அறிவியல் மற்றும் மனித மரபியல் போன்ற பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ள ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் உயிர் மருத்துவ அறிவியல் புலம் உருவாக்கப்படும்.

33. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் மத்திய அதிநவீன ஆய்வுக் கருவிகள் மையக் கட்டடம் கட்டுதல்

(Construction of Instrumentation Central Building at Manonmaniam Sundaranar University)

மாணவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகளை அங்கீகரிப்பதற்கும், பலவகையான கருத்தரங்குகளின்மூலம் ஆராய்ச்சி முடிவுகளை வெளியிடுவதற்கும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வளாகத்தில் அதிநவீன வசதிகளுடன்கூடிய ஆய்வகக் கருவிகள் மையம் ரூ.3.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

34. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் புதிய மகளிர் விடுதிக்கான கட்டடம் கட்டுதல்

(Construction of new Women's Hostel at Manonmaniam Sundaranar University)

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் தற்சமயம் 5 வருட ஒருங்கிணைந்த பட்ட மேற்படிப்பு ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதன்மூலம் மாணவிகளின் சேர்க்கை எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் இப்பல்கலைக்கழகத்தில் ரூ.1.32 கோடி மதிப்பீட்டில் புதிய மகளிர் விடுதிக் கட்டடம் கட்டப்படும்.

35. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதியில் நவீன சமையலறையுடன் கூடிய உணவருந்தும் கூடம் கட்டுதல்

(Construction of Dining Hall with Modular Kitchen for the newly constructed Boy's Hostel at Manonmaniam Sundaranar University)

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வளாகத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதியில் மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், நவீன சமையலறையுடன் கூடிய உணவருந்தும் கூடம் ரூ.1.30 கோடி செலவில் கட்டப்படும்.

36. பெரியார் பல்கலைக்கழகத்தின் தருமபுரி முதுநிலை விரிவாக்க மையத்திற்குக் கட்டடங்கள் கட்டுதல்

(Construction of Buildings for Dharmapuri PG extension centre of Periyar University)

தருமபுரியில் உள்ள பெரியார் பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவாக்க மையமானது அதியமான் அரசு மேல்நிலைப் பள்ளியில் தற்போது செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு காரிமங்கலம், பூமாண்டஅள்ளியில் ரூ.10.15 கோடி மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

37. பெரியார் பல்கலைக்கழகத்தின் இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறைக்கான கட்டடத்தில் கூடுதல் தளங்கள் கட்டுதல்

(Construction of additional floors for the Department of Journalism and Mass communication in Periyar University)

பெரியார் பல்கலைக்கழகம் இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை ஒருங்கிணைந்த 5 ஆண்டு முதுகலைப் பட்டப்படிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்துறைக்காக கூடுதல் தளங்கள் ரூ.5.30 கோடியில் கட்டப்படும்.

பிற்பகல் 4–00

38. பெரியார் பல்கலைக்கழக வளாகத்தில் 300 கிலோ வாட் திறன்கொண்ட மேற்கூரை சூரிய மின் நிலையம் நிறுவுதல்

(Installation of 300 KW Rooftop Solar power plant in Periyar University)

பெரியார் பல்கலைக்கழகம் தனது மின் பயன்பாட்டில் தன்னிறைவு பெறும்பொருட்டு, சுயநிலைத் தன்மைகொண்ட ஆற்றல்

வளத்தை மேம்படுத்திக்கொள்ள பல்கலைக்கழக வளாகத்திலுள்ள அறிவியல் புலத்தின் கட்டடத்தில், 300 கிலோ வாட் திறன்கொண்ட மேற்கூரை சூரிய மின் நிலையம் ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு ஆற்றல் மேம்பாட்டு முகமைமூலம் நிறுவப்படும்.

39. பெரியார் பல்கலைக்கழகத்தின் மாணாக்கர்கள் விடுதிகளில் கூடுதல் அறைகள் கட்டுதல் மற்றும் புதுப்பித்தல் பணி மேற்கொள்ளுதல்

(Construction of additional rooms and renovation work for students' hostel in Periyar University)

பெரியார் பல்கலைக்கழகத்தில் உள்ள மாணாக்கர்களுக்கான விடுதிகளில் கூடுதல் அறைகளுக்கான கட்டுமான மற்றும் புதுப்பித்தல் பணிகள் ரூ.1.53 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

40. அண்ணா பல்கலைக்கழகத்தில் உணவகக் கட்டடம் மற்றும் இயந்திரவியல் துறையில் ஆய்வகக் கட்டடம் கட்டுதல்

(Construction of canteen building and laboratory building for Department of Mechanical Engineering at Anna University)

அண்ணா பல்கலைக்கழக மாணாக்கர்கள் மற்றும் பணியாளர்களின் நலனைக் கருத்தில்கொண்டு அவ்வளாகத்தில் மூன்று அடுக்குகள் கொண்ட உணவகக்கட்டடம் ரூ.25.00 கோடியிலும், இயந்திரவியல் துறை ஆய்வக உபகரணங்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கும், ஆராய்ச்சி நடவடிக்கை மேற்கொள்ளவும் மூன்று அடுக்குகள் கொண்ட ஆய்வகக் கட்டடம் ரூ.12.00 கோடியிலும் கட்டப்படும்.

41. அண்ணா பல்கலைக்கழக கோயம்புத்தூர் மண்டல வளாகத்தில் மாணாக்கர்கள் விடுதிகளில் கூடுதல் தளம் கட்டுதல்

(Construction of Additional Floor in students hostel at Coimbatore Regional Centre of Anna University)

அண்ணா பல்கலைக்கழக கோயம்புத்தூர் மண்டல வளாகத்தில் மாணவ, மாணவியரின் நலன் கருதி தற்போதுள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதிக் கட்டடங்களில் ரூ.3.50 கோடி செலவில் கூடுதல் தளங்கள் கட்டப்படும்.

42. அரியலூர் அண்ணா பல்கலைக்கழகப் பொறியியல் கல்லூரியின் மாணவர்கள் விடுதியில் கூடுதல் தளம் கட்டுதல்

(Construction of additional floor in Boys hostel at Anna University College of Engineering, Ariyalur)

அரியலூர் அண்ணா பல்கலைக்கழகப் பொறியியல் கல்லூரியில் உள்ள மாணவர்கள் விடுதிக்குக் கூடுதல் தளம் கட்ட வேண்டியதன் அவசியத்தைக் கருதி அவ்விடுதிக் கட்டடத்தில் ரூ.2.20 கோடி செலவில் கூடுதல் தளம் கட்டப்படும்.

43. அண்ணா பல்கலைக்கழக மதுரை மண்டல வளாகத்தில் ஹைட்ராலிக்ஸ் மற்றும் பொருட்களின் வலிமை ஆய்வகத்தைக் கட்டுதல்

(Construction of Hydraulics and strength of Materials Laboratory at Madurai Regional Centre of Anna University)

அண்ணா பல்கலைக்கழக மதுரை மண்டல வளாகத்தில் அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழும ஒழுங்குமுறை 2017–ன்படி மாணாக்கர்களின் பயன்பாட்டிற்காக ஹைட்ராலிக்ஸ் மற்றும் பொருட்களின் வலிமை ஆய்வகத்திற்கான கட்டடம் ரூ.1.54 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

44. அண்ணா பல்கலைக்கழகத் துறைகள் மற்றும் நிருவாகத்தில் மின் ஆளுமையினை நடைமுறைப்படுத்துதல்

(Implementing e-Governance in the Departments and in Administration of Anna University)

அண்ணா பல்கலைக்கழகத் துறைகளில் நிருவாகத்தை வேகப்படுத்த ரூ.1.0 கோடி செலவில் மின் ஆளுமை அமைக்கப்படும். இதனால் பல்கலைக்கழகம் மற்றும் துறைகளின் அன்றாட நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதோடு மட்டுமல்லாமல் இலக்கமுறைமயமாக்கல் மற்றும் தரவு பாதுகாப்பையும் செயல்படுத்த ஏதுவாக அமையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: *எல்லா பல்கலைக்கழகங்களுக்கும் நிதியை வாரி, வாரிக் கொடுத்திருக்கிறீர்கள். திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு மட்டும் ஏன் நிதி கொடுக்கவில்லை?*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *ரூ.20 கோடி நிதி கொடுத்திருக்கிறோம். அதற்காகத்தான் அந்த அறிவிப்பைப் படிக்கும்போது உங்களைப் பார்த்துக்கொண்டே படித்தேன்.*

திரு. துரைமுருகன்: *ரூ.20 கோடி கொடுத்திருக்கிறீர்கள். ரூ.20 கோடிதானே கொடுத்திருக்கிறீர்கள்?*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *அதற்கு முன்பும் நிதி கொடுத்திருக்கிறோம் இல்லையா?*

திரு. துரைமுருகன்: *திருவள்ளுவர் என்ற பெயர் இருப்பதால், அந்த மரியாதையைக் கொடுத்து, கூடுதலாக நிதி கொடுக்க வேண்டாமா?*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *வேலூர்* Engineering College*-ல் ஒரு* P.G. Course*-க்காக ரூ.3.13 கோடி அளவில் நிதி கொடுக்கப்பட்டிருக்கிறது இல்லையா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்துள்ள பதிலுரையை ஏற்று, மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலுரை. மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல், மக்கள் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

"அள்ளிக் கொடுத்து வாழ்பவர் நெஞ்சம்
ஆனந்த பூந்தோப்பு-வாழ்வில்
நல்லவர் என்றும் கெடுவதில்லை
இது நான்கு மறை தீர்ப்பு" (மேசையைத் தட்டும் ஒலி)

இந்திய துணைக் கண்டத்தில் நிருவாக ஆளுமைத் திறனில் தமிழகம் முதலிடம் என்று சரித்திரம் படைத்த மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் E.P.S. அவர்களுக்கு என்னுடைய நன்றிகளையும், பாராட்டுகளையும் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எல்லா நிலைகளிலும் உற்ற துணையாக, மருது சகோதரராகச் செயல்பட்டு வரும் மாண்புமிகு துணை முதலமைச்சர் O.P.S. அவர்களுக்கும் என்னுடைய நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இரண்டாம் முறையாக தாங்கள் பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்கின்றபோது, தங்களைப் பற்றி அவர் அன்றைக்கு உரையாற்றிய அந்த நிகழ்வை நினைவுபடுத்த விரும்புகிறேன்; 'கயிற்றின் மேல் நடக்கும் வித்தைக்காரர் ஒருவரின் வெற்றிக்கு என்ன காரணம் என்று கேட்கப்பட்டது. ஒருவர், 'கவனம்' என்றார்; மற்றொருவர், 'விழிப்புணர்வு' என்றார்; இன்னொருவர், 'பயிற்சி' என்றார். ஆனால், பயிற்சியாளரோ, 'இவை அனைத்தையும்விட முக்கியமானது நடுநிலைமை' என்றார். ஏனென்றால், இடது பக்கமோ, வலது பக்கமோ எந்தப் பக்கம் சாய்ந்தாலும் கயிற்றில் நடப்பவர் விழுந்துவிடுவார் என்றாராம். அந்த அளவுக்குக் கடுமையான பணியைத்தான் சபாநாயகர் ஏற்றுக்கொண்டிருக்கிறார்' என்று மாண்புமிகு அம்மா அவர்கள் உரையாற்றுகிறபோது எடுத்துக் கூறினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட கடுமையான பணியை இரண்டாம் முறையாக பொறுப்பேற்று சாதனை படைத்துவரும் மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கு பாராட்டுகளையும், நன்றியையும் மாண்புமிகு அம்மா அவர்கள் அன்றைக்குத் தெரிவித்தார்கள். அன்றும் சரி, இன்றும் சரி, நாளையும் சரி, தங்களுடைய நிலை அப்படித்தான் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் வளர்ந்து வருகிற இந்தக் காலகட்டத்தில், மாணவ, மாணவிகள் எதற்கும் பயப்படாமல், சவால்களைச் சந்திக்கின்ற, மன தைரியத்தைத் தருகின்ற பணிகளில் தமிழக அரசின் பள்ளிக் கல்வித் துறை மும்முரமாக கவனத்தை செலுத்தி வருகிறது. மாணவ, மாணவிகளிடம் தாழ்வு மனப்பான்மையைப் போக்கி, அவர்களிடம் 'நாங்கள் யாருக்கும் சளைத்தவர்கள் இல்லை' என்கிற எண்ணத்தை

ஏற்படுத்துவதில் தமிழக பள்ளிக் கல்வித் துறை சாதனை படைத்து வருகிறது.

பிற்பகல் 4–05

மாணவப் பருவம் என்பது ஒவ்வொருவர் வாழ்விலும் வசந்த காலம் போன்றது. இந்த வசந்த காலத்தை மிகவும் பயனுள்ளதாகவும், ஆக்கப் பூர்வமாகவும் பயன்படுத்தும் வகையில் பள்ளிக் கல்வித் துறை தொலைநோக்குப் பார்வையுடன் செயலாற்றி வருகிறது. அதன் அடிப்படையில். பல்வேறு சூழ்நிலைகளில் தொடர்ந்து கல்வி கற்க முடியாது போகும் மாணவ, மாணவிகளின் கல்வி இடைநிற்றலைத் தடுத்து, அவர்கள் தொடர்ந்து கல்வி கற்க அனைத்து முயற்சிகளையும் பள்ளிக் கல்வித் துறை செய்து வருகிறது. யாராலும் திருட முடியாத ஒரு பொருள் கல்வி மட்டுமே. அந்தக் கல்வியை எல்லோருக்கும் எந்தவிதப் பேதமும் இல்லாமல், தரமாகத் தந்து கொண்டிருக்கிறது, தமிழக அரசு. மகாகவி பாரதி அவர்கள் சொன்னதுபோல், அறிவில் தெளிவு என்கின்ற நிலையினை நோக்கி, மாணவ மாணவிகளைத் தயார்ப்படுத்தி வருகிறது, பள்ளிக் கல்வித் துறை. தமிழக அரசின் பள்ளிக் கல்வித் துறை, மாணவர்களுக்கு அனைத்து நிலைகளிலும் ஆதரவாக, தன் கவனத்தில் முழுமூச்சுடன் பணியாற்றி வருகிறது.

இங்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள் உரையாற்றியபோது, நம்முடைய அரசினுடைய நிலைப்பாடுகளில் ஒன்றைக் குறிப்பிட்டுக் காட்டினார்கள். தொலைநோக்குத் திட்டம்–2023–ல் பள்ளிகளின் வசதிகளுக்கான மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 15,000 கோடி ரூபாய் செலவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறதென்று குறிப்பிட்டு, எந்த வகையில் இந்தப் பணிகளை நீங்கள் நிறைவேற்றி வருகிறீர்கள் என்ற கேள்வியை இங்கே கேட்டிருக்கிறார்கள். 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2018–2019 ஆம் ஆண்டு வரையிலும், புதிதாகத் தொடங்கப்பட்ட மற்றும் தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளின் விவரம். புதிதாகத் தொடங்கப்பட்ட பள்ளிகள்–248, தொடக்கப்பள்ளிகளிலிருந்து நடுநிலைப்பள்ளிகள்–117, நடுநிலைப் பள்ளிகளிலிருந்து உயர்நிலைப் பள்ளிகள்–1079, உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து மேல்நிலைப் பள்ளிகள்–604, மொத்தமாக 2048 பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊதியமாக 2063.66 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. 2012 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலும், பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு, கூடுதலாக ஆய்வகம், கழிப்பறைகள், சுற்றுச் சுவர், குடிநீர் ஆகியவை NABARD

திட்டத்தின்மூலமாக 1670 பள்ளிகளுக்கு 1953.29 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்விக்காக 43,048பணிகளுக்குஎன3,114.95கோடிரூபாய்செலவிடப்பட்டிருக்கிறது. மொத்தமாக இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு இதுவரை 5,068.24 கோடி ரூபாய் செலவு செய்து மாணவருடைய நிலைகளையும், தரத்தையும், மாணவர்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளையும் உயர்த்தியதோடு, அதே நேரத்தில் பள்ளிகள் எங்கெங்கெல்லாம் நிறுவப்பட வேண்டும் என்று கோரிக்கை வருகின்றபோது அந்தக் கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றக்கூடிய ஆற்றல் மிக்க அரசாக தமிழக அரசு பணியாற்றியிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்த நேரத்தில், 2023 ஆம் ஆண்டுவரையிலும் உத்தேச செலவு என்று குறிப்பிடப்பட்டது என்பதையும் நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போல்தான் மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் உரையாற்றுகிறபோது, பொது நூலகத் துறையில் 12 ஆண்டுகாலமாக சுமார் 1,500 ஊர்ப்புறநூலகர்கள் சிறப்புக் காலமுறை அடிப்படையில் பணிபுரிந்து வருகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் மூன்றாம் நிலை நூலகர்களாகத் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற வேண்டுகோள் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, அதை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு பரிசீலிக்கும் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே தொலைநோக்குச் சிந்தனையில் இந்த அரசு பல்வேறு வரலாறுகளைப் படைத்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். பள்ளிக் கல்வித் துறையைப் பொறுத்தவரையில், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு 2011 முதல் 2019 ஆம் ஆண்டு வரை, 2,048 பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. 2017–2020 ஆம் ஆண்டு வரையில் 1,000 புதிய தேர்வு மையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மாணவர்களுடைய நிலையை மனதில் கொண்டுதான், 1,000 புதிய தேர்வு மையங்களை ஏற்படுத்தி, மாணவர்களுக்கு இருந்த மன அழுத்தத்தைப் போக்குகின்றவகையில் வரலாறு படைத்த அரசாக, நமது தமிழக அரசின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றும் என்றும் இந்தப் பணிகளை சிறப்பான முறையில் கல்வித் துறைக்காக நிறைவேற்றி வருகிறார் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4–10

உயர் தொழில்நுட்பக் கணினி ஆய்வகம் (ICT) என்று சொல்லப்படுகிற ஒரு புதிய வரலாறும் இங்கே படைக்கப்பட்டிருக்கிறது. 520.13 கோடி ரூபாய் செலவில் இந்தியாவிலேயே முதன்முறையாக இங்கு இருக்கிற உயர்நிலைப் பள்ளிகளுக்கு 10 computers, மேல்நிலைப் பள்ளிகளுக்கு 20 computers வழங்கப்பட்டுள்ளதோடு, அவற்றை ஒருங்கிணைத்து அனைத்திற்கும் internet–ஐ இணைக்கும் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 6,029 உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலே இந்தச் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் சரியாகப் பள்ளிக்கு வருகிறார்களா என்பதைக் கண்காணிப்பதற்காக இந்த அரசு 9.00 கோடி ரூபாய் செலவில் biometric முறையை நடைமுறைப்படுத்தி, ஆசிரியர்களின் வருகைப் பதிவைக் கண்காணிப்பதன்மூலம் ஆசிரியர்கள் சரியான நேரத்தில் பள்ளிக்கு வருகின்ற நிலையையும் உருவாக்கி வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். கண்காணிப்பு camera ரூ.21.71 கோடி செலவில் 2,294 பள்ளிகளிலே பொருத்தப்பட்டிருக்கிறது. இன்னும் மீதமிருக்கின்ற அனைத்துப் பள்ளிகளிலும் இதைக் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. “பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாக் கட்டடங்கள்” என்ற பெயரில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கருணையால், ரூ.39 கோடியே 90 இலட்சம் செலவில் DPI வளாகத்தில் மிக விரைவிலே கட்டடம் திறப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். நபார்டு மற்றும் பிற திட்டங்களின் மூலமாக ரூ.947.04 கோடி செலவில் 2,013 பள்ளிகளிலே வகுப்பறைகள், ஆய்வகங்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் இந்த நேரத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதேபோல, பள்ளிக் கல்வித் துறையைப் பொறுத்தவரையிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது சுற்றுச்சுவர் குறித்து குறிப்பிட்டார்கள்,உள்ளாட்சித்துறையின் மூலமாக, DRDA மூலமாக ஊரகங்களில் இருக்கின்ற 7,000 தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு விரைந்து சுற்றுச்சுவர் அமைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதேபோல உயர்நிலைப் பள்ளிகள்,

மேல்நிலைப் பள்ளிகளிலே 1,200 பள்ளிகளுக்குச் சுற்றுச்சுவர் இல்லை என்ற நிலையை மாற்ற அந்தப் பணிகளையும் அத்துறையின் மூலமாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 5 புதிய மாவட்டங்களைப் பிரிக்கின்றபோது முதன்மைக் கல்வி அலுவலகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. விலையில்லா மடிக்கணினி என்று சொல்லப்படுகின்ற ஒரு வரலாற்றை தமிழகத்திலே முதலில் உருவாக்கிக் காட்டியவர் மறைந்தும், மறையாமலும் நம் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அம்மா என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 16 வகையான விலையில்லா கல்வி உபகரணப் பொருட்கள் ரூ.245.06 கோடி செலவில் வழங்கப்பட்டிருக்கின்றன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய மதிய உணவுத் திட்டம் சிறப்பான முறையிலே தமிழ்நாட்டிலே நிறைவேற்றப்பட்டு, அனைவரின் பாராட்டுதலையும் பெற்றிருக்கிறது. விலையில்லா சீருடைகள், ஏறத்தாழ 2011 ஆம் ஆண்டு முதல் இன்றுவரையிலும் 3,335.09 கோடி ரூபாய் செலவில் 4 கோடியே 10 இலட்சம் மாணவர்களுக்கு புதிய வடிவிலே, வண்ணங்களிலே வழங்கப்பட்டிருக்கின்றன. இந்திய நாட்டின் வரலாற்றில், தமிழ்நாட்டின் வரலாற்றில் 2011 முதல் இன்றுவரையிலும் ஏறத்தாழ இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, 52 இலட்சத்து 97 ஆயிரம் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினியை வழங்கிய வரலாறு இந்தியாவிலே தமிழ்நாட்டில் மட்டும்தான் நடைபெற்றிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கருணை உள்ளத்தோடு +1 படிக்கின்ற மாணவர்களுக்கும், +2 படிக்கின்ற மாணவர்களுக்கும், படிப்பை முடித்துவிட்டுச் சென்ற மாணவர்களுக்கும் 3 கட்டங்களாக மடிக்கணினிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

விலையில்லா மிதிவண்டிகள் 2011 ஆம் ஆண்டு முதல் இன்றுவரையிலும், ஏறத்தாழ 54 இலட்சத்து 23 ஆயிரம் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட வரலாறு தமிழ்நாட்டில் இன்றைக்கு படைக்கப்பட்டு கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 2020–2021 ஆம் கல்வியாண்டில் 6 முதல் 10 ஆம் வகுப்புவரை படிக்கின்ற மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற காலணியை மாற்றி, எதிர்காலத்தில் shoe, socks வழங்குவதற்கும் அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். காலணியை உபயோகிக்காமல்

தனியார் கல்லூரிகளுக்குச் செல்கின்ற மாணவர்களைப்போல, இவர்களுக்கும் shoe, socks வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. 2011 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை 59,106 ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாதோர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாணவர்களின் நலனைக் காக்கின்ற வகையில் ஆசிரியர் பற்றாக்குறை இருக்கின்ற பள்ளிகளுக்கும், மலைப் பகுதியில் ஆசிரியர் இல்லாத பள்ளிகளுக்கும், விடுமுறையில் இருக்கின்ற ஆசிரியர்கள் உள்ள பள்ளிகளுக்கும், பட்டதாரி ஆசிரியர்களுக்கு 10,000 ரூபாயும், இடைநிலை ஆசிரியர்களுக்கு 7,500 ரூபாயும் என்ற விகிதத்தில் முதுகலை பட்டதாரிகளை நியமிப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. கல்வி மாவட்டம் என்ற விதத்தில், 120 மாதிரிப் பள்ளிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், 3 கட்டங்களாக, 1, 6, 9, 11 ஆகிய 4 வகுப்புகளுக்கு முதன்முறையாக ஒரு வரலாற்றைப் படைக்கின்ற அளவிற்கு curriculum என்று சொல்லப்படுகின்ற syllabus மாற்றியமைக்கப்பட்டது.

பிற்பகல் 4–15

இந்திய நாட்டின் வரலாற்றில், தமிழகத்தின் வரலாற்றில், 2019–2020 ஆம் ஆண்டில், 2, 3, 4, 5, 7, 8, 10, 12 ஆகிய வகுப்புகளில் syllabus மாற்றியமைக்கப்பட்டு, ஒன்றாம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரையுள்ள பாடத் திட்டங்களையும் மாற்றியமைத்த வரலாறு தமிழ்நாட்டில்தான் முதன்முதலில் நடைபெற்றிருக்கிறது, வேறு எங்கும் நடைபெறவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

2019–2020 ஆம் ஆண்டில் 294 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5.68 கோடி புத்தகங்கள் அச்சிடப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. புதிய புத்தகங்கள் விரைவில் கிடைப்பதற்காக QR Code என்கிற Quick Response Code பாடத் திட்டத்தை தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தி வரலாறு படைத்ததற்காக, மத்திய அரசிடமிருந்து பாராட்டுகளைப் பெற்றிருக்கின்றது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு, அந்நிய நாடுகளில் வாழும் தமிழ் படிக்கும் மாணவர்களுக்காக, 12,649 தமிழ் பாடநூல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்வுகள் மற்றும் சான்றிதழ்கள் புதியதாக மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, அரசினுடைய பல்வேறு கொள்கைகளை மனதிலே கொண்டுதான் புதிய திட்டங்களைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. குறிப்பாக, மாணவர்கள் மொத்தம் 8 தேர்வுகளை எழுதினார்கள். மொழித் தேர்வுகள், இரண்டு தாள்களாக எழுதிய நிலையை மாற்றி ஒரே தாளாக எழுதும் வகையில் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது.

மருத்துவம் மற்றும் பொறியியல் படிக்கும் மாணவர்கள், தங்களுக்குத் தேவையான பாடங்களைப் படித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதாவது, மருத்துவக் கல்லூரிக்குச் செல்லும் மாணவர்கள் Maths பாடத்தைப் படிக்கத் தேவையில்லை, பொறியியல் கல்லூரிக்குச் செல்கின்ற மாணவர்கள் Biology பாடம் படிக்கத் தேவையில்லை என்ற முறையில் எந்த subject-ஐ வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம், 3 பாடங்களை மட்டும் தேர்வு செய்து படிக்கின்ற வரலாறு, முதன்முதலில் வருகிற ஆண்டு முதல் கொண்டு வரப்படும். தனியார் பள்ளிகளில் மாணவர்கள் படிப்பதைப்போல் கொண்டு வரப்பட உள்ளது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அரசினுடைய தொலைநோக்குச் சிந்தனையாக, மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத்தன்மையினை அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மூலமாக அறிந்து கொள்வதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மதிப்பெண் சான்றிதழில், மாணவர்களின் பெயர், பாடங்களின் பெயர், பெற்றோரின் பெயர் தமிழில் அச்சிட்டு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. 10 ஆம் வகுப்பு, 11 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்புகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு, பொதுத் தேர்வு மொழிப் பாடங்களில் இரண்டு தாள்கள் தேர்வு முறை என்பதை ஒரு தாளாக மாற்றி அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, மாணவர்கள் வருகையைக் குறித்து பெற்றோர்கள் தெரிந்துகொள்வதற்காக வாரத்திற்கு ஒரு முறை SMS மூலமாக தகவல் அனுப்ப அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. தேர்வு கால அட்டவணையைப் பொறுத்தவரையிலும், தேர்வு முடிவு தேதி கல்வியாண்டின் துவக்கத்திலேயே வெளியிடப்பட்டு, தேர்வு

முடிவுகள் SMS மூலமாக அனுப்பப்பட்டு வருகின்றன. இந்திய நாட்டின் வரலாற்றில், தமிழகத்தின் வரலாற்றில், தேர்வு எப்போது எழுதப்பட வேண்டும், தேர்வு முடிவுகள் எப்போது அறிவிக்கப்படும் என்பதை 8 மாதங்களுக்கு முன்னரே அறிவித்த ஒரே மாநிலம் தமிழ்நாடு என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.(மேசையைத்தட்டும்ஒலி)அதுமட்டுமல்ல, மாணவர்கள் பள்ளிக்குச் சென்றும், பத்திரிகை வாயிலாகவும் தெரிந்துகொள்வதற்குப் பதிலாக SMS மூலமாக இரண்டே மணித்துளிகளில் ஒவ்வொரு மாணவருக்கும் தேர்வு முடிவுகள் கிடைக்கின்ற வரலாற்றை தமிழக அரசு படைத்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

Smart Card–ஐப் பொறுத்தவரையில், பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளின் கல்வித் திறனை அறிந்துகொள்வதற்காக, அதற்கென்று ஒரு QR Code உருவாக்கப்பட்டிருக்கிறது. பெற்றோர்கள் QR Code–ஐப் பயன்படுத்தி, தங்கள் பிள்ளைகளின் கல்வித் திறனைத் தெரிந்துகொள்ள வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மாணவர்களின் நிலையை மனதில் கொண்டுதான் அரசு பணியாற்றி வருகிறது. குறிப்பாக, Atal Tinkering ஆய்வகங்கள் உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது இதைக் குறிப்பிட்டுக் கேட்டிருந்தார்கள். அறிவியல் ஆர்வத்தை ஊக்கப்படுத்துவதற்காக, கடந்த ஆண்டு 267 பள்ளிகளுக்கு 49 கோடியே 97 இலட்சம் ரூபாயில் Atal Tinkering ஆய்வகங்கள் ஏற்படுத்தப்பட்டன. வருகின்ற ஆண்டுகளில் 720 பள்ளிகளில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. குறிப்பாக வெளிநாடுகளுக்குச் சென்று, வெளிநாட்டில் இருக்கிற அறிவியல் தொழில்நுட்பம், கலை மற்றும் கலாச்சாரத்தை மாணவர்கள் தெரிந்துகொள்வதற்காக ஆண்டுதோறும் 100 மாணவர்களை அரசு தேர்வு செய்து 3 கோடி ரூபாய் செலவில் அவர்கள் வெளிநாட்டிற்கு அனுப்பிவைக்கப்படுகிறார்கள்.

பிற்பகல் 4–20

NASA–விற்குச் செல்ல நிதியில்லாமல் தவித்த நாமக்கல்லைச் சேர்ந்த சிறந்த மாணவிக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு 3 இலட்சம் ரூபாய் நிதியினை வழங்கி, NASA–விற்குச் செல்ல வழிவகைகளைச் செய்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் இப்போதும் நிதிகளை வழங்கி வருகிறார். வருகின்ற ஆண்டில், பள்ளிக் கல்வித் துறையின் மூலமாக 50 மாணவர்களைத் தேர்வு செய்து NASA–விற்கு அழைத்துச் செல்ல

திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்த அரசின் தொலைநோக்கு சிந்தனையாக, பெற்றோர்கள் வியக்கத்தக்க அளவிற்கு, பல்வேறு பாடத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இங்கே பேசும்போது ஒன்றைச் சொன்னார். படிக்கின்ற மாணவர்களுடைய பெற்றோர்கள்தான் பெற்றோர்—ஆசிரியர் கழகத்தில் உறுப்பினர்களாகஇருக்கவேண்டும். ஆனால் சில இடங்களில் பார்க்கின்றபோது, பள்ளி மாணவர்களைச் சாராதவர்கள், வயது முதிர்ந்தவர்கள் பெற்றோர்–ஆசிரியர் கழகத்தில் உறுப்பினர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்டவர்களை பெற்றோர்–ஆசிரியர் கழகத்திலிருந்து விடுவிக்க நீங்கள் ஏற்பாடு செய்தால், உங்களின் கனவினை இந்த அரசு நிறைவேற்றிக் காட்டும் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், எங்களுடைய உணர்வும் அதுதான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உணர்வும் அதுதான். ஏனென்று சொன்னால், படிக்கின்ற குழந்தைகளுடைய பெற்றோர், பெற்றோர்–ஆசிரியர் கழகத்தில் உறுப்பினர்களாக இருந்தால் மட்டும்தான் அந்தக் கல்விக் கூடத்தைச் சிறப்பான முறையில் வழி நடத்திச் செல்ல முடியும் என்பது மாண்புமிகு முதலமைச்சர், இங்கே அமர்ந்திருக்கக்கூடிய எங்கள் கழகத்தைச் சார்ந்த அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுடைய கருத்தாகும். அனைவரின் விருப்பமும் அதுதான் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, நம்முடைய அரசைப் பொறுத்தவரையிலும், சிறப்பாகச் செயல்படுகின்ற பெற்றோர்–ஆசிரியர் கழகங்களை ஊக்குவிக்க ஒரு பள்ளிக்கு தலா 50,000/– ரூபாய் வீதம் 120 பள்ளிகளை நாங்கள் தேர்வு செய்திருக்கிறோம். அதற்காக 60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யவிருக்கிறோம்.

பெருந்தலைவர் காமராஜர் பற்றி சிலபேர் பேசினார்கள். ஆனால், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மறைந்தாலும், எங்களது உள்ளங்களிலே இன்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். எல்லோருடைய உள்ளங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்ற முறையில்தான் அவருடைய பெயரில், 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில்

தமிழ் வழியில் பயிலும் 960 சிறந்த மாணவர்களுக்கு, ஆண்டுதோறும் 1 கோடியே 45 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதையெல்லாம் நான் குறிப்பிட்டுக் கூறுவதற்குக் காரணம், மாண்புமிகு உறுப்பினர்கள் கல்வியில் வளர்ச்சி இல்லை என்று இங்கே குறிப்பிட்டார்கள். புதுமைப் பள்ளி விருதுகளை நாங்கள் எதற்காக வழங்குகிறோம் என்று சொன்னால், கல்விக் கூடங்களைச் சிறப்பாக நடத்தக்கூடிய, மாணவர் சேர்க்கையினை மேம்படுத்தக்கூடிய ஆசிரியர்களைச் சிறப்பிப்பதற்காக இந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. புதுமைப் பள்ளி விருதுகள் என்ற முறையில் 128 பள்ளிகளுக்கு 1 கோடியே 92 இலட்சம் ரூபாய் நிதி வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. ஆசிரியர்களை ஊக்கப்படுத்துவதற்காகத்தான், மாவட்டத்திற்கு 6 ஆசிரியர்கள் வீதம் கனவு ஆசிரியர் விருதுகளை 192 ஆசிரியர்களுக்கு 19.20 இலட்சம் ரூபாய் செலவில் எங்கள் காலத்தில் வழங்கிக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் காலத்தில் அவ்வாறு இல்லை. ஆக, ஒவ்வோர் ஆசிரியருக்கும் தலா ரூ.10,000/- ஊக்கத்தொகையும், கேடயமும் வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

வளர்ந்து வரும் விஞ்ஞான உலகத்தை நோக்கிச் செல்வதற்காக மாணவர்களுக்கு பல்வேறு திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றி வருகிறது. 24 மணி நேரமும் செயல்படும் இலவச தொலைபேசி எண் 14417 சேவையின்மூலம் இதுவரையில், இந்த 1½ ஆண்டுகாலத்தில் 2,56,346 நபர்கள் பயனடைந்துள்ளனர் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

150 வகையான கலைத் திருவிழா போட்டிகளை 4 கோடி ரூபாய் செலவில் நடத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. இந்தாண்டு அதற்காக கூடுதலாக 5 கோடி ரூபாய் நிதியினை வழங்குவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருவாய் ஈட்டும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு இதுவரையில் வழங்கப்பட்டு வந்த உதவித் தொகையான 50,000 ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணையோடு, வருகிற ஆண்டு முதல் 75,000 ரூபாயாக உயர்த்தியுள்ளார்கள் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பள்ளியில் படிக்கும் மாணவர்களின் எதிர்காலத்தினை மனதிலே கொண்டு, இந்த அரசு சிறப்பான முறையில் பல்வேறு பணிகளைச் செய்து வருகின்றது. பள்ளிகளில் மாணவர்களுக்கு விபத்து ஏற்படும்போது, மாணவர்கள் விபத்தில் உயிரிழந்தால் தலா ஒருவருக்கு 1,00,000 ரூபாயும், பெரிய காயங்கள் ஏற்பட்டால் 50,000 ரூபாயும், சிறிய காயங்கள் ஏற்பட்டால் 25,000 ரூபாயும் வழங்கப்படும் என்ற வரலாறு தமிழகத்திலே படைக்கப்பட்டுள்ளது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆங்கில வழிக் கல்வியில் படிப்பதற்காக, 2,381 அங்கன்வாடி மையங்களில் LKG and UKG போன்ற வகுப்புகளில் 52,933 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். அந்தப் பணிகள் அனைத்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாணவர்களுடைய ஆங்கிலம் பேசும் திறனை ஊக்குவிப்பதற்காக spoken English classes நடத்தப்படும் என்ற ஒரு புதிய வரலாற்றை தமிழகத்திலே உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. சுமார் 45 இலட்சம் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு, ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுவதற்கு பயிற்சி கொடுக்க ஆசிரியர்களுக்கு கையேடுகளை அரசு வழங்கியிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்த அரசினுடைய தொலைநோக்குச் சிந்தனை என்பது நீங்கள் நினைப்பதுபோல அல்ல; மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அன்றைக்கும், இன்றைக்கும்பல்வேறுநிலைகளில்இந்தப்பணிகளைஆற்றிவருகின்றது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4–25

அதைப்போல, ஆசிரியர்களை ஊக்கப்படுத்துவதற்கும், மாணவர்களை உற்சாகப்படுத்துவதற்கும் விளையாட்டுகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பு வகித்த 2013–2014 ஆம் ஆண்டுகளில்தான் முதலமைச்சர் கேடயம் என்ற முறையில், அவர்களுக்கு ஊக்கத்தையும், ஆக்கத்தையும் தருகின்ற வகையில் ஆண்டுதோறும் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, விளையாட்டை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வரலாறு

படைத்தது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல பள்ளிக்கு 100 விழுக்காடு வருகைபுரிகின்ற ஆசிரியர், மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்றது.

நமது அரசினுடைய தொலைநோக்குச் சிந்தனையாக 60 கோடி ரூபாய் செலவில் 29,891 முதல்நிலை ஆசிரியர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. வருகின்ற ஆண்டில் உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் இருக்கின்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கும் மடிக்கணினிகளை வழங்குவதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கியிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, நமது அரசு தொலைநோக்குச் சிந்தனையோடு பல்வேறு நிலைகளில் இன்றைக்கு பணிகளை ஆற்றி வருகின்றது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணன் அவர்களைப் பார்க்கின்றபோது, அவர்கள் என்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கிறேன். ஆகவே, இங்கிருக்கின்ற நிலைகளை மனதில்கொண்டுதான் இந்த அரசு பல்வேறு நிலைகளில் இன்று அந்தப் பணிகளை ஆற்றி வருகின்றது. இளைஞர்களை ஊக்கப்படுத்துவதற்கு இந்த அரசு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகின்ற அடிப்படையில், நமது முதலமைச்சர் அவர்கள் விளையாட்டிற்கு ஆக்கத்தையும், ஊக்கத்தையும் வழங்கி வருகின்றார். ஒருகாலத்தில் பார்க்கும்போது, 60 இலட்சம் ஆண்டுகளுக்குப் பிறகு நாம் மனிதனாக மாறியிருக்கிறோம். அதற்குமுன்பு மனிதன் உணவிற்காக ஓடிக்கொண்டிருந்தான். அதேநேரத்தில் அங்கிருக்கின்ற மிருகங்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றுவதற்கு ஓடிக்கொண்டிருந்தான்; அப்போது உடல் ஆரோக்கியமாக வாழ்ந்து காட்டினான். இன்றைக்கு இருக்கின்ற மனிதர்கள் நடப்பதுமில்லை, ஓடுவதுமில்லை. உணவு உற்பத்தியில் உயர்ந்துகொண்டிருக்கின்ற நேரத்தில் நாம் இன்றைக்கு நிலைகளை மாற்றிக்கொண்டிருக்கின்றோம் என்பதை நாம் உணர்ந்துகொண்டுதான் இருக்கின்றோம். நமது தமிழக முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை தமிழகத்தில் கொண்டு வருகின்ற நிலையில், 12,524 கிராம ஊராட்சிகளிலும், 528 பேரூராட்சிகளிலும் ரூ.76.23 கோடியில் “அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம்” என்ற திட்டம் இளைஞர்களை ஊக்கப்படுத்துவதற்காக

செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கு பல்வேறு உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு நான் பதில் அளித்துள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, பள்ளிக் கல்வித் துறை சார்பான அறிவிப்புகளின் தலைப்புகளை மட்டும் நான் தற்போது வாசிக்கின்றேன். அறிவிப்புகளை நான் முழுமையாகப் படித்ததாகக்கருதி, அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்

பள்ளிக் கல்வித் துறை

1. 1,575 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களாக தரம் உயர்த்துதல்

பள்ளி மாணவர்களுக்காக பல்வேறு நலத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதன் காரணமாக அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் மாணவர்கள் சேர்க்கை அதிகரித்துள்ளதைக் கவனத்தில்கொண்டு, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் நலன் கருதி, 1,575 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.1.11 கோடி கூடுதல் செலவில் தரம் உயர்த்தப்படும்.

2. 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் நலனுக்காக பள்ளி பரிமாற்றத் திட்டம் செயல்படுத்துதல்

பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே உள்ள திறமைகள் மற்றும் கற்றல் கற்பித்தலில் பின்பற்றப்படும் நல்ல நடைமுறைகளைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளும் வகையில், வரும் கல்வியாண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 8,234 அரசு மற்றும் அரசு உதவி பெறும் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் பள்ளிப் பரிமாற்ற திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.82.34 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

3. அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் ஆசிரியரல்லா பணியிடங்கள் இருப்பதை உறுதி செய்யத் தேவையான ஆசிரியரல்லா பணியிடங்கள் தோற்றுவித்தல்

பள்ளிக் கல்வி துறையின்கீழ் இயங்கும் அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நிருவாகம், அலுவலகம் தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான அளவில் ஆசிரியரல்லா பணியிடங்கள் இருப்பதை உறுதி செய்வதற்கு தேவையின் அடிப்படையில் உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள் அல்லது பதிவறை எழுத்தர்கள் பணியிடங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ.12.84 கோடி செலவில் தோற்றுவிக்க வழிவகை செய்யப்படும்.

4. சிறைவாசிகளுக்கான சமநிலைக் கல்வித் திட்டம் செயல்படுத்துதல்

தமிழகத்தில் 2019–2020 ஆம் ஆண்டில் சிறைவாசிகளுக்கான சிறப்பு அடிப்படை எழுத்தறிவுக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தேர்ச்சிபெற்ற சிறைவாசிகளுக்கு, அடுத்தக் கட்டமாக மூன்றாம் வகுப்பிற்கு நிகரான சமநிலைக் கல்வித் திட்டம், மாநில அரசின் சிறப்புத் திட்டமாக இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.20.33 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

5. வளர்ச்சியில் முக்கியத்துவம் பெறும் மாவட்டங்களில் வயது வந்த கற்போர்களுக்கு தொழிற்திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்

வளர்ச்சியில் முக்கியத்துவம் பெறும் இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் 2019–2020 ஆம் ஆண்டில் சிறப்பு பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் செயல்படும் கற்போர் மையங்களில் பயிலும் வயது வந்த கற்போர்களுக்கு அடிப்படை எழுத்தறிவு வழங்குவதுடன் அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்திட ஏதுவாக தொழிற்திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் வழங்கப்படும். இத்திட்டம் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்

ஆணைப்படி தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் வாயிலாக செயல்படுத்தப்படும்.

6. பொதுத் தேர்வுகளுக்கு தரம் மேம்படுத்தப்பட்ட புதிய மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்குதல்

பொதுத் தேர்வு மதிப்பெண் சான்றிதழ்களின் தரத்தினை மேம்படுத்தி புதிய வடிவமைப்பில் எளிதில் கிழிக்க இயலாத மற்றும் நீரினால் சேதமடையாத வகையில் செயற்கை இழையாலான மேம்படுத்தப்பட்ட மதிப்பெண் சான்றிதழ்கள் மாணவர்களுக்கு வழங்கப்படும். இத்திட்டம் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.13.50 கோடி செலவில் 2020–2021 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படுத்தப்படும்.

7. செயல்வழி பயன்பாட்டுக் கற்றல் மற்றும் புதுமை மையங்கள் ஏற்படுத்துதல்

பின்தங்கிய ஒன்றியங்களில் முன்னோடித் திட்டமாக தெரிவு செய்யப்பட்ட 5 அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 4 மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் உள்ள தொழிற்கல்வி ஆய்வகங்களை நவீனமயமாக்கவும் ஆசிரியர்களின் திறனை புத்தாக்கம் செய்யவும், செயல்வழி பயன்பாட்டு கற்றல் மற்றும் புதுமை மையங்கள் ஏற்படுத்தப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.2.00 கோடி செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

8. மாணவர்களின் தனிப்பட்ட கற்றல் வளர்ச்சியினை ஊக்குவித்தல்

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் தனிப்பட்ட கற்றல் தேவைகள் மற்றும் கற்றலுக்கான சரியான வழிமுறைகளை வகுத்தல் போன்றவற்றிற்கான கற்பித்தல் வளங்களை உருவாக்கும் பொருட்டு ஆசிரியர்களுக்கு உறுதுணையாக இருக்கும் வண்ணம், மென்பொருள் தொழில்நுட்ப அடிப்படையிலான “மாணவர்களின் தனிப்பட்ட கற்றல் வளர்ச்சியினை ஊக்குவித்தல்” என்ற திட்டம் பின்தங்கிய ஒன்றியங்களில் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.2.00 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

9. தமிழிலும், ஆங்கிலத்திலும் ஒலி வடிவில் பாடநூல்களை தயாரித்து வழங்குதல்

அனைத்து வகுப்புகளுக்கும் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடத் திட்டத்தின்படி வடிவமைக்கப்பட்ட புதிய பாடநூல்களை சிறப்பு கவனம் தேவைப்படும் மாணவர்களுக்குப் பயன்படும்வகையில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ஒலி வடிவில் உருவாக்கப்பட்டு DHIKSHA மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் இணையதளம் (TNTP) ஆகியவற்றில் பதிவேற்றம் செய்யப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.30.00 இலட்சம் செலவில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

10. மாணவர்களின் திறனை வெளிக்கொணர்வதற்கு ஏற்றவாறு வினாத்தாள் தயாரிப்பதற்காக ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குதல்

மாணவர்களின் கற்றல் செயல்பாடுகளைத் தொடர்ந்து மதிப்பீடு செய்யும்பொருட்டு கற்றல் விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களின் திறனை வெளிக்கொணர்வதற்கு ஏற்றவாறு வினாக்களை வடிவமைப்பதுடன் மாணவர்கள் பாடக் கருத்துகளைப் புரிந்துகொள்வதில் உள்ள இடர்பாடுகளைக் கண்டறிந்து தீர்வு காண்பது தொடர்பாக அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி வழங்கப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.39.41 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கப்படும்.

11. மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

11 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களின் மாணவர் விடுதி, பயிற்சி அரங்கம் மற்றும் ஆய்வகம் போன்ற உட்கட்டமைப்புகளுக்குத் தேவையான பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.4.93 கோடி செலவில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

12. மாவட்ட மற்றும் மாநில அளவில் வண்ணத் திருவிழா நடத்துதல்

மாணவர்களிடையே வண்ணம் தீட்டுதல், கருத்துகளை உருவமாக வரைதல், பயனற்ற பொருட்களைப் பயன்படுத்தி புதிய பொருட்களை உருவாக்குதல் போன்ற திறமைகளை வெளிக்கொணர்ந்து மாணவர்களின் படைப்பாற்றலையும், கலை உணர்வையும், தனித் திறமைகளையும் மிளிரச் செய்யும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அளவில் வண்ணத் திருவிழா நடத்தப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.5.00 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

13. அரசுப் பள்ளிகளில் 2 மற்றும் 3 ஆம் வகுப்புகளில் பயிலும் கற்றலில் பின்தங்கிய மாணவர்களுக்கு குறைதீர் கற்றல் பயிற்சிப் புத்தகம் வழங்குதல்

அனைத்து மாணவர்களும் ஒரே சீராகக் கல்வி கற்கும் வகையில், அரசுப் பள்ளிகளில் 2 மற்றும் 3 ஆம் வகுப்புகளில் பயிலும் கற்றலில் பின்தங்கிய மாணவர்களைக் கண்டறிந்து அவர்களின் தேவைக்கு ஏற்றவாறு குறைதீர் கற்றல் செய்முறை பயிற்சிப் புத்தகம் உரிய வல்லுநர்களைக்கொண்டு தொகுக்கப்பட்டு வழங்கப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.100.65 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

பிற்பகல் 4–30

14. சிறப்பு பயிற்றுநர்கள் மற்றும் உடலியக்க வல்லுநர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி வழங்குதல்

சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளின் கல்வி அறிவையும், அவர்களது உடல் மற்றும் மனவலிமையையும் மேம்படுத்தும் வகையில் புதிய பயிற்சி முறைகளையும், நவீன குறைநீக்கும் கருவிகளையும் நல்ல முறையில் பயன்படுத்திட சிறப்புப் பயிற்றுநர்கள் மற்றும் உடலியக்க வல்லுநர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி வழங்கப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்களின் ஆணைப்படி ரூ.19.76 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

15. சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான உள்ளடக்கிய கல்வியை மேம்படுத்த நவீன கற்றல் மற்றும் உடலியக்க உபகரணங்கள் வழங்குதல்

உள்ளடக்கிய கல்வித் திட்டத்தின்கீழ் 51 பள்ளி ஆயத்தப் பயிற்சி மையங்களில் சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் பயிற்சியை மேம்படுத்திடும் விதமாக புதிய கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் மற்றும் உடலியக்க பயிற்சியளிக்கும் நவீன உபகரணங்கள் வழங்கப்படும். மேலும், 20 பள்ளிகளில் ஆயத்தப் பயிற்சி மையங்களின் செயல்பாடுகளை மேம்படுத்தும்பொருட்டு புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.82.20 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

16. டி.பி.ஐ. வளாகத்தில் நூலகம் அமைத்தல்

பள்ளிக் கல்வித்துறை சார்ந்த இயக்ககங்கள் செயல்படும் டி.பி.ஐ. வளாகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அவ்வளாகத்திற்கு வருகை புரியும் பொது மக்கள் ஆகியோரின் பயன்பாட்டிற்காக டி.பி.ஐ. வளாகத்தில் நூலகம் ஒன்று அமைக்கப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.9.00 இலட்சம் இதற்கென செலவிடப்படும்.

17. 120 மாதிரிப் பள்ளிகளில் தகவல் களஞ்சியங்கள் அமைத்தல்

2018–2019 மற்றும் 2019–2020 ஆம் கல்வி ஆண்டுகளில் 120 மாதிரிப் பள்ளிகள் அமைக்கப்பட்டன. இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே இளம் பருவத்திலேயே நூல்கள் மற்றும் வார இதழ்களை வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கி அறிவுத் திறனைக் கூர்மையாக்கி, படைப்பாற்றலை ஊக்குவிக்கும் விதமாக ஒவ்வொரு மாதிரிப் பள்ளியிலும் நூல்கள், வார இதழ்கள் மற்றும் நாளிதழ்கள் கொண்ட தகவல் களஞ்சியம் ஏற்படுத்தப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இத்திட்டம் ஆண்டுக்கு ரூ.30 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

18. அனைத்து நூலகங்களிலும் குடும்ப நூலக உறுப்பினர் அட்டை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்துதல்

பொது மக்கள், பெண்கள், இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க, ஒரே குடும்பத்தில் உள்ள அதிகபட்சம் ஐந்து உறுப்பினர்கள் பயன்படுத்தும் வகையில் குடும்ப நூலக உறுப்பினர் அட்டை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டத்தின்மூலம் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குடும்பத்தைச் சார்ந்த ஒருவர் ரூ.100/– செலுத்தி உறுப்பினராகி ஒரே சமயத்தில் 5 நூல்களைப் பெறலாம். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

19. வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் பள்ளி மாணவர்களுக்கு கேடயம் வழங்குதல்

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே வாசிக்கும் ஆர்வத்தை ஊக்குவிக்கும் விதமாக, ஓர் ஆண்டில் நூலகத்தை அதிக நேரம் பயன்படுத்திய மாணவர்களுக்கு ஒரு மாவட்டத்தில் மூன்று மாணவர்கள்வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.1,000/– மதிப்புள்ள கேடயம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இத்திட்டம் ரூ.1.50 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

20. மாணவர்களின் வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் ஆசிரியருக்கு கேடயம் வழங்குதல்

மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்து மாணவர்களுக்கும், நூலகத்திற்கும் இடையே ஒரு அறிவுப் பாலமாகச் செயல்படும் ஆசிரியர் பெருமக்களைக் கௌரவிக்கும் வகையில் மாவட்ட அளவில் 3 ஆசிரியர்களுக்கு ரூ.2000/- மதிப்புள்ள கேடயம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இத்திட்டம் ரூ.2.50 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

21. குடியிருப்பு வளாகங்களில் சமுதாய நூலகம் அமைத்தல்

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் பெருகியுள்ள நிலையில், வீடெங்கும் வாசிப்பு

பழக்கத்தை அதிகரிக்கும் விதமாக குடியிருப்பு வளாகங்களில் குடியிருப்போர், பொது நூலகத் துறைக்கு குறைந்தபட்ச வைப்புத் தொகையாக ரூ.20,000/– மற்றும் நூலகம் செயல்படுவதற்கான அறை மற்றும் தளவாடப் பொருட்களை வழங்கும்பட்சத்தில் அருகிலுள்ள பொது நூலகங்கள்மூலம் நூல்கள் மற்றும் இதழ்கள் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

22. சென்னை அண்ணாநகர் (கிழக்கு) நூலகத்திற்கு இணைப்புக் கட்டடம் அமைத்தல்

சென்னை மாநகரின் பிரதான பகுதியான அண்ணா நகர் (கிழக்கு) பகுதியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவாக அமைந்துள்ள பொது நூலகத்தின் வாசகர்களின் நலன் கருதி, அனைத்து நவீன வசதிகளுடன்கூடிய இணைப்புக் கட்டடம் புதியதாகக் கட்டப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.75.00 இலட்சம் செலவில் இப்பணி நிறைவேற்றப்படும்.

23. 11 மாவட்டங்களில் உள்ள நூலகக் கட்டடங்களைப் புனரமைத்தல்

பொது நூலகங்களைப் பயன்படுத்தி வரும் வாசகர்களின் நலன் கருதியும், நூலகக் கட்டமைப்புகளை வலுப்படுத்தும்பொருட்டும், வாசகர் பயன்பாடு அதிகமாக உள்ள 11 மாவட்டங்களில் சொந்தக் கட்டடங்களில் செயல்படும் 17 நூலகக் கட்டடங்களின் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.1.00 கோடி செலவில் இப்பணிகள் நிறைவேற்றப்படும்.

24. மத்திய மற்றும் மாநில அரசின் விருது பெற்ற தமிழ் நூல்களை நூலகங்களுக்கு வாங்குதல்

ஒவ்வொரு ஆண்டும் மத்திய மற்றும் மாநில அரசின் விருது பெறும் தமிழ் நூல்கள் மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் கிளை நூலகங்களில் வாசகர்களின் பயன்பாட்டிற்கு வாங்கப்படும்.

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ஆண்டு ஒன்றிற்கு உத்தேசமாக ரூ.60.00 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

25. இயற்கை எய்திய நூலகப் பணியாளர்களின் நூல் இழப்பிற்கான அபராதத் தொகையினை இரத்து செய்தல்

பணிக்காலத்தில் இயற்கை எய்தும் நூலகப் பணியாளர்களின் மொத்த நூல் இழப்புத் தொகையில் ரூ.5000/– மட்டுமே இதுவரை இரத்து செய்யப்பட்டு வரும் நிலையில், வரும் ஆண்டு முதல் அப்பணியாளர்களின் நூல் இழப்பிற்கான அபராதத் தொகை முழுவதுமாக இரத்து செய்யப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

26. அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தையல், இசை மற்றும் ஓவியம் ஆகிய பாடங்களைப் பயிற்றுவிக்க தேவையான உபகரணங்கள் வழங்குதல்

தமிழகத்தில் உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி இணை செயல்பாடுகளை ஊக்குவிக்கும் விதமாக தையல், இசை மற்றும் ஓவியம் ஆகிய பாடங்களைப் பயிற்றுவிக்கத் தேவையான உபகரணங்கள் மற்றும் கருவிகள் வழங்கப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.8.29 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

27. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் என்பதை தனியார் பள்ளிகள் இயக்ககம் என பெயர் மாற்றம் செய்தல்

தமிழ்நாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் அனைத்து வகை தனியார் சுயநிதிப் பள்ளிகளை நிருவகிப்பதற்கும், ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம், 2018 இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி அனைத்து வகை தனியார் சுயநிதிப் பள்ளிகளும் ஒரே இயக்ககத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு, மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் என்பது தனியார் பள்ளிகள் இயக்ககம் என

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி பெயர் மாற்றம் செய்யப்படும்.

28. மதிப்பெண் சான்றிதழ்களில் பெற்றோர்களின் பெயர்களை அச்சிட்டு வழங்குதல்

பத்தாம் வகுப்பு மாணவர்களின் பொதுத் தேர்வு மதிப்பெண் சான்றிதழ்களில் மாணவர் பெயருடன் பெற்றோர் பெயரும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அச்சிட்டு வழங்கப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

29. கலை, இலக்கியப் போட்டிகள் மற்றும் பாரம்பரிய உணவுத் திருவிழா நடத்துதல்

மாணவர்களின் உள்ளார்ந்த திறமைகளையும், தனித்துவமான கலைத் திறன்களையும் வளர்க்கும் வண்ணம் மாநில மற்றும் குறுவள மைய அளவில் அனைத்துப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஐம்பதிற்கும் மேற்பட்ட கலை, இலக்கியப் போட்டிகள் நடத்தப்படும். மேலும், அனைத்துப் பள்ளிகளிலும் மாணவர்களிடையே ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தினை ஊக்குவித்திட குறுவள மைய அளவில் பாரம்பரிய உணவுத் திருவிழா நடத்தப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.5.00 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

30. மனத்திறன் தேர்வு மற்றும் படிப்பறிவுத் திறன் தேர்விற்கான மாதிரி வினா–விடை கையேடு வழங்குதல்

திறனறித் தேர்வுகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு மனத் திறன் தேர்வு மற்றும் படிப்பறிவுத் திறன் தேர்விற்கான மாதிரி வினா–விடை கையேடு வழங்கப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.20.08 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

31. மேல்நிலைப் பள்ளிகளில் பாடத் தொகுப்புகள் மேம்படுத்துதல்

2020–2021 ஆம் கல்வி ஆண்டு முதல் தமிழகத்தில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள பாடப் பிரிவுகளில் மாணவர்கள் உயர் கல்வியைத் தேர்வு செய்வதற்கும், வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும் ஏற்ப மூன்று முதன்மைப் பாடங்கள் அல்லது நான்கு முதன்மைப் பாடங்கள் கொண்ட பாடத் தொகுப்புகளைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வழிவகை செய்யும் திட்டம் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி செயல்படுத்தப்படும்.

32. அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு திருக்குறள் புத்தகம் வழங்குதல்

உலக பொதுமறை என்னும் சிறப்புமிக்க நூலான திருக்குறளை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன ஆசிரியர்களைக் கொண்டு மாணவர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் எளிய உரைவடிவில் உருவாக்கி அதனை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் வாயிலாக அச்சிட்டு, தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு வழங்கப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இத்திட்டம் ரூ.27.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

33. ஆசிரியர் தேர்வு வாரியத் தேர்வுகளை நடத்திடும் நிருவாக அலுவலர்களுக்குப் பயிற்சி வழங்குதல்

ஆசிரியர்தேர்வுவாரியம்நடத்தும்வெளிப்படைத்தன்மையிலான கணினி வழி தேர்வுகளின் செயல்பாடுகளை வலுப்படுத்த பள்ளிக் கல்வித்துறை நிருவாக அலுவலர்களான முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர், தலைமையாசிரியர் நிலையில் உள்ள கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர் தேர்வு வாரிய அலுவலர்களுக்கு மண்டல வாரியாகப் பயிற்சி வழங்கப்படும். மேலும் பிற மாநிலங்களில் போட்டித் தேர்வு நடத்தும் தலைசிறந்த நிறுவனங்களைப் பார்வையிட்டு பயிற்சி பெறவும் வழிவகை செய்யப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின்

நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இப்பயிற்சி ரூ.75.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

34. ஆசிரியர் பணித் தெரிவிற்கு விண்ணப்பிக்கும் பணிநாடுநர்கள் பயன்பெறும் வகையில் தகவல் மையங்கள் (KIOSK) ஏற்படுத்துதல்

ஆசிரியர் தேர்வு வாரியத்தினால் வெளியிடப்படும் பணித் தெரிவுகளுக்கான அறிவிக்கைகள் மற்றும் தொடர்புடைய இதர விவரங்களை, ஆசிரியர் பணி நாடுநர்கள் அறிந்துகொள்ளும் வகையிலும், பணிநாடுநர்கள் விண்ணப்பிக்க உதவும் நோக்கத்துடனும், ஒவ்வொரு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகம், மாவட்ட கல்வி அலுவலகம் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரக் கல்வி அலுவலகங்களில் தகவல் மையங்கள் (KIOSK) ஏற்படுத்தப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.10.00 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

35. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் கல்விச் சுற்றுலா செல்லும்போது அரசு அருங்காட்சியகங்களைப் பார்வையிட ஊக்குவித்தல்

மனித நாகரிகத்தின் முழுமையான வரலாறு, தமிழர்களின் தொன்மை, இந்தியப் பண்பாடு, கலாச்சாரம் போன்ற ஆழமான சிந்தனைகளை, காட்சிகள் மற்றும் கலைப் பொருட்கள் வாயிலாக மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும்பொருட்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் கல்விச் சுற்றுலா செல்லும்போது அரசு அருங்காட்சியகங்களைப் பார்வையிட பெரிதும் ஊக்குவிக்கப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

36. ஆசிரியர் தேர்வு வாரியத்தினால் நடத்தப்படும் கணினி வழி தேர்வுகளை வலுப்படுத்திட தலைசிறந்த கல்வி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளுதல்

ஆசிரியர் தேர்வு வாரியத்தினால் நடத்தப்படும் கணினி வழி தேர்வுகளை வலுப்படுத்திடவும் அதன் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்திடவும் IIT, MIT போன்ற நிறுவனங்களுடன் தொழில்நுட்பம் சார்ந்த ஆலோசனைகளைப் பெற புரிந்துணர்வு

ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

பள்ளிக் கல்வித் துறையின் அறிவிப்புகளில் தலைப்புகளை மட்டும் படித்தேன். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையிலும் தலைப்புகளை மட்டும் படிக்கிறேன். மற்றவற்றையெல்லாம் நான் படித்ததாக நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1. கோயம்புத்தூர் நேரு விளையாட்டரங்கில் உள்ள செயற்கை இழை தடகள ஓடுபாதையை ரூ.6.50 கோடி செலவில் புதுப்பித்தல்

தற்போது, தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான தடகளப் போட்டிகள் செயற்கை இழை தடகள ஓடுபாதைகளில் மட்டுமே நடத்தப்படுகிறது. கோயம்புத்தூர் நேரு விளையாட்டரங்கில் தற்போது உள்ள செயற்கை இழை தடகள ஓடுபாதை தொடர் பயன்பாடு மற்றும் தேய்மானம் காரணமாக பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது.எனவே,கோயம்புத்தூர் நேரு விளையாட்டரங்கில் உள்ள செயற்கை இழை தடகள ஓடுபாதை இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.6.50 கோடி செலவில் புதுப்பிக்கப்படும்.

2. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் ரூ.2.97 கோடி செலவில் பாரம்பரிய மற்றும் சாகச விளையாட்டுகளுக்கான மையம் அமைத்தல்

ஒலிம்பிக், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் உலக சாம்பியன்ஷிப் போட்டிகளில் சேர்க்கப்பட்டுள்ள பாரம்பரிய மற்றும் சாகச விளையாட்டுகளான வில் வித்தை, பாறை ஏறுதல் மற்றும் படகோட்டுதல் போன்றவற்றில் ஈடுபடும் விளையாட்டு வீரர்களின் செயல்திறனை மேம்படுத்த, தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் பாரம்பரிய மற்றும் சாகச விளையாட்டுகளுக்கான மையம் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.2.97 கோடி செலவில் அமைக்கப்படும்.

3. தேசிய மாணவர் படை மாணாக்கர்களின் பயிற்சிக்காக ரூ.90.00 இலட்சம் செலவில் 50 மீ. துப்பாக்கி சுடுதல் பயிற்சி மையம் அமைத்தல்

தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் பயிற்சி மேற்கொள்ள பிரத்யேகமான 50 மீ. துப்பாக்கி சுடுதல் மையம் இன்றியமையாததாகும். எனவே, மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் 50 மீ. துப்பாக்கி சுடுதல் பயிற்சி மையம் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.90.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

4. ரூ.1.20 கோடி செலவில் மதுரை மாவட்டத்தில் தேசிய மாணவர் படையின் விமானப்படை அணியை நிறுவுதல்

தேசிய மாணவர் படை மாணாக்கர்களின் விமானப்படை பயிற்சிக்காக சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் விமானப் படை அணி நிறுவப்பட்டுள்ளது. தென் மாவட்டங்களிலுள்ள தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் விமானப்படை பயிற்சி பெற ஏதுவாக, மதுரை மாவட்டத்தில் தேசிய மாணவர் படையின் விமானப்படை அணி இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.1.20 கோடி செலவில் நிறுவப்படும்.

பிற்பகல் 4–35

5. பெரம்பலூர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் ரூ.2.00 கோடி செலவில் நிருவாக அலுவலகம் மற்றும் தங்குமிட வசதிகள் கட்டுதல்

பெரம்பலூர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பயிற்சி முகாம்கள் நடத்தப்படுவதால் தங்குமிட வசதிகள் தேவைப்படுகின்றன. இந்த விளையாட்டு வளாகத்தில் நிருவாக அலுவலகப் பகுதியானது திறந்தவெளி விளையாட்டரங்கத்தில், பார்வையாளர் மாடத்தின்கீழ் தாழ்வான பகுதியில் உள்ளதால் மழைக்காலத்தில் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. எனவே, பெரம்பலூர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் நிருவாக அலுவலகம் மற்றும் தங்குமிட வசதிகள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

ஆணையின்படி ரூ.2.00 கோடி செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. இராமநாதபுரம் பெருந்திட்ட வளாகத்தில் உள்ள விளையாட்டு விடுதிக் கட்டடத்தில் ரூ.35.31 இலட்சம் செலவில் தங்குமிட வசதி அமைத்தல்

இராமநாதபுரத்தில் உள்ள விளையாட்டு விடுதி முழுமையாக செயல்படுவதற்கு தங்குமிடம், படிப்பதற்கான அறை, சமையலறை மற்றும் உணவு அருந்தும் கூடம் ஆகிய வசதிகளை அமைப்பது அவசியம். எனவே, இராமநாதபுரத்தில் உள்ள விளையாட்டு விடுதியில் மேற்குறிப்பிட்ட வசதிகள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.35.31 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

7. திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்திற்கு ரூ.97.13 இலட்சம் செலவில் சுற்றுச்சுவர் அமைத்தல்

பார்வையாளர் மாடத்துடன்கூடிய திறந்தவெளி விளையாட்டரங்கம், 400 மீ தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம், கூடைப்பந்து ஆடுகளம், கையுந்துப் பந்து ஆடுகளம், இறகுப்பந்து ஆடுகளம், உடற்பயிற்சிக் கூடம், இறகுப்பந்து உள்ளரங்கம் மற்றும் நீச்சல் குளம் ஆகிய விளையாட்டு வசதிகளைக் கொண்ட திருவள்ளூர் மாவட்ட விளையாட்டு வளாகத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம். எனவே, திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்தினைச் சுற்றிலும் சுற்றுச் சுவர் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.97.13 இலட்சம் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

8. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் ரூ.5.10 கோடி செலவில் பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் அமைத்தல்

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம், பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்துகிறது மற்றும் விளையாட்டுப் போட்டிகளுக்கான அணிகளை

தயார் செய்கிறது. போதுமான உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாத காரணத்தால் அணிகள் பயிற்சிக்கு வெளியே செல்லும் நிலை உள்ளது. எனவே, தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.5.10 கோடி செலவில் அமைக்கப்படும்.

9. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் ரூ.2.90 கோடி செலவில் மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டு மையம் அமைத்தல்

மாற்றுத் திறனாளிகள் விளையாடவும், பயிற்சி பெறவும் போதிய வாய்ப்பு கிடைப்பதில்லை. எனவே, பல்வேறு நிலையிலான விளையாட்டுப் போட்டிகளில் மாற்றுத் திறனாளிகள் சாதனை படைக்க ஏதுவாக அவர்களின் திறமைகளை மேம்படுத்தும் வகையில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டு மையம் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.2.90 கோடி செலவில் அமைக்கப்படும்.

10. தேசிய மாணவர் படை மாணாக்கர்களின் பயிற்சிக்காக ரூ.60.00 இலட்சம் செலவில் இறக்குமதி செய்யப்பட்ட 15 விளையாட்டுப் பயிற்சி துப்பாக்கிகள் கொள்முதல் செய்தல்

தேசியமாணவர்படைமாணாக்கர்களுக்கானதேசியஅளவிலான போட்டிகளில் துப்பாக்கி சுடும் போட்டி முக்கியமானதாகும். எனவே, சென்னை–‘A’ மற்றும் ‘B’, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய தொகுதி தலைமையிடங்களில் உள்ள தேசிய மாணவர் படை மாணாக்கர்களின் பயிற்சிக்காக இறக்குமதி செய்யப்பட்ட 15 விளையாட்டுப் பயிற்சி துப்பாக்கிகள் மற்றும் இதர சாதனங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.60.00 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

11. கல்லூரி செல்லும் விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகளுக்கு ரூ.16.27 இலட்சம் செலவில் விளையாட்டு விடுதி வசதிகள் அளித்தல்

வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகமுள்ள தனிநபர் விளையாட்டுகளான வில்வித்தை, வாள் சண்டை, ஜிம்னாஸ்டிக்ஸ், நீச்சல் மற்றும் டேக்வாண்டோ ஆகிய விளையாட்டுகளில் சிறந்து விளங்கும் கல்லூரி செல்லும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தங்கி பயிற்சி பெற விளையாட்டு விடுதி வசதிகள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.16.27 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

12. ரூ.25.00 இலட்சம் செலவில் திருச்சிராப்பள்ளியில் வானூர்தி பாவிப்பு மற்றும் .22 mm துப்பாக்கி சுடுதல் பாவிப்பு நிறுவுதல்

தேசிய மாணவர் படை மாணாக்கர்களின் பயிற்சிக்காக சென்னை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் வானூர்தி பாவிப்பு நிறுவப்பட்டுள்ளது. மேலும், மாணாக்கர்களின் துப்பாக்கி சுடும் பயிற்சிக்கு .22 mm *ரக துப்பாக்கிகள் அத்தியாவசியமானதாகும். எனவே, திருச்சிராப்பள்ளியில் வானூர்தி பாவிப்பு மற்றும் .22* mm *துப்பாக்கி சுடுதல் பாவிப்பு ஆகியவை இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.25.00 இலட்சம் செலவில் நிறுவப்படும்.*

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே உரையாற்றுகின்றபோது பல கருத்துகளை எடுத்துச் சொன்னார்கள். சூறாவளிக் காற்றுக்கும் அசையாமல் நிலைத்து நிற்கும் தேவதாரு மரத்தைப் போல அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்றைக்கும் நிலைத்து நிற்கும் என்பதை இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்டி, *(மேசையைத் தட்டும் ஒலி)* 2020–2021 ஆம் ஆண்டிற்குப் பிறகும் இந்த ஆட்சிதான் தமிழ்நாட்டில் நிலைத்து நிற்கும் என்பதையும் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்டி, *(மேசையைத் தட்டும் ஒலி)* வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள், நான் கொடுத்த விளக்கங்களை ஏற்று, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, பள்ளிக் கல்வித் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை தொடர்பான மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டு விடைபெறுகிறேன். நன்றி. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு மேம்பாட்டுத் துறையைப் பற்றியெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். TRB போட்டித் தேர்வில் தேர்ச்சி பெற்று, கிட்டத்தட்ட 663 பேர் 2½ ஆண்டு காலமாக ஆசிரியர் பணிக்காகக் காத்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் எப்போது பணி ஆணை வழங்குவீர்கள் என்பதை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அது தொடர்பான வழக்கு இப்போதுதான் நீதிமன்றத்தில் முடிந்திருக்கிறது. இன்னும் 15 நாட்களுக்குப் பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவரையும் அந்தப் பணிகளில் நியமனம் செய்யும் பணியை ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக நிறைவேற்றுவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.

முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் நான் பேசும்போதே பகுதிநேர ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்பிட்டேன். பகுதிநேர ஆசிரியர்கள் 13,000 பேர் இருக்கிறார்கள். அந்த 13,000 பேரையும் பணியமர்த்த வேண்டும் என்று சொன்னால் அதற்கென Teachers Recruitment Board இருக்கிறது; அதன்மூலமாகத்தான் பணியமர்த்த வேண்டுமென்று நீங்கள் சொல்வீர்கள். தற்போது சில பணியாளர்களை, அதிலும் குறிப்பாக, சமையல் பணியாளர்களையெல்லாம் தனியாக test வைத்து select செய்கிறீர்கள். அதேபோன்று, தனியாக test வைத்தாவது, இல்லையென்றால் அவர்களுக்கு ஒரு exemption கொடுத்தாவது, அந்த 13,000 பேரையும் பணி நிரந்தரம் செய்வதற்கான அறிவிப்பு

இன்று வரும் என்று எதிர்பார்த்தோம். இதுபற்றி பத்திரிகைகளில்கூட எழுதியிருந்தார்கள். வருங்காலத்திலாவது இந்த அரசு பரிசீலித்து, அதைச் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் இங்கே ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அப்பொழுது அவர்கள் SSA மூலமாகத்தான் தேர்வு செய்யப்பட்டார்கள். 16,500 பேரை முதலில் தேர்வு செய்தார்கள். படிப்படியாக அவர்கள் பணியமர்த்தப்பட்டு, ஏறத்தாழ இப்போது 12,312 பேர் இருக்கிறார்கள். அவர்களை முதன்முதலில் நியமிக்கின்றபோது, வாரத்தில் மூன்று நாட்கள்தான் அவர்களுக்கு பணிகள் வழங்கப்படும், ரூ.5,000/– ஊதியம் என்ற முறையில் ஒப்புதல் வழங்கித்தான் அவர்களை பணியில் நாம் நியமனம் செய்தோம். அதற்குப் பிறகு அது ரூ.6,000/–, ரூ.7,000/– என்று உயர்ந்து, தற்போது அது ரூ.7,500/– ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதற்காக மத்திய அரசு நமக்கு ரூ.5,000/– மட்டும்தான் வழங்குகிறார்கள். மீதமிருக்கின்ற ரூ.2,500/–ஐ மாநில அரசுதான் ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, மாநில அரசு அந்த நிதிகளை வழங்கி, இன்றும் சிறப்பான முறையிலே அவர்களை வழிநடத்திச் சென்று கொண்டிருக்கிறோம். நீங்கள் சொல்கின்ற கோரிக்கைகுறித்துஎன்னுடையகவனத்திற்குஇப்போதுவந்திருக்கிறது என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Ph.D. படிக்கும் ஆராய்ச்சி மாணவர்களுக்கு அரசுப் பல்கலைக்கழகங்களிலும், தனியார் பல்கலைக்கழகங்களிலும் stipend வழங்குவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Ph.D. படிக்கிற மாணவர்களுக்கு வருடந்தோறும் உதவித்தொகை வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய அளவிலே, மாநில அளவிலே, மாவட்ட அளவிலே நிறைய விளையாட்டு வீரர்கள் விளையாடி முடித்து, தற்போது வயதான காலத்தில் நிறைய பேர் நலிவுற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் ஏதாவது announce செய்ய நீங்கள் ஆலோசிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். உயர் கல்வித் துறையிலே பகுதிநேர விரிவுரையாளர்களுக்கு University Grants Commission 2010–ல் நாளொன்றுக்கு 1,000 ரூபாய் என்று வைத்து குறைந்தபட்ச சம்பளமாக ரூ.25,000/– 2019–ல் நாளொன்றுக்கு 1,500 ரூபாய் என்று வைத்து குறைந்தபட்ச சம்பளமாக ரூ.50,000/– என்ற அடிப்படையில் வழிகாட்டுதல் நெறிமுறைகளைக் கொண்டு வந்திருக்கிறது. இதை மற்ற மாநிலங்கள் எல்லாம் இப்போது அமல்படுத்திக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாடும் இதை அமல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கௌரவ விரிவுரையாளர்களுக்கு ஊதியத்தை 6,000ரூபாயிலிருந்து10,000ரூபாயாகஉயர்த்தியதுபுரட்சித்தலைவிஅம்மா அவர்கள்தான். 10,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாக உயர்த்தியதும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். ஆக, விரிவுரையாளர்கள் என்று இருப்பவர்களுக்கு இன்றைக்கு 15,000 ரூபாயாக ஊதியத்தை வழங்கிக்கொண்டிருக்கின்றன.என்பதைச்சுட்டிக்காட்டி,வரக்கூடிய காலகட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துக்கூறி, அந்த விரிவுரையாளர்களுக்குக் கூடுதலாக ஊதியம் வழங்குவதற்குண்டான வழிமுறையை அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 43-பள்ளிக் கல்வித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 43-பள்ளிக் கல்வித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.33,956,75,38,000/–, மூலதனக் கணக்கில் ரூ.224,68,00,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.29,50,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) கோரிக்கை எண் 49-இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 49-இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.216,90,79,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,50,00,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) கோரிக்கை எண் 20-உயர் கல்வித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 20 உயர் கல்வித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.4,794,34,55,000/–, மூலதனக் கணக்கில் ரூ.258,38,90,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.10,01,000/–

ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. *(மேசையைத் தட்டும் ஒலி)*

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(13–3–2020)* வெள்ளிக்கிழமை காலை *10–00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

–ஏதுமில்லை–

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

109. மானியக் கோரிக்கை எண் *43*–பள்ளிக் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2020–2021.* (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

110. மானியக் கோரிக்கை எண் *49*–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2020–2021.* (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

111. மானியக் கோரிக்கை எண் *20*–உயர் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2020–2021.* (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

112. வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) மானியக்

கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2020–2021. (தமிழ்)*

113. சுற்றுச்சூழல் *(சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)* மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2020–2021. (தமிழ்)*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-I

(571 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 43-பள்ளிக் கல்வித் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

முன்னுரை

"வளர்ச்சி மற்றும் நிருவாகத்தின் அனைத்து நிலைகளிலும் தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றுவதே எனது குறிக்கோளாகும்"

—மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர்
புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

கல்வியானது, தனிமனித நல்வாழ்வினை அளிப்பதுடன் சமூகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியினையும் அளிக்கிறது. இது திறனை மேம்படுத்துவதற்கான கருவியாக மட்டுமல்லாமல், எளிமையான பங்கெடுத்தலை ஊக்குவிக்கின்ற வலிமை மிகுந்த ஆயுதமாகவும் உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, மாநிலத்தில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் உயர்தரமான கல்வியை அளிக்கும் பொருட்டு பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ள ஏதுவாக இதுவரையில் இல்லாத அளவிற்கு, பள்ளிக் கல்விக்கென 2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.34,181.73 கோடியினை தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

*நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் (*Sustainable Development Goals*) என்ற இலக்குகளைக் கொண்ட தொகுப்பு உருவாக்கப்பட்டு, உலக அளவில் அனைவருக்கும் நிலையான மற்றும் நல்ல எதிர்காலத்தை அளிக்கும் வகையிலான திட்டம் ஐக்கிய நாடுகள் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதில் 4-வது இலக்காக "உள்ளடக்கிய மற்றும் அனைவருக்குமான தரமான கல்வி அளிப்பதை உறுதி செய்ய வேண்டும்" எனவும் "வாழ்நாள் முழுவதுமான கற்றலை மேம்படுத்துவது" எனவும் உள்ளது. தொடக்கக் கல்வி மற்றும் இடைநிலைக் கல்வி என இரண்டிலும் தமிழ்நாடு மிகச் சிறப்பாக செயலாற்றி வருகிறது. தொடக்கக் கல்வியில் ஏறக்குறைய 100 விழுக்காடு நிகர சேர்க்கை விகிதத்தை*

அடைந்த சில இந்திய மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு உள்ளது. மேலும், சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான சேர்க்கை விகிதம், பாலின சமநிலை குறியீடுகள், இளையோர் கற்றல் விகிதம், ஆசிரியர் மாணவர் விகிதம், மின்சார வசதி கொண்ட பள்ளிகள் விகிதம், பாதுகாப்பான குடிநீர், அடிப்படை சுகாதார வசதிகள் போன்ற இன்ன பிற குறியீடுகள் சார்ந்தும் இம்மாநிலம் மிகச் சிறப்பாக செயல்படுகிறது. இவ்வித இலக்குகளை அடைவதற்கு, திட்டமிடவும் பணியாற்றவும் பல்வேறு பங்கேற்பாளர்களைக் கொண்ட பணிக் குழுவானது அரசால் அமைக்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் தரமான கல்வி மற்றும் உள்ளடக்கிய கல்வி என்ற நான்காவது இலக்கினை அடைவதற்கு பல்வேறு வகையான நலத் திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசு, மாநிலத்தில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் பள்ளி வசதி அளிக்கும் வகையில் 37,459 அரசு பள்ளிகளையும், 8,357 அரசு உதவிபெறும் பள்ளிகளையும் நிருவகித்து வருகிறது. புதிதாக பள்ளிகளை தொடங்க வாய்ப்பில்லாத மலைப்பாங்கான மற்றும் வனப் பகுதிகளில் உள்ள கிராமங்களுக்கு போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதி செய்து தரப்படுகிறது. இதன் வாயிலாக, இவ்வரசு ஏறக்குறைய 100 விழுக்காடு பள்ளி வசதி அடைந்திருப்பதுடன், இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறையால் வெளியிடப்பட்ட, செயல்பாட்டு தரக் குறியீட்டின்படி பள்ளி வசதி அளித்தலில் முதலிடத்திலும் உள்ளது. தரமான மழலையர்க் கல்வியை அளிக்கும் பொருட்டு 2,381 அங்கன்வாடி மையங்களில் மாண்டிசோரி கல்வி முறை அடிப்படையிலான எல்.கே.ஜி. மற்றும் யு.கே.ஜி. வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

120 அரசு பள்ளிகள் மாதிரிப் பள்ளிகளாக மாற்றப்பட்டுள்ளன. இம்மாதிரிப் பள்ளிகள் மழலையர் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள ஒருங்கிணைந்த பள்ளிகளாக செயல்படுகின்றன. இப்பள்ளிகளில் கற்றல் கற்பித்தலை மேம்படுத்தும் வகையில் மிகச் சிறந்த கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. இம்மாதிரிப் பள்ளிகள், அருகில் உள்ள மற்ற பள்ளிகளுக்கு எந்தவொரு புதுமையான செயல்பாட்டிற்கும் செயல் விளக்கம் அளிக்கும் வகையில் செயல்படுகின்றன.

2020 மார்ச் 12]

பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கு கற்றலை மட்டுமே அளிக்காமல் அவர்கள் உடல் மற்றும் மன நலன்களிலும் சிறப்பு கவனம் செலுத்தக்கூடிய சூழலை அளிப்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. பள்ளிகளில் கற்றலுக்கான உகந்த சூழலை அளிப்பதற்காக 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.167.96 கோடி செலவில் தேவையான வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள், சுற்றுச்சுவர்கள், கழிவறைகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர், சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்காக கைப்பிடியுடன்கூடிய சாய்தளம் போன்ற தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வித உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி, பள்ளிகளில் கற்றலுக்கான உகந்த சூழலை ஏற்படுத்துவதற்காக நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் 2019-2020-ல் ரூ.277.88 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டதுடன், 2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.258.82 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

*மிக வேகமாக மாறிவரும் கற்றல் சூழலுக்கு ஈடுகொடுக்கும் வகையில் கற்பித்தல் முறைகளை தரம் உயர்த்தவும், கற்றல் விளைவுகளை மேம்படுத்தவும் பாடப் பொருட்களை எண்ணியமாக்கல் என்பது தவிர்க்க இயலாதது என்பதை தமிழ்நாடு அரசு நன்கு உணர்ந்துள்ளது. கல்வி மேலாண்மை தகவல் முறைமூலம் தமிழ்நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளிகளை பற்றிய தகவல்கள் பற்றிய முழு விவரங்கள் தகவல் மையத் தொகுப்பில் சேகரித்து வைத்து பராமரிப்பது, தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு திறன் வகுப்பறைகள் அளிப்பது, அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், உயர் தொழில்நுட்ப ஆய்வகங்களை அமைப்பது, விரைவு துலங்கல் குறியீட்டுடன் (*QR Code*) கூடிய செறிவூட்டப்பட்ட பாடப் புத்தகங்களை அறிமுகப்படுத்தியது, ஆசிரியர்களுக்கு தொட்டுணர் வருகைப் பதிவை அறிமுகப்படுத்தியது போன்றவற்றில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. மாணவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் "கல்வி தொலைக்காட்சி" என்ற பெயரில் தமிழ்நாடு அரசு கேபிள்* TV *நிறுவனத்தின் (*TACTTV*) மூலமாக கல்வி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டு வருகிறது.*

மற்ற கல்வி குழும பாடத்திட்டங்களுக்கு இணையாக கலைத் திட்டங்களும், பாடத்திட்டங்களும் நவீன கருத்துகளை உள்ளடக்கி

[2020 மார்ச் 12

செறிவூட்டப்பட்டுள்ளதாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. தற்போதைய முன்னேற்றங்களை அறிந்து கொண்டு தன்னைப் புதுப்பித்துக்கொள்ளும் வகையில் நவீன பாடக் கருத்துகள் பாடப் புத்தகங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. மாணவர்களின் திறமைகளை மேம்படுத்துவதற்காக, உயர் சிந்தனைத் திறன் கொண்ட வினாக்கள் பாடப் புத்தகங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவை மாணவர்களின் அறிவுத் திறனைக் கண்டறிவதோடு மட்டுமல்லாமல், அவர்களின் பயன்பாட்டுத் திறமையைக் கண்டறியும் வகையிலும் உள்ளதால் சிறந்த கற்றல் விளைவுகளை அடைய முடிகிறது. திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டங்களின்படி, நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி மாணவர்களை ஊக்கப்படுத்தும்வகையில் ஒளி-ஒலி பொருளடக்கத்தோடு இணைக்கப்பட்ட விரைவுத் துலங்கல் குறியீடுகளைப் (QR code) பயன்படுத்தி கூடுதல் விவரங்களை பெறுவதற்கான வழிமுறைகள் செறிவூட்டப்பட்ட பாடப் புத்தகங்களில் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. மாணவர்களின் வேலைவாய்ப்புப் பெறும் திறமையை மேம்படுத்தும் வகையில் பள்ளிகளில் தொழிற்கல்வி அளிப்பதன் மூலமாக மாணவர்களுக்கு திறன் மேம்பாடு அளிக்க சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது.

தமிழக அரசு, மாணவர் நலம் பயக்கும் எண்ணற்ற விலையில்லா நலத் திட்டங்களான சத்துள்ள மதிய உணவு, பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மடிக்கணினி, சீருடைகள், காலணிகள், புத்தகப்பை, கிரையான்ஸ், வண்ணப் பென்சில்கள், கணித உபகரணப் பெட்டி, நில வரைபட புத்தகம், கம்பளி ஆடைகள், மழைக் கோட்டுகள், உறை காலணிகள், காலுறைகள், பேருந்து பயண அட்டை மற்றும் மிதிவண்டிகள் போன்ற விலையில்லா பொருட்கள் வழங்குதல் ஆகியவற்றை செயல்படுத்தி வருகிறது. 10-லிருந்து 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் இடைநிற்றலை குறைத்திட சிறப்பு ஊக்கத்தொகை, மாணவர் விபத்துக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் வருவாய் ஈட்டும் பெற்றோர்களை இழந்த மாணவர்களுக்கான நிதியுதவி போன்ற ஏனைய நலத் திட்டங்களும் மாணவர்களின் நலனுக்காக செயல்படுத்தப்படுகின்றன. அனைத்து நலத் திட்டங்களும் திறம்பட செயல்படுத்தப்படுவதையும் அவற்றால் மாணவர்கள், முழுமையாக பயன் பெறுவதையும் உறுதி செய்யும் வகையில் இத்திட்டங்கள்

2020 மார்ச் 12]

கவனமாக கண்காணிக்கப்படுகின்றன. மாணவர்களுக்கான நலத் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்த நடப்பாண்டில் ரூ.2174.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு பள்ளிகளில் ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரம் தேவைக்கேற்ப இருப்பதை உறுதி செய்திடும்பொருட்டு போதுமான அளவில் ஆசிரியர்கள் அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு அரசு தரமான கல்வியை அளிப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதோடு மட்டுமல்லாமல், குழந்தைகளின் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் எழுதுதல், படித்தல் மற்றும் கணிதத் திறன் ஆகியவற்றை தொடர்ச்சியான கால இடைவெளியில் நடத்தப்படும் மதிப்பீட்டு முறைகளைக் கொண்டு அவர்களது அடைவு நிலையை மதிப்பீடு செய்திடவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இது ஆசிரியர்களின் செயல் திறமையை மதிப்பிட உதவுவதுடன், ஆசிரியர்களுக்குத் தேவையான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்கவும் பயன்படுகிறது. இவ்வரசு ஆசிரியர்களின் திறன் மேம்பாட்டிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து, 2019-2020 ஆம் ஆண்டு ரூ.61.63 கோடி செலவினத்தில் ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி வழங்கியுள்ளது.

இவ்வாறாக, குழந்தைகளிடம் முழுமையான வளர்ச்சியைக் கொண்டு வருவதற்கும், அவர்கள் கல்வியில் சிறப்பான நிலையை அடைந்து, எதிர்காலத்தில் நாட்டின் வளர்ச்சிக்கு தங்களது பங்களிப்பை அளித்திடும்வகையில் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இவ்வரசு மேற்கொண்டு வருகிறது.

2. தொடக்கக் கல்வி

2.1. முன்னுரை

தொடக்கக் கல்வியானது மழலையர் கல்விக்கும், உயர்நிலைக் கல்விக்கும் இடையே அமைந்துள்ள காலகட்டத்தில் முறையாகக் கற்கும் கல்வியாகும். இது ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரையிலான மாணவர்களின் அடிப்படை கற்றல் திறன்களாகிய வாசித்தல், எழுதுதல் மற்றும் கணிதத் திறன்களை உள்ளடக்கியுள்ளது. தொடக்கக் கல்வியானது, குழந்தைகளின் உடலியக்கத் திறன்களை பலவகைச் செயல்பாடுகளின்மூலம் வளர்ச்சியடையச் செய்கிறது.

மேலும், ஆராய்ந்து அறியும் திறனையும், படைப்பாற்றலையும் அதிகரித்துக்கொள்ள தொடக்கக் கல்வி ஊக்குவிக்கிறது. தொடக்கக் கல்வியில் தனிக்கவனம் செலுத்துவதன்மூலம் ஒரு சமூக மாற்றத்தை அடைய அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. 6 முதல் 14 வயதுள்ள குழந்தைகள் ஒவ்வொருவருக்கும், தரமான தொடக்கக் கல்வி கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், பல்வேறு நலத் திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

2.2. நோக்கம்

- 6 வயது முதல் 14 வயதிலான அனைத்து குழந்தைகளுக்கும் நல்ல தரமான கல்வியை அளித்தல்

- 6 வயது முதல் 14 வயதுள்ள அனைத்து குழந்தைகளையும் 100 விழுக்காடு பள்ளிகளில் சேர்த்தல் மற்றும் தக்க வைத்தலை உறுதிப்படுத்துதல்

- இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 அதன் உண்மையான உணர்வுடன் நடைமுறைப்படுத்துதல்

- புதிய தொடக்கப் பள்ளிகளைத் தொடங்கி அனைத்து குழந்தைகளுக்குமான பள்ளி வசதியை 100 விழுக்காடு உறுதி செய்தல்

- தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துதல்

- பள்ளிகளில் குறைந்தபட்ச அடிப்படை வசதிகளை உறுதி செய்தல்

- மக்கள்தொகை குறைவாக உள்ள பகுதிகளில் உண்டு உறைவிடப் பள்ளிகளைத் தொடங்குதல்

- புதிய பள்ளிகள் தொடங்க இயலாத குடியிருப்புப் பகுதிகளான அடர்ந்த காடுகள், மலைவாழ் பகுதிகள் போன்றவற்றில் போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதிகளை மாணவர்களுக்கு வழங்குதல்

2020 மார்ச் 12]

➢ *சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகள், பின்தங்கிய மற்றும் நலிவடைந்த பிரிவினைச் சார்ந்த குழந்தைகளுக்கு ஏற்ற உள்ளடக்கிய கல்விக்கான சூழலை ஏற்படுத்தித் தருதல்*

➢ *குழந்தைகளின் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் மற்றும் கணிதத் திறன்களை மேம்படுத்துதல்*

➢ *கல்விசார் மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகளில் குழந்தைகளுடைய அறிவுத் திறன்களை வலுப்படுத்துதல்*

2.3. பள்ளி வசதி ஏற்படுத்துதல்

6 வயது முதல் 14 வயது வரை உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011-ன்படி பள்ளி வசதி வழங்கப்படுவதை உறுதி செய்வது அரசின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். அறிவியல் சார்ந்த புவியியல் தகவல் முறைமையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள முறைமையின்படி தமிழகத்தில் உள்ள அனைத்துக் குடியிருப்புகளிலும் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 மற்றும் தமிழ்நாடு குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாயக் கல்வி மற்றும் உரிமை விதிகள், 2011 ஆகியவற்றில் வரையறுக்கப்பட்ட வழிமுறைகளின் அடிப்படையில் தொடக்க மற்றும் நடுநிலை பள்ளி வசதி ஏற்படுத்தப்படுவது உறுதி செய்யப்படுகிறது. அனைவருக்கும் தொடக்கக் கல்விக்கான பள்ளி வசதி பின்வருமாறு வழங்கப்படுகிறது:

➢ *புதிய தொடக்கப் பள்ளிகளைத் தொடங்குதல்*

➢ *தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துதல்*

➢ *மக்கள் தொகை பரவலாக உள்ள, பள்ளி வசதி இல்லாத குடியிருப்புகளில் உண்டு உறைவிடப் பள்ளிகள்/விடுதிகளைத் தொடங்குதல்*

➢ புதிய பள்ளிகள் தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லாத குடியிருப்புகளில் உள்ள குழந்தைகள் பள்ளி சென்று வர போக்குவரத்து/பாதுகாவலர் வசதி வழங்குதல்.

2.3.1. புவியியல் தகவல் முறைமை தகவல் தொகுப்பு (2019-2020)

புவியியல் தகவல் முறைமை அடிப்படையிலான தகவல் தொகுப்பானது 2012-2013 ஆம் ஆண்டு முதல் பராமரிக்கப்பட்டு வருகிறது. புவியியல் தகவல் முறைமையானது, துறை மற்றும் பொதுப் பயன்பாட்டிற்காக வலைத்தள மையமாகவும், பயனாளி எளிதாகப் பயன்படுத்தும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் உள்ள 58,734 பள்ளிகள் மற்றும் 92,234 குடியிருப்புகள் இம்முறைமைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் பள்ளி வரைபடப் பணி மேற்கொள்ளப்பட்டு, தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள் 2011-ன்படி, பள்ளி வசதி இல்லாத குடியிருப்புகளில் உள்ள அனைத்து குழந்தைகளும் பாதுகாப்பாக பள்ளி செல்வதற்குத் தேவையான வழிமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தமிழகத்தில் உள்ள 92,234 குடியிருப்புகளில் 89,995 குடியிருப்புகளில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகள் அமைந்துள்ளன. உயர் தொடக்க நிலையில் 91,040 குடியிருப்புகளில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் நடுநிலைப் பள்ளிகள் அமைந்துள்ளன. பள்ளி வசதி ஏற்படுத்த இயலாத குடியிருப்புகளில் உள்ள குழந்தைகளுக்கு போக்குவரத்து/ பாதுகாவலர் வசதி அல்லது உண்டு உறைவிடப் பள்ளி வசதி அளிக்கப்படுகிறது.

2.3.2. போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதி

புதிய பள்ளி தொடங்க இயலாத, மக்கள் அடர்த்தி குறைவாக உள்ள, பள்ளி வசதியற்ற குடியிருப்புகள் மற்றும் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு இடவசதி இல்லாத குடியிருப்புகளில் உள்ள குழந்தைகளுக்கு, பள்ளிக்கு வந்து செல்ல போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதி வழங்கப்படுகிறது. இக்குடியிருப்புகள் அரசுப் போக்குவரத்து வசதி இல்லாத/முறையான சாலை

2020 மார்ச் 12]

இணைப்பு வசதியில்லாத தொலைதூர/மலை/வனப் பகுதிகளில் அமைந்துள்ளன. 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.1148.96 இலட்சம் செலவில் 21,392 குழந்தைகளுக்குப் பள்ளிக்கு வந்து செல்ல போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

2.3.3. கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா

உண்டு உறைவிடப் பள்ளிகள் மற்றும் விடுதி வசதிகளை பெண் குழந்தைகளுக்கு மட்டும் ஏற்படுத்துவதன் மூலமாக அவர்களுக்கு பள்ளி வசதியையும், தரமான கல்வியையும் வழங்க இயலும் என்ற நோக்கில் கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன. இப்பள்ளிகள் தொடக்க நிலைக் கல்வி முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மேல்நிலைக் கல்வியை பெண் குழந்தைகள் தடங்கலின்றி தொடர்வதற்கான வாய்ப்பினை உறுதி செய்கின்றன.

தமிழகத்தில் 14 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கியுள்ள 44 ஒன்றியங்களில், 61 கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா உண்டு உறைவிடப் பள்ளிகள் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்த 61 பள்ளிகளில், 54 பள்ளிகள் முதல் வகையாகவும் (6 முதல் 8 வகுப்புகள்), 3 பள்ளிகள் இரண்டாம் வகையாகவும் (6 முதல் 10 வகுப்புகள்), 4 பள்ளிகள் மூன்றாம் வகையாகவும் (6 முதல் 12 வகுப்புகள்) செயல்படுகின்றன. இப்பள்ளிகளில் பயிலும் 10 முதல் 18 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு உணவு மற்றும் தங்கும் வசதி மற்றும் உதவித் தொகையுடன்கூடிய கல்வி வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பெண் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் 2019-2020 ஆம் ஆண்டு முதல் ஒரு மாதத்திற்கான உதவித்தொகை ரூ.150/-லிருந்து ரூ.200/- ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இப்பள்ளிகளில் தங்கிப் பயிலும் காலம் வரை மாணவியருக்கு குழுக் காப்பீடு வழங்கப்படுகிறது. ரூ.3591.60 இலட்சம் செலவில் 2019-2020 ஆம் கல்வியாண்டில் 4,635 குழந்தைகள், இப்பள்ளிகளில் பயின்று பயன்பெற்றுள்ளனர்.

2.3.4. உண்டு உறைவிடப் பள்ளிகள்

அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தலை உறுதி செய்வதற்காக, பரவலான மக்கள்தொகை உள்ள பகுதிகளில்

[2020 மார்ச் 12

வாழும் குழந்தைகளுக்காகவும், மலைப் பகுதி மற்றும் அடர்ந்த வனப் பகுதிகளில் வாழும் குழந்தைகளுக்காகவும், நகர்ப்புறத்தில் வாழும் வாய்ப்பு மறுக்கப்பட்ட குழந்தைகளுக்காகவும், தெருவோரக் குழந்தைகளுக்காகவும், பெரியோரின் பாதுகாப்பில்லாமல் வாழும் குழந்தைகளுக்காகவும், 11 உண்டு உறைவிடப் பள்ளிகளை அரசு நிறுவியுள்ளது. 2019-2020 ஆம் கல்வி ஆண்டில், நலிவடைந்த பிரிவினர் குழந்தைகளுக்காக பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டத்திலும்; திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் வட்டத்திலும் தலா 50 குழந்தைகள் பயிலும் இரண்டு உண்டு உறைவிடப் பள்ளிகள் புதியதாக ரூ.284.00 இலட்சம் செலவில் தொடங்கப்பட்டுள்ளன. இதன் வாயிலாக அதிக எண்ணிக்கையிலான நரிக்குறவர் இனக் குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர். 2019-2020 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கென ரூ.865.02 இலட்சம் செலவிடப்பட்டு, 9 மாவட்டங்களில் அமைந்துள்ள 13 உண்டு உறைவிடப் பள்ளிகளில் சுமார் 1,104 குழந்தைகள் பயன்பெற்று வருகின்றனர்.

2.3.5. பள்ளி செல்லா குழந்தைகளுக்கான சிறப்புப் பயிற்சி செயல்பாடுகள்

பள்ளி செல்லா குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்ப்பதற்கு அரசு எடுத்த தொடர் முயற்சிகளினால், 2011-2012 ஆம் ஆண்டில் 63,178 ஆக இருந்த பள்ளி செல்லா குழந்தைகளின் எண்ணிக்கை 2019-2020 ஆம் ஆண்டில் 30,104 என கணிசமாகக் குறைந்துள்ளது. இக்குழந்தைகளில் 29,740 குழந்தைகள் பள்ளிகளில் அவரவர் வயதுக்கு ஏற்ற வகுப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இக்குழந்தைகளுக்கு சிறப்புப் பயிற்சி மையங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. சிறப்புப் பயிற்சிக்குப் பின்னர் இக்குழந்தைகள் முறையான பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர். அரசு வழங்கும் கல்வி சார்ந்த அனைத்து விலையில்லாப் பொருட்களும் சிறப்புப் பயிற்சி மையங்களில் உள்ள குழந்தைகளுக்கும் வழங்கப்படுகின்றன. பள்ளிகளில் சேர்க்கப்பட்ட இக்குழந்தைகளுக்கு அரசால் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. சிறப்புப் பயிற்சி மையங்கள்மூலம் பயிற்சி பெற்ற 5,848 மாணவர்கள் எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்புகளில் 2019-2020 ஆம் ஆண்டில்

2020 மார்ச் 12]

தேர்ச்சி பெற்றுள்ளனர். பள்ளி செல்லா குழந்தைகளை முறையான பள்ளிக் கல்விக்கு கொண்டுவர வழங்கப்படும் சிறப்புப் பயிற்சி செயல்பாடுகளுக்காக 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.997.18 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2.3.6. இடம்பெயர்ந்து வரும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கான கல்வி

2019-2020 ஆம் ஆண்டில் பிற மாநிலம் மற்றும் பிற மாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்த தொழிலாளர்களின் 4,062 குழந்தைகள் கண்டறியப்பட்டுள்ளனர். இவர்களில் 3,975 குழந்தைகள், அவர்தம் வயதுக்கேற்ற வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதுபோன்று பிற மாநிலங்களில் இருந்து இடம்பெயர்ந்த 1,714 குழந்தைகளுக்கு அவர்தம் தாய்மொழியில் பாடம் கற்பிக்க, தெலுங்கு, ஹிந்தி, பெங்காலி மற்றும் ஒடியா மொழி கற்பிப்பதற்கு 85 கல்வி தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களது தாய்மொழியில் பாடப் புத்தகங்களும் வழங்கப்பட்டுள்ளன. பிற மாநிலத் தொழிலாளர்கள் தங்கள் மாநிலத்திற்குத் திரும்பும்போது எவ்வித தடங்கலும் இன்றி கல்வியைத் தொடர வேண்டும் என்பதற்காக அக்குழந்தைகளுக்கு இருமொழி (Bilingual) மாற்றுச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.63.93 இலட்சம் செலவில் இடம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி வழங்கப்பட்டுள்ளது.

2.3.7. சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான உள்ளடக்கிய கல்வி

சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள் தொடர்ந்து பள்ளிகளில் கல்வி பயில்வதற்கு ஏற்ற உதவி உபகரணங்கள் மற்றும் பிற உதவிகளும் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில், 1,24,194 சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள் அருகில் உள்ள பள்ளிகளில் சேர்க்கப்பட்டு 8,120 குழந்தைகளுக்கு வீட்டு வழிக் கல்வி வழங்கப்பட்டு வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் இத்தகைய குழந்தைகளுக்கு உள்ளடக்கிய கல்வி வழங்க ரூ.6,601.61 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டது. இக்குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பிற வசதிகளின் விவரங்கள் பின்வருமாறு:

சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ள முக்கிய வசதிகள்

வ. எண்.	வசதிகள்	பயனடைந்த மாணவர்—களின் எண்ணிக்கை	தொகை (ரூ. இலட்சத்தில்)
1.	உதவி உபகரணங்கள்	8,889	222.23
2.	வழித் துணையாளர் பயணப்படி	8,544	512.64
3.	போக்குவரத்துப் பயணப்படி	24,848	1490.88
4.	முழுமையாக பார்வையற்றோருக்கான புத்தகங்கள்	1,015	3.21
5.	பெரிய அச்சுப் புத்தகங்கள்	3,227	10.43
6.	பெண் குழந்தைகளுக்கான உதவித்தொகை	25,569	511.38
7.	சிறப்புப் பராமரிப்புத் தொகை	8,120	194.88

2.3.8. ஆரம்பகால ஆயத்தப் பயிற்சி மையங்கள்

85 ஆரம்பகால ஆயத்தப் பயிற்சி மையங்களில் 0 முதல் 6 வயது வரை உள்ள 1,159 சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள் 2019-2020 ஆம் கல்வியாண்டில் அவர்களின் குறைபாட்டிற்கு ஏற்ற சிறப்பு கல்வி மற்றும் பயிற்சி பெற்று பயனடைந்துள்ளனர்.

2.4. உட்கட்டமைப்பு வசதிகள்

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின்கீழ் அரசுப் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு 2019-2020 ஆம் ஆண்டு, 20 கூடுதல் வகுப்பறைகள், மாணவர்களுக்கான 1,475 கழிப்பறைகள் மற்றும் மாணவியருக்கான 1,849 கழிப்பறைகள் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல், 46 பள்ளிகளுக்கு குடிநீர் வசதி, 132 பள்ளிகளுக்கு 4,493 மீட்டர் சுற்றுச் சுவர், சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான 1,643 கழிப்பறைகள்,

2020 மார்ச் 12]

5,726 கைப்பிடியுடன்கூடிய சாய்வுதளங்கள் மற்றும் 135 பள்ளிகளில் வகுப்பறைகள் பழுதுபார்த்தல், 50 பள்ளிகளில் சூரிய மின்கலங்கள் ஆகியவற்றுக்கு ரூ.77.52 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.5. கல்விசார் குறியீடுகள்

பள்ளிக் கல்வியின் அனைத்து செயல்பாடுகளின் விளைவுகளையும் தகுந்த கல்விசார் குறியீடுகள் மூலமாக மதிப்பிட இயலும். கல்விமுறை சார்ந்த இலக்கினை நோக்கிச் செல்வதில் உள்ள தற்போதைய நிலையினை அல்லது மாற்றத்தை அளவீடு செய்வதற்குக் கல்விசார் குறியீடுகள் பயன்படுகின்றன. கல்விசார் குறியீடுகள் சிலவற்றின் பொருள் விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

2.5.1. மொத்த மாணவர் சேர்க்கை விகிதம்

தொடக்கப் பள்ளிகளில் வயது வரம்பின்றி 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கைக்கும், 6 + முதல் 10 + வயதுக்குட்பட்ட குழந்தைகளின் மொத்த எண்ணிக்கைக்கும் உள்ள விகிதம் ஆகும்.

2.5.2. நிகர மாணவர் சேர்க்கை விகிதம்

தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் வகுப்புக்கேற்ற வயதுடைய மாணவர்களின் எண்ணிக்கைக்கும், மக்கள் தொகையில் 6 + முதல் 10 + வயதுடைய பள்ளி வயதுக் குழந்தைகளின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதம் ஆகும்.

2.5.3. தக்க வைத்தல் விகிதம் (தொடக்க நிலை)

தொடக்க நிலையில் தக்க வைத்தல் விகிதம் என்பது 5 ஆம் வகுப்பு மாணவர் சேர்க்கைக்கும், நான்கு ஆண்டுகளுக்கு முன்பான 1 ஆம் வகுப்பு மாணவர் சேர்க்கைக்கும் இடையே உள்ள விகிதம் ஆகும்.

2.5.4. தக்க வைத்தல் விகிதம் (நடுநிலை)

நடுநிலையில் தக்க வைத்தல் விகிதம் என்பது 8 ஆம் வகுப்பு மாணவர் சேர்க்கைக்கும், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பான 6

ஆம் வகுப்பு மாணவர் சேர்க்கைக்கும் இடையே உள்ள விகிதம் ஆகும்.

2.5.5. இடைநிற்றல் விகிதம்

மொத்த மாணவர் சேர்க்கைக்கும், ஒரு குறிப்பிட்ட வகுப்பில் அதே ஆண்டில் கல்வியைத் தொடர இயலாத மாணவர்களுக்கும் இடையே உள்ள விகிதம் ஆகும்.

2.5.6. மாணவர் ஆசிரியர் விகிதம்

மாணவர் ஆசிரியர் விகிதம்

$$= \frac{\text{பள்ளியில் குறிப்பிட்ட பிரிவில் மொத்த மாணவர் சேர்க்கை}}{\text{அக்குறிப்பிட்ட பிரிவில் உள்ள மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை}}$$

2019-2020 ஆம் ஆண்டின் கல்விசார் குறியீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

கல்விசார் குறியீடுகள் (2019-2020)		
குறியீடுகள்	தொடக்க நிலை	உயர் தொடக்க நிலை
மொத்த மாணவர் சேர்க்கை விகிதம்	106.60	106.48
நிகர மாணவர் சேர்க்கை விகிதம்	99.90	99.30
தக்கவைத்தல் விகிதம்	99.25	98.65
இடைநிற்றல் விகிதம்	0.75	1.35
ஆசிரியர் மாணவர் விகிதம்	21.80	24.45

2.6. குழந்தை மையக் கற்பித்தல் முறை

குழந்தைகளின் ஆளுமைத் திறனில் சிறந்த வளர்ச்சியை ஏற்படுத்தும்விதமாக ஆரம்ப கல்வியில் கற்றல் செயல்முறைகளை குழந்தைகள் விரும்புகின்ற வகையில் மகிழ்ச்சியாகவும், ஏற்றதாகவும் மாற்றுவதே குழந்தை மையக் கல்வியின் நோக்கமாகும். ஒவ்வொரு குழந்தையின் தேவைக்கு ஏற்றவாறு அவர்களுடைய தனித்திறன்கள்

2020 மார்ச் 12]

மற்றும் செயல்திறன்களின் உயரிய வளர்ச்சியை சாத்தியமாக்குவதே குழந்தை மையக் கற்றல் முறையின் அடிப்படை நோக்கமாகும். தமிழ்நாடு அரசு, குழந்தை மையக் கற்றலுக்குத் தேவையான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆசிரியர் மையக் கற்பித்தல் முறையிலிருந்து கற்போர் மையக் கற்றலுக்குத் தொடக்க மற்றும் உயர் தொடக்க நிலையில் இம்முறை முன்மாதிரி மாற்றங்களை உருவாக்கி உள்ளது. அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், குழந்தை மையக் கற்பித்தலைச் செயல்படுத்துவதில் தமிழகம் முன்னணியில் உள்ளது.

2.6.1. எளிமைப்படுத்தப்பட்ட செயல்வழிக் கற்றல்

எளிமைப்படுத்தப்பட்ட செயல்வழிக் கற்றல் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் முதலாம் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரையில் நடைமுறையில் உள்ள குழந்தை மையக் கற்பித்தல் முறையாகும். இச்செயல்வழிக் கற்றல் முறையானது அட்டைகளில் உள்ள செயல்பாடுகளைப் பாடப் புத்தகம் மற்றும் வகுப்பறை நிகழ்வுகளில் ஒருங்கிணைப்பதன்மூலம் முழுமையான கற்பித்தலுக்கு வழிவகுக்கிறது.உயர்வகுப்புகளுக்குத்தேவையான அடித்தளத்தையும் இது தன்னகத்தே கொண்டுள்ளது. இக்கற்பித்தலில் ஆசிரியர்கள் ஒரு வழிகாட்டியாக இருந்து மாணவர்களை நேரடியாகவோ, குழுவாகவோ கற்றல் செயல்பாட்டில் ஈடுபட வழிவகை செய்வர். மேலும், இச்செயல்வழிக் கற்றல் முறையில் மாணவர்கள் துணிவுடன் விவாதிக்க, சிந்திக்க, கேள்வி கேட்க, அச்சமின்றி தயக்கமின்றி சுயமதிப்பீடு செய்ய வாய்ப்புகள் வழங்கப்படுவதால் இம்முறை மாணவர்களின் தனிப்பட்ட திறன்களை வளர்ப்பதோடு படைப்பாற்றலுக்கான வாய்ப்பையும் வழங்குகிறது.

2.6.2. எளிமைப்படுத்தப்பட்ட படைப்பாற்றல் கற்றல் முறை

அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் நான்கு மற்றும் ஐந்தாம் வகுப்புகளில் நடைமுறையில் உள்ள எளிய படைப்பாற்றல் கற்றல் முறையும் குழந்தை மைய கற்றல் முறைமையாகும். இம்முறைமையானது நன்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் வழிகாட்டலில் ஒவ்வொரு குழந்தையும் நேரடியாகவும், முழு ஈடுபாட்டுடனும் கற்றலில் பங்கேற்க இடமளிக்கிறது.

[2020 மார்ச் 12

2.6.3. படைப்பாற்றல் கற்றல்

மாணவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் கல்வி கற்பதற்குத் தங்களைத் தயார்படுத்திக்கொள்வதே கற்றலின் நோக்கமாகும். சிறந்த கற்றல் முறையான படைப்பாற்றல் கற்றல் மாணவர்களின் சிந்தனையைத் தூண்டி புதியன படைக்கும் திறனை ஏற்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இக்கற்றல், மாணவர்களிடம் கல்விசார் சிறப்பை அடையச் செய்கிறது. ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் கற்றல் செயல்பாடுகளில் முழுமையாக ஈடுபட இப்படைப்பாற்றல் கற்றல்முறை நடைமுறையில் உள்ளது. படைப்பாற்றல் கற்றல் முறைமையின் முதன்மைக் குறிக்கோள் மாணவர்களை "கற்றுக்கொள்ள கற்பது" என்பதற்கு ஆயத்தப்படுத்துவதாகும்

படைப்பாற்றல் கற்றல் முறைமையின் நோக்கங்கள் பின்வருமாறு:

- மன அழுத்தமின்றி, அச்சமின்றி, தயக்கமின்றி கற்றலை மேற்கொள்ளல்
- மாணவர்கள் உட்கருத்தினைப் புரிந்துகொள்ளும் திறனை வளர்த்துக்கொள்ள உதவுதல்
- மாணவர்கள் தேர்வுகளை எதிர்கொள்வதற்கான தன்னம்பிக்கையை உருவாக்குதல்
- ஆக்கபூர்வமாக சிந்திக்கும் திறன் மற்றும் படைப்பாற்றலை வளர்த்தல்.

2.7. பணியிடைப் பயிற்சி

2.7.1. ஆசிரியர் பயிற்சி

கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காகவும், பகுப்பாய்வு மற்றும் படைப்பாற்றல் திறன்களைப் பெறுவதற்காகவும், 21 ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்வதற்கு ஏற்றவாறு, கலைத் திட்டம் மற்றும் பாடத் திட்டங்களை அரசு மாற்றியமைத்துள்ளது. கலைத் திட்டம், பாடத் திட்டம், பாடப் புத்தகம், கற்பித்தல் முறை, கற்றல் விளைவுகள் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றத்திற்கேற்ப தங்களை மேம்படுத்திக் கொள்வதற்கு ஏதுவாக 1 முதல் 12 ஆம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 12]

வகுப்பு வரை பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அரசு மற்றும் அரசு உதவிபெறும் அனைத்து தொடக்க மற்றும் உயர் தொடக்க நிலை ஆசிரியர்களுக்கு மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து புதிய பாடப் புத்தகத்திற்காக இரண்டு நாள் பயிற்சி வழங்கப்பட்டது.

NISHTHA *என்பது கல்வியின் தரத்தை, ஒருங்கிணைந்த ஆசிரியர் பயிற்சியின்மூலம் மேம்படுத்துவதற்காக தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் தேசிய கல்வித் திட்டமிடல் மற்றும் மேலாண்மை நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் நடைபெறுகின்ற திறன் மேம்பாட்டுத் திட்டமாகும். இதன்மூலம் கல்வியின் தற்காலத் தேவைகளுக்கேற்ப அரசுப் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் தலைமையாசிரியர்களுக்கு குழந்தை மையக் கற்றல் முறை, கற்றல் விளைவுகள், பள்ளி சார்ந்த மதிப்பீடு, பாடம் சார்ந்த கற்றல் முறைகள், திறன்கள் குறித்து ஐந்து நாட்கள் பயிற்சி வழங்கப்பட்டது. 198 மாநில கருத்தாளர்கள் குழுக்கள்மூலம், அனைத்து அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு ரூ.4,120.23 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கப்பட்டது.*

2.7.2. சிறப்பு பயிற்றுநர்கள் மற்றும் இயன்முறை பயிற்றுநர்களுக்கான பயிற்சி

ஒவ்வொரு ஒன்றிய அளவில், சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளின் பல்வேறு குறைபாடுகளுக்கான பயிற்சியினை சிறப்பு பயிற்றுநர்கள் மற்றும் இயன்முறை பயிற்றுநர்கள் அளித்து வருகின்றனர். மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016-ல் குறிப்பிட்டுள்ள 21 வகையான குறைபாடுகள் தொடர்பாக சிறப்பு பயிற்றுநர்கள் மற்றும் இயன்முறை பயிற்றுநர்களுக்கு பணியிடைப் பயிற்சி வழங்கப்பட்டது.

2.8. மழலையர் கல்வி

2.8.1. அங்கன்வாடி மையங்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல் (எல்.கே.ஜி. மற்றும் யு.கே.ஜி.)

8,105 அங்கன்வாடி மையங்கள் அரசுப் பள்ளி வளாகங்களில் செயல்பட்டு வருகின்றன. 2018-2019 ஆம் ஆண்டில் அரசு நடுநிலைப் பள்ளி வளாகங்களில் செயல்பட்டுவரும் 2,381

[2020 மார்ச் 12

அங்கன்வாடி மையங்களில் எல்.கே.ஜி. மற்றும் யு.கே.ஜி. வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. குழந்தைகளின் கற்கும் திறனை அதிகரிக்க குழந்தைகள் விரும்பும் வகையிலான இருக்கைகள், வெளியில் விளையாடுவதற்கேற்ற விளையாட்டுப் பொருட்கள், மழலையர் வகுப்புகளுக்கான காணொளி அரங்குகள் ஆகியவை 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.1,683.37 இலட்சம் செலவில் அமைத்துத் தரப்பட்டன. மேலும், இவ்வகுப்புகளில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி அளிக்கப்பட்டது. இம்மையங்களின்மூலம் 68,918 குழந்தைகள் பயனடைகின்றனர். இக்குழந்தைகளுக்கு விலையில்லா பாட நூல்கள் மற்றும் 4 இணை பள்ளிச் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

2.9. கல்வி மேலாண்மைத் தகவல் முறைமை (EMIS)

கல்வி மேலாண்மைத் தகவல் மையம், அனைத்து வகை பள்ளிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அலுவலர்கள் சார்ந்த கள அளவில் உள்ள நேரிடைத் தகவல்கள் அனைத்தும் கிடைக்கப்பெறும் இயங்கு தளமாக உள்ளது. இந்தத் தரவுகள்/ தகவல்கள் அனைத்தும், அனைத்துத் துறை அலுவலர்களும் பயன்படுத்தும்வகையிலும், கொள்கை முடிவுகளுக்குப் பயன்படும்வகையிலும் கிடைக்கப் பெறுகின்றன.

கல்வி மேலாண்மைத் தகவல் முறைமை, மாணவர்களின் தகவல்கள், பணியாளர்கள் விவரங்கள், பள்ளிகளுடைய விவரங்கள் என மூன்று முக்கியப் பிரிவுகளாக உள்ளன. இந்த மூன்று முக்கியப் பிரிவுகளுக்கான தரவுகள், கல்வி மேலாண்மைத் தகவல் முறைமை இணைய வாயில் வழியாக (Portal), பள்ளித் தலைமை ஆசிரியர், அவருக்கு வழங்கப்பட்ட தனிப்பட்ட உள்நுழைவு கடவுச் சொல்லைப் பயன்படுத்தி மேற்படி தகவல்களைப் பதிவேற்றம் செய்கிறார். இந்தத் தகவல்களைப் பயன்படுத்தி, ஒவ்வொரு நாளும் பல்வேறு செயல்களுக்குத் தானியங்கி முறையில் எளிமையாக அறிக்கைகள் தயாரித்து வழங்க முடிகிறது. பள்ளி அளவில் பயன்பாட்டில் உள்ள 30-க்கும் மேற்பட்ட பதிவேடுகள் எண்மயமாக்கப்பட்டு தலைமை ஆசிரியரின் பயன்பாட்டிற்குக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட அடையாள எண் வழங்கப்பட்டு பள்ளிக் காலம் முழுவதும் அந்த மாணவரின்

2020 மார்ச் 12]

பல்வேறு செயல்பாடுகளின் செயல்திறன்களை எளிதாக கண்காணிக்க முடிகிறது. பல்வேறு அரசு நலத் திட்டங்களைப் பெறுவதற்கும், மாணவரின் தனிப்பட்ட அடையாளத்தை அனைவரும் தெரிந்துகொள்ளக்கூடிய தெளிவான, வெளிப்படையான செயல்பாடாக அமைய வழிவகை செய்கிறது. விரைவு துலங்கல் குறியீடுகளுடன்கூடிய திறன் அடையாள அட்டைகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அந்தத் திறன் அடையாள அட்டையில் உள்ள விரைவுத் துலங்கல் குறியீடுகளை ஒத்திசைவு செய்து பார்த்தால் மாணவர்களுடைய அடிப்படை விவரங்களை அறியலாம்.

ஒவ்வொரு நாளும் மாணவர்கள் மற்றும் பள்ளிப் பணியாளர்களின் தினசரி வருகையைக் கல்வி மேலாண்மைத் தகவல் முறைமை கைபேசி செயலிமூலம் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. கைபேசி செயலி வருகைத் தரவுகளின் அடிப்படையில் வருகைப் பதிவேடு, தானியங்கி முறையில் உருவாக்கப்படுகிறது. மேலும், ஒரு மாணவர் குறைந்தது மூன்று நாட்கள் தொடர்ந்து, பள்ளிக்கு வரவில்லையெனில் பள்ளித் தலைமை ஆசிரியரை உடனடியாக அணுகுமாறு அவரது பெற்றோருக்கு குறுஞ்செய்தி அனுப்பப்பட்டு வருகிறது.

பணியாளர்களின் பணி நிர்ணயம், பணி மாறுதல் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வு ஆலோசனை போன்ற செயல்பாடுகளும் முழுமையாகக் கல்வி மேலாண்மைத் தகவல் முறைமைமூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கல்வி மேலாண்மைத் தகவல் முறைமை தரவு தளத்தில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் விவரங்கள் உள்ளதால், அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள், தகுதியுள்ள பணியிடங்கள் மற்றும் காலிப் பணியிடங்களை பள்ளிவாரியாகப் பட்டியலிடுவது எளிதாகிறது. குறிப்பிட்ட விதிமுறைகளின்படி, உபரிப் பணியிடங்கள் கண்டறியப்பட்டு பணிமாறுதலுக்கான கலந்தாய்வு முழுமையாக இணையவழி மூலமாக நடத்தப்படுகிறது. மேலும், அனைத்துவகை ஆசிரியர்களின் பதவி உயர்வுக்கான தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலைக் கல்வி மேலாண்மைத் தகவல் முறைமை தரவுதளங்களில் உள்ள ஆசிரியர் பணி விவரங்களைக் கொண்டு இணையதளத்தில் எளிதாக உருவாக்க முடிகிறது. அனைத்து செயல்பாடுகளும் இணையவழிமூலம்

[2020 மார்ச் 12

நடைபெறுவதால் ஒளிவுமறைவின்றி வெளிப்படையாக நடைபெறுகிறது. இணையவழிமூலம் உடனுக்குடன் ஆணை நகல்களும் உருவாக்கி அளித்திட முடிகிறது.

10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கு நடத்தப்படும் பொதுத் தேர்விற்கான மாணவர்களின் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் பணி முக்கியமானதாகும். இப்பணிகளை கல்வி மேலாண்மைத் தகவல் முறைமை இணையவழிமூலம் மேற்கொள்ளப்படுவதால் நிருவாகப் பணிகள் குறைக்கப்படுவதுடன் பிழைகளைத் தவிர்த்து, குறைகள் எதுவுமின்றி தரவுதளத் தகவல்களை அரசுத் தேர்வுகள் இயக்ககத்துடன் தடையின்றி ஒருங்கிணைப்பது உறுதி செய்யப்படுகிறது.

நேரடி இணையவழித் தேர்வுகளின் இன்றைய சவால்களைச் சந்திக்கும்விதமாக 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான இணையவழி நாட்டமறித் தேர்வு கல்வி மேலாண்மைத் தகவல் மையம்மூலம் நடத்தப்பட்டது. இந்தத் தேர்வின்மூலம் முதலாவதாக, இன்றைய இணையவழித் தேர்வு முறைகளை அரசுப் பள்ளி மாணவர்களுக்கு அறிமுகம் செய்திட பயிற்சி அளிக்கப்படுகிறது. இரண்டாவதாக, இத்தேர்வுகளின்மூலம் மாணவர்கள் தங்கள் உள்ளார்ந்த திறன்களை அடையாளம் கண்டு, அத்திறன்களை மேலும் மேம்படுத்திட வாய்ப்பாக அமைகிறது. இவ்வாறு இரட்டைப் பலன்களை மாணவர்கள் பெறுகின்றனர். ஒவ்வொரு மாணவருக்கும் கல்வி மேலாண்மைத் தகவல் முறைமை இணையவழியில் உள் நுழைய தனிப்பட்ட கடவுச் சொல்லைக் கொடுத்து, 90 நிமிடங்களில் 90 வினாக்களுக்கு விடையளிக்க இணையவழிமூலம் தேர்வு நடத்தப்பட்டது. ஒரே நிகழ்வில் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள், கல்வி மேலாண்மைத் தகவல் முறைமையில் உள்நுழைந்து அளப்பரிய உற்சாகத்துடன் தேர்வுகளை எதிர்க்கொண்டனர். இந்த நாட்டமறி தேர்வினை நடத்தி முடித்ததனால் கல்வி மேலாண்மைத் தகவல் முறைமை இணையவழிமூலம் இதுபோன்ற மதிப்பீட்டுத் தேர்வுகளை நடத்திடும்வகையில் அரசு தற்போது முழுத் திறன்களையும் பெற்றுள்ளது.

2020 மார்ச் 12]

2.10. தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு

மதிப்பீடு என்பது கலைத் திட்டத்தின் தவிர்க்க முடியாத ஓர் அங்கமாகும். மேலும், கற்றல் கற்பித்தலில் தர மேம்பாட்டில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவதில் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு என்பது சோதித்தறியும் மதிப்பீட்டு முறையிலிருந்து விலகி முழுமையான கற்றலை மையமாகக் கொண்ட மதிப்பீட்டு முறைக்கு மாறுவதே ஆகும். இவ்வரசு, தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு முறையைத் தொடக்க மற்றும் உயர் தொடக்க நிலையில் 2012-2013 ஆம் கல்வி ஆண்டு முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. இம்முறையில் கற்றல் கற்பித்தல் என்பது, கலந்துரையாடல், இணைந்து கற்றல், பங்கேற்றல், சூழலுக்கேற்ற கற்றல், மாணவர் மைய கற்றல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமைகின்றது. கற்பவரின் தனித்தன்மையை மேம்படுத்துவதே தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு முறையின் முக்கியத்துவம் ஆகும். காரண காரியத்தைத் துல்லியமாகக் கண்டறிதல் மற்றும் குறைதீர் கற்பித்தல் முறைகளுக்கு வாய்ப்பளிப்பதாக உள்ளது. இம்முறை கல்விச் செயல்பாடுகள் மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகளைக் கொண்ட பள்ளி அளவிலான மதிப்பீட்டு முறையாக உள்ளது. இம்மதிப்பீட்டு முறையானது, மாணாக்கரின் மனப்பாடம் செய்து கற்கும் முறையை நீக்கி, கற்ற பாடக் கருத்துகளை அன்றாட நிகழ்வுகளில் பயன்படுத்திட உதவுகிறது.

2.11. கற்றலை மேம்படுத்தும் திட்டம்

2.11.1. ஆங்கிலம்-தமிழ்-பட அகராதி

ஒரு புதிய மொழியைக் கற்றுக்கொள்வதற்கு அகராதி மிக முக்கியமான கருவியாகும். ஆங்கிலம்-தமிழ்-பட அகராதி தொடக்கநிலை மாணவர்களின் வயதுக்கேற்ற வார்த்தைகளைக் கொண்டு சிறப்பான முறையில் தொகுக்கப்பட்டுள்ளது. இது மாணவர்கள் வார்த்தைகளுக்கான எழுத்துக் கோர்வை, உச்சரிப்பு, வார்த்தையின் பொருளைப் புரிந்துகொள்ளவும், மாணவர்களுடைய தகவல் தொடர்புத் திறனை மேம்படுத்துவதற்கும் உதவுகிறது. இவ்வகராதியில் வழங்கப்பட்டுள்ள சொற்களுக்கான விளக்கங்களைப் படங்களின்மூலம் குழந்தைகள் எளிதில் புரிந்து

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கொள்கிறார்கள். இது குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டுவதுடன், மகிழ்வுறு கற்றல்மூலம் அவர்களின் சொற்களஞ்சிய பெருக்கத்திற்கும் வழிவகுக்கிறது. 2018-2019 ஆம் கல்வியாண்டில், 37,999 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் உள்ள தொடக்கப் பிரிவுகள், 622 பள்ளி செல்லாத குழந்தைகளுக்கான சிறப்புப் பயிற்சி மையங்கள் மற்றும் உண்டு உறைவிடப் பள்ளிகளுக்கும் அகராதிகள் வழங்கப்பட்டுள்ளன. பெரும்பாலான ஆசிரியர்களும் குழந்தைகளும் இதை மிகவும் பயனுள்ளதெனக் கண்டறிந்து பாராட்டினர். எனவே, 2019-2020 ஆம் கல்வியாண்டில் 24,321 அரசு தொடக்கப் பள்ளிகளுக்கும், 6,966 அரசு நடுநிலைப் பள்ளிகளுக்கும் இந்த பட அகராதிகளை வழங்க ரூ.238.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.11.2. ஆசிரியர்களுக்கான கணித உபகரணப் பெட்டி

கணிதப் பாடம் ஒரு முக்கியமான பாடமாகும். இது கடினமான பாடம் என்ற மாணவர்களின் மனநிலையை மாற்றி நேர்மறையான அணுகுமுறையை உருவாக்குவது அவசியம். கணிதப் பாடத்தின் ஒரு பகுதியான வடிவியல் மாணவர்களுக்கு அளவு, வடிவம் மற்றும் நிலை பற்றிய அறிவை வழங்குகிறது. குழந்தைகளின் கணிதத் திறன்களை மேம்படுத்த ஆசிரியர் கரும்பலகையில் வடிவியல் வடிவங்களை சரியான அளவுடன் வரைந்து கற்பிக்க வேண்டியது அவசியம். இவ்வாறு ஆசிரியர் வரைந்து கற்பிப்பதன்மூலம் மாணவர்கள் சரியான அளவுகளுடன் அளத்தல், வரைதல் என்பதை அறிந்துகொள்வர். எனவே, அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர் கணித உபகரணப் பெட்டிகள் ரூ.145.04 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

2.11.3. கதை குறுந்தகடுகள்

குழந்தைகளின் மன வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு கதைகள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. பகிர்ந்துகொள்ளுதலின் முக்கியத்துவம், பெரியவர்களிடம் மரியாதை, மற்றவர்களிடம் இரக்கம் காட்டுதல் போன்ற மிக முக்கிய விழுமியங்களைக் கதைகள்மூலம் குழந்தைகளுக்கு எளிதாகக் கற்பிக்க இயலும். மேலும், ஒழுக்கம் மற்றும் அறநெறி போன்ற கருத்துகளைக் குழந்தைகள் மனதில் பதிய வைக்கவும் அவர்கள் அதனை வாழ்நாள் முழுவதும்

2020 மார்ச் 12]

மனதில் கொண்டு கடைபிடிப்பதற்கும் கதைகள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. எனவே, 2019-2020 ஆம் கல்வியாண்டில் அறநெறிக் கதைகளைக் கொண்ட இரண்டு குறுந்தகடுகள் 24,321 அரசு தொடக்க மற்றும் 6,966 அரசு நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ.78.17 இலட்சம் செலவில் வழங்கப்பட்டு வருகின்றன.

2.11.4. ஆங்கில மொழி உபகரணப் பெட்டி

தகவல் தொடர்புக்கான மிகச் சிறந்த கருவி மொழியாகும். ஆங்கில மொழிப் பயிற்சியினை மாணவர்களுக்கு தினமும் அளிப்பதன்மூலம், சிறந்த உச்சரிப்பு முறையை உருவாக்க இயலும். மாணவர்கள் மொழியினைக் கற்றுக் கொண்டு, சரளமாகப் பேசுவதற்கு, மொழித் திறன் பயிற்சி வழிவகை செய்கிறது. ஆங்கில மொழிப் பயிற்சியை வழங்குவதற்கு சிறந்த வளப்பொருளான 14 கற்றல் பொருட்கள் அடங்கிய ஆங்கில மொழி உபகரணப் பெட்டி 2018-2019 ஆம் ஆண்டில், 22,400 அரசு தொடக்கப் பள்ளிகளுக்கும், 6,109 அரசு நடுநிலைப் பள்ளிகளுக்கும் மாணவர் சேர்க்கைக்கு ஏற்ப வழங்கப்பட்டுள்ளது. மேலும், தொடக்கக் கல்வியில் ஆங்கில மொழித் திறனில் எதிர்பார்க்கப்படும் கற்றல் விளைவுகளை மாணவர்கள் பெறுவதற்காகவும், கற்றல் திறனை மேம்படுத்திக்கொள்ளவும் 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.2,006.39 இலட்சம் செலவில் ஒரு ஆங்கில மொழி உபகரணப் பயன்பாட்டுக் கையேடும் அத்துடன் சேர்த்து நான்கு கூடுதல் கற்றல் பொருட்களும் ஆங்கில மொழி உபகரணப் பெட்டியுடன் சேர்த்து மேற்கண்ட பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

2.11.5. குறைதீர் கற்பித்தல்

குறிப்பிட்ட கால இடைவெளியில் நடத்தப்படும் மதிப்பீடு, மாநிலத் திறனாய்வுத் தேர்வு, தேசிய திறனாய்வுத் தேர்வு முடிவுகள் மூலமாக மெல்லக் கற்கும் மாணவர்கள் கண்டறியப்படுகின்றனர். இம்மாணவர்களுக்குக் கற்றலில் உள்ள குறைபாடுகளைக் களைவதற்கும், மொழித்திறன் மற்றும் எண் திறன்களில் எதிர்பார்க்கப்படும் திறன்களையும், கற்றல் விளைவுகளையும் அடைவதற்கும் மாணவர் பயிற்சி கட்டகங்களும், ஆசிரியர் கட்டகங்களும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இக்குறைதீர் கற்பித்தலின்கீழ் 2019-2020 ஆம் கல்வியாண்டில் அரசுப்

பள்ளிகளில் இரண்டாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் 5,03,612 மாணவர்களுக்கு பயிற்சிப் புத்தகங்களும், 14,000 ஆசிரியர்களுக்கு பயிற்சிக் கையேடுகளும் ரூ.564.48 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

2.11.6. பள்ளித் தரநிலை மற்றும் மதிப்பீடு

பள்ளித் தரநிலை மற்றும் மதிப்பீடு திட்டம் மாநிலம் முழுவதும் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 2016-2017 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் பள்ளியை மதிப்பீடு செய்வதற்கான ஒரு விரிவான செயற்கருவியாகும். 2019-2020 ஆம் கல்வியாண்டில் பிப்ரவரி, 2020 வரை 16,520 பள்ளிகளில் புற மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

2.12. பிற திட்டங்கள்/செயல்பாடுகள்

2.12.1. 3 முதல் 5 ஆம் வகுப்புகளுக்கான விளையாட்டுப் போட்டிகள்

2019-2020 ஆம் கல்வியாண்டிலிருந்து தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் விளையாட்டுத் திறனைக் கண்டறிந்து, ஊக்குவிக்கும்பொருட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2.12.2. பள்ளிப் பரிமாற்றத் திட்டம்

அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பள்ளிப் பரிமாற்றத் திட்டம் என்பது அரசு மற்றும் அரசு உதவிபெறும் கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பள்ளிகளை இணைத்து மாணவர்கள் தங்கள் அனுபவங்களைப் பரிமாறிக்கொள்ள வாய்ப்பை ஏற்படுத்துவது ஆகும். 2019-2020 ஆம் கல்வியாண்டில், 8,224 பள்ளிகள் இத்திட்டத்தில் இணைந்துள்ளன. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளுடன், மாதிரிப் பள்ளிகள் மற்றும் சுயநிதி தனியார் பள்ளிகளும் இப்பள்ளி பரிமாற்றத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. ரூ.246.72 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, 1,64,480 குழந்தைகள் பயன் அடைந்துள்ளனர்.

2020 மார்ச் 12]

2.12.3. பள்ளி மாணவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் தனிக் கவனம்

பள்ளிகளில் மாணவர்களுக்கான பாதுகாப்பு என்பது சமீப காலத்தில் பெரும் சவாலாக உள்ளது. ஒவ்வொரு குழந்தையும் பாதுகாப்பாகவும், வளர்ச்சிக்கு உகந்ததான சூழலில் கல்வி கற்பதை இவ்வரசு உறுதி செய்கிறது. ஒவ்வொரு பள்ளியிலும் ஆசிரியர்கள் முதல்நிலை ஆலோசகர்களாக செயல்படுகின்றனர். ஒவ்வொரு பள்ளியிலும் மாணவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும்பொருட்டு அவசர காலங்களில் தொடர்புகொள்ள வேண்டிய எண்கள் மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய நபர்கள் குறித்த விவரத்தை ஒரு பலகையில் காட்சிப்படுத்திட வகை செய்யப்பட்டது. 2019-2020 ஆம் ஆண்டில், அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளைச் சார்ந்த 1,45,551 ஆசிரியர்களுக்கு ரூ.1,611.98 இலட்சம் செலவில் இதற்கான புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது.

2.12.4. உள்ளடக்கிய கல்விக்கான மாநில ஆதார வள மையம்

சிறப்புக் கவனம் தேவைப்படும் 18 வயது வரையிலான குழந்தைகளின் நலனுக்காக சென்னையில் மாநில ஆதார வள மையம் செயல்பட்டு வருகிறது. இம்மையம் பல்வேறு மாற்றுத்திறனுடைய குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய சாதனங்களைக் கொண்டுள்ளது. இந்த மையத்தில் பேச்சுத் திறன், கேட்டல் திறன், பார்வைத் திறன், மதியிறுக்கம் மற்றும் மூளைமுடக்கு வாதம் போன்ற பல்வேறு வகையான மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளின் பெற்றோருக்கும் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளை வழங்குகிறது. 2019-2020 ஆம் ஆண்டில், 68 மாற்றுத்திறனுடைய குழந்தைகள் பயனடைந்துள்ளனர். சமூகத்தின் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவுகளைச் சார்ந்த மாற்றுத்திறனுடைய குழந்தைகள் இந்த மையத்தில் பயிற்சி பெற ஆர்வத்துடன் கலந்துகொண்டு அவர்களின் இடைவினை புரியும் திறன்களில் மிகுந்த முன்னேற்றத்தைக் காண்கின்றனர்.

2.12.5. இளைஞர் மற்றும் சுற்றுச்சூழல் மன்றம்

இளைஞர் மற்றும் சுற்றுச்சூழல் மன்றம் என்பது வாழ்க்கைத் திறன்கள், சுயமரியாதை, தன்னம்பிக்கை ஆகியவற்றை வளர்க்க உதவும் ஒரு கருவியாக அமைகிறது. மன அழுத்தம், அவமானம் மற்றும் அச்சம் ஆகிய எதிர்மறை உணர்ச்சிகளை எதிர்கொள்ள இது உதவுகிறது.

சுற்றுச்சூழல் மன்றம் பள்ளிகளில் சுற்றுச்சூழல் சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் திட்டங்களை மேற்கொள்ள அதிகாரம் பெற்றுள்ளது. மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் சமூகப் பங்களிப்போடு சுற்றுச்சூழல் மேம்பாட்டுச் செயல்பாடுகளை மேற்கொள்ள இம்மன்றம் வழிகோலுகிறது. மாணவர்களைப் பாடத் திட்டத்திற்கு அப்பால் சுற்றுச்சூழல் கருத்துகள் மற்றும் செயல்களை ஆராய உதவுகிறது. 2019-2020 ஆம் கல்வியாண்டில் இளைஞர் மற்றும் சுற்றுச்சூழல் மன்றங்களுக்கென அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளுக்கு தலா ரூ.5,000/- வீதம் ரூ.1,212.50 இலட்சமும், அனைத்து நடுநிலைப் பள்ளிகளுக்கு தலா ரூ.15,000/- வீதம் ரூ.1,056.45 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2.12.6. தற்காப்புக் கலைப் பயிற்சி

பெண் குழந்தைகளின் முழு வளர்ச்சியினை மேம்படுத்திடும் வகையில் அரசுப் பள்ளிகளில் 6, 7, 8 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவியருக்கு தற்காப்புக் கலைப் பயிற்சித் திட்டத்தை இவ்வரசு அறிமுகப்படுத்தி உள்ளது. கராத்தே என்ற தற்காப்புக் கலையில் அனைத்து மாணவிகளுக்கும், நன்கு பயிற்சி பெற்ற பெண் பயிற்சியாளர்கள்மூலம், பள்ளி ஆசிரியர்களின் மேற்பார்வையில், வாரத்திற்கு இரண்டு முறை வீதம், மூன்று மாதங்களுக்குப் பயிற்சி வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு ரூ.628.74 இலட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

2.12.7. விளையாட்டு மற்றும் உடற்கல்வி

விளையாட்டு மற்றும் உடற்கல்வி ஆகியவை மாணவர்களிடையே திறன்களையும், தன்னம்பிக்கையையும், வளர்ப்பது மட்டுமின்றி அவர்களின் பள்ளி மற்றும் வெளி உலக வாழ்க்கையின் மையப்

பகுதியாக விளங்குகிறது. மாணவர்கள் உடல்ரீதியாகவும் மற்றும் மனரீதியாகவும் தகுதி பெற்றவர்களாக இருப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மாணவர்களின் விளையாட்டுச் செயல்பாடுகளை ஊக்குவிக்க விளையாட்டுக் கருவிகள் வழங்குதல் அவசியமாகிறது. இது விளையாட்டுத் திறனை வளர்க்க உதவுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் விளையாட்டுக் கருவிகள் 1,764 நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ.176.40 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

2.12.8. தேசிய புனைவுத் திட்ட செயல்பாடுகள்

2.12.8.1. வெளி மாநில கல்விச் சுற்றுலா

கல்விச் சுற்றுலாவானது மாணவர்களுக்கு கற்றல் அனுபவத்தையும், பல்வேறு கலாச்சாரங்கள், விழுமியங்கள் மற்றும் முறைமைகளை நேரடியாகப் பெற வகை செய்கிறது.

2019-2020 ஆம் ஆண்டில் அரசுப் பள்ளிகளில் தொடக்க நிலையில் பயிலும் 960 மாணவர்கள் (ஒரு மாவட்டத்திற்கு 30 மாணவர்கள் வீதம்) ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, தெலுங்கானா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் உள்ள உயர் கல்வி நிறுவனங்கள், அறிவியல் மையங்கள், அருங்காட்சியகங்கள் மற்றும் தொன்மை வாய்ந்த இடங்களைப் பார்வையிட்டுள்ளனர். கல்விச் சுற்றுலாவானது, மாணவர்களுக்கு அவர்களது வழக்கமான கற்றல் சூழலைத் தாண்டி வெளிப்புறங்களைப் பார்வையிடுவதன்மூலம் நேரடிக் கற்றல் அனுபவம் மற்றும் பார்வையிட்ட இடங்களைப் பற்றி அறியவும் உதவுகிறது. மாணவர்கள் செயல் வழியில் கற்று கருத்தாளர்களுடன் கலந்துரையாடி, பிற மாணவர்களுடன் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்கின்றனர். இதற்காக ரூ.19.20 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2.12.8.2. மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா- (மாநிலத்திற்குள்)

மாணவர்களுக்கு அவர்களது வழக்கமான கற்றல் சூழலைத் தாண்டி வகுப்பறைக்கு வெளியே உள்ள இடங்களைப் பார்வையிடுவதன்மூலம், நேரடிக் கற்றல் அனுபவத்தைப் பெறுகின்றனர். இச்சுற்றுலாக்கள் மாணவர்களது சிந்தனை, ஆர்வம் மற்றும் தனிப்பட்ட திறன்களை மேம்படுத்திக்கொள்ள உதவுகிறது.

[2020 மார்ச் 12

இச்சுற்றுலாக்கள் தரமான கற்பித்தல் மற்றும் கற்றல் திட்டத்தின் ஒரு பகுதியாகும். அனுபவங்களின் வழியாக கற்பித்தல் வகை செய்யப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் ஒரு மாவட்டத்திற்கு 500 மாணவர்கள் வீதம், அறிவியல் மற்றும் கணிதப் பாடங்களில் ஆர்வமுள்ள 8 ஆம் வகுப்பில் பயிலும் 16,000 மாணவர்கள் உயர் கல்வி நிறுவனங்கள், கணித மற்றும் அறிவியல் மையங்கள், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், அருங்காட்சியகங்கள், விலங்கியல் பூங்கா போன்றவற்றைப் பார்வையிட்டுள்ளனர். இதற்காக ரூ.32.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2.13. சிறப்பு மானியங்கள்

2.13.1. பள்ளி மானியம்

பள்ளிக்குத் தேவையான உபகரணங்களை வாங்குவதற்கும், பள்ளியின் ஆண்டுப் பராமரிப்புச் செலவுகளுக்கும் பள்ளி மானியம் பயன்படுத்தப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டு ரூ.13,118.88 இலட்சம் பள்ளி மானியமாக அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப வழங்கப்பட்டுள்ளது.

வ.எண்	மாணவர்களின் எண்ணிக்கை	பள்ளிக்கான மானியத் தொகை (ரூ.)
1	1 முதல் 15 வரை	12,500
2	16 முதல் 100 வரை	25,000
3	101 முதல் 250 வரை	50,000
4	251 முதல் 1000 வரை	75,000
5	1000-க்கு மேல்	1,00,000

2.13.2. நூலக மானியம்

மேலும், ஒரு புதிய முயற்சியாக, கல்வித் தரத்தை உயர்த்துவதற்கும், மாணவர்களிடையே வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தவும் 2018-2019 ஆம் ஆண்டு 3,527 அரசு நடுநிலைப் பள்ளிகளில் புதிய நூலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன்

2020 மார்ச் 12]

தொடர்ச்சியாக, 2019-2020 ஆம் ஆண்டில் மீதமுள்ள 3,439 அரசு நடுநிலைப் பள்ளிகளில் ரூ.457.21 இலட்சம் செலவில் புதிய நூலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

2.14. பள்ளி மேலாண்மைக் குழு

பள்ளியினுடைய அன்றாட நிகழ்வுகளில் சமுதாயத்தின் பங்கேற்பை மேம்படுத்துவதில் தமிழகம் தனிக் கவனம் செலுத்துகிறது. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு உரிமைகளுடன் குழந்தையின் கல்வி உரிமையை உறுதி செய்யும் பல்வேறு உட்கூறுகளைத் திறம்பட செயல்படுத்துவதில் பள்ளி மேலாண்மைக் குழுவும் உள்ளாட்சிப் பிரதிநிதிகளும் பெரும் பங்கு வகிக்கின்றனர். அதன்படி, அரசு தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெற்றோர்-ஆசிரியர் கூட்டம் ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளிக்கிழமை ஒவ்வொரு பள்ளியிலும் நடைபெறுகிறது. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி விதிமுறைகளின்படி பள்ளி வளர்ச்சி திட்டம் வகுத்தல் மற்றும் சமுதாய தணிக்கை வினாத்தாள் தயாரித்தல் ஆகியவை இக்குழுவின் முக்கிய நோக்கங்களாகும்.

2019-2020 ஆம் ஆண்டில் 1,87,758 பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி குறு வள மைய அளவில் வழங்கப்பட்டது. இப்பயிற்சியினை மேற்கொள்ள ரூ.282.77 இலட்சம் செலவிடப்பட்டது. இப்பயிற்சியின்மூலம் பங்கேற்பாளர்கள், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்விச் சட்டம், 2009-ன் உட்கூறுகள், பள்ளி மேலாண்மைக் குழுவின் கடமைகளும் மற்றும் பொறுப்புகளும் பள்ளியின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குத் தேவையான சமூகப் பங்களிப்பின் முக்கியத்துவம், பேரிடர் மேலாண்மைக்கான வழிமுறைகள், குழந்தைகளுக்கான உரிமைகள், பாலின சமத்துவம், தரமான கல்வி மற்றும் அரசின் பிற நலத் திட்டங்களைப் பற்றியும் தெரிந்துகொள்வார்கள். 2019-2020 ஆம் ஆண்டில் ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.3,000/- வீதம் ரூ.938.79 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 12

2.15. ஆங்கில வழிக் கல்வி

தங்கள் குழந்தைகள், ஆங்கில வழிக் கல்வி முறையில் பயில பெரிதும் விரும்புகின்ற பெற்றோர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில், 2012-2013 ஆம் ஆண்டு இத்திட்டம் தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. 2012-2013 ஆம் கல்வியாண்டில் தொடக்கக் கல்வி இயக்ககத்தின்கீழ் செயல்படும் சில குறிப்பிட்ட பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்விப் பிரிவுகள் தொடங்கப்பட்டன. அரசுப் பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்விப் பிரிவுகளில் மாணவர் சேர்க்கை குறிப்பிடத்தக்க அளவில் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. 2019-2020 ஆம் கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளில் ஆங்கில வழிப் பிரிவுகளில் 7.10 இலட்சம் குழந்தைகள் சேர்க்கப்பட்டு உள்ளனர். தொடக்க/நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குத் தொடர்ச்சியாக ஆங்கில வழியில் கற்பிப்பதற்கான கற்பித்தல் பயிற்சி வழங்கப்படுகிறது.

2.16. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

மழலையர் கல்வி முதல் 12 ஆம் வகுப்பு வரை ஒருங்கிணைந்த முழுமையாக பள்ளிக் கல்வியினைப் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்திய அரசால் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி என்ற முதன்மையான திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் இடைநிலைக் கல்வி மற்றும் ஆசிரியர் கல்வி ஆகிய மூன்று திட்டங்களையும், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டம் என்று மத்திய அரசு ஒருங்கிணைத்துள்ளது. இத்திட்டத்திற்கான நிதியினை மத்திய, மாநில அரசுகள் 60:40 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்கின்றன. தரமான கல்வியை வழங்கிட மாநிலங்களை ஊக்குவிப்பதே இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். மழலையர் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரை அனைவருக்கும் தரமான கல்வியை வழங்குதல் என்ற உன்னத நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகிறது.

2.17. புதிய முயற்சிகள்

2.17.1. திறனறித் தேர்வுக்கான சிறப்புப் பயிற்சி

அரசு நடுநிலைப் பள்ளிகளில், தமிழ்நாடு ஊரக மாணவர்கள் திறனறித் தேர்வு, தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்பு

2020 மார்ச் 12]

உதவித்தொகை திட்டத் தேர்வு மற்றும் தேசிய அளவிலான திறனறித் தேர்வு ஆகிய திறனறித் தேர்வுகளில் கலந்துகொள்ள 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்குப் பள்ளி ஆசிரியர்களைக் கொண்டு சிறப்புப் பயிற்சி வழங்குவதற்காக திறனறித் தேர்வின் மனத்திறன் தேர்வு மாதிரி வினாத்தாள் புத்தகம் அனுபவம் வாய்ந்த ஆசிரியர் குழுவின்மூலம் தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு ஆசிரியர் மேடையில் பதிவேற்றம் செய்யப்பட்டு, ஆசிரியர் மற்றும் மாணவர் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

2.17.2. ஆசிரியர்களுக்கான தொட்டுணர் கருவி வருகைப் பதிவு

குழந்தைகளுக்கு தரமான கல்வியை வழங்குவதில் ஆசிரியர்களின் வருகை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால், ஆசிரியர்களின் வருகையைப் பதிவு செய்வதற்காக 8,179 அரசு மற்றும் அரசு உதவி பெறும் நடுநிலைப் பள்ளிகளில் விரல் பதிவுக் கருவிகளுடன்கூடிய ஆதார் அட்டையை அடிப்படையாகக் கொண்ட தொட்டுணர் கருவிகள் ரூ.2.28 கோடியில் நிறுவப்பட்டுள்ளன.

2.17.3. ஒருங்கிணைந்த நிதி மேலாண்மை மற்றும் மனிதவள மேலாண்மை முறை திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்

தொடக்கக் கல்வி இயக்ககம் மற்றும் 413 வட்டாரக் கல்வி அலுவலகங்களுக்குக் கணினிமூலம் சம்பளம் மற்றும் நிதி சார்பான பணிகளைக் கையாளுவதற்காக ரூ.10.70 கோடி செலவில் கணினி, ஊடுநோக்கி, அச்சுப்பொறி, இணைப்பு (Static IP) ஆகிய வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

2.17.4. தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் நிருவாக திறன் மேம்பாட்டிற்காக ஊட்டுப் பகுதியிலுள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுடன் இணைத்தல்

தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் நிருவாகத் திறன் மேம்பாட்டிற்காகவும் மற்றும் மாணவர்களின் உயர்வான கற்றல் அடைவுகளைப் பெற்றிடவும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளைக் கண்காணித்திடும் பணி, குறிப்பாக பள்ளியின் செயல்பாடு, நலத் திட்டங்களை மாணவர்கள் பெற்றுள்ளதை உறுதி செய்தல், தேவையான உட்கட்டமைப்பு வசதிகள், ஆசிரியர்கள்

[2020 மார்ச் 12

இருப்பு, மாணவர்களின் பாதுகாப்பு போன்றவற்றை உறுதி செய்தல் ஆகியவை ஒரு குறு வள பகுதி அல்லது ஒரே வளாகத்தில் உள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களின் அதிகார வரம்பிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்வாறு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் ஊட்டுப் பகுதியில் உள்ள தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் அதன் கண்காணிப்பின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

2.18. நிதி ஒதுக்கீடு

2020-2021 ஆம் ஆண்டிற்கு தொடக்கக் கல்விக்கு ரூ.16,728.09 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி

3.1. முன்னுரை

இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வியானது மேற்படிப்பிற்கும், வேலைவாய்ப்பினைப் பெறுவதற்குமான வலுவான அடித்தளமாக அமைகிறது. அறிவாற்றல், திறன்கள் மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கும், தனி மனித வளர்ச்சிக்கும் தேவையான மனப்பான்மையை வளர்ப்பதில் இடைநிலை மற்றும் மேல்நிலை கல்வி முக்கியப் பங்கு வகிக்கிறது. தொடர் பயிற்சிகள் மூலமாக ஆசிரியர்கள் கற்பித்தல் திறனை மேம்படுத்துதல், உகந்த கற்றல் சூழலை ஏற்படுத்துதல், உரிய உட்கட்டமைப்பு வசதிகளை பள்ளிகளில் ஏற்படுத்துதல் ஆகியவற்றின் மூலமாக தரமான கல்வி வழங்குவதை உறுதிப்படுத்துவதற்கு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலமாக அனைவருக்கும் சமமான வாய்ப்பினை வழங்குவதற்கும் தமிழக அரசு பெரும் முயற்சி எடுத்து வருகிறது.

3.2. தொலைநோக்கு

சமூக, பாலின இடைவெளிகளை நீக்கி தரமான கற்றல் கற்பித்தலை மேம்படுத்துவதையும், மாணவர்களிடையே முழுமையான வளர்ச்சியினை உறுதி செய்தலையும் நோக்கமாகக் கொண்டு அனைவருக்கும் இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வியை அளித்தல்.

2020 மார்ச் 12]

3.3. நோக்கம்

➢ சமூக-பொருளாதாரத் தடைகள் மற்றும் பாலினப் பாகுபாடின்றித் தரமான இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி அளித்தல்.

➢ இடைநிலை மற்றும் மேல்நிலை வகுப்புகளில் 100 விழுக்காடு மாணவர்களைத் தக்க வைத்தலை உறுதி செய்வதற்கான பல்வேறு நலத் திட்டங்களை திறம்பட செயல்படுத்துதல்.

➢ மாணவர்களுக்குத் தேவையான மென்திறன்களையும், தொழில் கல்வியையும், திறன் மேம்பாட்டுப் பயிற்சியினையும் ஒருங்கிணைத்து அளிப்பதன்மூலம், மாணவர்களின் வேலைவாய்ப்பு பெறும் திறனை மேம்படுத்துதல்.

➢ மகிழ்ச்சியான, உகந்த கற்றல் சூழ்நிலையை அளிக்கும்வகையில், உட்கட்டமைப்பு வசதிகளை அனைத்து பள்ளிகளிலும் மேம்படுத்துதல்.

➢ பள்ளிக்குச் செல்வதற்கான வசதியினை மேம்படுத்துவதற்காக, இலவச போக்குவரத்து வசதிகளும், தேவை அடிப்படையிலான தங்கும் வசதிகளும் கிடைப்பதற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துதல்.

➢ சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்குத் தேவையான உதவிகள் மற்றும் பாதுகாப்பினை அளித்தல்.

➢ அனைத்து மாணவர்களும் கல்வி இணைச் செயல்பாடுகள் மற்றும் கல்வி சாரா செயல்பாடுகளில் மிகச் சிறப்பாக ஈடுபடுவதற்கு சம வாய்ப்புகளை அளித்தல்.

➢ அறிவியல் மன்றம், சுற்றுச்சூழல் மன்றம், செயல்திட்ட வழிக் கற்றல் மற்றும் கண்டறிந்து கற்றல் போன்ற சவாலான செயல்களில் மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலமாக, அவர்களின் அறிவியல் மனப்பான்மையையும், அறிந்துகொள்ளும் ஆர்வத்தையும் மேம்படுத்துதல்.

[2020 மார்ச் 12

➢ விளையாட்டில் சிறப்புத் திறமை மற்றும் ஈடுபாட்டினைக் கொண்ட மாணவர்களைக் கண்டறிந்து, அவர்கள் மாவட்ட, மாநில, தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் சிறப்பான முறையில் செயல்படும்வகையில் வாய்ப்புகளை உருவாக்குதல்.

➢ ஆசிரியர்களுக்கு தொடர்ந்து பணியிடைப் பயிற்சிகளை வழங்குவதன் வாயிலாக அவர்களது கற்பித்தல் திறனை மேம்படுத்துதல்.

➢ காலமுறை இடைவெளிகளில் தொடர்ச்சியாக மருத்துவ முகாம்கள் மற்றும் விழிப்புணர்வு பரப்புரை நடத்துவதன்மூலம் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

➢ போட்டித் தேர்வுகள் மற்றும் நுழைவுத் தேர்வுகளுக்கு மாநிலம் முழுவதும் தேவையான பயிற்சி மையங்களை அமைத்தல்.

➢ கட்டணமில்லா தொலைபேசி எண் வாயிலாக மாணவர்களுக்கான நலத் திட்டங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் பற்றிய பயனுள்ள தகவல்களை வழங்குதல்.

3.4. பள்ளி வசதி ஏற்படுத்துதல்

சிறப்பான பள்ளி வசதியை ஏற்படுத்துதலே அனைவருக்கும் இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி கிடைப்பதற்கான முக்கியத் திறவுகோலாகும். பள்ளி வசதி இல்லாத குடியிருப்புப் பகுதிகளை, புவியியல் தகவல் முறைமைமூலம் கண்டறிய, வரைபட தகவல் சேகரிப்புப் பணி, மாநில அரசால் மேற்கொள்ளப்படுகிறது. அதன் அடிப்படையில் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு, பள்ளி வசதி ஏற்படுத்தப்படுகிறது. இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வியினை வழங்கும் நோக்கில் 2011-2012 ஆம் ஆண்டு முதல் 1,079 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 604 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

2020 மார்ச் 12]

3.4.1. மாணவியர் விடுதி

இடைநிலைக் கல்வி நிலையில் மாணவியரின் சேர்க்கையினை அதிகரித்து பாகுபாடுகளைக் களையும் வகையில், கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்களில், 100 மாணவிகள் தங்கும் வகையில் மாணவியர் விடுதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்விடுதிகளில் 14 முதல் 18 வயது வரையுள்ள 9 முதல் 12 ஆம் வகுப்பு வரையில் பயிலும் பட்டியலினத்தவர், பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்கள் மற்றும் சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த மாணவிகள் மற்றும் கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயாவில் பயின்று தேர்ச்சி பெற்ற மாணவிகள் ஆகியோருக்கு சேர்க்கையில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவிக்கும், ஒரு மாதத்திற்கு உதவித் தொகையாக ரூ.100/- அவர்களது வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது. மாணவிகள் இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் காலம் வரை அவர்களுக்கு குழுக் காப்பீடு வழங்கப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.1,100.00 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்ட 44 மாணவியர் விடுதிகளில் மொத்தம் 4,195 மாணவிகள் தங்கிப் பயின்று வருகின்றனர்.

3.4.2. மாற்றுத் திறனாளிகளுக்கான உள்ளடக்கியக் கல்வி

மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைச் சட்டம், 2016-ன்படி சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு வரையறுக்கப்பட்டுள்ளவாறு ஒன்று அல்லது பல மாற்றுத்திறன்களை கொண்ட அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 9 முதல் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் குழந்தைகளுக்காக இடைநிலை அளவில் மாற்றுத் திறனாளிகளுக்கான உள்ளடக்கிய கல்வித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அம்மாணவர்கள் இடைநிலைக் கல்வியை முழுமையாக பெறும் வகையில் பின்வரும் வசதிகள் அளிக்கப்படுகின்றன:

- சிறப்பாசிரியர்களை நியமித்தல்
- சிறப்புக் கவனம் தேவைப்படும் மாணவிகளுக்கு உதவித்தொகை வழங்குதல்
- மருத்துவ முகாம்களை நடத்துதல்

➢ சுற்றுச்சூழல் மற்றும் கவன ஒருங்கிணைப்பை வளர்த்திடும் திட்டங்கள்

➢ உதவி உபகரணங்கள் வழங்குதல்

➢ பாதுகாவலர் மற்றும் போக்குவரத்துப் படிகள் வழங்குதல்

➢ உதவியாளர்களை நியமித்தல்

➢ பார்வையற்ற மாணவர்களுக்கு வாசகர் படி வழங்குதல்

➢ தனித்தன்மை வாய்ந்த ஆதார வள மையங்களை ஏற்படுத்துதல்

இத்திட்டத்தின்மூலம் 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.1,229.40 இலட்சம் செலவினத்தில், 16,826 சிறப்புக் கவனம் தேவைப்படும் மாணவர்கள் பயன் அடைந்துள்ளனர்.

3.5. ஆசிரியர் நியமனம்

தரமான கல்வியை அளிப்பதற்கு தகுந்த எண்ணிக்கையில் ஆசிரியர்களை நியமிப்பதன் அவசியத்தை நன்கு உணர்ந்துள்ள அரசு, தரம் உயர்த்தப்பட்ட மற்றும் தற்போது இயங்கிவரும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரத்திற்கு ஏற்ப, பட்டதாரி மற்றும் முதுகலை ஆசிரியர்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக தேவையான அளவில் பணியமர்த்த முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

அதன்படி, 2011 ஆம் ஆண்டிலிருந்து நிரப்பப்பட்ட ஆசிரியர் பணியிடங்களின் விவரம் கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:

வ. எண்	பணியிடத்தின் பெயர்	பதவி உயர்வு மூலமாக	ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக
1	தலைமையாசிரியர் (மேல்நிலை)	2,184	—
2	தலைமையாசிரியர் (உயர்நிலை)	2,506	—
3	முதுகலை ஆசிரியர்	9,153	11,461
4	பட்டதாரி ஆசிரியர்	6,001	20,329

2020 மார்ச் 12]

வ. எண்	பணியிடத்தின் பெயர்	பதவி உயர்வு மூலமாக	ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக
5	சிறப்பாசிரியர்	82	1,347
6	உடற்கல்வி இயக்குநர்	63	51

3.6. உட்கட்டமைப்பு வசதிகள்

3.6.1. நபார்டு நிதி உதவியுடன் உட்கட்டமைப்பு வசதிகள்

தரம் உயர்த்தப்பட்ட அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் நபார்டு உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப் பணிகள் குறித்த ஆண்டுவாரியான விவர அறிக்கை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

வ. எண்	திட்ட எண் மற்றும் கட்டங்கள் எண்	அனுமதிக்கப் பட்ட ஆண்டு	பயனடைந்த பள்ளிகளின் எண்ணிக்கை	ஒதுக்கப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்)
1	RIDF XVIII Phase XI	2012	131	152.73
2	RIDF XIX Phase XII	2014	210	247.75
3	RIDF XX Phase XIII	2015	155	208.62
4	RIDF XX Phase XIII (T)	2015	424	41.58
5	RIDF XXI Phase XIV	2016	228	355.57
6	RIDF XXII Phase XV	2016	149	251.92
7	RIDF XXIII Phase XVI	2017	104	217.06
8	RIDF XXIV Phase XVII	2018	111	200.18
9	RIDF XXV Phase XVIII	2019	158	277.88
	Total		1670	1953.29

[2020 மார்ச் 12

3.6.2. 2019-2020 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின்கீழ் உட்கட்டமைப்பு வசதிகள்

அரசுப் பள்ளிகளில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல் என்பது ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் முதன்மையான திட்டக் கூறுகளில் ஒன்றாகும். அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் அடிப்படை வசதிகளைச் செய்து தருவதே இதன் முக்கிய நோக்கமாகும். ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின்கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டுமானப் பணிகளின் விவரம் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது:

2019-2020 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின்கீழ், மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டுமானப் பணிகள்

வ. எண்	இனம்	எண்ணிக்கை	அனுமதிக்கப் பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)
1	கூடுதல் வகுப்பறைகள்	106	1769.14
2	அறிவியல் ஆய்வகம்	83	1375.31
3	கலை/கைத்தொழில் அறை	84	1421.28
4	நூலக அறை	85	1751.00
5	குடிநீர் வசதி	103	206.00
6	மாணவர்களுக்கான கழிப்பறை	105	449.40
7	மாணவியருக்கான கழிப்பறை	123	587.94
8	சிறப்புக் கவனம் தேவைப்படும் மாணவர்களுக்கான கழிப்பறை	6	9.00
9	கணினி அறை	50	846.00
10	வகுப்பறைகள் பழுது பார்த்தல்	88	352.00

2020 மார்ச் 12]

வ. எண்	இனம்	எண்ணிக்கை	அனுமதிக்கப் பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)
11	சூரிய ஒளி ஏற்புத் தகடுகள்	94	351.00
12	அறிவியல் ஆய்வக உபகரணங்கள்	83	83.00
மொத்தம்		1010	9201.07

3.7. கல்விசார் குறியீடுகள்

3.7.1. மொத்தச் சேர்க்கை விகிதம்

இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வியில் குறிப்பிட்ட நிலைகளில் பள்ளிச் சேர்க்கையில் வயதினைக் கணக்கில் கொள்ளாமல் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையினை அவர்களின் வயது நிலையில் உள்ள மொத்த மக்கள் தொகையோடு ஒப்பிட்டுச் சேர்க்கை விகிதத்தினை அறிய உதவுகிறது.

$$\text{மொத்தச் சேர்க்கை விகிதம்} = \frac{\text{குறித்த நிலையில் சேர்க்கை}}{\text{அந்நிலையில் அவ்வயதுடைய மக்கள் தொகை}} \times 100$$

3.7.2. பாலினச் சமநிலை குறியீடு

இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி நிலைகளில் பள்ளிச் சேர்க்கையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையினை, மாணவிகளின் எண்ணிக்கையோடு ஒப்பீடு செய்து பாலின வாரியாகச் சேர்க்கை விகிதத்தினை அறிய இக்குறியீடு பயன்படுகிறது.

$$\text{பாலினச் சமநிலை குறியீடு} = \frac{\text{மாணவியர் சேர்க்கை எண்ணிக்கை}}{\text{மாணவர் சேர்க்கை எண்ணிக்கை}}$$

3.7.3. பாலினச் சமத்துவக் குறியீடு

பள்ளி சேர்க்கையில் பாலினச் சமத்துவத்தினை அறிய இக்குறியீடு வழிகாட்டுகிறது.

$$\text{பாலினச் சமத்துவக் குறியீடு} = \frac{\text{குறித்த நிலையில் பெண்களின் சேர்க்கை பங்கு}}{\text{அந்நிலையில் அவ்வயதுடைய பெண்களின் பங்கு}}$$

3.7.4. சமூக சமத்துவக் குறியீடு

சமூக சமத்துவம் என்பது குறிப்பிட்ட சமுதாயத்தினர் அல்லது தனிப்பட்ட குழுவிலுள்ள அனைவருக்குமான சமூக உரிமைகள். பேச்சுரிமைகள், சொத்துரிமை மற்றும் சமூகப் பொருள்களையும் சேவைகளையும் சமமாகப் பெறுவதனைக் குறிக்கும். சமூகப் பிரிவுகளில் சமத்துவத்தைப் பெறாத மக்கள் கல்வி பெறுவதில் உள்ள வேறுபாடுகளை இக்குறியீடு எடுத்துக்காட்டுகிறது.

சமூக சமத்துவ குறியீடு — பட்டியல் இனப் பிரிவினர் =

$$\frac{\text{சேர்க்கையில் பட்டியல் இனப் பிரிவினரின் பங்கு}}{\text{14-15 வயதுடைய பட்டியல் இனப் பிரிவினரின் பங்கு}}$$

சமூக சமத்துவ குறியீடு — பட்டியல் இனப் பழங்குடியினர் =

$$\frac{\text{சேர்க்கையில் பழங்குடியினரின் பங்கு}}{\text{14-15 வயதுடைய பழங்குடியினரின் பங்கு}}$$

3.7.5. இடைநிலைக் கல்வி அடைவு விகிதம்

கல்வி முறையின் உள்ளார்ந்த ஆற்றல் மேம்பாட்டை வெளிக்காட்டும் அளவுகோலாக இக்குறியீடு திகழ்கிறது.

இடைநிலைக் கல்வி அடைவு விகிதம் =

$$\frac{\text{10 ஆம் வகுப்புத் தேர்வு எழுதிய மாணவர்கள் எண்ணிக்கை}}{\text{முந்தைய ஆண்டில் 9 ஆம் வகுப்பில் சேர்ந்த மாணவர்கள் எண்ணிக்கை}}$$

சத்யமேவ ஜயதே... TRUTH ALONE TRIUMPHS

3.7.6. கல்விசார் குறியீடுகள் (2019-2020)

3.7.6.1. கல்விசார் குறியீடுகள் (இடைநிலை)

வ. எண்	குறியீடுகள்	சராசரி
1	மொத்த சேர்க்கை விகிதம் (GER)	93.85
2	மொத்த சேர்க்கை விகிதம் (GER) மாணவிகள்	95.19

2020 மார்ச் 12]

வ. எண்	குறியீடுகள்	சராசரி
3	மொத்த சேர்க்கை விகிதம் (GER) — SC	93.80
4	மொத்த சேர்க்கை விகிதம் (GER) — ST	77.30
5	பாலின சமநிலைக் குறியீட்டு எண் (GPI)	1.06
6	பாலின சமத்துவக் குறியீட்டு எண் (GEI)	1.03
7	சமூக சமத்துவக் குறியீட்டு எண்—(SEI) — SC	1.09
8	சமூக சமத்துவக் குறியீட்டு எண்—(SEI) — ST	0.90

3.7.6.2. கல்விசார் குறியீடுகள் (மேல்நிலை)

வ. எண்	குறியீடுகள்	விழுக்காடு
1	மொத்த சேர்க்கை விகிதம் (GER)	77.80
2	மொத்த சேர்க்கை விகிதம் (GER) மாணவர்கள்	73.60
3	மொத்த சேர்க்கை விகிதம் (GER) மாணவிகள்	82.00
4	மொத்த சேர்க்கை விகிதம் (GER) — SC	77.55
5	மொத்த சேர்க்கை விகிதம் (GER) — ST	55.60

3.7.6.3. இடைநிற்றல் மற்றும் தக்கவைத்தல் விகிதம் (இடைநிலை)

வ. எண்	செயல்திறன் குறியீடுகள்	மாணவர்கள்	மாணவிகள்	சராசரி
1	இடைநிற்றல் விகிதம்	4.00	2.50	3.25
2	தக்கவைத்தல் விகிதம்	96.00	97.50	96.75

3.7.6.4. மாறுதல் விகிதம்

வ. எண்.	இடைநிலை (8-ல் இருந்து 9 ஆம் வகுப்பிற்கு)			மேல்நிலை (10-ல் இருந்து 11 ஆம் வகுப்பிற்கு)		
1	மாணவர்கள்	மாணவிகள்	சராசரி	மாணவர்கள்	மாணவிகள்	சராசரி
2	96.80	96.90	96.85	86.40	93.60	90.00

3.8. பயிற்சி

3.8.1. ஆசிரியர்களுக்கான பயிற்சி

உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வி அளவில் கற்பித்தல் தரத்தினை மேம்படுத்துவதற்காக ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குதல் அவசியமாகும். ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தல் திறன் மேம்படுத்துதலை உறுதி செய்வதற்காக, திருத்திய கலைத் திட்டம், பாடத் திட்டம், பாடப் புத்தகங்கள், இடைநிலைக் கல்வி நிலையில் மாற்றுத் திறனாளிகளுக்கான உள்ளடக்கியக் கல்வி, தேசிய அடைவுத் தேர்விற்குப் பின்னர் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள், மதிப்பீடு உத்தி மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றை மையப்படுத்தி பணியிடை பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மாநில ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2019-2020 ஆம் கல்வியாண்டில் ரூ.1,881.50 இலட்சம் செலவில் 55,639 பட்டதாரி ஆசிரியர்களுக்கும், 33,956 முதுகலை ஆசிரியர்களுக்கும் 7 நாட்கள் பயிற்சி வழங்கப்பட்டது.

3.8.2. பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான தலைமைப் பண்பு மேம்படுத்துதல் திட்டம்

தலைமை ஆசிரியர்களுக்கு தலைமைப் பண்பினை மேம்படுத்திக்கொள்வதற்கான பயிற்சி ஒவ்வொரு ஆண்டும் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. 2019-2020 ஆம் கல்வியாண்டில் ரூ.2.40 இலட்சம் செலவில் 96 மாநிலக் கருத்தாளர் குழுக்களுக்கு தலைமைப் பண்பு மேம்படுத்தும் பயிற்சி வழங்கப்பட்டது. மேலும், இப்பயிற்சியினை வலுப்படுத்தும்வகையில் தேசிய கல்வித் திட்டமிடல் மற்றும் மேலாண்மை நிறுவனம் வாயிலாக (NIEPA) பயிற்சி பெற்ற மாநிலக் கருத்தாளர்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டனர். இப்பயிற்சி பெற்ற தலைமை ஆசிரியர்களின் முக்கிய நோக்கம் நீண்டகால மேம்பாட்டுத் திட்டம் (3 ஆண்டுகள்) ஒன்றைத் தயாரிப்பதாகும். இப்பயிற்சியானது புதிதாக பதவி உயர்வு பெற்ற 960 தலைமை ஆசிரியர்களுக்கு ரூ.14.40 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது.

2020 மார்ச் 12]

3.8.3. பள்ளி மேலாண்மை மற்றும் மேம்பாட்டுக் குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி

பள்ளியின் அன்றாட நிகழ்வுகளில் சமுதாயத்தின் பங்கேற்பை மேம்படுத்துவதில் மாநில அரசு தனிக் கவனம் செலுத்துகிறது. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்விச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு உரிமைகளுடன் குழந்தையின் கல்வி உரிமையை உறுதிப்படுத்தும் பல்வேறு விதிகளை திறம்பட செயல்படுத்துவதில் பள்ளி மேலாண்மை மற்றும் மேம்பாட்டுக் குழு பெரும்பங்கு வகிக்கிறது.

அதன்படி, அனைத்து அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், பள்ளி மேலாண்மை மற்றும் மேம்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெற்றோர்-ஆசிரியர் கூட்டம் ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளிக்கிழமை ஒவ்வொரு பள்ளியிலும் நடைபெறுகிறது. அங்கு ஒவ்வொரு வகுப்பிலும் வகுப்பு ஆசிரியர்கள் கூட்டத்தைக் கூட்டுவர். இந்தக் குழுவின் முக்கிய நோக்கம் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி சட்ட வழிகாட்டுதல்கள்/விதிமுறைகளின்படி பள்ளி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் சமூகத் தணிக்கை வினாப்பட்டி ஆகியவற்றைத் தயாரிப்பது மற்றும் இதையொட்டி பள்ளியை குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்விச் சட்டத்தின் இணக்கப் பள்ளியாக மாற்ற உதவுவதாகும்.

தற்போது 36,390 பள்ளி மேலாண்மை மற்றும் மேம்பாட்டுக் குழு உறுப்பினர்களுக்கு, குறு வள மைய அளவில் ரூ.54.89 இலட்சம் செலவீட்டில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்விச் சட்டம் 2009, பள்ளி மேலாண்மை மேம்பாட்டுக் குழு கடமைகளும், பொறுப்புகளும், பள்ளியின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கான சமூகப் பங்களிப்பிற்கான முக்கியத்துவம், பேரிடர் மேலாண்மைக்கான வழிமுறைகள், குழந்தைகளுக்கான உரிமைகள், பாலின சமத்துவம், தரமான கல்வி மற்றும் பிற அரசு திட்டங்கள் ஆகியவற்றைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்வகையில் ஒரு பள்ளிக்கு ரூ.3,000/- வீதம், ரூ.181.95 இலட்சம் செலவில் 2019-2020 ஆம் ஆண்டில் இப்பயிற்சி அளிக்கப்பட்டது.

3.8.4. நிருவாக அலுவலருக்கான பயிற்சி

ஆண்டு பயிற்சி கால அட்டவணையில் ஒரு வார காலத்திற்கு நிருவாக அலுவலர்களுக்கான ஒருங்கிணைந்த பயிற்சியினை வழங்குவது மிக முக்கியமானதாக உள்ளது. 2019-2020 ஆம் கல்வி ஆண்டில் இரண்டு நாள் நிருவாகம் மற்றும் திட்டம் சார்ந்த பயிற்சி சென்னை மற்றும் மதுரை மாவட்டத்தில் நடைபெற்றது. இப்பயிற்சி 120 மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் 96 மாவட்ட நிருவாகிகளுக்கு முறையே ரூ.2.40 இலட்சம் மற்றும் ரூ.1.92 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது. பங்கேற்பாளரின் கருத்துகளை பிரதிபலிக்கவும், பல்வேறு பிரச்சினைகளைச் சுமுகமான முறையில் கையாளத் தேவையான உத்திகளை மேம்படுத்தவும் இப்பயிற்சியானது ஒரு தளமாக அமைந்தது. கல்வி சார்ந்த பல்வேறு தலைப்புகள், வளரிளம் பருவ உளவியல் மற்றும் சமூகத்திலுள்ள பெற்றோர்களுக்கான கருத்துகளை அளிக்கும்வகையில் மாநில அளவிலுள்ள வல்லுநர்களைக் கொண்டு இப்பயிற்சி வழங்கப்பட்டது.

3.9. கல்வி இணைச் செயல்பாடுகள்

3.9.1. மாநில மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள்

மாணவர்களிடம் விளையாட்டுத் திறன்களை வளர்த்திட மாநில அரசு உறுதிபூண்டுள்ளது. இளம் வீரர்/வீராங்கனைகளை மண்டல/ மாவட்ட/மாநில/தேசிய/பன்னாட்டு அளவிலான போட்டிகளில் கலந்துகொண்டு நமது மாநிலத்திற்கு பெருமை சேர்த்திடவும், வெற்றி பெறுவதற்கும் ஏற்ப பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இந்த நோக்கத்தின் அடிப்படையில் 2013-2014 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் மாநில அரசு ரூ.10.00 கோடி நிதியை அளிக்கிறது. மாணவர்களிடையே விழிப்புணர்வு அதிகரித்துள்ள நிலையில், மண்டல அளவிலிருந்து தேசிய அளவிலான போட்டிகள் வரை 15 இலட்சம் மாணவர்கள் பங்கேற்றனர். தேசிய அளவிலான போட்டிகளில், 2018-2019-ல் ஏழாம் இடத்திலிருந்த தமிழ்நாடு, 77 தங்கப் பதக்கங்கள், 61 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 116 வெண்கலப் பதக்கங்களை வென்று 2019-2020-ல் ஐந்தாம் இடத்திற்கு முன்னேறி உள்ளது.

2020 மார்ச் 12]

3.9.2 சதுரங்க விளையாட்டு

சதுரங்க விளையாட்டை வளர்ப்பதில் மற்ற மாநிலங்களைவிட தமிழகம் முன்னணியில் உள்ளது. மாணவர்களின் நுண்ணறிவு மற்றும் உத்திகளைக் கையாளும் திறன் ஆகியவற்றை சதுரங்க விளையாட்டு அதிகரிக்கிறது. 7 முதல் 17 வயதுடைய மாணவர்களுக்கு பல்வேறு நிலை சதுரங்கப் போட்டிகள் மாநில அளவில் நடத்தப்படுகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் மாநில அளவிலான சதுரங்கப் போட்டியில் 24 மாணவர்கள் வெற்றி பெற்றனர். இத்தகைய போட்டிகளை நடத்துவதற்கு தமிழக அரசு ஒவ்வொரு வருடமும் ரூ.22.00 இலட்சம் நிதி வழங்குகிறது. இந்திய பள்ளி விளையாட்டு கூட்டமைப்பு 2019-2020 ஆம் ஆண்டு நடத்திய தேசிய அளவிலான போட்டிகளில், தமிழக சதுரங்கக் குழுவினர் 14 வயதிற்குட்பட்டோர் மற்றும் 17 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் தங்கப் பதக்கமும், 17 வயதுக்குக் குறைவான ஆண்கள் பிரிவில் வெள்ளிப் பதக்கமும், 19 வயதுக்குக் குறைவான ஆண்கள் பிரிவில் தங்கப் பதக்கமும், 19 வயதுக்குக் குறைவான பெண்கள் பிரிவில் வெள்ளிப் பதக்கமும் வென்றனர்.

3.9.3. யோகா

போட்டிகள் நிறைந்த உலகில் பல்வேறு காரணங்களினால் மாணவர்கள் மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர். யோகா, மாணவர்களின் மன அழுத்தம் மற்றும் மன இறுக்கத்தைப் போக்க உதவுவதால் பள்ளிகளில் 2017-2018 ஆம் ஆண்டு முதல் யோகா தன்னார்வ உடற்பயிற்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. யோகா ஒரு மாணவனின் உடல் மேம்பாட்டிற்கு மட்டுமல்லாமல் மனநிலை மேம்பாட்டிற்கும் உதவி புரிகின்றது. மேலும், மாணவர்களுடைய உடல் தகுதி முறையாக அமைவதற்கு யோகா உதவுகிறது. 2019-2020 ஆம் ஆண்டு, கல்வி மாவட்ட அளவில், மாவட்ட அளவில், மாநில அளவில் யோகா ஒலிம்பியாட் நடத்துவதற்காக திட்ட ஏற்பளிப்புக் குழுவால் ரூ.16.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு, கல்வி மாவட்ட அளவில், மாவட்ட அளவில், மாநில அளவில் யோகா ஒலிம்பியாட் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 12

2019-2020 ஆம் ஆண்டில் பள்ளி விளையாட்டு இந்திய கூட்டமைப்பு நடத்திய 65-வது தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில், தமிழ்நாடு 1 தங்கப் பதக்கம், 2 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 4 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது. மாணவர்களின் தினசரி வாழ்க்கை முறையில் விளையாட்டு மற்றும் உடலியக்கச் செயல்பாடுகளைப் பயிற்றுவித்துப் பழக்கவும், மாணவர்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் காலையில் 15 நிமிடங்கள் மற்றும் பிற்பகலில் 45 நிமிடங்கள் அனைத்துப் பள்ளிகளிலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.9.4. நாட்டு நலப் பணித் திட்டம்

மருத்துவ முகாம்கள், இரத்த தான முகாம்கள், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் மரம் நடுதல் போன்ற சமூக சேவைகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதன்மூலம் தேசத்தின் கட்டமைப்பை மேம்படுத்துவதே நாட்டு நலப் பணித் திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். தமிழக மேல்நிலைப் பள்ளிகளில் 1957 நாட்டு நலப் பணித் திட்ட அலகுகளும் 97,900 தன்னார்வலர்களும் உள்ளனர். நாட்டு நலப் பணித் திட்ட சிறப்பு முகாம்களை நடத்துவதற்கென ரூ.1.64 கோடியும், வழக்கமான செயல்பாடுகளுக்காக ரூ.1.83 கோடியும் ஒவ்வொரு ஆண்டும் செலவிடப்படுகிறது. நாட்டு நலப் பணித் திட்ட அலுவலர்களுக்கான சிறப்பு முகாம்கள் முறையான கால இடைவெளியில் ஒவ்வோர் ஆண்டும் கோயம்புத்தூர் மற்றும் சென்னையில் நடைபெறுகிறது.

3.9.5. இளம் செஞ்சிலுவைச் சங்கம்

தமிழக உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இளம் செஞ்சிலுவைச் சங்கம் செயல்படுகிறது. இத்திட்டத்தில் ஆசிரியர்கள் ஆலோசகர்களாகவும், மாணவர்கள் தன்னார்வலர்களாகவும் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். இந்த மன்றம் மனிதநேய விழுமியங்களை மனதில் பதியச் செய்வதுடன், கனிவான செயல்களைச் செய்திடும் திறனை மெருகேற்றவும் உதவுகிறது. இம்மன்றத் தன்னார்வலர்களுக்கு முதலுதவி பேரிடர் மேலாண்மை, சாலைப் பாதுகாப்பு, தீயிலிருந்து தற்காத்துக் கொள்ளுதல், விழாக்கள் மற்றும் பெருநிகழ்வுகளின்போது பொது மக்களுக்கு உதவி செய்தல்

2020 மார்ச் 12]

ஆகியவற்றிற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இச்சங்கம் 12,123 இளம் செஞ்சிலுவைச் சங்கக் குழுக்களையும், 5,82,122 மாணவ உறுப்பினர்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

3.9.6. சாரண சாரணியர்

*சாரண சாரணியர் இயக்கம் தமிழ்நாட்டில் 3,23,375 மாணவர்களையும், 13,210 ஆசிரியர்களையும் ஈடுபடுத்தி வெகு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. முக்கியமான இடங்கள், தொல்பொருள் மையங்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றைத் தூய்மைப்படுத்துதல், மரக்கன்றுகள் நடுதல், நலவாழ்வு மற்றும் துப்புரவு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், முதலுதவி வழங்குதல், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல் ஆகியன அவர்களுடைய முக்கியமான நடவடிக்கைகள் ஆகும். 2018-2019 ஆம் ஆண்டில் அரசு சாரண சாரணியர் இயக்கத்திற்காக ரூ.2.00 கோடி நிதியை தொகுப்பு நிதியாக விடுவித்துள்ளது. இந்த வைப்பு நிதியிலிருந்து கிடைக்கும் திரட்சித் தொகையானது தமிழ்நாடு முழுவதும் உள்ள பல்வேறு சாரண சாரணியர் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளப்படும். தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்கமானது 22 ஆண்டுகள் நீண்ட இடைவெளிக்குப் பிறகு 2019 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 27 முதல் 31 ஆம் நாள் வரை பத்தாவது மாநில கேம்பூரி (*Camporee*) முகாமை வெகு சிறப்பாக நடத்தியது. இதில் மாநிலம் முழுவதிலும் இருந்து 4,000 சாரண சாரணியர், திரி சாரணியர், வன சாரணியர் கலந்துகெண்டு சிறப்பித்தனர்.*

3.9.7. இளைஞர் மற்றும் சுற்றுச்சூழல் மன்றம்

இளைஞர் மன்றம் என்பது வாழ்க்கைத் திறன்கள், சுயமரியாதை, தன்னம்பிக்கை ஆகியவற்றை வளர்க்க உதவும் ஒரு கருவியாக இருப்பதுடன், மன அழுத்தம், அவமானம் மற்றும் பயம் ஆகிய எதிர்மறை உணர்ச்சிகளை எதிர்கொள்ளவும் உதவுகிறது.

சுற்றுச்சூழல் மன்றம் பள்ளிகளில் சுற்றுச்சூழல் சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் திட்டங்களை மேற்கொள்ள மாணவர்களுக்கு அதிகாரம் அளிப்பதுடன் மாணவர்கள், பெற்றோர் மற்றும் சமூகப் பங்களிப்போடு சுற்றுச்சூழல் மேம்பாட்டுச் செயல்பாடுகளை மேற்கொள்ள இம்மன்றம் வழிகோலுகிறது. மாணவர்களைப்

பாடத்திட்டத்திற்கு அப்பால் சுற்றுச்சூழல் கருத்துகள் மற்றும் செயல்களை ஆராய உதவுகிறது. இதற்காக 2019-2020 ஆம் கல்வி ஆண்டில் அனைத்து அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.25,000/- வீதம், மொத்தம் ரூ.1,516.25 இலட்சம் நிதி செலவிடப்பட்டுள்ளது.

3.10. வழிகாட்டல் மற்றும் ஆலோசனை

3.10.1. மாணவர்களுக்கான நடமாடும் ஆலோசனை மையங்கள்

மாணவர்களுக்கு அவர்களுடைய முன்வளர் இளம் பருவத்தில் கல்விசார் அடைவுகளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பலதரப்பட்ட அறைகூவல்களை எதிர்கொள்வதற்கு உரிய வழிகாட்டுதல்களும், ஆலோசனைகளும் மிகவும் முக்கியமானவையாகும். இத்தகைய மனத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களும் 17 மண்டலங்களாகப்பிரிக்கப்பட்டுள்ளன. அனைத்துப்பள்ளிகளையும் சென்றடையும்வகையில் முழுமையான வசதிகள் கொண்ட 17 நடமாடும் ஆலோசனை ஊர்திகள் வழங்கப்பெற்றுள்ளன. இத்தகைய ஊர்திகளில் தொலைக்காட்சிப் பெட்டிகளும் மற்றும் மின்னணுக் கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக உளவியலாளர்கள் தனியாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 2019-2020 ஆம் கல்வியாண்டில் மாநிலம் முழுவதும் 984 பள்ளிகளில் பயிலும் 1,49,037 மாணவர்களுக்கு மனநல ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. அவர்களில் 7,892 மாணவர்களுக்கு தனிப்பட்ட ஆலோசனைகளும் 1,41,145 மாணவர்களுக்குக் குழு ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் ஆலோசனைகள் வழங்குவதற்குத் தகுதியான ஆசிரியர் ஒருவர் மனநல ஆலோசகராக விளங்குகிறார்.

3.10.2. கட்டணமில்லா உதவி எண் 14417

பள்ளி மாணவர்களுக்காக 24X7 செயல்படக்கூடிய வகையில் தொடங்கப்பட்ட 14417 என்ற கட்டணமில்லா உதவி எண்மூலம்

2020 மார்ச் 12]

1-3-2018 முதல் பிப்ரவரி 2020 வரை சுமார் 2.64 இலட்சம் அழைப்புகள் ஏற்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் உள்ள குறிப்பாகக் கிராமப்புற, மலைவாழ் பகுதிகளில் இருக்கக்கூடிய மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு பள்ளி மாணவர்களுக்கான நலத் திட்டங்கள், பாடத் திட்டம் மற்றும் தேர்வு தொடர்பான விளக்கங்கள் அளித்தல், மாணவர்களுக்கான வழிகாட்டுச் செயல்முறைகள் அளித்தல் மற்றும் இளம் பருவக் குழந்தைகளுக்கு மனரீதியான ஆலோசனைகளை அளித்தல் போன்ற பயன்பெறத் தக்க தகவல்களை அளிப்பதற்கான புதுமையான திட்டமாக இத்திட்டம் அமைந்துள்ளது.

3.11. கல்வித் தர மேம்பாட்டு முனைப்புகள்

3.11.1. தகவல் தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் எண்மயமாக்குதலுக்கான முனைப்புகள்-உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள்

பள்ளிகளில் கற்றல்—கற்பித்தல் முறைகளை மேம்படுத்துவதற்கு செய்தி, தகவல் தொலைத் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் எண்மயமாக்குதல் மிக முக்கியமான கிரியா ஊக்கி ஆக உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அரசுப் பள்ளிகளில், இணையத் தொடர்பு வசதியுடன் 3,090 உயர்நிலைப் பள்ளிகளிலும், 2,939 மேல்நிலைப் பள்ளிகளிலும், உயர் தொழில்நுட்ப ஆய்வக வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. மாணவர்களின் தகவல் தொலைத் தொடர்பு மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த திறன்களை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே வளர்த்திடும்பொருட்டு 3,090 உயர்நிலைப் பள்ளிகளுக்கும், பள்ளி ஒன்றுக்கு 10 கணிப்பொறிகளும்; 2,939 மேல்நிலைப் பள்ளிகளுக்கும், பள்ளி ஒன்றுக்கு 20 கணிப்பொறிகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்த கணிப்பொறிகளோடு உயர்நிலைப் பள்ளிகளுக்கு 1 Mpbs வேகத்துடன்கூடிய இணையதள இணைப்பு வசதிகளும், மேல்நிலைப் பள்ளிகளுக்கு 2 Mpbs வேகத்துடன்கூடிய இணையதள இணைப்பு வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. இந்த உயர் தொழில்நுட்ப ஆய்வகங்களின் பயன்பாடு ஒரு மையக் கட்டுப்பாட்டு அறையிலிருந்து கண்காணிக்கப்படுகிறது. இதற்கான கட்டளை மையத்திலிருந்து 100 Mpbs வேகத்துடன் கூடிய

இணையதள இணைப்பு வசதி அமைக்கப்பட்டுள்ளது. மின்னணு முறையில் மாணவர்களின் திறனை மதிப்பீடு செய்வதற்கும், பாடப் பகுதிகளை வழங்குவதற்கும் இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

3.11.2. அரசுப் பள்ளிகளில் கண்காணிப்பு கேமரா வசதி (CCTV)

மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்திடும் பொருட்டு 1,646 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும், 244 அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. இதில் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் கண்காணிப்பு செய்கின்ற ஒட்டுமொத்த இணைப்பு முறை செயல்படுகிறது. ஒவ்வொரு பள்ளிக்கும் மென்பொருள் இணைப்பு வசதியுடன் 3 முதல் 4 கண்காணிப்பு கேமராக்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு ரூ.21.68 கோடி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு மின் ஆளுமை முகமையிடம் அரசு ஒப்படைத்துள்ளது.

3.11.3. அடல் டிங்கரிங் ஆய்வகங்கள் நிறுவுதல்

மாணவர்களின் புத்தாக்க முயற்சிகளையும், படைப்பாற்றலையும், ஆர்வத்தையும் தூண்டும் வகையிலும், நல்ல மனப்பான்மையையும், கணினி பற்றிய சிந்தனைகளையும், தகவமை கற்றல், கணிப்பொறி இயக்குதல், விரைவாக மதிப்பீடுகள் செய்தல் ஆகிய திறன்களை இளம் உள்ளங்களில் ஆழப்பதிய வைப்பதற்காகவும் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் அடல் டிங்கரிங் ஆய்வகங்கள் ஏற்படுத்துவதை அரசு ஊக்குவிக்கிறது. இதுவரை 267 மேல்நிலைப் பள்ளிகளில் இவ்வாய்வகங்கள் ரூ.49.97 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

3.11.4. திறன் அட்டைகள் வழங்குதல்

அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயில்கின்ற சுமார் 70.60 இலட்சம் மாணவர்களுக்கு விரைவுத் துலங்கல் குறியீட்டுடன்கூடிய திறன் அட்டைகள் வழங்குவதற்காக மாநில அரசு ரூ.9.00 கோடியை ஒதுக்கி உள்ளது. இந்தத் திறன் அட்டைகள் ஒவ்வொரு மாணவனின்

2020 மார்ச் 12]

சொந்த விவரங்களை உள்ளடக்கியவையாக இருக்கும். 2019-2020 ஆம் ஆண்டில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு திறன் அட்டைகளை ரூ.1.17 கோடி செலவில் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3.11.5. ஆசிரியர்கள்/பணியாளர்களுக்கான தொட்டுணர் கருவி வருகைப் பதிவு

ஆசிரியர்களின் வருகையைப் பதிவு செய்ய அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளிலும் ஆதார் அட்டையை அடிப்படையாகக் கொண்டு தொட்டுணர் வருகைப் பதிவுக் கருவியை அரசு நிறுவியுள்ளது. 2.13 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இம்முறையைப் பயன்படுத்தி வருகைப் பதிவை மேற்கொள்கின்றனர். இந்நோக்கத்திற்காக விரல் பதிவுக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், ஆசிரியரல்லாத பிற பணியாளர்கள் சரியான நேரத்திற்கு வருவதை உறுதிப்படுத்துவதற்காக அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள் ஆகியோரின் அலுவலகங்களிலும் இந்த தொட்டுணர் வருகைப் பதிவு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

3.11.6. போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி

2017-2018 ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளும் பொருட்டு அவர்களைத் தயார்படுத்துவதற்காக மண்டல வாரியாக 412 பயிற்சி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2018-2019 ஆம் ஆண்டில் அரசுப் பொதுத் தேர்வுகள் முடிவுற்றவுடன் தமிழகம் முழுவதும் 14 மையங்களில் உண்டு உறைவிட பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. வணிகவியல் பாடத்தில் ஆழ்ந்த விருப்பம் கொண்ட மாணவர்களுக்காக அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் அனைத்திலும் இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் விழிப்புணர்வுப் பயிற்சி நடத்தப்படுகிறது.

3.11.7. தற்காப்புக் கலைப் பயிற்சி

பெண்கள் திறன் மேம்பாட்டிற்கான ஒரு முன் முயற்சியாக அனைத்து மாவட்டங்களில் உள்ள 5,711 பள்ளிகளில் மாணவியர்களுக்கான தற்காப்புப் பயிற்சி திட்டத்தை மாநில அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணவிகளுக்கும் கராத்தே, ஜூடோ, டேக்வாண்டோ போன்ற தற்காப்புக் கலைகளில் நன்கு பயிற்சி பெற்ற பெண் பயிற்சியாளர்கள்மூலம், பள்ளி ஆசிரியர்களின் மேற்பார்வையில் வாரத்திற்கு இரண்டு முறை வீதம், மூன்று மாதங்களுக்குப் பயிற்சி வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு ரூ.513.99 இலட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

3.11.8. நூலக மானியம்

அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வி கற்கும் தரம் மேம்பட புதிய நூலகங்களை பள்ளியில் தொடங்கும் ஒரு புதிய முயற்சி 2018—2019 ஆம் ஆண்டு முதல் ரூ.270.63 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கென 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.910.75 இலட்சம் கூடுதல் மானியம் அளிக்கப்பட்டுள்ளது.

3.11.9. திறனறிதல்-பள்ளி அளவில்

மாணவர்களின் முழு ஆளுமைத்திறன் மற்றும் கல்வி சிறப்புச் செயல்பாடுகளை வளர்த்தல் ஆகியவை பள்ளி அளவிலான திறனறித் தேர்வின் நோக்கம் ஆகும். 2019-2020 ஆம் கல்வியாண்டில் மாணவர்களின் முழு ஆளுமைத் திறனை வளர்க்க நடவடிக்கை எடுக்கும் வகையில் அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு விவாத மேடை/கருத்தரங்கம்/கட்டுரை எழுதுதல் போன்ற திறனறிப் போட்டிகளை பள்ளி அளவில், கல்வி மாவட்ட அளவில், மாவட்ட அளவில், மண்டல அளவில், மாநில அளவில் நடத்த ரூ.32.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டு செலவிடப்பட்டுள்ளது.

2020 மார்ச் 12]

3.11.10. படைப்புசார் கற்றல் திட்டம்

இத்திட்டம் இடைநிலைக் கல்வி பயிலும் மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் பங்கேற்பதை மேம்படுத்த வடிவமைக்கப்பட்ட சிறப்புத் திட்டமாகும். இத்திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டது. மாணவர்களின் கற்றல் அனுபவத்தை மேம்படுத்தும் நோக்கில் சிறப்புத் திட்டங்களைத் தயாரிக்க மாணவர்களை ஊக்குவிக்கிறது. மாவட்ட அளவிலான காட்சிப்படுத்துதல் நிகழ்வில் சிறந்த திட்டங்களுக்காக மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ.123.44 இலட்சம் நிதி செலவிடப்பட்டு 1,54,500 மாணவர்கள் பயனடைந்தனர்.

3.11.11. மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா-மாநிலத்திற்குள்

கல்விச் சுற்றுலாமூலம் மாணவர்கள் அவர்களது வழக்கமான கற்றல் சூழலைத் தாண்டி வகுப்பறைக்கு வெளியில் உள்ள இடங்களைப் பார்வையிட்டு நேரடிக் கற்றல் அனுபவத்தைப் பெறுவதால் அவர்களது சிந்தனை, ஆர்வம் மற்றும் தனிப்பட்ட திறன்களை மேம்படுத்திக்கொள்ள முடியும்.

2019-2020 ஆம் ஆண்டில், 1,543 அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த 38,575 மாணவர்கள் உயர் கல்வி நிறுவனங்கள், கணித மற்றும் அறிவியல் மையங்கள், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், அருங்காட்சியகங்கள், விலங்கியல் பூங்கா போன்றவற்றைப் பார்வையிட்டுள்ளனர். இதற்காக ரூ.77.15 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

3.11.12. வெளி மாநில கல்விச் சுற்றுலா

ஒருங்கிணைந்த கல்வியின் வாயிலாக திறமைமிக்க மாணவர்களை ஊக்குவிக்கும்வகையில் வெளி மாநில கல்விச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்வதன்மூலம் அவர்களின் சிந்தனை மற்றும் படைப்பாற்றலைத் தூண்டுவதோடு பிற மாநிலங்களின் கலாச்சாரங்கள், மதிப்பீடுகளைத் தெரிந்துகொள்வதற்கும் இத்திட்டம் வாய்ப்பளிக்கிறது. 2019-2020 ஆம் ஆண்டில் அரசுப் பள்ளிகளில் இடைநிலைக் கல்வி பயிலும் 3,600 மாணவர்கள் (ஒரு கல்வி மாவட்டத்திற்கு 30 மாணவர்கள் வீதம், 120 கல்வி

TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 12

மாவட்டங்களில்) ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, தெலுங்கானா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் உள்ள உயர் கல்வி நிறுவனங்கள், அறிவியல் மையங்கள், அருங்காட்சியகங்கள் மற்றும் தொன்மை வாய்ந்த இடங்களைப் பார்வையிட்டுள்ளனர். இதற்காக ரூ.72.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

3.11.13. திறன் மேம்பாட்டிற்கான ஆசிரியர் பரிமாற்றத் திட்டம்

இத்திட்டத்தின்மூலம் ஒரு கல்வி மாவட்டத்திற்கு 10 ஆசிரியர்கள் வீதம், 120 கல்வி மாவட்டங்களைச் சார்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட 1,200 ஆசிரியர்கள் மற்ற மாநிலங்களில் உள்ள தகவல் தொலைத் தொடர்பு தொழில்நுட்பம் சார்ந்த நவீன முன்னேற்றங்களை வகுப்பறையில் கற்றல்-கற்பித்தல் முறைக்குப் பயன்படுத்தும் உயர் கல்வி நிறுவனங்களைப் பார்வையிட்டுள்ளனர். 2019-2020 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ.24.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

3.11.14. வரைபடத் திறன் பயிற்சி 2019-2020

மாணவர்களிடையே வரைபடத் திறனை வளர்ப்பது மிகவும் இன்றியமையாதது ஆகும். இதற்கான பயிற்சி அனைத்து சமூக அறிவியல் ஆசிரியர்கள் குறிப்பாக புவியியல் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிறது. இவ்வாறு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்மூலம் வரைபடத் திறன் மாணவர்களுக்கு போதிக்கப்படுகிறது. அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட தள சாய்வு மானி, முப்பரிமான வரைபடம், டாப்போ தாள்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய புவியியல் கருவிப் பெட்டிகள் வகுப்பறையில் சீரிய முறையில் மாணவர்களுக்கு வரைபடத் திறன் பயிற்சி வழங்க உதவிகரமாக அமைந்தது. இதன்மூலம் 6,17,100 மாணவர்கள் பயனடைந்தனர். இத்திட்டத்திற்கென ரூ.60.65 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்பட்டுள்ளது.

3.12. போட்டிகளும் பரிசுகளும்

3.12.1. அறிவியல் கண்காட்சி

மாணவர்களிடையே அறிவியல் மனப்பான்மையை வளர்க்கும் திட்டங்களைச் செயல்படுத்த பள்ளிக் கல்வித் துறை மிகவும்

2020 மார்ச் 12]

ஆர்வமுடன் செயல்படுகிறது. அவற்றுள் அறிவியல் கண்காட்சியும் ஒன்றாகும். அறிவியல் கண்காட்சியானது விஞ்ஞானம், புதுமை மற்றும் படைப்பாற்றல் ஆகியவை சார்ந்து தங்கள் தேடலை வெளிப்படுத்த மாணவர்களுக்குத் தேவைப்படும் சிறந்த ஒரு களமாக அமைகிறது. ஒவ்வோர் ஆண்டும் அறிவியல் கண்காட்சிகள் பள்ளி, கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம் மற்றும் மாநில அளவில் நடத்தப்படுகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.16.00 இலட்சம் நிதி செலவிடப்பட்டுள்ளது.

மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சி இறுதிப் போட்டியில் அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து மொத்தம் 6,675 மாணவர்கள் பங்கேற்றனர்.

கரூர் மாவட்டத்தில் 31-10-2019 அன்று ஏற்பாடு செய்யப்பட்ட மாநில அளவிலான அறிவியல் கண்காட்சியில் வேளாண் தொழில்கள், வளங்கள் மேலாண்மை, உடல் நலம் மற்றும் சுகாதாரம் போன்ற தலைப்புகளில் மொத்தம் 160 அறிவியல் செயல் திட்டங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவர்கள், ஜனவரி 2020-ல் தமிழகத்தில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற தென்னிந்திய அறிவியல் கண்காட்சியில் பங்கேற்றனர். 6 மாநிலங்களிலிருந்து 600 மாணவர்கள், 300 காட்சிப் பொருட்களுடன் கண்காட்சியில் பங்கேற்றனர்.

3.12.2. வினாடி வினா போட்டிகள்

வினாடி வினா போட்டிகள் நடத்துவதன் நோக்கம், மாணவர்கள் பாடப் புத்தகங்களைத் தாண்டி தங்களது பொது அறிவை வளர்த்துக்கொள்ளும் சூழல் மற்றும் குழு மனப்பான்மையை உருவாக்குவது ஆகும்.

இப்போட்டிகள் அரசுப் பள்ளிகளில் இடைநிலை கல்வி மாணவர்களுக்கு பள்ளி, கல்வி மாவட்ட, மாவட்ட, மண்டல மற்றும் மாநிலம் ஆகிய 5 நிலைகளில் நடத்தப்பட்டன. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளைச் சார்ந்த 36,856 மாணவர்கள் ஒரு குழுவுக்கு 4 மாணவர்கள் என்ற வீதத்தில் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றனர். மாநில அளவிலான இறுதிப் போட்டிக்கு சிறந்த 3 அணிகள் தெரிவு செய்யப்படும். அனைத்து நிலைகளிலும் வெற்றி

[2020 மார்ச் 12

பெற்ற அணிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு ரொக்கத் தொகை, சான்றிதழ்கள் மற்றும் வெற்றிக் கோப்பைகள் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது. இதற்காக 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.46.07 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

3.12.3. கலா உத்சவ்

கலா உத்சவ் என்பது இடைநிலை அளவிலான மாணவர்களின் கலைத் திறனைக் கொண்டு, பாரம்பரியக் கலையினை மீட்டெடுத்து, காட்சிப்படுத்தும் புத்தாக்கத் திட்டம் ஆகும். கலா உத்சவ் விழா, மாவட்டம், மாநிலம் மற்றும் தேசிய அளவில் நடத்தப்படுகிறது. மாணவர்கள் தமது வாழ்வியல் பாரம்பரியத்தோடு இரண்டறக் கலந்த கலை வடிவங்களான இசை (வாய்ப்பாட்டு மற்றும் கருவி), நடனம் மற்றும் ஓவியம் ஆகியவற்றை உணர்ந்து உள்வாங்கிக் கொண்டு அவற்றைத் திறம்பட வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பை இந்தக் கலா உத்சவ் திட்டம் வழங்குகிறது. இதற்கென 2019-2020 ஆம் கல்வியாண்டில் ரூ.12.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டிற்கான தேசிய அளவிலான கலா உத்சவ் போட்டிகள் 2020 ஜனவரி 2 ஆம் நாள் முதல் 5 ஆம் நாள் வரை மத்திய பிரதேசத் தலைநகர் போபாலில் நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் தமிழ்நாட்டைச் சார்ந்த 8 மாணவர்கள் கலந்து கொண்டு கருவி இசைப் போட்டியில் முதல் பரிசையும், ஓவியப் பிரிவில் முதல் பரிசையும், கருவி இசை (பெண்கள்) பிரிவில் மூன்றாம் பரிசையும் பெற்றனர். இப்பரிசுகள் கேடயம், பதக்கம், வெற்றிச் சான்றிதழ்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும்.

வ. எண்	கலை வடிவம்	பங்குபெற்ற மாணவர்கள் 2019—2020	
		மாவட்ட அளவில்	மாநில அளவில்
1.	இசை — பாட்டு	1109	64
2.	இசை — கருவி	658	59
3.	நடனம்	1258	63
4.	ஓவியம்	1926	64

2020 மார்ச் 12]

3.12.4. பெருந்தலைவர் காமராசர் விருது

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் தமிழ்வழியில் பயிலும் மாணவர்களுக்கு பெருந்தலைவர் காமராசர் விருது வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும், 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்விலும், பிற கல்வி இணைச் செயல்பாடுகளிலும் முதலிடம் பெற்ற 15 மாணவர்களுக்கு தலா ரூ.10,000/— மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதலிடம் பெற்று பிற கல்வி இணைச் செயல்பாடுகளிலும் முதலிடம் பெற்ற 15 மாணவர்களுக்கு தலா ரூ.20,000/— விருதுத் தொகையாக வழங்கிட அரசு ரூ.145.30 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 960 மாணவர்களுக்கு விருதுத் தொகை வழங்கப்படுகிறது.

3.12.5. புதுமைப் பள்ளி விருது

மாணவர் சேர்க்கையினை மேம்படுத்துதல், கற்பித்தலில் புதிய உத்திகளை நடைமுறைப்படுத்துதல், நிர்ணயிக்கப்பட்ட உட்கட்டமைப்புத் தேவைகளை நிறைவு செய்தல், பள்ளி மேலாண்மை வளர்ச்சிக் குழு மற்றும் பொது மக்களுடன் பள்ளி நலனுக்காக இணைந்து செயல்படுதல் ஆகியவற்றில் சிறந்து விளங்கிடும் பள்ளிகளுக்கு 2017-2018 ஆம் ஆண்டு முதல் புதுமைப் பள்ளி விருது வழங்கப்படுகிறது. தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றிலிருந்து தலா ஒரு பள்ளி வீதம், நான்கு பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு 'புதுமைப் பள்ளி' விருது வழங்கப்படுகிறது. தொடக்க/நடுநிலைப் பள்ளிகளுக்கு சான்றிதழ் மற்றும் ஒரு இலட்சம் ரூபாய் மற்றும் உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளுக்கு சான்றிதழ் மற்றும் இரண்டு இலட்சம் ரூபாய் பரிசு வழங்கப்படுகிறது.

3.12.6. கனவு ஆசிரியர் விருது

தகவல் தொலைத்தொடர்பு மற்றும் தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி வகுப்புகளைக் கையாளும் அரசு பள்ளி ஆசிரியர்களை ஊக்கப்படுத்தும்விதமாக கனவு ஆசிரியர் விருது வழங்கப்படுகிறது. பள்ளி மேலாண்மை, மாணவர்கள் சேர்க்கை, கல்வி இணைச் செயல்பாடுகள், கணினியைப் பயன்படுத்தி மாணவர்களுக்குக் கற்பித்தல் போன்றவற்றில் சிறந்து விளங்கக்கூடிய ஆசிரியர்கள்

[2020 மார்ச் 12

தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு ஆசிரியருக்கும் ரூ.10,000/- ஊக்கத் தொகையும், சான்றிதழும் அளிக்கப்படுகிறது.

3.13. புதிய முன்முயற்சிகள்

3.13.1. அரசு பள்ளிகளை மாதிரிப் பள்ளிகளாக மாற்றுதல்

கிராமப்புறப் பகுதிகளிலிருந்து வருகை புரியும் குழந்தைகளுக்கு உயர் தொழில்நுட்ப கற்றல் சூழலையும், மேம்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகளையும் அளிப்பதில் மாநில அரசு மிகவும் கவனமாக இருக்கிறது. இத்தகைய உன்னதமான நோக்கத்திற்காக 2018-2019 ஆம் ஆண்டில் ரூ.16.00 கோடி செலவில், 32 வருவாய் மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒரு மாதிரிப் பள்ளி அமைக்கப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் 88 கல்வி மாவட்டங்களில் தலா ரூ.20.00 இலட்சம் செலவில் மாதிரிப் பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இம்மாதிரிப் பள்ளிகள் மழலையர் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கொண்ட ஒருங்கிணைந்த பள்ளிகளாக செயல்படுகிறது. திறன் வகுப்பறைகள், உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகம், சூரிய விளக்குகள், தொட்டுணர் வருகைப் பதிவு, மின் நூலகம், ஆய்வகங்கள், விளையாட்டுப் பொருட்கள், கழிப்பிட வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர், கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் தேவையான அனைத்து அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

3.13.2. இடைநிலைக் கல்வியை தொழில்திறன் மயமாக்குதல்

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின்கீழ், இடைநிலை வகுப்பு மாணவர்களுக்கு திறன் அடிப்படையிலான தொழிற்கல்வி பாடத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2018-2019 ஆம் ஆண்டில் 67 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் 2019-2020 ஆம் ஆண்டில் மேலும் 53 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டதன்மூலம் கல்வி மாவட்டத்திற்கு ஒரு பள்ளி வீதம், மொத்தம் 120 பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதற்கென 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.1,158.28 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 14,960 மாணவர்கள் பயனடைந்தனர்.

2020 மார்ச் 12]

3.13.3. பள்ளி அளவில் இணையவழி நாட்டமறி தேர்வு-2020

*மாணவர்களது பாடத் திட்டத்தைத் தாண்டி, அவர்களது உள்ளார்ந்த படைப்பாற்றலைக் கண்டறிவதே நாட்டமறி தேர்வு நடத்துவதன் முக்கிய நோக்கம் ஆகும். மேலும், மாணவர்களுடைய ஆர்வம், பொது அறிவு மற்றும் எவ்வகைத் துறையில் அவர்களது ஆர்வம் மேலோங்கி உள்ளது என்பதைக் கண்டறிந்து, அதன்மூலம் மாணவர்களின் ஆர்வத்திற்கேற்ப குறிப்பிட்ட துறைக்கான ஆலோசனைகளை வழங்குவதாகும். 2018-2019 ஆம் கல்வி ஆண்டில் அரசு உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் 9 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு மட்டும் இணையதள வழி அல்லாத நேரடி (*Offline*) தேர்வு நடத்தப்பட்டது. 2019-2020 ஆம் கல்வி ஆண்டில் ரூ.85.20 இலட்சம் செலவில் இணையதள வசதியுடன்கூடிய கணினி வழியாக 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் 8,51,999 மாணவர்களுக்கு நாட்டமறி தேர்வு நடத்தப்பட்டது.*

இம்மதிப்பீட்டினை ஆசிரியர்களுக்கு சிரமமின்றி மேற்கொள்ளவும், மதிப்பீட்டின் முடிவுகளின் விளக்கங்களை அளிப்பதற்கும் மிகுந்த கவனத்துடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3.13.4. பள்ளி மாணவர்களுக்கான பாதுகாப்பு

பள்ளிகளில் மாணவர்களுக்கான பாதுகாப்பு என்பது சமீப காலத்தில் பெரும் சவாலாக உள்ளது.

மாணவர்களுக்குப் பள்ளிச் சூழலை வசதியானதாகவும், மகிழ்ச்சியளிக்கக்கூடியதாகவும் மாற்றியமைக்க ஆசிரியர்கள் முதல்நிலை ஆலோசகர்களாக செயல்படவும், பள்ளிகளில் மாணவர்கள் பாதுகாப்பு சார்ந்த உறுதிமொழியினை அனைத்து அரசுப் பள்ளிச் சுவர்களில் எழுதவும், அவசர காலங்களில் தொடர்பு கொள்ளவேண்டியவர்கள் பெயர் மற்றும் தொடர்பு எண்களைக் காட்சிப்படுத்தவும் பள்ளிகளுக்கு உணர்த்தி, இதுசார்ந்த பயிற்சியளிக்க அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளைச் சார்ந்த 89,140 ஆசிரியர்களுக்கு 2019-2020 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.921.73 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 12

3.13.5. சிறப்பாக செயல்படும் பெற்றோர் ஆசிரியர் கழகங்களை அங்கீகரித்தல்

தொடக்க/நடுநிலை/உயர்நிலை/மேல்நிலைபள்ளிகளைச் சார்ந்த சிறப்பாகச் செயல்படும் பெற்றோர் ஆசிரியர் கழகத்திற்கு ரூ.50,000/— வீதம் ரொக்கப் பரிசுத் தொகை 2019-2020 ஆம் கல்வியாண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக 2019-2020 ஆம் கல்வி ஆண்டில் ரூ.60.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.13.6. இணையதளம் நிதி திரட்டும் தளம் (பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு)

அரசு பள்ளிகளின் வசதிகளை மேம்படுத்துவதில் பொது மக்களின் பங்களிப்பை ஊக்குவிப்பதற்கும், பொது மக்களிடமிருந்து பங்களிப்புகளைப் பெறுவதற்கும் அதிகாரபூர்வமான தளமாக (Authentic Channel) *"சாம்பியன்ஸ் ஆஃப் சேஞ்ச்"* (Champions of change) *என்ற இணையதள நிதி திரட்டும் தளம்* (Online fund raising platform) *அரசால் தொடங்கப்பட்டுள்ளது.* (https://con—tribute.tnschools.gov.in)

எளிய முறையில் பலர் நிதியுதவி அளிக்க, இவ்விணையதள இணைய முகப்பை பயன்படுத்துவதில் உள்ள சில நன்மைகள் பின்வருமாறு:—

- *பலரின் கவனத்தை ஈர்த்தல் மற்றும் வெளிப்படைத்தன்மை காரணமாக அரசு பள்ளிகளின் வளர்ச்சியில் பொது மக்களின் பங்களிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.*

- *நாடு முழுவதும் உள்ள எந்தவொரு தனி நபரோ அல்லது நிறுவனமோ பள்ளிகளின் தேவைகளை நேரடியாக அறிந்து பங்களிப்பதன்மூலம், பள்ளிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய வாய்ப்பை வலைத்தளம் வழங்குகிறது. இதன்மூலம் பங்களிப்பாளர்களின் எண்ணிக்கையும், பெறப்பட்ட பங்களிப்புகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது.*

- *நன்கொடைகளுக்கு வழங்கப்படும் வரி விலக்குகள் அதிகமான தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களை வலை இணைய முகப்பு* (Web portal) *மூலம் பங்களிக்க ஊக்குவிக்கின்றது.*

2020 மார்ச் 12]

➢ *பங்களிப்பாளர்களின் விவரங்கள்மூலம் அரசு பள்ளி முன்னாள் மாணவர்களின் தரவுத்தளத்தை உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் உருவாகின்றன.*

3.14. நிதி ஒதுக்கீடு

2020-2021 ஆம் ஆண்டிற்கு இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்விக்கு ரூ.16,717.33 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. நலத் திட்டங்கள்

4. முன்னுரை

குழந்தைகளின் வளர்ச்சிக்கு மாநில அரசு முக்கியத்துவம் அளித்துள்ள நிலையில், தமிழ்நாடு ஒரு துடிப்பான வளர்ச்சிக் கட்டத்தை அடைந்துள்ளது. குழந்தைகளின் உடல் நலம் மற்றும் கல்வி ஆகியவை பல்வேறு நலத் திட்டங்கள்மூலம் மேம்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்கள் குழந்தைகளுக்கு சிறந்த எதிர்காலத்திற்கான வாய்ப்புகளையும், வசதிகளையும் வழங்குகிறது. மாணவர்களிடையேயான சமூக மற்றும் பொருளாதார வேறுபாடுகளைக் களைவதற்கும், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் சேர்க்கையை உறுதி செய்வதற்கும், மாணவர்களைத் தக்கவைப்பதற்கும், அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பின்வரும் விலையில்லாப் பொருட்களை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு நலத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

4.1. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு சத்துள்ள மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின்மூலம் செயல்படுத்தப்படுகிறது. 2019-2020 ஆம் கல்வி ஆண்டில் 48.19 இலட்சம் மாணவர்கள் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்துள்ளனர். இத்திட்டம் 2020-2021 ஆம் கல்வியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

[2020 மார்ச் 12

4.2. பாடப் புத்தகங்கள்

விலையில்லா பாடப் புத்தகங்கள், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. 2012-2013 ஆம் கல்வியாண்டில் மாணவர்களது புத்தகச் சுமையினை குறைக்கும் நோக்கத்தோடு முப்பருவ முறை அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. பாடப் புத்தகங்கள் பருவத்தின் தொடக்க நாளன்றே மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. 2019-2020 ஆம் கல்வியாண்டில் 72.18 இலட்சம் மாணவர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளனர். 2020-2021 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினைத் தொடர ரூ.195.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.3. நோட்டுப் புத்தகங்கள்

விலையில்லா நோட்டுப் புத்தகங்கள் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் திட்டம் 2012-2013 ஆம் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு பருவத்தின் தொடக்க நாளன்றே இவ்விலையில்லா நோட்டுப் புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. 59.92 இலட்சம் மாணவர்கள் 2019-2020 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினால் பயன் அடைந்துள்ளனர். 2020-2021 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினைத் தொடர ரூ.107.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.4. மடிக்கணினி

விலையில்லா மடிக்கணினி 2011-2012 ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில், மேல்நிலை வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் கல்வி ஆண்டுகளில் 15.31 இலட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர். அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு 2020-2021 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினைத் தொடர ரூ.949.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2020 மார்ச் 12]

4.5. சீருடை

அரசு, விலையில்லா நான்கு இணைச் சீருடைகளை, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெறும் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்கி வருகிறது. அரசு 2019-2020 ஆம் கல்வியாண்டில் புதிய வடிவமைப்புடன்கூடிய சீருடையை அறிமுகப்படுத்தி உள்ளது. 2019-2020 ஆம் கல்வி ஆண்டில் இத்திட்டத்தினால் 38.70 இலட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர். 2020-2021 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினைத் தொடர ரூ.409.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.6. காலணிகள்

2012-2013 ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு விலையில்லாக் காலணி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2019-2020 ஆம் கல்வியாண்டில் 59.92 இலட்சம் மாணவர்கள் பயனடையும்வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் கல்வியாண்டிலிருந்து 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா காலணிகளுக்குப் பதிலாக கால் ஏந்திகள் மற்றும் காலுறைகள் வழங்கிட அரசு முடிவெடுத்துள்ளது. 2020-2021 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினைத் செயல்படுத்த ரூ.90.17 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.7. புத்தகப்பை

2012—2013 ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் புத்தகப்பை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2019—2020 ஆம் கல்வியாண்டில் 71.87 இலட்சம் மாணவர்கள் பயனடையும்வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

4.8. கிரையான்ஸ்

2012-2013 ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 மற்றும் 2 ஆம் வகுப்பில் பயிலும்

அனைத்து மாணவர்களுக்கும் கிரையான்ஸ் வழங்கப்பட்டு வருகிறது. 2019-2020 ஆம் கல்வியாண்டில் 8.93 இலட்சம் மாணவர்கள் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்துள்ளனர்.

4.9. வண்ணப் பென்சில்கள்

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் வண்ணப் பென்சில்கள் வழங்கும் திட்டம் 2012-2013 ஆம் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. 2019-2020 ஆம் கல்வியாண்டில் 14.92 இலட்சம் மாணவர்கள் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்துள்ளனர்.

4.10. கணித உபகரணப் பெட்டி

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்குக் கணித உபகரணப் பெட்டி வழங்கும் திட்டம் 2012-2013 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. 2013-2014 ஆம் கல்வியாண்டு முதல் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2019-2020 ஆம் கல்வியாண்டில் 11.33 இலட்சம் மாணவர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளனர்.

4.11. நில வரைபட புத்தகம்

விலையில்லா நில வரைபட புத்தகங்கள் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 2012-2013 ஆம் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. 2019-2020 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினால் 7.98 இலட்சம் மாணவர்கள் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2020-2021 ஆம் கல்வியாண்டில் புத்தகப் பை, கிரையான்ஸ், வண்ணப் பென்சில்கள், கணித உபகரணப் பெட்டி மற்றும் நில வரைபட புத்தகங்களை வழங்குவதற்கு மொத்தமாக ரூ.95.38 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2020 மார்ச் 12]

4.12. கம்பளிச் சட்டை

மலைப் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெறும் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்குக் கம்பளிச் சட்டை வழங்கும் திட்டம் 2013-2014 ஆம் கல்வியாண்டில் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. 2019-2020 ஆம் கல்வியாண்டில் 1.16 இலட்சம் மாணவர்கள் இத்திட்டத்தினால் பயன் அடைந்துள்ளனர். 2020-2021 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினைத் தொடர ரூ.3.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.13. மழைக் கால ஆடை, உறை காலணி மற்றும் காலுறை

மலைப் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெறும் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா மழைக் கால ஆடை, உறை காலணி மற்றும் காலுறைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் 2016-2017 ஆம் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம், 2019-2020 ஆம் கல்வியாண்டில் 1.16 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

4.14. பேருந்து பயண அட்டை

மாணவர்கள் தங்களது பள்ளிக்கு எளிதில் வந்து செல்வதற்கு வசதியாக 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் கட்டணமில்லா பேருந்து பயண அட்டை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 2019-2020 ஆம் கல்வியாண்டில் சுமார் 24 இலட்சம் மாணவர்கள் பயன் அடைந்துள்ளனர். இத்திட்டம் போக்குவரத்துத் துறையின்மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 2020-2021 ஆம் கல்வி ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

4.15. மிதிவண்டிகள்

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்

[2020 மார்ச் 12

வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை வாயிலாக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இன மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை வாயிலாக பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. பள்ளிக் கல்வித் துறை வாயிலாக இதர இன மாணவர்களுக்கும் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. 2019-2020 ஆம் கல்வி ஆண்டில் 5.29 இலட்சம் மாணவர்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர். இத்திட்டம் 2020-2021 ஆம் கல்வி ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

4.16. வருவாய் ஈட்டும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான நிதி உதவி

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு அவர்களின் வருவாய் ஈட்டும் பெற்றோர் (தாய்/தந்தை) மரணமடைந்தாலோ, விபத்து காரணமாக நிரந்தர முடக்கம் அடைந்தாலோ நிதி உதவி வழங்கப்படுகிறது. இவ்வாறான எதிர்பாராத சூழ்நிலையினால் இப்பெற்றோர்களின் குழந்தைகள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதில் இவ்வரசு உறுதியாக உள்ளது. இந்நிதி உதவித்தொகை 2014-2015 ஆம் கல்வியாண்டில் ரூ.50,000/-லிருந்து ரூ.75,000/- ஆக உயர்த்தப்பட்டது. பாதிக்கப்பட்ட மாணாக்கரின் பெயரில் ரூ.75,000/- அரசு நிதி நிறுவனங்களில் வைப்பு நிதியாக செலுத்தப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் 474 மாணவர்கள் இதன்மூலம் பயனடைந்துள்ளனர். 2020-2021 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினைத் தொடர ரூ.5.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.17. மாணவர் விபத்து நிவாரண நிதியுதவி

பள்ளி மற்றும் பள்ளிசார் செயல்பாடுகளின்போது எதிர்பாராது நிகழும் விபத்துகளினால் பாதிப்புக்கு உள்ளாகும் மாணவர்களுக்காக புதுமையான இத்திட்டம் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களுக்கு

2020 மார்ச் 12]
இத்திட்டத்தின்மூலம் நிவாரண நிதியுதவி வழங்கப்படுகிறது. இறப்பு நேரிடின், ரூ.1,00,000/—; பெரிய காயங்களுக்கு ரூ.50,000/— மற்றும் சிறிய காயங்களுக்கு ரூ.25,000/— மாணாக்கரின் குடும்பத்திற்கு நிவாரண நிதியுதவியாக வழங்கப்படும். இத்திட்டம் பயனாளிகள் விரைவாக நிவாரணம் பெறுவதை உறுதி செய்கிறது.

4.18. இடைநிற்றலைத் தவிர்ப்பதற்கான சிறப்பு ஊக்கத்தொகை

எந்தவொரு மாணாக்கரும் தன்னுடைய குடும்ப பொருளாதாரத் தடையினால் பள்ளியில் இருந்து இடைநிற்கக் கூடாது என்பதற்கு அரசு அயராது முயற்சி எடுக்கிறது. 2011-2012 ஆம் கல்வியாண்டு முதல் இடைநிலைக் கல்வியில் இடைநிற்றலைக் குறைப்பதற்காக சிறப்பு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 10 மற்றும் 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.1,500/-, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.2,000/- வீதம், தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டு, 12 ஆம் வகுப்பு முடித்த பிறகு மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் 2019-2020 ஆம் கல்வி ஆண்டில் 15.46 இலட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர். 2020-2021 ஆம் கல்வியாண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்பட ரூ.313.59 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. மெட்ரிகுலேசன் பள்ளிகள்

5.1. முன்னுரை

மெட்ரிகுலேசன் பள்ளிகள் என்பவை தனியார் சுயநிதிப் பள்ளிகளாகும். ஆரம்ப காலங்களில் மெட்ரிகுலேசன் பள்ளிகள் சென்னை மற்றும் மதுரை பல்கலைக்கழகங்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. பின்னர் 1978 ஆம் ஆண்டு, பள்ளிக் கல்வி இயக்கக கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டன. மேலும், 2001 ஆம் ஆண்டு மெட்ரிகுலேசன் பள்ளிகளைக் கண்காணிக்க மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் தனியாக உருவாக்கப்பட்டது. தற்போது 4,438 மெட்ரிகுலேசன் பள்ளிகள் சுமார் 38 இலட்சம் குழந்தைகளுக்குத் தரமான கல்வி அளித்து வருகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 12

5.2. தொலைநோக்கு

மெட்ரிகுலேசன் பள்ளிகளில் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான கற்கும் சூழலில் தரமான கல்வி அளிக்கப்படுவதை உறுதி செய்வதே மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககத்தின் தொலைநோக்கமாகும்.

5.3. நோக்கம்

- மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கான அங்கீகாரம் புதுப்பித்தலுக்கு இணையவழியாக விண்ணப்பிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வெளிப்படைத் தன்மையை உறுதி செய்தல்.
- அரசால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் உட்கட்டமைப்பு வசதி மற்றும் மாணவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றை மெட்ரிகுலேசன் பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்தல்.
- மெட்ரிகுலேசன் பள்ளிகளில் முழுத் தகுதி பெற்ற ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவதை உறுதி செய்தல்.
- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009-ஐ நடைமுறைப்படுத்துவதில் மாநில முகமையாகச் செயல்படுதல்.

5.4. நிருவாகப் பொறுப்புகள்

5.4.1. அனுமதி/அங்கீகாரம்

புதிய பள்ளிகள் தொடங்க அரசால் நிர்ணயிக்கப்படும் வரையறைகளைப் பூர்த்தி செய்வதை உறுதி செய்த பின்னர் புதிய பள்ளிகள் தொடங்க அனுமதி மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகளை மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த அனுமதி ஆணைகள் வழங்கப்படுகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் 58 புதிய மெட்ரிகுலேசன் பள்ளிகளைத் தொடங்கவும், 91 மெட்ரிகுலேசன் பள்ளிகளை மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 12]

அங்கீகாரம் புதுப்பித்தலுக்கு விண்ணப்பித்த மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலரால் ஆணை வழங்கப்பட்டு வருகிறது.

5.4.2. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009-ஐ நடைமுறைப்படுத்துதல்

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 தமிழகத்தில் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, சட்டப் பிரிவு 12(1)(C)-ன்படி சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில், வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளை நுழைவுநிலை வகுப்பில் அதாவது எல்.கே.ஜி./முதல் வகுப்பில் சேர்க்கை செய்வது சார்ந்து தெளிவான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. 2017-2018 ஆம் ஆண்டு முதல் 25 விழுக்காடு இட ஒதுக்கீட்டின்கீழ் சேர்க்கைக்கு இணையவழியாக விண்ணப்பிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசதியின் மூலம் பள்ளிகளில் சேர்க்கைக்கு பெற்றோர் இணையவழியில் விண்ணப்பிக்கலாம். தகுதியான விண்ணப்பங்களுக்கு சேர்க்கை வழங்க வேண்டிய பொறுப்பு பள்ளிகளைச் சார்ந்ததாகும். வட்டார மற்றும் மாவட்ட அளவில் உள்ள கல்வி அலுவலகங்களில் கட்டணமில்லாமல் இணையவழியில் விண்ணப்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பள்ளிகளில் சேர்க்கைக்கு நிர்ணயிக்கப்பட்ட காலியிடங்களைவிட அதிக அளவில் விண்ணப்பங்கள் பெறப்பட்டிருப்பின் விண்ணப்பதாரர்/பெற்றோர் முன்னிலையில் குலுக்கல் முறையில் குழந்தைகள் தேர்வு செய்யப்படுவர். முன்னுரிமைப் பிரிவினரான ஆதரவற்ற மற்றும் எச்.ஐ.வி.-யால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், மாற்றுப் பாலினத்தவர், துப்புரவுப் பணியாளர்களின் குழந்தைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோரிடமிருந்து பெறப்படும் தகுதியான விண்ணப்பங்கள் முதலில் பரிசீலனை செய்யப்பட்டு குலுக்கல் நடத்தப்படுவதற்கு முன்னர் அவர்களுக்குச் சேர்க்கை வழங்கப்படும். 2019-2020 ஆம் ஆண்டில், 76,927 வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகள் சேர்க்கை செய்யப்பட்டுள்ளனர். 2019-2020 ஆம் ஆண்டில், பிரிவு வாரியாக சேர்க்கை செய்யப்பட்ட

குழந்தைகளின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:

வரிசை எண்	பிரிவு	சேர்க்கை செய்யப்பட்ட குழந்தைகள்
1	நலிவடைந்த பிரிவினர்	60,714
2	வாய்ப்பு மறுக்கப்பட்டவர்	16,002
3	ஆதரவற்றவர்	27
4	எச்.ஐ.வி.—யால் பாதிக்கப்பட்டோர்	4
5	சுகாதாரப் பணியாளர்களின் குழந்தைகள்	40
6	மாற்றுத் திறனாளிகள்	138
7	மாற்றுப் பாலினத்தவர்	2
	மொத்தம்	76,927

2013-2014 ஆம் ஆண்டு முதல் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 சட்டப் பிரிவு 12(1)(C)-ன்கீழ் இதுவரை சேர்க்கை செய்யப்பட்ட 5,60,829 குழந்தைகளுக்கான தொகை ரூ.644.69/- கோடி அரசால் பள்ளிகளுக்கு ஈடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென ரூ.304.14/- கோடி அரசால் ஈடு செய்ய 2020-2021 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.5. தரமான கல்வி

தொடர் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையின்மூலம் பள்ளிகளில் தரமான கல்வி அளிக்க அரசால் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கலைத் திட்டம், பாடத் திட்டம் மற்றும் பாடப் புத்தகங்கள் ஆகியவை இதர தேர்வு வாரியங்களுக்கு இணையாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. அனைத்து மெட்ரிகுலேசன் பள்ளிகளும் மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட புதிய பாடத் திட்டத்தினைப் பின்பற்றுகின்றன.

5.6. தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம், 2018

மாநில பள்ளிக் கல்விப் பொதுப் பாடச் சட்டம், 2010, சட்டமாக்கப்பட்டு அனைத்துவகைத் தனியார் பள்ளிகளும் மாநிலப்

2020 மார்ச் 12]

பொதுக் கல்வி வாரியத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. மேற்படி சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர், மாநில பொதுக் கல்வி வாரியம் மற்றும் இதர வாரியங்களில் இணைப்புப் பெற்ற அனைத்துத் தனியார் பள்ளிகளையும் ஒழுங்குபடுத்தும் பொதுவான சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொதுவான சட்டம் மற்றும் விதிகளை வகுக்க மதுரை காமராசர் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. குழுவின் அறிக்கையின் அடிப்படையில் மற்றும் மேதகு குடியரசுத் தலைவரின் இசைவு பெறப்பட்டு, தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம், 2018, இயற்றப்பட்டு 5-7-2018 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது. தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்தின்கீழ் விதிகள் வகுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

5.6.1. தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம், 2018-ன் முக்கிய அம்சங்கள்

இச்சட்டம் தனியார் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் உயிர் பாதுகாப்பு மற்றும் உடைமை பாதுகாப்பினை உறுதி செய்வதை வலியுறுத்துகிறது. தனியார் பள்ளிகளில் அடிப்படையாக குறைந்தபட்ச தரம் மற்றும் நெறிமுறைகள் மற்றும் மாணவர் சேர்க்கையை முறைப்படுத்துதல், கட்டண வசூலித்தல் மற்றும் தேர்வுகள் நடத்துதல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதன்மூலம் தனியார் பள்ளிகளில் தரமான கல்வி வழங்குவதை உறுதிப்படுத்துதலை முன்மொழிகிறது. கல்வியை வியாபாரமாக்குதலைத் தடுப்பதற்கும் மற்றும் பலமான சமுதாயத்தை அமைப்பதற்காக பலமான மதிப்பீடு முறைக்காக அடிப்படைக் கட்டமைப்பை உருவாக்கும் அங்கீகாரச் சான்றிதழ் வழங்கப்படாத பள்ளி எதிலும் குழந்தை சேர்க்கப்படுவதைத் தடுப்பதுடன் அப்பள்ளிகளுக்கான ஏற்பளிப்பினை திரும்பப் பெறுவதன்மூலம் கல்வி முகவாண்மை பள்ளியை நடத்துவதைத் தடை செய்ய வழிவகை செய்கிறது. மாணவர்களின் நலன்களைப் பாதுகாக்கும்பொருட்டு இச்சட்டம் கல்வியில் குறைவான மதிப்பெண் பெற்றிருக்கிறார் என்பதன் அடிப்படையிலோ அல்லது பிற நியாயமற்ற காரணங்களுக்காக வாரியத் தேர்வினை

[2020 மார்ச் 12

எழுதுவதற்கு மாணவர்களை தடுப்பவர்களுக்கு தண்டனை விதிப்பதற்கு இச்சட்டம் அரசுக்கு அதிகாரம் அளித்துள்ளது.

5.7. தனியார் பள்ளிகள் கட்டண நிர்ணயக் குழு

கல்வியை வணிகமயமாக்குதலைக் கட்டுப்படுத்த தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம், 2009 சட்டமாக்கப்பட்டது. தனியார் பள்ளிகளுக்குக் கட்டண நிர்ணயம் செய்ய ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசரைத் தலைவராகக் கொண்ட தனியார் பள்ளிகள் கட்டண நிர்ணயக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு, பிப்ரவரி, 2020 வரை 8,138 பள்ளிகளுக்குக் கட்டண நிர்ணயம் செய்துள்ளது. மேலும், கட்டண நிர்ணய ஆணை இக்குழுவின் இணையதளமான www.tamilnadufeecommittee.com இல் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

5.8. நிதி ஒதுக்கீடு

2020-2021 ஆம் ஆண்டிற்கு இவ்வியக்ககத்திற்கு ரூ.307.41 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

6.1. முன்னுரை

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், கற்றல் கற்பித்தல் முறைகளில் தரம் வாய்ந்த மாற்றங்களை கொண்டு வருவதில் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து சிறந்த கல்வி வல்லுநர்களைக் கொண்டு, 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை கலைத் திட்டம், பாடத் திட்டம் மற்றும் பாட நூல்களை உருவாக்கி வருகிறது. தகவல் தொழில்நுட்பத்தில் நிலவும் புதிய அணுகுமுறைகளை அறிமுகப்படுத்தி மாணவர்கள் பல்வேறு மென்திறன்களைப் பெறவும் உதவுகிறது. பள்ளிப் படிப்பை முடித்தபின் தகுந்த உயர் கல்வியைத் தெரிவு செய்யவும், தமது திறனுக்குத் தகுந்த வேலைகளைத் தேர்வு செய்யவும் மாணவர்களுக்கு வழிகாட்டுதல் வழங்குகிறது. பள்ளிக் கல்வித் துறையின் பிற இயக்குநரகங்களுடன்

2020 மார்ச் 12]

இணைந்தும் இந்நிறுவனம் பணியாற்றி வருகிறது. தரமான கல்வியை அளிப்பதற்காக அனைத்து நிலைகளிலும் தேவையான பயிற்சிகளை வடிவமைத்து வழங்கி வருகிறது. வகுப்பறைகளில் எழும் கல்வி சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், ஆசிரியர்களை சிந்தனைத்திறன் கொண்ட கல்வியாளர்களாக மாற்றவும் உதவும் நூற்றுக்கணக்கான செயல் ஆராய்ச்சிகள் நடத்த உதவுகிறது. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன வழிகாட்டுதலின் அடிப்படையில் நடத்தப்பெறும் மாவட்டம் சார்ந்த ஆய்வுகள் கொள்கை வடிவமைப்பாளர்களுக்கு அறிவார்ந்த முடிவுகளை மேற்கொள்ள உதவுகின்றன.

6.2. தொலைநோக்கு

மெய்நிகர் வகுப்பறைகள், கருத்துப் பரிமாற்றம் சார்ந்த ஆசிரியர் பயிற்சி, கணினிசார் கற்றல் வளங்கள் கொண்ட வகுப்பறை மேம்பாடு போன்ற தொழில்நுட்ப அடிப்படையில், மாணவர்களிடம் வாழ்க்கைச்சூழலுக்கு ஏற்ப நுண்ணறிவுத்திறனுடன் கற்கும் திறனை மேம்படுத்துவதன்வாயிலாக துடிப்புமிக்க சூழலை பள்ளிகளில் உருவாக்குவதுடன் ஆசிரியர்களுக்கு பணிமுன் மற்றும் பணியிடைப் பயிற்சி வழங்குவதிலும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் முனைப்புடன் செயல்படுகிறது.

6.3. நோக்கம்

➢ *கலைத் திட்டம், பாடத் திட்டம், பாட நூல்கள், கற்றல் துணைப் பொருள்கள், செய்தி மடல்கள், இதழ்கள், கற்றல் கருவிகள், கணினி வாயிலாகக் கற்பிக்கும் பல்லூடகப் பொருள்கள் மற்றும் கல்விசார் நூல்கள் ஆகியவற்றை உருவாக்குதல்*

➢ *ஆசிரியர்களுக்கான பணிமுன் மற்றும் பணியிடைப் பயிற்சிகளை ஒருங்கிணைத்தல்*

➢ *வகுப்பறையில் நிகழ்த்தும் இடைவினைச் செயலாற்றலின் வாயிலாகக் கற்றல் விளைவுகளை ஒருங்கிணைத்தல்.*

➢ *பள்ளிக் கல்வி சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ள உதவுதல், ஊக்குவித்தல் மற்றும் வழிகாட்டல்.*

➢ *புதுமையான கல்வி உத்திகளையும் பயிற்சிகளையும் உருவாக்கிப் பரவலாக்குதல்*

[2020 மார்ச் 12

➢ பள்ளிக்கல்வியில் தரமேம்பாட்டிற்கான அமைப்புகளையும், அணுகுமுறைகளையும் வடிவமைத்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் மதிப்பிடுதல் ஆகியவற்றுடன் அவற்றிற்கான இடையீடுகளைக் குறைதீர் தொடர் செயல்கள்வாயிலாகப் பேணிக்காத்தல்.

➢ மதிப்பீடுகளின் அடிப்படையில், மதிப்பீட்டு முறைகளை மாற்றியமைத்து, மாணவர்களுக்கு ஆக்கபூர்வமான, தரமான பின்னூட்டத்தை வழங்குதல்


➢ வகுப்பறையில் மேற்கொள்ளும் இடைவினைச் செயல்களின் அடிப்படையில் வெளிப்படும் கற்றல் விளைவுகளைப் பின்பற்றும்வகையில் ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்துதல்

➢ தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையை நடைமுறைப்படுத்துவதன்வாயிலாகப் பாடப் பொருள் கருத்துகளை எளிதாகப் புரிந்துகொள்வதற்கும் திறன்களை வளர்த்துக்கொள்வதற்கும் மாணவர்களுக்கு உதவுதல்.

➢ கல்வி மற்றும் பிற தொடர் சேவைகள் வழங்கும் சார்ந்த இயக்குனரகங்கள் மற்றும் துறைகள், பல்கலைக்கழகங்கள், அரசுசாரா நிறுவனங்கள், பிற கல்வி மற்றும் ஆய்வு நிறுவனங்கள்/ முகமைகள் ஆகியவற்றுடன் இணைந்து பணியாற்றுதல்.


6.4. நிருவாக அமைப்பு

6.4.1. நிறுவனக் கட்டமைப்பு



2020 மார்ச் 12]

6.4.2. நிருவாகக் கட்டமைப்பு



6.5. பணிகள் மற்றும் செயல்கள்

➢ *பள்ளித் தர மேம்பாட்டிற்கான நெறிமுறைகள், கல்விக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்குவதில் மாநிலத்தின் முதன்மை கல்வி அமைப்பாகச் செயல்படுதல்.*

[2020 மார்ச் 12

➢ ஒற்றைச் சாளர முறையில் தொடக்கக் கல்விப் பட்டயப் பயிற்சிக்கு மாணவர்களைத் தெரிவு செய்தல்.

➢ ஆசிரியர் கல்விக்கான கலைத் திட்டத்தை வடிவமைத்தல் மற்றும் குறிப்பிட்ட கால இடைவெளியில் சீரமைத்தல்.

➢ ஆசிரியர் பயிற்றுநர்களின் பணித்திறன்களை மேம்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

➢ காலமுறை ஆய்வுகளின்வாயிலாக, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், ஒன்றிய ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களின் செயல்பாடுகளை மதிப்பிடுதல் மற்றும் சீரமைத்தல்.

➢ மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் ஒன்றிய ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், வட்டார வள மையங்கள் மற்றும் குறு வள மையங்கள் ஆகியவற்றின் அடிப்படைப் பணித்திறனை மேம்படுத்த ஆலோசனைகளை வழங்குதல்.

➢ மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் ஒன்றிய ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் எண்ணியல் தளத்தைப் பயன்படுத்தி கற்றல் மற்றும் கற்பித்தல் முறைகளை மாற்றியமைக்கும் பணிகளுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்.

➢ உலகின் பல்வேறு துறைகளில் ஏற்படும் விரைவான மாற்றங்களைக் கருத்தில்கொண்டு கலைத் திட்டம், பாடத் திட்டம் மற்றும் பாட நூல்களை உருவாக்குதல். மேலும், தொழிற்கல்விக்குத் தேவையான கற்றல் பொருட்கள் மற்றும் பாட நூல்களை உருவாக்க அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

➢ குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009-க்கு ஏற்ப, அனைத்துப் பாடப் பகுதிகளின் எதிர்பார்ப்புகளை மாணவர்கள் அடையச் செய்ய, ஆசிரியர் மையக் கற்பித்தலை மாணவர் மையக் கற்றலாக மாற்றும் வகையில் கற்றல் அடைவுகளைக் கடைப்பிடிக்க ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல்.

2020 மார்ச் 12]

➢ ஆசிரியர்களுக்கு உதவும் வகையில், கடினப் பாடப் பகுதிகளை எளிமையாக்க உரிய கணினிசார் கற்றல் பொருள்களை உருவாக்குதல்.

➢ கல்வித் தொலைக்காட்சிக்குத் தேவையான நிகழ்ச்சிகளை திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல்

➢ மாநிலம் முதல் வட்டாரம் வரையிலும் தொடக்கநிலை முதல் மேல்நிலை வரையிலும் அனைத்து நிலைகளுக்கும் அவசியமான பயிற்சித் திட்டங்களைத் திட்டமிடல், வடிவமைத்தல் மற்றும் உருவாக்குதல்

➢ அங்கன்வாடிப் பணியாளர்களின் திறன்களை மேம்படுத்த உரிய பயிற்சிகளை ஒருங்கிணைத்து வழங்குதல்

➢ மாநிலக் கல்வியியல் மேலாண்மை மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வாயிலாக, மாவட்ட அளவிலான அனைத்துக் கல்வி அலுவலர்களுக்கான பயிற்சிகளை ஒருங்கிணைத்தல்

➢ ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்ககத்துடன் இணைந்து, தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், தொடக்க, உயர் தொடக்க நிலைகளுக்குப் பரிந்துரைத்துள்ள மேம்படுத்தப்பட்ட கற்றல் அடைவுகளை உள்ளடக்கிய உத்திகளை, ஆசிரியர்கள் பயன்படுத்தி கற்பிக்க உதவுதல்

➢ தமிழ்நாடு தொலைநோக்கு *2023*-ன் இலக்கினை அடைதல் மற்றும் பணிகளுக்கான வழிகாட்டல் மற்றும் உயர் படிப்புகளைத் தேர்வு செய்தல் ஆகியவற்றின் அடிப்படையில் உயர் மற்றும் மேல்நிலைகளில் கற்றலைச் சீரமைத்தல்

➢ தேசிய மற்றும் மாநில அடைவுத் தேர்வுகளின் முடிவுகளை ஆராய்ந்து மாணவர்களின் கற்றல் அடைவுகளை குறையச் செய்யும் இடைவெளிகளைக் கண்டறிந்து பொருத்தமான குறைதீர் நடவடிக்கைகளை வடிவமைத்தல்

➢ மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்களைக் கொண்டு பள்ளிகளைப் பார்வையிட்டு அதன் வாயிலாக ஆசிரியர்களுக்குப் பணிசார் உதவிகளை வழங்குதல்

➢ ஆசிரியர் கல்வி மற்றும் பள்ளிக் கல்வியில் உரிய மதிப்பீட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்

➢ பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்ககம் ஆகியவற்றிற்கு ஆய்வு மற்றும் கல்விசார் உதவிகளை வழங்குதல்

6.6. ஆராய்ச்சி செயல்பாடுகள்

தமிழ்நாடு பள்ளிக் கல்வி செயல்பாடுகளில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களையும் விதத்தில் ஆராய்ச்சி மற்றும் செயலாராய்ச்சிகள் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் மாவட்ட அளவில் ஆராய்ச்சி செயல்பாடுகளை முறையாகக் கண்காணித்தல் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள ஆராய்ச்சி செயல்பாடு கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி செயல்பாடுகளின் முக்கிய நோக்கங்கள்:

➢ வகுப்பறையில் உருவாகும் கல்விசார்ந்த பிரச்சினைகளை வெளிக்கொணர்தல்

➢ செயலாய்வு மேற்கொள்வதன் வாயிலாக, ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை ஊக்குவித்து, அவர்களை கூர்சிந்தனைத் திறனுள்ளவர்களாகவும், கற்பித்தலில் புதுமை புகுத்துபவர்களாகவும் உருவாக்குதல்

➢ பணியிடைப் பயிற்சிகளை வழங்குதலில், செயலாய்வு முடிவுகளைப் பயன்படுத்திக்கொள்ளுதல்

2020 மார்ச் 12]

➢ தற்போதைய கல்விச் செயல்பாடுகளை மேம்படுத்த, செயலாய்வு முடிவுகளைப் பயன்படுத்துதல் போன்ற பணிகளுக்காக செயலாய்வுகளையும், ஆய்வுத் திட்டங்களையும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மேற்கொள்கின்றன

2019—2020 ஆம் கல்வி ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆய்வுக்களங்களாவன:

➢ உயர்நிலைக் கல்வி பயிலும் மாணவர்களிடையே சமூக ஊடகங்களும், கைபேசிகளும் ஏற்படுத்தும் தாக்கத்தை அறிதல்.

➢ அனைத்துப் பாடங்களுக்கும் உரிய புதிய பாட நூல்களில் இடம்பெற்றுள்ள விரைவு துலங்கல் குறியீடுகள் ஏற்படுத்தும் வரவேற்கத்தக்க விளைவுகளைக் கண்டறிதல்.

➢ உடல் பருமன்மிக்க குழந்தைகளிடையே உடற்பயிற்சிகள் மற்றும் யோகா பயிற்சிகள் ஏற்படுத்தும் விளைவுகள்.

➢ அரசுப் பள்ளி ஆசிரியர்களால் நடத்தப்பெறும் தமிழக ஆசிரியர் இணையதளத்தின் பயன்பாடு.

➢ ஆசிரியர்களின் வரைபட மற்றும் அளவீடு சார்ந்த திறன்களை மேம்படுத்துவதில் பல்லூடகக் கற்பித்தல் முறைகள் ஏற்படுத்தும் விளைவுகள்.

➢ புதிய பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட மேல்நிலைக் கல்விப் பாட நூல்களுடன் போட்டித் தேர்வுகளுக்கான கூறுகளை ஆராய்தல்.

➢ தொடக்க மற்றும் நடுநிலை வகுப்புகளுக்கான ஆசிரியர்களுக்கு கற்றல் அடைவு சார்ந்த பயிற்சிகள் ஏற்படுத்தும் விளைவுகள்

➢ சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளின் பெற்றோர்களிடையே அவர்களது மனநலம் சார்ந்து உள்ளடக்கிய கல்வி மையங்களில் வழங்கப்படும் ஆலோசனைகள் ஏற்படுத்தும் விளைவுகள்.

➢ புலம்பெயர் தொழிலாளர்களின் குழந்தைகளின் கல்விசார்ந்த சிக்கல்களை ஆராய்தல்.

➢ சிறந்த முறையில் பிறருடன் தொடர்புகொள்ளும் திறன்களை வளர்க்க, குழந்தைகளின் பேச்சுத்திறனை மேம்படுத்துதல்.

தமிழ்நாட்டிலுள்ள மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் வாயிலாக 83 ஆய்வுத் திட்டங்களும் 393 செயலாய்வுகளும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. ஆய்வுத் திட்டங்கள், செயலாய்வு முடிவுகள் ஆகியவற்றின்மூலம் பெறப்பட்ட கருத்துகள் யாவும் தொகுக்கப்பட்டு, மாவட்ட மற்றும் மாநில அளவிலான கருத்தரங்குகளில் வெளியிடப்படும். இதன்மூலம் பள்ளிக் கல்வியின் பயனாளர்கள் அனைவரும் பயன்பெறுவர்.

ஆய்வுத் திட்டங்கள், செயலாய்வு முடிவுகள் ஆகியவற்றின் அடிப்படையில், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் 2020-2021 ஆம் ஆண்டிற்கான பயிற்சித் திட்டங்களை வகுக்க முடிவு செய்துள்ளது. பயிற்சிக்கான களங்கள் பின்வருமாறு:

➢ இடைநிலை அளவிலான கற்றல் அடைவுகளை மேம்படுத்துதல்

➢ நடுநிலை மற்றும் இடைநிலை அளவில் மாணவர்களுக்கு மொழித் திறன்கள் மேம்பாடு

➢ நடுநிலை மற்றும் இடைநிலை அளவில் மாணவர்களுக்குப் பகுப்பாய்வு மற்றும் எண்கணிதத் திறன்களை வலுப்படுத்துதல்.

➢ நடுநிலை மற்றும் இடைநிலை அளவில் மாணவர்களுக்கு பள்ளி அளவில் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டு முறைகள்.

➢ சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளின் (CWSN) கற்றல் குறைபாடுகளை நீக்குதல் குறித்து முன்னிலைப்படுத்துதல்

6.7. ஒன்று முதல் பன்னிரண்டாம் வகுப்புகளுக்கான பாடநூல்களை உருவாக்குதல்

இந்தியாவிலேயே தமிழகம், அறிவுசார் மையமாகவும் புதுமை மையமாகவும் உருவாக வேண்டும் என மாண்புமிகு

2020 மார்ச் 12]

முன்னாள் முதலமைச்சரின் தொலைநோக்குப் பார்வை 2023-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் உலகமயமாக்கம், சமூக மாற்றம், வளமான கலைத் திட்டப் பகுதிகள் ஆகியவற்றை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல தமிழகப் பள்ளிக் கல்வித் துறை முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. மேலும், திறன்வாய்ந்த மனித வளங்களை உருவாக்குவதற்காகப் புதிய கலைத் திட்டத்தை வடிவமைத்து, அதற்கேற்ப புதிய பாடநூல்களை உருவாக்குகிறது. மாணவர்களால் 21 ஆம் நூற்றாண்டிற்கான சவால்களை எதிர்கொள்ளும் வகையில் தமிழ்நாடு அரசு 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள பாடத் திட்டங்களை திருத்தி அமைத்துள்ளது.

மாற்றியமைக்கப்பட்ட புதிய கலைத் திட்டத்தின்படி, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், பல்வேறு பாடங்களுக்கும் உரிய பாடத் திட்டத்தை உருவாக்க, வல்லுநர் குழுவை அமைத்தது. அக்குழுக்கள் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான பாடநூல்களை உருவாக்கியுள்ளது. அவை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உருவாக்கப்பட்டு தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது ஆகிய மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டன.

1, 6, 9 மற்றும் 11 ஆகிய வகுப்புகளுக்கான புதிய பாடநூல்கள் 2018-2019 ஆம் ஆண்டிலும், மற்ற வகுப்புகளுக்கு 2019-2020 ஆம் ஆண்டிலும் வெளியிடப்பட்டன.

மேலும் மாணவர்கள், பாடம் தொடர்பான கூடுதல் செய்திகளை அறிந்துகொள்ளும் வகையில், ஆர்வமூட்டும் பெட்டிச் செய்திகள், விரைவுத் துலங்கல் குறியீட்டுடன்கூடிய அசைவூட்டப்பட்ட காணொலி படங்கள், கற்றல் முனைகள், வலுவூட்டச் செயல்பாடுகள் என பல்வேறு வண்ணங்களில் புதிய பாடநூல்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

6.7.1. பள்ளி முன்பருவக் கல்வி பாடநூல் உருவாக்கம்

தமிழ்நாடு அரசு 2,381 அங்கன்வாடி மையங்களில் பள்ளி முன்பருவ வகுப்புகளைத் தொடங்கியுள்ளது. இவ்வகுப்புகளுக்கான

[2020 மார்ச் 12

பாடப் புத்தகங்களை பள்ளி முன்பருவ பாடத்திட்டத்தின்கீழ் வல்லுநர் குழுவின் வழிகாட்டுதலுடன் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தயாரித்துள்ளது.

6.7.2. புதிய பாடநூல்களுக்கான புத்தாக்கப் பயிற்சி

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், 1 முதல் 12 வரை வகுப்புகளுக்கு போதிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் புதிய பாடநூல் சார்ந்த புத்தாக்கப் பயிற்சிகளை வழங்கியது. ஆசிரியர்களுக்கு 2018-2019 மற்றும் 2019-2020-ல் வழங்கப்பட்ட பயிற்சியில் முன்னிலைப்படுத்தப்பட்ட கருத்துகளாவன:

- பாடநூல்களில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கருத்துகளைத் தெரிந்துகொள்ளச் செய்தல்.

- பல்வேறு பாடங்களின் கருத்துகளை புதுமையான கற்பித்தல் அணுகுமுறையில் செயல்படுத்துதல்.

- மாணவர்களின் அடைவுத்திறன் மேம்படுத்துவதன் அவசியத்தைப் புரிந்துகொள்ளுதல்.

- தகவல் தொலைத் தொடர்பு மற்றும் தொழில்நுட்பத்தின் அடிப்படையில், விரைவுத் துலங்கல் குறியீடுகள், தகவல் தொழில்நுட்பச் செயல்பாடுகள் ஆகியவற்றின்மூலம் வகுப்பறைச் செயல்பாடுகளை மேம்படுத்துதல்.

- மேல்நிலைக் கல்வியில் பயிலும் மாணவர்கள், தேசிய அளவிலான போட்டித் தேர்வுகளை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள வகை செய்தல்.

- 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்குத் தொழில்சார் ஆலோசனைகள் வழங்குவதன்மூலம், உயர் கல்விக்கான பல்வேறு பாடப் பிரிவுகளை அறியச்செய்தல்.

2020 மார்ச் 12]

புதிய பாடநூல்களுக்கான புத்தாக்கப் பயிற்சியில் பயன்பெற்றோர் விவரம்

வகுப்பு	மாதம்	பயனாளர்கள்	
		மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள்/ முதன்மைக் கருத்தாளர்கள்	அனைத்து வகை ஆசிரியர்கள்
1	ஜூலை—ஆகஸ்டு 2018	220	1,03,612
6	ஜூலை—ஆகஸ்டு 2018	309	84,312
9	ஜூலை—ஆகஸ்டு 2018	451	50,273
11	ஜூலை—ஆகஸ்டு 2018	806	29,240
2—5	ஜூலை—ஆகஸ்டு 2019	253	1,03,782
7—8	ஜூலை—ஆகஸ்டு 2019	319	85,327
10	ஜூன் 2019	465	53,373
12 (11 பாடங்கள்)	ஜூன்—ஜூலை 2019	896	30,340
12 (11 பாடங்கள்)	அக்டோபர்—நவம்பர் 2019	288	17,449

6.7.3. புதிய பாடநூல்களின் பாடப் பொருள் செறிவூட்டம்

தமிழ்நாடு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமானது, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்களைக் கொண்டு புதிய பாடநூல்களில் உள்ள பாடப் பொருள்களைச் செறிவூட்டம் செய்தது. புதிய பாடநூல்களின் பாடப் பொருள் செறிவூட்டம் தொடர்பாக மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 438 கல்வியாளர்கள், 5,890 பள்ளிகளுக்குச் சென்று பார்வையிட்டு, புதிய பாடத்திட்டங்கள் குறித்த ஆசிரியர்களின் கருத்துகள் பெறப்பட்டன. இதற்காகப் பாடப் பொருள் செறிவூட்டக் குழுவானது தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் ஆகிய ஐந்து பாடங்களுக்கும் கல்வியாளர்களைக் கொண்டு, மாநில மற்றும் மாவட்ட அளவில் உருவாக்கப்பட்டது. இக்குழுவானது புதிய பாடநூல்களின் பாடப் பொருள் செறிவூட்டம் தொடர்பாக ஆசிரியர்களிடமிருந்து

பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் உரிய மாற்றங்களைச் செய்யவும் இக்குழு பரிந்துரைத்துள்ளது.

6.7.4. அந்தமான் நிக்கோபார் தீவுகள் மற்றும் புதுச்சேரி பள்ளி ஆசிரியர்களுக்கான புதிய பாடநூல் பயிற்சி

அந்தமான் நிக்கோபார் தீவுகளின் கல்வித் துறை, புதிய பாடநூல்கள் சார்ந்து முதன்மைக் கருத்தாளர் பயிற்சி அளிக்க தமிழ்நாடு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தினைக் கேட்டுக்கொண்டது. இந்நிறுவனத்தின் இணை இயக்குநர் (பாடத் திட்டம்) தலைமையில் ஆங்கிலம், கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் ஆகிய ஒவ்வொரு பாடங்களுக்கும் மற்றும் மேல்நிலை வகுப்புகளின் பல்வேறு பாடங்களுக்கும் பாடத்திற்கு 2 ஆசிரியர்கள் அடங்கிய குழு, பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை வகுப்பு ஆசிரியர்களுக்கு நவம்பர் மற்றும் டிசம்பர் 2019-ல் போர்ட் பிளேரில் பயிற்சி வழங்கியது. மேல்நிலைக் கல்வி ஆசிரியர்களுக்கான பயிற்சியானது பாடப் பொருள் வலுவூட்டல் மற்றும் தமிழ்நாட்டில் பின்பற்றப்படும் கற்பித்தல் அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டது.

மேலும், தமிழக மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் புதுச்சேரி அரசினிடையே உள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி கல்வி வல்லுநர்கள் மற்றும் புதிய பாடநூல் எழுதிய ஆசிரியர்கள் ஆகியோரைக் கொண்டு புதுச்சேரி பள்ளி ஆசிரியர்களுக்கும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பிற்கான புதிய பாடநூல்கள் சார்ந்த பயிற்சி அளிக்கப்பட்டது.

6.8. திட்டங்களும் செயல்பாடுகளும்

6.8.1. பணியிடைப் பயிற்சி வழங்குவதில் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பங்கு

ஆசிரியர்களின் பணித்திறன் மேம்பாடு என்பது, ஒரு தொடர்ச்சியான நிகழ்வாகும். பாடநூல்களிலுள்ள பாடப் பொருளைச் சிறந்த முறையில் பள்ளி மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களின் கற்பித்தல் திறன்களை செம்மைப்படுத்துவதில்

2020 மார்ச் 12]

பணியிடைப் பயிற்சி மிக முக்கிய பங்கு வகிக்கிறது. பள்ளிப் பார்வை, ஆசிரியர்களுடன் இடைவினை ஆற்றுதல், கற்றல் விளைவுகளில் உள்ள இடைவெளிகளை அடையாளம் கண்டு அவற்றின் அடிப்படையில் பயிற்சிக் கட்டகம் தயாரித்து மாணவர்களுக்குத் தரமான கல்வியை வழங்க, ஆசிரியர்களுக்கு உறுதுணைபுரிதல் ஆகியவற்றின்மூலம் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், மாவட்ட அளவிலான தரமான கல்விக்குத் துணை நிற்கும் நிறுவனமாகத் திகழ்கிறது. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், பயிற்சிகளை வழங்குதல், சிறந்த கற்றல் கற்பித்தல் நிகழ்வுகளைக் காணொலிகளாக மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்மூலம் பதிவு செய்தல் உள்ளிட்ட கல்விசார் புதுமைகளை முன்னிலைப்படுத்துவதன்மூலம் ஆசிரியர்களின் முழுமையான முன்னேற்றம் சார்ந்த முன்னெடுப்புகளைப் படிப்படியாகச் செயல்படுத்தி வருகிறது.

6.8.2. முன்பருவக் கல்விப் பயிற்சி

முன்பருவக் குழந்தைகளின் உடலியக்கச் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் பலவகையான விளையாட்டுப் பொருள்களைப் பள்ளி முன்பருவக் கல்வி உருவாக்கியது. இதன்மூலம் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதற்கான ஆயத்த நிலையை ஏற்படுத்தச் செய்வதே இதன் குறிப்பிடத்தக்க கூறாகும். மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், பள்ளி இடைநிலை ஆசிரியர்களுக்குக் கீழ்க்காணும் நோக்கங்களின் அடிப்படையில் முன்பருவக் கல்வி குறித்த பயிற்சியை வழங்கியுள்ளது:

➢ *முன்பருவக் கல்வி பாடத்திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட நான்கு பாடங்களுக்கான பாடப் பொருள் அறிவை ஆசிரியர்களுக்கு விளக்குதல்.*

➢ *பள்ளி முன்பருவக் கல்வியைக் கையாளும் இடைநிலை ஆசிரியர்களுக்கு உளவியல் அடிப்படையில் ஊக்கமளித்தல்*

➢ *விளையாட்டு செயல்பாடுகள் வழியாக பள்ளி முன்பருவக் கல்வியை வகுப்பறையில் செயல்படுத்தும் வகையில் ஆசிரியர்களை மேம்படுத்துதல்*

ஜூன் 2019 ஆம் ஆண்டில் இடைநிலை ஆசிரியர்களுக்குப் பள்ளி முன்பருவக் கல்வி சார்ந்து மூன்று நாள் முதன்மைக்

கருத்தாளர் பயிற்சி அளிக்கப்பட்டது. ஒவ்வொரு கட்டத்திலும் 92 ஆசிரியர்கள் என இரண்டு கட்டங்களில் 184 ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டது.

6.8.3. ஆங்கிலப் பேச்சுத்திறன் பயிற்சி

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின், ஆங்கிலப் பேச்சுத்திறன் மற்றும் எழுத்துத்திறனை மேம்படுத்தும் பொருட்டு, முதற்கட்டமாக, ஆங்கிலப் பேச்சுத்திறன் வளர்த்தல், கட்டகம் மற்றும் காணொலிகளை தயாரித்துள்ளதுடன், அவற்றைப் பயன்படுத்துவதற்கான பயிற்சி ரூ.1.95 கோடி செலவில் அளிக்கப்பட்டுள்ளது.

தொடக்கப் பள்ளி அளவில் 3 கட்டகங்களில் 30 தலைப்புகளும், 6 முதல் 9 வகுப்புகளுக்கு 4 கட்டகங்களில் 30 தலைப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் இக்கட்டகங்களும் அச்சடிக்கப்பட்டு ஒவ்வொரு பள்ளிக்கும் இருவகை கட்டகங்கள் வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்களால் பாடப் பொருள் சார்ந்து, 150 காணொலிகள் தயாரிக்கப்பட்டு, வல்லுநர் குழுவால் மேலாய்வு செய்யப்பட்டுள்ளன. இக்காணொலிகள் தமிழ்நாடு ஆசிரியர்களுக்கான இணையதளத்தில் ஆசிரியர்களின் பயன்பாட்டிற்காக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. காணொலிகளிலுள்ள மாதிரிப் பாடங்கள், ஆசிரியர்களின் வகுப்பறைச் செயல்பாடுகளை மேம்படுத்த துணைபுரியும். மாநில அளவில் முதன்மை கருத்தாளர்களுக்கான பயிற்சியும் அனைத்து மாவட்டங்களிலும் தொடக்க, நடுநிலை, இடைநிலை வகுப்புகளைக் கையாளும் ஆசிரியர்களுக்கான பயிற்சி மாவட்டங்களிலும் அளிக்கப்பட்டன.

6.9. கணினிசார் முன்னெடுப்புகள்

6.9.1. அரசு பள்ளி ஆசிரியர்களுக்கான இலவச மற்றும் கட்டற்ற மென்பொருள் பயிற்சி

இலவச மற்றும் கட்டற்ற மென்பொருள்களை அனைத்து மக்களும் எளிதாகத் தெரிந்துகொள்ள வெளிப்படைத் தன்மையுடன்

2020 மார்ச் 12]

பயன்படுத்துவதற்கு ஏற்ப, நெகிழ்வுத்தன்மையுடனும் கிடைக்கப் பெறுவதால் தற்போதுள்ள கணினி உலகில் இதற்கு மதிப்பு கூடிவருகிறது. இதில் பெருவாரியான மென்பொருள்கள் லினக்ஸ் எனப்படும் மென்பொருள் கட்டமைப்பில் உருவாக்கப்பட்டதனால், கணினி பயனர்களின் கவனத்தை அதிகளவில் ஈர்த்துள்ளது. எனவே, அனைத்து சாராருக்கும் இந்த மென்பொருள் இலவசமாகவே வழங்கப்படுகிறது. இன்ன பிற உரிமம்பெற்ற மென்பொருள்கள்போல் அல்லாமல், இலவச மற்றும் கட்டற்ற மென்பொருள்கள்போல் எளிதாகக் கணினி பயனர்களிடையே பரிமாறிக் கொள்ளப்படுகிறது. இத்தகைய தனித்தன்மை வாய்ந்த இலவச மென்பொருள் சார்ந்த அறிவை ஆசிரியர்களுக்குக் கற்பிக்க, இவ்வரசு முனைப்போடு செயல்படுகிறது. இதை நடைமுறைப்படுத்தும் வகையில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் இதற்கான பயிற்சியை ஆசிரியர்களுக்கு வழங்கி வருகிறது. இதன்மூலம் காணொலி உருவாக்கம், எடிட்டிங், குரல் சேர்த்தல் போன்ற அனைத்துவிதமான கற்றல் வளங்களை ஆசிரியர்கள் தாமாகவே உருவாக்குவதற்குத் தேவையான திறன்களைக் கற்றுக்கொள்ள இப்பயிற்சி வழிவகை செய்தது. இதன்மூலம் 2,880 அரசுப் பள்ளி ஆசிரியர்கள் பயனடைந்தனர்.

6.9.2. கல்வித் தொலைக்காட்சி

பள்ளிக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக, தமிழக அரசு பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. புதிய கருத்துகளை தொழில்நுட்ப அடிப்படையில் கற்கவும் மற்றும் தொழில்நுட்ப அடிப்படையில் அணுகவும் இன்றைய தலைமுறை மாணவர்களைக் கவரும் ஊடகங்களுள் தொலைக்காட்சியும் ஒன்றாகும். கற்றல் நெடுங்காலமாகவும், தொடர்ச்சியாகவும் இருக்கவும், ஊடகக் கல்வி மீதான பயன்பாட்டு ஆர்வத்தைக் குழந்தைகளிடையே அதிகரிக்கவும் பள்ளிக் கல்வித் துறை ஏற்பாடு செய்து வருகின்றது. குழந்தைகளிடையே தரமான கற்றலை உறுதி செய்யும் இலக்குடன், கல்வித் தொலைக்காட்சி சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கத்தில் திறந்து வைக்கப்பட்டது.

கல்வி ஒளிபரப்பு சேவை ஆசிரியர் தினமான செப்டம்பர் 5, 2019 முதல் தொடங்கப்பட்டது. கல்வித் திட்டங்களை மேம்பாடு

செய்வதற்காக 20 தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் 20 ஆசிரியர்கள் தொடர்ச்சியாக கல்விப் பாடப் பொருள்களை ஒளிபரப்பு செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தக் கல்வித் திட்டங்கள் வலையொலி (YouTube), 'கல்வித் தொலைக்காட்சி' மற்றும் கல்வி சேனலில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

நம் கல்வித் தொலைக்காட்சியில் ஒவ்வொரு நாளும் 32 தலைப்புகளின்கீழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. அவை பின்வருமாறு:

➢ 'எதிர்கொள் வெற்றிகொள்' மற்றும் 'சிறகை விரி' என்னும் தலைப்புகளில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் போட்டித் தேர்வுகளான NEET, JEE, NMMS போன்றவற்றிற்கு மாணவர்களை ஆயத்தப்படுத்துகின்றன.

➢ 'பாடுவோம் படிப்போம்' என்னும் நிகழ்ச்சி தொடக்கநிலை வகுப்புக் குழந்தைகளின் தனித்திறன்களையும், நன்னெறிகளையும் வளர்ப்பதற்காகவே சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

➢ குழந்தைகள் பங்குகொள்ளும் 'பேசும் ஓவியம்' என்னும் நிகழ்ச்சி அவர்களின் கற்பனைத் திறனை அழகிய கதைகளின் வழியே வெளிப்படுத்துகிறது.

➢ 'கவிதைப் பேழை', 'யாமறிந்த மொழிகளிலே' ஆகிய நிகழ்ச்சிகள் வாயிலாகத் தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடங்களை மாணவர்களிடையே எளிமையாகக் கொண்டு சென்று, அவர்களின் மொழித்திறனை முழுமையடையச் செய்கிறது.

➢ கணிதம் மற்றும் அறிவியல் திறன்களை வளர்க்கும் வகையில் ஆய்வுக்கூடம், முப்பரிமாணம், கணித உபகரணப் பெட்டி ஆகிய நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன.

➢ 'உலகம் யாவையும்' என்னும் நிகழ்ச்சியின்மூலம் குழந்தைகள் உலகம் பற்றிய விரிவான பார்வையையும் உலகைச் சுற்றிவந்த அனுபவத்தையும் பெறுகின்றனர். இதன் வாயிலாக, வரலாறு மற்றும் புவியியல் சார்ந்த பாடக் கருத்துகளைப் புரிந்துகொள்கின்றனர்.

2020 மார்ச் 12]

➢ 'கலைத் தொழில் பழகு' என்னும் நிகழ்ச்சி மேல்நிலை வகுப்பில் பயிலும் (கலை மற்றும் அறிவியல் பிரிவு) மாணவர்களுக்காக ஒளிபரப்பப்படுகிறது. இந்நிகழ்ச்சி இள வயது குழந்தைகளின் சமூகத் திறனையும் கற்றல் திறனையும் வளர்க்கிறது.

➢ 'கல்வி உலா', 'பாடு, ஆடு, பண்பாடு' 'பூங்குயில் கானம்' ஆகிய நிகழ்ச்சிகள் குழந்தைகளின் உண்மையான சூழலை அப்படியே படம்பிடித்துக் காட்டுகின்றன.

➢ 'கல்லூரி வாயில்' மற்றும் 'வேலைவாய்ப்புச் செய்திகள்' ஆகிய இரு நிகழ்ச்சிகள் பல்வேறு வேலைகளுக்கான வாய்ப்புகள் பற்றியும் உயர் கல்வி வழங்கும் நிறுவனங்கள் பற்றியும் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் அறிந்துகொள்ள வழிகாட்டுகின்றன. இதன்மூலம் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் தங்களின் எதிர்காலத்தை நல்ல முறையில் அமைத்துக்கொள்ள உதவுகின்றன.

➢ மாணவர்களின் ஆங்கிலப் பேச்சுத் திறனை வளர்க்கும் வகையில் 'ஆங்கிலம் பழகுவோம்' என்னும் நிகழ்ச்சி ஒளிபரப்பப்படுகிறது.

6.9.3. தீக்சா (DIKSHA)

அறிவு பகிர்வுக்கான டிஜிட்டல் உட்கட்டமைப்பு (Digital Infrastructure for Knowledge Sharing — DIKSHA) என்பது, மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையின் ஒரு முன்முயற்சியாகும். இது தேசிய ஆசிரியர் தளத்தை அமைப்பதற்காக தேசிய ஆசிரியர் கல்வி கவுன்சில்மூலம் உருவாக்கப்பட்ட ஒரு கட்டமைப்பாகும். ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை உருவாக்கவும், உள்ளடக்கம், சுயவிவரம், வகுப்பு வளங்கள், மதிப்பீட்டு வளங்கள், செய்தி மற்றும் அறிவிப்புகளை உருவாக்கவும் ஆசிரியர்களுக்குத் தீக்சா உதவும். இந்தியாவில் 2019 ஆம் ஆண்டில் தீக்சா தளத்தை அதிக அளவு பயன்படுத்தியதற்காக "தீக்சா வெற்றியாளர் விருது" தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. விரைவு துலங்கல் குறியீடுகள்மூலம் தீக்சா தளத்தை ஒருங்கிணைத்து, அனைத்துப் பாடநூல்களும் புதிய பாடத்திட்டத்தின் வழிகாட்டுதலின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன. இதுவரை 13,207 டிஜிட்டல் உள்ளடக்கங்கள்

நாட்டில் உள்ள அனைவருக்கும் பகிர்ந்தளிக்கும் பொருட்டு தீக்சா தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு ஆற்றல் மிக்க பாடநூல்களாக (Energized Text Books—ETB) மாற்றப்படுகின்றன. தமிழ்நாடு நிகழ்த்திய இப்புதுமையை மத்திய அரசும், பிற மாநிலங்களும் வரவேற்றுப் பாராட்டியுள்ளன. ஆற்றல்மிக்க உரை புத்தகங்களுடன், டிஜிட்டல் உள்ளடக்கம்மூலம் அறிவைப் பகிர்வதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.

6.9.4 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்பக் கணினி ஆய்வகம்

மாணவர்களுக்குத் தேவையான தொழில்நுட்பம் சார்ந்த கற்றல் கற்பித்தலைக் கொண்டுசெல்லும் வகையில் தமிழ்நாட்டிலுள்ள 6,029 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் Hi—Tech lab என்னும் உயர் தொழில்நுட்ப கணினி சார்ந்த கற்றல் கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், அரசுப் பள்ளி ஆசிரியர்கள் உயர் தொழில்நுட்பக் கணினி ஆய்வகத்தைக் கையாளும் முறை குறித்து, இரண்டு நாள் பயிற்சியை 192 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு ரூ.13.50 இலட்சம் செலவில் வழங்கியது.

6.10. பிற முக்கிய செயல்பாடுகள்

6.10.1. பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வுச் செயல்பாடுகள்

தமிழகத்தில் உள்ள அனைத்து குழந்தைகளின் பாதுகாப்பான வாழ்விற்கு பல்வேறு விழிப்புணர்வுச் செயல்பாடுகளை பாடத் திட்ட மற்றும் பயிற்சித் திட்டத்தின் வாயிலாக சிறப்பாகச் செயல்படுத்தப்படுகிறது.

அரசு, மாணவர்களுக்கு பல்வேறு வகையான பேரிடர் மேலாண்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தியும் மற்றும் தற்காப்பு முறைகள் குறித்து போட்டிகள் நடத்தியும் கீழ்க்கண்ட நோக்கங்களைக் கொண்டு செயல்படுத்தி வருகிறது:

- பேரிடர் மேலாண்மை சார்ந்த கருத்துகளைப் பாடநூல்களில் இணைத்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

2020 மார்ச் 12]

➢ இயற்கைப் பேரழிவுகளைத் தடுப்பதற்கும் அவற்றால் ஏற்படும் பாதிப்புகளையும் தவிர்த்தல்.

➢ போட்டிகள் நடத்துவதன்மூலம், இயற்கைப் பேரழிவுகளின்போது தற்காத்துக்கொள்ளும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

6.10.2. தேசிய மக்கள்தொகைக் கல்வித் திட்டம்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், தேசிய மக்கள்தொகைக் கல்விக்கான திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது. வளரிளம் பருவத்தினரின் நடத்தைகளில் ஏற்படும் பிரச்சினைகள், பாலினச் சமத்துவம், ஆண்—பெண் ஆகியோருக்கிடையேயான ஆரோக்கியமான உறவுமுறை, வாழ்வியல் திறன் கல்வி மேம்பாடு, போதைப் பழக்கத்திலிருந்து பாதுகாப்பு ஆகிய கருத்துகள் குறித்து ஆசிரியப் பயிற்றுநர்களுக்கு அறிவுறுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதுகுறித்து அரசுப் பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, சுவரொட்டி தயாரித்தல், பங்கேற்று நடித்தல் முதலிய போட்டிகளை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நடைமுறைப்படுத்துவதற்காக, தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், ரூ.15.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தது.

6.10.3. கற்றலில் குறைபாடுடைய குழந்தைகளுக்கான குறைதீர் கல்விப் பயிற்சி (Specific Learning Disabilities - SLD)

கற்றலில் சிறப்புக் குறைபாடுடைய குழந்தைகளை அடையாளம் காண்பதற்கான பயிற்சியைத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்குவதையும் இக்குழந்தைகளின் கற்றல் பிரச்சினைகளான வகுப்பறைச் செயல்பாடுகளை முடிக்க சிரமப்படுதல், பிழையாக எழுதுதல், தேர்வின்போது விடைகளை நினைவுகூர்வதில் ஏற்படும் சிக்கல்கள், கணித அடிப்படைச் செயல்பாடுகளைச் செய்வதிலும் படித்துப் புரிந்துகொள்வதிலும் ஏற்படும் பிரச்சினைகள் ஆகியவற்றிற்குத் தீர்வு காணும் வகையில் பொருத்தமான குறைதீர் நடவடிக்கைகள் அளிப்பதையும் இத்திட்டம் முன்னிலைப்படுத்துகிறது. இதன்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களிலிருந்து ஓர் ஒன்றியம் வீதம், சோதனை

[2020 மார்ச் 12

முயற்சியாக இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் 70 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக ரூ.19.15 இலட்சம் செலவிடப்பட்டது.

6.11. தேசிய அளவில் பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களின் முழு மேம்பாட்டிற்கான முன்னெடுப்புப் (NISHTHA) பயிற்சித் திட்டம்

நாடு முழுவதிலும், ஆசிரியர்களுக்கான பயிற்சித் திட்டத்தினை, புதுதில்லியில் உள்ள மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் மறுசீரமைப்பு செய்துள்ளது. இத்திட்டத்திற்கென தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், தேசிய அளவிலான ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கட்டகத் தொகுப்பு மற்றும் பள்ளி தலைமைப் பண்பிற்கான பயிற்சிக் கட்டகத் தொகுப்பு ஆகிய இரு ஒருங்கிணைந்த பயிற்சிக் கட்டகங்களை ஆங்கிலத்தில் தயாரித்துள்ளது. இப்பயிற்சிக் கட்டகம் பின்வரும் கூறுகளை உள்ளடக்கியது:

வ. எண்	தலைப்புகள்
1	கலைத் திட்டம், கற்போர் மையக் கற்பித்தல் முறை, கற்றல் விளைவுகள் மற்றும் உள்ளடங்கிய கல்வி
2	தனி மனித-சமூகத்திற்குரிய பண்புகளை வளர்த்தலும் பாதுகாப்பான, ஆரோக்கியமான பள்ளிச் சூழலை உருவாக்குதலும்
3	கலையோடு இணைந்த கற்றல்
4	பள்ளி சார்ந்த மதிப்பீடு
5	பள்ளிகளில் மாணவர்களின் சுகாதாரமும், நல வாழ்வும்
6	கற்றல் கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டில் தகவல் தொடர்புத் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு
7	பள்ளிக் கல்வியில் புது முயற்சிகள்
8	சூழ்நிலையியல் கற்பிக்கும் முறை
9	கணிதம் கற்பித்தல் முறை
10	மொழி கற்பித்தல் (தமிழ், ஆங்கிலம்)
11	அறிவியல் கற்பிக்கும் முறைகள்
12	சமூக அறிவியல் கற்பித்தல் முறை

2020 மார்ச் 12]

ஆசிரியர்களுக்குப் பாடக்கருத்துகளின் கற்றலை மேம்படுத்துவதற்குப் பொருத்தமான கற்பித்தல் முறைகளை வடிவமைக்கும் திறன், தகுந்த மதிப்பீட்டு முறைகளைக் கையாளுதல், குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் நல வாழ்வை மேம்படுத்துதல் மற்றும் வகுப்பறைச் செயல்பாடுகளில் கல்வி, தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்தல் ஆகிய திறன்களை மேம்படுத்துவதற்கான கருத்துகள் இப்பயிற்சிக் கட்டகத்தில் அடங்கியுள்ளன.

பள்ளித் தலைமைப் பண்பிற்கான பயிற்சிக் கட்டகத் தொகுப்பில், கீழ்க்காணும் தலைப்புகள் அடங்கியுள்ளன:

வ. எண்	*தலைப்புகள்*
1	*பள்ளித் தலைமைப் பண்பு மேம்பாட்டிற்கான கட்டக அறிமுகம்*
2	*பள்ளித் தலைமைப் பண்பிற்கான கருத்துகளும், அவற்றின் பயன்பாடுகளும்*
3	*பள்ளி முன்பருவக் கல்வி*
4	*முன்பருவத் தொழிற்கல்வித் திட்டம் மற்றும் பள்ளிகளில் தொழிற்கல்வி*
5	*கற்றல்—கற்பித்தல் செயலில் பாலினப் பன்முகத் தன்மை ஏற்படுத்துதல்*

தலைமைப் பண்புகளை மேம்படுத்துவதற்கான பயிற்சிக் கட்டகத்தின்மூலம், பள்ளித் தலைமையாசிரியர்களுக்குத் தலைமைப் பண்புகள், பள்ளிகளில் பாலினச் சமத்துவம், தொழிற்கல்வி ஆகியவற்றின் முக்கியத்துவம் உணர்த்தப்பட்டன.

தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள் துணையுடன் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியும், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமும் இணைந்து மாநில அளவிலான முதன்மைக் கருத்தாளர் மற்றும் மாவட்ட கருத்தாளர்களுக்கான பயிற்சிகளை வழங்கின.

மாநில அளவிலான வளக் குழு பயிற்சியின் நான்கு கட்ட பயிற்சி முடிவடைந்துள்ளது. மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள், உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி

ஆசிரியர்கள் மற்றும் வட்டார வள மைய ஆசிரிய பயிற்றுநர்கள் அடங்கிய 1,188 மாநில வளக் குழு உறுப்பினர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். ஒன்றிய அளவிலான பயிற்சியும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுகிறது.

6.12. சிறப்பு முன்னெடுப்புகள்

6.12.1. பள்ளி செல்லும் குழந்தைகளின் உடல் நலம் மற்றும் ஆரோக்கியத்திற்கான ஒருங்கிணைந்த திட்டம்

புதிய முன்னெடுப்பு முயற்சியாக, மாணவர்களுக்கான உடல் நலம் மற்றும் ஆரோக்கியத்திற்கான ஒருங்கிணைந்த திட்டம் 11-2-2020 அன்று தொடங்கப்பட்டது. இத்திட்டமானது பள்ளி செல்லும் குழந்தைகளின் உடல் நலம், பாலினம், தன்பாதுகாப்பு முறைகள், சத்துணவு, வாழ்வியல் திறன்கள், போதைப் பழக்கத்திலிருந்து பாதுகாப்பு, இணையதளம் மற்றும் சமூக ஊடகங்களைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துதல், அன்றாட வாழ்வியல் சூழலில் சரியான முடிவெடுக்கும் திறனை மேம்படுத்துதல் முதலியவற்றை முன்னிலைப்படுத்துகிறது. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், யுனெஸ்கோ புதுடெல்லியுடன் தொடர்ச்சியாகப் பல கூட்டங்களை நடத்தி, அதிகாரிகளுக்கும், முதன்மைக் கருத்தாளர்களுக்கும் புத்தாக்கப் பயிற்சி வழங்குவதற்காக பயிற்சிக் கால அட்டவணையை உருவாக்கியது. மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் பயிற்சியின்போது பயன்படுத்திட உபகரணப் பெட்டிகள் தயாரித்துள்ளது.

6.12.2. மதிப்பீடு சார்ந்து ஆசிரியர்களின் திறன் மேம்பாடு

அமெரிக்க ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் புதுதில்லி யுனிசெப் ஆகியவற்றுடன் இணைந்து மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்/மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள் மற்றும் அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மதிப்பீட்டுடன் தொடர்புடைய பல்வேறு கூறுகளைப் பற்றித் திறன் மேம்பாட்டினை ஏற்படுத்த மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் இரண்டாண்டு செயல் திட்டத்தினை மேற்கொண்டுள்ளது. இத்திட்டமானது மாநில முழுவதிலும் உள்ள பள்ளிகளில் பயிலும் 8 மற்றும் 9 ஆம்

2020 மார்ச் 12]

*வகுப்பு மாணவர்களுக்கான மதிப்பீட்டு உட்கூறுகள் மற்றும் கற்றல் விளைவுகளின் அடிப்படையில் கொள்குறி வினா வகை (*Multiple choice question*) கொண்ட மதிப்பீட்டுக் கருவிகளை உருவாக்குதல் போன்ற பலவகை செயல்பாடுகளை உள்ளடக்கியது. அமெரிக்க ஆராய்ச்சி நிறுவனத்தைச் சார்ந்த வல்லுநர்கள், தேர்வு செய்யப்பட்ட கல்வியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு நேரடியாகப் பயிற்சி அளித்து, இந்தச் செயல்பாடு தொடர்பான பல்வேறு பணிகளை மேற்கொள்கின்றனர்.*

6.13. பள்ளிக் கல்வியின் தரத்தினை மேம்படுத்த ஃபின்லாந்து பயோ அகாடமியுடன் இணைந்து பணியாற்றுதல்

பள்ளிக் கல்வியின் தரத்தினை மேம்படுத்த அரசு முனைப்புடன் செயலாற்றுகிறது. உலகம் முழுவதிலும் உள்ள சிறந்த செயல்பாடுகள் கண்டறியப்பட்டு, அவை பள்ளி செல்லும் குழந்தைகளின் நலனுக்காக நமது மாநிலத்திற்குக் கொண்டுவந்து சேர்க்கப்படுகின்றன. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் 2019-ல் ஃபின்லாந்து சென்று, அங்கு மேற்கொள்ளப்படும் கல்விச் செயல்பாடுகளை உற்றுநோக்குவதற்காகப் பள்ளிகளைப் பார்வையிட்டு, தொழிற்கல்வி நடைமுறைப்படுத்தப்படும் முறை மற்றும் பள்ளிகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் இடையேயுள்ள தொடர்பு ஆகியவற்றைப் பற்றி அறிந்து வந்துள்ளனர். இதனைத் தொடர்ந்து ஃபின்லாந்திலுள்ள பயோ அகாடமி என்ற நிறுவனத்தின் வல்லுநர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தனர். ஃபின்லாந்து நாட்டின் கல்வித் தரத்தினை மேம்படுத்த பயோ அகாடமி மேற்கொண்டுவரும் செயல்பாடுகள் பற்றி பள்ளிக் கல்வித் துறை அலுவலர்களுக்கு எடுத்துக்கூறி இங்கு நடைமுறைப்படுத்தப்படும் சிறந்த கல்வி முறைகள் பற்றி அறிந்துகொள்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட அரசு மற்றும் தனியார் பள்ளிகளைப் பார்வையிட்டு, அப்பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் கலந்துரையாடினர்.

6.14. நிதி ஒதுக்கீடு

2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.119.47 கோடி அரசால் இவ்வியக்ககத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 12

7. அரசுத் தேர்வுகள்

7.1. முன்னுரை

1975 ஆம் ஆண்டு, அரசுத் தேர்வுகள் இயக்ககம் தோற்றுவிக்கப்பட்டது. மாநிலப் பாடத் திட்டத்தின்கீழ் பொதுத் தேர்வுகளை திறம்பட நடத்திடவும், மாணவர்கள் உயர்க் கல்வியைத் தொடர வேலைவாய்ப்பினைப் பெற்றிட உரிய சான்றிதழ்களை வழங்கிடவும், இவ்வியக்ககம் பொறுப்பேற்றுள்ளது. மேலும், கல்வி ஊக்கத்தொகை பெறுவதற்கான தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித் தொகைத் திட்டம், தமிழ்நாடு ஊரக மாணவர் திறனாய்வுத் தேர்வு போன்ற பல்வேறு வகையான தேர்வுகள் இவ்வியக்ககத்தால் நடத்தப்படுகின்றன. அரசுத் தேர்வுகள் இயக்ககம், மின்னணு முக்கியத்துவத்தினை உணர்ந்து தேர்வுப் பணிகளை மேம்படுத்திடவும், தேர்வு முடிவுகளை குறித்த நேரத்தில் வெளியிடவும் ஒருங்கிணைந்த கணினிமயமாக்கல் திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகிறது.

7.2. தொலைநோக்கு

கற்றல் அடைவுகளை மதிப்பீடு செய்வதற்கான மேம்படுத்தப்பட்ட மதிப்பீடு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தேவையான தேர்வுகளை திறம்படவும், வெளிப்படைத் தன்மையுடனும் நடத்திடுதல்.

7.3. நோக்கம்

➢ அனைத்து வகையான தேர்வுகளையும் நேர்மையான முறையிலும், பாதுகாக்கப்பட்ட சூழலிலும் செம்மையாக நடத்துதல்.

➢ மாணவர்களின் கூர்ந்து சிந்திக்கும் திறனை வெளிக்கொணரும் வகையில் வினாத்தாட்களை வடிவமைத்தல்.

➢ எண்மயமாக்கல் மூலமாக மதிப்பீட்டு முறையினை மேம்படுத்துதல்.

➢ குறித்த நேரத்தில் தேர்வு முடிவுகளை வெளியிடுதல் மற்றும் தேர்வர்களுக்கான தக்க சான்றிதழ்களை வழங்கிடுதல்.

2020 மார்ச் 12]

7.4. செயல்பாடுகள்

அரசுத் தேர்வுகள் இயக்ககம், 10, 11, 12 மற்றும் ஆசிரியர் கல்வி பட்டயத் தேர்வு உட்பட 35 வகையான தேர்வுகளையும் நடத்தி வருகிறது. மேலும், அத்தேர்வர்களுக்கு வினாத்தாட்கள் தயாரித்து, நேர்மையான முறையில் வெளிப்படைத்தன்மையுடன் தேர்வுகளை நடத்தி, தேர்வு முடிவுகளை வெளியிட்டு, மதிப்பெண் சான்றிதழ்களை வழங்குகின்றது. 2019-2020 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள பொதுத் தேர்வில் சுமார் 27 இலட்சம் மாணவர்கள் (இடைநிலை, மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு) தேர்வெழுதுகின்றனர்.

7.5. நிருவாக அமைப்பு

தேர்வுகளை எளிதாக நடத்திட அரசுத் தேர்வுகள் இயக்குநரகம் மறுசீரமைக்கப்பட்டு, 32 மாவட்டங்களில் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம் உருவாக்கப்பட்டுள்ளது. அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு உதவியாக 2 இணை இயக்குநர்களும், 9 துணை இயக்குநர்களும், 34 உதவி இயக்குநர்களும் செயல்படுகின்றனர். அனைத்து மாவட்டங்களில் உள்ள அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் அலுவலகம் மூலமாக அந்தந்த மாவட்ட தேர்வு மையங்களுக்குத் தேவையான எழுதுபொருட்கள் மற்றும் பிற படிவங்கள், தேர்விற்கான முன்பணம் தேர்வு மையங்களுக்கு அளித்தல், தேர்வு முடிவு வெளியிட்ட பிறகு மதிப்பெண் சான்றிதழ்களை தேர்வர்களுக்கு வழங்குதல் ஆகிய முக்கியப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

7.6. இணையதள சேவைகள்

அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் www.dge.tn.gov.in *என்கிற அதிகாரப்பூர்வ இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்விணையதளம் வழியாக அரசுத் தேர்வுகள் இயக்ககம் கீழ்க்காணும் முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களை மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் மற்றும் நிறுவனங்களுக்கும் வழங்குகின்றது:*

- *தேர்வு அறிவிக்கைகள்*
- *தேர்வுகால அட்டவணைகள்*

[2020 மார்ச் 12

- விண்ணப்பப் படிவங்கள்
- தேர்வு கட்டண விவரங்கள்
- தேர்வர்களுக்கான அறிவுரைகள்
- முந்தைய ஆண்டு தேர்வு வினாத்தாட்கள்
- இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள்
- சான்றிட்ட மதிப்பெண் நகல் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள்
- புலப்பெயர்ச்சி சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள்
- பள்ளி மாணவர்கள் மற்றும் தனித் தேர்வர்களுக்கான பெயர் பட்டியல் தயாரித்தல்
- தேர்வுக்கூட நுழைவுச் சீட்டு பதிவிறக்கம் செய்தல்
- தேர்வுக் கட்டணங்கள் இணையதளம்மூலம் செலுத்துதல்

7.7. அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள்

தேர்வர்கள் பயன்பெறும் வகையில் பொதுத் தேர்வுகளுக்கு எளிய முறையில் விண்ணப்பிக்க 237 அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள் தெரிந்தெடுக்கப்பட்ட பள்ளி வளாகங்களில் உருவாக்கப்பட்டுள்ளன.

7.8. தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்தல்

தமிழ் வழியில் பயிலும் பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைத் தேர்வெழுதும் பள்ளி மாணவர்களுக்கு பொதுத் தேர்வெழுதுவதற்கான தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக 2019-2020 ஆம் கல்வியாண்டில் இடைநிலைத் தேர்விற்கு ஆயத்தமாகும்

2020 மார்ச் 12]

4,96,052 மாணவர்களும், மேல்நிலை முதலாமாண்டுத் தேர்விற்கு ஆயத்தமாகும் 4,38,988 மாணவர்களும், மேல்நிலை இரண்டாமாண்டுத் தேர்விற்கு ஆயத்தமாகும் 4,54,367 மாணவர்களும் பயன்பெறுவர்.

7.9. சிறப்பு கவனம் தேவைப்படும் தேர்வர்கள் தேர்வு எழுதுவதற்கு வழங்கப்படும் சலுகைகள்

கற்றலில் குறைபாடுடைய மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் வகையில் அவர்களது குறைபாடுகளுக்கேற்ப தகுதிபெற்ற மருத்துவர்களின் சான்றிதழ் அடிப்படையில் ஏதேனும் ஒரு மொழிப்பாட விலக்கு, தேர்வெழுத கூடுதல் ஒரு மணி நேரம், கணிப்பான் உபயோகப்படுத்த அனுமதி, சொல்வதை எழுதுபவர் நியமனம் ஆகிய சலுகைகள் தேவையின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன. மார்ச் 2020 ஆம் ஆண்டில் மேல்நிலை முதலாமாண்டுத் தேர்விற்கு 3,175 மாற்றுத் திறனாளித் தேர்வர்களும், மேல்நிலை இரண்டாமாண்டுத் தேர்விற்கு 3,330 மாற்றுத் திறனாளித் தேர்வர்களும் மற்றும் இடைநிலைத் தேர்விற்கு 6,184 மாற்றுத் திறனாளித் தேர்வர்களும் இதன் வழியாக பயன்பெறுவர்.

7.10. சிறைகளில் தேர்வு மையம்

சிறைவாசிகளும் எதிர்கால வாழ்க்கையில் முன்னேற அவர்களது கல்வியில் முன்னேற்றம் காண்பது அவசியமாதலால் ஒவ்வோராண்டும் மத்திய சிறைகளில் தேர்வு மையம் அமைக்கப்படுகிறது. மேல்நிலைத் தேர்வுகளுக்கு புழல் மத்திய சிறையிலும், இடைநிலைத் தேர்வுகளுக்கு பல்வேறு மத்தியச் சிறைகளிலும் சிறைவாசிகள் தேர்வெழுத தேர்வு மையம் அமைக்கப்படுகிறது. இத்தேர்வு மையங்கள்மூலம் மார்ச் 2020-ல் சுமார் 300 சிறைவாசிகள் பயனடைகின்றனர்.

7.11. தேர்வுகள் நடத்தும் முறை

வினாத்தாட்களை தேர்வு மையங்களுக்கு எடுத்துச் செல்லவும், தேர்வு மையங்களிலிருந்து விடைத்தாள் கட்டுகளை சேகரிப்பு மையங்களுக்குக் கொண்டு செல்லவும், பிரத்யேகமான வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

[*2020 மார்ச் 12*

*பொதுத் தேர்வுகளில் தேர்வறையில் ஆள் மாறாட்டத்தினை தவிர்க்கும்பொருட்டு, தேர்வர்களின் புகைப்படம், விவரங்கள் மற்றும் மாற்றெண் அடங்கிய பார்கோடு கொண்ட முகப்புத்தாட்களுடன்கூடிய விடைத்தாள் வழங்கப்படுகிறது. தேர்வு முடிந்தவுடன் தேர்வு மையத்திலேயே மாணவர்களது புகைப்படம் மற்றும் விவரங்கள் அடங்கிய பகுதி மட்டும் பிரித்தெடுக்கப்படுகிறது. பார்கோடுடன்கூடிய விடைத்தாள் மட்டும் திருத்துவதற்காக அனுப்பப்படுகிறது. திருத்திய பிறகு விடைத்தாளில் உள்ள பார்கோட்டின் மாற்றெண்ணை பார்கோடு ரீடர்மூலம் கண்டறியப்பட்டு, மதிப்பெண்கள் அச்சமுத்தம் செய்யப்படுகிறது. தேவையான முகப்புத்தாட்களை வருடந்தோறும் அச்சடிக்க சுமார் 6 கணினி அச்சு இயந்திரங்கள் (*Digital Printing Machines*) ரூ.2.34 கோடி நிதி ஒதுக்கீட்டில் வாங்கப்பட்டு, தேர்வுப் பணிகள் செம்மையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

மாணவர்களுக்கு வழங்கப்படும் முதன்மை விடைத்தாட்கள் குறிப்பிட்ட மற்றும் சம்பந்தப்பட்ட பாடங்களுக்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் விடையளிக்க வேண்டிய வினாக்களுக்கு ஏற்ப படிவங்கள், வரை கட்டத்தாள் மற்றும் நிலவரை படங்கள் விடைத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளன.

அரசுத் தேர்வுத் துறையில் பொதுத் தேர்வுகள் நேர்மையாகவும், வெளிப்படைத் தன்மையுடன் நடைபெறுவதைக் கண்காணிக்கும் பொருட்டு பொதுத் தேர்வுகள் நடைபெறும் காலங்களில் அரசுத் தேர்வுத் துறை தலைமை அலுவலகத்தில் தேர்வுக் கட்டுப்பாட்டு அறை உருவாக்கப்பட்டு, காலை 8-00 மணி முதல் இரவு 8-00 மணி வரை செயல்படுத்தப்பட்டு, பொது மக்கள் மற்றும் தேர்வர்களின் ஐயங்களுக்கு உடனுக்குடன் தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

7.12. புதிய முயற்சிகள்

7.12.1. இடைநிலைத் தேர்வில் மொழிப்பாடங்களை ஒரே தாளாக்குதல்

கல்வி மதிப்பீட்டில் சமரசம் இன்றி 2018-2019 ஆம் கல்வியாண்டு முதல் மேல்நிலை முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு மொழிப்பாடம் மற்றும் ஆங்கிலப் பாடங்களிலுள்ள

2020 மார்ச் 12]

இரண்டுதாட்கள் முறை ஒருங்கிணைக்கப்பட்டு ஒரே தாளாக தேர்வெழுதும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. மொழிப்பாடத் தேர்வினை ஒரே தாளாக மாற்றியது கல்வியாளர்கள் மற்றும் மாணவர்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது. இதன் தொடர்ச்சியாக 2019-2020 ஆம் கல்வியாண்டு முதல் இடைநிலைத் தேர்விற்கும், மொழிப்பாடம் மற்றும் ஆங்கிலப் பாடங்களிலுள்ள இரண்டு தாட்கள் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரே தாளாக தேர்வெழுதும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

7.12.2. பொதுத் தேர்வு எழுதுவதற்கான கால அவகாசம் நீட்டித்தல்

புதிய பாடத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில் 10, 11, 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் எழுதும் மாணவர்களின் நலன் கருதி 2-30 மணி நேரத்தில் இருந்து 3-00 மணி நேரமாக தேர்வு காலம் அரசால் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

7.13. தேர்வு முடிவுகள் வெளியிடுதல்

தேர்வு முடிவுகள் குறித்து மாணவர்களின் பதட்டத்தினைக் குறைக்கும் வகையில் பெயர் பட்டியல் தயாரிக்கும்பொழுது பெறப்பட்ட அவர்களின் கைப்பேசி எண்ணிற்கு தேர்வு முடிவுகள் உடனடியாக குறுஞ்செய்தியாக அனுப்பி வைக்கப்படுகின்றன. மேலும், அவர்களது தேர்வு முடிவுகள் இணையவழி வாயிலாக தெரிந்துகொள்ள மூன்று சிறப்பு இணையதளங்கள் www.tnresults.nic.in www.dge1.tn.nic.in , www.dge2.tn.nic.in *உருவாக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் தேர்வு முடிவுகளை அச்சிட்டு வழங்குவதற்குப் பதிலாக இணையதளம் வாயிலாக சம்பந்தப்பட்ட பள்ளிகளே தேர்வு முடிவுகளைப் பதிவிறக்கம் செய்துகொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.*

7.14. சான்றிதழ் வழங்குதல்

7.14.1. தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்/மதிப்பெண் பட்டியல்

தேர்வு முடிவு வெளிவந்த மறுநாள் முதல் www.dge.tn.nic.in *என்கிற இணையதளம் வாயிலாக இடைநிலைத் தேர்வர்கள் தற்காலிக மதிப்பெண் சான்றிதழைப் பதிவிறக்கம்*

செய்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதேபோல் மேல்நிலைத் தேர்வர்கள் தங்களது மதிப்பெண் பட்டியலைப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

7.14.2. மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு தேர்வுகளுக்கான தனித் தனி மதிப்பெண் சான்றிதழ்கள்

மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத் தேர்வுகளில் முழுமையாக தேர்ச்சி அடைந்தவர்களுக்கு மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு மதிப்பெண் சான்றிதழ்கள் தனித் தனியே வழங்கப்படுகின்றன. தோல்வியுறும் மாணவர்களுக்கு மதிப்பெண் பட்டியல் அளிக்கப்படுகிறது.

7.14.3. ஒன்றுக்கு மேற்பட்ட முறை தேர்வெழுதி இடைநிலை/ மேல்நிலை தேர்வுகளில் தேர்ச்சியுற்ற மாணவர்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ்

தேர்வுகளில் வெற்றி பெறும்வரை ஒவ்வொரு முறை தேர்வெழுதும்பொழுதும் தனித் தனி மதிப்பெண் சான்றிதழ்கள் தேர்வர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. இதன் காரணமாக இத்தகைய தேர்வர்கள் அனைத்து மதிப்பெண் சான்றிதழ்களையும், பாதுகாப்புடன் வைத்துக்கொள்ள வேண்டிய நிலை இருந்து வந்தது. ஆகவே, இத்தகைய தேர்வர்களின் நலனுக்காக தேர்ச்சி விவரங்களை மட்டும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த ஒரே மதிப்பெண் சான்றிதழாக வழங்கும் முறை தற்போது உருவாக்கப்பட்டுள்ளது.

7.14.4. மறு பிரதி மதிப்பெண் சான்றிதழ் மற்றும் சான்றிட்ட மதிப்பெண் பட்டியல் நகல்

தேர்வர்களின் விண்ணப்பத்தின்பேரில் மறு பிரதி மதிப்பெண் சான்றிதழ்கள் மற்றும் சான்றிட்ட மதிப்பெண் நகல்கள் வழங்கப்படுகின்றன. மாதிரி விண்ணப்பப் படிவம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டு 4,126 சான்றிட்ட மதிப்பெண் நகல்களும், 5,307 மறு பிரதி மதிப்பெண் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 12]

7.14.5. புலப்பெயர்ச்சி சான்றிதழ்

10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் தேர்ச்சி பெற்று பிற மாநிலங்களில் மேற்படிப்பைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கு புலப்பெயர்ச்சி சான்றிதழ் மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் 5 தினங்களுக்குள் இவ்வலுவலகத்தால் வழங்கப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டு 8,265 புலப்பெயர்ச்சி சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

7.14.6. மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத் தன்மையினை அறிதல்

நியமன அதிகாரிகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிடமிருந்து மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத் தன்மை குறித்து பெறப்படும் விண்ணப்பங்களுக்கு உடனடியாக உண்மைத் தன்மை அறிக்கையானது அளிக்கப்படுகின்றது. 2019-2020 ஆம் ஆண்டு 2,46,145 மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத் தன்மை அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

7.14.7. மின் ஆவணக் காப்பகம்

சான்றிதழ்களை வழங்குவதற்கும், சரிபார்த்தலுக்கும் உண்மையான சான்றிதழ்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக மின்னணு முறையில் செய்யக்கூடிய தளமே மின் ஆவணக் காப்பகம் ஆகும். இடைநிலை மற்றும் மேல்நிலை தேர்வுகளை எழுதிய மாணவர்கள் தங்களது ஆதார் எண்ணைக் கொண்டு மின் ஆவணக் காப்பகத்தில் உள்நுழைந்து, அவர்களது மின்னணு மதிப்பெண் சான்றிதழினைப் பதிவிறக்கம் செய்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. மின் ஆவணக் காப்பகம்மூலம் மின்னணு முறையில் மதிப்பெண் சான்றிதழ்களை மாணவர்களே பதிவிறக்கம் செய்வதற்கு ஏதுவாக 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை 65,07,882 தேர்வர்களது மதிப்பெண் விவரங்கள் மின் ஆவணக் காப்பகத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

7.15. மறு கூட்டல் மற்றும் மறு மதிப்பீட்டிற்காக விடைத்தாள் நகல் பதிவேற்றம் செய்தல்

மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுதிய மாணவர்கள் தேர்வு முடிவுகள்

வெளிவந்தவுடன் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அவர்களது விடைத்தாள் நகல் கோரி இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பிப்பவர்களது விடைத்தாள் நகல் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, மாணவர்களே அவற்றினைப் பதிவிறக்கம் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. விடைத்தாளின் நகலினைக் கொண்டு மாணவர்கள் தங்களது விடைத்தாளின் மதிப்பீட்டினை பகுப்பாய்வு செய்கின்றனர். இதன் பிறகு தேவையிருந்தால் மாணவர்கள் மறு கூட்டல் மற்றும் மறு மதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

7.16. ஜூன்/ஜூலை மாத சிறப்பு துணைத் தேர்வுகள்

இடைநிற்றலைத் தவிர்ப்பதற்காக மார்ச்/ஏப்ரல் மாதங்களில் நடைபெறும் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் தோல்வியுறும் மாணவர்கள் அக்கல்வியாண்டிலேயே உயர் கல்வியைத் தொடரும் வகையில் ஜூன்/ஜூலை மாதங்களில் சிறப்பு துணைத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. இதன்மூலம் மாணவர்கள் ஓர் ஆண்டை வீணாக்காமல் உயர் கல்வியைத் தொடர முடிகிறது.

7.17. பல்வேறு வகையான தேர்வுகள் நடத்துதல்

7.17.1. நேரடித் தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு தேர்வு

அடிப்படை நிலையில் பதவி உயர்வுக்காகவும், வேலைவாய்ப்புக்காகவும், குறைந்தபட்ச கல்வித் தகுதியினை வழங்குவதற்கும் வருடந்தோறும் எட்டாம் வகுப்பு தேர்வு நேரடி தனித் தேர்வர்களுக்கு நடத்தப்படுகின்றது.

7.17.2. அரசுத் தொழில்நுட்பத் தேர்வுகள்

தொழில்நுட்பக் கல்வித் தகுதியை வழங்குவதற்கும், வேலைவாய்ப்பிற்காகவும் ஓவியம், தையல், விவசாயம், அச்சுக் கலை, இசை, கைத்தறி மற்றும் நெசவு போன்ற பாடப் பிரிவுகளில் அரசுத் தொழில்நுட்பத் தேர்வுகள் இளநிலை, முதுநிலை என இருநிலைகளில் நடத்தப்படுகின்றன.

2020 மார்ச் 12]

7.17.3. தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வு

வருடந்தோறும் ஜூன் மாதம் தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வு நடத்தப்படுகிறது. 2019 ஆம் ஆண்டு 15,633 தேர்வர்கள் தேர்வெழுதியுள்ளனர்.

7.17.4. உதவித் தொகைக்கான தேர்வுகள்

7.17.4.1. தமிழ்நாடு ஊரக மாணவர் திறனாய்வுத் தேர்வு

கிராமப்புறங்களில் படிக்கும் பள்ளி மாணவர்களை ஊக்குவிக்கும்விதமாக ஒவ்வொரு கல்வியாண்டிலும் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருக்கும் 9 ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் இத்தேர்வினை எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். கிராமப்புற மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாக ஒவ்வோராண்டும் செப்டம்பர் மாதம் இத்தேர்வு நடத்தப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் 50 மாணவர்கள் மற்றும் 50 மாணவியர் எழுத்துத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டு, ஆண்டொன்றுக்கு ரூ.1000/- வீதம் நான்கு ஆண்டுகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. 2019 ஆம் ஆண்டு 69,722 மாணவர்கள் பங்குபெற்று 3,200 மாணவர்கள் தேர்ச்சி பெற்று உதவித்தொகை பெற தகுதி பெற்றுள்ளனர்.

7.17.4.2. தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித் தொகைத் திட்டம்

தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித் தொகை தேர்வு அரசு பள்ளிகள்/அரசு உதவிபெறும் பள்ளிகளில் 7 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்று, 8 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களது பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.1,50,000/-க்கு மிகாமல் இருக்கும்பட்சத்தில் அவர்கள் இத்தேர்வெழுத அனுமதிக்கப்படுவர். தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை ஆண்டுதோறும் உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்தொகையானது 2019-2020 ஆம் கல்வியாண்டு முதல் ரூ.6,000/- லிருந்து ரூ.12,000/- என உயர்த்தி வழங்கப்படுகிறது. இத்தேர்வில் மதிப்பெண்கள் மற்றும் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். ஒவ்வோராண்டும்

இத்திட்டத்தின்கீழ் தமிழகத்தில் 6,695 பயனாளர்கள் படிப்பு உதவித் தொகை பெறுகின்றனர். 2019 ஆம் ஆண்டு 1,51,374 மாணவர்கள் தேர்வெழுதியுள்ளனர்.

7.17.4.3. தேசிய அளவிலான திறனாய்வுத் தேர்வு

தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் ஒருங்கிணைப்பு முகமையாக அரசுத் தேர்வுகள் இயக்ககம் செயல்பட்டு தமிழகத்தில் முதல்நிலைத் தேர்வினை நடத்துகிறது. மத்திய/மாநிலப் பள்ளி குழுமங்களில் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் அனைவரும் இத்தேர்வினை எழுத தகுதி படைத்தவர்கள் ஆவர். இயக்குநரகத்தால் நடத்தப்படும் முதல்நிலை தேர்வின் முடிவுகள் வெளியிடப்பட்டபின் இரண்டாம் நிலைத் தேர்வினை தேசிய அளவில் தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்துகிறது. 2019 ஆம் ஆண்டு 1,55,853 மாணவர்கள் இத்தேர்வில் பங்கு பெற்றுள்ளனர்.

இத்திட்டத்தின்மூலம் இரண்டாம் நிலைத் தேர்வில் ஒவ்வோர் ஆண்டும் 40 தமிழக மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் வரை மாதம் ரூ.1250/-ம் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப் படிப்பு படிக்கும் வரை மாதந்தோறும் ரூ.2,000/-ம் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது. ஆராய்ச்சி படிப்பு மேற்கொள்ளும் மாணவர்களுக்கு பல்கலைக்கழக மானியக் குழுவினால் நிர்ணயிக்கப்படும் உதவித்தொகை அதிகபட்சமாக நான்கு ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுகிறது.

7.18. மத்திய அரசு பணியாளர் தேர்வாணையக் குழுமம் மற்றும் மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் தேர்வுகளை நடத்துதல்

ஆண்டுதோறும் மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் பல தேர்வுகளை சென்னையில் நடத்திட, அரசுத் தேர்வுகள் இயக்ககம் ஒருங்கிணைப்பு முகமையாக செயல்பட்டு வருகிறது.

7.19. இயக்ககத்தினை கணினிமயமாக்குதல்

இயக்குநரகத்தின் அனைத்து செயல்பாடுகளும், தமிழ்நாடு மின் ஆளுமை முகவாண்மை மூலமாக ரூ.2.72 கோடி செலவினத்தில்

2020 மார்ச் 12]

கணினிமயமாக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் பெயர் பட்டியல் தயாரித்தல் முதல் தேர்வு முடிவுகள் வெளியிடுதல் வரையிலான தேர்வுப் பணிகள் அனைத்தும் இணையதளத்தின் வாயிலாக நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின்மூலம் தேர்வர்கள் பதிவு செய்தல், தேசிய அளவிலான திறனறிவுத் தேர்வு மற்றும் தேசிய வருவாய்வழி மற்றும் தகுதிப் படிப்பு உதவித்தொகை பெறுவதற்கான தேர்வுகளுக்கான முன்னிலைப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

7.20. நிதி ஒதுக்கீடு

2020-2021 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ.146.12 கோடி இவ்வியக்ககத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

8.1. முன்னுரை

கற்கும் வாய்ப்பை இழந்து, முறையான கல்விக்கான வயதைக் கடந்துள்ள வயது வந்தோருக்கு, தற்போது எழுத்தறிவு, அடிப்படைக் கல்வி, தொழிற்திறன் மேம்பாட்டுக் கல்வி மற்றும் சமநிலைக் கல்வி உள்ளிட்ட கல்வி நிலைகளைக் கற்கும் அவசியத்தை உணர்த்துவதோடு, அவற்றுள், எந்நிலையையும் தேர்வு செய்து கற்கும் வாய்ப்பினை, அவர்களுக்கேற்ற வகையில் விரிவுசெய்து வழங்குவதையும் வயது வந்தோர் கல்வியானது நோக்கமாகக் கொண்டுள்ளது. வயது வந்தோர் கல்வித் திட்டத்தை மேம்படுத்திடும் வகையில், கடந்த 1976 ஆம் ஆண்டு முதல், 15 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுள்ள முற்றிலும் எழுதப் படிக்கத் தெரியாதோருக்கு, குறிப்பாக எழுத்தறிவு பெறாத பெண்கள் ஆகியோரை எழுத்தறிவு பெற்றவர்களாக்கிட, அவர்களுக்கு அடிப்படைக் கல்வி, தொழிற்திறன் கல்வி மற்றும் சமநிலைக் கல்வி வழங்கிடும் வகையில், பல்வேறு வயது வந்தோர் கல்வித் திட்டங்கள் பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்தின் வாயிலாக தமிழக அரசால் சிறப்பாக செயல்படுத்தப்பட்டன.

8.2. தொலைநோக்கு

முற்றிலும் எழுத மற்றும் படிக்கத் தெரியாதோருக்கு, அடிப்படைக் கல்வி, தொழிற்திறன் கல்வி மற்றும் வாழ்வியல் திறன் மேம்பாட்டுக் கல்வி வழங்குவதன்மூலம் மாநிலத்தில் முழு எழுத்தறிவினை அடைதல்.

8.3. நோக்கம்

- முற்றிலும் எழுத மற்றும் படிக்கத் தெரியாத வயது வந்த அனைவருக்கும் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு அளித்தல்.

- புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் அடிப்படைக் கல்விக்கு மேல் கற்றலைத் தொடரவும், பள்ளிகளில் அளிக்கப்படும் முறையான கல்விக்கு இணையான கல்வி பெறவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தல்.

- தொழில் சார்ந்த பயிற்சி அளிப்பதன்மூலம் அவர்களின் வருவாய்த் திறனை மேம்படச் செய்தல்.

- புதிதாக எழுத்தறிவு பெற்றோர் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கல்வி கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருதல்.

8.4. கற்கும் பாரதம் திட்டம்

கற்கும் பாரதம் திட்டம், கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை தருமபுரி, சேலம், ஈரோடு, பெரம்பலூர், விழுப்புரம், அரியலூர், திருவண்ணாமலை, திருப்பூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 9 மாவட்டங்களில், ரூ.160.90 கோடி மொத்தத் திட்ட மதிப்பீட்டில், மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதிப் பங்களிப்புடன் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டது. கற்கும் பாரதம் திட்டத்தின்கீழ், 25.39 இலட்சம் பேர் அடிப்படை எழுத்தறிவைப் பெற்று பயனடைந்துள்ளனர்.

8.5. சிறைவாசிகளுக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம்

2019 ஆம் ஆண்டில், தமிழகத்தில் மத்திய மற்றும் மாவட்ட சிறைச்சாலைகளிலுள்ள, முற்றிலும் எழுத மற்றும் படிக்கத்

2020 மார்ச் 12]

தெரியாத சிறைவாசிகளுக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டத்தை, ரூ.*14.60* இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்திடும் வகையில் தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. திருவள்ளூர், கடலூர், வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள மத்திய சிறைச்சாலை வளாகங்களிலும், புதுக்கோட்டை மாவட்ட சிறைச்சாலை வளாகத்திலும், சிறைத் துறையின் ஒருங்கிணைப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

முற்றிலும் எழுத மற்றும் படிக்கத் தெரியாத சிறைவாசிகளின் சிறைவாரியான எண்ணிக்கை பின்வருமாறு:-

வ. எண்.	மாவட்டத்தின் பெயர்	சிறைவாசிகளின் எண்ணிக்கை		மொத்தம்
		ஆண்	பெண்	
1	திருவள்ளூர்	*480*	*25*	*505*
2	கோயம்புத்தூர்	*90*	*0*	*90*
3	மதுரை	*100*	*32*	*132*
4	கடலூர்	*17*	*0*	*17*
5	சேலம்	*65*	*24*	*89*
6	திருநெல்வேலி	*67*	*0*	*67*
7	திருச்சிராப்பள்ளி	*67*	*26*	*93*
8	வேலூர்	*87*	*13*	*100*
9	புதுக்கோட்டை	*20*	*0*	*20*
மொத்தம்		***993***	***120***	***1113***

ஆதாரம்: சிறைத் துறை

8.5.1. சிறைவாசிகளுக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டச் சிறப்பம்சங்கள்

இச்சிறப்பு எழுத்தறிவுத் திட்டம், டிசம்பர் *2019* ஆம் மாதம் முதல் செயல்படுத்தப்படுகிறது. திட்டச் செயல்பாட்டுக் கால அளவு ஆறு மாதங்கள் ஆகும். கற்போர்களுக்கு அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு பயிற்றுவிக்கப்பட்டு, திட்ட இறுதியில் அடைவுத் தேர்வு நடத்தப்படும். அடைவுத் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு அடிப்படைக் கல்வி நிறைவுச் சான்றிதழ் வழங்கப்படும்.

[2020 மார்ச் 12

ஒருநாள் திட்ட முன்னறிமுகப் பயிற்சியினை மாவட்ட அலுவலர்களுக்கு நடத்தப்பட்டதன் தொடர்ச்சியாக, திட்டப் பயிற்றுநர்களுக்கான இரண்டு நாள் பாடத்திட்டப் பயிற்சி புழல், மத்திய சிறை வளாகத்தில் நடத்தப்பட்டது.

8.6. வளர்ச்சியில் முன்னுரிமை பெறும் மாவட்டங்களில் சிறப்பு எழுத்தறிவுத் திட்டம்

தமிழகத்தில், வளர்ச்சியில் முன்னுரிமை பெறும் மாவட்டங்களில் (Aspirational Districts) வயது வந்தோர் எழுத்தறிவு சதவீதத்தில் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றத்தினை உண்டாக்கிட, சிறப்பு பள்ளி சாரா மற்றும் வயது வந்தோருக்கான எழுத்தறிவுத் திட்டத்தை ரூ.6.23 கோடி மதிப்பீட்டில், இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்திடும் வகையில் 2019 ஆம் ஆண்டில், தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கண்டறியப்பட்டுள்ள, முற்றிலும் எழுத மற்றும் படிக்கத் தெரியாத வயது வந்தோருக்கும் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவை வழங்கிடுவதனை இத்திட்டம் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

8.6.1. திட்டத்தின் இலக்கு மற்றும் செயல்பாட்டுக் காலம்

இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில், 15 வயதுக்கு மேற்பட்ட முற்றிலும் எழுத மற்றும் படிக்கத் தெரியாத 1,68,716 பேர் இத்திட்டத்தின்கீழ் வருவர். இத்திட்டத்தை, 2019 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை, நான்கு கட்டங்களாகப் பிரித்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு கட்டம் என்பது 6 மாத கால அளவைக் கொண்டதாகும்.

8.6.2. கற்போர் கற்றல் மையங்களை நிறுவுதல்

இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில், அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி வளாகங்களில், 947 கற்போர் கற்றல் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

மாவட்டம் மற்றும் ஒன்றியங்கள் வாரியான கற்போர் மையங்கள் மற்றும் சேர்க்கப்பட்டுள்ள கற்போர்களின் எண்ணிக்கை விவரங்கள் பின்வருமாறு:-

2020 மார்ச் 12]

இராமநாதபுரம் மாவட்டம்			விருதுநகர் மாவட்டம்		
ஒன்றியம்	கற்போர் மையங்களின் எண்ணிக்கை	சேர்க்கப்பட்டுள்ள கற்போர்களின் எண்ணிக்கை	ஒன்றியம்	கற்போர் மையங்களின் எண்ணிக்கை	சேர்க்கப்பட்டுள்ள கற்போர்களின் எண்ணிக்கை
இராமநாதபுரம்	11	440	விருதுநகர்	49	1973
R.S. மங்களம்	30	1178	சாத்தூர்	61	2454
நைனார்கோயில்	10	410	காரியாப்பட்டி	49	1971
திருவாடனை	13	520	அருப்புக்கோட்டை	40	1600
மண்டபம்	50	2000	நரிக்குடி	53	2120
திருப்புல்லாணி	32	1280	திருச்சுழி	49	1960
கடலாடி	42	684	ஸ்ரீவில்லிபுத்தூர்	73	2945
பரமக்குடி	24	960	ராஜபாளையம்	92	3885
போகளூர்	19	760	சிவகாசி	42	1680
கமுதி	63	2520	வெம்பக்கோட்டை	51	2064
முதுகுளத்தூர்	38	4392	வத்திராயிருப்பு	56	2303
மொத்தம்	**332**	**15144**	**மொத்தம்**	**615**	**24955**

2,166 மாவட்ட/ஒன்றிய அலுவலர்கள், மையம் சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் கல்வித் தன்னார்வலர்கள் ஆகியோருக்கு ஒரு நாள் திட்ட முன்னறிமுகப் பயிற்சி நடத்தப்பட்டதைத் தொடர்ந்து, 947 கல்வித் தன்னார்வலர்களுக்கு இரண்டு நாள் பாடத்திட்டப் பயிற்சி ஒன்றிய அளவில் நடத்தப்பட்டது.

8.6.3. கல்விசார் செயல்பாடுகள்

கற்போர் மையங்களில், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் (SCERT) தயாரிக்கப்பட்டுள்ள கற்போர் கட்டகத்தைக் கொண்டு கல்வித் தன்னார்வலர்களின் உதவியுடன், முற்றிலும் எழுத மற்றும் படிக்கத் தெரியாத கற்போர்களுக்கு அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுத் திறன்கள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

[2020 மார்ச் 12

கற்போர்களுக்கு வாசித்தல், எழுதுதல் மற்றும் அடிப்படை கணக்கு ஆகிய திறன்களில் 6 மாதங்கள் பயிற்சி வழங்கி, இத்திட்டத்தின் ஒவ்வொரு கட்ட (batch) முடிவில் நடத்தப்படும் இறுதி அடைவுத் தேர்வினைச் சந்திக்கும் வகையில், அவர்களை ஆயத்தப்படுத்துவதை பாடத்திட்டம் அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளது.

8.6.3.1. விரைவுத் துலங்கல் குறியீட்டுடன் (QR code) இணைக்கப்பட்ட புதிய கட்டகம்

அடிப்படை எழுத்தறிவு, எண்ணறிவு மற்றும் அன்றாட வாழ்வியல் திறன்கள் சார்ந்த 28 பாடங்களை உள்ளடக்கிய ஒரு புதிய கட்டகம் தயாரிக்கப்பட்டு, ஒலி மற்றும் ஒளியுடன்கூடிய பாடக் கருத்துகளை உள்ளடக்கிய விரைவுத் துலங்கல் குறியீடுடன் (QR code) இணைத்து வழங்கப்பட்டுள்ளன.

இந்த யுக்தியானது, கட்டகத்திலுள்ள பாடக் கருத்துகளை தகவல் தொழில்நுட்பக் கருவிகள், TAB மற்றும் திறன் கைபேசி போன்றவற்றின் உதவியுடன் கற்போர்கள் தங்கள் வீட்டிலிருந்தவாறு, சுயமாகவும், குடும்ப உறுப்பினர்களின் உதவியுடனும் பயின்றிட வழிவகை செய்கிறது. மேலும், வங்கி மின்னணு பண பரிவர்த்தனைகள், மின்னணு முன்பதிவுகள், BHIM, PAYTM போன்ற செயலிகளைக் கையாளுதல் ஆகிய செயல்பாடுகளில் ஒலி மற்றும் ஒளிக் காட்சிகளுடன்கூடிய பாடக் கருத்துகள், உடனடி செயல்முறைப் பயிற்சிகளைக் கற்போருக்கு வழங்குகிறது.

8.7. சிறப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்துதல்

மேற்குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு சிறப்பு எழுத்தறிவுத் திட்டங்களும், சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள், உதவித் திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி), வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர்கள் ஆகியோரின் ஒருங்கிணைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 12]

8.8. நிதி ஒதுக்கீடு

2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.5.18 கோடி அரசால் நிதி இவ்வியக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. பொது நூலகங்கள்

9.1. அறிமுகம்

பொது நூலகம் என்பது உலகளாவிய தகவல் மற்றும் அறிவு வளங்களுடன்கூடிய உள்ளூர் கற்றலை இணைக்கும் அறிவுக் களஞ்சியமாகும். உலகெங்கிலும் வளர்ந்துவரும் வேகமான மாற்றங்களை மக்களிடம் கொண்டு செல்லும் பணியில் பொது நூலகங்கள் முக்கியப் பங்காற்றி வருகின்றன. வாசிக்கும் பழக்கம் மற்றும் வாழ்நாள் கற்றலை ஊக்குவிப்பதே நூலகங்களின் நோக்கமாகும்.

9.2. தொலைநோக்கு

கலாச்சாரம், அறிவுசார் தொழில்நுட்பம் மற்றும் தகவல் வளங்களை தடையின்றி சமத்துவத்துடன் வழங்குவதன்மூலம் சமுதாயத்தின் வளர்ச்சியை ஊக்குவித்து மேம்படுத்துதல்.

9.3. நோக்கம்

- *தரமான தகவல்களைச் சரியான நேரத்தில், வசதியான முறையில் மக்களுக்கு வழங்குதல்.*

- *தற்போதைய தொழில்நுட்பத்துடன்கூடிய வலிமையான மற்றும் பொருத்தமான வளங்களை உருவாக்கி, நூலகங்களை மேம்படுத்துதல்.*

- *அறிவுப் பகிர்வுமூலம் மக்களை ஒருங்கிணைத்தல்.*

- *நமது கலாச்சாரப் பொருட்கள் மற்றும் ஆவணங்களைப் பாதுகாத்தல்.*

[2020 மார்ச் 12

➢ பல்வேறு தரப்பினரும் பயன்படுத்திடும் வகையில் அனைத்தையும் உள்ளடக்கியதாக நூலகங்களைத் திகழச் செய்தல்.

➢ உலகளாவிய தகவல் மற்றும் கருத்துகளை பொதுமக்கள் எளிதில் அணுக வழிவகை செய்தல்.

9.4. தமிழ்நாட்டில் பொது நூலகங்கள்

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948-ன்படி வாசிக்கும் பழக்கத்தை வளர்த்து, ஆராய்ச்சிப் பணிகளை எளிதாக மேற்கொள்ளுதல் மற்றும் உரிய தகவல்களை வாசகர்களுக்கு வழங்குவதற்கென பொது நூலகங்கள் மாநிலமெங்கும் நிறுவப்பட்டுள்ளன. சமுதாயத்தில் வளர்ந்து வரும் தகவல் தேவையைப் பூர்த்தி செய்ய இதுநாள்வரை 4,638 நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்திலுள்ள நூலகங்கள் விவரம்

வ. எண்	நூலகங்களின் பெயர்/வகை	எண்ணிக்கை
1.	கன்னிமாரா பொது நூலகம் (மாநில மைய நூலகம்)	1
2.	அண்ணா நூற்றாண்டு நூலகம்	1
3.	மாவட்ட மைய நூலகங்கள்	32
4.	கிளை நூலகங்கள்	1,926
5.	நடமாடும் நூலகங்கள்	14
6.	ஊர்ப்புற நூலகங்கள்	1,915
7.	பகுதி நேர நூலகங்கள்	749
	மொத்தம்	4,638

9.4.1. கன்னிமாரா பொது நூலகம்

கன்னிமாரா பொது நூலகம், இந்தியாவின் பழமையான வரலாற்றுச் சிறப்பு மிக்க நூலகங்களில் ஒன்றாகும். 1896 ஆம் ஆண்டில், அற்புதமான கலையழகுடன் திகழும் கட்டட அமைப்புடன் தொடங்கப்பட்ட கன்னிமாரா பொது நூலகம், நூல் ஆர்வலர்கள் மற்றும் ஆராய்ச்சி அறிஞர்களின் சொர்க்கமாக

2020 மார்ச் 12]

மட்டுமல்லாமல், தமிழகத்தின் பெருமைமிகு நூலகமாக முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948-ன்படி கன்னிமாரா பொது நூலகம் மாநில மைய நூலகமாக உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நூலகத்தில் பாடநூல் பிரிவு, குறிப்புதவிப் பிரிவு, மொழிப் பிரிவு, பருவ இதழ் பிரிவு, மைக்ரோ பிலிம் பிரிவு, நூல் பாதுகாப்புப் பிரிவு, இந்திய மொழி நூல்களுக்கான தனித்தளம், பார்வையற்றோருக்கான பிரிவு மற்றும் குடிமைப்பணி கல்வி மையம் ஆகிய பிரிவுகள் உள்ளடங்கியுள்ளன. நூலகத்தில் டிஜிட்டல் பிரிவு, பழமையான அரிய வகை நூல்கள் மற்றும் ஆவணங்களை எண்ணியமாக்கும் முறையில் வளரும் சந்ததியினருக்காக பாதுகாக்கும் பெரும் பணிகளை செய்து வருவதுடன், குடிமைப்பணி போட்டித் தேர்வு ஆர்வலர்களுக்குத் தேவைப்படும் நூல்கள் மற்றும் எண்மயமாக்கப்பட்ட பழமையான பருவ இதழ்களின் தொகுப்புகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

இந்தியாவில் வெளியிடப்படும் அனைத்து நூல்கள், செய்தித்தாள்கள் மற்றும் பருவ இதழ்களின் பிரதிகளை இலவசமாகப் பெறும் நான்கு தேசிய வைப்பு நூலகங்களில் ஒன்றாகவும், யுனெஸ்கோ மற்றும் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி வெளியீடுகளின் நூல்கள் வைப்பு மையமாகவும் இந்நூலகம் திகழ்கிறது. கன்னிமாரா பொது நூலகம் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளதுடன், நூலக உறுப்பினர்கள் இணையம்மூலம் நூல்களைத் தேடுதல், புதுப்பித்தல் மற்றும் முன்பதிவு செய்வதற்கு உதவியாக Online Public Access Catalogue *முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.*

இந்நூலகம் 8,89,603 புத்தகங்களையும், 1,44,873 உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. இந்நூலகம் சார்ந்த தகவல்களை www.connemarapubliclibrarychennai.com *என்ற அதிகாரப்பூர்வ வலைத்தளத்தின்மூலம் அறியலாம்.*

9.4.2. அண்ணா நூற்றாண்டு நூலகம்

கலைநயத்துடன் உள்ள நவீன நூலகமான அண்ணா நூற்றாண்டு நூலகமானது 8 ஏக்கர் நிலப்பரப்பில், 3.75 இலட்சம்

[2020 மார்ச் 12

சதுர அடி கட்டட அமைப்புடன் ஆசியாவின் மிகப் பெரிய நூலகங்களில் ஒன்றாக சென்னையில் நிறுவப்பட்டுள்ளது. தற்போது, இந்நூலகத்தில் பரந்த அளவிலான பொருண்மைகளை உள்ளடக்கிய 6,14,118 நூல்கள் உள்ளன.

இந்நூலகத்தில் போட்டித் தேர்வுப் பிரிவு, குழந்தைகள் பிரிவு, பருவ இதழ் பிரிவு, தமிழ் மற்றும் மண்டல மொழிப் பிரிவு, ஆங்கிலப் புத்தகங்களுக்கான பிரிவு, மின் நூல் பிரிவு மற்றும் அரசினர் கீழ்க்கத்திய சுவடிகள் பிரிவு ஆகிய பல்வேறு பிரிவுகளுடன் பார்வையற்றோருக்கான தனிப் பிரிவு மற்றும் சொந்த நூல்கள் படிக்கும் பிரிவு ஆகிய தனிப் பிரிவுகள் உள்ளன. குழந்தைகளுக்கான தனிப்பிரிவு, நகைச்சுவை உணர்வுடன்கூடிய கருத்தின் அடிப்படையிலான வாசிப்புப் பகுதி, மல்டிமீடியா கருவிகள் மற்றும் கதைப் புத்தகங்களைக் கொண்டுள்ளது. பிரெய்லி காட்சிகளுடன், பார்வையற்றோருக்கான உயர் தொழில்நுட்ப பிரிவையும் இந்நூலகம் கொண்டுள்ளது. இப்பிரிவில் 3,100-க்கும் மேற்பட்ட பிரெய்லி நூல்கள், ஒலித் தொகுப்பின் குறுந்தகடுகள் மற்றும் 1.1 TB வரையிலான எண்மயமாக்கப்பட்ட உள்ளடக்கங்கள் உள்ளன.

இந்நூலகத்திலுள்ள நூல்களின் தொகுப்பு முழுவதையும் இணையதள வழியாக எந்த இடத்திலிருந்தும் எளிமையாகவும், விரைவாகவும் அணுகத்தக்க ஒருங்கிணைந்த நூலக மேலாண்மை அமைப்பு (WEB-OPAC) ஏற்படுத்தப்பட்டுள்ளது. நூல்களுக்கு Radio Frequency Identification குறியிடுதல் முறையில் தானியங்கி செயல்பாட்டின்மூலம் நூல்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டு முதல் பார்வையாளர்களின் ஆர்வத்தையும், புதுமையான உற்சாகத்தையும் தூண்டும்விதமாக, ஒவ்வொரு சனிக்கிழமையிலும் மாலை 6-00 மணி முதல் 7-30 மணி வரையில் ‘பொன்மாலைப்பொழுது’ என்ற தலைப்பில் இலக்கிய நிகழ்ச்சியை அண்ணா நூற்றாண்டு நூலகம் நடத்தி வருகிறது. தமிழ் இலக்கியம், சினிமா, ஊடகம், மருத்துவம், சட்டம், அறிவியல், நுண்கலைகள் போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த வல்லுநர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டு, சிறப்புரையாற்றி, வாசகர்களுடன்

2020 மார்ச் 12]

கலந்துரையாடுகிறார்கள். வாசகர்கள் மற்றும் பொது மக்களிடையே மிகவும் பிரபலமான இந்நிகழ்வானது நூலகத்தின் அதிகாரப்பூர்வ யு-டியூப் சேனல் (www.youtube.com/aclchennai) மூலம் நேரடியாக ஒளிபரப்பப்பட்டு வருகிறது.

தேசிய அளவில் மாநாடுகள், சிறப்பு விரிவுரைகள், கருத்தரங்கம், பயிற்சிப் பட்டறை ஆகியவற்றின்மூலம் நூலகம் மற்றும் தகவல் அறிவியல் வல்லுநர்களுக்கான தொழில்சார் அறிவு மற்றும் திறன்களை வழங்குவதில் அண்ணா நூற்றாண்டு நூலகம் முக்கியப் பங்காற்றுகிறது. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையிலும் பல்வேறு போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவதற்கான நோக்குநிலைத் திட்டங்கள் மற்றும் வழிகாட்டுதல் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

9.4.3. தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆராய்ச்சி மையம்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம் இந்தியாவின் பழமை வாய்ந்த நூலகங்களில் ஒன்றாகவும், மிகவும் முக்கியத்துவம் பெற்றுத் திகழும் நூலகமாகவும் உள்ளது. 16 ஆம் நூற்றாண்டில் நாயக்க மன்னர்களால் தொடங்கப்பட்டு, பழங்கால கலாச்சாரத்தின் இணையற்ற களஞ்சியமாக, அரிய நூல்கள் மற்றும் ஓவியங்கள், கையெழுத்துப் பிரதிகளைக் கொண்டு திகழ்கிறது. இந்நூலகமானது மன்னர் சரபோஜி (1798-1832) காலத்தில் தனது புகழின் உச்சத்தை அடைந்தது. 1918 ஆம் ஆண்டு முதல் இந்நூலகம் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

உலகளவில் சிறந்த அறிவுப் பெட்டகமாகத் திகழும் இந்நூலகத்தில் மொத்தமுள்ள 47,334 கையெழுத்துப் பிரதிகளில் 24,165 பனை ஓலைகளிலும், 23,169 காகித வடிவத்திலும், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மராத்தி மற்றும் ஆங்கில மொழிகளில் உள்ளன, மேலும், இலக்கியம், கலை மற்றும் கலாச்சாரத்தின் அனைத்து அம்சங்களைக் கொண்ட 45,000 புத்தகங்கள், வரைபடங்கள், ஓவியங்கள் ஆகியவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது. பணியாளர்கள் நலனுக்காகவும், நூலக மேம்பாட்டிற்காகவும் அரசால் ஆண்டுக்கு ரூ.75 இலட்சம் பராமரிப்பு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

9.4.4. டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் நூலகம், சென்னை

புகழ்பெற்ற தமிழறிஞரும், நூல் ஆர்வலர் மற்றும் ஆராய்ச்சியாளருமான டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் அவர்களின் நினைவாக 1943 ஆம் ஆண்டில் டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் நூலகம் தொடங்கப்பட்டது. இந்நூலகத்தில் 2,170 குறிப்பிடத்தக்க விலைமதிப்பற்ற நூல்கள், பனைஓலைச் சுவடிக் கட்டுகளாகவும், பழம் பெருமை வாய்ந்த தமிழ் இலக்கணம், சங்க இலக்கியம், தொல்காப்பியம், ஐம்பெரும் காப்பியங்கள், குறுங்காப்பியங்கள், 37,355 நூல்கள் மற்றும் டாக்டர் உ.வே. சாமிநாத அய்யருக்கு பிற தமிழறிஞர்கள் எழுதிய கடிதங்கள், டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் அவர்களால் எழுதப்பட்ட நாட்குறிப்பு, 1,504 அரிய நூல்கள் மற்றும் 855 கையெழுத்துப் பிரதிகள் உள்ளன. மேலும், இந்நூலகத்தில் உள்ள அச்சிடப்பட்ட அரிய நூல்கள் மற்றும் 1923 ஆம் ஆண்டு முதல் எழுதப்பட்ட விலைமதிப்பற்ற கடிதத் தொகுப்புகள் எண்மயமாக்கப்பட்டு குறுந்தகட்டில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

9.4.5. மறைமலை அடிகள் நூலகம், சென்னை

மறைமலை அடிகள் நூலகமானது, 1958 ஆம் ஆண்டில் மறைமலை அடிகளின் மணிமொழி நூலகத்தின் 4,500 நூல்கள் மற்றும் சைவ சித்தாந்த கழகத்தின் 5,000 நூல்களைக் கொண்டு சைவ சித்தாந்த நூல் பதிப்புக் கழகத்தினால் தோற்றுவிக்கப்பட்டது. தற்போது கன்னிமாரா பொது நூலக வளாகத்தில் செயல்படும் இந்நூலகத்திலுள்ள 80,000 நூல்களுள் 1,400 நூல்கள் பழம் பெருமை வாய்ந்த அரிய நூல்களாகும். 3,528 உறுப்பினர்கள் மற்றும் 1,500 ஆராய்ச்சி அறிஞர்கள் இதன்மூலம் பயனடைந்து வருகின்றனர். ஒவ்வோர் ஆண்டும் பராமரிப்பு மானியமாக ரூ.1.00 இலட்சம் அரசால் அனுமதியளிக்கப்படுகிறது.

9.4.6. மாவட்ட மைய நூலகங்கள்

அனைத்து நிலைகளிலுள்ள மக்கள் தரமான தகவல்கள் மற்றும் அறிவினைப் பெறுவதற்காக தமிழ்நாடு பொது நூலக விதிகள், 1950-ன்படி மாவட்ட மைய நூலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. மாநிலத்திலுள்ள நூலகங்களை எண்மயமாக்க மாநில அரசானது

2020 மார்ச் 12]

அளப்பரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. பள்ளி/கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பயன்பெறும் வகையில், 100 ஆண்டுகள் பழமையான அரிய புத்தகங்களை மாவட்ட மைய நூலகங்களில் அணுகுவதற்கு மின் புத்தக வாசிப்பான் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்நூலகங்கள் பல்வேறு துறை சார்ந்த 56,64,338 நூல்கள் மற்றும் இதழ்களின் பெருந்தொகுப்பைக் கொண்டுள்ளன. 12,96,357 உறுப்பினர்கள் கொண்டு, பருவ இதழ்கள், குறிப்பு நூல்கள், குடிமைப்பணி உட்பட போட்டித் தேர்வுகள், பெண்கள், குழந்தைகள், சொந்த நூல்கள் வாசிப்பு மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான பிரிவுகளுடன் இணையதள வசதியினைக் கொண்ட இந்நூலகங்களை 2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி, 2020 வரை 48,76,963 வாசகர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

9.4.7. கிளை நூலகங்கள்

கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப 5,000 முதல் 50,000 வரை மக்கள் தொகை கொண்ட பகுதிகளில் உள்ள குழந்தைகள், மாணவர்கள், பெண்கள், வேலை நாடுவோர் மற்றும் முதியோர்களுக்கு சேவைகளை விரிவுபடுத்தி வழங்குவதற்கு கிளை நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது, 314 முழுநேர கிளை நூலகங்களுடன் சேர்த்து 1,926 கிளை நூலகங்கள் நல்ல ஆதார வளம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுடன் 60,81,853 உறுப்பினர்களுக்குச் சேவையாற்றி வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி, 2020 வரை 4,62,47,736 வாசகர்கள் இந்நூலக வசதிகளைப் பயன்படுத்தியுள்ளனர். இந்நூலகங்களில் குழந்தைகள், மாணவர்கள், பெண்கள், பணிநாடுவோர் மற்றும் மூத்த குடிமக்களுக்கு பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

9.4.8. ஊர்ப்புற நூலகங்கள்

1996 ஆம் ஆண்டில் கிராமப்புற மக்கள் நூலகச் சேவைகளைப் பெறுவதற்கு, அவர்களை உறுப்பினர்களாக ஊக்குவிக்கும் நோக்கத்துடன் 1,915 ஊர்ப்புற நூலகங்கள் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ளன. சமுதாயத்திற்கு நற்பயன் வழங்கும் வகையில் பொது, சமூக மற்றும் மக்கள் நேரடியாகக் கூடும் இடமாகத் திகழும் இந்நூலகங்களில் உள்ள 1,86,21,924 உயரிய நூல் தொகுப்புகளின்மூலம் 20,05,722 உறுப்பினர்கள் மற்றும் 2,31,00,110

[2020 மார்ச் 12

வாசகர்கள் 2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி, 2020 வரை பயன்பெற்றுள்ளனர். புதிய தகவல் தொழில்நுட்ப வருகையினால் எண்மயமாக்கப்பட்ட காலத்தில் கணினி வசதிகளுடன் ஊர்ப்புற நூலகங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

9.4.9. நடமாடும் நூலகங்கள்

மலைப்பாங்கான, எளிதாகச் செல்ல இயலாத தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்களைக் கொண்டு சேர்க்கும் வகையில், தமிழ்நாட்டில் உள்ள 14 மாவட்டங்களில் நடமாடும் நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. வரைபடங்கள், படச்சுருள் மற்றும் குறுந்தகடுகள்மூலம் கிராமப்புற பள்ளி மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தினை ஊக்குவிக்கும் வகையில் உரிய கால இடைவெளிகளில் பள்ளிகளுக்குச் சென்று, இந்நூலகங்கள் மாணவச் சமூகத்திற்கு சேவையாற்றி வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில், நடமாடும் நூலகங்கள்மூலம் பிப்ரவரி, 2020 வரை 26,904 உறுப்பினர்கள் மற்றும் 1,65,925 வாசகர்கள் பயனடைந்துள்ளனர்.

9.4.10. பகுதி நேர நூலகங்கள்

கடைக்கோடியில் உள்ள மக்களையும் சென்றடையும் நோக்கில், தமிழ்நாடு பொது நூலக விதிகள், 1950-ன்படி பகுதி நேர நூலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 2019-2020 ஆம் ஆண்டில், பிப்ரவரி, 2020 வரை தற்போது செயல்பட்டுவரும் 749 பகுதி நேர நூலகங்கள் வாயிலாக 3,19,107 உறுப்பினர்கள் மற்றும் 40,93,029 வாசகர்கள் பயன் பெற்றுள்ளனர்.

9.5. நிதி ஆதாரம்

9.5.1. நூலக வரி

நூலக வரியானது, பொது நூலகங்களின் செயல்பாடுகளுக்குரிய முக்கிய வருவாய் ஆதாரமாகும். இந்த வரியானது, வீட்டு வரி/ சொத்து வரியிலிருந்து பெறப்படுகிறது. நூல்கள் மற்றும் பிற பொருட்கள் கொள்முதல் செய்தல், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், புதிய கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல், பழமையான, அரிய நூல்களை எண்மயமாக்கம் செய்தல் மற்றும்

2020 மார்ச் 12]

இதர வளர்ச்சிப் பணிகளுக்கு இந்நூலக வரி பயன்படுத்தப்பட்டு வருகிறது. 29—2—2020 வரை நூலக வரியாக ரூ.132.99 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

9.5.2. கொல்கத்தா இராஜாராம் மோகன் ராய் நூலக அறக்கட்டளை மானியம்

தேசிய அளவில் நூலகங்களை ஒருங்கிணைக்க மத்திய அரசின் முகமையாக இராஜாராம் மோகன் ராய் நூலக அறக்கட்டளை செயல்படுகிறது. பொது நூலகச் சேவையினை ஒருங்கிணைத்தல், கண்காணித்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகிய பணிகளில் இவ்வறக்கட்டளை ஈடுபட்டு வருகிறது. அரசின் இராஜாராம் மோகன் ராய் நூலக அறக்கட்டளை துவங்கப்பட்ட 1972 ஆம் ஆண்டு முதல் பொது நூலகம் மற்றும் தனியார் நூலகங்களுக்கு தொடர்ந்து ஆதரவு அளிப்பதன்மூலம் பொது நூலகச் சேவைகளை மேம்படுத்துவதில் முன்னேற்றம் கண்டுள்ளது. நூலகங்களின் நிதி ஆதாரங்களை மேம்படுத்திட இவ்வறக்கட்டளைக்கு இணையாக மாநில அரசும் பங்குத் தொகை செலுத்தி வருகிறது. 2019—2020 ஆம் நிதியாண்டில் இத்துறையால் ரூ.600.00 இலட்சம் இணை மானியமாகப் பெறப்பட்டுள்ளது.

9.6. பொது நூலகங்களின் உட்கட்டமைப்பு

14 நடமாடும் நூலகங்களுடன் 1,780 நூலகங்கள் சொந்தக் கட்டடங்களிலும், 2,530 நூலகங்கள் வாடகையில்லா இலவசக் கட்டடங்களிலும், 314 நூலகங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. 2019—2020 ஆம் நிதியாண்டில் இரண்டு கிளை நூலகங்களுக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ111.10 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

9.7. நூல்கள் மற்றும் பருவ இதழ்கள் வாங்குதல்

மக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு வாசகர்களின் மாறிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, அறிவியல், சமூக, வரலாறு, இலக்கியம், கலாச்சாரம் மற்றும் அறிவு சார்ந்த வாசகர்களின் தேடல்களுக்கு முக்கியத்துவமளித்து, தேர்ந்த தேர்வுக் குழுவின்மூலம் நூல்கள் மற்றும் பருவ இதழ்கள் தேர்வு

செய்யப்படுகின்றன. சாதாரணமாக, ஓராண்டில் வசூலிக்கப்படும் நூலக வரி வசூலில் 25 விழுக்காடு நூல்கள் வாங்குவதற்கும் மற்றும் 6.5% பருவ இதழ்கள் வாங்குவதற்கும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

9.8. கணினிமயமாக்குதல்

அதிகரித்துவரும் பொது மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தானியக்கத்துவத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, முன்னுரிமை அளித்து பொது நூலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. இதனால் சேவைகளின் தரம் மேம்படுத்தப்பட்டதோடு, தகவல் தேடல் பணிகள் எளிமையாக்கப்பட்டுள்ளன.

நூலகச் செயல்பாடுகளில் கணினிமயமாக்கப்பட்ட மேலாண்மை அறிமுகம், நூல் சார்ந்த பொருட்களை கணினி அடிப்படையில் மீட்டல், கணினி வலைத்தளம், ஆவணங்களை கணினி உதவியுடன் மறு ஆய்வு செய்தல், மின்னஞ்சல் பரிமாற்றம் மற்றும் மின் வளங்கள் போன்ற சேவைகள் வாசகர்கள் மற்றும் நூலகர்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. இணையம் மற்றும் வலைத்தள வசதிகள் கொண்ட கணினிகள் அனைத்து மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் 314 முழுநேர கிளை நூலகங்களில் உள்ளன.

மின்னணு ஊடக வடிவங்களாக சேமிக்கப்பட்டு, ஒழுங்கமைக்கப்பட்ட மின்னணுப் பொருட்களை மையப்படுத்திய தொகுப்பு உரைகள், ஒலி/ஒளி காட்சிப் பொருட்கள் போன்ற நூலக சேகரிப்பிலுள்ள ஊடகங்கள் மற்றும் கோப்புகளை மீட்டெடுத்து ஒழுங்குபடுத்தி பாதுகாக்கும் வழிவகைகள் கொண்ட சிறப்பு எண்மயமாக்கப்பட்ட நூலகங்கள் ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

9.9. குடிமைப்பணி கல்வி மையங்கள்

பல்வேறு போட்டித் தேர்வுகளில் கலந்துகொள்ளும் இளைய தலைமுறையினர் வெற்றி பெறும் நோக்கில், கன்னிமாரா பொது நூலகம், மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் தாலுகா தலைமையிடங்களில் அமைந்துள்ள 289 நூலகங்களில்

2020 மார்ச் 12]

குடிமைப்பணி கல்வி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. போட்டித் தேர்வுகளுக்குத் தேவையான நூல்கள், நாளிதழ்கள், பருவ இதழ்கள் வாங்கப்படுவதுடன், நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டு இளம் ஆர்வலர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வலுவானதாக இம்மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

கன்னிமாரா பொது நூலகம் மற்றும் மாவட்ட மைய நூலகங்களில் போட்டித் தேர்வில் கலந்துகொள்ளும் ஆர்வலர்களுக்கு அரசு மற்றும் அரசு சார்புடைய துறைகளின் வேலைவாய்ப்பிற்காகவும், போட்டித் தேர்வுகளுக்காகவும், விண்ணப்பப் படிவங்களை கணினி வழியில் பதிவு செய்யும் வசதி இலவசமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

9.10. வாசகர் வட்டம்

நூலகச் செயல்பாடுகளில் பொது மக்களின் பங்கேற்பை வளர்ப்பதற்கு கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், நூலக உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் மக்களைக் கொண்ட வாசகர் வட்டம் ஒவ்வொரு நூலகத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. வாசகர் வட்டமானது நூலகங்களின் பயன்பாட்டை விரிவுபடுத்தி வளப்படுத்துதல், வாசிப்புப் பழக்கத்தை வளர்த்தல், புதிய நூலகங்களை நிறுவுதல், நூலகப் பணிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றுடன் புதிய எழுத்தாளர்களையும், நூல்களையும், அடையாளம் காட்டுவதுடன் நூலகத்திலுள்ள நூல்களை வாசகர்களுடன் இணைப்பதன்மூலம் வாசகர்களிடையே நல்லுறவை ஏற்படுத்துகிறது.

புதிய நூல்கள் மற்றும் எழுத்தாளர்களை அறிமுகம் செய்தல், இலக்கிய சொற்பொழிவுகள், புத்தகக் கண்காட்சி, பேச்சு, கட்டுரை மற்றும் வினாடி வினா போட்டிகள் மாவட்ட மைய நூலகங்கள், தாலுகா அளவில் செயல்படும் நூலகங்கள் மற்றும் கிளை நூலகங்களில் நடத்தப்படுகின்றன.

9.11. உறுப்பினர்கள்/வாசகர்கள்/புரவலர்கள்

பொது மக்களிடையே நூலகச் செயல்பாடுகளை வலுவாக்கும் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக, 98,75,347 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளதுடன், 7,87,94,196 வாசகர்கள் பயனடைந்துள்ளனர். நூலகத்திற்கு ஒருவர் ரூ.1,000/—

வழங்குவதன்மூலம் புரவலராகவும், ரூ.5,000/- வழங்குவதன்மூலம் பெரும் புரவலராகவும் மற்றும் ரூ.10,000/- வழங்குவதன்மூலம் கொடையாளராகவும் ஆகிறார். இதுவரை 1,30,772 புரவலர்கள், 1,209 பெரும் புரவலர்கள் மற்றும் 460 கொடையாளர்கள், ரூ.1,414.17 இலட்சம் பங்களித்துள்ளனர். இந்த நிதியானது நிரந்தர வைப்பாக வங்கியில் செலுத்தப்பட்டு, அதன்மூலம் ஆண்டுதோறும் பெறப்படும் வட்டித் தொகையானது நூலகங்களை வலுப்படுத்த பயன்படுத்தப்படுகிறது.

9.12. நூலக நிகழ்ச்சிகள்

9.12.1. நூலகர் தினம்

நூலகத்திற்கான புகழ்பெற்ற 5 விதிகளை வகுத்த நூலகவியலின் தந்தை டாக்டர் சீ.இரா. அரங்கநாதன் அவர்களின் நினைவுகளுக்கு புகழாரம் செலுத்தும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் திங்கள் 12 ஆம் நாள் நூலகர் தினம் கொண்டாடப்படுகின்றது. இது வாசகர்களின் பன்முகத் தேவைகள் மற்றும் நோக்கங்களை நூலகர்கள் உணர்ந்து செயல்பட உதவுகிறது.

9.12.2. நூலக தினம்

நூலக வளங்களின் பயன்பாட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்து, சமூகத்தில் நூலகம் வகிக்கும் பங்கினை அங்கீகரிக்கும் வகையில் நூலகத் துறையில் வலுவான சமூக ஈடுபாட்டை ஊக்குவிப்பதற்காக ஆண்டுதோறும் மே திங்கள் 22 ஆம் நாள் நூலக தினமாக கொண்டாடப்படுகிறது.

9.12.3. தேசிய நூலக வாரம்

நூலகங்கள் குறித்த விழிப்புணர்வினை பொது மக்களிடையே ஏற்படுத்தி, அர்ப்பணிப்புடன் பணியாற்றும் நூலகர்களின் சிறந்த பங்களிப்புகளை அங்கீகரிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 14 முதல் 20 வரை தேசிய நூலக வாரம் கொண்டாடப்படுகிறது.

2020 மார்ச் 12]

9.12.4. உலக புத்தக தினம்

உலகின் புகழ்பெற்ற எழுத்தாளர் அ.வில்லியம் ஷேக்ஸ்பியர் அவர்களின் சிறப்பான சேவைகளை அங்கீகரிப்பதற்காக, அவரது பிறந்த நாள் நினைவாக ஏப்ரல் 23 ஆம் நாளினை உலகப் புத்தக தினம் மற்றும் காப்புறுதி தினமாகக் கொண்டாட யுனெஸ்கோ அறிவித்துள்ளதனைத் தொடர்ந்து, ஒவ்வோர் ஆண்டும் உலக புத்தக தினம் தமிழகத்தில் உற்சாகமாகக் கொண்டாடப்படுகிறது.

9.12.5. புத்தகக் கண்காட்சி

ஆண்டுதோறும் நடைபெறும் இலக்கிய நிகழ்ச்சியான புத்தகக் கண்காட்சி விழாவானது, சிறந்த படைப்பாளிகளையும், அதன் வாசகர்களையும் ஒரே மேடையில் இணைக்கிறது. அனுபவமிக்க வாசகர்களின் அளப்பரிய ஆர்வத்தைக் கருத்திற்கொண்டு கன்னிமாரா பொது நூலகத்தில் நிரந்தரப் புத்தகக் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. புத்தக விற்பனையாளர்கள் மற்றும் நூல் வெளியீட்டாளர்கள் ஒருங்கிணைப்புடன், அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் புத்தகக் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. இது தவிர்த்து, 14 மாவட்டங்களில் உள்ள பள்ளிகளில் மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கங்களை ஊக்குவித்து, வலுப்படுத்த நடமாடும் புத்தகக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டுள்ளன.

9.13. சாதனைகள்

➢ *வாசகர்களிடையே விழிப்புணர்வினை உருவாக்கும் கருத்தரங்குகள், இலக்கிய நிகழ்ச்சிகள், போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள், வேலை பெறுவதற்கான வாய்ப்புகள், சிறந்த எழுத்தாளர்கள், துறை வல்லுநர்களின் சொற்பொழிவுகள் மற்றும் மாநிலம் முழுவதும் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகளைக் காண்பதற்கு அனைத்து மாவட்ட மைய நூலகங்களிலும் ரூ.32.00 இலட்சம் செலவில்* Smart TV *வழங்கப்பட்டுள்ளன.*

➢ *வாசகர்களின் பயன்பாட்டிற்காக அனைத்து மாவட்ட மைய நூலகங்களில் உள்ள வலைத்தளங்கள் ரூ.19.20 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.*

[2020 மார்ச் 12

➢ போட்டித் தேர்வுக்குத் தயாராகும் பள்ளி/கல்லூரி மாணவர்கள் பயனடையும் வகையில், ரூ.*75.00* இலட்சம் மதிப்பில் *100* முழு நேர நூலகங்களில் நகலெடுக்கும் கருவிகள் மற்றும் ஸ்கேனர்கள் வழங்கப்பட்டுள்ளன.

➢ போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்குத் தேவையான புத்தகங்கள், பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த உலக அளவிலான பத்திரிகைகள், இதழ்களை பதிவிறக்கம் செய்வதற்கான வசதிகளுடன் அனைத்து மாவட்ட மைய நூலகங்களும் திறன்மிகு நூலகங்களாக தலா ரூ.*50,000/—* செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

➢ நூலகர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கவும், பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துவதற்கான வசதிகளுடன் ரூ.*10.00* இலட்சம் செலவில் நூலக ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையம் நிறுவப்பட்டுள்ளது.

➢ தஞ்சாவூரில் தமிழிசை, நடனம் மற்றும் நுண்கலைகள் குறித்த சிறப்பு நூலகம் ரூ.*31.61* இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், திருச்சியில் ரூ.*64.57* இலட்சம் மதிப்பீட்டில் கணிதம், அறிவியல் சார்ந்த சிறப்பு நூலகம், சென்னையில் ரூ.*46.46* இலட்சம் மதிப்பீட்டில் அச்சுக்கலை சார்ந்த சிறப்பு நூலகம், கோயம்புத்தூரில் ரூ.*25.66* இலட்சம் மதிப்பீட்டில் வானியல், புதுமைக் கண்டுபிடிப்புகள் சார்ந்த சிறப்பு நூலகம், திருநெல்வேலியில் ரூ.*41.47* இலட்சம் மதிப்பீட்டில் தமிழ் மருத்துவம் சார்ந்த சிறப்பு நூலகம் மற்றும் மதுரையில் ரூ.*35.05* இலட்சம் மதிப்பீட்டில் நாட்டுப்புறக் கலைகள் சார்ந்த சிறப்பு நூலகம் அமைக்கப்பட்டு திறப்பதற்கு தயார் நிலையில் உள்ளன. மேலும், நீலகிரியில் ரூ.*45.88* இலட்சம் மதிப்பீட்டில் பழங்குடியினர் பண்பாடு சார்ந்த சிறப்பு நூலகம் மற்றும் சிவகங்கையில் ரூ.*1.00* கோடி மதிப்பீட்டில் சிந்துச் சமவெளி நாகரிகம் உள்ளிட்ட பழம்பெரும் நாகரிகங்கள் குறித்த சிறப்பு நூலகம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2020 மார்ச் 12]

9.14. நடைமுறையில் உள்ள திட்டங்கள்

➢ சென்னை மற்றும் திருப்பூரில் ரூ.80.00 இலட்சம் செலவில் இரண்டு நூலகங்களுக்கு புதிதாக கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

➢ அனைத்து மாவட்ட மைய நூலகங்களில் ஒரு மாவட்டத்திற்கு ரூ.1.50 இலட்சம் செலவில் செவி மற்றும் பேச்சுத் திறன் குறைபாடு உடையவர்களுக்கான சிறப்புப் பிரிவு உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

➢ சேலம் மாவட்ட மைய நூலக வளாகத்தில் ரூ.50.00 இலட்சம் மதிப்பில் குழந்தைகளுக்கான சிறப்பு நூலகம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

9.15. சிறப்பு விருதுகள்

9.15.1. முனைவர் எஸ்.ஆர். அரங்கநாதன் விருது

சிறந்த செயல்திறனைக் கொண்ட நூலகர்களை கௌரவிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் வெள்ளிப் பதக்கத்துடன் ரூ.5,000/— ரொக்கப் பரிசைக் கொண்ட முனைவர் எஸ்.ஆர். அரங்கநாதன் விருது வழங்கப்பட்டு வருகிறது.

9.15.2. சிறந்த நூலகங்களுக்கான கேடயம்

நூலகர்களை ஊக்குவித்து, உற்சாகப்படுத்தி, நூலகங்களின் புகழினை முன்னெடுத்துச் செல்வதற்காக 2012—2013 ஆம் ஆண்டு முதல் நூலகங்களுக்கு கேடயங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறப்பு முனைப்புடன் உறுப்பினர்கள் மற்றும் புரவலர்கள் சேர்க்கையினை அதிகரித்தல், நன்கொடைகள் பெறுதல் மற்றும் பிற மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நூலகங்களுக்கு, மாநில அளவிலான செயல்திறன் அடிப்படையில் இவ்விருது வழங்கப்படுகிறது.

9.15.3. நூலக ஆர்வலர் விருது

பொது நூலகங்களில் செயல்படும், வாசகர் வட்டத்தின்மூலம் நூலகங்களின் வளர்ச்சிப் பணியில் முனைப்புடனும்,

ஊக்கத்துடனும் செயல்பட்டுவரும் வாசகர் வட்ட தலைவர்கள் மாவட்டந்தோறும் தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூ.5,000/— மதிப்புள்ள கேடயம் மற்றும் சான்றிதழுடன்கூடிய 'நூலக ஆர்வலர் விருது' வழங்கி கௌரவிக்கப்படுகிறார்கள்.

9.16. நிதி ஒதுக்கீடு

2020-2021 ஆம் ஆண்டிற்கு பொது நூலக இயக்ககத்திற்கு ரூ.142.19 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10. ஆசிரியர் தேர்வு வாரியம்

10.1. முன்னுரை

ஆசிரியர்கள் நம் நாட்டின் முதுகெலும்பைப் போன்றவர்கள். அரசுப் பள்ளி ஆசிரியர்கள், கல்லூரிக் கல்வி இயக்குநரகம், தொழில்நுட்பக் கல்லூரி இயக்குநரகம் மற்றும் சட்டக் கல்வி கல்லூரி இயக்குநரகம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டின்கீழ் வரும் ஆசிரியர் பணியிடங்களுக்குத் தேவையான திறமையான பணிநாடுநர்களை கால விரயமின்றி தெரிவு செய்து அளிக்கும் பொருட்டு ஆசிரியர் தேர்வு வாரியம் 1987 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இதற்கு முன்னர் மேற்கண்ட பணியிடங்களுக்கு பணி நாடுநர்களைத் தெரிவு செய்யும் பணியினை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மேற்கொண்டது. இதுவரை 1,62,833 பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்கள், ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வினை (TNTET) நடத்தும் மாநில இணைப்பு முகவாண்மையாகவும் ஆசிரியர் தேர்வு வாரியம் செயல்பட்டு வருகிறது. பல்வேறு இனங்களுக்கென ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும் அறிவிப்பாணைகள் மற்றும் தேர்வு முடிவுகள் ஆசிரியர் தேர்வு வாரிய அலுவலக இணையதள முகவரியில் முறையாக பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

10.2. நோக்கங்கள்

பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த ஆசிரியர் பணியிடங்களுக்கு பொருத்தமான நபர்களைப் பணியமர்த்துவதற்காக பணிநாடுநர்களைத் தேர்ந்தெடுக்கும் நடைமுறைகள் மற்றும்

2020 மார்ச் 12]

அமைப்பினை கட்டமைப்பதே ஆசிரியர் தேர்வு வாரியத்தின் முதன்மை நோக்கம் ஆகும். மேலும், அனைத்து பணியிடங்களுக்கும் நேர்மையான தெரிவு முறையை உறுதி செய்யும் விதமாக ஆசிரியர் தேர்வு வாரியம், மிகச் சிறந்த நடைமுறை தொழில்நுட்ப உத்திகளைக் கையாள்கிறது.

10.3. நேர்மையான பணித் தெரிவு செயல்பாடுகள்

ஆசிரியர் தேர்வு வாரியம் இதற்கு முன்பாக நடைபெற்ற அனைத்து தேர்வுகளையும் OMR விடைத்தாட்கள் மூலமாகவே நடத்தியது. மேற்கண்ட செயல்முறை சிக்கலானதாகவும், கால விரயம் அளிப்பதாகவும் இருப்பதால் இனிவரும் காலங்களில் பணி நியமனத்திற்கு கணினி வழியான வலைதள தேர்வுகளை நடத்த அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, 2019—2020 ஆம் ஆண்டில் கணினி பயிற்றுநர் நிலை—1 (முதுகலை ஆசிரியர் நிலை), முதுகலை ஆசிரியர்கள் மற்றும் உடற்கல்வி இயக்குநர் நிலை—1 ஆகிய பணியிடங்களுக்கான தேர்வுகள் கணினி வழியிலான வலைதள தேர்வுகளாகவே, வாரியத்தால் நடத்தப்பட்டன. இத்தகைய செயல்பாடுகளை முன்னெடுத்ததன் வாயிலாக, பணி நியமன செயல்பாடுகள் அனைத்தும் வெளிப்படைத் தன்மையுடனும், எவ்வித புகாருக்கும் இடமளிக்காத வகையிலும் குறுகிய கால அளவில் நடத்தி முடிக்கப்பட்டன.

10.4. தகவல் மையம்

ஆசிரியர் தேர்வு வாரிய வளாகத்தில் 2015 ஆம் ஆண்டு முதல் தகவல் மையம் செயல்பட்டு வருகிறது. இத்தகவல் மையத்தில் தெரிவுப் பணி தொடர்பாக கேட்கப்படும் பல்வேறு ஐயப்பாடுகளைக் களைய கேட்டு பதிலளிக்க ஏதுவாக தொழில்நுட்பரீதியாக தகுதி வாய்ந்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

10.5. நியமனங்கள்

அ) 2011-2012 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பணிகள்

2011-2012 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம், அரசு பள்ளி ஆசிரியர்கள்

உட்பட பல்வேறு நிலைகளிலான ஆசிரியர் பணியிடங்கள், அரசு கல்லூரிகளுக்கான உதவிப் பேராசிரியர்கள் என 49,214 ஆசிரியர் பணியிடங்கள் கீழ்க்கண்டவாறு நிரப்பப்பட்டுள்ளன:

வ. எண்	துறையின் பெயர்	ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்ட காலம்		மொத்தம்
		2011-2012 முதல் 2018-2019 வரை	2019-2020	
1	பள்ளிக் கல்வித் துறை	43,068	3,048	46,116
2	பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், சமூகப் பாதுகாப்பு துறை மற்றும் மாநகராட்சி பள்ளிகள்	1,346	107	1,453
3	உயர் கல்வித் துறை	1,528	117	1,645
	மொத்தம்	**45,942**	**3,272**	**49,214**

ஆ) மேற்கொள்ளப்படும் தெரிவுப் பணிகள்

வ. எண்	அறிவிக்கை எண் மற்றும் வெளியிடப்பட்ட நாள்	பணியிடத்தின் பெயர்	மொத்த பணியிடங்கள்
1	எண் 12/2019 28—8—2019	உதவிப் பேராசிரியர்	2,331
2	எண் 14/2019 27—11—2019	விரிவுரையாளர்	1,060
3	எண் 13/2019 27—11—2019	வட்டாரக் கல்வி அலுவலர்	97

2020 மார்ச் 12]

10.6. ஆசிரியர் தகுதித் தேர்வு 2019

8-6-2019 மற்றும் 9-6-2019 ஆகிய நாட்களில் 2019 ஆம் ஆண்டிற்கான ஆசிரியர் தகுதித் தேர்வு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்பட்டது. 5,42,047 பணிநாடுநர்கள் எழுதிய இத்தேர்வின் முடிவுகள் இணைய வழியில் முறையே 20-8-2019 மற்றும் 21-8-2019 அன்று வெளியிடப்பட்டன.

10.7. நிதி ஒதுக்கீடு

2020-2021 ஆம் நிதியாண்டில் ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு ரூ.4.84 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

11.1. முன்னுரை

மாணவர்களின் அறிவுத் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன், உயர் கல்வி தொடர்பாக பிற மொழிகளில் இருக்கும் நூல்களை தமிழாக்கம் செய்து வெளியிடும் நோக்கத்துடன், "தமிழ் வெளியீட்டுக் கழகம்" 1961 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 1970 ஆம் ஆண்டில் தமிழ் வெளியீட்டுக் கழகத்தை உள்ளடக்கிய தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் அமைக்கப்பட்டது. இக்கழகம் பாடநூல்களை அச்சிட்டு விநியோகம் செய்வது மட்டுமல்லாமல், இலக்கியம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் பிற மொழி பாடநூல்களையும் அச்சிட்டு விற்பனை மற்றும் விநியோகம் செய்வதையும் கருத்திற்கொண்டு 1993 ஆம் ஆண்டு "தமிழ்நாடு பாடநூல் கழகம்" என பெயரிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து விலையில்லா கல்வி உபகரணங்களை கொள்முதல் செய்யும் பணியும் இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டதால், 2013 ஆம் ஆண்டு "தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தற்பொழுது, இக்கழகம் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் விலையில்லா கல்வி உபகரணங்களை கொள்முதல் செய்து விநியோகம் செய்து வருகிறது.

11.2. நோக்கம்

➢ 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு செறிவூட்டப்பட்ட பாடநூல்களை அச்சிடுதல்.

➢ பொறியியல், மருத்துவம், வேளாண்மை, சட்டம், கால்நடை அறிவியல், சித்த மருத்துவம், மீன் வளம் மற்றும் உடற்கல்வி சார்ந்த உயர் கல்வி நூல்களை ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்து அச்சிட்டு வெளியிடுதல்.

➢ அரிய மற்றும் பழமை வாய்ந்த தமிழ் புத்தகங்களை மறு பதிப்பு செய்தல் மற்றும் தமிழ் இலக்கிய வளங்களை உருவாக்குதல்.

➢ அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா கல்வி உபகரணங்களை கொள்முதல் செய்து வழங்கும் முகமையாக செயல்படுதல்.

11.3. உட்கட்டமைப்பு

இக்கழகம் சென்னை, டி.பி.ஐ. வளாகத்தில் உள்ள பத்து மாடிகள் கொண்ட தனது சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. வட்டார அலுவலர்களை தலைமையாகக் கொண்டு 22 வட்டார கிடங்குகள் செயல்பட்டு வருகின்றன.

11.4. பாடநூல்கள் விநியோகம்

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா பாடநூல்கள், வட்டார/மாவட்ட கல்வி அலுவலகங்கள் மூலமாக நேரிடையாக வழங்கப்படுகின்றன. மற்ற தனியார் பள்ளிகளைப் பொறுத்தமட்டில், இணையதளம் வாயிலாக நேரிடையாகவோ அல்லது வட்டார அலுவலகங்கள் மூலமாகவோ புத்தகங்களை அவர்கள் விருப்பப்படி பெற்றுக்கொள்ளலாம். பாடநூல்களை டி.பி.ஐ. வளாகம் மற்றும் அண்ணா நூற்றாண்டு நூலகத்திலுள்ள விற்பனை மையங்கள்மூலம் விற்பனை செய்வது மட்டுமன்றி, மாணவர்கள் அவர்கள் வீட்டிலிருந்தே புத்தகங்களை பெறும் பொருட்டு உள்நுழைவு முறையை பயன்படுத்தி இணையதளம்மூலம் புத்தகங்களை அடையாறு கிடங்கிலிருந்து பெற வசதி செய்யப்பட்டுள்ளது. இணையதள வசதி இல்லாத தனிநபர்கள் வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களில் நிறுவப்பட்டிருக்கும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி

2020 மார்ச் 12]

நிறுவன மையத்தின்மூலம் இவ்வசதியை பயன்படுத்திக்கொள்ளலாம். இணையதள வசதிமூலம் பாடநூல்கள் விநியோகிக்கப்படுவது, பள்ளிகள் மற்றும் மாணவர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

11.5. அச்சுப் பணி

பாடநூல்கள் நேர்த்தியான 80 GSM *தாள்களைக் கொண்டும், அட்டைகள் லேமினேஷன் செய்யப்பட்ட 230* GSM *அரா ஃபோல்ட் ப்ளூ போர்டு கொண்டும் அச்சடிக்கப்படுகின்றன. மாணவர்கள், தொடர்புடைய பாடப் பொருள் உள்ளடக்கிய ஒலி-ஒளிக் காட்சிகள் மற்றும் இணையதள வினா வங்கி விவரங்களைக் காண்பதற்கு ஏதுவாக விரைவுத் துலங்கல் குறியீடு (*QR Code*) என்ற சிறப்பு அம்சத்துடன் செறிவூட்டப்பட்ட பாடநூல்கள் அச்சிடப்பட்டு வருகின்றன.*

2019-2020 ஆம் ஆண்டுக்கான பாடநூல்கள் மற்றும் பிற நூல்கள் அச்சிடுதல் மற்றும் விற்பனை செய்யப்பட்ட விவரங்கள் கீழ்க்கண்டவாறு அட்டவணையிடப்பட்டுள்ளன:—

அ) பாடநூல்கள்

பாடநூல்களின் விவரங்கள்	*அச்சடிக்கப்பட்ட பாடநூல்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்)*	*மொத்த மதிப்பு (ரூபாய் கோடியில்)*
அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கான பாடநூல்கள்	*568.00*	*294.00*
சுயநிதி பள்ளிகளில் 1 முதல் 12 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கான பாடநூல்கள்	*227.00*	*228.65*
மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் 1 முதல் 10 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கான தமிழ் பாடநூல்கள் (விற்பனை பிரதிகள்)	*9.55*	*9.62*

[*2020 மார்ச் 12*

ஆ) பிற நூல்கள்

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம், பெற்றோர் ஆசிரியர் கழகம், சென்னை பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட இயக்கம், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் போன்ற பிற துறைகளுக்கு ரூ.10.53 கோடி மதிப்பீட்டில் 48.26 இலட்சம் நூல்களை இக்கழகம் அச்சடித்துள்ளது. மேலும், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின்கீழ் 1 முதல் 8 வகுப்பு வரை பயிலும் பார்வைத்திறன் குறைபாடுடைய மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் பிரெய்லி புத்தகங்கள் கண் பார்வையற்றோருக்கான தேசிய நிறுவனம் (NIVH) மூலம் அச்சடிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

11.6. நூல்களை மொழிபெயர்த்தல் மற்றும் அச்சிடுதல்

மாணவர்கள் மேற்படிப்பைத் தொடரும் பொருட்டு, தேசிய அளவில் நடைபெறும் போட்டித் தேர்வுகள் மற்றும் நுழைவுத் தேர்வுகளில் பங்குபெற அவர்களுக்குப் பயன்படும் வகையில் முன்னணி வெளியீட்டாளர்களான பியர்சன் இந்தியா வெளியிட்டுள்ள 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான இயற்பியல், வேதியியல், மற்றும் உயிரியல் பாடங்களுக்கான வினா வங்கிகள் தமிழாக்கம் செய்து வெளியிடப்பட்டுள்ளன. முதுநிலை பட்டம் நிலையில் தேசிய வேளாண்மை மற்றும் ஆராய்ச்சிக் கழகம் நடத்தும் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் கால்நடை மருத்துவம் மற்றும் வேளாண்மை சார்ந்த 8 தலைப்புகளிலான நூல்கள் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன.

தமிழ் இலக்கிய நூல்களை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்ய ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டி பிரஸ், ஹார்பர் காலிங்ஸ் மற்றும் ஓரியண்ட் பிளாக் ஸ்வான் போன்ற முன்னணி வெளியீட்டாளர்களுடன் ஒருங்கிணைந்து 6 தலைப்புகளை இனங்கண்டறிந்து வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

2020 மார்ச் 12]

11.7. வெளியீடுகள்

அரிய வகை நூல்கள் வகையில் "கீழடி—வைகை நதிக்கரையில் சங்ககால நாகரிகம்" என்னும் தலைப்பிலான நூல் தொல்லியல் துறையுடன் இணைந்து 2019—ல் வெளியிடப்பட்டுள்ளது. தமிழில் 47,500 பிரதிகளும், ஆங்கிலத்தில் 7,500 பிரதிகளும் அச்சிடப்பட்டன.

11.8. அரிய மற்றும் பழமைவாய்ந்த உயர் கல்வி நூல்களை எண்மயமாக்குதல்

பழமையான 1,000 உயர் கல்வி நூல்களில், இதுவரை 875 அரிய வகை நூல்கள் தமிழ் இணைய பல்கலைக்கழகம்மூலம் எண்மயமாக்கம் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 635 நூல்கள் தலா 100 படிகள் அச்சிடப்பட்டுள்ளன. இவற்றில் 2019—2020 ஆம் கல்வியாண்டில், ரூ.3.21 இலட்சம் மதிப்புள்ள 2,512 பிரதிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 582 நூல்கள் அண்ணா நூற்றாண்டு நூலகம், கன்னிமாரா நூலகம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி நிறுவனம் ஆகியவற்றிற்கு மாணவர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளன. இப்புத்தகங்கள் குறித்த விழிப்புணர்வை வாசகர்களுக்கிடையே ஏற்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு வருடமும் சென்னை புத்தகக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப் படுகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

11.9. கொள்முதல் பணிகள்

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களை தக்கவைத்துக் கொள்வது மற்றும் இடைநிற்றலைத் தவிர்ப்பது மற்றும் அவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவது ஆகியவையே அரசின் முக்கியக் குறிக்கோள்களாகும். எனவே, உரிய கொள்முதல் நடைமுறைகளைப் பின்பற்றி 2019—2020 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட விலையில்லா கல்வி உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டன:

[2020 மார்ச் 12

வ. எண்	விலையில்லா பொருட்கள்	கொள்முதல் செய்த அளவு
1.	கிரையான்ஸ்	8,93,599
2.	வண்ணப் பென்சில்கள்	14,91,658
3.	கணித உபகரணப் பெட்டி	11,33,989
4.	புத்தகப் பை	71,87,298
5.	கம்பளிச் சட்டை	1,16,400
6.	காலுறை	2,32,800
7.	மழைக்கால ஆடை	1,16,400
8.	காலணி	59,92,713
9.	உறை காலணி	1,16,400
10.	நிலவரைபட புத்தகம்	7,98,453

11.10. திட்டங்களுக்கான நிதி வழங்கல்

இக்கழகம் 2019-2020 ஆம் கல்வியாண்டில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு புதிய பாடத்திட்டத்தின்படி பாடப் புத்தகங்கள் தயாரிக்கும் பணிக்காக ரூ.5.65 கோடி வழங்கியுள்ளது.

நூல்களை அச்சிட்டு வழங்கல் பணிக்காக மட்டும் தோற்றுவிக்கப்பட்ட இக்கழகம், பன்மடங்கு உயர்ந்து, தற்பொழுது இணையதளம்மூலம் நூல்களை விற்பனை செய்தல், அரிய மற்றும் பழமைவாய்ந்த நூல்களை வெளியிடுதல், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நூல்களை ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்தல், நூல்களை எண்மயமாக்குதல், விலையில்லா கல்வி உபகரணங்களை கொள்முதல் செய்தல் போன்ற பணிகளையும் பாராட்டும் வகையில் செய்து வருகிறது.

12. நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை எண் 43, பள்ளிக் கல்வி என்ற தலைப்பில் 2020-2021 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.34,181.73 கோடியாகும்.

2020 மார்ச் 12]

2020-2021 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

(ரூபாய் இலட்சத்தில்)

	கணக்கு தலைப்பு		மாநில செலவினங்கள்	மத்திய அரசு திட்டங்கள்	மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள்	மொத்தம்
வருவாய் பகுதி						
2051	அரசுப் பணியாளர் தேர்வாணையம்		484.48			484.48
2059	பொதுப் பணிகள்		3944.10			3944.10
2202	பொதுக் கல்வி					
	1	தொடக்கக் கல்வி	1452505.75	0	237432.21	1689937.96
	2	இடைநிலைக் கல்வி	1572938.04	0	93292.49	1666230.53
	4	வயது வந்தோர் கல்வி	518.04	0	0	518.04
	5	மொழி வளர்ச்சி	1783.59	0.01	2.51	1786.11
	மொத்தம் — பொதுக் கல்வி		**3027745.42**	**0.01**	**330727.21**	**3358472.64**
2204	விளையாட்டு, இளைஞர் நலப் பணிகள்		172.91	0	58.56	231.47
2205	கலையும் பண்பாடும்		14198.69	0	0	14198.69
2225	ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன்		17084.74			17084.74
2235	சமூகப் பாதுகாப்பும், நலனும்		90.00			90.00
2251	தலைமைச் செயலகம் — சமூகப் பணிகள்		1080.31			1080.31

நிகர மொத்த வருவாய்ப் பகுதி		***3064800.65***	***0.01***	***330785.77***	***3395586.43***
மூலதன செலவு பகுதி					
4202	மூலதன செலவு	*21937.99*	*0*	*530.01*	*22468.00*
மொத்த மூலதன பகுதி					***22468.00***
கடன் பகுதி					
7610	அரசு பணியாளர்களுக்கான கடன்கள்	*29.50*			*29.50*
7615	பல்வகை கடன்கள்				
மொத்த கடன் பகுதி					***29.50***
நிகர மொத்தம்		***3086768.14***	***0.01***	***331315.78***	***3418083.93***
கூட்டுக — திருப்பி வசூலிப்பவை (வருவாய் இனத்தின்கீழ்)					*89.10*
	மானியக் கோரிக்கை எண் 43-ன் நிகர மொத்தம்				***3418173.03***

தமிழக அரசு மாநிலத்தில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் தரமான கல்வியை அளிக்கும் பொருட்டு கல்வியில் பல்வேறு விதமான மாற்றங்கள், மிகச் சிறந்த கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள், புதுமையான திட்டங்கள், கணினி சார்ந்த எண்மயமாக்கல் உள்ளிட்ட புது முயற்சிகளைச் செயல்படுத்தி வருகிறது. இதன்மூலம் தமிழ்நாட்டை உலகின் அறிவுசார் கருவூலமாக மாற்ற வேண்டும் என்ற மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மாபெரும் தொலைநோக்கினை அடையும் முயற்சியில் அயராது பாடுபட்டு வருகிறது.

———

2020 மார்ச் 12]

இணைப்பு-II

(571 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 49-இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

முன்னுரை

“முயற்சியின் மதிப்பை வெளிப்படுத்துவதோடு, வெற்றியையும், தோல்வியையும் எதிர்கொள்வது எப்படி என்பதையும் விளையாட்டுத் திறன் போட்டிகள் கற்றுத் தருகின்றன”.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

விளையாட்டு மற்றும் உடற்செயல்பாடுகள், அனைத்து வயது மக்களின் வாழ்வில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்த வல்லது. முதலாவதாக, இவை உடல்நலனை நன்கு மேம்படுத்துவதுடன் ஒரு வேலையைச் செய்வதற்கான ஆற்றலையும் அதிகரிக்கிறது. இரண்டாவதாக, அவை மூளைச் செயல்பாடுகளை மேம்படுத்தி ஆரோக்கியமான மனநிலைக்கு இட்டுச் செல்லும். மேலும், அவை ஒரு தனி நபரின் குணநலன்களையும், ஆளுமையையும் கட்டமைக்கின்றன.

உடற்தகுதி

உடற்தகுதி என்பது வெளிப்புற தோற்றத்தைப் பற்றியது மட்டுமல்லாமல், அது நமது அன்றாட வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் உடலளவிலும், மனதளவிலும் மற்றும் உணர்ச்சிபூர்வமாகவும் தகுதியுடன் இருப்பதை குறிப்பதாகும். இது, ஒரு நபர் அமைதியான மற்றும் இணக்கமான வாழ்க்கையை நடத்துவதற்கு பெற வேண்டிய செல்வமாகும். விளையாட்டில் பங்கேற்பது, மக்களின் உடற்தகுதி அளவை மேம்படுத்துகிறது. அனைத்து வகையான விளையாட்டுகள் மற்றும் உடற்செயல்பாடுகள், ஒரு தனிநபர் ஆரோக்கியத்துடனும் உடற்தகுதியுடனும் இருக்க உதவும்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

உடற்கல்வி

உடற்கல்வி என்பது, விளையாட்டு மற்றும் உடற்செயல்பாடுகள் மூலமாக ஒரு தனிநபர் ஆரோக்கியமான மற்றும் வெற்றிகரமான வாழ்க்கையை நடத்துவதற்கான கல்வி ஆகும். உடற்கல்வி ஆரோக்கியமான உடலை பேணுவதன் முக்கியத்துவத்தை குழந்தைகளுக்கு கற்பித்து, அவர்கள் தங்களை மகிழ்ச்சியாகவும் ஆற்றலுடனும் வைத்துக்கொள்ளக் கூடிய தினசரி நடவடிக்கைகளில் உடற்செயல்பாடுகளின் முக்கியத்துவத்தையும் போதிக்கிறது. உடற்கல்வியானது தனிநபர் போட்டிகளில் பங்கேற்பதற்கான விருப்பத்தை உருவாக்கி, வெற்றியைக் கொண்டாடவும் தோல்வியை நேர்மறையாக எடுத்துக்கொள்ளவும் செய்து ஒட்டுமொத்த ஆளுமையை மேம்படுத்துகிறது.

இளைஞர் நலன்

ஒரு சமூகத்தின் அதிக ஆற்றல் மிக்க மற்றும் படைப்பாற்றல் கொண்ட பிரிவாக இளைஞர்கள் உள்ளனர். தேச கட்டமைப்பில் அவர்கள் முக்கிய பங்காற்றுகின்றனர். மாற்றம், முன்னேற்றம் மற்றும் புதுமைக்கான பொறுப்பு இளைஞர்களின்மீது உள்ளது. எனவே, சமூக மற்றும் தேச கட்டமைப்பிற்கான மேம்பாட்டுச் செயல்பாடுகளில் இளைஞர்களை ஈடுபடுத்துவது இன்றியமையாததாகும்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையானது கீழ்க்காணும் அமைப்புகளை உள்ளடக்கியது:—

1. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

2. தேசிய மாணவர் படை

3. நாட்டு நலப்பணித் திட்டம்

4. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம்

2020 மார்ச் 12]

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், மாநிலத்தில் விளையாட்டு மேம்பாட்டிற்கான முக்கிய நிறுவனமாகவும், விளையாட்டு தொடர்பான அரசின் வெவ்வேறு திட்டங்கள் மற்றும் கொள்கைகளைச் செயல்படுத்தும் அமைப்பாகவும் விளங்குகிறது.

தேசிய மாணவர் படையானது இளைஞர்களிடையே நன்னடத்தை, நல்லொழுக்கம் மற்றும் தன்னலமற்ற சேவை மனப்பாங்கு ஆகியவற்றை மேம்படுத்தும் இலக்கினைக் கொண்டது. இவ்வமைப்பு நன்கு திட்டமிடப்பட்ட, மனிதவளம், திறன் மற்றும் அதிக ஊக்கமுடைய இளைஞர்களை சமுதாய சேவைக்காகவும் பாடுபட ஊக்கப்படுத்துகிறது.

நாட்டு நலப்பணித் திட்டம், சமூக சேவை மற்றும் சமூகத்தின் மீதான பொறுப்புணர்வுக்கான எண்ணத்தைக் கற்பிக்கிறது.

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம், இந்தியாவிலேயே ஒரு முன்னோடியான மற்றும் முதலாவது பல்கலைக்கழகமாகும். விளையாட்டு மற்றும் உடற்கல்வியில் ஆராய்ச்சி மற்றும் விளையாட்டில் உயர் செயல்திறனுக்கான தொழில்நுட்பத்தின் பலன்களைக் கொண்டு வருவதிலும் இது முக்கியப் பங்காற்றுகிறது.

நேரு யுவகேந்திரா சங்கதன், மத்திய அரசின்கீழ் உள்ள ஓர் இளைஞர் அமைப்பாகும். இது சமூக மேம்பாட்டிற்கு தன்னார்வ இளைஞர்களை ஒருங்கிணைக்கிறது.

தமிழ்நாடு அரசு விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் மேம்பாட்டிற்கு நிலையான ஆதரவு மற்றும் அதிக முக்கியத்துவத்தை அளித்துவருகிறது. இந்த நிலையான ஊக்கத்தின் விளைவாக, நாட்டிலேயே தமிழ்நாடு விளையாட்டில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. டிசம்பர் 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற தெற்காசிய போட்டிகளில் விளையாட்டு வீரர்களின் சிறந்த சாதனை இதற்கு சான்றாக விளங்குகிறது. இந்த விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 36 விளையாட்டு வீரர்/ வீராங்கனைகள் 13 விளையாட்டுப் பிரிவுகளில் பதக்கங்கள் வென்றுள்ளனர்.

[2020 மார்ச் 12

படலம் 1

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

இளைஞர்களின் ஆற்றலையும், உற்சாகத்தையும், ஆர்வத்தையும் ஒருமுகப்படுத்தி விளையாட்டில் அவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் சாதனைப் படைக்க ஏதுவாக தமிழ்நாடு அரசால் 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் உருவாக்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆணையத்தின் தலைவராவார். தமிழகத்தில் விளையாட்டிற்கான தலைமை அமைப்பாக விளங்கும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாடு அரசின் விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் குறித்த கொள்கை முடிவுகளை தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தி வருகிறது. ஆணையத்தின் முக்கிய நோக்கங்களாவன:—

1. மாநிலத்தில் விளையாட்டை ஊக்குவித்து மேம்படுத்துதல், விளையாட்டின் நிலையை உயர்த்துவதற்காக திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்துதல் மற்றும் விளையாட்டு மற்றும் போட்டி விளையாட்டுகளின் தரத்தை உயர்த்துதல்.

2. விளையாட்டுக்கள் மற்றும் போட்டிகளை மேம்படுத்த திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

3. தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிகரமாக பங்கேற்கச் செய்ய ஏதுவாக, திறமைமிக்க விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து, ஒருமுகப்படுத்தி பயிற்சியளித்தல் மற்றும் அவர்களுக்கு நிதியுதவி அளித்தல்.

4. தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் மென்மேலும் உயர்ந்த அளவில் சாதனைகள் புரிய, பல்வேறு ஊக்கத்தொகைகள் மற்றும் விருதுகளை அளித்து ஊக்குவித்தல்.

2020 மார்ச் 12]

5. மாநிலத்தில் பல்வேறு நிலைகளில் விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகளை திட்டமிட்டு மேம்படுத்துதல்.

6. விளையாட்டு மேம்பாடு தொடர்பான ஆராய்ச்சிகளைத் துவக்கி மேற்கொள்ளுதல், ஆதரவளித்தல், ஊக்குவித்து உற்சாகமளித்தல் மற்றும் விளையாட்டு தொடர்பான மருத்துவம், உளவியல், இயன்முறை மருத்துவம் மற்றும் அதைச் சார்ந்த இதர அறிவியல் துறைகளை மேம்படுத்துதல்.

7. மாற்றுத் திறனாளிகளின் சிறப்புத் தேவைகளை அங்கீகரித்தல் மற்றும் அவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க வசதி ஏற்படுத்தித் தருதல்.

8. விளையாட்டு நிறுவனங்கள்/உயர் செயல்திறன் அகாடமிகளை நிறுவுதல், நடத்துதல், மேற்பார்வை மற்றும் நிருவகித்தல் .


9. பல்வேறு விளையாட்டுகளுக்கு மேம்பட்ட பயிற்சி அளிக்க ஆதரவளித்தல்.

10. மக்களிடையே உடற்தகுதி, விளையாட்டில் ஆர்வம் மற்றும் ஆரோக்கிய வாழ்வு குறித்த உள்ளுணர்வை ஏற்படுத்தி, ஆரோக்கியமான மற்றும் வலிமையான மாநிலத்தை உருவாக்குதல்.

1.1 விளையாட்டில் சிறப்பு நிலையை அடைவதற்கான உத்திகள்

முதன்மை நிலையை அடைவதற்கான தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நீண்ட கால உத்தி ஐந்து வெவ்வேறு நிலைகளைக் கொண்ட பிரமிடு போன்ற அமைப்பைக் கொண்டதாகும். பிரமிடின் அடித்தளப் பகுதி நிலை 1 ஆகவும், உச்சப் பகுதி நிலை 5 ஆகவும் கருதப்படும். விளையாட்டில் திரள் பங்கேற்பு முதல் சாதனை எய்தல் வரையிலான 5 நிலைகளைக் கொண்ட வரைபடம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது:

[2020 மார்ச் 12



நிலை 1: திரள் பங்கேற்பு மற்றும் பரவலாக்குதல்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டத்தின்கீழ் 6, 7 மற்றும் 8—ம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியருக்கு உடற்திறன் தேர்வுகள் நடத்தப்பட்டு, கண்டறியப்படும் இளந்திறனாளர்கள் பிரமிடின் அடுத்த நிலைக்குச் செல்வதற்கு தயார்படுத்தப்படுகிறார்கள்.

12,524 கிராம ஊராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படும் அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டத்தின்கீழ் விளையாட்டுகளில் திரள் பங்கேற்பு பெருமளவில் ஊக்குவிக்கப்படுகிறது. மேலும், கிராம விளையாட்டுகளை நடத்துவதும், திரள் பங்கேற்பை உறுதி செய்கிறது.

2020 மார்ச் 12]

நிலை 2: மாவட்ட அளவு

மாவட்ட தலைநகரங்களில் பல்வேறு விளையாட்டுகளுக்கான ஆடுகள வசதிகளை உள்ளடக்கிய மாவட்ட விளையாட்டு வளாகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 27 மாவட்டங்களில் நீச்சல் குள வசதி மற்றும் 22 மாவட்டங்களில் உள்விளையாட்டரங்க வசதி உள்ளது. இந்த விளையாட்டு வசதிகளில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், மாவட்ட விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் பள்ளிக் கல்வித் துறையால் மாவட்ட அளவில் பல்வேறு வயது பிரிவினருக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நிலை 3: மாநில அளவு

உலகத் தரத்திலான விளையாட்டு வசதிகள் மாநிலத்தின் சில பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டு, மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பயிற்சி முகாம்கள் பல்வேறு தரப்பினரால் நடத்தப்பட்டு வருகின்றன.

நிலை 4 மற்றும் நிலை 5: தேசிய/பன்னாட்டு அளவு

மாநிலத்தில் தடகளம், ஹாக்கி, டென்னிஸ் மற்றும் நீச்சல் ஆகிய விளையாட்டுகளுக்கு உலகத் தரத்திலான ஆடுகள வசதிகளை அரசு ஏற்படுத்தியுள்ளது. சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயற்கை இழை தடகள ஓடுபாதையும், சென்னை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் மற்றும் கோவில்பட்டி ஆகிய இடங்களில் செயற்கை புல் ஹாக்கி ஆடுகளம் மற்றும் மாநிலத்தில் 15 இடங்களில் செயற்கை இழை டென்னிஸ் ஆடுகள வசதிகளும் உள்ளன. இது தவிர, மாவட்ட விளையாட்டு வளாகத்தில் உள்ள விளையாட்டு வசதிகள் படிப்படியாக உலகத் தரத்திற்கு உயர்த்தப்பட்டு வருகின்றன.

தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான போட்டிகளை நடத்துவதற்கு மாநில விளையாட்டுச் சங்கங்களுக்கு அரசு நிதியுதவி வழங்கி வருகிறது.

தமிழகத்தைச் சேர்ந்த தேசிய/பன்னாட்டு அளவிலான விளையாட்டு வீரர்களுக்கு அவர்கள் மென்மேலும் பன்னாட்டு

அளவில் சாதனை படைக்க ஏதுவாக தேவை அடிப்படையிலான நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வெல்லும் தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்/வீராங்கனைகளை ஊக்குவிக்கும் விதமாகவும், அவர்களது சாதனைகளை அங்கீகரிக்கும் வகையிலும் உயரிய ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

படலம் - 2

திறன் கண்டறிதல்

வெற்றியாளர்களை உருவாக்குவதற்கு திறன் கண்டறிதல் மிகவும் இன்றியமையாதது ஆகும். இதனை அடைவதற்கு கீழ்க்கண்ட நான்கு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டம்
2. விளையாட்டு விடுதிகளில் சேர்வதற்கான தேர்வு
3. சிறப்பு விளையாட்டு விடுதிகளில் சேர்வதற்கான தேர்வு
4. முதன்மை நிலை விளையாட்டு மையங்களில் சேர்வதற்கான தேர்வு

2.1 உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டம்

2.1.1. உடற்திறன் தேர்வுகள்

இளம் வயதிலேயே சிறந்த விளையாட்டு திறனாளர்களைக் கண்டறிவதற்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், உலக திறனாளர்களைக் கண்டறியும் திட்டத்தின்கீழ், தமிழகத்தில் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு தேர்வுகள் நடத்துகிறது. குறிப்பிட்ட விளையாட்டில் மாணவர்களது திறமையைக் கண்டறிந்து மேம்படுத்துவதற்கு ஏதுவாக உடற்திறன் தேர்வுகளின் முடிவுகள் அடங்கிய மதிப்பீட்டு அட்டை வழங்கப்படுகிறது.

2020 மார்ச் 12]

இதன் அடிப்படையில் கீழ்க்காணும் கூறுகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன:—

1. திறன் கண்டறிதல்

2. திறன் மேம்பாடு

3. போட்டிகளில் பங்கேற்றல்

2.1.2 திறனாளர்களைக் கண்டறிதல்

திறன்மிக்க மாணவர்களைக் கண்டறிவதற்காக உடற்திறன் தேர்வுப் போட்டிகள் முதற்கட்டமாக பள்ளி அளவில் நடத்தப்படுகின்றன. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் ஆதரவோடு திறனாளர்களைக் கண்டறியும் பணி பள்ளிக் கல்வித் துறையால் மேற்கொள்ளப்படுகிறது. பள்ளி நிர்வாகிகள் இந்தப் போட்டிகளை நடத்தி, அதன் முடிவுகளை சம்பந்தப்பட்ட மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர்களுக்கு அனுப்புகின்றனர். கீழ்க்காணும் உடற்திறன் போட்டிகள் இயக்கத் திறன்களைக் கண்டறிவதற்கு உதவுகின்றன:—

1. 50மீ ஓட்டம்

2. சிறுமியர்களுக்கான 600மீ ஓட்டம்

3. சிறுவர்களுக்கான 800 மீ ஓட்டம்

4. 4 கிலோ குண்டு எறிதல்

5. நீளம் தாண்டுதல்

6. 6X10 மீ ஓடித் திரும்புதல்

அடுத்த கட்டமாக, பள்ளிகளில் நடத்தப்படும் உடற்திறன் போட்டிகளில் 10 மதிப்பெண்களுக்கு 10, 9 அல்லது 8 மதிப்பெண்கள் பெறும் சிறுவர், சிறுமியர்களுக்கு கல்வி மாவட்ட அளவில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. மண்டல அளவிலான போட்டிகள் 9 இடங்களில் நடத்தப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல்—மே மாதங்களில், முதல் 10 வெற்றியாளர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சிறப்பு அகாடமிகளில்

சேர்த்துக் கொள்வதற்கான தேர்வுப் போட்டிகளில் கலந்துகொள்ள தேர்வு செய்யப்படுகிறார்கள். தேர்ந்தெடுக்கப்படும் மாணாக்கர்கள் முதன்மை நிலையை அடைவதற்காக அவர்களுக்கு சிறப்பு மற்றும் தொடர் பயிற்சி வழங்கப்படுகிறது.

2.1.3 இளம் திறனாளர்களுக்கான உதவித் தொகை திட்டம்

ஒவ்வொரு வருடமும் 3,240 இளம் திறனாளர்களுக்கு சிறப்பு உதவித் தொகையாக நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.500/- வீதம் வருடத்திற்கு ரூ.6,000/- வழங்கப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டிற்கு ரூ.194.40 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

2.2 கல்வி மாவட்டம், மண்டல மற்றும் மாநில அளவில் திறனாளர்களைக் கண்டறிதல்

தமிழ்நாட்டில் உள்ள கல்வி மாவட்டங்களில் தடகளப் போட்டிகளை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் நடத்துகின்றது. ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்கள் அருகே உள்ள கல்வி மாவட்டங்கள் உள்ளடக்கிய மண்டல அளவிலான போட்டிகளில் கலந்து கொள்கின்றனர்.

ஒவ்வொரு மண்டல அளவிலான போட்டிகளிலும் உயர் திறனாளர்கள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு 15 நாட்களுக்கு இருப்பிட வசதியுடன் கூடிய தீவிர பயிற்சி முகாம் நடத்தப்படுகின்றது. மாநில அளவில் தகுதி தேர்வுகளுக்காக இம்முகாம்களில் உள்ள மாணவ மாணவியர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்த பயிற்சி முகாம்களில் கண்டறியப்படும் சிறந்த திறனாளர்கள், தொடர் பயிற்சி பெறுவதற்காக சிறப்பு அகாடமிகள் மற்றும் விளையாட்டு விடுதிகளில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். 2019-2020 ஆம் ஆண்டு 14,003 பள்ளிகளில் உடற்திறன் தேர்வு போட்டிகள் நடத்தப்பட்டன. 9 மண்டல அளவிலான போட்டிகளில் பங்கேற்பதற்காக 3,604 மாணவர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

2.3 விளையாட்டு விடுதிகளில் சேர்வதற்கான தேர்வு

விளையாட்டு விடுதிகள் விளையாட்டுத் திறனை ஒட்டுமொத்தமாக மேம்படுத்துவதற்காக சிறப்புப் பயிற்சித்

2020 மார்ச் 12]

திட்டத்தினை வடிவமைப்பதன் அவசியத்தை உணர்த்துகிறது. இப்பயிற்சித் திட்டம் திறனை வளர்ப்பதற்குத் தேவையான முக்கிய பகுதிகளில் கவனம் செலுத்தி வருகிறது.

விளையாட்டு விடுதிகளில் 7, 8, 9 மற்றும் 11-வது வகுப்புகளில் பயிலும் மாணவ/மாணவிகள் மாவட்ட மற்றும் மாநில அளவிலான தேர்வுகளின்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். தற்போது மாநிலத்தில் 27 விளையாட்டு விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த விளையாட்டு விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 2,060 ஆகும்.

2.4 சிறப்பு நிலை விளையாட்டு விடுதிகளில் சேர்வதற்கான தேர்வு

தேசிய மற்றும் பன்னாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெறும் திறனுடைய கல்லூரிகளில் பயிலும் மாணவ/மாணவிகளிலிருந்து, பல்வேறு பிரிவுகளில் விளையாட்டு வீரர்களை சிறப்பு விளையாட்டு விடுதியில் சேர்ப்பதற்கான தகுதித் தேர்வுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. மாணவர்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதி சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் மற்றும் கோவில்பட்டியிலும், மாணவியர்களுக்கான விடுதி நேரு உள் விளையாட்டரங்கத்திலும் செயல்பட்டு வருகின்றன. இந்த விடுதிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு ஊட்டச்சத்து உணவு, விளையாட்டுச் சீருடை, விளையாட்டு உபகரணங்கள், தகுதிவாய்ந்த பயிற்றுநர்கள்மூலம் நவீன விளையாட்டுப் பயிற்சி மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்வதற்கு நிதி உதவி ஆகியவை வழங்கப்படுகின்றன.

2.5 முதன்மை நிலை விளையாட்டு மையங்களில் சேர்வதற்கான தேர்வு

நிபுணர் குழுவினால் மாநில அளவில் நடத்தப்படும் திறன் கண்டறியும் தேர்வுப் போட்டிகள்மூலம் 10 முதல் 14 வயதிற்குட்பட்ட மிகச் சிறந்த திறன்வாய்ந்த 75 சிறுவர்கள் மற்றும் 50 சிறுமியர்கள்

[2020 மார்ச் 12

கண்டறியப்பட்டு சென்னை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் அமைந்துள்ள முதன்மை நிலை விளையாட்டு மையங்களில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

திறமைமிக்க பயிற்றுநர்களைக் கொண்டு பயிற்சி அளிப்பது மட்டுமல்லாது, சிறுவர், சிறுமியர்களுக்கு பள்ளிக் கல்விக் கட்டணம், உணவு, தங்குமிடம், விளையாட்டுச் சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்படுகின்றன.

படலம் - 3

திறன் மேம்பாடு

திறன் மதிப்பீடு மற்றும் திறன் மேம்பாடு திறன் வளர்ச்சியின் பகுதியாகும். பல்வேறு திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மூலமாக திறன் மதிப்பீட்டிற்கான கூறானது மேம்படுத்தப்படுகிறது. இவை பல்வேறு பிரிவுகளாகச் செயல்படுத்தப்படுகின்றன. இந்தத் திட்டங்கள் விளையாட்டு வீரர்களின் திறன்களை மேம்படுத்த தத்ரூபமான வாய்ப்புகளை வழங்குகிறது. அவை முதன்மை நிலை விளையாட்டு மையங்கள், சிறப்பு அகாடமிகள், விளையாட்டு விடுதிகள், முதன்மை நிலை விளையாட்டு விடுதிகள், கல்லூரிகளில் இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்கள், திறன் மேம்பாட்டு மையங்கள், சிறப்பு மேம்பாட்டு மையங்கள் மற்றும் பயிற்சி மையங்கள் ஆகும்.

3.1 முதன்மை நிலை விளையாட்டு மையங்கள்

10 முதல் 14 வயதிற்குட்பட்ட திறமை வாய்ந்த 75 சிறுவர்கள் மற்றும் 50 சிறுமியர்கள் கண்டறியப்பட்டு சென்னை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் முதன்மை நிலை விளையாட்டு மையங்களில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இந்த விடுதிகளில் அவர்களுடைய திறமையை மேம்படுத்துவதற்காக, அவர்களுக்கு முறையான மற்றும் அறிவியல்பூர்வமான பயிற்சி மற்றும் சத்தான உணவும் வழங்கப்படுகின்றன. பயிற்சி பெறுபவர்கள் சிறந்த பள்ளிகளில் சேர்ந்து பயில்வதற்கும், அவர்களது திறமைகளை வளர்ப்பதற்கும் தேவையான அனைத்து வசதிகளும் வழங்கப்படுகின்றன.

2020 மார்ச் 12]

வ. எண்	முதன்மை நிலை விளையாட்டு மையம் அமைந்துள்ள இடம்	விளையாட்டுப் பிரிவு	ஒதுக்கப்பட்ட எண்ணிக்கை
1.	ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை (சிறுவர்)	தடகளம்	*25*
		இறகுப்பந்து	
2.	நேருஉள் விளையாட்டரங்கம், சென்னை (சிறுமியர்)	தடகளம்	*25*
		இறகுப்பந்து	
3.	திருச்சிராப்பள்ளி (சிறுவர்)	இறகுப்பந்து	*25*
		டேக்வாண்டோ	
4.	திருநெல்வேலி (சிறுவர்)	குத்துச்சண்டை	*25*
		நீச்சல்	
		டென்னிஸ்	
		ஜிம்னாஸ்டிக்ஸ்	
5.	ஈரோடு (சிறுமியர்)	நீச்சல்	*25*
		ஜிம்னாஸ்டிக்ஸ்	
		மேசைப்பந்து	
	மொத்தம்		*125*

3.2 சிறப்பு விளையாட்டு அகாடமிகள்

தமிழகத்தில் பல்வேறு இடங்களில் அரசு சிறப்பு அகாடமிகளை ஏற்படுத்தி உள்ளது. உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டத்தின்கீழ் நடத்தப்படும் உடற்திறன் தேர்வுகளில் 10-க்கு 10, 9 மற்றும் 8 மதிப்பெண்கள் பெறும் மாணவர்கள் அழைக்கப்பட்டு, வல்லுநர்களால் நடத்தப்படும் தகுதித் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களின் திறன் மற்றும் தகுதி அடிப்படையில் இச்சிறப்பு அகாடமிகளில் சேர்க்கப்படுகின்றனர். அவர்களுக்கு அந்தந்தப் பிரிவுகளில் சர்வதேச விளையாட்டு வீரர்களாலும், அனுபவம் வாய்ந்த பயிற்சியாளர்களாலும் விஞ்ஞான ரீதியாக பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்தச் சிறப்பு அகாடமிகளில் பயிற்சி

முகாம்கள் நடத்திட அரசு ஒவ்வோர் ஆண்டும் ரூ.80.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து வருகிறது.

கீழ்க்காணும் சிறப்பு அகாடமிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

வ. எண்.	அகாடமியின் பெயர்	இடம்
1	குறுந்தூர ஓட்டம் மற்றும் குதித்தல் அகாடமி	மதுரை
2	டைவிங் அகாடமி, நீச்சல் குள வளாகம்	சென்னை
3	வளைகோல்பந்து அகாடமி— சிறுவர், சிறுமியர்	சென்னை
4	கால்பந்து அகாடமி— சிறுவர்	நாகப்பட்டினம்
5	எறிதல் அகாடமி	திருச்சிராப்பள்ளி
6	மிததூரம் அகாடமி	திருவண்ணாமலை
7	நெடுந்தூரம் அகாடமி	திருவண்ணாமலை
8	கால்பந்து அகாடமி—சிறுமியர்	திண்டுக்கல்

பிறரால் நடத்தப்படும் அகாடமிகள்:

வ. எண்	அகாடமியின் பெயர்	இடம்
1	சந்திரா மேசைப்பந்து அகாடமி	சென்னை
2	ஏகேஜி மேசைப்பந்து அகாடமி	சென்னை
3	டால்பின் நீச்சல் அகாடமி	சென்னை
4	தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் அகாடமி	சென்னை
5	மேசைப் பந்து அகாடமி	மதுரை

இந்த அகாடமிகள் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு பயிற்சி அளிக்கின்றன. சிறப்பு அகாடமிகள் நிறுவப்பட்ட பின்னர் அதிக அளவிலான திறன்வாய்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் கலந்துகொண்டு நமது மாநிலத்திற்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

2020 மார்ச் 12]

3.2.1 இறகுப்பந்து அகாடமிகள்

மாணவர்களுக்கு இறகுப்பந்து விளையாட்டின் அடிப்படை நிலை, இடைநிலை மற்றும் மேம்பட்ட நிலைகளை அறிமுகப்படுத்துவதற்காக இறகுப்பந்து அகாடமி ஏற்படுத்தப்பட்டது. 16 வயதிற்குட்பட்ட 15 திறன்மிக்க விளையாட்டு வீரர், வீராங்கனைகள் நிபுணர்கள்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு 25 நாட்களுக்கு அறிவியல்பூர்வமான பயிற்சி, சிற்றுண்டி மற்றும் பயணப்படி வழங்கப்படுகிறது.

பயிற்றுநர்கள், மாணவர்களின் தற்போதைய நிலை, அவர்களது திறன் மற்றும் அவர்களது இலக்கு ஆகியவற்றை மதிப்பிடுகின்றனர். தமிழ்நாடு அரசு திருச்சிராப்பள்ளி, கடலூர், தருமபுரி, மதுரை மற்றும் சென்னை—வேளச்சேரியில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நீச்சல் குள வளாகம் ஆகிய இடங்களில் இருப்பிடமில்லா இறகுப்பந்து அகாடமியினை அமைத்துள்ளது. வல்லுநர்களைக் கொண்ட குழுவானது இறகுப்பந்து அகாடமியில் பயிற்சி பெறும் விளையாட்டு வீரர்களின் திறனைக் கண்காணித்து, மதிப்பிட்டு, அவர்கள் இறகுப்பந்து விளையாட்டில் சிறந்து விளங்க உதவுகிறது. இந்த அகாடமிகளைப் பராமரிப்பதற்காக அரசு, ஆண்டு தோறும் ரூ.70.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்கிறது.

3.2.2 விளையாட்டு விடுதிகள்

2011-2012 ஆம் ஆண்டு அனைத்து மாவட்டங்களிலும் விளையாட்டு விடுதிகள் ஏற்படுத்த வேண்டும் என அரசு முடிவு செய்தது. அதன்படி 16 விளையாட்டு விடுதிகள் மூன்று கட்டங்களாக அமைக்கப்பட்டன. தற்போது 27 விளையாட்டு விடுதிகள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட மாணவ மாணவியரின் எண்ணிக்கை 2,060 ஆகும். விளையாட்டு விடுதிகளில் 7, 8, 9 மற்றும் 11 ஆம் வகுப்பு மாணவ மாணவியர் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இவர்கள் மாவட்ட அளவிலான தேர்வுப் போட்டிகள் மற்றும் மாநில அளவிலான தேர்வுப் போட்டிகள் என இரு நிலைகளில் கண்டறியப்பட்டு தேர்வு செய்யப்படுகின்றனர். அறிவியல்பூர்வமான பயிற்சி மட்டுமல்லாது, 320 நாட்களுக்கு உணவுப் படியாக நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.250/-, சீருடைக்காக நபர் ஒருவருக்கு வருடம்

[2020 மார்ச் 12

ஒன்றிற்கு ரூ.1,800/- மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்காக ரூ.400/- ஆகியன விடுதிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு வழங்கப்படுகின்றன.

விளையாட்டு விடுதிகளின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	விளையாட்டு விடுதியின் பெயர்	பயிற்றுவிக்கும் விளையாட்டுப் பிரிவு
1.	என்.எல்.சி விளையாட்டு விடுதி (சிறுவர்), நெய்வேலி	தடகளம், கூடைப்பந்து மற்றும் கால்பந்து
2.	விளையாட்டு விடுதி (சிறுவர்), அண்ணா விளையாட்டு அரங்கம், திருச்சிராப்பள்ளி	தடகளம், கால்பந்து, வளைகோல்பந்து, நீச்சல், கையுந்துபந்து மற்றும் குத்துச்சண்டை
3.	விளையாட்டு விடுதி (சிறுவர்), ரேஸ் கோர்ஸ் விளையாட்டு அரங்கம், மதுரை	தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, கையுந்துபந்து, வளைகோல்பந்து மற்றும் மேசைப்பந்து
4.	விளையாட்டு விடுதி (சிறுவர்), அண்ணா விளையாட்டு அரங்கம், திருநெல்வேலி	தடகளம், வளைகோல்பந்து, கால்பந்து, நீச்சல், கையுந்துபந்து, கூடைப்பந்து மற்றும் டென்னிஸ்
5.	விளையாட்டு விடுதி(சிறுமியர்), வ.உ.சி. விளையாட்டரங்கம், ஈரோடு	தடகளம், கால்பந்து, கையுந்துபந்து மற்றும் நீச்சல்
6.	விளையாட்டு விடுதி (சிறுவர் மற்றும் சிறுமியர்), செல்வம் மேல்நிலைப் பள்ளி, நாமக்கல்	தடகளம் (சிறுமியர்), வாள்சண்டை (சிறுவர் மற்றும் சிறுமியர்) மற்றும் வில்வித்தை (சிறுவர்)
7.	விளையாட்டு விடுதி, அரசு மேல்நிலைப் பள்ளி, புதூர், சென்னை	மட்டைப்பந்து
8.	விளையாட்டு விடுதி (சிறுமியர்), திருவண்ணாமலை	தடகளம், கூடைப்பந்து, கைப்பந்து மற்றும் வளைகோல்பந்து

2020 மார்ச் 12]

வ. எண்	விளையாட்டு விடுதியின் பெயர்	பயிற்றுவிக்கும் விளையாட்டுப் பிரிவு
9.	விளையாட்டு விடுதி (சிறுவர்), கிருஷ்ணகிரி	தடகளம், கைப்பந்து, டேக்வாண்டோ மற்றும் கால்பந்து
10.	விளையாட்டு விடுதி (சிறுமியர்), நேரு உள் விளையாட்டரங்கம், சென்னை	கையுந்துபந்து, வாள்சண்டை, குத்துச்சண்டை மற்றும் ஜூடோ
11.	விளையாட்டு விடுதி (சிறுவர்), கோயம்புத்தூர்	தடகளம், கூடைப்பந்து, ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் கையுந்துபந்து
12.	விளையாட்டு விடுதி (சிறுவர்), கடலூர்	இறகுப்பந்து, தடகளம் மற்றும் டேக்வாண்டோ
13.	விளையாட்டு விடுதி (சிறுவர்), தஞ்சாவூர்	கூடைப்பந்து, பளுதூக்குதல் மற்றும் கையுந்துபந்து
14.	விளையாட்டு விடுதி (சிறுமியர்), திண்டுக்கல்	தடகளம், கூடைப்பந்து மற்றும் கால்பந்து
15.	விளையாட்டு விடுதி (சிறுமியர்), நாகர்கோவில்	தடகளம், கையுந்துபந்து மற்றும் பளுதூக்குதல்
16.	விளையாட்டு விடுதி (சிறுவர்), சிவகங்கை	தடகளம் மற்றும் கால்பந்து
17.	விளையாட்டு விடுதி (சிறுவர்), தூத்துக்குடி	தடகளம், கூடைப்பந்து, கால்பந்து மற்றும் ஸ்குவாஷ்
18.	விளையாட்டு விடுதி (சிறுமியர்), நாமக்கல்	கால்பந்து மற்றும் கபாடி
19.	விளையாட்டு விடுதி (சிறுமியர்), பெரம்பலூர்	தடகளம், கைப்பந்து மற்றும் டேக்வாண்டோ
20.	விளையாட்டு விடுதி (சிறுவர்), அரியலூர்	வளைகோல்பந்து, கைப்பந்து மற்றும் பளுதூக்குதல்

[2020 மார்ச் 12

வ. எண்	விளையாட்டு விடுதியின் பெயர்	பயிற்றுவிக்கும் விளையாட்டுப் பிரிவு
21.	விளையாட்டு விடுதி (சிறுவர்), தேனி	கூடைப்பந்து மற்றும் கபாடி
	விளையாட்டு விடுதி (சிறுமியர்), தேனி	கையுந்துபந்து
22.	விளையாட்டு விடுதி (சிறுவர்), இராமநாதபுரம்	வளைகோல்பந்து மற்றும் மட்டைப்பந்து
23.	விளையாட்டு விடுதி (சிறுவர்), உதகமண்டலம்	கால்பந்து, தடகளம்
24.	விளையாட்டு விடுதி (சிறுவர்), விழுப்புரம்	கபாடி, கைப்பந்து மற்றும் நீச்சல்
25.	விளையாட்டு விடுதி (சிறுமியர்), புதுக்கோட்டை	தடகளம், பளுதூக்குதல் மற்றும் வளைகோல்பந்து
26.	விளையாட்டு விடுதி (சிறுமியர்), தருமபுரி	இறகுபந்து, கபாடி மற்றும் கையுந்துபந்து
27.	விளையாட்டு விடுதி (சிறுவர்), ஜவஹர்லால்நேருவிளையாட்டரங்கம், சென்னை	வாள்சண்டை, குத்துச்சண்டை மற்றும் ஜுடோ

3.2.3 சிறப்பு நிலை விளையாட்டு விடுதிகள்

மாணவர்களுக்கான சிறப்பு நிலை விளையாட்டு விடுதிகள் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கிலும், கோவில்பட்டியிலும் (தூத்துக்குடி மாவட்டம்) மற்றும் மாணவியர்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதி சென்னை நேரு உள்விளையாட்டரங்கிலும் செயல்பட்டு வருகின்றன. இந்த விடுதிகளில் மாணவர்களுக்கு நவீன விளையாட்டுப் பயிற்சிகள், சத்தான உணவு மற்றும் தேசிய/பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பங்கேற்று சாதனை படைக்க நிதியுதவி ஆகியவை அளிக்கப்படுகின்றன.

கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் மட்டுமே இச்சிறப்பு விளையாட்டு விடுதிகளில் சேர தகுதியுடையவர்களாவர். இம்மாணவர்களுக்கு அனுபவமிக்க பயிற்றுநர்களைக் கொண்டு கீழ்க்காணும் விளையாட்டுகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

2020 மார்ச் 12]

வ. எண்	விடுதி	விளையாட்டுப் பிரிவு	எண்ணிக்கை	மொத்த எண்ணிக்கை
1.	சிறப்பு நிலை விளையாட்டு விடுதி (ஆண்கள்), ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை	தடகளம்	*15*	*80*
		கூடைப்பந்து	*24*	
		குத்துச்சண்டை	*10*	
		கையுந்துபந்து	*18*	
		ஜுடோ	*6*	
		வாள்சண்டை	*2*	
		பளுதூக்குதல்	*2*	
		இறகுப்பந்து	*2*	
		துப்பாக்கிசுடுதல்	*1*	
2.	சிறப்பு நிலை விளையாட்டு விடுதி (ஆண்கள்), கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்	வளைகோல்பந்து	*30*	*30*
3.	சிறப்பு நிலை விளையாட்டு விடுதி (பெண்கள்), நேரு உள்விளையாட்டு அரங்கம், சென்னை	தடகளம்	*15*	*60*
		கால்பந்து	*18*	
		கையுந்துபந்து	*18*	
		குத்துச்சண்டை	*3*	
		ஜுடோ	*3*	
		பளுதூக்குதல்	*3*	
மொத்தம்				*170*

3.3 இணை விளையாட்டு மேம்பாட்டு மையம்

இத்திட்டத்தின்கீழ், போதுமான விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகளைக் கொண்டுள்ள கல்லூரிகளை ஊக்கப்படுத்தவும், அக்கல்லூரி மாணவ, மாணவியர்களின் திறன்களை மேம்படுத்தவும் மாநில, தென் மண்டல, அகில இந்திய

பல்கலைக்கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள், தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைக்கும் தலைசிறந்த கல்லூரி மாணவர்களுக்கு ரூ.6,000/— வீதம் வழங்கப்படுகிறது.

3.4 சிறப்பு மேம்பாட்டு மையம்

உடற்கூறு தகுதிகள், விரிவான அனுபவ அறிவு, காயத் தடுப்பு முறை அறிதல், ஊட்டச்சத்து வழிமுறைகள், தந்திரோபாயங்கள் மற்றும் தகுந்த விளையாட்டு உளவியல் ஆகியவற்றை வழங்கக்கூடிய முழுமையான அறிவு மற்றும் அனுபவமிக்க உயரிய பயிற்சி மையமே சிறப்பு மேம்பாட்டு மையமாகும். அதனடிப்படையில், கடந்த 1997 ஆம் ஆண்டு வேலூர் சத்துவாச்சாரியில் பளுதூக்கும் சிறப்பு விளையாட்டு மேம்பாட்டு மையம் துவக்கப்பட்டது. இங்கு 30 ஆண்களுக்கும், 12 பெண்களுக்கும் (மாணவர்கள் மற்றும் மாணவரல்லாதோர்) பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இச்சிறப்பு மேம்பாட்டு மையம் பல தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வெல்பவர்களை உருவாக்கியுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் இம்மையத்திற்கு ரூ.7.89 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

3.5 பயிற்சி மையங்கள்

3.5.1 நீச்சல் குளங்கள்-நீச்சல் கற்றுக்கொள் திட்டம்

‘நீச்சல் கற்றுக்கொள்’ பயிற்சியானது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்கீழ் செயல்பட்டு வரும் அனைத்து நீச்சல் குள வளாகங்களிலும் நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒரு நபர் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் பயிற்சி பெறுவதன்மூலம் 12 நாட்களில் நீந்தக் கற்றுக்கொள்கிறார். இத்திட்டம் பிரத்யேகமாக மாணவ, மாணவியர் மற்றும் பொதுமக்களுக்கென்று கோடைகாலத்தில் ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரையில் வெவ்வேறு பிரிவுகளாக நடத்தப்பட்டு வருகிறது. 2019 ஆம் ஆண்டில் 9,760 நபர்கள் இப்பயிற்சியில் கலந்துகொண்டு பயனடைந்துள்ளனர்.

2020 மார்ச் 12]

3.5.2 கிராம விளையாட்டு வளர்ப்பிடம்

கிராமங்களில் பிரபலமாக விளங்கும் குறிப்பிட்ட விளையாட்டினை மேம்படுத்தும் வண்ணமாக சென்னை நீங்கலாக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு, கிராம விளையாட்டு வளர்ப்பிடம் நிறுவப்பட்டுள்ளது. கண்டறியப்பட்ட விளையாட்டில் முறையான பயிற்சிக்கு உதவிட, கிராம விளையாட்டு வளர்ப்பிடங்களுக்கு விளையாட்டுத் திடல் வசதிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. இதுவரை 31 கிராமங்களில் கிராம விளையாட்டு வளர்ப்பிடங்கள் நிறுவப்பட்டுள்ளன.

மாவட்டங்களில் உள்ள கிராம விளையாட்டு வளர்ப்பிட மையங்கள்

வ. எண்	மாவட்டம்	கிராமத்தின் பெயர்	விளையாட்டு பிரிவு	வளர்ப்பிடங்களின் விவரம்
1	திருச்சிராப்பள்ளி	எட்டரை	கபாடி	அரசு மேல்நிலைப் பள்ளி, எட்டரை
2	அரியலூர்	பொன்பரப்பி	வளை கோல்பந்து	அரசு மேல்நிலைப் பள்ளி, பொன்பரப்பி
3	நாகப்பட்டினம்	ஆயக்கரன்புலம்	கையுந்து பந்து	ஆர்.என். அரசு மேல்நிலைப் பள்ளி, ஆயக்கரன்புலம்
4	தஞ்சாவூர்	கரம்பயம்	கால்பந்து	அரசு மேல்நிலைப் பள்ளி, கரம்பயம்
5	பெரம்பலூர்	எஸ். ஆடுதுறை	கையுந்து பந்து	அரசு மேல்நிலைப் பள்ளி, எஸ். ஆடுதுறை
6	நாமக்கல்	முத்துக்காபட்டி	தடகளம்	அரசு மேல்நிலைப் பள்ளி, முத்துக்காபட்டி
7	திருவாரூர்	திருநைப்பேர்	கால்பந்து	அரசு மேல்நிலைப் பள்ளி, திருநைப்பேர்
8	ஈரோடு	நொச்சிக்குட்டை	வளை கோல்பந்து	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, நொச்சிக்குட்டை

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 12

வ. எண்	மாவட்டம்	கிராமத்தின் பெயர்	விளையாட்டு பிரிவு	வளர்ப்பிடங்களின் விவரம்
9	நீலகிரி	அச்சங்கால்	கால்பந்து	அச்சங்கால் , உதகமண்டலம்
10	திருப்பூர்	பழங்கரை	கையுந்து பந்து	திருவள்ளுவர் அரசு மேல்நிலைப் பள்ளி, பெரியாயி பாளையம்.
11	தருமபுரி	பாப்பாரப்பட்டி	கையுந்து பந்து	எஸ்.எஸ். அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பாப்பாரப்பட்டி
12	கிருஷ்ணகிரி	ஊத்தங்கரை	கோ—கோ	அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, ஊத்தங்கரை
13	கோயம்புத்தூர்	சின்னத் தடாகம்	கையுந்து பந்து	அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, சின்னத்தடாகம்
14	சேலம்	கொண்டப்ப நாயக்கன்பட்டி	வில்வித்தை	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கொண்டப்ப நாயக்கன்பட்டி
15	கரூர்	லாலா பேட்டை, கல்லப்பள்ளி ஊராட்சி.	ஜிம்னாஸ் டிக்ஸ்	அரசு மேல்நிலைப் பள்ளி, லாலாபேட்டை.
16	திண்டுக்கல்	தர்மத்துப்பட்டி	கபாடி	அரசு மேல்நிலைப் பள்ளி, தர்மத்துப்பட்டி.
17	புதுக்கோட்டை	ஆதனி	கபாடி	அரசு மேல்நிலைப் பள்ளி, ஆதனி
18	தேனி	வடுகப்பட்டி	கையுந்து பந்து	அரசு மேல்நிலைப் பள்ளி, வடுகப்பட்டி
19	மதுரை	புதுசுக்காம்பட்டி	தடகளம்	அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, புதுசுக்காம்பட்டி.
20	திருவண்ணாமலை	சொரகுளத்தூர்	கையுந்து பந்து	அரசு மேல்நிலைப் பள்ளி, சொரகுளத்தூர்.

2020 மார்ச் 12]

வ. எண்	மாவட்டம்	கிராமத்தின் பெயர்	விளையாட்டு பிரிவு	வளர்ப்பிடங்களின் விவரம்
21	கடலூர்	மீனாட்சிப்பட்டி	கூடைப்பந்து	நெசவாளர் குடியிருப்பு விளையாட்டு மைதானம், மீனாட்சிப்பட்டி.
22	விழுப்புரம்	கொழியனூர்	கையுந்து பந்து	அரசு மேல்நிலைப் பள்ளி, கொழியனூர்.
23	வேலூர்	வெங்கடேசபுரம்	டேக்வாண் டோ	அரசு ஆதி திராவிடர் நலப் பள்ளி, வெங்கடேசபுரம்.
24	காஞ்சிபுரம்	நந்திவரம்	கபாடி	அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, நந்திவரம்
25	விருதுநகர்	வீரப்பட்டி	தடகளம்	அரசு மேல்நிலைப் பள்ளி, வீரப்பட்டி
26	திருநெல்வேலி	பாவூர்சத்திரம்	கால்பந்து	டி.பி.எஸ். அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பாவூர்சத்திரம்.
27	சிவகங்கை	கோட்டையூர்	கால்பந்து	தஞ்சாவூர் அருணாச்சலம் செட்டியார் மேல்நிலைப் பள்ளி, கோட்டையூர்.
28	கன்னியாகுமரி	இரவிபுத்தன் துறை	கால்பந்து	கிராம கால்பந்து மைதானம், இரவிபுத்தன் துறை
29	இராமநாதபுரம்	மண்டபம் முகாம்	வளைகோல் பந்து	அரசு மேல்நிலைப் பள்ளி, மண்டபம் முகாம்
30	தூத்துக்குடி	குளத்தூர்	கபாடி	அரசு மேல்நிலைப் பள்ளி, குளத்தூர்
31	திருவள்ளூர்	கடம்பத்தூர்	கையுந்துப் பந்து	அரசு மேல்நிலைப் பள்ளி, கடம்பத்தூர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 12

படலம் - 4

பயிற்சித் திட்டங்கள்

விளையாட்டு வீரர்களை உருவாக்குவதில் பயிற்றுநர்கள் முக்கிய பங்காற்றுகிறார்கள். சிறந்த தரமான பயிற்சியாளர்களை பல்வேறு நிலைகளில் போதுமான எண்ணிக்கையில் வைத்திருப்பது விளையாட்டு மேம்பாட்டின் முக்கிய செயல் முறையாகும்.

4.1 பயிற்றுநர்கள் திறன் கட்டமைப்பு

சிறந்த அறிவு, விஞ்ஞான ரீதியிலான பயிற்சிக்கான அறிவு மற்றும் சிறந்த அனுபவம் வாய்ந்த பயிற்றுநர்களே சிறந்த முடிவுகளைக் கொடுக்க இயலும். மேலும், பயிற்றுநருக்காக பயிற்சி அளிக்க போதுமான கவனம் செலுத்தி அவர்களது செயல்பாடுகள் உன்னிப்பாக கண்காணிக்கப்படுகின்றன. இதற்காக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ஒவ்வொரு விளையாட்டிற்கும் தனித்தனியாக கண்காணிப்பு அலுவலரை நியமித்துள்ளது. பயிற்றுநர்களின் பங்கு, அவர்களுக்கான இலக்குகள் மற்றும் அவர்களது செயல்திறன் குறித்த தரநிர்ணயம் பற்றிய நெறிமுறைகள், அவர்களிடம் பயிற்சி பெறுபவர்கள் குறிப்பாக மாணவிகளுக்கு பயிற்சி அளிக்கும்போது செய்யக் கூடியவை, செய்யக் கூடாதவை ஆகியன குறித்த விரிவான அறிவுறுத்தல்கள் கொண்ட சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

உடற்கல்வி இயக்குநர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய பயிற்றுநர்களின் திறன்களை மேம்படுத்தும் பொருட்டு, கருத்தரங்குகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. இது மட்டுமல்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்றுநர்கள் வெளியிட பயிற்சி மையங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

பயிற்றுநர்களின் திறன் மற்றும் அறிவை மேம்படுத்தும் பொருட்டு முறையான சான்றிதழ் பயிற்சித் திட்டங்கள் பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் சர்வதேச விளையாட்டுக் கூட்டமைப்புடன் இணைந்து நடத்தப்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 12]

4.2 கோடைகாலப் பயிற்சி முகாம்

ஒவ்வொரு வருடமும் மாவட்டத் தலைநகரங்கள் மற்றும் 25 சிறிய விளையாட்டு அரங்கங்களில் கோடை விடுமுறை நாட்களில் 16 வயதிற்குட்பட்ட மாணவ/மாணவியர்களுக்கு தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கையுந்துப்பந்து மற்றும் பிற விளையாட்டுகளில் தகுதி வாய்ந்த பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டு வல்லுநர்களால் கோடைகால பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன. இப்பயிற்சி முகாம் 21 நாட்கள் நடைபெறும். 2019-2020 ஆம் ஆண்டில் இப்பயிற்சி முகாமில் 8,559 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டுள்ளனர். இத்திட்டத்தினைச் செயல்படுத்திட அரசு ஒவ்வொரு வருடமும் ரூ.2.05 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்கிறது.

4.3 கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்

உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டத்தின்மூலம் கண்டறியப்பட்ட மாணவர் மற்றும் மாணவியர்களுக்கென கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன. இப்பயிற்சி முகாம்கள் மாநிலத்தில் உள்ள கல்வி மாவட்டங்களில் 5 நாட்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அவரவர் திறன், ஆற்றலுக்கு ஏற்ப பல்வேறு விளையாட்டுகளில் கலந்துகொள்ள ஏதுவாக இந்த முகாம்களில் பல்வேறு விளையாட்டுகளின் அடிப்படை திறன்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் சுமார் 30,000 மாணவ/மாணவியர்கள் இத்திட்டத்தின்மூலம் பயனடைகிறார்கள். 2019 ஆம் ஆண்டில், கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாமில், 5,964 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பயனடைந்துள்ளனர். அரசு, ஒவ்வொரு வருடமும் இத்திட்டத்திற்கு ரூ.5.44 இலட்சம் ஒதுக்கீடு செய்கிறது.

4.4 மாவட்ட அளவிலான இருப்பிட பயிற்சி முகாம்

ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலிருந்தும் திறமையான 60 மாணவ/மாணவியர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் கோடை விடுமுறையில் மாவட்ட அளவிலான இருப்பிட பயிற்சி முகாம் 15 நாட்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

தகுதி வாய்ந்த பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டு வல்லுநர்களைக் கொண்டு விளையாட்டின் அடிப்படைத் திறன்கள் கற்பிக்கப்படுகின்றன. இந்த சிறுவர், சிறுமியர் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சிறப்பு அகாடமிகள் மற்றும் விளையாட்டு விடுதிகளில் சேர்வதற்கான தேர்வுகளில் பங்கேற்பதற்கு ஊக்குவிக்கப்படுவர். 2019 ஆம் ஆண்டில் 3,634 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர். உணவுப்படி, விளையாட்டுச் சீருடை, தங்குமிடம் போன்ற செலவினங்களுக்காக, அரசு ரூ.71.04 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்கிறது.

4.5 திறனாளர்களை கண்டறியும் முகாம்

தினப்பயிற்சித் திட்டம் மற்றும் வார இறுதி பயிற்சித் திட்டம் இரண்டினையும் ஒருங்கிணைத்து திறனாளர்களைக் கண்டறியும் முகாம் 2016 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 14 வயதிற்குட்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட 10 சிறுவர் மற்றும் 10 சிறுமியர்களுக்கு பகுதி சார்ந்த விளையாட்டில் முறையான பயிற்சி வழங்கப்படுகிறது. இம்முகாம் அனைத்து மாவட்டங்களிலும் ஆறு மாத காலத்திற்கு நடத்தப்படுகிறது.

2019 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்மூலம் 620 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பயனடைந்துள்ளனர். கண்டறியப்பட்ட திறனாளர்களுக்கு பயணப்படி, சத்துணவுப்படி, விளையாட்டுச் சீருடை மற்றும் விளையாட்டு உபகரண செலவினம் முதலியவற்றிற்காக அரசு ஆண்டுதோறும் ரூ.81.20 இலட்சம் ஒதுக்கீடு செய்கிறது.

4.6 உடற்கல்வி ஆசிரியர்/உடற்கல்வி இயக்குநர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி

தனி மனிதன் மற்றும் சமுதாயத்தின் வளர்ச்சியில் விளையாட்டு பெரும்பங்கு வகிக்கிறது. மழலையர் பள்ளி முதல் உயர்நிலைப் பள்ளி வரை குழந்தைகளிடையே விளையாட்டை கற்பிப்பது உடற்கல்வி ஆசிரியர்கள்/உடற்கல்வி இயக்குநர்கள் ஆவர்.

2020 மார்ச் 12]

சிறுவர்களிடையே உள்ள அடிப்படை விளையாட்டுத் திறன்களைக் கண்டறிந்து மேம்படுத்துவதில் உடற்கல்வி ஆசிரியர்கள்/உடற்கல்வி இயக்குநர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

வளர்ந்து வரும் விளையாட்டு உலகில், மாறி வரும் விளையாட்டு விதிமுறைகளை தெரிந்துகொள்ளவும், உடற்கல்வி ஆசிரியர் மற்றும் உடற்கல்வி இயக்குநர்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் இந்த புத்தாக்கப் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது.

உடற்கல்வி ஆசிரியர்/உடற்கல்வி இயக்குநர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி முகாம் நடத்துவதற்கு அரசு ஒவ்வோர் ஆண்டும் ரூ.14.50 இலட்சம் வழங்குகிறது.

படலம் - 5

விளையாட்டுப் போட்டிகள்

விளையாட்டு வீரர்கள் தமது திறனையும் நுணுக்கங்களையும் பல்வேறு நிலைகளில் வெளிப்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பாக போட்டிகள் நடத்தப்படுகின்றன. இது விளையாட்டு வீரர்களிடையே ஓர் இலக்கை அடைவதற்கான குழு ஒருங்கிணைப்பு, தன்னம்பிக்கை மற்றும் போட்டி உணர்வினை ஊக்குவிக்கிறது. இதன் அடிப்படையில், அரசால் மாநிலம் முழுவதிலும் உருவாக்கப்பட்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் பராமரிக்கப்பட்டு வரும் விளையாட்டுக் கட்டமைப்புகளைப் பயன்படுத்தி அரசு போட்டிகள் நடத்தி வருகிறது.

5.1 முதலமைச்சர் கோப்பைக்கான மாநில விளையாட்டுப் போட்டிகள்

முதலமைச்சர் கோப்பைக்கான மாநில விளையாட்டுப் போட்டிகள் மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் என இரண்டு கட்டங்களில் நடத்தப்படுகின்றன. இப்போட்டிகள் 25 வயதிற்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கு 10 விளையாட்டுப் பிரிவுகளில் நடத்தப்படுகின்றன.

[2020 மார்ச் 12

முதலமைச்சர் கோப்பை 2019-2020

பாலினம்	ஆண்கள் மற்றும் பெண்கள்		
வயது வரம்பு	டிசம்பர் 31 அன்று 25 வயதிற்குட்பட்டிருக்க வேண்டும்.		
விளையாட்டு பிரிவுகள்	தடகளம், இறகுப்பந்து, கூடைப்பந்து, குத்துச்சண்டை, ஜுடோ, வளைகோல்பந்து, கபாடி, நீச்சல், டென்னிஸ் மற்றும் கையுந்துபந்து		
மாவட்ட அளவிலான போட்டிகளுக்கான பரிசு தொகை (ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும்)	முதலிடம்	இரண்டாமிடம்	மூன்றாமிடம்
	ரூ.1,000/—	ரூ.750/—	ரூ.500/—
மாநில அளவிலான போட்டிகளுக்கான பரிசு தொகை (ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும்)	ரூ.1,00,000/—	ரூ.75,000/—	ரூ.50,000/—

போட்டிகள் நடத்துவதற்காகவும், பரிசுத் தொகை வழங்குவதற்காகவும் ரூ.819.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

போட்டி கள்	பரிசுத் தொகை				மொத்தம் ரூ.
மாவட்ட அளவு (ஒவ்வொரு மாவட்டத் திற்கும்)	முதல் பரிசு	ரூ.1,000/—	X	194 விளையாட்டு வீரர்கள்	1,94,000/—
	இரண்டாம் பரிசு	ரூ.750/—	X	194 விளையாட்டு வீரர்கள்	1,45,500/—
	மூன்றாம் பரிசு	ரூ.500/—	X	228 விளையாட்டு வீரர்கள்	1,14,000/—

2020 மார்ச் 12]

போட்டி கள்	பரிசுத் தொகை				மொத்தம் ரூ.
மாநில அளவு	முதல் பரிசு	ரூ.1.00 இலட்சம்	X	194 விளையாட்டு வீரர்கள்	1,94,00,000/—
	இரண்டாம் பரிசு	ரூ.0.75 இலட்சம்	X	194 விளையாட்டு வீரர்கள்	1,45,50,000/—
	மூன்றாம் பரிசு	ரூ.0.50 இலட்சம்	X	228 விளையாட்டு வீரர்கள்	1,14,00,000/—

பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை 22,792 மாவட்ட அளவிலான போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுக்கு வழங்கப்படும் மொத்த பரிசுத் தொகை ரூ.4,53,500/-.

மாநில அளவிலான போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுக்கு வழங்கப்படும் மொத்த பரிசுத் தொகை ரூ.4,53,50,000/-. பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை 616.

5.2 மாதாந்திர விளையாட்டு போட்டிகள்

விளையாட்டு வீரர்கள் தொடர்ச்சியாக விளையாட்டுகளில் பங்கேற்பதை ஊக்குவிக்கவும், போட்டி அனுபவத்தைப் பெறவும், மாதாந்திர விளையாட்டுகள் அனைத்து மாவட்டங்களிலும் தனிநபர் விளையாட்டுகளான தடகளம், நீச்சல் குளம் உள்ள மாவட்டங்களில் நீச்சல் போட்டிகள் மற்றும் ஏதாவது இரண்டு குழு விளையாட்டுகள் பல்வேறு வயது பிரிவினருக்கு நடத்தப்படுகின்றன. மாதாந்திர விளையாட்டுப் போட்டிகளை அனைத்து மாவட்டங்களிலும் நடத்துவதற்கு ஒவ்வோர் ஆண்டும் ரூ.25.00 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்கிறது.

5.3 அண்ணா மிதிவண்டி போட்டி

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளினை நினைவுகூறும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் மாதம் 15-ம் தேதி அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் மிதிவண்டி போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. வெற்றி பெற்றவர்களை ஊக்குவிக்கும்

[2020 மார்ச் 12

வகையில் முதல் மூன்று இடங்களை வெல்பவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் மற்றும் முதல் 10 இடங்களை வெல்பவர்களுக்கு பங்கேற்புச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக அரசு, ஒவ்வோர் ஆண்டும் ரூ.1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது.

5.4 மாநில விளையாட்டு சங்கங்களினால் நடத்தப்படும் மாநில மற்றும் தேசிய அளவிலான சாம்பியன்ஷிப் போட்டிகள்.

திறன்வாய்ந்த இளைஞர்கள் உயர்நிலைப் போட்டிகளில் பங்கேற்பதை ஊக்குவிக்கும் பொருட்டு தேசிய அளவிலான சாம்பியன்ஷிப் போட்டிகள் நடத்துவதற்கும் மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் தமிழ்நாடு அணிகளைப் பங்கேற்கச் செய்வதற்கும் மாநில விளையாட்டுச் சங்கங்களுக்கு அரசு மானியம் வழங்கி வருகிறது. இதன் பொருட்டு மாநில விளையாட்டுச் சங்கங்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் ரூ.1.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2019 ஆம் ஆண்டு, மாநில விளையாட்டுச் சங்கங்களுக்கு கூடுதலாக ரூ.2.01 கோடியும் சென்னையில் நடைபெற்ற ஹாக்கி நேஷனல் சாம்பியன்ஷிப் போட்டிகள் நடத்துவதற்காக ஹாக்கி யூனிட் ஆப் தமிழ்நாடு என்ற அமைப்பிற்கு ரூ.10.00 இலட்சம் சிறப்பு நிதியும் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் கீழ்க்கண்டவாறு தேசிய அளவிலான சாம்பியன்ஷிப் போட்டிகள் நடத்தப்பட்டன.

வ. எண்	சாம்பியன்ஷிப்	நிகழ்விடம்
1.	45-வது சப்ஜூனியர் (15 வயதிற்குட்பட்டவர்களுக்கான) ஓபன் &36-வது சப்ஜூனியர் நேஷனல் செஸ் சாம்பியன்ஷிப்	நாமக்கல்

2020 மார்ச் 12]

வ. எண்	சாம்பியன்ஷிப்	நிகழ்விடம்
2	46-வது நேஷனல் மகளிர் செஸ் சாம்பியன்ஷிப்	சிவகங்கை
3	36-வது யூத் நேஷனல் கூடைப்பந்து சாம்பியன்ஷிப்	கோயம்புத்தூர்
4	ஹாக்கி நேஷனல் சாம்பியன்ஷிப்	சென்னை
5	ஆண்கள் மற்றும் பெண்களுக்கான 65-வது தேசிய முதுநிலை பூப்பந்து சாம்பியன்ஷிப்	சென்னை
6	17-வது தேசிய இளையோர் பெடெரேஷன் கோப்பை தடகள சாம்பியன்ஷிப்	திருவண்ணாமலை

5.5 தமிழ்நாட்டில் பன்னாட்டு அளவிலான சாம்பியன்ஷிப் போட்டிகள் நடத்துதல்

பன்னாட்டு அளவிலான போட்டிகளை நடத்துவது, நமது மாநிலத்தின் விளையாட்டு வீரர்களுக்கு ஒரு அனுபவத்தை அளிக்கிறது. பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகள், பலதரப்பட்ட நாடுகளைச் சார்ந்த விளையாட்டு வீரர்களிடையே புரிந்துணர்வையும், நட்பையும் வலுப்படுத்தும் முக்கிய காரணியாகும். தமிழ்நாட்டில் பன்னாட்டு அளவிலான சாம்பியன்ஷிப் போட்டிகளை நடத்துவதை ஊக்குவிப்பதற்கு மாநில சங்கங்கள் மற்றும் தேசிய கூட்டமைப்புகளுக்கு தக்க நிதியுதவி அரசு வழங்கி வருகிறது. மேலும், இது நமது இளைஞர்கள் விளையாட்டில் பங்கேற்கவும், கடினமான போட்டித் திறனை வளர்த்துக்கொள்ளவும், வாய்ப்பினை நல்குகிறது. தமிழ்நாட்டில் பன்னாட்டு அளவிலான சாம்பியன்ஷிப் போட்டிகள் நடத்துவதை ஊக்குவிக்கும் விதமாக, மாநில விளையாட்டுச் சங்கங்களுக்கு ஆண்டுதோறும் ரூ.50.00 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகள் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டன:

[2020 மார்ச் 12

வ. எண்	போட்டியின் பெயர்	இடம்
1	ஏதன்ஸ் ஆப் ஈஸ்ட்-முதலாம் பன்னாட்டு கிராண்ட் மாஸ்டர் செஸ் சாம்பியன்ஷிப்	மதுரை
2	12-வது சென்னை ஓபன் கிராண்ட் மாஸ்டர் செஸ் போட்டி	சென்னை

5.6 தமிழ்நாட்டில் நடைபெற்ற இதர விளையாட்டுப் போட்டிகள்

விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கான முக்கிய நிகழ்விடமாக தமிழ்நாடு உருவெடுத்து வருகிறது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நவீன விளையாட்டரங்கங்களில் கீழ்க்கண்ட விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன:

5.6.1 இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்) கால்பந்துப் போட்டிகள்

இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்) கால்பந்துப் போட்டிகள் கடந்த ஆறு ஆண்டுகளாக தொடர்ந்து பெருமைமிகு சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் நடத்தப்பட்டு வருகின்றன.

5.6.2 ஐ-லீக் கால்பந்துப் போட்டிகள்

ஐ-லீக் கால்பந்துப் போட்டிகள் கோயம்புத்தூர் நேரு விளையாட்டரங்கத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகின்றன.

5.6.3 இதர லீக் போட்டிகள்

சென்னை நேரு உள்விளையாட்டரங்கத்தில் கீழ்க்கண்ட லீக் போட்டிகள் நடைபெற்றன:

1. புரோ-கபாடி லீக்
2. புரோ-பேட்மிண்டன் லீக்
3. டேபிள் டென்னிஸ் லீக்

2020 மார்ச் 12]

5.7 அகில இந்திய குடிமைப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள்

அரசுப் பணியாளர்களின் திறன், ஆற்றல் மற்றும் ஒழுக்கத்தை மேம்படுத்துவதோடு அல்லாமல் அவர்களது, உடற் தகுதியையும், உறுதிப்படுத்தும் பொருட்டு, புதுதில்லியில் உள்ள மத்திய குடிமை பணிகள் கலை மற்றும் விளையாட்டுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் பல்வேறு மாநிலங்களில் சுழற்சி முறையில் அகில இந்திய குடிமை பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் பல்வேறு பிரிவுகளில் நடத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டைச் சார்ந்த அணிகளும் அகில இந்திய குடிமைப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் தொடர்ச்சியாக பங்கேற்று வருகின்றன.

5.8 தமிழ்நாடு அகில இந்திய பணிகள் மற்றும் மத்திய அரசுப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள்

மனித இனத்திற்கு உடற்தகுதி மிகவும் இன்றியமையாதது. அது அவர்களுக்கு ஆரோக்கியமான நல்வாழ்வை அளிக்கிறது. விளையாட்டு செயல்பாடுகளில் ஈடுபடுத்திக் கொள்வதன்மூலம் பணியாளர்கள் மன அழுத்தம் மற்றும் மனச் சோர்விலிருந்து விடுபடுகின்றனர். இறுதியாக இது, பணியாளர்களின் திறனையும் ஆற்றலையும் மேம்படுத்துவதுடன் அலுவலகப் பணியை திறம்பட கையாளவும் உதவுகிறது.

தமிழ்நாட்டில் பணியாற்றும் அகில இந்திய பணிகள் மற்றும் மத்திய அரசுப் பணிகள் (குரூப்—A) அலுவலர்களுக்காக "தமிழ்நாடு அகில இந்திய பணிகள் மற்றும் மத்திய அரசுப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை" 2019-20 ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு நடத்தும் பொருட்டு ரூ.26,42,332/-ஐ தொடர் செலவினமாக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. கிரிக்கெட் (ஆண்கள் மட்டும்), கால்பந்து (ஆண்கள் மட்டும்) மற்றும் இறகு பந்து (ஆண்கள் மற்றும் பெண்கள்) முதலிய போட்டிகள் ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 12

5.9. மாநில அளவிலான அரசுப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள்

அரசுப் பணியாளர்களுக்கிடையே உடற்தகுதி மற்றும் அவர்தம் திறனை மேம்படுத்தி, அவர்களது மன அழுத்தத்தைத் தளர்த்தி, ஆரோக்கியமான வாழ்க்கை முறையினை வழிநடத்தும் பொருட்டு மாநில அளவிலான அரசுப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை 2013-2014 ஆம் ஆண்டு முதல் நடத்துவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. இப்போட்டிகளை நடத்துவதற்காக, ஆண்டுதோறும் ரூ.40.37 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படுகின்றன. முதல் மூன்று இடங்களை வென்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. தகுதித் தேர்வுகளின்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த விளையாட்டு வீரர்கள் தமிழ்நாட்டின் சார்பில் அகில இந்திய அரசுப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்வர்.

5.10. மாவட்ட மற்றும் மாநில அளவிலான கேரம் விளையாட்டுப் போட்டிகள்

பில்லியர்ட்ஸ், டேபிள் ஷபிள்போர்டு போன்ற மேசை விளையாட்டுகளைப் போன்று கேரம் விளையாட்டு கிழக்கத்திய நாடுகளில் உருவான "அடித்துப் பையில் போடும்" மேசை விளையாட்டு ஆகும். இவ்விளையாட்டு நேபாளம், இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம், இலங்கை மற்றும் அதனைச் சுற்றி உள்ள மத்திய கிழக்கு நாடுகளில் பிரபலமாக உள்ளது. கேரம் விளையாட்டுகளை அரசு, அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், ஊராட்சி/பேரூராட்சி/நகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே ஒவ்வோர் ஆண்டும் நடத்தி, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை வழங்குகிறது. இதன் பொருட்டு அரசு ரூ.6.45 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. இப்போட்டிகள் மிக இளையோர் மற்றும் இளையோர் (5 ஆம் வகுப்பு வரை பயில்பவர்கள் மற்றும் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயில்பவர்கள்) ஆகிய இரு பிரிவுகளின்கீழ் நடத்தப்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 12]

5.11. மாற்றுத் திறனாளிகளுக்கான தடகளப் போட்டிகள்

தகவமைக்கப்பட்ட விளையாட்டுகள் அல்லது பாரா விளையாட்டுகள் எனப்படும் மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுகள் மாற்றுத் திறனாளிகளால் விளையாடப்படும் விளையாட்டுகளாகும். நடைமுறையிலுள்ள விளையாட்டுகள் மாற்றுத் திறனாளிகளின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

சமுதாயத்தில் மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கமும், உதவியும் தேவைப்படுகிறது. எனவே, போட்டி மனப்பான்மையை வளர்க்கும் வகையில் மாற்றுத் திறனாளிகளுக்கு மாவட்ட மற்றும் மாநில அளவில் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

போட்டிகள் பின்வருமாறு நடத்தப்பட்டு வருகின்றன:

அ) உடல் திறன் குன்றியோர் (ஆண்கள் மற்றும் பெண்கள்)

1. *50மீ ஓட்டம்*
2. *100மீ ஓட்டம்*
3. *நீளம் தாண்டுதல்*
4. *சிறு கூடைப்பந்து எறிதல்*
5. *100மீ சக்கர நாற்காலி ஓட்டம்*

ஆ) பார்வை குன்றியோர் (ஆண்கள் மற்றும் பெண்கள்)

1. *50மீ ஓட்டம்*
2. *100மீ ஓட்டம்*
3. *நின்ற நிலையில் குதித்தல்*
4. *குண்டு எறிதல்*
5. *டென்னிஸ் பந்து எறிதல்*

[2020 மார்ச் 12

இ) மனவளர்ச்சி குன்றியோர் (ஆண்கள் மற்றும் பெண்கள்)

1. 50மீ ஓட்டம்
2. 100மீ ஓட்டம்
3. கிரிக்கெட் பந்து எறிதல்
4. நின்ற நிலையில் குதித்தல்
5. குண்டு எறிதல்

ஈ) செவித்திறன் குன்றியோர் (ஆண்கள் மற்றும் பெண்கள்)

1. 100மீ ஓட்டம்
2. 200மீ ஓட்டம்
3. நீளம் தாண்டுதல்
4. குண்டு எறிதல்
5. ஈட்டி எறிதல்

இந்த விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு முதல் இடம் பெறுபவர்களுக்கு ரூ.5,000/-ம் இரண்டாம் இடம் பெறுபவர்களுக்கு ரூ.3,000/-ம் மூன்றாம் இடம் பெறுபவர்களுக்கு ரூ.2,000/-ம் பரிசுத் தொகையாக வழங்கப்படுகிறது. மேலும், இந்த விளையாட்டுப் போட்டிகளை 2019-2020 ஆம் ஆண்டு நடத்தும் பொருட்டு தமிழ்நாடு அரசு ரூ.15.01 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

5.12. மாற்றுத் திறனாளிகளுக்கான குழு விளையாட்டுப் போட்டிகள்

மாற்றுத் திறனாளிகள் விளையாட்டில் பங்கேற்பதை ஊக்குவிக்கவும், குழு மனப்பாங்கினை மேம்படுத்தவும், நம்பிக்கையை ஏற்படுத்தவும் குழு விளையாட்டுப் போட்டிகள் மாநில அளவில் கீழ்க்கண்டவாறு நடத்தப்பட்டு வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 12]

உடல் திறன் குன்றியோர் (ஆண்கள் / பெண்கள்)

1. இறகுப்பந்து (ஒற்றையர் மற்றும் இரட்டையர்) — ஒரு அணிக்கு 5 வீரர்கள்.

2. மேசைப்பந்து — ஒரு அணிக்கு இரு வீரர்கள்.

பார்வை குன்றியோர் (ஆண்கள் / பெண்கள்)

1. அடாப்டட் கையுந்து பந்து — ஒரு அணிக்கு 7 வீரர்கள்.

மனவளர்ச்சி குன்றியோர் (ஆண்கள் / பெண்கள்)

1. எறிபந்து — ஒரு அணிக்கு 7 வீரர்கள்.

செவித்திறன் குன்றியோர் (ஆண்கள் / பெண்கள்)

1. கபாடி — ஒரு அணிக்கு 7 வீரர்கள்.

2019-2020 ஆம் ஆண்டில் மேற்காணும் விளையாட்டுப் போட்டிகளை நடத்திட ரூ.30.00 இலட்சம் அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

5.13 கழைக்கூத்து (அக்ரோபேட்டிக்ஸ்)

கழைக்கூத்து பெரும்பாலும் பாலே நடனம், நீர் தாவல்கள் மற்றும் டைவிங் போன்ற நடவடிக்கைகளுடன் தொடர்புடையது. கழைக்கூத்து அசாதாரணமான சமநிலை, விரைந்து நகருதல் மற்றும் இயக்கத்திறனை வெளிபடுத்தும் விளையாட்டாகும். பொதுவாக கழைக்கூத்து மனித உடலில் செயல் திறன் தொடர்புடையதாக இருப்பினும் இதர வகை செயல் திறனான 'ஏரோபிக்ஸ்'க்கும் பொருந்தும்.

பாரம்பரியமாக கழைக்கூத்தில் ஈடுபட்டு வரும் சமுதாயத்தினரிடையே இவ்விளையாட்டுகளை ஊக்குவிக்க தமிழக அரசு ஆதரவு அளித்து வருகிறது. ஒரு கழைக்கூத்து விளையாட்டு மையம் ஈரோடு மாவட்டம் கரட்டுப்பாளையத்தில் செயல்பட்டு வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில், இம்மையத்தில் பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை 20-லிருந்து 30 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 12

5.14 கடற்கரை விளையாட்டுகள்

கடற்கரை பகுதிகளில் உள்ள விளையாட்டு வீரர்களிடையே போட்டி மனப்பான்மையை ஊக்குவிக்கும் வகையில் கடலோர மாவட்டங்களில் மாநில அளவிலான கடற்கரை விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. கடற்கரை விளையாட்டுகளை விளையாடுவதற்கு ஒரு விளையாட்டு வீரருக்கு உடல் வலிமை, சுறுசுறுப்பு, துடிப்புடன் செயல்படும் திறன், தாங்கும் திறன் முதலிய உடற்திறன்கள் தேவைப்படுகின்றன. கடற்கரை பகுதிகளில் உள்ள இளைஞர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு திறனை வெளிப்படுத்தும் வகையில் கடற்கரை விளையாட்டுப் போட்டிகளை, கையுந்துபந்து, கால்பந்து மற்றும் கபாடி ஆகிய விளையாட்டுப் பிரிவுகளில் கடலோர மாவட்டங்களான இராமநாதபுரம், நாகப்பட்டினம், கடலூர், கன்னியாகுமரி, தூத்துக்குடி, சென்னை, தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் ஒவ்வோர் ஆண்டும் அரசு நடத்துகிறது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் உருவாக்கப்பட்டுள்ள விளையாட்டு வசதிகளைப் பயன்படுத்தி மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகள் ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ரூ.2.00 இலட்சம் செலவில் நடத்தப்பட்டு வருகின்றன.

5.15 மாநில அளவிலான பல்கலைக்கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள்

கல்லூரி மாணவர்களிடையே விளையாட்டுத்துவம் மற்றும் ஆரோக்கியமான போட்டியை ஊக்குவிப்பதற்காக மாநில அளவிலான பல்கலைக்கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் மாநில அளவிலான பல்கலைக்கழகங்களுக்கிடையேயான போட்டிகள் நடத்துவதற்காக ரூ.1.00 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

மாநில அளவிலான பல்கலைக்கழகங்களுக்கிடையேயான போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.10,000/-ம், இரண்டாம் பரிசாக ரூ.7,500/-ம், மூன்றாம் பரிசாக ரூ.5,000/-ம் வழங்கப்படுகின்றன.

2020 மார்ச் 12]

5.16 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வளைகோல்பந்து லீக் போட்டி

இந்தியாவின் தேசிய விளையாட்டான வளைகோல்பந்து நாடு முழுவதும் விளையாடப்படுகிறது. இவ்விளையாட்டிற்கு உடல் உறுதியும், ஆற்றலும் அதிகமாகத் தேவைப்படுகிறது. தமிழ்நாட்டில் சென்னை (2), மதுரை, திருச்சிராப்பள்ளி, கோவில்பட்டி (தூத்துக்குடி மாவட்டம்), இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய ஏழு இடங்களில் செயற்கை இழை வளைகோல்பந்து ஆடுகளங்கள் உள்ளன. நமது விளையாட்டு வீரர்களுக்கு போட்டிகளில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தரும் பொருட்டு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் வளைகோல்பந்து லீக் போட்டிகளை கீழ்க்காணும் நிலைகளில் நடத்துகிறது.

1. *மாவட்ட அளவில்*
2. *மண்டல அளவில்*
3. *மாநில அளவில்*

மேற்காணும் போட்டிகளை நடத்துவதற்காக அரசு ரூ.8.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்கிறது. மண்டல அளவிலான போட்டிகள் கீழ்க்காணும் ஆறு மண்டலங்களில் நடத்தப்படுகின்றன:

1.	சென்னை	சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர்.
2.	வேலூர்	வேலூர், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், தருமபுரி, கிருஷ்ணகிரி
3.	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு, சேலம், திருப்பூர், நாமக்கல்
4.	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர், திருவாரூர், புதுக்கோட்டை
5.	மதுரை	மதுரை, இராமநாதபுரம், திண்டுக்கல், தேனி, கரூர்.
6.	திருநெல்வேலி	திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, சிவகங்கை, விருதுநகர்

[2020 மார்ச் 12

5.17 கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள்

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளை மத்திய அரசு அஸ்ஸாம் மாநிலம் கௌகாத்தியில் 09-01-2020 முதல் 22-01-2020 வரை நடத்தியது.

182 சிறுவர் மற்றும் 158 சிறுமியர் அடங்கிய தமிழக அணி கீழ்க்காணும் விளையாட்டுப் பிரிவுகளில் கலந்து கொண்டது.

17 வயதிற்குட் பட்டவர்கள்	சிறுவர்	தடகளம், இறகுப்பந்து, கூடைப்பந்து, குத்துச்சண்டை, ஜுடோ, துப்பாக்கி சுடுதல், நீச்சல், மேசைப்பந்து மற்றும் பளு தூக்குதல்
	சிறுமியர்	தடகளம், இறகுப்பந்து, கூடைப்பந்து, குத்துச்சண்டை, சைக்கிளிங், ஜுடோ, கபாடி, நீச்சல், மேசைப்பந்து, டென்னிஸ், கையுந்துபந்து மற்றும் பளுதூக்குதல்
21 வயதிற்குட் பட்டவர்கள்	சிறுவர்	தடகளம், இறகுப்பந்து, கூடைப்பந்து, குத்துச்சண்டை, சைக்கிளிங், கால்பந்து, ஜுடோ, கபாடி, துப்பாக்கி சுடுதல், மேசைப்பந்து, டென்னிஸ், நீச்சல், கையுந்துபந்து மற்றும் பளுதூக்குதல்
	சிறுமியர்	தடகளம், இறகுப்பந்து, கூடைப்பந்து, குத்துச்சண்டை, சைக்கிளிங், கால்பந்து, ஜுடோ, கபாடி, மேசைப்பந்து, டென்னிஸ், துப்பாக்கி சுடுதல், நீச்சல், கையுந்துபந்து மற்றும் பளுதூக்குதல்

தமிழ்நாடு வென்ற பதக்கங்கள் பின்வருமாறு:-

தங்கம்	வெள்ளி	வெண்கலம்	மொத்தம்
22	32	22	76

2019-2020 ஆம் ஆண்டிற்கான கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு ஆறாம் இடத்தைப் பெற்றது.

2020 மார்ச் 12]

5.18 வெளிநாட்டில் மேம்பட்ட பயிற்சி மற்றும் போட்டிகளில் கலந்துகொள்ளுதல்

விளையாட்டு வீரர்கள் பன்னாட்டு அளவில் உயர் செயல் திறனை எய்துவதற்கும், பதக்கங்கள் வெல்வதற்கும் அவர்களுக்கு பன்னாட்டு அரங்கில் விளையாடுவதற்கான வாய்ப்பு தேவைப்படுகிறது. வெளிநாடுகளில் உள்ள முதன்மை நிலை பயிற்சி மையங்களில் தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் மேம்பட்ட பயிற்சி பெற உதவிடும் பொருட்டு அவர்களுக்கு தேவைக்கேற்ப விமான பயணத்திற்கான நிதி உதவியினை தமிழ்நாடு அரசு வழங்குகின்றது.

5.19 கிராம விளையாட்டுப் போட்டிகள்

அரசு, 12,524 கிராம ஊராட்சிகளில் கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்திட ஒவ்வோர் ஆண்டும் ரூ.25.05 கோடி நிதி ஒதுக்கீடு செய்துவருகிறது. தடகளம், கையுந்துபந்து, கபாடி மற்றும் கால்பந்து ஆகிய விளையாட்டுகளில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, ஊரக மக்கள் விளையாட்டில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் பொருட்டு கிராம விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

படலம் - 6

அம்மா இளைஞர் விளையாட்டு திட்டம்

நமது நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு மிக முக்கியமான கூறு விளையாட்டாகும். தனிநபரின் வாழ்க்கையில் விளையாட்டு மற்றும் உடற்தகுதி மிகவும் விலைமதிப்பற்றதாகும். அத்தகைய விளையாட்டு, குழு மனப்பான்மையை உருவாக்கி விவேகமான மற்றும் பகுப்பாய்வு சிந்தனை, தலைமைத்துவ பண்பு, இலக்கு நிர்ணயித்தல் மற்றும் துணிச்சல் போன்றவற்றை மேம்படுத்துகிறது. ஒரு தனிநபரின் உடற்தகுதி மற்றும் ஆரோக்கியம்தான் சமமான ஆரோக்கியமிக்க சமுதாயத்திற்கும், வலுவான நாட்டிற்கும் வழிவகுக்கும்.

[2020 மார்ச் 12

கிராமங்களில் விளையாட்டு வசதிகளை ஏற்படுத்தி, இளம் திறனாளர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குப் பயிற்சி மற்றும் ஊக்கம் அளித்திட, தமிழ்நாடு அரசு "அம்மா இளைஞர் விளையாட்டு திட்டம்" என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இளைஞர்களின் ஆரோக்கியம் மற்றும் மன வளத்தை மேம்படுத்தவும், விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கவும் தமிழ்நாட்டில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 2019 ஆம் ஆண்டு அறிவித்தார்கள். இத்திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு 2019-2020 ஆம் ஆண்டில் அரசு ரூ.76.23 கோடி நிதியை ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்தின்படி, அனைத்து கிராம ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக அம்மா இளைஞர் விளையாட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அனைத்து கிராம ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிலும் மூன்று விளையாட்டுகளுக்கான ஆடுகளங்கள் மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு, விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேற்காணும் விளையாட்டுக் குழுக்களுக்கு ஊராட்சி ஒன்றிய, மாவட்ட மற்றும் மாநில அளவில் போட்டிகள் நடத்தப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "அம்மா இளைஞர் விளையாட்டு திட்டத்தை" 13-01-2020 அன்று தொடங்கி வைத்தார்.

படலம் - 7

உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகள்

பல்வேறு தகுதிகள் மற்றும் திறமைகளின் அடிப்படையில் வழங்கப்பட்டு வரும் உதவித் தொகைகள், அவ்விருதின் நோக்கத்தையும், மதிப்பினையும் பிரதிபலிக்கிறது. பல்வேறு பிரிவுகளிலும், பல்வேறு நிலைகளிலும் சிறந்து விளங்கும் தலைசிறந்த

2020 மார்ச் 12]

விளையாட்டு வீரர்களுக்கு உதவித் தொகை, விருதுகள் மற்றும் உயரிய ஊக்கத் தொகை தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

7.1 சிறப்பு உதவித் தொகை மற்றும் ஆதரவளிக்கும் திட்டங்கள்

சர்வதேச மற்றும் தேசிய அளவில் சாதனை படைக்கும் திறனைப் பெற்ற தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு கீழ்க்காணும் சிறப்பு உதவித் தொகை/ஆதரவு வழங்கப்படுகின்றன:—

1. வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம்

2. பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதற்கு ஊக்குவிக்கும் திட்டம்

3. தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித் தொகைத் திட்டம்

7.1.1. வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம்

இளம் திறனாளர்களிலிருந்து வெற்றியாளர்களை உருவாக்கும் நோக்குடன் வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம் என்ற தனித்துவமான திட்டம் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், பன்னாட்டு அளவில் பதக்கங்கள் வெல்லக்கூடிய திறன் வாய்ந்த இளம் விளையாட்டு வீரர்களுக்கு தேவை அடிப்படையிலான உதவி வழங்கப்படுகிறது. தேசிய அளவில் தங்கப்பதக்கம் வென்ற 20 வயதுக்குட்பட்ட விளையாட்டு வீரர், வீராங்கனைகள் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இத்திட்டத்தில் சேர்க்கப்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு சத்தான உணவு மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கும், வெளிநாட்டில் பயிற்சி பெறுவதற்கும் மற்றும் வெளிநாட்டில் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொள்ளவும் தேவையின் அடிப்படையில், ஆண்டொன்றுக்கு அதிகபட்சமாக ரூ.2.00 இலட்சம் நிதியுதவி வழங்கப்படுகிறது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சுழல் நிதியின் வட்டிக் கணக்கிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்சமயம், 83 வெற்றியாளர்கள் இத்திட்டத்தின்கீழ், பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்கள்

[2020 மார்ச் 12

7.1.2 பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்வதற்கு ஊக்குவிக்கும் திட்டம்

விளையாட்டுத் திறனாளர்களைக் கண்டறிந்து, ஆதரவளித்து, அவர்களை பன்னாட்டு அளவில் பதக்கம் வெல்லும் வகையில் வளர்த்தெடுக்க பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்வதற்கு ஊக்குவிக்கும் திட்டம் என்ற திட்டத்தை 2018 ஆம் ஆண்டில் அரசு அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தில், 5 மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்/வீராங்கனைகள் உட்பட 50 விளையாட்டு வீரர்/வீராங்கனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, விளையாட்டு உபகரணங்கள் வாங்குதல், அயல்நாட்டில் பயிற்சி பெறுதல் மற்றும் போட்டிகளில் கலந்துகொள்ளுதல் போன்ற இனங்களுக்கு ஆண்டொன்றுக்கு தலா ரூ.10.00 இலட்சம் வரை தேவையின் அடிப்படையில் நிதியுதவி வழங்கப்படும். அதற்கிணங்க, இத்திட்டத்தின்கீழ் 48 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் (5 மாற்றுத்திறன் விளையாட்டு வீரர்கள் உட்பட) சேர்க்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது. இத்திட்டத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ.5.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

7.1.3 தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித் தொகை (ஒலிம்பிக் மற்றும் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்வதை நோக்கமாகக் கொண்டு)

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, "தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு ஊக்க உதவித் தொகைத் திட்டம்" செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், தற்போது 12 தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் அரசால் அமைக்கப்பட்டுள்ள உயர்மட்டக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்கள் ஒலிம்பிக் மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் வெற்றி வாகை சூட ஏதுவாக ஆண்டொன்றுக்கு ரூ.25.00 இலட்சம் வீதம் 'தேவைக்கேற்ப உதவிகள்' பெற அவர்கள் தகுதியுடையவர்கள் ஆவர்.

2020 மார்ச் 12]

தற்போது, கீழ்க்காணும் 12 தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

1.	ஜி. சத்தியன்	மேசைப்பந்து
2.	சி.ஏ. பவானி தேவி	வாள்சண்டை
3.	எஸ். சதீஷ் குமார்	பளுதூக்குதல்
4.	ஏ. சரத் கமல்	மேசைப்பந்து
5.	கே.சி. கணபதி	பாய்மரப்படகு ஓட்டுதல்
6.	ஏ. தருண்	தடகளம்
7.	எஸ். ஆரோக்கிய ராஜீவ்	தடகளம்
8.	எஸ். மோகன் குமார்	தடகளம்
9.	டி. சந்தோஷ் குமார்	தடகளம்
10.	பிரஜ்னேஷ் குன்னீஸ்வரன்	டென்னிஸ்
11.	ஜி. லட்சுமணன்	தடகளம்
12.	வர்ஷா கௌதம்	பாய்மரப்படகு ஓட்டுதல்

மேற்காணும் விளையாட்டு வீரர்களின் விளையாட்டு செயல்திறனை காலமுறையில் கண்காணித்து மதிப்பீடு செய்ய கண்காணிப்பு மற்றும் வழிநடத்தும் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் சம்பந்தப்பட்ட விளையாட்டு வல்லுநர்கள் மற்றும் விளையாட்டு சங்கங்களின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக உள்ளனர்.

7.2 வளரும் திறனாளர்களுக்கான சிறப்பு உதவித் தொகை வழங்குதல்

உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டத்தின்கீழ் வளரும் திறனாளர்கள் மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கண்டறியப்பட்டு அவர்களுக்கு சிறப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. உள்ளார்ந்த திறமைகளைத் தூண்டி, அதை மேம்படுத்தும் விதமாக, மாதம் ஒன்றிற்கு தலா ரூ.500.00

வீதம் சிறப்பு உதவித் தொகை 3,240 இளம் திறனாளர்களுக்கு ஒவ்வொரு வருடமும் வழங்கப்படுகிறது.

7.3 உயரிய ஊக்கத் தொகை

தமிழகத்தைச்சேர்ந்தவிளையாட்டுவீரர்கள்,தேசிய/பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பல பதக்கங்களை வெல்வதற்கு அவர்களை ஊக்கப்படுத்திட உயரிய ஊக்கத் தொகை திட்டத்தை அரசு பின்வருமாறு விரிவுபடுத்தியுள்ளது:

பாகம்-1 ஒலிம்பிக், ஆசிய மற்றும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் உள்ள விளையாட்டுப் பிரிவுகள்

வ. எண்	விளையாட்டுப் போட்டிகள்	உயரிய ஊக்கத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
1.	ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் (கோடை / குளிர்காலம்) (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை)	200.00	100.00	50.00
2.	ஆசிய விளையாட்டுப் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை)	50.00	30.00	20.00
3.	காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை)	50.00	30.00	20.00
4.	இளையோருக்கான ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் (கோடை / குளிர்காலம்) (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை)	25.00	15.00	10.00
5.	ஆசிய இளையோருக்கான விளையாட்டுப் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை)	15.00	10.00	5.00
6.	உலக சாம்பியன்ஷிப் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை)	100.00	60.00	40.00

வ. எண்	விளையாட்டுப் போட்டிகள்	உயரிய ஊக்கத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
7.	உலக சாம்பியன்ஷிப் போட்டிகள் (2 ஆண்டுகளுக்கு ஒரு முறை)	75.00	50.00	30.00
8.	உலக சாம்பியன்ஷிப் போட்டிகள் (ஆண்டுதோறும்)	50.00	30.00	20.00
		ஆண்டு முழுவதற்கும் இவ்வகை போட்டிகளில் இந்த ஒரு போட்டி என்ற நிபந்தனைக்குட்பட்டு		
9.	வேறு ஏதாவது பெயரில் நடத்தப்படும் சர்வதேச கூட்டமைப்புமூலம் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகள்	ஒவ்வொரு நிலையிலான போட்டியும் தனியே அறிவிக்கப்பட வேண்டும்		
	உலக சாம்பியன்ஷிப்பிற்கு ஒரு நிலை கீழ்	30.00	20.00	10.00
	உலக சாம்பியன்ஷிப்பிற்கு இரண்டு நிலை கீழ்	20.00	15.00	7.50
	உலக சாம்பியன்ஷிப்பிற்கு மூன்று நிலை கீழ்	15.00	10.00	5.00
10.	ஆசிய சாம்பியன்ஷிப் / காமன்வெல்த் சாம்பியன்ஷிப் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை)	25.00	15.00	10.00
11.	ஆசிய சாம்பியன்ஷிப் / காமன்வெல்த் சாம்பியன்ஷிப் போட்டிகள் (2 ஆண்டுகளுக்கு ஒரு முறை)	15.00	10.00	5.00
12.	ஆசிய சாம்பியன்ஷிப் / காமன்வெல்த் சாம்பியன்ஷிப் (ஆண்டுதோறும்) 10 நாடுகளுக்குக் குறையாமல் பங்கேற்பு	10.00	6.00	4.00

வ. எண்	விளையாட்டுப் போட்டிகள்	உயரிய ஊக்கத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
13.	ஆசிய கடற்கரை விளையாட்டுப் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை)	5.00	3.00	2.00
14.	தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை)	5.00	3.00	2.00
15.	தேசிய விளையாட்டுப் போட்டிகள் (2 ஆண்டுகளுக்கு ஒரு முறை)	5.00	3.00	2.00
16.	தெற்காசிய சாம்பியன்ஷிப் போட்டிகள் / சீனியர் தேசிய சாம்பியன்ஷிப் போட்டிகள் (ஆண்டுதோறும்)	5.00	3.00	2.00
17.	வயது பிரிவினருக்கான உலக சாம்பியன்ஷிப் / உலகக் கோப்பை போட்டிகள் (விளையாட்டினைப் பொறுத்து கால அளவு மாறுபடும்)	6.00	4.00	3.00
		ஆண்டில், ஜுனியர், சப் ஜுனியர் மற்றும் வயது பிரிவினருக்கான உலக அளவிலான போட்டிகளில் இது உச்சபட்ச போட்டியாக இருத்தல் வேண்டும்		
18.	ஆசிய வயது பிரிவினருக்கான சாம்பியன்ஷிப் போட்டிகள் (ஆண்டுதோறும்)	5.00	3.00	2.00
		ஆண்டில், ஜுனியர், சப் ஜுனியர் மற்றும் வயது பிரிவினருக்கான ஆசிய அளவிலான போட்டிகளில் இது உச்சபட்ச போட்டியாக இருத்தல் வேண்டும்		
19.	தேசிய வயது பிரிவினருக்கான சாம்பியன்ஷிப் போட்டிகள் (ஆண்டுதோறும்)	3.00	2.00	1.50
		ஆண்டில், ஜுனியர், சப் ஜுனியர் மற்றும் வயது பிரிவினருக்கான தேசிய அளவிலான போட்டிகளில் இது உச்சபட்ச போட்டியாக இருத்தல் வேண்டும்		

2020 மார்ச் 12]

பாகம்-2 பள்ளி விளையாட்டு மற்றும் பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள்

வ. எண்	விளையாட்டுப் போட்டிகள்	உயரிய ஊக்கத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
1	ஃபெடரேஷன் இன்டர்நேஷனல் விளையாட்டு பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் பல்கலைக்கழக / உலகப் பல்கலைக்கழக சாம்பியன்ஷிப் போட்டிகள் (ஆண்டுதோறும்)	6.00	4.00	3.00
2	அகில இந்திய அளவிலான பல்கலைக் கழகங்களுக்கிடையேயான போட்டிகள் (ஆண்டுதோறும்)	3.00	2.00	1.50
3	உலக பள்ளிகள் சாம்பியன்ஷிப் போட்டிகள் (ஆண்டுதோறும்)	5.00	3.00	2.00
4	ஆசிய பள்ளிகள் விளையாட்டுப் போட்டிகள் / சாம்பியன்ஷிப் போட்டிகள் (ஆண்டுதோறும்)	4.00	2.50	1.50
5	SGFI ஆல் நடத்தப்படும் தேசிய பள்ளிகள் விளையாட்டுப் போட்டிகள் / கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் (ஆண்டுதோறும்)	2.00	1.50	1.00

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 12

பாகம்-3A ஒலிம்பிக், ஆசிய மற்றும் காமன்வெல்த் போட்டிகளில் அல்லாத விளையாட்டுப் பிரிவுகள் - சதுரங்கம் மற்றும் பளுதூக்குதல்

வ. எண்	விளையாட்டுப் போட்டிகள்	உயரிய ஊக்கத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
1	உலகக் கோப்பை / உலக சாம்பியன்ஷிப் போட்டிகள் (2 ஆண்டுகளுக்கு ஒரு முறை அல்லது அதிக கால அளவு)	50.00	30.00	20.00
2	உலகக் கோப்பை / உலக சாம்பியன்ஷிப் போட்டிகள் (ஆண்டுதோறும்)	20.00	15.00	10.00
3	ஆசிய கோப்பை / ஆசிய சாம்பியன்ஷிப் / காமன்வெல்த் கோப்பை / காமன்வெல்த் சாம்பியன்ஷிப் போட்டிகள் (விளையாட்டுப் பிரிவுகளைப் பொறுத்து, கால அளவு மாறுபடும்)	6.00	4.00	3.00
4	சீனியர் தேசிய சாம்பியன்ஷிப் போட்டிகள்	5.00	3.00	2.00

2020 மார்ச் 12]

பாகம்-3B ஒலிம்பிக், ஆசிய மற்றும் காமன்வெல்த் போட்டிகளில் அல்லாத விளையாட்டுப் பிரிவுகள் - கேரம் மற்றும் வளைபந்து

வ. எண்	விளையாட்டுப் போட்டிகள்	உயரிய ஊக்கத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
1	உலகக் கோப்பை / உலக சாம்பியன்ஷிப் போட்டிகள் (ஆண்டுதோறும் அல்லது அதிக கால அளவு)	20.00	15.00	10.00
2	சீனியர் தேசிய சாம்பியன்ஷிப் போட்டிகள்	1.00	0.50	0.25

பாகம்-4மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள்

வ. எண்	விளையாட்டுப் போட்டிகள்	உயரிய ஊக்கத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
1	பாராலிம்பிக்ஸ் (கோடைகாலம்) (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை)	200.00	100.00	50.00
2	பாரா ஆசிய விளையாட்டுப் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை)	50.00	30.00	20.00

வ. எண்	விளையாட்டுப் போட்டிகள்	உயரிய ஊக்கத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
3	காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் (பாரா விளையாட்டு வீரர்கள்) (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை)	50.00	30.00	20.00
4	ஆசிய பாரா இளைஞர்களுக்கான விளையாட்டு போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை)	15.00	10.00	5.00
5	ஐபிசி உலகக் கோப்பை / உலக சாம்பியன்ஷிப் விளையாட்டுப் போட்டிகள் (2 ஆண்டுகளுக்கு ஒரு முறை)	75.00	50.00	30.00
6	ஐபிசி உலகக் கோப்பை / உலக சாம்பியன்ஷிப் விளையாட்டுப் போட்டிகள் (ஆண்டுதோறும்)	50.00	30.00	20.00
7	ஐபிஎஸ்ஏ உலக விளையாட்டுப் போட்டிகள் (பார்வையற்றோருக்கான) (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை)	25.00	15.00	10.00

வ. எண்	விளையாட்டுப் போட்டிகள்	உயரிய ஊக்கத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
8	டெஃப்லிம்பிக்ஸ் (காது கேளாதோருக்கான விளையாட்டுப் போட்டிகள்) (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை)	25.00	15.00	10.00
9	சிறப்பு ஒலிம்பிக்ஸ் (கோடை / குளிர்காலம்) (மனவளர்ச்சி குன்றியோர்) (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை)	15.00	10.00	5.00
10	ஐ.டி.ஏ.எஃப் உலக உயரம் குன்றியவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை)	5.00	3.00	2.00
11	பார்வையற்றோருக்கான உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை)	முதலிடம் 5.00 இலட்சம்		
		இரண்டாமிடம் 3.00 இலட்சம்		

ஒலிம்பிக், ஆசிய, காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுகள் மற்றும் அந்தந்தப் பகுதிகளில் பிரபலமாக உள்ள விளையாட்டுகளை ஊக்கப்படுத்தி, மேம்படுத்தி, பிரபலப்படுத்த, இந்திய பள்ளி விளையாட்டுக் கூட்டமைப்பின்மூலம் ஒவ்வோர் ஆண்டும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. வளரும் விளையாட்டு வீரர்கள் தங்களது திறன்களை வெளிப்படுத்தவும், அவர்களது செயல்திறனை மேம்படுத்தவும் வாய்ப்பு வழங்குவதே இப்போட்டியின் முக்கிய நோக்கமாகும். இந்திய பள்ளி விளையாட்டுக் கூட்டமைப்பின் தேசிய போட்டிகளில் தமிழ்நாடு ஒவ்வோர் ஆண்டும் பங்கேற்று வருகிறது.

[2020 மார்ச் 12

இப்பள்ளி விளையாட்டுப் போட்டிகளில் வென்றவர்களையும் உயரிய ஊக்கத் தொகை பெறுவதற்கு தகுதியானவர்களாகக் கருதி, 2017-2018 ஆம் ஆண்டில் ஆணை வெளியிடப்பட்டது. 63-வது தேசிய பள்ளி விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற 465 வெற்றியாளர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.821.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

7.4 விளையாட்டு உதவித் தொகை திட்டம்

பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வண்ணமாக தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு முறையே ரூ.10,000/- மற்றும் ரூ.13,000/- உதவித்தொகையாக அரசு வழங்கி வருகிறது.

7.5 நலிந்த நிலையிலுள்ள முன்னாள் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

தேசிய அளவில் சாதனை படைத்து நலிந்த நிலையில் உள்ள தலைசிறந்த முன்னாள் விளையாட்டு வீரர்களுக்கு, அவர்கள் 58 வயது பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும் மற்றும் அவர்களுடைய மாத வருமானம் ரூ.6,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு மாத ஓய்வூதியமாக ரூ.3,000/- வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 101 முன்னாள் தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் 11 குடும்ப ஓய்வூதியதாரர்கள் ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள்.

7.6 விளையாட்டு வீரர்கள் நல நிதி

தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் தேவைகளுக்கு உதவும் வகையில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்போது, உயிரிழந்த அல்லது காயம் அடைந்த விளையாட்டு வீரர்களுக்கு அவர்களது மறுவாழ்வு/ சிகிச்சைக்காக "விளையாட்டு வீரர்கள் நல நிதியிலிருந்து" உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2020 மார்ச் 12]

7.7 முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது

தலைசிறந்த விளையாட்டு வீரர்கள், பயிற்றுநர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள்/உடற்கல்வி இயக்குநர்கள் உயரிய சாதனை புரியும் பொருட்டு அவர்களை ஊக்கப்படுத்தி உற்சாகமளிக்கவும், இளம் தலைமுறையினரை விளையாட்டின்பால் ஈர்ப்பதற்கு ஊக்கமளித்து முன்மாதிரியாக விளங்குவதற்கும், முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருதை அரசு 1996 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது. நான்கு தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் (2 ஆடவர், 2 மகளிர்), இரண்டு பயிற்றுநர்கள் மற்றும் இரண்டு உடற்கல்வி ஆசிரியர்/உடற்கல்வி இயக்குநர்களுக்கு (1 ஆடவர், 1 மகளிர்) இவ்விருது வழங்கப்படுகிறது. இவ்விருது பாராட்டுப் பத்திரம், நினைவுப் பரிசு மற்றும் ரூ.1.00 இலட்சம் பரிசுத் தொகை உள்ளடக்கியது.

7.8 பயிற்றுநர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டு நிர்வாகிகள் ஆகியோரின் அறிவாற்றல் மற்றும் திறன்களை மேம்படுத்துதல்

அரசு, விளையாட்டுக் கலாச்சாரத்தின் பரந்த அடித்தளத்தை வலியுறுத்துவதோடு, சிறந்த விதத்தில் பயிற்றுநர்களின் அறிவுத் திறனை மேம்படுத்தவும், விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், மேம்படுத்தப்பட்ட மற்றும் ஆரோக்கியமான விளையாட்டுடன் போட்டி சூழலையும் வழங்குகிறது.

திறமையான பயிற்சியாளர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு வாய்ப்புகளை வழங்கும் பொருட்டு பன்னாட்டு அளவிலான குறுகிய கால வகுப்பு/பன்னாட்டு பயிற்சி ஆகியவற்றின்மூலம் அவர்களின் அறிவு மற்றும் திறன் அளவுகளை மேம்படுத்த ஒவ்வோர் ஆண்டும் ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படுகிறது.

7.9 மாநில அளவிலான குடியரசு தின/பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுக்கு ரொக்கப் பரிசு

பள்ளிகளில் உள்ள திறனாளர்களை ஊக்குவிக்கும் விதமாக குடியரசு தின மற்றும் பாரதியார் தின விளையாட்டுப்

[2020 மார்ச் 12

போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு அரசு பரிசுத் தொகை வழங்கி வருகிறது. முதல் 3 இடங்களில் வெற்றி பெறும் மாணவ / மாணவியருக்கு ரூ.1200/-, ரூ.800/- மற்றும் ரூ.400/- பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் 5,516 மாணாக்கர்களுக்கு பரிசுத் தொகையாக ரூ.29,86,000/- வழங்கப்பட்டது.

7.10 தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்பவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்

2006-2007 ஆம் ஆண்டு முதல் தேசிய அளவிலான ஜூனியர் மற்றும் சப்-ஜூனியர் போட்டிகளில் பதக்கம் வெல்பவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தை தமிழக அரசு அறிமுகப்படுத்தியது.

தேசிய அளவிலான போட்டிகளில் முதலிடம் பெறுபவர்களுக்கு ரூ.6,000/-ம், இரண்டாமிடம் பெறுபவர்களுக்கு ரூ.4,000/-ம் மற்றும் மூன்றாமிடம் பெறுபவர்களுக்கு ரூ.2,000/-ம் வழங்கப்படுகிறது.

படலம் - 8

விளையாட்டு உள்கட்டமைப்பு

தலைசிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்கு சர்வதேச தரத்திலான விளையாட்டு உள்கட்டமைப்புகள் இன்றியமையாததாகும். 1995 ஆம் ஆண்டு நடைபெற்ற ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்காக சென்னையில் பன்னாட்டு தரத்திலான நேரு உள்விளையாட்டரங்கம், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கம் மற்றும் வேளச்சேரி நீச்சல்குள வளாகம் முதலியவற்றை நிறுவிய பெருமை அரசை சாரும். மேலும், பெருமைமிகு ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம் 1993 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டில் ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் உலகத் தரம் வாய்ந்த பயிற்சி ஓடுதளப்பாதை மற்றும் இயற்கை புல்தரையுடனான கால்பந்து மைதானம் ஏற்படுத்தப்பட்டன. பயிற்சி ஓடுதளப்பாதை பகுதியில் நீர்சிகிச்சை நீச்சல்குளம், ஸ்குவாஷ் உள்ளரங்கம், குளிரூட்டு வசதி கொண்ட இறகுப்பந்து

2020 மார்ச் 12]

உள்ளரங்கம், மின்னொளி வசதியுடன் கூடிய கையுந்துபந்து, கூடைப்பந்து ஆடுகளங்கள் கொண்ட ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம் ஒன்று, 2018 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சர்வதேசத் தரத்திலான ஆடுகள வசதிகளை மாவட்டங்களில் உருவாக்குவதன் அவசியத்தை உணர்ந்து அரசு நிதியுதவியினை ஒவ்வோர் ஆண்டும் அளித்து வருகிறது. இவ்விளையாட்டு வசதிகள் பெரிதும் பயன்படுத்தப்பட்டு விளையாட்டு வீரர்கள் பல்வேறு நிலைகளில் சாதனை புரிய உதவியாக உள்ளன. ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள விளையாட்டு வீரர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய சர்வதேச தரத்திலான விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகளை அரசு உருவாக்கி வருகிறது.

அரசால் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்மூலம் மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ள விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகள் பற்றிய விவரங்கள் இணைப்பில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

8.1 மாநிலத்தில் உள்ள முக்கிய விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகள்

8.1.1. ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை

40,000 பார்வையாளர்கள் அமரக்கூடிய வசதி கொண்ட பெருமைமிகு ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் சாதனை அளவாக 260 நாட்களில், ரூ.44.00 கோடி செலவில் 1993 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது. இந்த விளையாட்டரங்கில் 8 வரிசை கொண்ட 400 மீட்டர் செயற்கை இழை ஓடுதளப் பாதை, இயற்கை புல் கால்பந்து மைதானத்தைச் சுற்றி அமைந்துள்ளது. இவை தவிர, குளிரூட்டு வசதி கொண்ட 60மீ உள்ளரங்க தடகள பயிற்சி ஓடுதளம், ஜூடோ, பளுதூக்குதல், மேசைப்பந்து, குத்துச்சண்டை, சதுரங்கம் மற்றும் கேரம் ஆகிய விளையாட்டுகளுக்கான வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இரு கடற்கரை கையுந்துபந்து ஆடுகளங்கள், மூன்று களிமண் கையுந்துபந்து ஆடுகளங்கள் (மின்னொளி வசதியுடன்), ஒரு எறிபந்து ஆடுகளம், ஒரு கபாடி ஆடுகளம் மற்றும் ஒரு கைப்பந்து ஆடுகளம் ஆகியன இந்த விளையாட்டரங்க வளாகத்தில் உள்ளன. மேலும், குளிரூட்டு

வசதியுடன் கூடிய உடற்பயிற்சி கூடம், மாநில விளையாட்டு உதவி மையம், தங்குமிட மையம், துப்பாக்கி சுடுதளம் மற்றும் கூட்ட அரங்கம் முதலிய வசதிகள் இவ்விளையாட்டரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

துப்பாக்கி சுடும் விளையாட்டு வீரர்கள் பயனடையும் வகையில் 18 மின் இலக்கு பாதைகள் மற்றும் 8 மின்னணு இலக்கு பாதைகள் கொண்ட 10மீ துப்பாக்கி சுடுதளம் ஒன்று ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் நிறுவப்பட்டுள்ளது.

2012-2013 ஆம் ஆண்டில் ரூ.1,780.63 இலட்சம் செலவில் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் உள்ள செயற்கையிழை தடகள ஓடு பாதை மற்றும் கால்பந்து மைதானம் சீரமைக்கப்பட்டதுடன், மின்னொளி விளக்குகள் மாற்றி அமைத்தல், கூட்ட அரங்கம் மற்றும் அலுவலக வசதிகள் மேம்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன .

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சிறுவர்களுக்கான விளையாட்டு விடுதி மற்றும் முதன்மை நிலை மையம், கல்லூரி மாணவர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு விடுதி மற்றும் இந்திய விளையாட்டு ஆணையத்தின் சிறுவர்களுக்கான விளையாட்டு விடுதி ஆகியவை இவ்விளையாட்டரங்கத்தில் இயங்கி வருகின்றன.

8.1.2. நேரு உள்விளையாட்டரங்கம், சென்னை

1995 ஆம் ஆண்டில் ரூ.20.00 கோடி செலவில் 8,000 பார்வையாளர்கள் அமரும் கொள்திறன் கொண்ட நேரு உள்விளையாட்டரங்கம் முற்றிலும் குளிரூட்டும் வசதியுடன் கட்டப்பட்டது. விளையாடும் பகுதியானது மரத்தளம் மற்றும் மின்னொளி வசதியுடன் அமையப்பெற்றது. இவ்விளையாட்டு அரங்கத்தில் கையுந்துபந்து, கூடைப்பந்து, மேசைப்பந்து, இறகுப்பந்து, குத்துச்சண்டை, வாள்சண்டை, மல்யுத்தம், பளுதூக்குதல், சதுரங்கம், கேரம், கைப்பந்து, கபாடி முதலிய பல்வேறு விளையாட்டுகளை விளையாடலாம். மேலும், இவ்வளாகத்தில் மின்னொளி வசதி கொண்ட இரு கான்கிரீட் கூடைப்பந்து ஆடுகளங்கள், ஒரு கைப்பந்து ஆடுகளம், மின்னொளி

2020 மார்ச் 12]

வசதி கொண்ட ஒரு வாள்சண்டை அரங்கம் மற்றும் ஒரு திறந்த வெளி குத்துச்சண்டை வளையம் முதலிய வசதிகள் உள்ளன. 2012-13 ஆம் ஆண்டு இவ்விளையாட்டரங்கத்தில் உள்ள குளிரூட்டும் வசதி ரூ.5.00 கோடி செலவில் புனரமைக்கப்பட்டது. இந்த விளையாட்டரங்க வளாகத்தில் கல்லூரி மாணவிகளுக்கான முதன்மை நிலை விளையாட்டு விடுதி அமைக்கப்பட்டுள்ளது. பன்னாட்டு அளவிலான போட்டிகளை நடத்துவதற்கு ஏதுவாக மின்னொளி வசதியுடனான செயற்கை இழை பூச்சு கொண்ட திறந்தவெளி சறுக்கு வளையம் ஒன்று இந்த உள்விளையாட்டரங்க வளாகத்தில் ரூ.2.50 கோடி செலவில் நிறுவப்பட்டது.

8.1.3 மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம், எழும்பூர், சென்னை

8,670 பார்வையாளர்கள் இருக்கை வசதி கொண்ட இந்த நவீன ஹாக்கி விளையாட்டரங்கம் 1995 ஆம் ஆண்டில் ரூ.8.00 கோடி செலவில் கட்டப்பட்டது. இதன் ஆடுகளப் பகுதி சர்வதேச தரத்திலான மின்னொளி வசதியுடன் கூடிய செயற்கை இழையிலான வளைகோல்பந்து ஆடுகளத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. இவை தவிர, நான்கு டென்னிஸ் ஆடுகளங்கள் (களிமண்), மின்னொளி வசதியுடன் கூடிய மூன்று கையுந்துபந்து ஆடுகளங்கள், தங்குமிட மையம் மற்றும் உடற்பயிற்சி மையம் ஆகிய வசதிகளும் இங்கு உள்ளன. 2017 ஆம் ஆண்டில் இந்த விளையாட்டரங்கத்தில் உள்ள செயற்கை இழை வளைகோல்பந்து ஆடுகளம் ரூ.3.50 கோடி செலவில் மறுசீரமைக்கப்பட்டது.

8.1.4 நீச்சல்குள வளாகம், வேளச்சேரி, சென்னை

1995 ஆம் ஆண்டில் சென்னை, வேளச்சேரியில் 4,000 பார்வையாளர்கள் இருக்கை வசதியுடன் நவீன நீச்சல்குள வளாகம் ரூ.11.32 கோடி செலவில் அமைக்கப்பட்டது. இந்த வளாகத்தில் 50மீ X 25மீ அளவு கொண்ட 8 வரிசைகள் உள்ள ஒரு பன்னாட்டு தரத்திலான பந்தய நீச்சல் குளம், 18மீ X 25மீ அளவிலான ஒரு குதித்தல் குளம் மற்றும் 25மீX25மீ அளவிலான ஒரு பயிற்சி நீச்சல் குளம் ஆகியவை உள்ளன. மேலும், குளிரூட்டு வசதியுடன் கூடிய உடற்பயிற்சி மையம் மற்றும் ஜிம்னாஸ்டிக்ஸ் உள்ளரங்கம் ஆகியவையும் உள்ளன. இவை தவிர, பல்நோக்கு

உள்விளையாட்டரங்கம் ஒன்றும் 2014 ஆம் ஆண்டில் ரூ.1.50 கோடி செலவில் இவ்வளாகத்தில் கட்டப்பட்டுள்ளது. வேளச்சேரி நீச்சல் குள வளாகத்தில் கட்டடம் மற்றும் உடற்பயிற்சிக் கூடத்தில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு ரூ.150.00 இலட்சம் 2019-20 ஆம் ஆண்டு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

8.1.5 டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம், சென்னை

7,000 பார்வையாளர்கள் அமரக்கூடிய வசதி கொண்ட டென்னிஸ் விளையாட்டரங்கம் 1995 ஆம் ஆண்டு ரூ.7.50 கோடி செலவில் சென்னை நுங்கம்பாக்கத்தில் அமைக்கப்பட்டது. இவ்வளாகத்தில் பிரதான விளையாட்டரங்கத்தில் ஒரு மைய ஆடுகளம் மற்றும் வெளிப்புறத்தில் மின்னொளி வசதியுடன் கூடிய ஆறு பயிற்சி ஆடுகளங்களும் உள்ளன. அனைத்து ஆடுகளங்களும் சர்வதேச தரத்திலான செயற்கை இழை மேற்பரப்பினால் ஆனவை. இவ்விளையாட்டரங்கத்தில் குளிரூட்டு வசதியுடன் கூடிய உடற்பயிற்சி மையம் ஒன்றும் உள்ளது. இந்த விளையாட்டரங்கைப் புனரமைக்க ரூ.148.18 இலட்சத்தை 2019-20 ஆம் ஆண்டில் அரசு ஒப்பளித்தது.

8.1.6 ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம், சென்னை

சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்க வளாகத்தில் உள்ள பயிற்சி ஓடுதளப் பாதை பகுதியில் உள்ள ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகமானது இயற்கை புல்வெளி கால்பந்து மைதானம் மற்றும் செயற்கை இழை தடகள ஓடுபாதை ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இவ்வசதிகள் தவிர்த்து, உள்ளரங்க நீர்சிகிச்சை நீச்சல்குளம், ஸ்குவாஷ் உள்ளரங்கம், குளிரூட்டு வசதி கொண்ட இறகுப்பந்து உள்ளரங்கம், மின்னொளி வசதியுடன் கூடிய கையுந்துபந்து மற்றும் கூடைப்பந்து ஆடுகளங்கள் ரூ.12.70 கோடி செலவில் 2018 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டன.

8.1.7 மாவட்ட விளையாட்டு வளாகங்கள்

வேலூர், திருப்பூர் மற்றும் புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும்

2020 மார்ச் 12]

மாவட்ட விளையாட்டு வளாகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், வேலூர் மாவட்டத்தில் 8 வரிசைகள் கொண்ட 400 மீ. தடகள ஓடுபாதை, நிருவாக கட்டடத்துடன் கூடிய பார்வையாளர் மாடம், கால்பந்து மைதானம், வளைகோல்பந்து மைதானம், கூடைப்பந்து ஆடுகளம், கையுந்துபந்து ஆடுகளம், கபாடி ஆடுகளம், கோ-கோ ஆடுகளம், இறகுப்பந்து ஆடுகளம், நுழைவாயில்களுடன் கூடிய சுற்றுச்சுவர், டென்னிஸ் ஆடுகளம், நீச்சல் குளம், ஜிம்னாஸ்டிக்ஸ் கூடம் மற்றும் அணுகுசாலை ஆகிய வசதிகள் கொண்ட மாவட்ட விளையாட்டு வளாகம் நிறுவும் பொருட்டு அரசு 2019 ஆம் ஆண்டில் ரூ.16.45 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது.

அனைத்து மாவட்ட விளையாட்டு வளாகங்களிலும் தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, கபாடி மற்றும் கையுந்துபந்து போன்ற விளையாட்டுகளுக்கான ஆடுகள வசதிகள் உள்ளன. ஒவ்வொரு மாவட்ட தலைநகரிலும் ஒரு திறந்தவெளி விளையாட்டரங்கம், ஓர் உள் விளையாட்டரங்கம் மற்றும் ஒரு நீச்சல்குளம் ஆகிய விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் அரசு முனைப்புடன் உள்ளது.

8.1.8 பல்நோக்கு உள் விளையாட்டரங்கங்கள்

சென்னை நேரு பூங்கா விளையாட்டு வளாகம், ஷெனாய் நகர், வேளச்சேரி நீச்சல்குள வளாகம், முகப்பேர் மற்றும் ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் உள்ள ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம் ஆகிய இடங்களிலும் உள் விளையாட்டரங்கங்கள் உள்ளன. இந்த உள் விளையாட்டரங்கங்கள் இறகுப்பந்து, கையுந்துபந்து, கூடைப்பந்து, மேசைப்பந்து, டேக்வாண்டோ, கைப்பந்து, கபாடி மற்றும் வாள்சண்டை முதலிய விளையாட்டுகளில் பயிற்சி பெறுவதற்கு துணைபுரிகின்றன. சென்னையில் மட்டுமல்லாது அரியலூர், தருமபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மதுரை, சேலம், தூத்துக்குடி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி (மாவட்ட விளையாட்டு வளாகத்தில் ஒன்று, ஸ்ரீரங்கத்தில் ஒன்று), திருநெல்வேலி, திருப்பூர், திருவண்ணாமலை, திருவாரூர், விழுப்புரம், நாகப்பட்டினம், பெரம்பலூர், நாமக்கல் மற்றும் விருதுநகர் ஆகிய 20 மாவட்டங்களில் பல்நோக்கு உள் விளையாட்டரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 12

8.1.9 செயற்கை இழை ஓடுதளப் பாதை, வளைகோல்பந்து புல்வெளி மைதானம் மற்றும் டென்னிஸ் ஆடுகளம்

சென்னையில் ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் மற்றும் ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகத்தில் அமைந்துள்ள பயிற்சி ஓடுதள பாதை பகுதி ஆகிய இடங்களில் செயற்கை இழை ஓடுதளப் பாதைகள் அமைக்கப்பட்டன. மேலும், இவை கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, மதுரை மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களிலும் அமைக்கப்பட்டன. மைய அரசின் நகர்ப்புற விளையாட்டு உள்கட்டமைப்புத் திட்டத்தின்கீழ், உதகமண்டலத்தில் செயற்கை இழை தடகள ஓடுபாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னையில் எழும்பூர் மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல்பந்து விளையாட்டரங்கம் மற்றும் ஒய்.எம்.சி.ஏ. வளாகம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் மற்றும் கோவில்பட்டி ஆகிய இடங்களில் செயற்கை இழை வளைகோல்பந்து மைதானங்கள் உள்ளன.

சென்னை (டென்னிஸ் விளையாட்டரங்கம், முகப்பேர் மற்றும் நேரு பூங்கா விளையாட்டு வளாகம்), அரியலூர், கடலூர், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, மதுரை, இராமநாதபுரம், சேலம், நீலகிரி (உதகமண்டலம்), திருநெல்வேலி, திருவண்ணாமலை, தஞ்சாவூர், பெரம்பலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளங்கள் உள்ளன.

8.1.10 நீச்சல் குளங்கள்

அரியலூர், கடலூர், சென்னை (வேளச்சேரி நீச்சல் குள வளாகம், அண்ணா நீச்சல் குளம், முகப்பேர் மற்றும் செனாய்நகர்), தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, மதுரை, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், தஞ்சாவூர், தேனி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி (மாவட்ட விளையாட்டு வளாகத்தில் ஒன்று மற்றும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வளாகத்தில் ஒன்று), திருவள்ளூர், தூத்துக்குடி, திருவாரூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, சிவகங்கை, விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய 27 மாவட்டங்களில் 31 நீச்சல் குளங்கள் உள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 12]

திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் சர்வதேச தரத்திலான நீச்சல்குள வளாகம் ஒன்று அமைக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 22-11-2019 அன்று திறந்து வைக்கப்பட்டது.

8.2 உள்கட்டமைப்புகளைப் பராமரித்தல்

ஒவ்வோர் ஆண்டும் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்க பராமரிப்புக்காக ரூ.65.00 இலட்சமும், நவீன விளையாட்டரங்கங்களில் சிறப்பு கட்டுமான மற்றும் மின் பழுது பார்த்தல் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு ரூ.84.20 இலட்சமும் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகங்களின் பராமரிப்பிற்காக ரூ.50.00 இலட்சமும் தொடர் செலவினமாக அரசு நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது.

படலம் - 9

வேலைவாய்ப்பு மற்றும் உயர்கல்வியில் விளையாட்டு இட ஒதுக்கீடு

9.1 தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்பு

தலைசிறந்த விளையாட்டு வீரர்களின் சாதனைகளைக் கருத்திற்கொண்டும், மாநிலத்தில் உள்ள திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்கள் பன்னாட்டு அளவில் சாதனை புரிவதை ஊக்குவிக்கும் வகையிலும் அரசுத் துறைகள்/பொதுத் துறை நிறுவனங்களில் கண்டறியப்பட்ட பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பில் விளையாட்டு வீரர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்படும் என 2018 ஆம் ஆண்டு சுதந்திர தின உரையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டார்கள். அதன்படி, அரசாணை (நிலை) எண் 6, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 20-2-2019-ல் அரசுத் துறைகளில் கண்டறியப்பட்ட பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பில் விளையாட்டு வீரர்களுக்கு

3% இடஒதுக்கீடு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் பணி நியமனம் செய்ய வழிவகை குறித்து ஆணையிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அரசாணையின்படி, மூன்று தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு அதாவது திரு. லஷ்மண் ரோஹித் மரடப்பா என்பவருக்கு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்திலும், திரு. ஏ. தருண் என்பவருக்கு தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித ஆலை நிறுவனத்திலும், செல்வி. சி.ஏ. பவானிதேவி என்பவருக்கு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்திலும் பணி நியமனங்கள் 2018-19 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன.

9.2 சில அரசுத் துறைகளில் 10% விளையாட்டு இட ஒதுக்கீடு

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்மூலம் நிரப்பப்படும் பணியிடங்கள் மற்றும் தமிழ்நாடு வன சார்நிலைப் பணிகளில் நேரடியாக நிரப்பப்படும் வனவர், வனக்காப்பாளர், வனக்காவலர்கள் மற்றும் ஓட்டுநர்கள் ஆகிய பணியிடங்களில் விளையாட்டு வீரர்களுக்கு 10% இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது.

9.3 தொழில்முறைக் கல்லூரிகளில் சேர்க்கை

இளம் விளையாட்டு வீரர்களின் சாதனையை அங்கீகரிக்கும் வகையில் தொழில்முறைக் கல்லூரிகளில் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு விளையாட்டு வீரர்களுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன:

வ. எண்	கல்வி நிறுவன விவரம்	இடங்களின் எண்ணிக்கை
1	அண்ணா பல்கலைக்கழகத் துறைகள், சென்னை-25	12
2	அரசு / அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள்	13
3	அண்ணா பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகள்	14
4	சுய நிதி பொறியியல் கல்லூரிகள் (கல்லூரி ஒன்றிற்கு ஒரு இடம்)	461
	மொத்த இடங்களின் எண்ணிக்கை	**500**

2020 மார்ச் 12]

8	தொழில்முறைக் கல்விப் பிரிவு விவரம்	இடங்களின் எண்ணிக்கை
1	மருத்துவக் கல்லூரிகள்	
	இளநிலை மருத்துவம், இளநிலை அறுவை மருத்துவம் (எம்.பி.பி.எஸ்.,)	7
	இளநிலை பல் மருத்துவம் (பி.டி.எஸ்.,)	1
2	தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் மீன்வள பல்கலைக்கழகம்	
	இளநிலை கால்நடை அறிவியல் (பி. வி.எஸ்.சி.,) (3 ஆண்கள் மற்றும் 2 பெண்கள்)	5
	இளநிலை மீன்வள அறிவியல் (பி.எப்.எஸ். சி.,)	2
3	சட்டக் கல்லூரி	
	இளநிலை சட்டம் (3 ஆண்டு படிப்பு)	6
	இளநிலை சட்டம் (5 ஆண்டு படிப்பு)	7
4	தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்	
	இளநிலை அறிவியல் (பி.எஸ்.சி.,) வேளாண்மை	1
	இளநிலை அறிவியல் (பி.எஸ்.சி.,) தோட்டக்கலை	1
	இளநிலை அறிவியல் (பி.எஸ்.சி.,) வனவளம்	1
	இளநிலை பொறியியல் (பி.இ.,) வேளாண்மை	1
	மொத்த இடங்களின் எண்ணிக்கை	**32**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 12

படலம் - 10

உடற்தகுதி மற்றும் விளையாட்டு மருத்துவத்திற்கான திட்டங்கள்

ஒவ்வொரு மனிதனுக்கும் உடற்தகுதி என்பது ஓர் அடிப்படைத் தேவையாகும். பன்னாட்டு அளவில் சாதனை படைக்க, உடற்தகுதியுடன் கூடிய விளையாட்டுத் திறமை உருவமைக்கப்பட வேண்டும். உடற்தகுதியுடன் சத்தான உணவையும் வழங்குவது முக்கியமானதாகும். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தமிழ்நாடு முழுவதும் உடற்தகுதி மையங்களை நிறுவியுள்ளது.

10.1 மாநில விளையாட்டு வசதி மையம்

திறமையான விளையாட்டு வீரர்கள் தங்களுடைய திறமையினை மேம்படுத்துவதற்கும், காயம் ஏற்படும் காலங்களில் விரைந்து மீள்வதற்கும் அவர்களுக்கு தொழில்முறை உதவிகளான விளையாட்டு மருத்துவம், காணொளி பகுப்பாய்வு, உயிர் இயந்திரவியல், இயன்முறை மருத்துவம் போன்ற வசதிகள் வழங்குவது மிகவும் இன்றியமையாததாகும். இதனடிப்படையில், 2014 ஆம் ஆண்டு சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் மாநில விளையாட்டு வசதி மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இம்மையம் அமைக்கப்பட்ட நாளிலிருந்து மாநிலத்திலுள்ள விளையாட்டு வீரர்கள் பெருமளவில் பயனடைந்துள்ளார்கள்.

10.2 ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையம், மதுரை

விளையாட்டு தொடர்பான காயங்களைத் தடுத்தல், காயமடைந்தவர்களுக்கு தொழில்முறை ரீதியில் புனர் வாழ்வளித்து அவர்கள் மீண்டும் உடற்தகுதியுடன் விளையாட்டில் ஈடுபடுவதன் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு, மதுரையில் ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையம் ஒன்று அமைக்க தமிழ்நாடு புதுமை முயற்சிகளின்கீழ் அரசு ரூ.500.00 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த மையம், விளையாட்டு வீரர்கள் தொடர் மற்றும் அறிவியல் ரீதியில் உயர்நிலைப் பயிற்சி மேற்கொள்வதற்கு ஏதுவாக அமையும்.

2020 மார்ச் 12]

10.3 தலைமைச் செயலக அலுவலர்களுக்கான உடற்பயிற்சிக்கூட வசதிகள்

உடற்செயல்பாடானது, ஆற்றல் அளவு மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துகிறது. அறிவுத் திறன், தன்னம்பிக்கை, பணியாளர்கள் உடல்நலம், மன அழுத்த மேலாண்மை, மனச்சோர்வு மற்றும் பதட்டத்தைக் குறைத்தல் போன்றவற்றைக் கையாள்வதற்கு உடற்தகுதி உதவுகிறது. இதனடிப்படையில், தலைமைச் செயலக ஆண்/பெண் அலுவலர்களுக்கு அரசு தனித்தனியே ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் உடற்பயிற்சி மையம் அமைத்துள்ளது.

10.4 17 மாவட்டங்களில் நவீன உடற்பயிற்சி மையங்கள் அமைத்தல்

உடற்செயல்பாட்டில் ஈடுபடுவதை ஊக்குவிக்கவும், அதனை வாழ்வின் ஒரு பகுதியாக உருமாற்றவும், 17 மாவட்டங்களில் ரூ.405.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீன உடற்பயிற்சி மையங்கள் சென்னை, கடலூர், திண்டுக்கல், கன்னியாகுமரி, மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, நீலகிரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

படலம் - 11

உயர் செயல்திறன் விளையாட்டு மையங்கள்

11.1 முதன்மை நிலை மையங்கள் மற்றும் அகாடமிகள்

திறன் வாய்ந்த விளையாட்டு வீரர்கள் அவர்களுடைய உயர் செயல்திறனை வெளிப்படுத்துவதற்கு ஏதுவாக சிறப்புப் பயிற்சி அளிக்க வேண்டும் என்ற நோக்கில் முதன்மை நிலை மையங்கள் மற்றும் அகாடமிகளை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தி வருகிறது. இந்த மையங்கள் ஒரு விளையாட்டில் மட்டும் சிறப்புக் கவனம் செலுத்தி, அந்த விளையாட்டில் கண்டறியப்பட்ட சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு பன்னாட்டு அளவிலான பயிற்சியினை வழங்குகின்றன. பன்னாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளக்கூடிய அளவிற்கு திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்கள் பயிற்சி மேற்கொள்ளத்

[2020 மார்ச் 12

தேவையான பன்னாட்டுத் தரத்திலான கட்டமைப்பு வசதிகள் இந்த மையங்களில் உள்ளன.

11.2 தமிழ்நாடு மாநில பளுதூக்கும் முதன்மை நிலை மையம்

இந்திய பளுதூக்கும் வரைபடத்தில் வேலூர் மாவட்டம் ஒரு குறிப்பிடத்தக்க இடம் பிடித்துள்ளது. பன்னாட்டு மற்றும் தேசிய அளவிலான பளுதூக்கும் வீரர்கள் பலரை இந்த மாவட்டம் உருவாக்கியுள்ளது. இம்மாவட்டத்திலுள்ள இளைஞர்கள் பளுதூக்கும் விளையாட்டின்மீது பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றனர். அவர்களிடையே பொதிந்துள்ள திறமைகளை ஒருமுகப்படுத்தி வெளிக்கொணர்வதை நோக்கமாகக் கொண்டு வேலூர் சத்துவாச்சாரியில் அரசு தமிழ்நாடு மாநில பளுதூக்கும் முதன்மை நிலை மையம் ஒன்றை ஆண், பெண் இருபாலருக்குமாக அமைத்து இம்மையத்தில் பயிலும் பளுதூக்கும் விளையாட்டு வீரர்களுக்கு அறிவியல்பூர்வமான பயிற்சி, இலவச உண்டு உறைவிட வசதி, சத்தான உணவு, விளையாட்டு உபகரணங்கள் முதலானவை வழங்கப்படுகின்றன.

11.3 மலை மேலிடப் பயிற்சி மையம்

மலை மேலிடத்தில் பயிற்சி மேற்கொள்ளும்போது விளையாட்டு வீரர்களின் ஆற்றல் அதிகரிக்கிறது. ஒரு விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்வதற்குமுன் மேற்கொள்ளப்படும் மலை மேலிடப் பயிற்சி விளையாட்டு வீரர்களின் செயல்பாட்டில் நேர்மறை விளைவுகளை ஏற்படுத்துவதற்கு தூண்டுகோலாக அமையும். இத்தகைய பயிற்சி வசதிகளை தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு அளிப்பதற்கு ஏதுவாக ஊட்டியில் மலை மேலிடப் பயிற்சி மையம் ஒன்று அமைக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டார்கள். இந்த அறிவிப்பின்படி, அரசு 2015 ஆம் ஆண்டில் ரூ.500.00 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த மையத்தில் வருடம் முழுவதும் மலை மேலிடப் பயிற்சி மேற்கொள்ளலாம் என்ற அடிப்படையில் இது நாட்டிலேயே ஒரு தனித்துவமான மையமாகத் திகழும்.

2020 மார்ச் 12]

11.4 பாய்மரப் படகோட்டுதல் அகாடமி மற்றும் பாய்மரப் படகோட்டுதலுக்கான முதன்மை நிலை மையம்

ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் வாய்ப்புள்ள விளையாட்டுகளில் நீர் விளையாட்டான பாய்மரப் படகோட்டுதலும் ஒன்றாகும். தமிழ்நாட்டில் 1,087 கி.மீ. நீளத்திற்கு கடற்கரை அமைந்துள்ளது ஒரு பெரிய சாதகமான சூழ்நிலையாகும். தமிழ்நாட்டில் பாய்மரப் படகோட்டும் வீரர்கள் சர்வதேசப் போட்டிகளில் சிறந்து விளங்கியுள்ளனர். இந்த வீரர்களைக் கருத்தில் கொண்டு சென்னையில் பாய்மரப் படகோட்டுதல் அகாடமி மற்றும் பாய்மரப் படகோட்டுதலுக்கான முதன்மை நிலை மையம் அமைக்க அரசாணை எண் 36, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 8-10-2016-ல் அரசு ரூ.700.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

11.5 கெனோயிங் மற்றும் கயாக்கிங்கிற்கான முதன்மை நிலை மையம்

ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் வாய்ப்புள்ள மற்றொரு நீர் விளையாட்டு கெனோயிங் மற்றும் கயாக்கிங் ஆகும். இந்த விளையாட்டினை மேம்படுத்திடவும், இளந்திறனாளர்களை இந்த விளையாட்டின்பால் ஈர்க்கவும், மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக வளாகத்திற்கு அருகில் கெனோயிங் மற்றும் கயாக்கிங்கிற்கான முதன்மை நிலை மையம் அமைக்க அரசு ரூ.258.10 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. ஆர்வமுள்ள இளைஞர்கள் இந்த வசதியினைப் பயன்படுத்தி தங்கள் திறனை மேம்படுத்திக்கொள்ள இயலும்.

11.6 இறகுப்பந்து மற்றும் மேசைப்பந்து விளையாட்டிற்கான முதன்மை நிலை மையங்கள்

தமிழ்நாட்டில் இறகுப்பந்து மற்றும் மேசைப்பந்து ஆகிய விளையாட்டுகளில் சிறந்த வீரர்கள் உள்ளனர். தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக வளாகத்தில் இறகுப்பந்து மற்றும் மேசைப்பந்து விளையாட்டிற்கான முதன்மை நிலை மையங்கள் அமைக்க முறையே ரூ.13.33 கோடி மற்றும் ரூ.12.60 கோடி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த

[2020 மார்ச் 12

முதன்மை நிலை மையங்கள் இளந்திறனாளர்களை இறகுப்பந்து மற்றும் மேசைப்பந்து விளையாட்டினை நோக்கி ஈர்க்கும்.

படலம் - 12

இளைஞர் நலத் திட்டங்கள்

12.1 இளைஞர் நல இயக்குநரகம்

இளைஞர்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வு மற்றும் ஆளுமை மேம்பாட்டிற்கு உதவும் திட்டங்களை உருவாக்கி, செயல்படுத்தி கண்காணிக்கும் நோக்கத்துடன் இளைஞர் நல இயக்குநரகம் 2013 இல் உருவாக்கப்பட்டது.

தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 15 முதல் 35 வயதுடைய இளைஞர்கள் அதிக அளவில் உள்ளனர். இப்பிரிவினர், நாட்டின் மொத்த மக்கள் தொகையில் மிகவும் துடிப்பான, ஆற்றல் மிக்க பகுதியினராகவும் மாநிலத்தின் வளமான சக்தியாகவும் உள்ளனர். இளைஞர்களின் ஆற்றலை ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளில் ஒருமுகப்படுத்துவதே அவர்களின் முழு ஆற்றலை வெளிக்கொணர்வதற்கான சிறந்த வழியாகும்.

இளைஞர் நல இயக்குநரகம்மூலம் கீழ்க்காணும் இளைஞர் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:

i. இளைஞர்கள், அவர்களது நலன்கள், பயிற்சி மற்றும் வழிநடத்துதல் தொடர்பான பணிகள்.

ii. மாநில மற்றும் தேசிய கட்டமைப்பிற்கான மேம்பாட்டு செயல்பாடுகளில் இளைஞர்களை தன்னார்வத்துடன் பங்கேற்க ஒருங்கிணைத்தல்.

iii. இளைஞர்களிடையே ஆளுமைத் திறன் மற்றும் தலைமைப் பண்பை ஊக்குவிக்கும் வண்ணம் வீரதீரச் செயல்கள், பொறுப்புணர்வு, நம்பிக்கை மற்றும் சாதித்தல் ஆகியவற்றை ஊக்குவிக்கும் நிகழ்ச்சிகளை நடத்துதல்.

2020 மார்ச் 12]

iv. பல்கலைக்கழகங்களுடன் இணைந்து இளைஞர் குண நலன்கள் மற்றும் இளைஞர் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து ஆராய்ச்சி செய்தல்.

v. வேலைவாய்ப்பற்ற மற்றும் தகுதிக்கு குறைவான வேலைவாய்ப்பு பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்த திறன் மேம்பாட்டுச் செயல்பாடுகளை ஊக்குவித்தல்.

vi. இளைஞர்களிடையே விளையாட்டுப் போட்டிகளை நடத்தி ஊக்குவித்தல்.

vii. பல்வேறு பிரிவுகளில் மாநில இளைஞர் விருதுகள் வழங்குவதன்மூலம் திறன்மிக்க இளைஞர்களை அங்கீகரித்தல்.

viii. விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் தொடர்பான பிரிவுகளில் விழிப்புணர்வு கையேடுகள் வெளியிடுதல்.

ix. நேரு இளையோர் மையம், தேசிய மறுகட்டமைப்புப் படைத் திட்டம் போன்ற திட்டங்களைச் சீரிய முறையில் செயல்படுத்துதல்.

x. மாநில இளைஞர் விழாக்கள் நடத்துதல் மற்றும் திறமை மிக்க இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களை தேசிய இளைஞர் விழாவில் பங்கேற்க அனுப்புதல்.

xi. இளைஞர் வருகையினை அதிகரிக்கும் வண்ணம் மாநிலம் முழுவதும் உள்ள புதிய மற்றும் ஏற்கெனவே உள்ள இளைஞர் விடுதிகளை மேம்படுத்தி ஆதரவளித்தல்.

இளைஞர் நல இயக்குநரகமாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் இளைஞர் நல இயக்குநராகவும் செயல்படுவார்.

12.2 இளைஞர் மேம்பாட்டு குறியீடு

இந்திய அரசு இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனம் இந்திய மாநிலங்களில் உள்ள இளைஞர்களின் பல

பரிமாண வளர்ச்சியினை அளவிடும் ஒட்டுமொத்த இளைஞர் மேம்பாட்டுக் குறியீட்டை வெளியிடுகிறது. இந்த ஆய்வுப் பணிக்காக மாநிலங்கள் பெரியவை மற்றும் சிறியவை என வகைப்படுத்தப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டின் இளைஞர் மேம்பாட்டுக் குறியீடு மற்றும் அறிக்கையின்படி, தமிழ்நாடு பெரிய மாநிலங்களில் இரண்டாமிடம் வகிக்கிறது.

12.3 முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது

சமூக நலத்திற்காக இளைஞர்களின் சேவைகளை அங்கீகரிக்கும் பொருட்டு முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது நிறுவப்பட்டது. முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது, 15 முதல் 35 வயது வரையுள்ள 3 ஆண்கள் மற்றும் 3 பெண்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் சுதந்திர தினத்தன்று வழங்கப்படுகிறது. இவ்விருது ரூ.50,000/- ரொக்கப் பரிசு, பதக்கம் மற்றும் சான்றிதழை உள்ளடக்கியது.

2019 ஆம் ஆண்டு கீழ்க்காணும் நபர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சரால் முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது வழங்கப்பட்டது:-

ஆண்கள்

1. திரு. பி. நவீன் குமார், நாமக்கல் மாவட்டம்

2. திரு. எம். ஆனந்த் குமார், திண்டுக்கல் மாவட்டம்.

பெண்கள்

1. செல்வி ஆர். கலைவாணி, மதுரை மாவட்டம்.

12.4 இளைஞர் விடுதிகள்

இளைஞர்கள், கல்வி மற்றும் சாகசப் பயணங்கள் மேற்கொள்ளும்போதும், இன்பச் சுற்றுலா செல்லும்போதும், வரலாற்று மற்றும் கலாச்சார சிறப்புமிக்க இடங்களுக்கு சுற்றுலா செல்லும்போதும் குறைந்த கட்டணத்தில் தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக இளைஞர் விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 12]

இளைஞர் விடுதிகள் மத்திய மற்றும் மாநில அரசுகளின் கூட்டு முயற்சியில் செயல்படும் திட்டமாகும். விளையாட்டு விடுதிகளின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பணிகளை மத்திய அரசு மேற்கொள்ளும் நிலையில், மாநில அரசு முழுவதுமாக மேம்படுத்தப்பட்ட நிலத்தை வழங்குகிறது.

மாநிலத்தில் தற்போது சென்னை, மதுரை, தஞ்சாவூர், நீலகிரி (உதகமண்டலம்) மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 5 இடங்களில் இளைஞர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த இளைஞர் விடுதிகளின் வசதிகளை ஒவ்வோர் ஆண்டும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

12.5 இளைஞர் எழுச்சி நாள்

மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பிற்கிணங்க, பாரத ரத்னா டாக்டர் A.P.J. அப்துல் கலாம் அவர்களது பிறந்த தினத்தினை நினைவுகூரும் வகையில் அக்டோபர் மாதம் 15 ஆம் நாள் இளைஞர் எழுச்சி நாளாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

படலம்-13

தேசிய மாணவர் படை

13.1 தொடக்கம்

தேசிய மாணவர் படை, பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட தேசிய மாணவர் படை சட்டம் 1948-ன்கீழ் தோற்றுவிக்கப்பட்டது. 15-7-1948 அன்று முதல் முறையாக இது செயல்பட தொடங்கியது. தமிழ்நாட்டில் 1948 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கல்லூரி அளவிலும், பள்ளிகளில் மாணவர்களுக்கான தேசிய மாணவர் படை பயிற்சி 1949 ஆம் ஆண்டு 1550 பள்ளி மாணவர்களுடன் துவக்கப்பட்டது. 1954 ஆம் ஆண்டு மாணவியருக்கான தேசிய மாணவர் படையின் பயிற்சி துவக்கப்பட்டது. தமிழ் நாட்டில் தேசிய மாணவர் படையின் இயக்குநரகம் 5 தொகுதி தலைமையிடங்களையும், 51 அலகுகளையும் கொண்டு செயல்பட்டு வருகிறது.

13.2 குறிக்கோள்

அ) நற்பண்பு, நட்புடமை, ஒழுக்கம், தலைமைப் பண்பு, சமய சார்பின்மை, துணிந்து செயலாற்றல் மற்றும் உன்னதமான தன்னலமற்ற சேவைப் பண்பினை நாட்டின் இளைஞர்களிடையே வளர்த்தல்.

ஆ) இளைஞர்களை முறைப்படுத்தி, பயிற்சியளித்து, ஊக்குவித்து, வாழ்வின் அனைத்து நிலைகளிலும் தலைமைப் பண்பினை வழங்கவும் நாட்டின் சேவைக்கு எப்பொழுதும் தயார் நிலையில் விளங்கக்கூடிய மனித வளத்தை உருவாக்குதல்.

இ) இராணுவத்தில் பணிபுரிவதற்கு இளைஞர்களை ஊக்குவிக்கும் தகுந்த சூழலை ஏற்படுத்துதல்.

13.3 நிருவாகம்

மத்திய பாதுகாப்பு அமைச்சகம், தேசிய மாணவர் படை செயல்பாட்டை தலைமை இயக்குநர், தேசிய மாணவர் படை மற்றும் மாநில இயக்குநரகங்கள்மூலம் நிருவகித்து வருகிறது. தேசிய அளவில் தற்போது, 17 மாநில இயக்குநரகங்கள் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் தேசிய மாணவர் படை, துணைத் தலைமை இயக்குநர் அவர்களை துறைத் தலைவராகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இத்துறை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் நிருவாக வரம்பின்கீழ் செயல்பட்டு வருகின்றது.

13.4 நிதி ஒதுக்கீடு

தமிழக அரசு, 2020-2021 ஆம் ஆண்டிற்கான நிதியாக, தேசிய மாணவர் படைத் துறைக்கு ரூ.57.24 கோடியினை ஒதுக்கியுள்ளது.

13.5 சேர்க்கை மற்றும் பரவல்

தேசிய மாணவர் படையில் சேர்வது மாணாக்கர்களின் விருப்பத்தைப் பொருத்ததாகும். தமிழ்நாடு இயக்குநரகம் 498 கல்லூரிகளில் 31,536 முதுநிலை மாணவர்/மாணவியர் மற்றும் 902

2020 மார்ச் 12]

பள்ளிகளில் 70,424 இளநிலை மாணவர்/மாணவியர் ஆக மொத்தம் 1,01,960 மாணவ/மாணவியர்களைக் கொண்டு செயல்படுகிறது.

13.6 இணை தேசிய மாணவர் படை அலுவலர்கள் (ANOs)

*ஒவ்வொரு இணைக்கப்பெற்ற கல்வி நிறுவனங்களிலும் தேசிய மாணவர் படைப் பயிற்சியானது இணை தேசிய மாணவர் படை அலுவலரால் ஒருங்கிணைக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகிறது. இவர் இணை தேசிய மாணவர் படை அலுவலராக நியமிக்கப்பட்டுள்ள கல்வி நிறுவனத்தின் ஆசிரியர் ஆவார். இவர் இணை தேசிய மாணவர் படை அலுவலராக நியமிக்கப்படுவதற்குமுன் தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்கு சிறப்புக் கவனம் செலுத்தி பயிற்சி அளிப்பதற்கு ஏதுவாக அடிப்படை இராணுவ பயிற்சி பெறுவார். தற்போது, 323 முதுநிலை மாணவர்/மாணவியர் இணை தேசிய மாணவர் படை அலுவலர்களும், 722 இளநிலை மாணவர்/மாணவியர், இணை தேசிய மாணவர் படை அலுவலர்களும் அந்தந்த அலகுகளின் அதிகாரியின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி, கல்வி நிறுவனங்களின் தேசிய மாணவர் படை செயல்பாடுகளை ஒருங்கிணைக்கிறார்கள். இந்த இணை தேசிய மாணவர் படை அலுவலர்கள் தவிர 346 காப்பாளர்கள் (*Care Takers*), எந்தெந்த கல்வி நிறுவனங்களில் இணை தேசிய மாணவர் படை பதவிகள் தற்காலிகமாக காலியாக உள்ளதோ அங்கு தேசிய மாணவர் படை மாணாக்கர்களது பயிற்சியினை மேற்பார்வையிட நியமிக்கப்படுகிறார்கள்.*

13.7 ஊக்கத்தொகைகள் மற்றும் சலுகைகள்

2019 ஆம் ஆண்டில், அரசு தேசிய மாணவர் படை மாணவர்களது தலைசிறந்த சாதனைகளுக்கான ஊக்கத் தொகையினை ஏறத்தாழ இரு மடங்காக உயர்த்தியதுடன், பல பெருமைமிகு தேசிய நிகழ்வுகளான தரைப்படை, விமானப் படை, கடற்படை முகாம்கள், இளைஞர் பரிமாற்றத் திட்டம், மலையேற்றப் பயிற்சி, துப்பாக்கி சுடுதல் மற்றும் விளையாட்டுப் போட்டிகளையும் உள்ளடக்கி ஆணையிட்டுள்ளது. மேலும், அரசு தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு கீழ்க்கண்ட ஊக்கத்தொகை மற்றும் சலுகைகளை அளித்து வருகிறது:

[2020 மார்ச் 12

➢ தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்கு, தேசிய மாணவர் படை சார்ந்த தலை சிறந்த சாதனைகளுக்காக அரசு ஆண்டுதோறும் ரூ.13,47,250/- ஊக்கத்தொகையாக வழங்கி வருகிறது.

➢ தேசிய மாணவர் படையில் 200 முதுநிலை மாணாக்கர்களுக்கு மாதம் ரூ.500/- வீதம் பத்து மாதங்களுக்கும், 400 இளநிலை மாணாக்கர்களுக்கு மாதம் ரூ.200 வீதம் 10 மாதங்களுக்கும் ஒவ்வோர் ஆண்டும் ரூ.18,00,000/- ஊக்க தொகையாக வழங்கப்படுகிறது.

➢ தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வுகளில் NCC B&C Certificates பயிற்சி பெற்ற மாணாக்கர்களுக்கு கூடுதலாக 2 மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன.

➢ நேரடி தேர்வுக்காக BT உதவியாளர் மற்றும் PG உதவியாளர்கள் தேர்வில் வழங்கப்படும் 12 மதிப்பெண்களில் தேசிய மாணவர் படையில் செய்த செயல்பாடுகளுக்காக மாணவர்களுக்கு 1/2 மதிப்பெண் வழங்கப்படுகிறது.

13.8 சாதனைகள்

தமிழக தேசிய மாணவர் படை மாணவர்கள் எப்போதும் போல் அனைத்து நடவடிக்கைகளிலும் துடிப்புடன் செயல்பட்டு வருகின்றார்கள். அரசு தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வருகிறது. கடந்த 13 ஆண்டுகளாக, தமிழ்நாடு தேசிய மாணவர் படை இயக்குநரகம், நாட்டிலுள்ள 17 இயக்குநரகங்களுக்கிடையே தொடர்ச்சியாக முதல் ஐந்து இடங்களை தக்கவைத்து வருகிறது. நடப்பாண்டில் இவ்வியக்குநரகம் போட்டியிட்ட 17 இயக்குநரகங்களுக்குள் ஒட்டுமொத்தமாக மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.

நமது மாணவர்களின் சமீபத்திய சாதனைகள் சில பின்வருமாறு:

2020 மார்ச் 12]

13.8.1 குடியரசு தின விழா முகாம், டெல்லி-2020

புதுடெல்லியில் நடைபெற்ற 2020 ஆம் ஆண்டிற்கான குடியரசு தின முகாமில் நமது மாணவர்கள் ஒட்டு மொத்த நிகழ்வில் 3-ம் இடத்தை வென்றுள்ளனர். 2020 ஆம் ஆண்டிற்கான குடியரசு தின முகாமில் நமது அணியினரின் சாதனைகள் பின்வருமாறு:

வரிசை எண்	நிகழ்வு	நிலை	மொத்த பங்கேற்பாளர்கள்
தனி நபர் போட்டிகள்			
1	சிறந்த மாணவர்கள் முதுநிலை தரைப்படை	தங்கம்	01
2	சிறந்த மாணவர்கள் முதுநிலை விமானப்படை	தங்கம்	01
3	சிறந்த மாணவியர் முதுநிலை விமானப்படை	தங்கம்	01
4	சிறந்த மாணவர்கள் இளநிலை விமானப்படை	தங்கம்	01
5	குதிரை அணி போட்டிகள்	வெள்ளி	01
		வெண்கலம்	01
குழு போட்டிகள்			
6	இசையணி	தங்கம்	35
7	கடற்படை வடிவமைப்பு	வெள்ளி	03

13.8.2 விமானப்படை முகாம்

அக்டோபர் 2019 ஆம் ஆண்டில் ஜோத்பூரில் நடைபெற்ற விமானப்படை முகாமில் விமானப்படை இயக்குநரகத்தைச்

சார்ந்த தமிழக மாணவிகள் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளனர். பறக்கும் போட்டி, வானூர்தி வடிவமைப்புப் போட்டியில் தமிழக மாணவர்கள் முதல் இடத்தை வென்றுள்ளனர். இரண்டு மாணவர்கள் நிலையான வானூர்தி வடிவமைப்புப் போட்டியில் தங்கப் பதக்கமும், இரண்டு மாணவர்கள் வானூர்தி வடிவமைப்பு கண்ட்ரோல் லைன் போட்டியில் வெண்கலப் பதக்கங்களும் வென்றுள்ளனர்.

13.8.3 கடற்படை முகாம்

அக்டோபர், 2019 ஆம் ஆண்டில் ஆந்திர பிரதேச மாநிலம் விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற கடற்படை முகாமில் நமது கடற்படை மாணவர்கள் முதல் இடத்தைப் பெற்று ஒட்டுமொத்த கோப்பையை வென்றுள்ளனர். தமிழக மாணவர்கள் படகு இழுவை போட்டி, ட்ரில் மற்றும் கடற்படை பயிற்சிப் போட்டியில் முதல் இடத்தையும் துப்பாக்கி சுடுதல், ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம், படகில் பாய் மரம் கட்டுதல் போன்ற போட்டிகளில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

13.8.4 தரைப்படை முகாம் (மாணவிகள்)

செப்டம்பர் 2019 இல் புதுடெல்லியில் நடைபெற்ற மாணவிகளுக்கான தரைப்படை முகாமில், தனி நபர்களுக்கான போட்டிகளில் தமிழக மாணவிகள் துப்பாக்கி சுடும் போட்டியில் வெள்ளி பதக்கமும், ஆரோக்கியம் (ம) சுகாதாரம் மற்றும் தடைதாண்டும் பயிற்சியில் வெண்கலப் பதக்கமும் வென்றுள்ளனர்.

3.8.5 குடியரசு தின விழா அணிவகுப்பு, மெரினா, சென்னை-2020

மாண்புமிகு ஆளுநர் மற்றும் முதலமைச்சர் முன்னிலையில் சென்னை மெரினாவில் நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பில் தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் சிறந்த முறையில் பங்கேற்றனர். 51 முதுநிலை மாணவர்கள் மற்றும் 51 முதுநிலை மாணவியர்கள் இந்த அணிவகுப்பில் கலந்து கொண்டனர். அமராவதி நகர், சைனிக் பள்ளியைச் சேர்ந்த 3 இசைக் குழு மாணவர்கள் இந்த அணிவகுப்பில் பங்கேற்றனர். 2018

2020 மார்ச் 12]
முதல் தமிழக அரசு இந்நிகழ்வுக்காக ரூ.6.80 இலட்சத்தை தொடர் செலவினமாக அனுமதித்து ஆணை வெளியிட்டுள்ளது. இது தேசிய மாணவர் படை அணியின் தரத்தினை பல வகைகளில் உயர்த்தி உள்ளது.

13.8.6 தேசிய மாணவர் படை நாள் விழா

22-11-2019 அன்று தமிழகம் முழுவதும் தேசிய மாணவர் படை தினம் கொண்டாடப்பட்டது. சென்னை கலைவாணர் அரங்கில் இந்நாளின் முதன்மை விழா நடைபெற்றது. இந்நிகழ்வினைக் குறிக்கும் வகையில் தமிழகம் முழுவதும் இரத்ததான முகாம்கள் நடத்தப்பட்டன.

13.8.7 சர்வதேச யோகா தினம்

21-06-2019 அன்று மாநிலத்தின் 597 மையங்களில் தேசிய மாணவர் படையால் நடத்தப்பட்ட சர்வதேச யோகா தினத்தில் தமிழக தேசிய மாணவர் படை இயக்குநரகத்தின் 61,005 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

13.8.8 சமூக சேவை செயற்பாடுகள்

தேசிய மாணவர் படை சமூக சேவைகள்மூலம் சமூகத்திற்கு தனது பங்களிப்பை அளிக்கிறது. இந்த இயக்குநரகம் பல்வேறு விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் நடத்தியும் மற்றும் சமுதாயத்திற்கு உதவிக் கரங்களை நீட்டியும் உதவி செய்து வருகிறது. தூய்மை பிரச்சாரம் நெகிழி எதிர்ப்புப் பேரணி, புகையிலை எதிர்ப்பு பிரச்சாரம், எய்ட்ஸ் விழிப்புணர்வு பிரச்சாரம், சாலை பாதுகாப்பு, டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை, உடல் உறுப்பு தானம் போன்றவை நகரம் மற்றும் புறநகர் பகுதிகளில் நடத்தப்பட்டன.

13.8.9 இளைஞர் பரிமாற்றத் திட்டம்

குடியரசு தின அணிவகுப்பில் சிறந்து விளங்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணாக்கர்கள் நட்பு நாடுகளுக்கிடையேயான இளைஞர்கள் பரிமாற்றத் திட்டத்தில் பங்கேற்க தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். 2019-2020 ஆம் ஆண்டில் இந்த இயக்குநரகத்தைச் சேர்ந்த 9 மாணவர்கள் ரஷ்யா, கஜகஸ்தான், இலங்கை, சிங்கப்பூர், வியட்நாம்,

[2020 மார்ச் 12

பூட்டான் மற்றும் வங்காளதேசம் ஆகிய நட்பு நாடுகளுக்குச் சென்று இந்தத் திட்டத்தில் கலந்து கொண்டனர்.

13.8.10 முகாம் நடத்துதல் மற்றும் மாணாக்கரின் வருகை

2019-20 ஆம் ஆண்டில் 63,461 மாணாக்கர்கள் மாநிலத்தின் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட 139 முகாம்களில் பயிற்சி பெற்றனர். மேலும், நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள இவ்வியக்குநரகங்களால் நடத்தப்பட்ட மைய முகாம்களுக்கு இந்த இயக்குநரகத்தின் மாணாக்கர்கள் மலையேற்றம், பாறையேறுதல், பாய்மரப்படகு ஓட்டுதல், தேசிய ஒருமைப்பாடு, மலையேறும் சாகச பயிற்சி மற்றும் பணியமைப்பு சார்ந்த இனங்களில் பங்கேற்க பரிந்துரைக்கப்பட்டனர்.

13.8.11 பெருங்கடல் சாகசப் பயணம்

புதுவை மாநிலம் காலபேட் பகுதியில் இருந்து நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடி இடையேயான 456 கி.மீ. தூரத்தினை இரு மார்க்கமாக 10 நாட்களுக்குள் கடக்கும் “சமுத்திரகாமி” எனும் பெருங்கடல் சாகசப் பயணம் 09-7-2019 முதல் 19-7-2019 வரை நடத்தப்பட்டது. இதில் தமிழ்நாட்டைச் சார்ந்த 25 முதுநிலை மாணவர்கள், 15 முதுநிலை மாணவியர்கள் மற்றும் 1 இணை தேசிய மாணவர் படை அலுவலர் ஆகியோர் பங்கேற்றனர்.

13.9 உள்கட்டமைப்பு மேம்பாடு

13.9.1 மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், இடையப்பட்டி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள தேசிய மாணவர் படை பயிற்சி அகாடமி

1-9-2017 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் இடையப்பட்டியில் தேசிய மாணவர் படை பயிற்சி அகாடமி துவக்கி வைக்கப்பட்டது. இந்த அகாடமியானது 310 மாணவர்கள் 210 மாணவிகள் தங்கும் அளவிற்கு இடவசதி மற்றும் ஆயுதப் பயிற்சி, ஓட்டுதல் பாவிப்பு, குறுகிய எல்லைக்கான துப்பாக்கி சுடும் பயிற்சி, டிரில் பயிற்சி, தடை தாண்டும் பயிற்சி, செயற்கை பாறையேற்ற அமைப்பு, ஆங்கில மொழி ஆய்வுக்கூடம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

2020 மார்ச் 12]

2019-20 ஆம் ஆண்டுக்கான பயிற்சி ஆண்டில் ஒட்டுமொத்த 19 பயிற்சி முகாம்களில் 9,500 மாணாக்கர்கள் கலந்துகொண்டனர்.

13.9.2 மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், இடையப்பட்டி கிராமத்தில் தேசிய மாணவர் படை பயிற்சி அகாடமியில் ஆங்கில மொழி ஆய்வுக்கூடம், குறுகிய எல்லைக்கான துப்பாக்கி சுடும் பாவிப்பு மற்றும் ஓட்டுதல் பாவிப்பு

அரசு ஒப்பளித்துள்ளபடி மாணவர்களது பயிற்சிக்காக புதுமை முயற்சி திட்டத்தின்கீழ், கீழ்க்கண்டவை கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளன:

*(i) ரூ.81,51,636/- செலவில் இடையப்பட்டி கிராமத்தில் தேசிய மாணவர் படை பயிற்சி அகாடமியில் துப்பாக்கி சுடும் பாவிப்பு, ஓட்டுதல் பாவிப்பு மற்றும் சென்னை தாம்பரத்தில் உள்ள 1 (*TN) Air Sqn NCC-*ல் நகரக்கூடிய கேபினுடன் கூடிய வானூர்தி பாவிப்பு நிறுவப்பட்டது.*

(ii) இடையப்பட்டி அகாடமியில், தேசிய மாணவர் படை மாணவர்களின் ஆங்கில மொழிப்புலமையை மேம்படுத்துவதற்காக, ஆங்கில மொழி ஆய்வகம் ரூ.14,99,716/- செலவில் நிறுவப்பட்டது.

13.9.3 மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், இடையப்பட்டி கிராமத்தில் தேசிய மாணவர் படை பயிற்சி அகாடமியில் செயற்கை பாறை ஏறுதல் அமைப்பு

2016-2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின்கீழ் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக மதுரை மாவட்டம், இடையப்பட்டி கிராமத்தில் தேசிய மாணவர் படை பயிற்சி அகாடமியில் ரூ.28,53,956/- செலவில் செயற்கை பாறை ஏறுதல் அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

13.9.4 படகோட்டுதல் பாவிப்பு

தேசிய மாணவர் படை கடற்படை மாணவிகளின் பயிற்சியை மேம்படுத்தும் பொருட்டு படகோட்டுதல் பாவிப்பு நிறுவ ரூ.30.00 இலட்சத்தை அரசு ஒப்பளித்தது.

[2020 மார்ச் 12

13.9.5 வானூர்தி பாவிப்பு

தேசிய மாணவர் படை விமானப் படை மாணவியரின் பயிற்சிக்காக வானூர்தி பாவிப்புகள் கொள்முதல் செய்யப்பட்டு 2(TN) Air Sqn NCC, Coimbatore மற்றும் 5 (TN) Air Sqn(T) NCC, Salem ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

13.9.6 தேசிய மாணவர் படை முகாம்களுக்கான உயிரி கழிவறைகள்

தமிழக அரசு, புதுமை முயற்சித் திட்டத்தின்கீழ் (TANII) 2018-2019 ஆம் ஆண்டு 5 தொகுதி தலைமையிடத்திற்கும் உயிரி கழிவறைகள் வாங்க ரூ.18.68 இலட்சம் ஒப்பளிப்பு அளித்துள்ளது. இவ்வுயிரி கழிவறைகள் முகாம்களின்போது பயன்படுத்துவதற்காக கொள்முதல் செய்யப்பட்டு அளிக்கப்பட்டுள்ளன.

13.9.7 காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், நீர்பெயர் கிராமத்தில் நிலையான பயிற்சி முகாம் மற்றும் பயிற்சி அமைப்பு அமைத்தல்

2018-2019 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவையில் விதி 110-ன்கீழ் காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், நீர்பெயர் கிராமத்தில் தேசிய மாணவர் படை நிரந்தர பயிற்சி முகாம் மற்றும் பயிற்சி அமைப்பு ஏற்படுத்தப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்கள். மேற்படி அறிவிப்பிற்கிணங்க, இப்பயிற்சி முகாம் அமைக்க அரசாணை எண் 26, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை நாள், 1-12-2018-ல் ரூ.4.86/- கோடியை அரசு ஒப்பளித்துள்ளது.

13.9.8 தேசிய மாணவர் படை பயிற்சி உள்கட்டமைப்புகளை நவீனப்படுத்துதல் திட்டத்தின்கீழ் அமராவதி நகரில் உள்ள சைனிக் பள்ளியில் .22மிமீ துப்பாக்கி சுடும் பாவிப்பு அமைத்தல்

2018-19 ஆம் ஆண்டில் சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு பயிற்சிக்காக உள்கட்டமைப்புகள் நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் அமராவதி நகரில் உள்ள சைனிக் பள்ளியில் .22மி.மீ. துப்பாக்கி சுடும் பாவிப்பு அமைக்கப்படும் என அறிவித்தார்கள். அவ்வாறே துப்பாக்கி சுடும் பாவிப்பு கொள்முதல் செய்ய அரசாணை (2ப) எண் 1, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 6-1-2020-ல் ரூ.4,56,951/-ஐ அரசு ஒப்பளித்துள்ளது.

2020 மார்ச் 12]

படலம் - 14

நாட்டு நலப்பணித் திட்டம்

நாட்டு நலப்பணித் திட்டமானது தேசத் தந்தை மகாத்மா காந்தியின் பிறந்த நூற்றாண்டான 1969 ஆம் ஆண்டு செப்டம்பர் 24-ம் தேதி துவங்கப்பட்டது. இதனை 1969 இல் நடைமுறைப்படுத்திய மாநிலங்களில் ஒன்றான தமிழகம் 3,000 மாணவர் தொண்டர்களைக் கொண்டிருந்தது. தற்போது, தமிழ்நாட்டில் 43 பல்கலைக்கழகங்கள் மற்றும் இயக்குநரகங்களில் 3,90,700 மாணவர்கள் நாட்டு நலப்பணித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நாட்டு நலப்பணித் திட்டமானது இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின்கீழ் செயல்பட்டு வருகிறது. மாநில அளவில் கல்லூரி கல்வி இயக்குநர் மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட மாநில ஒருங்கிணைப்பாளர் அவர்களின் தலைமையில் கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தில் மாநில நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் மூலமாக இக்குழுமம் செயல்பட்டு வருகிறது.

2016-2017 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் மத்திய அரசு திட்டமாக மாற்றப்பட்டு அதற்கான முழு செலவினங்களையும் மத்திய அரசே வழங்கிவருகிறது.

14.1 நோக்கம்

நாட்டு நலப்பணித் திட்டத்தின் நோக்கம் “NOT ME BUT YOU” ஆகும்.

14.2 நாட்டு நலப்பணித் திட்ட தினம்

ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 24 ஆம் நாள் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் சிறப்பு நிகழ்ச்சிகள் மற்றும் செயல்பாடுகளுடன் நாட்டு நலப்பணித் திட்ட நாள் கொண்டாடப்படுகிறது.

14.3 செயல்பாடுகள்

நாட்டு நலப்பணித் திட்ட செயல்பாடானது இரு பெரும் பிரிவுகளைக் கொண்டது. அவை (1) தொடர்பணிச் செயல்பாடுகள் (2) சிறப்பு முகாம் பணிகள்.

14.3.1 தொடர்பணிச் செயல்பாடுகள்

நாட்டு நலப்பணித் திட்டத்தின்கீழ் தங்களை இணைத்துக் கொண்ட மாணவர்கள் இரண்டு ஆண்டு காலத்தில் வார இறுதி நாட்கள் அல்லது பள்ளி/கல்லூரி நேரங்களுக்குப் பின்னர் சுமார் 240 மணி நேரம், தத்தெடுக்கப்பட்ட கிராமங்கள், கல்லூரி/பள்ளி வளாகங்களில் மேம்பாட்டிற்கான செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

நாட்டு நலப்பணித் திட்ட அலகுகள் கொண்ட கல்வி நிறுவனங்களில் வளாகம் அழகுபடுத்துதல்/தூய்மை செய்தல், மரம் நடுதல், இரத்த தானம், தலைமைத்துவப் பண்பு மற்றும் ஆளுமைத் திறன் வளர்த்தல் நடவடிக்கைகள்/நிகழ்ச்சிகள் உடல்நலம், சுகாதாரம், நுகர்வோர் உரிமை, புதிய வாக்காளர் இணைப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், நெகிழி பயன்பாட்டினால் ஏற்படும் பாதிப்பு, சாலைப் பாதுகாப்பு, பேரிடர் மேலாண்மை, முதலுதவி, மென்திறன், தொழில் முனைவோர் மேம்பாடு, பணி வழிகாட்டுதல், மழைநீர் சேகரிப்பு, முக்கிய நாட்களை அனுசரித்தல், பண்புகள் குறித்த நிகழ்ச்சிகள், தேசிய ஒருமைப்பாடு மற்றும் சமூக ஒற்றுமை போன்ற நிகழ்ச்சிகளை மேற்கொள்வார்கள். கூடுதலாக கிராமப்புற வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான அடிப்படை தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் பெண்களுக்கான சுய வேலைவாய்ப்புப் பயிற்சியும் நடத்தப்பட்டு வருகிறது.

14.3.2 சிறப்பு முகாம் பணிகள்

இத்திட்டத்தின்கீழ், தத்தெடுக்கப்பட்ட கிராமங்கள் அல்லது குடிசைப் பகுதிகளில் ஒரு குறிப்பிட்ட கருப்பொருளின் அடிப்படையிலான செயல்பாடுகளை மேற்கொள்ள விடுமுறை நாட்களில் 7 நாட்கள் முகாம் நடத்தப்படுகின்றது. நடைமுறையிலுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி இம்முகாம்களில் 50 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வலர்கள் ஈடுபடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இம்முகாம்கள், மாணவர்களுக்கு அர்த்தமுள்ள வெளிப்புற செயல்பாடுகளில் ஈடுபட தனிச் சிறப்பு மிக்க வாய்ப்பினை வழங்கி, அவர்களின் ஆற்றலை சமுதாய மேம்பாட்டிற்குப் பயன்படுத்த உதவுகிறது. முகாம்கள் மாணவர்களது கண்ணோட்டத்தை

2020 மார்ச் 12]

விரிவாக்க உதவுவதுடன், சுயஒழுக்கம், தன்னம்பிக்கை, கூடி வாழ்தல், நேர்மறையான மனப்பான்மை, சகிப்புத்தன்மை மற்றும் தலைமைத்துவப் பண்புகளை விதைப்பதுடன் தேசிய உணர்வு மற்றும் சமுதாய பொறுப்புணர்வை வளர்க்கிறது. முகாம்களின்போது, தன்னார்வலர்கள் தத்தெடுக்கப்பட்ட கிராமங்கள்/ குடிசைப் பகுதிகளில் கழிப்பறை, வகுப்பறை, பேருந்து நிழற்குடை, சுற்றுச்சுவர், தண்ணீர் அடிகுழாய்க்கான அடித்தளம் அமைத்தல், வகுப்பறை தளம் அமைத்தல், கிராமங்களில் குடிநீருக்கான குழாய் அமைத்தல் மற்றும் மழைநீர் சேமிப்புத் தொட்டிகள் புதுப்பித்தல்/ அமைத்தல் போன்ற நிலைத்து நிற்கக்கூடிய கட்டமைப்புகளை உருவாக்கியுள்ளனர்.

14.4 நிதி உதவி

தொடர் பணி செயல்பாட்டிற்கு ஒரு வருடத்திற்கு ஒரு தொண்டருக்கு ரூ.250/- மற்றும் சிறப்பு முகாம் பணிகளுக்கு 7 நாள் முகாமிற்கு, ஒரு தொண்டருக்கு ரூ.450/- என்ற வீதத்தில் இந்திய அரசின் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு அமைச்சகம் மானியம் வழங்குகிறது.

14.5 சுழல் நிதி

முதலாமாண்டு கல்லூரியில் சேரும் ஒவ்வொரு மாணவ/மாணவியரிடமிருந்தும் சுழல் நிதியாக ரூ.10/- வசூலிக்கப்படுகிறது. இத்தொகையில் அந்தந்த கல்லூரி நிறுவனத்திற்கு ரூ.5/-ம், பல்கலைக்கழகம்/இயக்ககத்திற்கு ரூ.3/-ம், மாநில நாட்டு நலப்பணித் திட்ட குழுமத்திற்கு ரூ.2/-ம் பகிர்ந்தளிக்கப்படுகிறது. நாட்டு நலப்பணித் திட்டக் குழுமத்திடம் ரூ.43,53,830/- இருப்பில் உள்ளது. இத்தொகையானது, மாநில நாட்டு நலப்பணித் திட்ட ஆலோசனைக் குழுவின் ஒப்புதலுடன் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களுக்கு மாநில அளவில் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு செலவிடப்படுகிறது.

14.6 தேசிய அளவிலான நிகழ்ச்சிகள்

புதுடெல்லியில் நடைபெற்ற 2020 ஆம் ஆண்டிற்கான குடியரசு தின அணி வகுப்பில் பங்கேற்பதற்காக நாட்டு நலப்பணித் திட்ட

[2020 மார்ச் 12

தொண்டர்களைத் தேர்ந்தெடுக்க திருச்சியில் தேசிய அளவிலான மாதிரி குடியரசு தின அணிவகுப்பு முகாம் நடைபெற்றது. அம்முகாமில் 200 நாட்டு நலப்பணித் திட்ட தொண்டர்கள் மற்றும் 7 திட்ட அலுவலர்கள் தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களிலிருந்து கலந்து கொண்டனர்.

கர்நாடகாவில் உள்ள பல்கலைக்கழகங்களில் நடைபெற்ற தேசிய அளவிலான ஒருங்கிணைப்பு முகாம்களில் நாட்டு நலப்பணித் திட்ட தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழகங்கள் மற்றும் இயக்குநரகங்களைச் சார்ந்த நாட்டு நலப்பணித் திட்ட தொண்டர்கள் ஃபிட் இந்தியா இயக்கம், பிளாகிங் ஓட்டம், போஷன் அபியான், தூய்மை இந்தியா, ஜல்சக்தி அபியான், ஸ்வட்ச்த்தா ஹை—சேவா, டிஜிட்டல் இந்தியா இளைஞர் பாராளுமன்றம், ஃபிட் இந்தியா சைக்ளோத்தான் மற்றும் ஏக் பாரத் ஷ்ரேஸ்தா பாரத் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்.

14.7 நாட்டு நலப்பணித் திட்டத்தின் சாதனைகள்

➢ 2019-20 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் உள்ள நாட்டு நலப்பணித் திட்ட தொண்டர்களின்மூலம் 4,914 தத்தெடுக்கப்பட்ட கிராமங்களில் தொடர் பணி மற்றும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. 3,782 சிறப்பு முகாம்கள் 1,57,850 நாட்டு நலப்பணித் திட்ட தொண்டர்களைக் கொண்டு நடத்தப்பட்டன. மேலும், 678 அலகுகள் இரத்தம், நாட்டு நலப்பணித் திட்ட தொண்டர்களால் நன்கொடையாக வழங்கப்பட்டது. மாநிலம் முழுவதும் 2,789 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. 7,699 சுகாதார மற்றும் கண் பரிசோதனை முகாம்கள் நாட்டு நலப்பணித் திட்ட அலகுகளால் நடத்தப்பட்டன மற்றும் 56,920 மரக்கன்றுகள் மாநிலம் முழுவதும் நடப்பட்டன.

➢ 26-1-2020 அன்று சென்னை மெரினாவில் நடைபெற்ற கோலாகலமான குடியரசு தினவிழா கொண்டாட்ட அணிவகுப்பில் 80 நாட்டு நலப்பணித் திட்ட ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். மாநில குடியரசு தினவிழா கொண்டாட்ட அணிவகுப்பில் நாட்டு நலப்பணித் திட்ட தொண்டர்கள் 6-வது முறையாக கலந்துகொண்டனர்.

2020 மார்ச் 12]

➢ *உத்தரபிரதேசத்தில் உள்ள லக்னோவில் 2020, ஜனவரி 11 முதல் 17 வரையில் நடைபெற்ற தேசிய இளைஞர் விழாவில் முப்பது நாட்டு நலப்பணித் திட்ட தொண்டர்கள் மற்றும் இரண்டு திட்ட அலுவலர்கள் தமிழ்நாடு சார்பாக கலந்து கொண்டனர்.*

14.8 நாட்டு நலப்பணித் திட்ட மாநில விருது

நாட்டு நலப்பணித் திட்ட வளர்ச்சி செயல்பாடுகளில் திட்ட ஒருங்கிணைப்பாளர், திட்ட அலுவலர் மற்றும் தன்னார்வலர்களின் தலைசிறந்த பங்களிப்பினை அங்கீகரிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு நாட்டு நலப்பணித் திட்ட மாநில விருதை நிறுவியுள்ளது. இவ்விருதுகள் 1991 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகின்றன. இவ்விருது திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் திட்ட அலுவலர்களுக்கு ரூ.3,000/-ம் ரொக்கப் பரிசும், தன்னார்வலர்களுக்கு ரூ.2,000/-ம் ரொக்கப் பரிசு, சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இதற்கான செலவினம் நாட்டு நலப்பணித் திட்ட மாநில குழும சுழல் நிதிக் கணக்கிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

படலம்-15

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு அரசின் சட்டத்தால் நிறுவப்பட்ட தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகமானது இந்தியாவிலேயே விளையாட்டு மற்றும் உடற்கல்வியியலுக்காக பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகமாகும்.

இப்பல்கலைக்கழகம் வண்டலூர் - கேளம்பாக்கம் சாலையில் உள்ள தற்போதைய வளாகத்திற்கு 2011 ஆம் ஆண்டில் மாற்றப்பட்டது. தற்போது தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் மூன்று புலம் ஐந்து துறைகள் மற்றும் 24 உறுப்புக் கல்லூரிகள் உள்ளன. மேலும், புதுதில்லியிலுள்ள பல்கலைக்கழக மானியக் குழு/தொலைதூர கல்வி இயக்ககத்தால் அங்கீகரிக்கப்பட்ட உடற்கல்வியியல், யோகா மற்றும் அதைச்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 12

சார்ந்த பிரிவுகளில் பாடத்திட்டங்களை இப்பல்கலைக்கழகத்தின் தொலைதூர கல்வித் திட்டம் வழங்குகிறது.

15.1 தொலைநோக்கு

"ஒன்று சேர்ந்த உடல், மனம் மற்றும் ஆன்மாவின்மூலம் மனித வளத்தை முழுமையாக ஒருங்கிணைத்து கற்பித்தல், பயிற்சி, ஆராய்ச்சி, அளப்பரிய செயல்முறை மற்றும் புதிய திட்டங்கள்மூலம் உடற்கல்வி மற்றும் விளையாட்டில் செம்மை நிலையினை அடைவதற்காக செயல்களில் ஈடுபடுவதாகும்".

15.2 குறிக்கோள்

1. *மாணவர்களது கற்றல் மற்றும் தொழில்முறை வளர்ச்சியில் முதன்மை நிலையை வளர்ப்பதற்கான கற்றல், பாண்டித்தியம், தொழில்முறை மனப்பான்மை மற்றும் கூட்டு முயற்சி போன்றவற்றிற்கான சிறந்த கல்விச் சூழலை உருவாக்குதல்.*
2. *உடற்கல்வியியல், பல்வேறு விளையாட்டுகள் மற்றும் தொடர்புடைய பிரிவுகளில் புதுமையான ஒருங்கிணைந்த மற்றும் ஒன்றொன்றுக்கு தொடர்புடைய பாடத்திட்டத்தை வடிவமைத்து அறிமுகப்படுத்துதல் மற்றும் தொழில்முறையில் தலைமைத்துவத்தை அளித்தல்.*
3. *உடற்கல்வி, விளையாட்டுகள் மற்றும் தொடர்புடைய துறைகளில் இளநிலை, முதுநிலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளை வழங்குதல்.*
4. *குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்காக உடல்செயல்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ளவும், உடற்கல்வியியலை கற்பிக்கக்கூடிய தகுதிவாய்ந்த, ஆரோக்கிய உணர்வுள்ள உடற்கல்வி ஆசிரியர்களை அனைத்து நிலைகளிலும் முழுத் தகுதியுடன் உருவாக்குதல்.*
5. *நவீன ஆராய்ச்சி வசதிகளை மேம்படுத்தி, ஆராய்ச்சிப் பணிகள் மற்றும் வெளியீடுகள் மூலமாக அறிவுசார் செயல்களுக்குப் பங்களித்து, கண்டுபிடிப்புகளை ஆசிரியர்கள், வல்லுநர்கள் மற்றும் மாணவர்களுக்குக் கொண்டு செல்லுதல்.*

2020 மார்ச் 12]

6. உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டில் உள்ள பயிற்சி உத்திகளை மறுசீரமைத்து, கூர்மைப்படுத்தி ஆராய்ச்சி முடிவுகளைச் செயல்படுத்த உதவுதல்.

7. பொதுவான நோக்கம் மற்றும் விருப்பமுடைய பொருள்களில் உடற்கல்வி மற்றும் விளையாட்டுகளில் மாநில மற்றும் தேசிய அமைப்புகளுடன் ஒத்துழைத்து ஒருங்கிணைத்தல்.

8. மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் சுற்றி உள்ள சமூகத்தை உடற்தகுதியுடனும் முதிர்ச்சி அடைந்த மனநிலையுடைய குடிமக்களாக உருவாக்குவதற்கு அவர்களிடையே உடற்தகுதி மற்றும் சுகாதாரக் கருத்துகளை மேம்படுத்தி வளர்க்க திட்டங்களை வடிவமைத்தல்

நோக்கம்

“உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டில் செம்மை”

15.3 புலங்களின் அமைப்பு

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில், மூன்று புலங்களும், ஐந்து துறைகளும் உள்ளன.

15.3.1 புலங்கள்

1. உடற்கல்வியியல் புலம்.

 அ) உடற்கல்வியியல் துறை

2. யோகா மற்றும் தொடர்புடைய சுகாதார அறிவியல்புலம்

 அ) யோகா துறை

 ஆ) உடல் செயலியக்கவியல் மற்றும் உயிர் இயந்திரவியல் துறை

3. தொழில் நுட்பம் மற்றும் மேலாண்மை புலம்

 அ) விளையாட்டு மேலாண்மை மற்றும் விளையாட்டு உளவியல் & சமூகவியல் துறை

 ஆ) மேம்பட்ட விளையாட்டுப் பயிற்சி மற்றும் தொழில்நுட்பத் துறை.

15.3.2 ஆதரவுத் துறைகள்

1. புள்ளியியல் மற்றும் கணினி பயன்பாடு

2. சுகாதார மையம்

3. நூலகம் மற்றும் தகவல் அறிவியல்

15.4 உறுப்புக் கல்லூரிகள்

தற்போது இப்பல்கலைக்கழகத்தின்கீழ் 24 உறுப்புக் கல்லூரிகள் உள்ளன. அவற்றுள் 4 கல்லூரிகள் பிரத்யேகமாக யோகாவிற்கும் இதர கல்லூரிகள் உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு தொடர்பான பாடப் பிரிவுகளை வழங்குகின்றன. இவற்றுள் 2 கல்லூரிகள் தன்னாட்சி நிலை பெற்றவை, ஒரு மகளிர் கல்லூரி, அரசின் உதவி பெறும் கல்லூரி மற்றும் இதர கல்லூரிகள் சுயநிதிக் கல்லூரிகளாகும்.

இப்பல்கலைக்கழத்தின் துறைகள் மற்றும் உறுப்புக் கல்லூரிகள் கீழ்க்கண்ட பாடத்திட்டங்களை அளிக்கின்றன:

அ) விளையாட்டுப் பயிற்சியில் முதுநிலை பட்டயம் (1 ஆண்டு)

ஆ) B.P.E.S. (3 ஆண்டுகள்) — உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டில் இளநிலை பட்டம்

இ) B.P.Ed. (2 ஆண்டுகள்) — உடற்கல்வியியலில் இளநிலை பட்டம்

ஈ) M.P.Ed. (2 ஆண்டுகள்) — உடற்கல்வியியலில் முதுநிலை பட்டம்

உ) B.Sc. (3 ஆண்டுகள்)

- உடற்செயலியக்கவியல் மற்றும் ஊட்டச்சத்து
- விளையாட்டு உயிர் இயந்திரவியல் மற்றும் உடலியக்கவியல்
- விளையாட்டுப் பயிற்சி

2020 மார்ச் 12]

ஊ) M.Sc. *(2 ஆண்டுகள்)*

- *உடற்செயலியக்கவியல் மற்றும் ஊட்டச்சத்து*
- *விளையாட்டு உயிர் இயந்திரவியல் மற்றும் உடலியக்கவியல்*
- *விளையாட்டுப் பயிற்சி*
- *விளையாட்டு உளவியல் மற்றும் சமூகவியல்*
- *விளையாட்டு உளவியல்*
- *உளவியல்*
- *யோகா*
- *யோகா சிகிச்சை முறை*

எ) M.A. *(2 ஆண்டுகள்) — சமூகவியல்*

ஏ) B.B.A. *(3 ஆண்டுகள்) — விளையாட்டு மேலாண்மையியல்*

ஐ) M.B.A. *(2 ஆண்டுகள்) — விளையாட்டு மேலாண்மையியல்*

ஒ) M.Tech. *(2 ஆண்டுகள்) — விளையாட்டு தொழில் நுட்பவியல்*

ஓ) M.Phil. *(1 ஆண்டு)*

ஔ) Ph.D.

*2007-08 ஆம் கல்வியாண்டில் இப்பல்கலைக்கழகத்தில் தொலைதூர கல்வி மையம் அமைக்கப்பட்டு 50 புதுமையான மற்றும் வேலைவாய்ப்புக்கான பாடத் திட்டங்கள் தொலைதூர கல்வி முறை மூலமாக இளநிலை (*B.Sc. *யோகா), முதுநிலை (*M.Sc. *யோகா), முதுநிலை பட்டயம் (18 பாடத் திட்டங்கள்), பட்டயம் (17 பாடத் திட்டங்கள்) மற்றும் சான்றிதழ் படிப்பு (13 பாடத் திட்டங்கள்) வழங்கப்பட்டு வருகின்றன. இப்பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கி வரும் அங்கீகரிக்கப்பட்ட 23 கல்வி மையங்கள்மூலம் சுமார் 3,500 மாணாக்கர்கள் பல்வேறு பாடப் பிரிவுகளில் பயின்று வருகின்றனர்.*

15.5 கிராமப்புறப் பயிற்சித் திட்டம்

கிராமப்புறப் பயிற்சித் திட்டமானது அனைத்து மாணவர்களுக்கும் கட்டாயமானதாகும். அதில் மாணவர்கள், மரம் நடுதல், பொதுமக்களுக்கு ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், சாலை பாதுகாப்பு, இரத்ததானம், ஃபிட் இந்தியா பிரச்சாரம் முதலிய சேவை தொடர்பான செயல்பாடுகளைச் செய்ய வேண்டும். அதற்கு இரண்டு கிரெடிட் புள்ளிகள் வழங்கப்படும்.

15.6 நாட்டு நலப்பணி திட்ட அலகுகள்

இப்பல்கலைக்கழத்தில் நாட்டு நலப்பணி திட்டத்தின் ஏழு அலகுகள் செயல்பட்டு வருகின்றன. இந்த அலகுகள் அருகிலுள்ள கிராமங்களைத் தத்தெடுத்து சாலை அமைத்தல், சாலை சீரமைத்தல், மரக்கன்றுகள் நடுதல், புகையிலை விழிப்புணர்வு முகாம் நடத்துதல், இரத்ததான முகாம்கள் என பல்வேறு தன்னார்வ சேவைகளை செய்து வருகின்றன.

15.7 தேசிய மாணவர் படை

2019-2020 ஆம் ஆண்டில் இப்பல்கலைக்கழகத்தில் தேசிய மாணவர் படை 17 மாணாக்கர்களைக் கொண்டு நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட மொத்த மாணாக்கர்கள் எண்ணிக்கை 52 ஆகும்.

15.8 வேலைவாய்ப்பு சேவைகள்

இப்பல்கலைக்கழகத்தின் வேலைவாய்ப்பு பிரிவானது கல்லூரிகள், அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள், உடற்பயிற்சி மையங்கள், பெரு நிறுவனங்கள் மற்றும் இப்பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற மாணவர்களின் சேவை தேவைப்படும் அமைப்புகளில் வேலை பெறுவதற்கு வளாக நேர்காணலை நடத்தி உதவுகிறது.

2020 மார்ச் 12]

15.9 உள்கட்டமைப்பு வசதிகள்

இப்பல்கலைக்கழகத்தில் நிருவாகக் கட்டடம், கல்வி வளாகம், கணினி அறை, மாணவ மாணவியருக்கான தங்கும் விடுதிகள், பல்நோக்கு உள்விளையாட்டரங்கம், மின்நூலகம் உள்ளடக்கிய நூலகம், ஆய்வகங்கள் மற்றும் பணியாளர் குடியிருப்புகள் உள்ளன.

15.9.1 ஆடுகள வசதிகள்

இப்பல்கலைக்கழகத்தில் கால்பந்து, வளைகோல்பந்து, மட்டைப்பந்து, கைப்பந்து, கையுந்துப்பந்து, கபடி, கோ-கோ, கூடைப்பந்து, கார்ப்பந்து ஆகியவற்றை விளையாடுவதற்கான ஆடுகள வசதிகள் மற்றும் களவிளையாட்டுகளுக்கான வசதிகளுடன்கூடிய 400 மீட்டர் ஓடுதளப் பாதை உள்ளன.

15.10 தற்போது நடைபெற்றுவரும் உள்கட்டமைப்புத் திட்டங்கள்

இப்பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய அரசால் ஒப்பளிக்கப்பட்ட கீழ்க்காணும் உள்கட்டமைப்புப் பணிகள் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

1. *அரசாணை (நிலை) எண் 40, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை நாள் 11-11-2019-ல் மின்னணு மொழி ஆய்வகம் அமைக்க அரசு ரூ.14.52 இலட்சம் ஒப்பளித்துள்ளது.*

2. *அரசாணை (நிலை) எண் 46, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 27-12-2019-ல் ஆசிரியர்களுக்கான 12 குடியிருப்புகள் கட்ட அரசு ரூ.3.50 கோடி ஒப்பளித்துள்ளது.*

3. *இறகுப்பந்து முதன்மை நிலை மையம் அமைப்பதற்காக அரசாணை (நிலை) எண் 4, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 6-2-2019-ல் அரசு ரூ.13.33 கோடி ஒப்பளித்துள்ளது.*

[2020 மார்ச் 12

4. மேசை பந்து முதன்மை நிலை மையம் அமைப்பதற்காக ரூ.12.60 கோடி அரசாணை (நிலை) எண் 12, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 24.06.2019-ல் அரசு ஒப்பளித்துள்ளது.

5. பாரம்பரிய களரி சண்டை மற்றும் சிலம்பம் பயிற்சி மையம் நிறுவுவதற்காக ரூ.160.00 இலட்சம் அரசாணை (நிலை) எண் 19, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 18-7-2018-ல் அரசு ஒப்பளித்துள்ளது.

6. பல்கலைக்கழக வளாகத்தில் செயற்கை இழை தடகள ஓடுபாதை (8 வரிசை) அமைப்பதற்காக ரூ.7.00 கோடியை இந்திய அரசின் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு அமைச்சகம் ஒப்பளித்துள்ளது.

7. விளையாட்டு உயிர் இயந்திரவியல் முதன்மை நிலை மையம் அமைப்பதற்காக ரூ.13.12 கோடி, அரசாணை (நிலை) எண் 35, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 31-7-2017-ல் அரசு ஒப்பளித்துள்ளது.

8. விடுதி வசதிகள் ஏற்படுத்துவதற்காக ரூ.14.59 கோடி அரசாணை (நிலை) எண் 8, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 8-3-2019-ல் அரசு ஒப்பளித்துள்ளது.

9. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் விளையாட்டு விடுதி அமைப்பதற்காக ரூ.474.74 இலட்சத்தை அரசாணை (நிலை) எண் 50, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 15.11.2017-ல் அரசு ஒப்பளித்துள்ளது.

15.11 பல்கலைக்கழக சுகாதார மையம்

இப்பல்கலைக்கழகத்தின் சுகாதார மையமானது முழுநேர மருத்துவர், செவிலியர் மற்றும் மருத்துவம் சார்ந்த பிற பணியாளர்கள் கொண்ட குழுவால் நடத்தப்பட்டு வளாகத்தில் உள்ளவர்களின்

2020 மார்ச் 12]

தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. முதலுதவி மற்றும் அவசரகால மருத்துவ சிகிச்சை போன்றவற்றை முழு நேரமும் இக்குழு செய்து வருகிறது. இச்சுகாதார மையம், தானியங்கி இரத்த எண்ணிக்கை பகுப்பாய்வு, இயன்முறை உபகரணங்கள் மற்றும் இதர சுகாதார பரிசோதனைக் கருவிகள் ஆகிய வசதிகளைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகமானது அடிப்படை நோய்களுக்கான மருந்துகளை இலவசமாக வழங்குகிறது.

15.12 பல்கலைக்கழக நூலகம்

பல்கலைக்கழக மத்திய நூலகம், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் முக்கிய இடத்தை வகித்து, கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை ஊக்குவிக்கிறது. இது கற்றல் மற்றும் அறிவை மேம்படுத்துவதற்கு உதவும்பொருட்டு எளிதான சூழலில் வள ஆதாரங்களை வழங்குகிறது. இப்பல்கலைக்கழகம், முதல் நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை வள ஆதாரங்களின் தொகுப்பைக் கொண்டுள்ளது. பத்திரிகைகள், அறிக்கைகள், ஆய்வறிக்கை, உரை, குறிப்புப் புத்தகங்கள், கலைக் களஞ்சியங்கள் மற்றும் கல்விக் குறுந்தகடுகள் போன்றவை தொகுப்பில் அடங்கும்.

விளையாட்டு உளவியல், யோகா, உடற்கல்வி, உடல் செயலியக்கவியல், விளையாட்டு மருத்துவம், விளையாட்டு உயிர் இயந்திரவியல், விளையாட்டு மேலாண்மை, விளையாட்டுப் பயிற்சி மற்றும் விளையாட்டுத் தொழில்நுட்பம் போன்ற பாடங்கள் தொடர்பான புத்தகங்களை சேகரிப்பதில் இந்நூலகம் சிறந்து விளங்குகிறது. இந்நூலகம் இந்த முக்கிய பிரிவுகளைத் தவிர, ஊட்டச்சத்து, மனித உடலியக்கவியல், விளையாட்டு சமூகவியல், உடற்தகுதி போன்ற சார்நிலை பாடங்களுக்கு சிறந்த பிரிவையும் பராமரிக்கிறது. தற்போது, இந்நூலகம் 5,032 புத்தகங்களைக் கொண்டு ஆசிரியர்கள், ஆராய்ச்சி வல்லுநர்கள் மற்றும் மாணவர்களது அன்றாடத் தகவல் தேவைகளை நிறைவேற்றுகிறது.

கலைக்களஞ்சியங்கள், கையேடுகள், அகராதிகள், கருத்தரங்க அறிக்கைகள், விளக்கவுரைகளின் சாரம், பல்வேறு விளையாட்டு கழகங்கள் வெளியிட்டுள்ள விதி புத்தகங்கள் போன்றவற்றைக் கொண்ட மேற்கோள் பிரிவை இந்நூலகம் கொண்டுள்ளது.

[2020 மார்ச் 12

வ. எண்	வள ஆதாரங்கள்	மொத்த எண்ணிக்கை
	புத்தகங்கள்	
1	தலைப்புகளின் எண்ணிக்கை	2,835
	தொகுதிகளின் எண்ணிக்கை	5,032
	உரைநடை புத்தகங்கள்	3,818
	குறிப்பு புத்தகங்கள்	804
2	**காலமுறை இதழ்கள்**	59
	நாளேடுகள்	
3	**ஆய்வறிக்கை**	3,510
4	**புத்தகமல்லாத பொருள்வகை குறுந்தகடுகள்** 118 காணொளி தட்டு 1	119
5	**கலைக்களஞ்சியம்**	14 தொகுப்புகள்

15.12.1 மின் நூலகம்

தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ரூ.2.51 கோடி நிதியுதவியில் பல்கலைக்கழக நூலகத்தில் மின்நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் விரைவாக பயன்படுத்தும்வண்ணம் இந்த மின்வள ஆதாரங்கள் நூலக வலைப்பக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. அனைத்து உபயோகிப்பாளர்களுக்கும் தரமான மின் வள ஆதாரங்களைப் பரப்புவதற்கு இம்மின்நூலகம் உதவுகிறது.

மின் வளஆதாரங்கள்	மொத்த எண்ணிக்கை
மின்—புத்தகங்கள் (வாங்கப்பட்டது)	77
மின்—புத்தகங்கள் (இலவசம்)	237
மின்—நாளேடுகள்	17
தரவுத்தளம்	2

15.13 மாணவ மாணவியர் சேர்க்கை

தற்போது, பல்கலைக்கழக துறைகளில் 626 மாணாக்கர்களும், உறுப்புக் கல்லூரிகளில் 3,532 மாணாக்கர்களும் பயின்று வருகின்றனர்.

2020 மார்ச் 12]

15.14 பல்கலைக்கழத்தின்மூலம் 2019-2020 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பட்டம் / பட்டய விவரம்

இப்பல்கலைக்கழகத்தில் முறைசார் மற்றும் தொலைதூரக் கல்வியின்கீழ், பட்டம் மற்றும் பட்டயம் வழங்கப்பட்ட விவரம் கீழ்வருமாறு:

பிரிவு	முறையான கல்வி முறை	தொலைதூரக் கல்வி முறை
இளநிலை	989	135
முதுநிலை	258	831
ஆய்வியல் நிறைஞர் பட்டம்	17	—
முனைவர் பட்டம்	41	—
முதுநிலை பட்டயம்/பட்டயம்/ சான்றிதழ் படிப்புகள்	2	1,236
மொத்தம்	1,307	2,202

15.15 2019-2020 ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழகச் செயல்பாடு மற்றும் சாதனைகள்

1. இந்திய உடற்கல்வியியல் நிறுமக் குழுமம் (PEFI) உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுத் துறையில் சிறந்த முறையில் பணியாற்றியதற்கான விருதை தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்திற்கு 25-9-2019 அன்று டில்லியில் வழங்கியது.

2. புதுதில்லியிலுள்ள பல்கலைக்கழக மானியக் குழு இப்பல்கலைக்கழகத்திற்கு 12B அங்கீகாரம் வழங்கியுள்ளது.

3. பல்கலைக்கழக மானியக் குழுவின் தொலைதூரக் கல்வி இயக்ககம் இப்பல்கலைக்கழகத்திற்கு, தொலைதூர கல்விமூலம் இளநிலை மற்றும் முதுநிலை பட்டய படிப்புகள் நடத்துவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

[2020 மார்ச் 12

4. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (SDAT) கேட்டுக்கொண்டதற்கிணங்க தமிழ்நாடு மாநில அளவிலான பல்கலைக்கழகங்களுக்கிடையிலான வளைகோல்பந்து போட்டிகளை இப்பல்கலைக்கழகம் நடத்தியது.

5. தென்மண்டல மற்றும் அகில இந்திய பல்கலைக் கழகங்களுக்கிடையிலான மகளிர் வளைகோல்பந்து போட்டிகள் முறையே 28-12-2019 முதல் 31-12-2019 வரை மற்றும் 2-1-2020 முதல் 5-1-2020 வரை இப்பல்கலைக்கழகம் நடத்தியது.

6. உடல் செயலியக்கவியல் மற்றும் உயிர் இயந்திரவியல் துறை நடத்திய இரண்டு நாள் புத்தாக்கப் பயிற்சியில் முதலாண்டு இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்கள் பங்கேற்றனர்.

7. உடல் செயலியக்கவியல் மற்றும் உயிர் இயந்திரவியல் துறையினால் தேசிய சத்துணவு நாளை கொண்டாடவும் இந்தியாவின் தேசிய சத்துணவுத் திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றவும் 5-9-2019 அன்று "விளையாட்டு சத்துணவு" என்ற தலைப்பில் ஒரு நாள் பயிலரங்கம் மற்றும் 6-9-2019 அன்று சமையல் போட்டியும் நடத்தப்பட்டது.

15.15.1 மாணவர்களின் சாதனைகள்

- பெங்களூருவில் நடைபெற்ற தென் மண்டல சீனியர் வில்வித்தை போட்டியில் விளையாட்டு உளவியல் துறையைச் சார்ந்த முதுநிலை முதலாமாண்டு பயிலும் மாணவி செல்வி ஹேமமாலினி தங்கப் பதக்கம் வென்றார்.

- B.P.Ed. முதலாம் ஆண்டு மாணவி செல்வி ரோஸி மீனா கர்நாடகாவில் உள்ள மங்களூர் பல்கலைக்கழகத்தில் 2-1-2020 முதல் 6-1-2020 வரை நடைபெற்ற அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டியில் (கோலூன்றி தாண்டுதல்) வெள்ளிப் பதக்கம் வென்றார்.

- விசாகப்பட்டினத்திலுள்ள ஆந்திரா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 2019-2020 ஆம் ஆண்டிற்கான அனைத்திந்திய பல்கலைக்

2020 மார்ச் 12]

கழகங்களுக்கிடையேயான இலக்குப்பந்து விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக இலக்குப் பந்து ஆடவர் அணி வெண்கலப் பதக்கம் வென்றது.

15.16 இதர நிறுவனங்களுடன் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

- *உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறைகளில் ஒருங்கிணைப்பை மேம்படுத்தும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்திற்கும், ஸ்ரீபாலாஜி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்குமிடையே (பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்) 20-8-2019 அன்று கையெழுத்தானது.*

- *வேலூர் தொழில்நுட்ப நிறுவனத்தில் வின்ட் டனல் (Wind Tunnel) பகுப்பாய்வு, தரவு சேகரித்தல் மற்றும் மதிப்பிடும் நோக்கத்துடன் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம், சென்னையிலுள்ள வேலூர் தொழில்நுட்ப நிறுவனத்துடன் 22-1-2020 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது.*

பின் இணைப்பு

தமிழ்நாட்டில் தற்போதுள்ள விளையாட்டு கட்டமைப்பு வசதிகள்

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
1	அரியலூர்	➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்)
		➢ கால்பந்து மைதானம் — 1 (மண்)
		➢ வளைகோல்பந்து மைதானம் — 1 (மண்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1 (சிமென்ட்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 1 (மண்)

		➢ கபாடி ஆடுகளம் — 1
		➢ பூப்பந்து ஆடுகளம் — 1
		➢ டென்னிஸ் ஆடுகளம் — 1 (செயற்கை இழை (ம) மின்னொளி வசதியுடன்)
		➢ டென்னிஸ் ஆடுகளம் — 1 (மண்)
		➢ உடற்பயிற்சி கூடம் — 1
		➢ நீச்சல்குளம் 25மீ. X13மீ.
		➢ ஸ்கேட்டிங் வளையம்
		➢ நடை பயிற்சி பாதை
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி
		➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம்
		சிறு விளையாட்டரங்கம், ஜெயங்கொண்டம் தாலுகா:
		➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்)
		➢ கால்பந்து மைதானம் — 1 (மண்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 1
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1 (சிமெண்ட்)
2	சென்னை	**ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், பெரியமேடு:**
		➢ 40,000 இருக்கை வசதி
		➢ கால்பந்து மைதானம் — 1 (புல்தரை)
		➢ 400 மீ. 8—வரிசை செயற்கை இழை தடகள ஓடுபாதை (மின்னொளி வசதியுடன்)
		➢ 60 மீ. உள்ளரங்க பயிற்சி ஓடுதளம் (குளிர்சாதன வசதியுடன்)
		➢ ஜுடோ கூடம் × செஸ் கூடம்
		➢ கேரம் கூடம் × பளுதூக்கும் கூடம்
		➢ மேசைப்பந்து கூடம்
		➢ குத்துச்சண்டை கூடம்
		➢ கடற்கரை கையுந்துபந்து ஆடுகளம் — 2

2020 மார்ச் 12]

		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 3 (1 மின்னொளி வசதியுடன்) (மண்)
		➢ எறிபந்து ஆடுகளம் — 1
		➢ கபாடி ஆடுகளம் — 1
		➢ புதிய ஊடக கூடம் × கலந்தாய்வு கூடம்
		➢ குளிர்சாதன உடற்பயிற்சி மையம்
		➢ இந்திய விளையாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான சிறப்புநிலை விளையாட்டு விடுதி
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சிறுவர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு விடுதி
		➢ ஊடக கூடம் × மாநில விளையாட்டு உதவும் மையம் × தங்குமிட மையம்
		➢ துப்பாக்கி சுடும் பயிற்சி மையம்
		ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம் - பயிற்சி ஓடுதள மைதானம்:
		➢ கால்பந்து மைதானம் — 1 (புல்தரை)
		➢ 400 மீ. 8 பாதை செயற்கை இழை தடகள ஓடுதளம் (மின்னொளி வசதியுடன்)
		➢ ஸ்குவாஷ் உள்ளரங்கம் — 1
		➢ இறகுப்பந்து உள்ளரங்கம் — 1 (குளிர்சாதன வசதியுடன்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 1
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1
		➢ மாற்றுத் திறனாளிகளுக்கான பிரத்யேக நீர் சிகிச்சை நீச்சல் குளம்

[2020 மார்ச் 12

		பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் பெரியமேடு:
		➢ மரத்தளத்துடன் குளிர்சாதன வசதி கொண்ட 8,000 இருக்கை வசதி கொண்ட உள்ளரங்கம் (கையுந்துபந்து, கூடைப்பந்து, மேசைப்பந்து, இறகுப்பந்து, குத்துச்சண்டை, மல்யுத்தம், பளுதூக்குதல், செஸ், கேரம், கைப்பந்து மற்றும் விளையாட்டு அல்லாத நிகழ்வுகள்)
		➢ ஸ்கேட்டிங் (செயற்கை இழை) வளையம் (மின்னொளி வசதியுடன்)
		➢ சிமெண்ட் தரை கூடைப்பந்து ஆடுகளம் — 2 (மின்னொளி வசதியுடன்)
		➢ கைப்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ வாள்சண்டை கூடம் (மின்னொளி வசதியுடன்) (சிமெண்ட்)
		➢ திறந்தவெளி குத்துச்சண்டை வளையம் (சிமெண்ட்)
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்களுக்கான சிறப்புநிலை விளையாட்டு மையம்
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு மையம்
		மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல் பந்து விளையாட்டரங்கம், எழும்பூர் :
		➢ 8,670 இருக்கை வசதி (கேலரி)
		➢ செயற்கை இழை வளைகோல்பந்து ஆடுகளம்
		➢ உடற்பயிற்சி கூடம் × டென்னிஸ் ஆடுகளம் — 4 (மண்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 3 (மின்னொளி வசதியுடன்)

		➢ கலந்தாய்வு கூடம்
		➢ நடை பயிற்சி பாதை × தங்குமிட மையம்
		நீச்சல்குள வளாகம், வேளச்சேரி சாலை, கிண்டி:
		➢ 4,000 இருக்கை வசதி
		➢ 8—வரிசை சர்வதேச பந்தய நீச்சல்குளம் (50மீ. X 25மீ.)
		➢ குதித்தல் நீச்சல்குளம் (18மீ. X 25மீ. X 5.5மீ. ஆழம்)
		➢ பயிற்சி நீச்சல்குளம் (25மீ. X 25மீ.)
		➢ உடற்பயிற்சி கூடம் (குளிர்சாதன வசதியுடன்)
		➢ கலந்தாய்வு கூடம்
		➢ ஜிம்னாஸ்டிக் உள்ளரங்கம்
		➢ இறகுப்பந்து உள்ளரங்கம் (4 ஆடுகளங்கள்)
		டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம்:
		➢ 7,000 இருக்கை வசதி
		➢ விளையாட்டு அரங்க மைய பகுதியில் செயற்கை இழை ஆடுகளம்
		➢ 6—கூடுதல் செயற்கை இழை ஆடுகளங்கள்
		➢ மின்னொளி வசதி
		➢ உடற்பயிற்சி கூடம் (குளிர்சாதன வசதி கொண்ட)
		➢ தங்குமிட வசதிகள்
		➢ கலந்தாய்வு கூடம்
		நேரு பூங்கா விளையாட்டு வளாகம்:
		➢ சர்வதேச தர ஸ்குவாஷ் ஆடுகளம் — 8 (தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் கழகம் புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில்)
		➢ 400மீ. தடகள (மண்) ஓடுதளம் (குண்டு மற்றும் வட்டு எறிதல்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

		➢ கால்பந்து ஆடுகளம் —1 (புல்தரை)
		➢ சிமெண்ட் கூடைப்பந்து ஆடுகளம் —1
		➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் — 2
		➢ உள்ளரங்க இறகுப்பந்து ஆடுகளம் — 3
		➢ கபாடி ஆடுகளம் — 1
		➢ கையுந்துபந்து ஆடுகளம் —1
		➢ செயற்கை இழை வளைகோல்பந்து பயிற்சி ஆடுகளம் —1
		➢ தங்குமிட வசதிகள்
		சென்னை மாவட்டப் பிரிவு, செனாய் நகர், சென்னை-600 030:
		➢ குறுந்தூர நீச்சல் குளம் (25 மீ. X 16 மீ.)
		➢ நீச்சல் குளம் (36மீ. X 18மீ.)
		➢ சிறுவர் நீச்சல் குளம் (6மீ. X 3 மீ.)
		➢ இறகுப்பந்து உள்ளரங்கம் 2 (மரத்தளம் (ம) மின்னொளி வசதியுடன்))
		➢ கையுந்துபந்து (மண்) ஆடுகளம் 1 (மின்னொளி வசதியுடன்) உடற்பயிற்சி கூடம் —1
		அண்ணா நீச்சல்குளம், மெரினா:
		➢ நீச்சல்குளம் (50 மீ. X 25மீ.)
		➢ நீச்சல்குளம் (25 மீ. X 15 மீ.) முகப்பேர் விளையாட்டு வளாகம்:
		➢ டென்னிஸ் ஆடுகளம் — 4 (2 செயற்கை இழை, 2 மண்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 2 (சிமெண்ட்)
		➢ நீச்சல்குளம் 25 மீ. X 13 மீ. (தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் டால்பின் அகாடமிக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில்)
		➢ சிறுவர் நீச்சல் குளம்
		➢ பல்நோக்கு உள்விளையட்டரங்கம்

2020 மார்ச் 12]

		ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சி கல்லூரி மைதானம்:
		➢ செயற்கை இழை வளைகோல் பந்து ஆடுகளம் (தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஒய்.எம்.சி.ஏ. புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில்)
		➢ விளையாட்டு வீரர்கள் உடை மாற்றும் அறை
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி
		புதூர்:
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, புதூர் (கிரிக்கெட்)
3	கோயம்புத்தூர்	➢ 30,000 பேர் அமரக்கூடிய வசதி கொண்ட திறந்தவெளி விளையாட்டரங்கம்
		➢ 400 மீ. தடகள ஓடுபாதை (செயற்கை இழை)
		➢ கால்பந்து ஆடுகளம் — 1 (இயற்கை புல்வெளி) (உயர் கோபுர மின்னொளி வசதியுடன்)
		➢ உடற்பயிற்சி கூடம் × தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி
4	கடலூர்	➢ 400 மீ. தடகள ஓடுபாதை (கரித்தூள்)
		➢ கால்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ வளைகோல்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1 (சிமென்ட், மின்னொளி வசதியுடன்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 2 (மண்)
		➢ கபாடி ஆடுகளம் — 2 (மண்)
		➢ பூப்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் — 1
		➢ நடை பயிற்சி (சிமென்ட்) பாதை 1200 மீ.
		➢ திறந்தவெளி குத்துச்சண்டை வளையம் — 1

[2020 மார்ச் 12

		➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் — 2 ➢ கிரிக்கெட் ஆடுகளம் (மண்)
		➢ நீச்சல்குளம் 25 மீ. X 13 மீ.
		➢ இறகுப்பந்து உள்ளரங்கம் ஆடுகளம் — 3
		➢ ஸ்குவாஷ் ஆடுகளம் — 1
		➢ கைப்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ நிருவாக அலுவலகம்
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி, நெய்வேலி
		சிறு விளையாட்டரங்கம், விருத்தாச்சலம் தாலுகா:
		➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்)
		➢ கால்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 2 (மண்)
		➢ கபாடி ஆடுகளம் — 1
		➢ கோ—கோ ஆடுகளம் — 1
		➢ கைப்பந்து ஆடுகளம் — 1 × எறிபந்து ஆடுகளம் — 1
5	தருமபுரி	➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்)
		➢ கால்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1 (சிமெண்ட்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 2 (மண்)
		➢ கடற்கரை கையுந்துபந்து ஆடுகளம் — 1
		➢ பூப்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ குத்துச்சண்டை வளையம் — 1 (சிமெண்ட்)
		➢ உடற்பயிற்சி கூடம் — 1
		➢ நீச்சல்குளம் 25 மீ. X 16 மீ.
		➢ இறகுப்பந்து உள்ளரங்கம் ஆடுகளம்— 1 (மரத்தளம்) (மின்னொளியுடன்)

2020 மார்ச் 12]

		➢ இறகுப்பந்து உள்ளரங்கம் ஆடுகளம் — 4 (மரத்தளம்) (மின்னொளியுடன்)
		➢ ரோலர் ஸ்கேட்டிங் வளையம் (சிமெண்ட்)
		➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம்
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி
		சிறு விளையாட்டரங்கம், அரூர்:
		➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் (சிமெண்ட்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் (மண்)
6	திண்டுக்கல்	➢ 500 பேர் அமரக்கூடிய இருக்கை வசதி கொண்டது
		➢ 400மீ. தடகள ஓடுபாதை (மண்)
		➢ கால்பந்து மைதானம் — 1 (இயற்கை)
		➢ கால்பந்து (பயிற்சி) மைதானம் — 1 (மண்)
		➢ கூடைப்பந்து (சிமெண்ட்) ஆடுகளம் —1 (மின்னொளி வசதியுடன்)
		➢ பூப்பந்து ஆடுகளம் — 2
		➢ திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம் — 5 (மண்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ கோ—கோ ஆடுகளம் — 1 (மண்)
		➢ கபாடி ஆடுகளம் — 1 (மண்)
		➢ பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் — 1
		➢ நீச்சல்குளம் 25 மீ. X 13 மீ.
		➢ கைப்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி
		பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் (மரத்தரைத்தளம் மற்றும் மின்னொளி வசதியுடன்):
		➢ இருக்கை வசதி 500 பேர்

		➢ கூடைப்பந்து ஆடுகளம் —1
		➢ கையுந்துபந்து ஆடுகளம் —2
		➢ மேசைப்பந்து ஆடுகளம் —9
		➢ இறகுப்பந்து ஆடுகளம் —9
		➢ கபாடி ஆடுகளம்—3
		➢ கால்பந்து ஆடுகளம் (5—A Side) —1
		➢ கைப்பந்து ஆடுகளம் —1
		➢ டேக்வோண்டோ —1
		➢ ஜிம்னாஸ்டிக் கூடம் —1
		➢ அனைத்து உள்விளையாட்டரங்க விளையாட்டுகள் (மின்னொளி வசதியுடன்)
		➢ தங்கும் வசதி —200 பேர்
		➢ அலுவலகம், கூட்ட அரங்கம், உடைமாற்றும் அறை மற்றும் பல.
		தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மலைக்கோட்டை மாரியம்மன்கோவில் மைதானம் வளாகம், திண்டுக்கல்:
		➢ 200 மீ. தடகள ஓடுபாதை —1 (மின்னொளி வசதியுடன்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1 (மின்னொளி வசதியுடன்)
		➢ வளைகோல்பந்து ஆடுகளம் — 1
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 2 (மண்) (1—மின்னொளி வசதியுடன்)
		➢ திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம் — 3
		➢ டென்னிகாய்ட் ஆடுகளம் —1
		தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் என்.ஜி.ஓ. காலனி மைதானம், பாலகிருஷ்ணாபுரம், திண்டுக்கல்:
		➢ திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம் — 2
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 1
		➢ டென்னிகாய்ட் ஆடுகளம் — 1

		➢ கபாடி ஆடுகளம் — 1
		➢ யோகா கூடம்
		சிறு விளையாட்டரங்கம், நிலக்கோட்டை தாலுகா:
		➢ கால்பந்து ஆடுகளம் — 1
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 1
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1
		➢ கபாடி ஆடுகளம் —1
		சிறு விளையாட்டரங்கம், நத்தம்:
		➢ 200மீ. தடகள ஓடுபாதை
		➢ கால்பந்து ஆடுகளம் — 1
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1
7	ஈரோடு	➢ பார்வையாளர் மாடம் சிமென்ட் இருக்கை வசதி 1,000
		➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்)
		➢ கால்பந்து மைதானம் — 1 (இயற்கை)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 2 (சிமென்ட்) (1 மின்னொளி வசதியுடன்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 2 (மண்) (1 மின்னொளி வசதியுடன்)
		➢ கபாடி ஆடுகளம் — 1 (மண்)
		➢ கோ—கோ ஆடுகளம் — 1
		➢ பூப்பந்து ஆடுகளம் — 1
		➢ இறகுப்பந்து உள்ளரங்கம் கூடம் — 1 (மரத்தரைத்தளம்)
		➢ உடற்பயிற்சி கூடம்
		➢ நீச்சல்குளம் 25 மீ. x 13 மீ.
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி
		➢ மாணவியர்களுக்கான சிறப்புநிலை விளையாட்டு மையம்
		➢ ஜிம்னாஸ்டிக்ஸ் கூடம், கரட்டுப்பாளையம்

		➢ சிறப்பு ஜிம்னாஸ்டிக்ஸ் மேம்பாட்டு மையம், கரட்டுப்பாளையம்
8	காஞ்சிபுரம்	➢ 1000 பேர் அமரக்கூடிய பார்வையாளர் மாடம்
		➢ 400மீ. தடகள ஓடுபாதை (மண்)
		➢ கால்பந்து ஆடுகளம் (மண்)
		➢ வளைகோல் பந்து ஆடுகளம் (மண்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1 (சிமென்ட் மின்னொளி வசதியுடன்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 3 (மண்) (1 மின்னொளி வசதியுடன்)
		➢ குத்துச்சண்டை வளையம் (சிமென்ட்)
		➢ பூப்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ ஸ்குவாஷ் உள்ளரங்கம்
		➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் — 2 (மின்னொளி வசதியுடன்)
		➢ நீச்சல் குளம் 25 மீ. X 13 மீ.
		➢ சிறுவர் நீச்சல் குளம் 5 மீ. X 3 மீ.
		➢ கைப்பந்து ஆடுகளம் — 1
		➢ திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம் — 3 (மண்)
		➢ மேசைப்பந்து அரங்கம்
		➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம்
		➢ திறந்தவெளி வாள்சண்டை பகுதி ➢ இறகுப்பந்து உள்ளரங்கம்
		➢ பல்நோக்கு உள் விளையாட்டரங்கம்
9	கன்னியாகுமரி	➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்)
		➢ கால்பந்து ஆடுகளம் — 1 (இயற்கை புல்தரை)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1 (சிமென்ட் மின்னொளி வசதியுடன்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 2 (மின்னொளி வசதியுடன்)

		➢ கபாடி ஆடுகளம் —1
		➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் — 1
		➢ குத்துச்சண்டை வளையம் — 1
		➢ ஸ்குவாஷ் உள்ளரங்கம் கூடம் — 1
		➢ நீச்சல்குளம் 25 மீ. x 13 மீ.
		➢ சிறுவர் நீச்சல்குளம்
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி
		➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் — (கோணம், நாகர்கோவில்)
10	கரூர்	➢ 400மீ. தடகள ஓடுபாதை — 1 (மண்)
		➢ கால்பந்து மைதானம் (மண்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1 (சிமென்ட்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ கபாடி ஆடுகளம் — 1 (மண்)
		➢ கோ—கோ ஆடுகளம் — 1 (மண்)
		➢ வளைகோல் பந்து ஆடுகளம் —1 (மண்)
		➢ திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம்
11	கிருஷ்ணகிரி	➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்)
		➢ கால்பந்து ஆடுகளம் — 1 (இயற்கை புல்தரை)
		➢ வளைகோல்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 2 (சிமென்ட்)
		➢ கைப்பந்து ஆடுகளம் — 2 (மண்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 2 (மண்)
		➢ குத்துச்சண்டை வளையம் (சிமென்ட்)
		➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் — 2
		➢ கபாடி ஆடுகளம் — 1 (மண்)
		➢ கோ—கோ ஆடுகளம் — 1 (மண்)
		➢ இறகுப்பந்து உள்ளரங்கம் — 1 ஆடுகளம்
		➢ டேக்வாண்டோ பயிற்சி அரங்கம் — 1

		➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் — 1
		➢ சிமென்ட் நடைபயிற்சி (சிமென்ட்) பாதை —1300 மீ
		➢ நீச்சல்குளம் 25 மீ X 13 மீ — 1
		➢ சிறுவர் நீச்சல்குளம் — 1
		➢ ஜூடோ பயிற்சி கூடம் — 1
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி
		➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் — 1
		➢ ஆபீஸர்ஸ் கிளப் கட்டடம்
		➢ சிறுவர் பூங்கா
		சிறு விளையாட்டரங்கம், ஓசூர்:
		➢ 400 மீ தடகள ஓடுபாதை
		➢ கால்பந்து (மண்) மைதானம் — 1
		➢ கையுந்துபந்து (மண்) ஆடுகளம் — 2
		➢ கபாடி (மண்) ஆடுகளம் — 1
		➢ கிரிக்கெட் மைதானம்
		சிறு விளையாட்டரங்கம், ஊத்தங்கரை தாலுகா:
		➢ 400 மீ தடகள ஓடுபாதை
		➢ கால்பந்து (மண்) மைதானம் — 1
		➢ கையுந்துபந்து (மண்) ஆடுகளம் — 1
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1
		➢ கபாடி (மண்) ஆடுகளம் — 1
12	மதுரை	➢ 400 மீ செயற்கை இழை தடகள ஓடுதளம் (மின்னொளி வசதியுடன்)
		➢ 2,250 இருக்கை வசதி (3 கேலரி)
		➢ பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம் (மரதரைத்தளம்)
		➢ கால்பந்து ஆடுகளம் — 1 (இயற்கை புல்தரை)
		➢ பயிற்சி கால்பந்து மைதானம் — 1 (மண்)

2020 மார்ச் 12]

		➢ செயற்கை இழை வளைகோல் பந்து ஆடுகளம் (மின்னொளி)
		➢ பயிற்சி செயற்கை இழை வளைகோல் பந்து ஆடுகளம் —1
		➢ செயற்கை இழை பயிற்சி ஓடுபாதை 100 மீ — 1
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 3 (மண்) (1 மின்னொளி வசதியுடன்)
		➢ கடற்கரை கையுந்துபந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ கபாடி ஆடுகளம் — 2 (மின்னொளி வசதியுடன்) (1 Mat வசதியுடன்) (மண்)
		➢ கோ—கோ ஆடுகளம் — 1 (மண்)
		➢ செயற்கை இழை கூடைப்பந்து ஆடுகளம் — 2 (1 மின்னொளி வசதியுடன்)
		➢ உடற்பயிற்சி கூடம் — 1
		➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் — 2
		➢ டென்னிஸ் ஆடுகளம் — 1 (மண்)
		➢ கிரிக்கெட் பயிற்சி வலை — 2 (மண்)
		➢ குத்துச்சண்டை வளையம் — 1 (மண்)
		➢ கைப்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ டென்னிகாய்ட் ஆடுகளம் — 4 (சிமெண்ட்)
		➢ டென்னிகாய்ட் ஆடுகளம் — 3 (மண்)
		➢ ஜிம்னாஸ்சியம் அரங்கம் — 1 (வாள்சண்டை, யோகா, ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் டேக்வாண்டோ)
		➢ உடற்பயிற்சி மையம் — 1
		➢ இறகுப்பந்து உள்ளரங்க ஆடுகளம் — 4 ஆடுகளம் (மின்னொளியுடன்) (மரத்தரைத்தளம்)
		➢ இறகுப்பந்து உள்ளரங்கம் — 2 ஆடுகளம் (மின்னொளி வசதியுடன்)
		➢ நீச்சல் குளம் 25 மீ. X 13 மீ. மேசைப்பந்து கூடம் — 1 (மரத்தரை)

		எல்லீஸ் நகர், மதுரை:
		➢ வளைகோல்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1 (சிமென்ட்)
13	நாகப்பட்டினம்	➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்)
		➢ கால்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 2 (1 மின்னொளி வசதியுடன்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 2 (சிமென்ட்) (1 அக்ரிலிக் பலகை மற்றும் மின்னொளி வசதியுடன்)
		➢ கடற்கரை கையுந்துபந்து ஆடுகளம் — 1
		➢ டென்னிஸ் ஆடுகளம் — 2
		➢ கைப்பந்து ஆடுகளம் — 1
		➢ கோ—கோ ஆடுகளம் — 1
		➢ கபாடி ஆடுகளம் — 1
		➢ பூப்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ திறந்தவெளி குத்துச்சண்டை வளையம்
		➢ ஐவர் கால்பந்து மைதானம் — 1
		➢ கிரிக்கெட் பயிற்சி தளம் —1
		➢ ஸ்குவாஷ் உள்ளரங்கம் — 1
		➢ இறகுப்பந்து உள்ளரங்கம் — 2 ஆடுகளம் (மின்னொளி வசதியுடன்)
		➢ மேசைப்பந்து — 1
		➢ பளுதூக்குதல் கூடம் — 1
		➢ உடற்பயிற்சி கூடம் — 1
		➢ நீச்சல்குளம் 25 மீ X 13 மீ
		➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் (மரத்தரைத்தளம்)
		சிறு விளையாட்டரங்கம், தரங்கம்பாடி தாலுகா, நாகப்பட்டினம்:
		➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்)
		➢ கால்பந்து ஆடுகளம் (மண்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 1

2020 மார்ச் 12]

		➢ *கூடைப்பந்து ஆடுகளம் — 1 (சிமெண்ட்)*
		➢ *கபாடி ஆடுகளம் — 1*
		➢ *பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் — 1*
		➢ *கோ—கோ ஆடுகளம் — 1*
		சிறு விளையாட்டரங்கம், திட்டச்சேரி:
		➢ *200 மீ தடகள ஓடுபாதை (மண்)*
		➢ *கால்பந்து ஆடுகளம் (மண்)*
		➢ *கையுந்துபந்து ஆடுகளம் — 2*
		➢ *கடற்கரை கையுந்துபந்து ஆடுகளம் — 1*
		➢ *கபாடி ஆடுகளம் — 1*
		சிறு விளையாட்டரங்கம், ஆயக்காரன்புலம்:
		➢ *200 மீ தடகள ஓடுபாதை (மண்)*
		➢ *கால்பந்து ஆடுகளம் — 1 (மண்)*
		➢ *கையுந்துபந்து ஆடுகளம் — 1*
		➢ *பூப்பந்து ஆடுகளம் — 1*
		➢ *கபாடி ஆடுகளம் — 1*
		➢ *கோ—கோ ஆடுகளம் — 1*
14	நாமக்கல்	➢ *400 மீ தடகள ஓடுபாதை (மண்)*
		➢ *கால்பந்து ஆடுகளம் — 1 (இயற்கை புல்தரை)*
		➢ *வளைகோல்பந்து ஆடுகளம் — 1*
		➢ *கையுந்துபந்து ஆடுகளம் (மண்)*
		➢ *கைப்பந்து ஆடுகளம் — 1*
		➢ *கபாடி ஆடுகளம் — 1*
		➢ *கோ—கோ ஆடுகளம் — 1*
		➢ *நீச்சல்குளம் 25 மீ X 13 மீ*
		➢ *பல்நோக்கு உள் விளையாட்டரங்கம்*
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி
		➢ நாமக்கல் செல்வம் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இருபாலருக்கான விளையாட்டு விடுதி.

[2020 மார்ச் 12

		சிறு விளையாட்டரங்கம், திருச்செங்கோடு:
		➢ 400 மீ. தடகள ஓடுபாதை
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 1
		➢ கபாடி ஆடுகளம் — 1
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1
		➢ இறகுப்பந்து ஆடுகளம் — 1 (திறந்தவெளி)
		➢ கால்பந்து ஆடுகளம் — 1 (மண்)
15	பெரம்பலூர்	➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்)
		➢ கால்பந்து ஆடுகளம் (மண்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1 (சிமென்ட்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 2 (மண்) (1 — ஃபென்சிங்)
		➢ கைப்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ கபாடி ஆடுகளம்
		➢ கோ—கோ ஆடுகளம்
		➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் (மின்னொளி வசதியுடன்) ➢ நவீன உடற்பயிற்சி கூடம் (குளிர்சாதன வசதியுடன்)
		➢ நீச்சல்குளம் 25 மீ. x 13 மீ.
		➢ இறகுப்பந்து உள்ளரங்கம் கூடம் — 2 ஆடுகளங்கள்
		➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம்
		➢ கடற்கரை கையுந்துப்பந்து ஆடுகளம்
		➢ நடைபயிற்சி பாதை
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி
		சிறு விளையாட்டரங்கம், வேப்பந்தட்டை:
		➢ 200 மீ. தடகள ஓடுபாதை (மண்)
		➢ கால்பந்து சிறு மைதானம் — 1 (மண்)
		➢ கையுந்துபந்து மண் தரை ஆடுகளம் — 2
		➢ கபாடி ஆடுகளம் — 1

2020 மார்ச் 12]

16	புதுக்கோட்டை	➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்)
		➢ கால்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ வளைகோல்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 2 (சிமெண்ட்) (1 மின்னொளி வசதியுடன்) ➢ கையுந்துபந்து ஆடுகளம் — 2
		➢ கபாடி ஆடுகளம் — 1 ➢ கோ—கோ ஆடுகளம்— 1
		➢ இறகுப்பந்து ஆடுகளம் — 1
		➢ குத்துச்சண்டை வளையம் — 1
		➢ உடற்பயிற்சிக் கூடம் — 1
		➢ நடைபயிற்சி பாதை
		➢ இறகுப்பந்து உள்ளரங்கம் கூடம் — 2 (மின்னொளி வசதியுடன்)
		➢ நீச்சல்குளம் 25 மீ. X 13 மீ.
		➢ குழந்தைகள் நீச்சல்குளம் (10 மீ. X 5மீ.)
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி
17	இராமநாதபுரம்	➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 1 (மின்னொளி வசதியுடன்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1
		➢ கால்பந்து மைதானம் — 1 (மண்)
		➢ செயற்கை இழை வளைகோல் பந்து மைதானம் — 1
		➢ கைப்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ கபாடி ஆடுகளம் — 1 (மண்)
		➢ கோ—கோ ஆடுகளம் — 1 (மண்)
		➢ உடற்பயிற்சி கூடம் — 1
		➢ திறந்தவெளி குத்துச்சண்டை வளையம் (சிமெண்ட்)
		➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் — 2 (மின்னொளி வசதியுடன்)

		➢ கிரிக்கெட் பயிற்சி தளம் — 2
		➢ இறகுப்பந்து உள்ளரங்கம் — 3 ஆடுகளங்கள் (1 மின்னொளி வசதியுடன்) (2—மரத்தரை)
		➢ நீச்சல்குளம் 25 மீ X 13 மீ
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி
		சிறு விளையாட்டரங்கம், பரமக்குடி:
		➢ 400 மீ தடகள ஓடுபாதை
		➢ கால்பந்து ஆடுகளம் — 1
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 1
		➢ கபாடி ஆடுகளம் — 1
		➢ கோ—கோ ஆடுகளம் — 1
		➢ இறகுப்பந்து — 1 (சிமென்ட்)
18	சேலம்	➢ 500 பேர் இருக்கை வசதியுடன்கூடிய திறந்தவெளி விளையாட்டரங்கம்
		➢ 400 மீ தடகளம் ஓடுபாதை (மண்)
		➢ கால்பந்து ஆடுகளம் (மண்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1 (சிமென்ட்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 3 (மண்) (1 மின்னொளியுடன்)
		➢ கபாடி ஆடுகளம் — 1 (மண்)
		➢ கைப்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ குத்துச்சண்டை வளையம் — 1 (சிமென்ட்)
		➢ ஜிம்னாஸ்டிக் பயிற்சி மையம் — 1
		➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் — 1
		➢ கிரிக்கெட் பயிற்சி தளம் — 1 (மண்)
		➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் — 1
		➢ நீச்சல்குளம் 25 மீ X 13 மீ (6 வரிசை)
		➢ பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம் (சிமென்ட்)— 800 பேர் அமரக்கூடிய இருக்கை வசதியுடன்,
		➢ டேக்வாண்டோ கூடம் — 1

		➢ இந்திய விளையாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான பயிற்சி மையம்
19	சிவகங்கை	➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்)
		➢ கால்பந்து ஆடுகளம் — 1 (இயற்கை புல்தரை)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 2 (மண்)
		➢ வளைகோல்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1 (சிமெண்ட்)
		➢ கோ—கோ ஆடுகளம் (மண்)
		➢ கபாடி ஆடுகளம் — 2 (மண்)
		➢ நீச்சல்குளம் 25 மீ X 13 மீ
		➢ இறகுப்பந்து உள்ளரங்கம் — 2 (இரப்பர் ஆடுகளம்)
		➢ இறகுப்பந்து உள்ளரங்கம், காஞ்சிரங்கால் — 1 (மரத்தரைத்தளம்)
		➢ கைப்பந்து — 1 (மண்)
		➢ உடற்பயிற்சி கூடம் — 1
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி
20	தஞ்சாவூர்	➢400 மீ 6—வரிசை தடகள ஓடுபாதை —1 (மண்)
		➢ கால்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ கைப்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ வளைகோல் பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 2 (சிமெண்ட்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 4 (மண்)
		➢ கால்பந்து ஆடுகளம் — (இயற்கை புல்தரை)
		➢ வளைகோல்பந்து செயற்கை இழை பயிற்சி ஆடுகளம் — 1
		➢ குத்துச்சண்டை ஆடுகளம் — 1 (சிமெண்ட்)
		➢ கபாடி ஆடுகளம் — 1 (மண்)
		➢ கோ—கோ ஆடுகளம் — 1 (மண்)

		➢ இறகுப்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ நவீன உடற்பயிற்சி கூடம் — 1 (ரப்பர் கார்க் விரிப்பு)
		➢ ஸ்குவாஷ் உள்ளரங்கம் — 1 (சிமெண்ட்)
		➢ கடற்கரை கையுந்துபந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ இறகுப்பந்து உள்ளரங்கம் — 1
		➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் — 1
		➢ நீச்சல்குளம் 25 மீ. X 13 மீ.
		➢ நடை பயிற்சி பாதை — 1
		➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் (மரதரைத்தளம்)
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி
		➢ கால்பந்து ஆடுகளம் (அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கரம்பயம்)
		சிறு விளையாட்டரங்கம், பட்டுக்கோட்டை:
		➢ 400 மீ தடகள ஓடுபாதை — 1 (மண்)
		➢ கால்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 1
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1
		➢ பூப்பந்து ஆடுகளம் — 1
21	தேனி	➢ இறகுப்பந்து உள்ளரங்கம் ஆடுகளம் — 2 (மரத்தளம்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1 (சிமெண்ட்)
		➢ மேசைப்பந்து உள்ளரங்கம் ஆடுகளம் — 1
		➢ டென்னிஸ் ஆடுகளம் — 1 (மண்)
		➢ ஸ்குவாஷ் உள்ளரங்க ஆடுகளம் — 1
		➢ உடற்பயிற்சி கூடம் — 1
		➢ நவீன உடற்பயிற்சி கூடம் — 1
		➢ நீச்சல்குளம் 25 மீ. X 13 மீ.
		➢ குத்துச்சண்டை வளையம் — 1 (சிமெண்ட்)

2020 மார்ச் 12]

		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவ மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி
22	நீலகிரி	**எச்.ஏ.டி.பி. திறந்தவெளி விளையாட்டரங்கம், உதகமண்டலம்:**
		➢ கால்பந்து மைதானம் — 1 (இயற்கை புல்தரை)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1 (சிமென்ட் தளம் கூரையுடன்)
		➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் — 1
		➢ கிரிக்கெட் பயிற்சி தளம் — 2
		➢ மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி
		➢ தங்குமிட வசதி
		அண்ணா உள்விளையாட்டரங்கம், ஸ்டோன் ஹவுஸ் ஹில் போஸ்ட், ஊட்டி:
		➢ இறகுப்பந்து உள்ளரங்கம் — 3 (மரத்தளம்) ஆடுகளங்கள் (மின்னொளி வசதியுடன்)
		➢ பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் — 1
		சிறு விளையாட்டரங்கம், காந்தி மைதானம், கோத்தகிரி:
		➢ கால்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ 200 மீ தடகள ஓடுபாதை — 1 (மண்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1 (சிமென்ட்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 1 (மண்)
		பல்நோக்கு உள்விளையாட்டரங்கம், குன்னூர்:
		➢ இறகுப்பந்து ஆடுகளம் — 2 (மரத்தளம்)
		➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் — 1
		பல்நோக்கு உள்விளையாட்டரங்கம், கூடலூர்:
		➢ இறகுப்பந்து ஆடுகளம் — 2 (மரத்தளம்)
		➢ உடற்பயிற்சி கூடம் — 1

[2020 மார்ச் 12

23	திருவள்ளூர்	➢ 800 பேர் இருக்கை வசதியுடன் கூடிய திறந்தவெளி விளையாட்டரங்கம்
		➢ 400 மீ தடகள ஓடுபாதை
		➢ கால்பந்து மைதானம் — 1
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 2 (சிமெண்ட்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 2
		➢ உடற்பயிற்சி கூடம் — 1
		➢ இறகுப்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ இறகுப்பந்து உள்ளரங்கம்
		➢ நீச்சல்குளம் 25 மீ X 13 மீ
24	தூத்துக்குடி	➢ 400 மீ தடகள ஓடுபாதை — 1 (மண்)
		➢ கால்பந்து ஆடுகளம் — 1 (இயற்கை புல் தரை)
		➢ வளைகோல் பந்து ஆடுகளம் — 1
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1 (மின்னொளி வசதியுடன்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 3 (மண்) (1 மின்னொளி வசதியுடன்)
		➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம்
		➢ திறந்தவெளி குத்துச்சண்டை வளையம்
		➢ ஸ்குவாஷ் ஆடுகளம் — 1
		➢ கபாடி ஆடுகளம் — 1 (மின்னொளி வசதியுடன்)
		➢ இறகுப்பந்து ஆடுகளம்
		➢ நீச்சல்குளம் 25 மீ X 13 மீ
		➢ சிறுவர் நீச்சல்குளம்
		➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம்
		தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி கோவில்பட்டி:
		➢ செயற்கை இழை வளைகோல் பந்து ஆடுகளம் — 1

2020 மார்ச் 12]

		➢ முதன்மை நிலை விளையாட்டு விடுதி (ஹாக்கி) சிறு விளையாட்டரங்கம், திருச்செந்தூர்
25	திருச்சிராப் பள்ளி	➢ 400 மீ 8—வரிசை செயற்கை இழை தடகள ஓடுதளம் (மின்னொளி வசதியுடன்)
		➢ கால்பந்து ஆடுகளம் — 1 (இயற்கை புல்தரை)
		➢ வளைகோல் பந்து ஆடுகளம் — 2 (1 செயற்கை இழை)
		➢ வலைப்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 5 (1 —மின்னொளி வசதியுடன், 1 — கால்வால்யும் கூரை (ம) மின்னொளி வசதியுடன், 1 — கடற்கரை கையுந்துபந்து மற்றும் 1 — மண் ஆடுகளம்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 2 (சிமென்ட்) (1 மின்னொளி வசதியுடன்)
		➢ கபாடி ஆடுகளம் — 2 (மண்) (விரிப்பு வசதி 1 ஆடுகளத்திற்கு உள்ளது)
		➢ கோ—கோ ஆடுகளம் — 1 (மண்)
		➢ கைப்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ ஸ்குவாஷ் உள்ளரங்கம் ஆடுகளம் — 1 (குளிர்சாதன வசதி)
		➢ டென்னிஸ் ஆடுகளம் — 2 (மண்)
		➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் — 3 (கேலரி மற்றும் அறைகள்)
		➢ நவீன பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் — 1
		➢ இறகுப்பந்து உள்ளரங்கம் — 1 (மின்னொளி வசதியுடன்)
		➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் (மாவட்ட விளையாட்டு வளாகத்தில்)
		➢ திறந்தவெளி குத்துச்சண்டை வளையம்
		➢ நீச்சல்குளம் 25 மீ X 22 மீ

		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு மையம்
		➢ தங்குமிட மையம்
		➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் (ஸ்ரீரங்கம்)
26	திருநெல்வேலி	**அண்ணா விளையாட்டரங்கம், பாளையங்கோட்டை:**
		➢ 400 மீ செயற்கை ஓடுதளபாதை — 1 (மண்)
		➢ 200 மீ தடகள ஓடுபாதை — 1 (மண்)
		➢ கால்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ வளைகோல் பந்து ஆடுகளம் — 2 (1— செயற்கை இழை) (1 — மண்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1 (சிமெண்ட் மின்னொளி வசதியுடன்)
		➢ கபாடி ஆடுகளம் — 1
		➢ கோ—கோ ஆடுகளம் — 1
		➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் — 1
		➢ ஜிம்னாசியம் கூடம் — 1
		➢ திறந்தவெளி குத்துச்சண்டை வளையம்
		➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் — 1 (மின்னொளி வசதியுடன்)
		➢ சறுக்கு வளையம் — 1 (சிமெண்ட்)
		➢ இறகுப்பந்து உள்ளரங்கம் கூடம்
		➢ கால்வால்யும் கூரையுடன் கூடிய கையுந்துபந்து ஆடுகளம் (மின்னொளி வசதியுடன்)
		➢ நீச்சல்குளம் 25 மீ X 13 மீ
		➢ நீச்சல்குளம் (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வளாகத்தில்)
		➢ குழந்தைகள் நீச்சல்குளம் 7 ½ மீ X5 மீ

2020 மார்ச் 12]

		➢ *பல்நோக்கு உள்விளையாட்டரங்கம்*
		➢ *பல்நோக்கு உடற்பயிற்சி கூடம், வ.உ.சி. மைதானம் — 1*
		➢ *பல்நோக்கு உடற்பயிற்சி கூடம், ஜின்னாதிடல் — 1*
		➢ *தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி*
		➢ *தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு மையம்*
		சிறு விளையாட்டரங்கம், ஆலங்குளம் தாலுகா:
		➢ *400 மீ தடகள ஓடுபாதை*
		➢ *கால்பந்து ஆடுகளம்*
		➢ *கையுந்துபந்து ஆடுகளம்*
		➢ *கூடைப்பந்து ஆடுகளம் — 1*
		➢ *கபாடி ஆடுகளம்*
		➢ *கோ—கோ ஆடுகளம்*
		சிறு விளையாட்டரங்கம், கல்லிடைக்குறிச்சி:
		➢ *400 மீ தடகள ஓடுபாதை*
		➢ *கால்பந்து மைதானம்*
		➢ *கையுந்துபந்து ஆடுகளம் — 2*
		➢ *கூடைப்பந்து ஆடுகளம் — 1 (சிமென்ட்)*
		➢ *பூப்பந்து ஆடுகளம் — 1*
		➢ *கோ—கோ ஆடுகளம் — 1*
		சிறு விளையாட்டரங்கம், மேலப்பாளையம்:
		➢ *400 மீ தடகள ஓடுபாதை*
		➢ *கூடைப்பந்து ஆடுகளம்*
		➢ *கையுந்துபந்து ஆடுகளம்*
		➢ *கபாடி ஆடுகளம்*
		➢ *கோ—கோ ஆடுகளம்*
		➢ *தங்கும் வசதி மையம்*

		சிறு விளையாட்டரங்கம், சங்கரன்கோவில்:
		➢ 200 மீ தடகள ஓடுபாதை
		➢ கால்பந்து ஆடுகளம்
		➢ கையுந்துபந்து ஆடுகளம்
		➢ கூடைப்பந்து ஆடுகளம்
		➢ கபாடி ஆடுகளம்
		➢ கோ—கோ ஆடுகளம்
27	திருப்பூர்	➢ சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் பல்நோக்கு உள்விளையாட்டரங்கம்
		➢ இறகுப்பந்து ஆடுகளம்
		➢ கூடைப்பந்து ஆடுகளம்
		➢ கையுந்து பந்து ஆடுகளம்
		➢ பூப்பந்து ஆடுகளம்
		➢ கோ—கோ ஆடுகளம்
		➢ கபாடி ஆடுகளம்
		➢ கைப்பந்து ஆடுகளம்
28	திருவண்ணா மலை	➢ 400 மீ செயற்கை இழை தடகள ஓடுபாதை
		➢ திறந்தவெளி கேலரி 1,500 பேர் அமரக்கூடிய இருக்கை வசதியுடன்,
		➢ கலந்தாய்வு கூடம்
		➢ கால்பந்து மைதானம் — 1 (இயற்கை புல்தரை)
		➢ வளைகோல் பந்து ஆடுகளம் — 1 (மண்) (கம்பி வேலியுடன் கூடிய)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1 (சிமென்ட் (கூரை (ம) மின்னொளி வசதியுடன்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 2 (மண், மின்னொளி வசதியுடன்)
		➢ குத்துச்சண்டை வளையம் — 1 (சிமென்ட்)
		➢ கபாடி ஆடுகளம் — 1
		➢ பூப்பந்து ஆடுகளம் — 1
		➢ கோ—கோ ஆடுகளம் — 1

2020 மார்ச் 12]

		➢ கைப்பந்து ஆடுகளம் — 1 (மண்) (கம்பி வேலியுடன்கூடிய)
		➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் — 2 (மின்னொளி வசதியுடன்)
		➢ உடற்பயிற்சி உள்ளரங்கம் (குளிர்சாதன வசதியுடன்) மற்றும் மேசைப்பந்து கூடம் — 1
		➢ நீச்சல்குளம் 25 மீ X 16 மீ
		➢ சிறுவர் நீச்சல்குளம்
		➢ 80 மீ கால்வாயும் கூரையுடன் கூடிய பகுதி (மணலில் ஓடும் பயிற்சிக்காக)
		➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம்
		➢ தங்குமிட மையம்
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி
		சிறு விளையாட்டரங்கம், ஆரணி:
		➢ 400 மீ தடகள ஓடுபாதை
		➢ கால்பந்து ஆடுகளம் — 1
		➢ வளைகோல் பந்து ஆடுகளம் — 1
		➢ கைப்பந்து ஆடுகளம் — 1
		➢ பூப்பந்து ஆடுகளம் — 1
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1 (சிமென்ட்)
		➢ திறந்தவெளி விளையாட்டரங்கம் — 1 (500 பேர் அமரும் இருக்கை வசதி கொண்டது)
		➢ நடை பயிற்சி பாதை
		சிறு விளையாட்டரங்கம், தண்டராம்பட்டு தாலுகா:
		➢ 400 மீ தடகள ஓடுபாதை
		➢ கால்பந்து ஆடுகளம் — 1
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 1
		➢ திறந்தவெளி விளையாட்டரங்கம் — 1 (500 பேர் அமரும் இருக்கை வசதி கொண்டது)
		➢ கோ—கோ ஆடுகளம் — 1
		➢ கபாடி ஆடுகளம் — 1

		சிறு விளையாட்டரங்கம், செய்யாறு தாலுகா:
		➢ 400 மீ தடகள ஓடுபாதை
		➢ கால்பந்து மைதானம் — 1
		➢ வளைகோல்பந்து ஆடுகளம் — 1
		➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமென்ட்)
		➢ பூப்பந்து ஆடுகளம் — 1
		➢ கைப்பந்து ஆடுகளம் — 1
		➢ நீச்சல் குளம் — 1
		➢ திறந்தவெளி விளையாட்டரங்கம் — 1 (500 பேர் இருக்கை வசதியுடன்)
29	திருவாரூர்	➢ 400 மீ 8— வரிசை தடகள ஓடுபாதை—1 (மண்)
		➢ கால்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ வளைகோல் பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1 (சிமென்ட்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ நீச்சல்குளம் 25 மீ x 13 மீ
		➢ கபாடி ஆடுகளம் — 1 (விரிப்பு வசதியுடன்)
		➢ கோ—கோ ஆடுகளம் — 1 (மண்)
		➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் (மரத்தளம்)
		➢ கால்பந்து ஆடுகளம் — 1 (மண்) (திருநெய்பேர்)
30	வேலூர்	**நேதாஜி விளையாட்டரங்கம், வேலூர்:**
		➢ 400 மீ. தடகள ஓடுபாதை — 1 (மண்)
		➢ கால்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ வளைகோல்பந்து ஆடுகளம் — 1 (மண்)
		➢ கபாடி ஆடுகளம் — 1 (மண்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 1 (மண்)
		சத்துவாச்சாரி:
		➢ பளுதூக்கும் பயிற்சி கூடம்
		➢ உடற்பயிற்சி மையம்

		➢ *முதன்மை விளையாட்டு பளுதூக்கும் மையம் (சிறுவர் / சிறுமியர்)*
		சிறு விளையாட்டரங்கம், ஜோலார்பேட்டை:
		➢ *400 மீ தடகள ஓடுபாதை (6 வரிசை) (மண்)*
		➢ *கால்பந்து ஆடுகளம் — 1 (மண்)*
		➢ *வளைகோல் பந்து ஆடுகளம் — 1 (மண்)*
		➢ *கையுந்துபந்து ஆடுகளம் — 2 (மண்)*
		➢ *கூடைப்பந்து ஆடுகளம் — 1 (சிமென்ட்)*
		➢ *கபாடி ஆடுகளம் — 1 (மண்)*
		➢ *கோ—கோ ஆடுகளம் — 1*
		➢ *ஜிம் உடற்தகுதி மையம் ஆண் மற்றும் பெண் — 1*
31	*விழுப்புரம்*	➢ *400 மீ. தடகள ஓடுபாதை — 1 (மண்)*
		➢ *கையுந்துபந்து ஆடுகளம் — 2*
		➢ *கூடைப்பந்து சிமென்ட் ஆடுகளம் — 2*
		➢ *கபாடி ஆடுகளம் — 2*
		➢ *கோ—கோ ஆடுகளம் — 1*
		➢ *கைப்பந்து ஆடுகளம் — 1*
		➢ *வளைகோல் பந்து ஆடுகளம் — 1*
		➢ *நீச்சல்குளம் 25 மீ. X 13 மீ. (மாவட்ட ஆட்சியர் வளாகம்)*
		➢ *பல்நோக்கு உள் விளையாட்டரங்கம் (மரத்தளம்)*
		➢ *தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி*
32	*விருதுநகர்*	➢ *400 மீ. தடகள ஓடுபாதை — 1 (மண்)*
		➢ *கால்பந்து மைதானம் — 1 (மண்)*
		➢ *வளைகோல் பந்து மைதானம் — 1 (மண்)*
		➢ *கையுந்துபந்து ஆடுகளம் — 2 (மின்னொளி வசதியுடன்)*
		➢ *கூடைப்பந்து ஆடுகளம் — 1 (சிமென்ட்) (மின்னொளி வசதியுடன்)*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2020 மார்ச் 12

		➢ உடற்பயிற்சி கூடம் — 1
		➢ குத்துச்சண்டை வளையம் — 1
		➢ ஸ்குவாஷ் ஆடுகளம் — 1
		➢ கபாடி ஆடுகளம் — 1
		➢ கோ—கோ ஆடுகளம் — 1
		➢ பூப்பந்து ஆடுகளம் — 1
		➢ கைப்பந்து ஆடுகளம் — 1
		➢ டென்னிகாய்ட் ஆடுகளம் — 3 (மண்)
		➢ டென்னிஸ் ஆடுகளம் — 1 (மண்)
		➢ திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம் — 1
		➢ நீச்சல்குளம் 25 மீ X 17 மீ
		➢ பல்நோக்கு உள் விளையாட்டரங்கம்
		சிறு விளையாட்டரங்கம், சிவகாசி தாலுகா:
		➢ 400 மீ தடகள ஓடுபாதை
		➢ கால்பந்து மைதானம் — 1
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 2
		➢ கூடைப்பந்து ஆடுகளம் — 1 (சிமெண்ட்)
		சிறு விளையாட்டரங்கம், நென்மேனி மேட்டுபட்டி:
		➢ 400 மீ தடகள ஓடுபாதை
		➢ கால்பந்து மைதானம் — 1
		➢ கையுந்துபந்து ஆடுகளம் — 1

———

இணைப்பு-III

(571 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 20-உயர் கல்வித் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

1. முன்னுரை

கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை

(திருக்குறள் 400)

1.1. நோக்கம்

மக்களின் பங்களிப்பினையும், இளைஞர்களின் ஆற்றலையும் மனிதவளமாக மாற்றும் நோக்கத்துடன் சீரிய கொள்கைகளையும், உத்திகளையும் வகுத்து, மனிதவளம் மேம்பட தமிழக அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்நோக்கத்தினை அடைய உயர் கல்வித் துறை உறுதி பூண்டுள்ளது. தனி மனித வளர்ச்சியிலும் பொது நலனிலும் முன்னேற்றம் அடைய மக்களுக்கும் உலகிற்குமான பாலமாக உயர் கல்வித் துறை திறம்பட செயல்பட்டு வருகிறது.

1.1.1. உயர் கல்வித் துறை, மக்களின் நலன் சார்ந்த கொள்கைகளையும், திட்டங்களையும் பேணுவதில் முனைப்புக் காட்டி, ஆற்றல்மிக்க இளைஞர்களின் திறனையும் ஆர்வத்தையும் உணரச் செய்கிறது. 2016-2017 ஆம் ஆண்டில் 46.9 என இருந்த தமிழ்நாடு மாநில மொத்த சேர்க்கை விகிதம் (GER) 2018-19ஆம் ஆண்டில் 49.0 என உயர்ந்துள்ளது. இது அதிக இளைஞர்கள் கல்வி கற்று, உயர்ந்த நிலையை அடைய முயற்சிப்பதைக் காட்டும் அளவுகோலாகும். 2018-2019 ஆம் ஆண்டில் 0.97 ஆக உள்ள பாலின சமநிலை குறியீடு, அரசின் கொள்கைகள் மக்களின் முன்னேற்றத்தினை நோக்கியுள்ளதை உறுதி செய்கிறது.

1.1.2. தமிழ்நாடு அரசு, அனைவருக்கும் எளிதாக, தரமான உயர் கல்வி சென்றடைவதற்கான உத்வேகத்துடன் செயல்பட்டதால், 21 பல்கலைக்கழகங்கள் மற்றும் 35 கல்லூரிகள் தேசிய கல்வி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

[2020 மார்ச் 12

நிறுவனங்களின் தரக் கட்டமைப்பில் (NIRF) 1—100 என்ற தரவரிசைப் பட்டியலில் உள்ளன. இவற்றில் மாநில பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு கல்லூரிகள் முக்கிய இடங்களைப் பெற்றுள்ளன. இந்தியாவின் ஒட்டுமொத்தப் பிரிவில், அண்ணா பல்கலைக்கழகம் 14, பாரதியார் பல்கலைக்கழகம் 21, சென்னை பல்கலைக்கழகம் 33, அழகப்பா பல்கலைக்கழகம் 47, மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 69, பாரதிதாசன் பல்கலைக்கழகம் 86 மற்றும் பெரியார் பல்கலைக்கழகம் 97 என்ற தரவரிசையில் மாநில பல்கலைக்கழகங்கள் முக்கிய இடம் பெற்றுள்ளன. தொழில்நுட்பப் பிரிவில், அண்ணா பல்கலைக்கழகம் 9 ஆவது இடத்தைப் பிடித்ததுடன் மாநில பல்கலைக்கழகங்களுக்கிடையே முதல் இடத்தையும் பிடித்துள்ளது. கல்லூரிகளுக்கான பிரிவில், சென்னை மாநிலக் கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

1.1.3. 13 அரசு பல்கலைக்கழகங்கள், 10 அரசு பொறியியல் கல்லூரிகள், 3 அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகள், 20 அண்ணா பல்கலைக்கழகத் துறைகள் மற்றும் உறுப்புக் கல்லூரிகள் மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்றுச் செயல்படும் 554 சுயநிதி பொறியியல் கல்லூரிகள், 106 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 139 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 571 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்ற மாநில தமிழக பல்கலைக்கழகங்களுடன் இணைவு பெற்று செயல்படுகின்றன. மாநிலத்திலுள்ள அனைத்து கல்வியியல் கல்லூரிகளையும் ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின்கீழ் கொண்டுவரும் நோக்கத்துடன், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்று 719 கல்வியியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றுள், 7 அரசு கல்வியியல் கல்லூரிகளும், 14 அரசு உதவிபெறும் கல்வியியல் கல்லூரிகளும் அடங்கும். தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகத்தின்கீழ் 51 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 34 அரசு உதவிபெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 4 இணைவுக் கல்லூரிகள், 404 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 14 சுயநிதி உணவக மேலாண்மை மற்றும் சமையல் தொழில்நுட்பப் பயிலகங்கள் என மொத்தம் 507 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. சமுதாயத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் அனைத்துப் பகுதிகளிலுள்ள மக்களும் உயர் கல்வி பெற

வேண்டும் என்ற இரட்டை நோக்கத்தினை இக்கல்வி நிறுவனங்கள் நிறைவேற்றுகின்றன.

1.2. தர மேம்பாடு

உயர் கல்வியின் தரத்தினை உயர்த்துவதற்கு அரசு புதுமையான முயற்சிகளையும் ஆராய்ச்சிக்கான மானியங்கள் ஒதுக்கியும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்களுக்கு 100 சதவிகித ஆராய்ச்சி மானியம் தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின்மூலம் ஒவ்வோர் ஆண்டும் ஒதுக்கப்படும் ரூ.25.00 கோடியில் வழங்கப்படவிருக்கிறது. பன்னாட்டு உறவு மையம் வாயிலாக 70-க்கும் மேற்பட்ட நாடுகளிலுள்ள கல்வி நிறுவனங்களுடன் இணைந்து, மாநில பல்கலைக்கழகங்கள், கல்வி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

*1.2.1. பெரும்பாலான மாநில பல்கலைக்கழகங்கள் தங்களின் பாடத்திட்டத்தில் அனைவருக்குமான திறந்தநிலை இணையவழிப் படிப்புகளை (*MOOC-Massive Open Online Courses*) அறிமுகப்படுத்தியுள்ளன. வகுப்பறைகளுக்கு வெளியே கற்பித்தல்/ கற்றல் முறையை விரும்பும் மாணாக்கர்களின் விருப்பத்திற்கேற்ப தங்களின் பாடத்தில் மின்கற்றலுக்கான காணொலிப் பதிவுகளை தயார் செய்ய ஆசிரியர்களுக்குப் பயற்சியளிக்கப்படுகிறது. மின்கற்றல் பாடங்கள் கொண்ட மூடுல் (*MOODLE*), ஸ்வயம் (*SWAYAM*), இ-பத்சாலா (*e-PATHSALA*) போன்ற மின்தளங்களையும், மனிதவள மேம்பாட்டுத் துறை வழங்கும் கியான் (*GIAN*) மற்றும் தொழில்முனைவோர் மற்றும் பணி மேம்பாட்டு நிறுவனம் (*Institute of Entrepreneurship and Career Development*) செயலிகளையும் பயன்படுத்தி மாணாக்கர்கள் எளிதில் பயின்று வருகின்றனர். இத்தகைய முயற்சிகளுடன், உயர் கல்வி பெற விழையும் மாணாக்கர்களுக்காக முதுநிலை படிப்புகளும், ஆய்வியல் நிறைஞர் மற்றும் ஆராய்ச்சி படிப்புகளும் இணையவழிப் படிப்புகளாகவும் தொடங்கப்பட்டுள்ளன.*

1.2.2. மாணாக்கர்களின் திறனை மேம்படுத்துவதற்கு அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலமாக, M/s. SIEMENS *மற்றும்* DESIGN Tech. Ltd *ஆகிய*

[2020 மார்ச் 12

தொழில் நிறுவனங்களுடன் இணைந்து, ஒரு திறன் மேம்பாட்டு சிறப்பு மையமும், ஐந்து தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டு பயிற்சி நிறுவனங்களும் ரூ.546.84 கோடி மதிப்பீட்டில் பொது மற்றும் தனியார் பங்களிப்பு முறையில் நிறுவப்பட்டுள்ளன. இதில் மாநில அரசின் பங்களிப்பு ரூ.54.68 கோடியாகும். அயல்நாட்டில் தொழில்நுட்பப் பயிற்சி அளித்தல் திட்டத்தின் வாயிலாக பன்னாட்டு பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதன்படி, ஒவ்வொரு ஆண்டும் அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் 100 மாணாக்கர்களும், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் 100 மாணாக்கர்களும் 15 நாட்கள் தொழிற்பயிற்சி பெறுவார்கள்.

1.2.3. தொழில்நுட்பக் கல்வியின் தரத்தினை உயர்த்தவும், வேலைவாய்ப்பினை அதிகரிக்கவும், 7 தொழிற்கல்வி நிறுவனங்களில் தொழில்நுட்பக் கல்வித் தர மேம்பாட்டுத் திட்டத்தின் மூன்றாம் கட்டம் (TEQIP-III) செயல்படுத்தப்படுகிறது. பொறியியல் பட்டதாரிகளுக்கு தொழில்நுட்பத் திறன் மற்றும் வேலைவாய்ப்புத் திறன்களை மேம்படுத்தவும், வேலைவாய்ப்பினை மேம்படுத்தவும் ரூ.1.00 கோடி செலவில் 5 மண்டலங்களில் இத்திட்டத்தின்கீழ் கூட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

1.2.4. ஒரே பாடத்திட்டத்தினைக் கொண்டு, இரு வேறு பெயர்களில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளை ஒப்பிட்டு, வேலைவாய்ப்பு மற்றும் மேற்கல்வியினைப் பெறவும், உயர் கல்வித் துறை முதன்மைச் செயலாளரின் தலைமையில் செயல்படும் சமநிலைக் குழு (Equivalence Committee) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை, உயர் கல்வித் துறையில் சமநிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, 372 பொருள்களில் தீர்வு காணப்பட்டது.

1.3. உள்ளடக்கிய விரிவாக்கம்

கிராமப்புறங்களில் தொடங்கப்பட்ட புதிய கல்லூரிகள் உயர் கல்வி மேம்பட உதவுகின்றன. மாறிவரும் தேவைகளுக்கேற்ப புதிய படிப்புகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. 2017 முதல் 2019 ஆம் ஆண்டு வரை 9 அரசு கலை அறிவியல் கல்லூரிகளும், 3 பல்கலைக்கழக கலை மற்றும் அறிவியல் உறுப்புக் கல்லூரிகளும், 3

2020 மார்ச் 12]

அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் தொடங்கப்பட்டன. சர்க்கரை ஆலையால் நிருவகிக்கப்பட்டு வந்த 2 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் அரசு கல்லூரிகளாக மாற்றம் செய்யப்பட்டன. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், 705 புதிய பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவை விதி 110-ன்கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க தமிழ்நாட்டில் உள்ள 41 பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளை அரசு கல்லூரிகளாக மாற்ற அனுமதி வழங்கப்பட்டு முதற்கட்டமாக, 14 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றப்பட்டுள்ளன.

1.4. உயர் கல்வி, கிராமப்புறத்திற்கும் சென்றடைய எடுக்கப்பட்ட சிறப்பு முயற்சிகள்

விவசாயிகள் மற்றும் சுயஉதவிக் குழுக்கள் இடையே அறிவியல் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், கிராமப்புறங்களில் உள்ள பள்ளிகளில் அறிவியல் கல்வி வாயிலாக பள்ளி, கல்லூரிகளிடையே இணைப்பை ஏற்படுத்துதல், கிராமப்புற மேம்பாட்டிற்கு அறிவியல் தொழில்நுட்பங்களின் பயன்பாடு, தொழில் துறைக்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் திறன் வளர்த்தல், பன்னாட்டு அறிவியல் விழா நடத்துதல், தேசிய அறிவியல் மற்றும் கணித விழா கொண்டாடுதல், பள்ளி மாணவர்களிடையே அறிவியல், தொழில்நுட்பம், கணித அறிவை வளர்த்தல், கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை வழங்குதல் போன்ற திட்டங்கள் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் (TNSCST) வாயிலாக மேற்கொள்ளப்பட்டு, அறிவியல் சமுதாயத்தின் அனைத்து மக்களையும் சென்றடைய சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மூன்று பெண் சிறைச்சாலைகள் உட்பட, 9 சிறைச்சாலைகளில் மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரிகள் நிறுவப்பட்டு, சிறையில் உள்ளோரும் உயர் கல்வி பயில வழிவகை செய்யப்பட்டுள்ளது. திறந்தநிலை பல்கலைக்கழகம் வாயிலாக 1,380 சிறைக் கைதிகள் திறன் தொடர்பான பட்டயப் படிப்பை முடித்துள்ளனர். 51 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். இந்நிறுவனங்களின் உள்கட்டமைப்புகளை

மேம்படுத்த மாநில அரசிடமிருந்தும் மத்திய தேசிய உயர் கல்வித் திட்டத்தின் (RUSA) கீழும் நிதி வழங்கப்படுகிறது.

1.5. நிலையான வளர்ச்சி இலக்கு

திட்டம், மேம்பாடு மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையுடன் இணைந்து, நிலையான வளர்ச்சி இலக்கினை அடைய உயர் கல்வித் துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. செயற்குழுக்கள் கண்டறியப்பட்டு, உரிய இடைவேளையில் கூட்டங்கள் நடத்தப்பட்டு, உரிய தரவுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. "உள்ளடக்கிய சமமான தரமான கல்வியை உறுதி செய்து அனைவருக்கும் வாழ்நாள் வாய்ப்புகளை மேம்படுத்துதல்" என்பது நிலையான வளர்ச்சி இலக்கின் நோக்கமாகும். தற்போது உயர் கல்வித் துறை "நிலையான வளர்ச்சி இலக்கு" 4இல் கவனம் செலுத்தி 2016-2019 ஆம் ஆண்டிற்கான சாதனைகளின் தரவுகளை சமர்ப்பித்துள்ளது. மாநிலத்தின் ஒட்டுமொத்த சேர்க்கை விகிதம், ஆண்கள், பெண்கள் சேர்க்கை விகிதம் மற்றும் பாலின சமத்துவக் குறியீடு ஆகியவை நிலையான வளர்ச்சியை நோக்கி உயர் கல்வி செல்வதை காட்டுகிறது.

1.6. பிற முயற்சிகள்

அனைத்துப் பல்கலைக்கழகங்களும் தங்கள் நிறுவனங்களில் முனைவர் பட்ட ஆய்வு அறிக்கையை மின்னணு வைப்புத் திட்டமான சோத்கங்காவில் பதிவேற்றம் செய்துள்ளன. பண்டிட் மதன் மோகன் மாளவியா தேசிய ஆசிரியர்கள் மற்றும் கற்பித்தல் (PMMMNMTT) திட்டத்தின்கீழ் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் நிதியுதவி பெற்று, ஆசிரியர் மேம்பாட்டு மையம் அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

1.7. டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருது

உயர் கல்வித் துறை, 2015 ஆம் ஆண்டு முதல், ஒவ்வோர் ஆண்டும் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் நினைவாக விருது வழங்கி வருகிறது. இந்த விருது, சான்றிதழ், ரூ.5.00 இலட்சம் மற்றும் 8 கிராம் தங்கப் பதக்கத்தை உள்ளடக்கியதாகும். இவ்விருது அறிவியல், மனித நேயம் அல்லது மாணாக்கர்களின் நலனில் தனிநபர்களின் பங்களிப்புக்காக உருவாக்கப்பட்டதாகும்.

2020 மார்ச் 12]

1.8. உயர் கல்வியில் தேசிய மற்றும் பன்னாட்டு வளர்ச்சி இலக்குகளை அடைவதற்காக புதிய உத்திகளை உருவாக்குதல், இடைவெளிகளைக் கண்டறிந்து சிறந்த கொள்கைகளை முன்மொழிதல் மற்றும் திறம்பட செயல்படுத்துதல், தரமான நிறுவனங்கள் மற்றும் வழிகாட்டிகளின் உதவியுடன் உலகத் தரம் வாய்ந்த உயர் கல்விக்கு விரும்பிய இடமாகத் தமிழகத்தை அமைத்திட உயர் கல்வித் துறை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

நிதி ஒதுக்கீடு 2020-2021

மானியக் கோரிக்கை எண் 20, உயர் கல்வித் துறை என்ற தலைப்பின்கீழ் மொத்த செலவினத் தொகை ரூ.5052.84 கோடி ஆகும்.

வரிசை எண்	துறை தலைமையின் பெயர்	வரவு செலவு ஒதுக்கீடு ரூபாய் (கோடியில்)
1.	உயர் கல்வித் துறை, தலைமைச் செயலகம்	6.15
2.	கல்லூரிக் கல்வி இயக்ககம்	2825.51
3.	தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்	1461.18
4.	பல்கலைக்கழகங்கள்	609.80
5.	தமிழ்நாடு ஆவணக் காப்பகம்	15.41
6.	தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்	3.35
7.	தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்	5.07
8.	அறிவியல் நகரம், சென்னை	2.52
9.	தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம்	123.64
10.	தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம்	0.21
	மொத்தம்	5052.84

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 12

2. தொழில்நுட்பக் கல்வி

2.1. மாறிவரும் தொழில் துறையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப தொழில்நுட்பக் கல்வியை திறனாய்வு செய்து, மாற்றங்களை ஏற்படுத்துவது இன்றியமையாதது ஆகும். தொழிற்கல்வியில் இத்தகைய மாற்றத்தை ஏற்படுத்துவது அவசியமானது ஆகும். இதன் காரணமாக, தொழிற்கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கும், தொழிற்கல்வி முன்னேற்றத்திற்கு உகந்த புதிய வழிமுறைகளை ஆராய்வதற்கும் உண்டான அனைத்து முயற்சிகளையும் அரசு எடுத்து வருகிறது.

கல்லூரிகளும் தொழிற்சாலைகளும் பாலமாக செயல்பட்டு, இணைந்து, ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை களத்தில் செயல்படுத்துவதை தமிழக அரசு ஊக்குவிக்கிறது. இதன் வாயிலாக, தொழிற்கல்வி மாணாக்கர்களுக்கு தொழிலகங்களில் அளிக்கப்படும் உட்பயிற்சி எண்ணிக்கை அதிகரிக்க வழிவகை செய்கிறது. பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சிகளை வழங்குவதன்மூலம் தொழில்நுட்பக் கல்வி மாணாக்கர்களின் திறன் மேம்பாடு மற்றும் கல்வி அறிவை மேம்படுத்தி அவர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கு உருவாக்குவதில் தமிழக அரசு மிகவும் ஆர்வமாக உள்ளது.

இம்மாநிலத்தின் தொழிற்கல்வியை மேம்படுத்த முக்கிய பங்கு வகிக்கும் தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் 1957 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 ஆம் நாள் உருவாக்கப்பட்டது. இவ்வியக்ககம், பட்டம் மற்றும் பட்டய படிப்புகளை மேம்படுத்தி கண்காணித்து ஒருங்கிணைப்பு செய்வதோடு புதிய பாடப்பிரிவுகளை உருவாக்குவதற்கும், பாடத்திட்டங்களை வகுக்கவும், ஆராய்ச்சி மேம்பாட்டிற்கான பணிகள் போன்றவற்றை செய்வதிலும் முக்கிய பொறுப்பு வகிக்கிறது. மேலும் இவ்வியக்ககம் தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்கியல், வணிகவியல் மற்றும் அலுவலகத்தில் கணினி பயன்பாடு குறித்த சான்றிதழ் படிப்பு ஆகியவற்றிற்கான தேர்வுப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

இம்மாநிலம் அதிகப்படியான பட்டம் மற்றும் பட்டய நிலை தொழில்நுட்பக் கல்லூரிகளைப் பெற்றுள்ளது. அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

2020 மார்ச் 12]

தமிழ்நாட்டில் உள்ள தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை (2019—2020)

வகைப்பாடு	பட்டப்படிப்பு கல்லூரிகள்	பட்டயப் படிப்பு கல்லூரிகள்		மொத்தம்
	பொறியியல் கல்லூரிகள்/ கட்டடக்கலை கல்லூரிகள்	பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள்	உணவக மேலாண்மை மற்றும் சமையல் தொழில்நுட்ப பயிலகங்கள்	
அரசு கல்லூரிகள்	10	51	—	61
அரசு உதவி பெறும் கல்லூரிகள்	3	34	—	37
சுயநிதி கல்லூரிகள்	554	404	14	972
இணைவு கல்லூரிகள்	—	4	—	4
அண்ணா பல்கலைக்கழக கல்லூரிகள்	20	—	—	20
மொத்தம்	587	493	14	1094

2.2. சாதனைகள் மற்றும் முயற்சிகள்

2.2.1. 2011-2012 முதல் 2018-2019 வரை புதிய தொழில்நுட்பப் பயிலகங்களை தோற்றுவித்தல்

பொருளாதாரத்தில் பின்தங்கிய சமூகத்தினர் தொழில்நுட்பக் கல்வியை அடைவதற்கு ஏதுவாக, 4 புதிய அரசு பொறியியற் கல்லூரிகள் மற்றும் 21 புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் 2011-2012 முதல் 2018-2019 வரை தமிழக அரசால் துவங்கப்பட்டுள்ளன.

25 புதிய கல்லூரிகளுக்கு 2,853 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டதுடன், கட்டடங்கள்

கட்டுவதற்கு ரூ.770.45 கோடியும் மற்றும் உபகரணங்கள், கணினிகள், அறைகலன்கள், நூலகத்திற்கான புத்தகங்கள் மற்றும் மின்னிதழ்கள்(e—journals) கொள்முதல் செய்யும் பொருட்டு தொடரா செலவினங்களுக்காக ரூ.104.60 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

2.2.2. பர்கூர், கோயம்புத்தூர், காரைக்குடி, சேலம், திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய 6 அரசு பொறியியற் கல்லூரிகளில் மாணாக்கர்களுக்கு கூடுதல் விடுதிக் கட்டடம் கட்டுதல்

தமிழ்நாட்டில், பொறியியல் கல்வி மாணாக்கர்கள் சேர்க்கை விகிதத்தை மேம்படுத்த, அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, சட்டப் பேரவை விதி 110-ன்கீழ் 2018 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பர்கூர், கோயம்புத்தூர், காரைக்குடி, சேலம், திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய 6 அரசு பொறியியற் கல்லூரிகளில் மாணாக்கர்களுக்கு கூடுதல் விடுதிக் கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்படும் என அறிவித்தார்கள். மேற்கூறப்பட்ட 6 கூடுதல் விடுதிக் கட்டடங்களைக் கட்டுவதற்கு, அரசு ரூ.36.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

காரைக்குடி மற்றும் திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரிகளில் உள்ள மாணாக்கர்களுக்கான கூடுதல் விடுதிக் கட்டட கட்டுமான பணி முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டது. மற்ற நான்கு அரசு பொறியியல் கல்லூரிகளில் கட்டடப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளது.

2.2.3. நாமக்கல் மாவட்டம், மோகனூர் மற்றும் தருமபுரி மாவட்டம் பாலக்கோட்டில் உள்ள அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பல்வேறு புதிய கட்டடங்களைக் கட்டுதல்

2019-2020 ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கையின்பொழுது செய்யப்பட்ட அறிவிப்பின்படி, தருமபுரி மாவட்டம், பாலக்கோடு மற்றும் நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு பல்வேறு கட்டடங்கள் கட்டுவதற்கு முறையே ரூ.16.50 கோடி மற்றும் ரூ.20.57

2020 மார்ச் 12]

கோடி என மொத்தம் ரூ.37.07 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டடங்கள் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. கட்டடப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

2.2.4. கோயம்புத்தூர் அரசினர் தொழில்நுட்பக் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சி மையம் நிறுவுதல்

2014-15 ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கையின்பொழுது செய்யப்பட்ட அறிவிப்பின்படி, கோயம்புத்தூர் அரசினர் தொழில்நுட்பக் கல்லூரியில், தன்னிறைவு திட்டத்தின்கீழ் ரூ.9.00 கோடியில் பாடத்திட்டத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் ஆசிரியர்களின் அறிவைப் புதுப்பிப்பதற்கும் மற்றும் அவர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்துவதற்கும் ஆசிரியர் பயிற்சி மையம் துவங்கப்பட்டுள்ளது.

2018-2019 ஆம் ஆண்டில், வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, மேற்படி ஆசிரியர் பயிற்சி மையத்திற்குத் தேவையான பணியிடங்களை உருவாக்க, 2018—2019 ஆம் ஆண்டு தொடரும் செலவினத்திற்கு ரூ.1.00 கோடியும், தொடரா செலவினத்திற்கு ரூ.85.00 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 3 ஆசிரியர் மற்றும் 6 ஆசிரியரல்லாத பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

2.2.5. பொறியியல் கல்லூரிகளில் பயிலும் 100 மாணாக்கர்களுக்கு 15 நாட்கள் அயல்நாட்டில் தொழில்நுட்பப் பயிற்சி அளித்தல்

மாணாக்கர்களின் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்துவதற்கும் அந்தந்த பொறியியல் துறைகளில் அவர்களின் அறிவைப் புதுப்பிப்பதற்கும் "அரசு பொறியியல் கல்லூரிகளின் மாணாக்கர்களுக்கான அயல் நாட்டு தொழில்நுட்பப் பயிற்சி திட்டம்" பேரவை விதி 110 இன்கீழ் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், 2016-2017 ஆம் ஆண்டில் அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 92 சிறந்த மாணாக்கர்கள், 8 பேராசிரியர்களுடனும் ஸ்பெயின், தைவான், ஜப்பான் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளுக்கும் மற்றும் 2017-2018 ஆம் ஆண்டில் அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 99 சிறந்த

[2020 மார்ச் 12

மாணாக்கர்கள், 5 பேராசிரியர்களுடன் ஆஸ்திரேலியா, ஜெர்மனி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு அயல் நாட்டு தொழில்நுட்பப் பயிற்சி திட்டத்தில் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர். மேலும், மேற்காணும் திட்டத்தினைச் செயல்படுத்த ஆண்டுதோறும் ரூ.1.50 கோடி செலவிடப்படுகிறது.

2.2.6. பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் 100 மாணாக்கர்களுக்கு 15 நாட்கள் அயல்நாட்டில் தொழில்நுட்பப் பயிற்சி அளித்தல்

2019-2020 ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கையின்போது செய்யப்பட்ட அறிவிப்பின்படி, அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பட்டயப் படிப்பு பயிலும் 100 மாணாக்கர்களின் திறனை உலகளாவிய அளவில் மேம்படுத்தும் வகையில் அயல்நாட்டு தொழில்நுட்பப் பயிற்சித் திட்டம் அறிவிப்பு செய்யப்பட்டது. ஆண்டுதோறும் இத்திட்டத்தினை செயல்படுத்த தொடர் செலவினமாக ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டு இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்நிலையில் உலகளவில் கொரோனா வைரஸ் பாதிப்பு இருப்பதனால் சுகாதாரத் துறை மாணாக்கர்கள் அயல்நாட்டிற்கு செல்லும் திட்டத்தினை ஒத்திவைக்குமாறு அறிவுறுத்தியதால் இத்திட்டம் தற்சமயம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

2.3. இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (IIIT), ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் நிறுவப்பட்டுள்ள இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (IIIT) ஒரு தன்னாட்சி பெற்ற கல்வி நிறுவனமாகும். இந்நிறுவனமானது, இலாப நோக்கமற்ற பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் (N-PPP), மத்திய அரசு, மாநில அரசு மற்றும் தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்பு சார்பாக, மத்திய அரசின் பங்களிப்பு ரூ.64.00 கோடி (50%), மாநில அரசின் பங்களிப்பு ரூ.44.80 கோடி (35%) மற்றும் தொழில் நிறுவனங்களின் பங்களிப்பு ரூ.19.20 கோடி (15%), ஆக மொத்தம் ரூ.128.00 கோடியில் 2013-14 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

2020 மார்ச் 12]

*இந்த கல்வி நிறுவனத்தில் 1. நவிட்டாஸ் எல்.எல்.பி. (டேக் சொல்யூஷன்ஸ்) (*Navitas LLP formerly TAKE Solutions Ltd.*), 2.சி.டி.எஸ் பிரவைட் லிமிடெட் (*M/s. CTS *(*India*)* Private Ltd.*) 3. பிரதிக்ஷா இன்போசிஸ் லிமிடெட் (*M/s. Pratiksha Infosys Ltd.*) 4. டாடா கன்சல்டன்சி சர்விசஸ் லிமிடெட் (*M/s. Tata Consultancy Services Ltd.*) 5.ராம்கோ சிஸ்டம்ஸ், சென்னை (*M/s. Ramco Systems, Chennai*) மற்றும் 6. எல்காட் (*M/s. ELCOT*) நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் தொழில் நிறுவன பங்குதாரர்களாக உள்ளனர்.*

2017 ஆம் ஆண்டு அரசால் 56.37 ஏக்கர் நிலம் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்நிறுவனத்திற்கு மாநில அரசின் பங்களிப்பில் 50% பங்களிப்பான ரூ.22.40 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. திருச்சிராப்பள்ளியிலுள்ள இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு முழு நேர இயக்குநர் மார்ச் 2019 இல் மத்திய அரசால் நியமிக்கப்பட்டு சிறப்பாக இந்நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

2.4. விலையில்லா பாடப் புத்தகங்கள் வழங்குதல்

மாணாக்கர்கள் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்ந்து பயில்வதை ஊக்கப்படுத்தும் விதமாக, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து முதலாமாண்டு மாணாக்கர்களுக்கும் விலையில்லா பாடநூல்கள் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், ஆங்கிலம், பொறியியல் இயற்பியல், பொறியியல் வேதியியல் மற்றும் பொறியியல் கணிதம் ஆகிய பாடங்களுக்குத் தேவையான விலையில்லா பாடநூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன் விவரங்கள் பின்வருமாறு:

ஆண்டு	பயனாளிகளின் எண்ணிக்கை	செலவிடப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்)
2017-2018	12,853	30.16
2018-2019	14,606	24.80
2019-2020	13,538	19.68
மொத்தம்	40,997	74.64

2.5. பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணாக்கர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி அளித்தல்

பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணாக்கர்கள் இளநிலை பொறியியல் பட்டப்படிப்புகளை தொடர்ந்து பயில்வதற்கு ஏதுவாக, அரசால் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி உதவித்தொகை, 2017-2018 ஆம் ஆண்டு முதல், ஒரு மாணாக்கருக்கு ரூ.25,000/-லிருந்து ரூ.50,000/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. முதல் தலைமுறை பட்டதாரி கல்வி உதவித் தொகை பெறும் மாணாக்கர்களும் இந்த நிதியைப் பெற விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் ஆவர். பயனாளிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

ஆண்டு	பயனாளிகளின் எண்ணிக்கை	தொகை (ரூ. இலட்சத்தில்)
2017—18	6	3.00
2018—19	8	4.00
2019—20	17	12.00
மொத்தம்	31	19.00

2.6. அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு கல்விக் கட்டண விலக்கு (Tuition Fee Waiver) மற்றும் பேருந்து கட்டணச் சலுகை வழங்குதல்

அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு மற்றும் கட்டணமில்லா பேருந்து பயணச்சலுகை ஆகியவை தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. பயனாளிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

ஆண்டு	பயனாளிகளின் எண்ணிக்கை
2017—2018	46,707
2018—2019	46,825
2019—2020	47,223
மொத்தம்	1,40,755

2020 மார்ச் 12]

2.7. விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டம்

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களின் கணினி அறிவுத் திறன் மற்றும் எண்ணியல் திறனை மேம்படுத்தவும் மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் முன்னோடித் திட்டம் தமிழக அரசால் 2011-12 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. பத்தாம் வகுப்பு தேர்ச்சிக்குப் பின்பு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களின் நலன் கருதி, அவர்களின் முதலாம் ஆண்டு படிப்பின்போது விலையில்லா மடிக்கணினி வழங்கப்படுகிறது. பயன் பெற்ற மாணாக்கர்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

ஆண்டு	பயனாளிகளின் எண்ணிக்கை
2011-2012 முதல் 2016-2017 வரை	1,84,486
2017-2018	9,841
2018-2019	11,332
2019-2020	11,553 (தகுதியுள்ள மாணாக்கர்கள்)
மொத்தம்	2,17,212

2.8. போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம்

போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் 2011-2012 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அனைத்து நிலைகளிலும் சமூகத்தில் பின்தங்கிய மாணாக்கர்களுக்கு உயர் கல்வியினை கட்டணமின்றி வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து, ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கர்களுக்கு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

சுயநிதி கல்வி நிறுவனங்களில் (சிறுபான்மை நிறுவனங்கள் உட்பட) அரசு மற்றும் நிருவாக ஒதுக்கீட்டின்கீழ் சேர்க்கை பெற்ற, மேற்குறிப்பிட்ட மாணாக்கர்களுக்கு, கட்டண நிருணயக் குழுவால் நிருணயம் செய்யப்பட்ட கட்டாய மற்றும் திருப்பியளிக்க இயலாத கட்டணங்கள் அனைத்தும் வழங்கப்பட்டு வருகின்றன. 2013-2014 ஆம் கல்வியாண்டு முதல், மாணாக்கர்களுக்கு உதவித்

[2020 மார்ச் 12

தொகை வழங்கப்படுவதை, தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் ஆதி திராவிடர் நலத் துறையுடன் இணைந்து செயல்படுத்தி வருகிறது. இதற்கான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

ஆண்டு	பொறியியல் கல்லூரி மாணாக்கர்கள்		பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மாணாக்கர்கள்	
	பயனாளிகளின் எண்ணிக்கை	செலவிடப்பட்ட தொகை (ரூ. கோடியில்)	பயனாளிகளின் எண்ணிக்கை	செலவிடப்பட்ட தொகை (ரூ. கோடியில்)
2013-14 முதல் 2017-18 வரை	5,44,327	3405.42	2,98,381	731.58
2018-19	1,07,616	546.56	67,346	242.24
மொத்தம்	6,51,943	3951.98	3,65,727	973.82

2.9. முதல் தலைமுறை பட்டதாரி மாணாக்கர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை

சமூகத்தின் அனைத்து பிரிவினைச் சார்ந்த மாணாக்கர்களும் தொழிற்கல்வி பயில்வதற்காக அரசு பல முயற்சிகளை எடுத்து வருகிறது. மாநிலத்திலுள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகளிலும், ஒற்றைச் சாளர கலந்தாய்வுமூலம் நேரடி சேர்க்கை பெறும் முதல் தலைமுறை பட்டதாரி மாணாக்கர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை (Tuition Fee Concession) வழங்குவதும் இம்முயற்சிகளில் ஒன்றாகும். இதற்கான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

ஆண்டு	பயனாளிகளின் எண்ணிக்கை	செலவிடப்பட்ட தொகை (ரூ.கோடியில்)
2017-18	2,17,396	434.56
2018-19	1,91,268	402.69
2019-20 (31-1-2020 வரை)	1,63,407	367.94
மொத்தம்	5,72,071	1205.19

2020 மார்ச் 12]

2.10. இலங்கை தமிழ் அகதி மாணாக்கர்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகள்

தமிழகத்தைச் சார்ந்த மாணாக்கர்களைப் போலவே, தமிழ்நாட்டில் வசிக்கும் இலங்கை தமிழ் அகதி மாணாக்கர்கள், 2011-12 ஆம் ஆண்டு முதல் பி.இ./பி.டெக்., மற்றும் எம்.பி.ஏ./ எம்.சி.ஏ./எம்.டெக். போன்ற பட்டப் படிப்பு பயில ஏதுவாக, ஒற்றைச் சாளர கலந்தாய்வில் கலந்து கொண்டு கல்லூரிகளில் சேர்க்கை பெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில், ஒற்றைச் சாளர கலந்தாய்வின் வாயிலாக, பொறியியல் கல்லூரிகளில் பயிலும் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் கல்விக் கட்டண சலுகை, இலங்கை தமிழ் அகதி மாணாக்கர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால், 2011—12 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை, 290 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

2.11. அரசு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் முதுநிலை பட்டப் படிப்பு மாணாக்கர்களுக்கான மாதாந்திர உதவித் தொகை வழங்கும் திட்டம்

அறிவுத் திறன் கொண்ட மாணாக்கர்களை, பொறியியல் கல்லூரிகளில் ஆசிரியர் பணியிலும் மற்றும் ஆராய்ச்சிப் பணியிலும் ஈடுபட ஊக்குவிக்கும் பொருட்டு, அரசு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் முதுநிலை பட்டதாரி மாணாக்கர்களுக்கு மாதாந்திர உதவித் தொகையாக ரூ.6,000/- வழங்கப்படும் என்ற அறிவிப்பு 2017-2018 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது வெளியிடப்பட்டது. முதுநிலை கல்வியை உயர்த்துவதும், ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். பயனாளிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

[2020 மார்ச் 12

ஆண்டு	பயனாளிகளின் எண்ணிக்கை	செலவிடப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்)
2017-18	593	426.96
2018-19	592	426.24
2019-20	597	429.84
மொத்தம்	1,782	1,283.04

2.12. M/S SIEMENS AND DESIGN TECH LTD. ஆகிய தொழில் நிறுவனங்களுடன் இணைந்து பொது மற்றும் தனியார் பங்களிப்பு முறையில் ஒரு திறன் மேம்பாட்டு சிறப்பு பயிற்சி மையம் மற்றும் ஐந்து தொழில்நுட்ப திறன் மேம்பாட்டு பயிற்சி நிறுவனங்கள் நிறுவுதல்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் (TNSDC) மூலமாக, M/s SIEMENS மற்றும் DESIGN Tech ஆகிய தொழில் நிறுவனங்களுடன் இணைந்து அண்ணா பல்கலைக்கழகத்தின் சென்னை தொழில்நுட்ப நிறுவனம் (MIT), குரோம்பேட்டை வளாகத்தில் ஒரு திறன் மேம்பாட்டு சிறப்பு பயிற்சி மையம் (Centre of Excellence) மற்றும் வேலூர், காஞ்சிபுரம், விழுப்புரம், சென்னை—ஆவடி மற்றும் சென்னை—தரமணி ஆகிய இடங்களில்ன்கீழ்க்கண்ட ஐந்து தொழில்நுட்ப திறன் மேம்பாட்டு பயிற்சி நிறுவனங்களும் (Technical Skill Development Institutes) பொது மற்றும் தனியார் பங்களிப்பு முறையில் ரூ.546.84 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளன. இதில் தமிழக அரசின் பங்களிப்பு ரூ.54.68 கோடி ஆகும்.

1. மையப் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி (அரசு), தரமணி, சென்னை
2. அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, காஞ்சிபுரம்
3. அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, விழுப்புரம்

4. முருகப்பா பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி (அரசு உதவி), ஆவடி, சென்னை

5. தந்தை பெரியார் அரசு தொழில்நுட்பக் கல்லூரி, வேலூர்

மாணாக்கர்களின் வேலைவாய்ப்பை அதிகரிக்கச் செய்யும் நோக்கத்துடனும், இன்றைய காலகட்டத்தில் தொழிலகங்களின் தேவைகளுக்கேற்றவாறு பயிற்சி அளிக்கும் நோக்கத்துடனும், தொழிலகங்கள் எதிர்பார்க்கும் திறன்களுக்கேற்ப, மாணாக்கர்களின் திறன்களை மேம்படுத்தி அவற்றிற்கிடையிலான இடைவெளியினைக் குறைக்கும் நோக்கத்துடனும், மேற்கண்ட திறன் மேம்பாட்டுப் சிறப்பு பயிற்சி மையம் மற்றும் பயிற்சி நிறுவனங்கள், பொறியியல் மற்றும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு, உயர்தொழில்நுட்பத்தில் (Advanced Technology) திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கி வருகின்றன.

சென்னை தொழில்நுட்ப நிறுவனத்தில் (MIT) அமையப்பெற்றுள்ள திறன் மேம்பாட்டு சிறப்பு பயிற்சி மையத்தில், 14 ஆய்வகங்களும் மற்ற 5 திறன் மேம்பாட்டு பயிற்சி நிறுவனங்கள் ஒவ்வொன்றிலும், 6 ஆய்வகங்களும் உள்ளன. மேற்படி 6 பயிற்சி மையங்களில் இதுவரை 10,344 மாணாக்கர்கள் திறன் மேம்பாட்டுப் பயிற்சிப் பெற்றுள்ளனர். மேலும், 1,738 மாணாக்கர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

2.13. பட்டய வகுப்பு மாணாக்கர்கள் நலன் கருதி இணைய வழி மின்கற்றலுக்கான காணொலி பதிவுகள் (e-Learning Video Modules) பதிவேற்றம்

அனுபவமிக்க ஆசிரியர்களால் உருவாக்கப்பட்டு யூ டியூப் (You Tube) இல் பதிவேற்றம் செய்யப்பட்ட மின்கற்றலுக்கான காணொலி பதிவுகள் கிராமப்புறத்திலிருந்து வரும் பட்டயப் படிப்பு பயிலும் மாணாக்கர்களின் கற்றலை எளிதாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழக சட்டமன்றப் பேரவையில் 15.06.2017 அன்று, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பட்டய வகுப்பு பயிலும் மாணாக்கர்களின் பயன்பாட்டிற்காக இணைய வழி மின்கற்றலுக்கான காணொலி பதிவுகள் தயார் செய்து வெளியிடுவது குறித்து அறிவிப்பு வெளியிடப்பட்டது. மின்கற்றலுக்கான காணொலி பதிவு ஒன்றுக்கு தயாரிப்பு செலவு

[2020 மார்ச் 12

ரூ.8,000/- வீதம், 720 எண்ணிக்கை அளவில் காணொலி பதிவுகள் தயார் செய்யும் செலவினத்திற்காக ரூ.58.00 இலட்சம் அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி 720 காணொலி பதிவுகளும் அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள பல்லூடக கல்வி ஆராய்ச்சி மையத்தில் (Educational Multimedia Research Centre) தயாரிக்கப்பட்டு, மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் YouTube இல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

2.14. தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் காணொலி காட்சி மையம் (Video Conferencing Centre) நிறுவுதல்

தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் ரூ.1.19 கோடி மதிப்பீட்டில் காணொலி காட்சி மையம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பினைத் தொடர்ந்து, வளர்ந்து வரும் கல்வி தேவைகளுக்கேற்ப, தமிழகத்தில் உள்ள மாணாக்கர் நலன் கருதி, நிபுணத்துவம் பெற்ற சிறந்த வல்லுநர்களைக் கொண்டு காணொலி காட்சி வாயிலாக மாணாக்கர்களுக்கு பாடத்திட்டத்தை வழங்கும் நோக்குடன் காணொலி காட்சி மையம் நிறுவப்பட்டுள்ளது. இதுவரை, காணொலி காட்சி வாயிலாக 120 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

2.15. பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில், ஆங்கில பாடம் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் திறனை மேம்படுத்தும் பயிற்சி திட்டம்

2018-2019 ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கையின்போது, பொறியியல் மற்றும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு ஆங்கிலப் பாடத்தினை எளிதாக பயிற்றுவிக்கும் பொருட்டு, 2000 ஆங்கில ஆசிரியர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் திறனை மேம்படுத்தும் பயிற்சி திட்டம் என்ற அறிவிப்பினைத் தொடர்ந்து, அரசால் ரூ.60.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் 18 இடங்களில் நடைபெற்ற இந்த பயிற்சியில், இதுவரை 760 ஆங்கில ஆசிரியர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றுள்ளார்கள்.

2020 மார்ச் 12]

2.16. தொழில்நுட்ப கல்வி இயக்ககம் (DOTE)மூலம் 2019-2020 ஆம் ஆண்டு முதல் ஒற்றைச் சாளர இணைய வழி கலந்தாய்வு வாயிலாக தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை (TAMIL NADU ENGINEERING ADMISSION-TNEA)

*மாவட்ட அளவில் செயல்படுகின்ற தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை சேவை மையம் (*Tamil Nadu Engineering Admissions Facilitation Centers—TFC*) மற்றும் மைய அலுவலகம் (*Nodal Agency*) ஆகியவற்றுக்கு இடையிலான ஒருங்கிணைப்பினை மேம்படுத்தும் பொருட்டு, 2019-2020 ஆம் கல்வியாண்டு முதல், பொறியியல் கல்லூரிகளில் உள்ள அரசு ஒதுக்கீட்டின்கீழ் உள்ள ஒவ்வொரு மாணாக்கர் சேர்க்கை இடத்தை நிரப்புவதற்கான உரிய அதிகாரம் பெற்றவர் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் ஆவார் என தமிழக அரசு உத்தரவிட்டது. 2019—2020 ஆம் ஆண்டில், பொறியியல் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு மாணாக்கர்கள் சேர்க்கை பெறுவதற்கான, இணையவழி விண்ணப்பப் பதிவு தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. மொத்தம், 1,33,116 மாணாக்கர்கள் விண்ணப்பங்களை இணைய வழி வாயிலாக பதிவு செய்தனர். பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களில் 1,03,150 விண்ணப்பங்கள் கலந்தாய்வில் கலந்துகொள்ள தகுதியுள்ள விண்ணப்பங்களாகும்.*

*மாணாக்கர்களுக்கு இணைய வழி விண்ணப்பப் பதிவு செய்தலுக்கு வழிகாட்டி உதவி புரிதல் பொருட்டும், சான்றிதழ் சரிபார்க்கும் பணி மேற்கொள்ளும் பொருட்டும், மாவட்டம் தோறும் குறைந்தபட்சம் ஒரு சேவை மையம் வீதம், மாநிலத்தில் உள்ள 32 மாவட்டங்களிலும் 46 தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை சேவை மையங்கள் (*Tamil Nadu Engineering Admission Facilitation Centre*) அமைக்கப்பட்டன.*

*ஒருங்கிணைக்கப்பட்ட ஒற்றைச் சாளர மாணாக்கர்கள் சேர்க்கை அமைப்பின் (*Unified Single Window Admission System*) பல்வேறு நிறுவனங்கள்/படிப்புகளுக்கான மொத்த இடங்களில் அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாணாக்கர்கள் சேர்க்கை இடங்களுக்கான (விழுக்காடு) விவரங்கள் பின்வருமாறு:*

பொறியியல் கல்லூரிகள்	பிரிவுகள் விவரம்	அரசு ஒதுக்கீடு (விழுக்காடு)
அரசு பொறியியல் கல்லூரிகள்	அனைத்து பாடப்பிரிவுகள்	100
அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள்	அரசு உதவி பெறும் பாடப்பிரிவு	100
	சுயநிதி பாடப்பிரிவு	70
சுயநிதி பொறியியல் கல்லூரிகள்	சிறுபான்மை அல்லாத கல்லூரிகள்	65
	சிறுபான்மை கல்லூரிகள்	50

2019-2020 ஆம் கல்வியாண்டில் எம்.பி.ஏ./எம்.சி.ஏ. பட்டப்படிப்பு மாணாக்கர் சேர்க்கை, ஒற்றைச்சாளர சேர்க்கைமூலம் கோயம்புத்தூர் அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் நடத்தப்பட்டது. எம்.இ./ எம்.டெக்./எம்.ஆர்க்./எம்.ப்ளான் பட்டப்படிப்பிற்கான மாணாக்கர் சேர்க்கை அண்ணா பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்டது. அண்ணா பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட தமிழ்நாடு பொது நுழைவுத் தேர்வு 2019 (Tamil Nadu Common Entrance Test 2019 TANCET 2019)-இல் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் மேற்காண் படிப்பிற்கான சேர்க்கை நடைபெறுகிறது.

2.17. தொழில்நுட்பக் கல்வித்தர மேம்பாட்டுத் திட்டம் (TEQIP)

தொழில்நுட்பக் கல்வித்தர மேம்பாட்டுத் திட்டம் (Technical Education Quality Improvement Programme) உலக வங்கி நிதியுதவித் திட்டத்தின்கீழ், மத்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறையினரால், செயல்படுத்தப்பட்டு வருகின்ற ஒரு திட்டமாகும். இத்திட்டத்தின் முதல் கட்டம் (TEQIP - I) ஏப்ரல் 2004 முதல் ஜூன் 2009 வரையிலான காலகட்டத்தில், தமிழகத்தில் 5 அரசு பொறியியல் கல்லூரிகள், 3 பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகள் மற்றும் 3 அண்ணா பல்கலைக்கழகக் துறைக் கல்லூரிகள் உட்பட 11 கல்லூரிகளில் செயல்படுத்தப்பட்டன. இக்கல்லூரிகளின்

2020 மார்ச் 12]

*உட்கட்டமைப்பு வசதியினை மேம்படுத்துவதற்காக ரூ.96.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டம் (*TEQIP - II*) 4 அரசு பொறியியல் கல்லூரிகள், 3 அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகள் மற்றும் 2 பல்கலைக்கழக துறை மற்றும் உறுப்புக் கல்லூரிகள் உட்பட 9 கல்லூரிகளில் செயல்படுத்தப்பட்டன. பல்வேறு மேம்பாட்டு பணிகளுக்காக ரூ.142.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.*

*இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில், தமிழகத்தில் சிறப்பாகச் செயல்பட்ட கீழ்க்கண்ட 7 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகள், இத்திட்டத்தின் மூன்றாம் கட்டத்திற்குத் (*TEQIP-III*) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.* TEQIP-III *திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்ட தமிழகத்தில் உள்ள 7 கல்லூரிகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ள பிற மாநிலங்களில் உள்ள 8 கல்லூரிகளுக்கு வழிகாட்டும் கல்லூரிகளாக (*Mentor Institute*) பிணைதல் அடிப்படையில் இணைக்கப்பட்டுள்ளன:*

வ. எண்	வழிக்காட்டிக் கல்லூரிகள் (Mentor Institutes)	வழிகாட்டப்படும் கல்லூரிகள் (Mentee Institutes)
1)	அரசு தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்	அரசு பொறியியற் கல்லூரி, ஜகதால்பூர், சட்டீஷ்கர்
		தேசிய தொழில்நுட்பக் கல்லூரி, அருணாச்சல பிரதேசம்
2)	அரசு பொறியியற் கல்லூரி, சேலம்	அரசு பொறியியற் கல்லூரி, ராய்பூர், சட்டீஷ்கர்
3)	அழகப்பா செட்டியார் அரசு பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, காரைக்குடி	பல்கலைக்கழக பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, வினோப பாபே பல்கலைக்கழகம், ஹசாரிபாக், ஜார்கண்ட்.
4)	தியாகராஜர் பொறியியற் கல்லூரி, மதுரை	ஹகோர்ட் பட்லர் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் (முன்னாள் HBIT), கான்பூர், உத்திரபிரதேசம்

வ. எண்	வழிக்காட்டிக் கல்லூரிகள் (Mentor Institutes)	வழிகாட்டப்படும் கல்லூரிகள் (Mentee Institutes)
5)	பி.எஸ்.ஜி. தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்	அஸ்ஸாம் பொறியியற் கல்லூரி, காம்ரூப், அஸ்ஸாம்.
6)	கோயம்புத்தூர் தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்	எம்.பி.எம் பொறியியற் கல்லூரி, ஜோத்பூர், ராஜஸ்தான்
7)	அரசு பொறியியற் கல்லூரி, பர்கூர்.	பினேஸ்வர் பிரம்மா பொறியியற் கல்லூரி, கொக்ராஜ்கர், அஸ்ஸாம்.

2017-2018 ஆம் ஆண்டு முதல் 2020-2021 ஆம் ஆண்டு வரையிலான TEQIP—III திட்ட காலத்தில், மேற்காண் வழிகாட்டிக் கல்லூரிகள் (Mentor Institutes) ஒவ்வொன்றுக்கும் ரூ.7.00 கோடியும் மற்றும் வழிகாட்டப்படும் கல்லூரிகள் (Mentee Institutes) ஒவ்வொன்றுக்கும் ரூ.15.00 கோடியும் நிதி ஒதுக்கீடு பெற தகுதி பெற்றுள்ளன. தமிழகத்தில் உள்ள 7 வழிகாட்டிக் கல்லூரிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.53.40 கோடியில், இதுவரை ரூ.42.18 கோடி உரிய பயன்பாட்டிற்காக செலவிடப்பட்டுள்ளன.

TEQIP—III திட்டத்தின்கீழ் உள்ள கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் கட்டணம் ஏதுமின்றி, தொழிலகங்களில் உட்பயிற்சி (Internship), GATE தேர்வு எழுத வழி காட்டுதல் பயிற்சி, வேலைவாய்ப்பு பெறுதலுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி போன்ற பயிற்சிகள் அனைத்தும் TEQIP நிதியிலிருந்து வழங்கப்படுகின்றன. மத்திய அரசால், பொறியியற் கல்லூரிகளை தரவரிசைப்படுத்த அங்கீகாரம் பெற்ற National Institute of Ranking Frame Work (NIRF) தேசிய நிறுவனத்தின் தரவரிசைப்படி தமிழகத்தில், TEQIP—III திட்டத்தின்கீழ் உள்ள 4 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகள், அகில இந்திய அளவிலான தரவரிசை பட்டியலில், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு முதல் 100 இடங்களுக்குள் இடம் பெற்றுள்ளன. வழிகாட்டி கல்லூரிகள் தங்களால் வழிகாட்டப்படும் கல்லூரிகளுடன் (Mentee Institutions) இணைந்து 44 ஆராய்ச்சி முன்மொழிவுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளன. ஆராய்ச்சி மாணாக்கர்களுக்கான உதவித் தொகை (Research Assistantship)

2020 மார்ச் 12]
TEQIP—III திட்டத்தின்கீழ் உள்ள கல்லூரிகளில் பயிலும் முழுநேர ஆராய்ச்சி (Ph.D.) மாணாக்கர்களுக்கு TEQIP நிதியிலிருந்து ஆராய்ச்சி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2.18. ஆசிரியர்கள் பணி நியமனம்

மாணாக்கர்கள் தங்கள் ஆற்றலை வளர்த்துக் கொள்வதிலும், வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கேற்ப தங்களது தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்துவதிலும் ஆசிரியர்கள் மிக முக்கிய பங்கு வகித்து வருகின்றனர். உயர் தகுதியுள்ள ஆசிரியர்களை பணியமர்த்தும் சீரிய நோக்கத்துடன், ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் தகுதியுள்ள ஆசிரியர்களைப் பணியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. அரசின் இத்தகைய முயற்சியால், அரசு பொறியியல் கல்லூரிகளில் ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம், 342 உதவி பேராசிரியர்களும், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில், 137 விரிவுரையாளர்களும் கடந்த 7 ஆண்டுகளில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில், ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம், 1,060 விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.19. அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் மிகுதியாக இருந்த உபரி ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்களை மற்ற அரசு கல்லூரிகளில் மாற்றுப்பணி அடிப்படையில் பணியமர்த்தப்படுதல்

அரசின் ஆணைப்படி, அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் மிகையாக பணிபுரிந்து வந்த 378 உபரி ஆசிரியர்களில், 144 ஆசிரியர்களை அரசு பொறியியற் கல்லூரிகளில் உதவி பேராசிரியர்களாகவும், 234 ஆசிரியர்களை அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் விரிவுரையாளர்களாகவும் மற்றும் 40 உடற்கல்வித் துறை ஆசிரியர்களை அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் உடற்கல்வி இயக்குநர்களாகவும், 3 ஆண்டுகள் ஒப்பந்த அடிப்படையில் பணிநிரவல் செய்யப்பட்டுள்ளனர்.

[2020 மார்ச் 12

மேலும், மேற்படி பல்கலைக்கழகத்தில் மிகையாக பணிபுரிந்து வந்த 850 உபரி ஆசிரியரல்லா பணியாளர்கள் என மொத்தம் 1,268 பணியாளர்கள் அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பொதுப் பணித் துறையில் உள்ள தொழில்நுட்ப வட்டங்களுக்கும், தொழில்நுட்பக் கோட்டங்களுக்கும் 3 ஆண்டுகள் ஒப்பந்த அடிப்படையில் பணிநிரவல் செய்யப்பட்டுள்ளனர்.

2.20. பொறியியல் பட்டதாரிகளுக்கான செயல்திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு மேம்படுத்துதல் கலந்தாய்வு கூட்டம்

பொறியியல் கல்லூரிகளில் பயின்று பட்டம் பெறுகின்ற மாணாக்கர்களின் எண்ணிக்கை அதிகம் உள்ளதாலும், சிலர் தாங்கள் படித்த துறைக்கு தொடர்பில்லாத வேறு வேலையை செய்பவராக உள்ளதாலும், பொறியியல் பட்டதாரிகளுக்கான தேவை விகிதம் மாறுபடுவதால் நவீன தொழிலகங்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் எதிர்கொண்டு வரும் சவால்கள் ஆகியனவற்றைக் கண்டறியும் பொருட்டும், தமிழ்நாட்டின் பல்வேறு பொறியியல் கல்லூரிகளில் பயின்று பட்டம் பெற்ற பட்டதாரி மாணவர்களிடையே, வேலைவாய்ப்பு பெறுதலுக்கான திறன்களை மேம்படுத்தும் பொருட்டும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 10.09.2018 அன்று தலைமைச் செயலகத்தில் தொழில் நிறுவனங்களுடன் கூட்டம் நடத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, 2019—2020 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் "கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டலங்களில் பொறியியல் பட்டதாரிகளுக்கான தொழில்நுட்பத் திறன், வேலைவாய்ப்புத் திறன் மற்றும் வேலைவாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான கலந்தாய்வுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்படும்" என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேற்காணும் அறிவிப்பினைத் தொடர்ந்து, இத்திட்டத்தினைச் செயல்படுத்த ஏதுவாக, ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டு இது தொடர்பாக உயர்மட்டக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டு கலந்தாய்வுக் கூட்டங்களை நடத்த செயல்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 12]

2.21. உலக முதலீட்டாளர்கள் மாநாடு-2019 இல் (Global Investers Meet 2019) புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி தொழில்நுட்பக் கல்வித் துறையின் சார்பாக செய்யப்பட்ட முதலீடுகள்

முதலீட்டாளர்கள் விருப்பத்துடன் முதலீடு செய்வதற்கான இலக்குகளில் ஒன்றான மாநிலம், தமிழகம் என்ற நிலையை தக்க வைத்துக் கொள்ளும் பொருட்டு, தமிழக அரசால், 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 மற்றும் 24 ஆகிய இரு தேதிகளில், சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு—2019 சிறப்பாக நடத்தப்பட்டது. முதலீட்டு வருவாய்களை பெருக்குதல், புதிய வேலைவாய்ப்பினை உருவாக்குதல் ஆகியனவற்றை உள்ளடக்கிய நிலையான நீண்ட கால திட்டங்கள் குறித்த மாநிலத்தின் தொலை நோக்கு பார்வையால், அனைவரது கவனத்தையும் ஈர்க்கும் வகையில் இம்மாநாடு நடத்தப்பட்டது. 28 சுயநிதி பொறியியல் கல்லூரிகள்/பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் ஒரு நிகர்நிலை பல்கலைக்கழகம் சார்பில் ரூ.339.43 கோடி முதலீடு செய்ய உறுதியளித்து புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிட்டுள்ளனர். இதனால், மாணாக்கர்களின் சேர்க்கை விகிதம் அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல் ஏறத்தாழ 3,275 பேர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வேலைவாய்ப்பில் பயன் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

2.22. பொறியியல் மற்றும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர்கள் மற்றும் பணியமர்த்தும் அலுவலர்களுக்கான பயிற்சி திட்டம்

பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்கள் தங்களின் படிப்பினை முடித்தவுடன், உடனடியாக வேலைவாய்ப்பினை பெறும்பொருட்டு, பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின் முதல்வர்கள் மற்றும் பணியமர்த்தும் அலுவலர்களுக்கு இந்திய தொழில்நுட்ப நிறுவன ஆராய்ச்சிப் பூங்கா (IIT-RP), மதராஸ் தொழில்நுட்ப நிறுவனம் (MIT) ஆகியவற்றில் களப்பார்வையுடனான பயிற்சி 26-08-2019 முதல் 25-09-2019 வரை அளிக்கப்பட்டது. இதில், பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில்

[2020 மார்ச் 12

பணிபுரியும் முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்கள் உட்பட, சுமார் 2,000 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

3. கல்லூரிக் கல்வி

1965 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இக்கல்லூரிக் கல்வி இயக்ககம் தற்கால வளர்ச்சிக்கேற்ப உயர் கல்வித் துறையில் பல்வேறு முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அரசின் முனைப்பான திட்டங்கள் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, தமிழகத்தில் உயர் கல்வியில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. தற்போது 816 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 719 கல்வியியல் கல்லூரிகள், 4-ன்கீழ் திசைக் கல்லூரிகள், 11 உடற்கல்விக் கல்லூரிகள், 2 சமூகப் பணிப் பள்ளிகள் மற்றும் 27 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் கல்லூரிக் கல்வித் துறை நிருவாகத்தின்கீழ் இயங்கி வருகின்றன.

கல்லூரிகள் வகை	அரசு கல்லூரிகள்	உதவி பெறும் கல்லூரிகள்	சுயநிதி கல்லூரிகள்	மொத்தம்
கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்	106	139	571	816
உடற்கல்வி கல்லூரிகள்	—	3	8	11
கீழ்த்திசை கல்லூரிகள்	—	4	—	4
சமூகப் பணிப் பள்ளி	—	2	—	2
கல்வியியல் கல்லூரிகள்	7	14	698	719
பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரிகள்	27	—	—	27
மொத்தம்	140	162	1277	1579

2020 மார்ச் 12]

3.1. புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்குதல்

2013-14 ஆம் ஆண்டு முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை 18 அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை அரசு தொடங்கியுள்ளது. 2016-2017ஆம் ஆண்டு முதல் 2017-2018 ஆம் ஆண்டு வரை மேலும் 11 அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை அரசு தொடங்கியுள்ளது. மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் 2019—2020 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட உரையின்போது, இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்தில் மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் பெயரில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார். அதன்படி 2019-2020 ஆம் ஆண்டில் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் பெயரில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்கப்பட்டுள்ளது.

கல்வியாண்டு	புதிதாகத் தொடங்கப்பட்ட கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை	இடம் மற்றும் மாவட்டம்
2016—17	3	மேட்டுப்பாளையம் — கோயம்புத்தூர்
		பெரும்பாக்கம் — காஞ்சிபுரம்
		அவிநாசி — திருப்பூர்
2017—2018	8	காட்டுமன்னார் கோவில் — கடலூர்
		குடவாசல் — திருவாரூர்
		விழுப்புரம் (மகளிர்) — விழுப்புரம்
		சீர்காழி — நாகப்பட்டினம்
		திட்டமலை — ஈரோடு
		மாதனூர் — வேலூர்
		பல்லடம் — திருப்பூர்
		பாலக்கோடு — தருமபுரி
2019—20	1	இராமேஸ்வரம் — இராமநாதபுரம்

[2020 மார்ச் 12

3.2. அரசு கல்லூரிகளில் புதிய பாடப்பிரிவுகள் தொடங்குதல்

மாணாக்கர்கள் உயர் கல்வியைத் தொடரும் பொருட்டு 2011-12 ஆம் ஆண்டு முதல் 2016-2017ஆம் ஆண்டு வரை 961 புதிய பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டு, அப்பாடப்பிரிவுகளுக்காக 1,934 உதவிப் பேராசிரியர் பணியிடங்களையும் அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. கடந்த 2017-2018 முதல் 2019-2020 முடிய மொத்தம் 705 புதிய பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டு, அப்பாடப் பிரிவுகளுக்காக 960 உதவிப் பேராசிரியர் பணியிடங்களை அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

3.3. அரசு கல்லூரிகளில் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்கள் நியமனம் மற்றும் பணிநிரவல்

*2011-12 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை ஆசிரியர் தேர்வு வாரியம் வாயிலாக, 1,093 உதவி பேராசிரியர்கள் மற்றும் 343 ஆசிரியரல்லாப் பணியாளர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் வாயிலாக தெரிவு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், 2,331 உதவிப் பேராசிரியர்களை ஆசிரியர் தேர்வு வாரியம் வாயிலாக தெரிவு செய்யப்படும் பணி நடைபெற்று வருகிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மிகையாக இருந்த பணியாளர்களின் பணியினை திறம்பட பயன்படுத்தும் வகையில் 698 உதவி பேராசிரியர்கள் மற்றும் 100 ஆசிரியரல்லாப் பணியாளர்கள் பல்வேறு அரசு கல்லூரிகளில் பணி நிரவல்மூலம் மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டனர். மேலும், இந்த ஆண்டில் 39 உதவிப் பேராசிரியர்கள் மற்றும் 25 உதவி நிரலர்கள் (*Assistant Programmer*) பணி நிரவல்மூலம் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.*

3.4. அரசு கல்லூரிகளில் கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம்

*அரசுக் கல்லூரிகளில் சுழற்சி முறை வகுப்புகள் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டிலிருந்து தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 2019-2020 ஆம் கல்வியாண்டில் சுழற்சி *I-ல் (Shift I)* காலியாக இருந்த 2,423 ஆசிரியர் பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் நிரப்பும் வரையில் தற்காலிக*

2020 மார்ச் 12]

கௌரவ விரிவுரையாளர்களைக் கொண்டு நிரப்பிட அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. 2019-2020 ஆம் கல்வியாண்டிற்கு, 1,661 கௌரவ விரிவுரையாளர்களை 59 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சுழற்சி II—ல் (Shift II) அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

3.5. கட்டணமில்லாக் கல்வி

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கும் மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இளநிலை பட்டப்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கும் அரசு கட்டணமில்லாக் கல்வி வழங்கி வருகிறது. இத்திட்டத்தில் பயனடைந்த மாணாக்கர்களின் விவரம் பின்வருமாறு:

2017—18	:	*4,95,578*
2018—19	:	*4,96,599*
2019—20	:	*4,97,619*
மொத்தம்	:	*14,89,796*

3.6. கல்லூரி மாணாக்கர்களுக்கான கட்டணமில்லா பேருந்து பயண அட்டை வழங்கும் திட்டம்

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு கட்டணமில்லா பேருந்து அட்டை வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்மூலம் பயனடைந்த மாணாக்கர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

2017—18	:	*1,80,496*
2018—19	:	*1,81,398*
2019—20	:	*1,88,714*
மொத்தம்	:	*5,50,608*

3.7. வேலைவாய்ப்பு முகாம்

மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகங்களுக்கு உட்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் மாணாக்கர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. பல முன்னணி நிறுவனங்கள் அம்முகாம்களில் பங்கேற்று மாணாக்கர்களைத் தேர்வு செய்தனர். பயனடைந்த மாணாக்கர்களின் விவரம் பின்வருமாறு:

2017—2018	:	6,825
2018—19	:	6,965
2019—20	:	6,393
மொத்தம்	:	20,183

3.8. தமிழ் வழி பயிலும் மாணாக்கர்களுக்கான ஊக்கத் தொகை

தமிழ் வழியில் பயிலும் மாணாக்கர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் ஒவ்வோர் ஆண்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ் வழி பயிலும் மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் ஆண்டுக்கான ஊக்கத் தொகை 2018-2019 ஆம் ஆண்டு முதல் ரூ.400/—லிருந்து ரூ.900/— ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. 2018-2019 ஆம் ஆண்டில், 40,367 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர். 2019-2020 ஆம் ஆண்டில் 47,072 மாணாக்கர்கள் பயனடையும் வகையில், ரூ.4.24 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

3.9. சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் ஆதி திராவிடர்/பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணாக்கர்களில் குறிப்பாக பின்தங்கிய பகுதிகளில் இருந்து வரும் மாணாக்கர்கள் ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களைப் பயிலுவதில் துவக்கத்தில் சிரமப்படுகின்றனர். இத்தகைய மாணாக்கர்கள் மேற்கண்ட பாடங்களை முழுமையாகப் புரிந்துகொள்வதற்கு மாலை நேரங்களிலும், வார இறுதி நாட்களிலும் சிறப்புப் பயிற்சி

2020 மார்ச் 12]

அளிக்கப்பட்டு வருகிறது. 2019—2020 ஆம் ஆண்டில் 8,818 மாணாக்கர்கள் பயனடையும் வகையில் அரசு ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின்மூலம் பயனடைந்த மாணாக்கர்களின் விவரம் பின்வருமாறு:

2017—2018	:	9,695
2018—19	:	12,045
2019—20	:	8,818
மொத்தம்	:	30,558

3.10. ஆராய்ச்சிப் படிப்பு மாணாக்கர்களுக்கு ஊக்கத் தொகை

இத்திட்டத்தின்கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பல்வேறு பாடப்பிரிவுகளில் ஆராய்ச்சிப் படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. 2018-2019 ஆம் ஆண்டு முதல் இந்த உதவித் தொகையை ஆண்டொன்றுக்கு ரூ.36,000/—லிருந்து ரூ.60,000/— ஆக அரசு உயர்த்தி வழங்கி ஆணையிட்டுள்ளது. பயனாளிகளின் விவரம் பின்வருமாறு:

கல்வி ஆண்டு	செலவினம் (ரூபாய் இலட்சத்தில்)	பயனாளிகளின் எண்ணிக்கை
2017-18	51.12	142
2018-19	60.48	128
2019-20	85.20	142
மொத்தம்	196.80	412

3.11. குப்பைத் தொட்டிகள் வாங்குதல்

கல்லூரி வளாகத்தைத் தூய்மையாகவும் மற்றும் பசுமையாகவும் வைத்திருக்கும் பொருட்டு 2017-2018 ஆம் ஆண்டில் 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 7 கல்வியியல் கல்லூரிகள் மற்றும் 24 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளுக்கு குப்பைத் தொட்டிகள் வாங்குவதற்கென அரசால் ரூ.48.79 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது. 2018-2019 ஆம் ஆண்டில் கல்லூரிகளுக்கு குப்பைத் தொட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 12

3.12. கணினிகள் மற்றும் துணைக் கருவிகள் வாங்குதல்

சட்டமன்றப் பேரவையில் ஒவ்வொரு அரசு கல்லூரிக்கும் தலா 50 கணினிகள் மற்றும் 2 தடையில்லா மின் வழங்கிகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில், 2018-2019 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 31 கல்லூரிகளுக்கு மொத்தமாக 1,550 கணினிகள் மற்றும் 62 தடையில்லா மின் வழங்கிகள் வாங்குவதற்காக ரூ.8.61 கோடி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்)மூலம் கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 31 கல்லூரிகளுக்கு 1,550 கணினிகள் மற்றும் 62 தடையில்லா மின்வழங்கிகள் இவ்வாண்டு வழங்கப்படும்.

3.13. பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளை அரசு கல்லூரிகளாக மாற்றுதல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1.06.2018 அன்று சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாட்டில் உள்ள 41 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் ரூ.152.20 கோடி செலவில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

முதற்கட்டமாக, 1995-96 ஆம் ஆண்டு முதல் 2010-11 ஆம் ஆண்டு வரை தொடங்கப்பட்ட 14 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் அரசு கல்லூரிகளாக மாற்றப்பட்டுள்ளன. மேலும், இக்கல்லூரிகளுக்காக 819 ஆசிரியர் மற்றும் 238 ஆசிரியரல்லாப் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இக்கல்லூரிகள் 2019—2020 ஆம் ஆண்டு முதல் அரசு கல்லூரிகளாக செயல்பட்டு வருகின்றன.

3.14. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு மரத்தளவாடங்கள் வாங்குதல்

2012 ஆம் ஆண்டிற்குப் பிறகு 30 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவக்கப்பட்டுள்ளன. மேலும், ஒவ்வொரு ஆண்டும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதிய பாடப்பிரிவுகள் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு

2020 மார்ச் 12]

வருகின்றன. எனவே, ஆசிரியர் மற்றும் மாணாக்கர்களுக்கான மரத்தளவாடங்களின் தேவை அதிகரித்துள்ளது. இதனை நிறைவு செய்யும் பொருட்டு, 25 கல்லூரிகளுக்கு மேஜைகள் மற்றும் இருக்கைகள் வாங்குவதற்காக அரசு ரூ.4.93 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மரத்தளவாடங்கள் அனைத்தும் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (TANSI)மூலம் வாங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

3.15. புதிய கட்டடங்கள் கட்டுதல்

(i) புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான கட்டடங்கள் கட்டுதல்

2013-14 ஆம் ஆண்டு முதல் 2017-2018 ஆம் ஆண்டு வரை தொடங்கப்பட்ட 29 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு கட்டடம் கட்டுவதற்கென தமிழக அரசு ரூ.221.13 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கியுள்ளது. இவற்றில், ஒசூர், குமாரபாளையம், காங்கேயம், உத்திரமேரூர், பேராவூரணி, சிவகாசி, காரிமங்கலம், கோவில்பட்டி, கறம்பக்குடி, வேப்பந்தட்டை, மணல்மேடு, கடலாடி, முதுகுளத்தூர், டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் (சென்னை), நாகர்கோவில், சத்தியமங்கலம், திருவாடனை, வீரபாண்டி, அவிநாசி, பெரும்பாக்கம், மேட்டுப்பாளையம், பாலக்காடு, சீர்காழி, பல்லடம் மற்றும் விழுப்புரம் (மகளிர்) ஆகிய கல்லூரிகளுக்கு கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

திட்டமலை மற்றும் மாதனூர் ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான சொந்தக் கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது. அக்கட்டடங்கள் இவ்வாண்டிலேயே கட்டி முடிக்கப்படும். குடவாசல் மற்றும் காட்டுமன்னார்கோவில் ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான சொந்தக் கட்டடங்கள் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY ... வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(ii) மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகக் கட்டடங்கள்

திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய மண்டலங்களுக்கு அலுவலகங்கள் கட்டிக்கொள்ள ரூ.4.59 கோடி நிதி ஒப்பளிப்பு அரசால் வழங்கப்பட்டது. கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது.

தருமபுரி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகம் கட்ட ரூ.1.69 கோடியும், தஞ்சாவூர் மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகம் கட்ட ரூ.1.86 கோடியும் மற்றும் வேலூர் மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகம் கட்ட ரூ.1.54 கோடியும் அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. தருமபுரி, தஞ்சாவூர் மற்றும் வேலூர் மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகங்கள் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(iii) சென்னை மாநிலக் கல்லூரிக்கு புதிய ஆடவர் விடுதி மற்றும் நினைவு வளைவு கட்டுதல்

மாநிலக் கல்லூரிக்கு மாணாக்கர்களுக்கென தங்கும் விடுதி கட்ட அரசால் ரூ.10.00 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு கட்டட பணிகள் முடிந்து பயன்பாட்டில் உள்ளது. மேலும், இக்கல்லூரி தொடங்கப்பட்டு 175 ஆண்டுகள் நிறைவானதை முன்னிட்டு நினைவு வளைவு அமைக்க ரூ.40.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் நிறைவடைந்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

(iv) தொன்மைக் கட்டடங்களைப் புதுப்பித்துப் பராமரித்தல்

உயர் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கும் தமிழகத்தில் தொன்மையான கல்வி நிறுவனங்கள் அப்போதைய சென்னை மாகாணத்தில் நிறுவப்பட்டவை ஆகும். அவற்றின் பழமைவாய்ந்த கட்டடங்கள் புராதன மதிப்பு மிக்கவை. எனவே, மாண்புமிகு துணை முதலமைச்சர் நிதிநிலை அறிக்கையில் ரூ.26.00 கோடி செலவில் கும்பகோணம், அரசு கலைக் கல்லூரி, சென்னை,

2020 மார்ச் 12]

மாநிலக் கல்லூரியின் விக்டோரியா விடுதி மற்றும் இராணி மேரி கல்லூரி ஆகியவற்றின் புராதன கட்டடங்கள் புனரமைக்கப்படும் என அறிவித்தார். அவ்வறிவிப்பிற்கிணங்க பின்வரும் புனரமைப்புப் பணிகளுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது:

- *சென்னை மாநிலக் கல்லூரியின் பழமை வாய்ந்த விக்டோரியா விடுதிக் கட்டடத்தைச் சீரமைக்க ரூ.3.20 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.*

- *சென்னை, இராணி மேரி கல்லூரியில் உள்ள தொன்மையான கட்டடங்களை சீரமைத்து பராமரிக்க ரூ.6.04 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.*

- *கும்பகோணம், அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)யின் தொன்மையான கட்டடங்களை சீரமைத்து பராமரிக்க ரூ.14.80 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.*

3.16. பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கட்டடங்கள்

முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினைப் போற்றும் வகையில் ரூ.210 கோடியில் "பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கட்டடங்கள்" என்ற பெயரில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி 110 இன்கீழ் அறிவிப்பு வெளியிட்டதற்கிணங்க, 68 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.210 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, அவற்றுள் 64 கல்லூரிகளுக்கான கட்டட பணிகள் முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 4 கல்லூரிகளுக்கான கட்டட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3.17. அரசு கல்லூரிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல்

சட்டமன்றத்தில் செய்யப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து 60 அரசு கலை மற்றும் அறிவியல் மற்றும் 2 கல்வியியல் கல்லூரிகளுக்கு 55,173மீ. நீளத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட ரூ.37.52 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு சுற்றுச்சுவர் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கட்டுமானப் பணிகள் இவ்வாண்டு முடிக்கப்படும்.

3.18. அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்

இராமநாதபுரம், சேதுபதி அரசு கலைக் கல்லூரிக்கு புதிய கழிப்பறைத் தொகுதிகள் கட்டுவதற்கு 2018-19 ஆம் ஆண்டில் அரசால் ரூ.2.08 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.19. கலையரங்கம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல்

சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்ற முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவின்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சிவகங்கை, மன்னர் துரைசிங்கம் அரசு கலைக் கல்லூரிக்கு கலையரங்கம் மற்றும் சுற்றுச்சுவர் ரூ.3.93 கோடி செலவில் கட்டப்படும் என அறிவித்ததற்கிணங்க கலையரங்கம் கட்ட ரூ.2.89 கோடி மற்றும் சுற்றுச்சுவர் கட்ட ரூ.1.04 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு அரசால் வழங்கப்பட்டு கலையரங்கம் கட்டும் பணி நிறைவுற்று திறக்கும் தருவாயில் உள்ளது. சுற்றுச்சுவர் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

3.20. கூடுதல் வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைத் தொகுதிகள் கட்டுதல்

கோவில்பட்டி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு கூடுதலாக 12 வகுப்பறைகள், 4 ஆசிரியர் அறைகள் மற்றும் 2 கழிப்பறைத் தொகுதிகளுடன் கூடிய புதிய கட்டடம் கட்ட ரூ.2.62 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் நிறைவடைந்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதே போன்று வீரபாண்டி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு கூடுதலாக 7 வகுப்பறைகள் கட்ட ரூ.86.50 இலட்சம்

2020 மார்ச் 12]

நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு கட்டட பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.21. கஜா புயலால் பாதிப்படைந்த கல்லூரிகளில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்

கஜா புயலினால் பாதிப்படைந்த 14 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் மராமத்து பணிகளை மேற்கொள்ள 2019—2020 ஆம் ஆண்டில் ரூ.1.99 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3.22. கல்லூரிக் கல்வி இயக்ககம் மற்றும் சென்னை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்ககத்திற்கு ஒருங்கிணைந்த கட்டடங்கள் கட்டுதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற பேரவை விதி 110 இன்கீழ் செய்யப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, 3534 ச.மீ. பரப்பளவில் கல்லூரிக் கல்வி இயக்ககம் மற்றும் சென்னை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்ககம் ஆகியவற்றிற்கான ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் சைதாப்பேட்டையில் அமைந்துள்ள கல்வியியல் மேம்பாட்டு நிறுவன வளாகத்தில் கட்டுவதற்காக, ரூ.10.00 கோடி நிருவாக ஒப்பளிப்பும் ரூ.3.00 கோடி நிதி ஒப்பளிப்பும் செய்யப்பட்டு தற்போது கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.23. கோவில்பட்டி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு மாணவியர் விடுதி கட்டுதல்

கோவில்பட்டி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவிகள் விடுதி கட்டுவதற்காக 2019—2020 ஆம் நிதியாண்டில் ரூ.5.10 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

3.24. சென்னை, மாநிலக் கல்லூரிக்கு மாணவியர் விடுதி கட்டுதல் மற்றும் புதுப்பித்தல்

சென்னை, மாநிலக் கல்லூரியில் மாணவிகளுக்கு புதிய விடுதி கட்டுவதற்கும் மற்றும் புதுப்பிக்கும் பணிகளை மேற்கொள்ளவும்

2019-2020 ஆம் ஆண்டில் ரூ.8.22 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3.25. புதிய வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்கள் கட்டுதல்

புதிய பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்ட 54 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்குத் தேவையான 331 வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் 50 ஆய்வகங்களைக் கட்டும் பணிகளுக்காக ரூ.79.63 கோடிக்கு நிருவாக அனுமதி மற்றும் 2019-2020 ஆம் நிதியாண்டில் ரூ.40.00 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இக்கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3.26. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

தேசிய தர நிருணயக் குழுவின் தர மதிப்பீடு பெற ஏதுவாக 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளுக்கென ரூ.51.07 கோடியும் அக்கல்லூரிகளுக்குத் தேவையான மரத்தளவாடங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.2.93 கோடியும் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

3.27. 92 அரசு கல்லூரிகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் விதி எண் 110 இன்கீழ் 92 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தொடர்ந்து பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக சிறப்பு மானியமாக ஆண்டிற்கு ரூ.58.00 கோடி என இரு ஆண்டுகளுக்கு ரூ.116.00 கோடி வழங்கப்படும் என அறிவித்தார். அதற்கிணங்க ரூ.116.00 கோடிக்கு நிருவாக அனுமதியும் முதற்கட்டமாக 45 அரசு கல்லூரிகளில் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக 2019—2020 ஆம் நிதியாண்டில் ரூ.58.00 கோடிக்கு அரசால் நிதி ஒப்பளிப்பும் வழங்கப்பட்டுள்ளது.

3.28. தேசிய கல்வி நிறுவன தரவரிசை கட்டமைப்பு

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தேசிய தர மதிப்பீடு மற்றும் தகுதிச் சான்றிதழைப் பெற அரசு ஊக்குவிக்கிறது. தமிழகத்தில்

2020 மார்ச் 12]

உள்ள கல்லூரிகளின் தொடர் முயற்சியால் 35 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தர வரிசை பட்டியலில் தேசிய அளவில் முதல் 100 இடங்களில் இடம் பெற்றுள்ளன. இப்பட்டியலில் சென்னை, மாநிலக் கல்லூரி தேசிய அளவில் 3 ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.

3.29. நாட்டு நலப்பணித் திட்டம்

தமிழகத்தில் உள்ள உயர் கல்வி நிறுவனங்களில் 1969 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் நாட்டு நலப்பணித் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2019—2020 ஆம் ஆண்டில் மத்திய அரசு இத்திட்டத்திற்காக ரூ.13.43 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. தற்போது, 3,90,700 மாணவத் தொண்டர்களுடன் இத்திட்டம் தமிழகத்தில் பல்வேறு கல்வி நிறுவனங்களில் செயல்பட்டு வருகிறது.

3.30. விளையாட்டு

கல்வியின் ஒருங்கிணைந்த ஓர் அங்கமான விளையாட்டு மற்றும் தடகளப் போட்டிகளில் தமிழ்நாட்டில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் மாணாக்கர்கள் சிறந்து விளங்குகின்றனர். அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்கள் 2019—2020 ஆம் ஆண்டில், தேசிய அளவில் 124 பதக்கங்களும், மாநில அளவில் 271 பதக்கங்களும் மற்றும் மாவட்ட அளவில் 689 பதக்கங்களும் வென்று உயர் கல்வித் துறைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

3.31. மின் ஆளுமை திட்டம்

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் 02.07.2019 அன்று உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கையின்போது தமிழ்நாட்டில் உள்ள 1500/- க்கும் மேற்பட்ட கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளின் மனிதவளம் மற்றும் நிதி மேலாண்மையை சிறப்புற நிருவகிக்க திறன்மிகு செயலமைப்பு அவசியமென்பதால் அத்தகு சிறந்த நிருவாகத்தை

[2020 மார்ச் 12

அளித்திட ஏதுவாக கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தில் "மின் ஆளுமைத் திட்டம்" ரூ.1.00 கோடியில் அறிமுகப்படுத்தப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள். இதற்கென அரசு ரூ.99.80 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

4. பல்கலைக்கழகங்கள்

உயர் கல்வித் துறையின் ஆளுகையின்கீழ் பின்வரும் பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றன

1. சென்னைப் பல்கலைக்கழகம்
2 மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
3. அண்ணா பல்கலைக்கழகம்
4. பாரதியார் பல்கலைக்கழகம்
5. பாரதிதாசன் பல்கலைக்கழகம்
6. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
7. அழகப்பா பல்கலைக்கழகம்
8. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
9. பெரியார் பல்கலைக்கழகம்
10. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
11. திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
12. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
13. அண்ணாமலை பல்கலைக்கழகம்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

4.1. சென்னைப் பல்கலைக்கழகம்

4.1.1. சென்னைப் பல்கலைக்கழகம் 1857 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தின் அதிகாரம் அப்பொழுது இருந்த மதராஸ் மாகாணம் முழுவதும் பரவி

2020 மார்ச் 12]

இருந்தது. எனவே, சென்னைப் பல்கலைக்கழகம் மற்ற "தென்னிந்திய பல்கலைக்கழகங்களுக்குத் தாய்" என்ற பெருமை பெற்றது. தற்போது தமிழ்நாட்டில் பல புதிய பல்கலைக்கழகங்கள் தொடங்கப்பட்டுள்ளதால் இப்பொழுது சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய நான்கு மாவட்டங்கள் இப்பல்கலைக்கழகத்தின் அதிகார எல்லையில் உள்ளன.

4.1.2. தொடக்கம் முதல் சென்னைப் பல்கலைக்கழகம் கலை, அறிவியல், பொறியியல், தொழில்நுட்பம், மருத்துவம், கல்வி என பலவிதமான கல்லூரிகளைத் தன்னுடன் இணைத்துக் கொண்டிருந்தது. ஆனால் தற்போது கலை, அறிவியல், வணிகவியல் மற்றும் மேலாண்மையியல் கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களை இணைவு கல்லூரிகளாகக் கொண்டுள்ளது.

4.1.3. 1900 ஆம் ஆண்டு முதல், சென்னைப் பல்கலைக்கழகம் ஆராய்ச்சி மற்றும் முதுகலைப் பட்டப் படிப்புகளை மிகவும் சிறப்பாகச் செயல்படுத்தியும் கற்பித்தும் வருகிறது. கலை மற்றும் அறிவியல் கல்வியைக் கற்பித்தலில் சென்னைப் பல்கலைக்கழகம் முதன்மை பெற்றுள்ளதோடு, இதன்கீழ் 87 கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறைகளும் மற்றும் 121 இணைப்பு கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று குழுவின் மதிப்பீட்டில் (NAAC) 'A' தரவரிசை தகுதிச்சான்று பெற்றுள்ளது. 2014 ஆம் ஆண்டு கூடுதல் தரவரிசை மதிப்பீட்டில் 4.00—க்கு 3.32 என்ற மதிப்பைப் பெற்றது. இதற்குப் பல்கலைக்கழக மானியக் குழு "ஆற்றல்சார் பல்கலைக்கழகம்" என்ற அங்கீகாரத்தையும், இரண்டாம் நிலை தன்னாட்சி தகுதியும் வழங்கியுள்ளது. பல்கலைக்கழக அமைப்பில், "தன்னாட்சி கல்லூரிகள்" என்ற கருத்தமைவை முதலில் கொண்டு வந்த சிறப்பு சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு உரித்தாகும். தற்போது இதன்கீழ், 23 தன்னாட்சி கல்லூரிகள் உள்ளன. அவற்றுள் சில கல்லூரிகள் "ஆற்றல்சார் கல்லூரி" எனப் பல்கலைக்கழக மானியக் குழுவால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு 2019 (NIRF 2019) பல்கலைக்கழக பட்டியலில் சென்னைப் பல்கலைக்கழகம் இந்திய நாட்டின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் 20 ஆவது இடத்திலும் தமிழகத்திலுள்ள 3 தலைச் சிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றாகவும் இது திகழ்கிறது.

4.1.4. "எல்லோருக்கும் உயர் கல்வி" என்ற நோக்கத்தோடு 1981 ஆம் ஆண்டு தொலைதூரக் கல்வி நிறுவனத்தைச் சென்னைப் பல்கலைக்கழகம் தொடங்கியது. இதன் வழி, 15 இளநிலைப் பட்டப்படிப்புகள், 20 முதுநிலைப் பட்டப்படிப்புகள், 19 பட்டயப்படிப்புகள்/முதுநிலை பட்டயப்படிப்புகள், 7 சான்றிதழ் பட்டப்படிப்புகள் கற்பிக்கப்படுகின்றன. அனைத்தும் பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. தொலைதூரக் கல்வி திட்டத்தில் ஏறக்குறைய 70,452 மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். (ஆண்கள்—33,252, பெண்கள்—37,189 மற்றும் திருநங்கைகள்—11)

4.1.5. சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் முதுநிலைப் பட்டப்படிப்புகளில் 3,360 மாணாக்கர்களும் (ஆண்கள்—1,401, பெண்கள்—1,959), ஆய்வியல் நிறைஞர் (M.Phil.) பட்டப்படிப்புகளில் 168 மாணாக்கர்களும் (ஆண்கள்—62, பெண்கள்—106), முனைவர் (Ph.D.) பட்டப்படிப்புகளில் 124 மாணாக்கர்களும் பயில்கின்றனர். சென்னைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இணைந்து இரண்டு உறுப்புக் கல்லூரிகள் செயல்படுகின்றன. அவற்றுள் ஒன்று திருவொற்றியூரிலும் மற்றொன்று நெமிலியிலும் உள்ளன. இவற்றில் 1,672 மாணாக்கர்கள் பயில்கின்றனர்.

4.1.6. கடந்த மூன்று வருட காலங்களில் சென்னைப் பல்கலைக்கழகம் பல்வேறு அயல்நாட்டு பல்கலைக்கழகங்களுடன் இணைந்து செயல்பட 14 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.

4.1.7. மனிதவள மேம்பாட்டுத் துறையால் (MHRD) "ரூசா" (RUSA 2.0) என்ற திட்டத்தின்கீழ் சென்னைப் பல்கலைக்கழகம் ரூ.50.00 கோடி நிதி உதவி பெற தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்தில் "தொழில் முனைவோர் மற்றும் வேலைவாய்ப்பு மையம்" இத்திட்டத்தின்கீழ் தொடங்கியது. அதற்காக நடுவண் அரசு, ரூ. 7.50 கோடி மானியத்தை வழங்கியுள்ளது.

4.1.8. சென்னைப் பல்கலைக்கழக தொலைதூர கல்வி நிறுவனம் வாயிலாக இளநிலை கல்வியியல் பட்டப்படிப்பு நடத்துவதற்கான அனுமதி தேசிய ஆசிரியர் கல்வி குழுமத்திடம் (NCTE) பெற்று

2020 மார்ச் 12]

UGC-ன் தொலைதூரக் கல்வி பிரிவில் இதற்கான ஆணையையும் பெற்று, 2020—2021 கல்வி ஆண்டு முதல் B.Ed. வகுப்புகளை தொடங்க உள்ளது.

4.1.9. இப்பல்கலைக்கழகம் சீரிய முயற்சியோடு இளங்கலை மற்றும் முதுகலை பாடத்திட்டங்கள் மாற்றி அமைக்கப்பட்டு, அடுத்த கல்வி ஆண்டு முதல் புதிய உள்ளடக்கத்துடன் வகுப்புகள் நடைபெறும். இதன் மூன்று முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

1. UGC-ன் விளைவுகளின் அடிப்படையிலான பாடத்திட்டம் வரையறுத்தல் (Learning Outcome Based Curriculum Design) என்பதன் அடிப்படையில் ஒவ்வொரு பாடத்திட்டமும் உருவாக்கப்பட்டுள்ளது.

2. தொழில் முனைவு, சிறு வணிகம், புதிய கண்டுபிடிப்புகள், ஆரம்ப தொழில் முனைவு உந்துதல் போன்ற புதிய பாடங்கள் இளங்கலை வணிகவியல் பாடத்தில் அறிமுகப்படுத்தப்பட உள்ளன.

3. தரவு அறிவியல் (Data Science), செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), இணையம் போன்ற புதிய தொழில்நுட்பப் பாடங்கள் 2020—2021 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட உள்ளன.

4.1.10. இப்பல்கலைக்கழகம் "டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு மையம் மற்றும் சமூக வளர்ச்சித் திட்டம்" என்ற திட்டத்தினை மாண்புமிகு தமிழக ஆளுநரின் ஒப்புதலைக் கொண்டு நிறுவியுள்ளது. இதற்காக ரூ.5.00 கோடியை அரசு சென்னைப் பல்கலைக்கழகத்தின் 160 ஆவது வைர விழா ஆண்டின் கொண்டாட்டத்தைப் போற்றும் விதமாக அளித்துள்ளது.

4.1.11. இப்பல்கலைக்கழகமானது முனைவர் (Ph.D.) ஆய்வறிக்கைகளை "சோத்கங்கா" என்கின்ற மின்னணு வைப்பில் பதிவேற்றம் செய்வதில், 388 பல்கலைக்கழகங்களுக்குள் 3 ஆவது இடத்தில் உள்ளது. இதுவரை 8,911 ஆய்வறிக்கைகள் பதிவேற்றம் செய்யப்பெற்றுள்ளன.

4.1.12. இப்பல்கலைக்கழகம் சூரிய ஒளி சக்தி அமைப்பைத் தனது அனைத்துப் புதிய கட்டடங்களிலும் பொருத்தியுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் 45 KVA அளவு ஒளிசக்தி ஆற்றல் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த வசதிகள் சேப்பாக்கம் மற்றும் கிண்டி பெண்கள் விடுதிகளிலும் பொருத்தப்பட்டுள்ளன.

4.1.13. சென்னைப் பல்கலைக்கழகம் 30,257 பட்டச் சான்றிதழ்களைத் "தேசிய கல்விசார் வைப்பு" (NAD) என்ற அமைப்பில் பதிவேற்றம் செய்துள்ளது. மேலும், இதில் அலுவலக ஆவணங்களும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

4.2. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

4.2.1. மதுரை பல்கலைக்கழகம் 1965 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, பின்னர் 1979 ஆம் ஆண்டு பாரத ரத்னா மாண்புமிகு திரு. கு. காமராஜ் அவர்களின் மகத்தான கல்விப் பங்களிப்பினைப் போற்றும் வகையில், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் எனப் பெயர் மாற்றப்பட்டது. 2005 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியக் குழு மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு "ஆற்றல்சார் பல்கலைக்கழகம்" என்னும் உயர் தகுதியினை வழங்கியுள்ளது. இப்பல்கலைக்கழகம் 528 ஏக்கர் பரப்பளவில் செயல்பட்டு வருகிறது.

4.2.2. இப்பல்கலைக்கழகமானது 20 புலங்களின்கீழ், 77 துறைகளைக் கொண்டுள்ளது. இப்பல்கலைக்கழகம் மதுரை, தேனி, விருதுநகர் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் 90 இணைவுக் கல்லூரிகள், 5 மாலை நேரக் கல்லூரிகள், 4 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள், 1 மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரி, 14 அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களை நிருவகிக்கிறது. இந்நிறுவனங்களில், 1,56,590 மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். மேலும் இப்பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்ககம் வாயிலாக 75,000 மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். இப்பல்கலைக்கழகம் 2016 இல் பொன்விழா ஆண்டை நிறைவு செய்துள்ளது. இப்பல்கலைக்கழக 4 பேராசிரியர்கள் மதிப்பு மிக்க விருதுகளான சாந்தி சொரூப பட்நாகர் விருதினையும், 8 பேராசிரியர்கள் தேசிய அறிவியல் கழக விருதினையும், 8 பேராசிரியர்கள் தேசிய அறிவியல் கல்விக் கழக விருதினையும்,

2020 மார்ச் 12]

11 பேராசிரியர்கள் இந்திய அறிவியல் கழக விருதினையும், 2 பேராசிரியர்கள் உலக அறிவியல் கழக விருதினையும், மூத்த ஸ்பலஞ்ஜனி விருதினை ஒருவரும், 2 பேராசிரியர்கள் அணுசக்தித் துறையின் இராஜா இராமண்ணா உதவித் தொகையையும், 16 பேராசிரியர்கள் தமிழக அறிவியல் விருதினையும் பெற்றுள்ளனர். பல்கலைக்கழக மானியக் குழுவினால் வழங்கப்படும் அடிப்படை அறிவியல் ஆராய்ச்சியாளர் விருது 4 பேராசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத் துறைகளுக்கு ஒரு நிமிடத்திற்கு 1 Gbps இணைய வசதி வழங்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக வளாகம் முழுவதும் கம்பியில்லாத் தகவல் பரிமாற்ற வசதி செய்யப்பட்டு, மின் இணைய ஆற்றல் பெற்ற வளாகமாக்கப்பட்டுள்ளது.

4.2.3. இப்பல்கலைக்கழக புலங்கள் / துறைகளின்மூலம் 44 முதுநிலை பாடப்பிரிவுகளும், 38 ஆய்வியல் நிறைஞர் பாடப்பிரிவுகளும், 45 முனைவர் பட்டப் பாடப்பிரிவுகளும், 13 சான்றிதழ், பட்டயம், முதுநிலைப் பட்டயப் படிப்பு ஆகிய பாடப்பிரிவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

4.2.4. இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் வழங்கப்படும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தேசியத் தர மதிப்பீட்டு வரிசையில் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 2018 ஆம் ஆண்டில் பெற்ற 54 ஆவது இடத்திலிருந்து, 2019 ஆம் ஆண்டிற்கான தேசிய நிறுவன தர வரிசையில் 45 ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளது. 3,127 இந்தியப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 69 ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.

4.2.5. இலண்டனில் உள்ள குவாக்கொரெல்லி சைமன்ட்ஸ் (Quacquarelli Symonds) என்னும் உலகப் பல்கலைக்கழகத் தரவரிசை 2020 இன் 16 ஆவது பதிப்பு வெளியிட்ட தரவரிசையில் ஆறு அளவுகளிலுள்ள ‘கல்விசார் பெருமை’ மற்றும் ‘நிறுவன நற்பெயர்’ எனும் அளவுருக்களின் அடிப்படையில், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 86—90 என்னும் தரவரிசையில் இடம்பெற்றுள்ளது.

4.2.6. இந்தியாவின் வளரும் பொருளாதாரத்திற்காக மாற்றுத் துறை ஆய்வுத் திட்டத்தின்கீழ் பல்கலைக்கழக மானியக் குழு, 2019 ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் பல்லுயிர் பெருக்கத்திற்கான ஒருங்கிணைந்த வள மையத்தை நிறுவுவதற்கு ரூ.1.00 கோடி நிதியினை வழங்கியுள்ளது. பல்கலைக்கழக மானியக் குழு, வளரும் பொருளியலுக்கான மாற்றுத் துறை ஆய்வுத் திட்டத்தைச் செயல்படுத்தும் நாட்டிலுள்ள 16 பல்கலைக்கழகங்களில் ஒன்றாக மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தைத் தேர்வு செய்துள்ளது. இந்த ஒருங்கிணைந்த வள மையம், குறிப்பாக காலநிலை மாற்றம் மற்றும் பிற சுற்றுச்சூழல் பிரச்சினைகள் காரணமாக, நாடு தழுவிய அளவில் பாதிக்கப்பட்டுள்ள கோடிக்கணக்கான மக்களின் பல்லுயிர் மற்றும் சார்பு வாழ்வாதாரத்திற்கு உதவவும் பாதுகாக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது.

4.2.7. 2019 ஆம் ஆண்டில், பல்கலைக்கழகம் மற்றும் இணைப்புக் கல்லூரி மாணாக்கர்களுக்கும், தொழில் முனைவோர் தரப் பயிற்சித் திட்டத்தை வளமாக்குவதற்கான எதிர்கால நோக்குடன், தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் கண்டுபிடிப்பு நிறுவனம் நிறுவுவதற்கான மையங்களில் ஒன்றாக தமிழக அரசு மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தைத் தேர்ந்தெடுத்துள்ளது. தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் கண்டுபிடிப்பு நிறுவனங்களின் மையமானது (EDII—HUB) இணைவிப்பு மற்றும் உறுப்புக் கல்லூரிகளுக்கான உயர் மேலாண்மை உட்கட்டமைப்பு (Top Management meet) மற்றும் புத்தாக்கப் பயிற்சிப் பயிலரங்கம் (Orientation Workshop); ஆசிரியர்களிடையே தொழில் முனைவோர் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த மூன்று நாள் ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாடு மாணவ கண்டுபிடிப்பாளர்களுக்காக விழிப்புணர்வு நிகழ்ச்சி (Awareness Programme); (TNSI)—2019 மற்றும் மாணாக்கர்களுக்கான மின்—ஆளுமை தலைவரை உருவாக்கவும் இரு நாள் பயிலரங்கங்களை நடத்தியுள்ளது.

4.2.8. 2017-2018 ஆம் ஆண்டில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு தேசிய உயர் கல்வி திட்டத்தில் (ரூசா), முதல் கட்டமாக ஒதுக்கிய ரூ.20.00 கோடியும் முறையாகப்

பயன்படுத்தப்பட்டுள்ளது. ரூசா இரண்டாம் கட்டத்தில் ரூ.53.50 கோடியைப் பெற்றுள்ளது. அந்நிதியில் 300 கணினிகள் மற்றும் 2 கணினி சேவையகங்கள் வாங்கப்பட்டுள்ளன.

4.2.9. பல்கலைக்கழக மானியக் குழு மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நிதி நல்கையின் வழி பெறப்பட்ட ரூ.1.20 கோடிமூலம் உடற்தகுதி விளையாட்டு அறிவியல் காப்பு மையம் ஒன்று கட்டப்படவுள்ளது. மேலும், இம்மையத்திற்கு அதிநவீன விளையாட்டுக் கருவிகள் வாங்க பல்கலைக்கழக மானியக் குழுவானது ரூ.1.20 கோடி நிதியை வழங்கியுள்ளது.

4.2.10. முனைவர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் நூலகத்தில், பொது நூலக இயக்குநரகத்தின் உதவியுடன், 60 ஆண்டுகளுக்கு மேலான அரிதான தமிழ் மற்றும் ஆங்கில இலக்கிய நூல்களை மின்னணு ஆவணப்படுத்தும் பணி தொடங்கி வைக்கப்பட்டு, பழைய ஓலைச் சுவடியில் உள்ள தமிழ் இலக்கியம், அரிதான தமிழ் மற்றும் ஆங்கில இலக்கிய நூல்களை மின்னணு ஆவணப்படுத்தும் பணி நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. அரிதான நூல்களை மின்னணு ஆவணப்படுத்தும் பணி முடிவடைந்தவுடன், சென்னையில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகம் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழக வலைதளங்களில் பதிவேற்றம் செய்யப்படும். இதுவரை 1,273 நூல்கள் மின்னணு ஆவணப்படுத்தப்பட்டு தரமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

4.2.11. ஆய்வேட்டினைத் தேடும் பகுதியான சோத்கங்கா என்னும் வலைதளத்தில், மதுரை காமராசர் பல்கலைக்கழக, முனைவர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் நூலகம் ஏற்கெனவே 2,229 முனைவர் பட்ட ஆய்வேட்டினை பதிவேற்றம் செய்துள்ளது. தற்போது 2007ஆம் ஆண்டிற்கு முன்னர் சமர்பிக்கப்பட்ட, முனைவர் பட்ட ஆய்வேட்டினை மின்னணு ஆவணப்படுத்துவதற்காக பல்கலைக்கழக மானியக் குழு ரூ.19.40 இலட்சம் வழங்கியுள்ளது.

*4.2.12. தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் 2019ஆம் ஆண்டில் மிக அதிகமான இணையத் தரவு மூலங்களைப் (*e—Resources*) பயன்படுத்தியிருப்பது மதுரை காமராசர் பல்கலைக்கழகமே என்பதை 30.01.2020 அன்று மிகச் சிறந்த கல்வி வெளியீடான ஸ்பிரிங்கர் நேச்சர் (*Springer Nature*)*

மற்றும் எல்சிவியர் (Elsevier) என்ற இதழ்கள் உறுதிப்படுத்தி உள்ளன.

4.2.13. நமது கலாச்சாரம் தொடர்பான அறிவை சேகரித்தல், ஆவணப்படுத்துதல், பரப்புதல் மற்றும் ஆராய்ச்சி முடிவுகளை சமூகத்திற்கு எடுத்துச் சொல்லும் நோக்கங்களுடன் பாரம்பரியக் கூட்டமைப்பு ஒன்றினை மதுரை காமராசர் பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது.

4.2.14. மாபெரும் திறந்தவெளி மின்னணு படிப்புகளை மேம்படுத்துவதற்காக, கல்வி தொடர்புக்கான கூட்டமைப்பின்மூலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ரூ.47.00 இலட்சம் பெற்றுள்ளது. கல்விப் பல்லூடக மின்னணு ஆராய்ச்சி மையம் (EMRC) 2019ஆம் ஆண்டில் இளநிலைக்கான 7 மாபெரும் திறந்தவெளி மின்னணு படிப்புகளை (MOOCs) திறந்தவெளி இணையவழிப் படிப்பு (SWAYAM)மூலம் தொடங்கியுள்ளது.

4.2.15. 2019 சனவரி முதல் டிசம்பர் வரையில், மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஸ்கோபஸ் (Scopus) அட்டவணைப்படுத்தப்பட்ட இதழ்களில் வெளியிட்டுள்ள 314 கட்டுரைகளில், தற்போதைய தேதியின்படி, 90 ஆராய்ச்சி கட்டுரைகளுக்கு h—தரக்குறியீடு (h—index) கிடைத்துள்ளது.

4.2.16. தேசிய மற்றும் உலகளாவிய நிதிநல்கை அமைப்புகளான அறிவியல் தொழில்நுட்பக் கழகம் (DST), உயிர் தொழில்நுட்பக் கழகம் (DBT), அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியம் (SERB), இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சிக் கழகம் (ICSSR), பல்கலைக்கழக மானியக் குழு (UGC), இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ICMR) மற்றும் இந்திய அணுசக்திக் கழகம் (DAE) ஆகியவற்றின் நிதி நல்கையுடன், மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆசிரியர்கள் ரூ.25.00 கோடி மதிப்பிலான 61 ஆராய்ச்சித் திட்டங்களைப் பெற்று செயல்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

4.2.17. தொழில் ஆலோசனை மையம் மிகச் சிறப்பாக இயங்குவதோடு, ஆசிரியர்களைத் தொழில்சார் சேவை செய்ய ஊக்கப்படுத்தி, 2019 ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான காலகட்டங்களில் பல்வேறு மருத்துவமனைகளுக்கு திசுக்கள்

2020 மார்ச் 12]

தொடர்பான ஆலோசனை வழங்கி, அதன்மூலம் ரூ.10.37 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

4.2.18. 2018-19ஆம் ஆண்டில் பல்கலைக்கழகம் மற்றும் இணைப்புக் கல்லூரிகளில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர் உயர் கல்விக்கான உதவித்தொகை ரூ.34.69 இலட்சமும், உயர் கல்வி சிறப்பு உதவித் தொகை ரூ.16.64 இலட்சமும், 2017-2018 ஆம் ஆண்டில் பரிசுத் தொகை விருது ரூ.36,000/- பெறப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

4.2.19. பல்கலைக்கழகத்தில் செய்யப்படும் பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்களை முன்னெடுப்பதற்காக முதன்மை நிதி நிறுவனங்களால், நடப்பு ஆண்டில், 6 நபருக்கு முனைவர் பட்ட மேலாய்வு உதவித்தொகையும், 83 நபருக்கு ஆராய்ச்சி உதவித் தொகையும் ரூ.11.50 இலட்சம் வரை வழங்கப்பட்டுள்ளன.

*4.2.20. மதுரை காமராசர் பல்கலைக்கழகம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை/பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் அறிவியல் சிறப்பை மேம்படுத்துதல் திட்டத்தின் (*DST-PURSE*)ன்கீழ் (2017-2022) முதல் கட்டமாக ரூ.9.00 கோடியும், இரண்டாம் கட்டமாக ரூ.7.35 கோடியும் பெற்றுள்ளது. இதைத் தவிர பல துறைகள்* DST-PURSE *மற்றும்* UGC-SAP *அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.*

*4.2.21. மதுரை காமராசர் பல்கலைக்கழகம் இந்த ஆண்டிற்குள் மின்சாரத் தேவையினைப் பூர்த்திச் செய்துகொள்ள ரூ.7.50 கோடி செலவில், சூரியசக்தி தகடுகளை பதிப்பிவித்து செயல்படுத்துவதற்காகக் கிராமிய மின்மயமாக்கும் நிறுவனத்துடன் (*Rural Electrification Corporation Limited*) 2018 ஆம் ஆண்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது. இதன்மூலம் 1* MWp *மின்சாரம் தயாரிக்கப்படவுள்ளது. இதற்கு முதற்கட்டமாக, ரூ.2.80 கோடியை* RECL *நிறுவனம் வழங்கியுள்ளது. சூரிய சக்தி தகடுகள் நிறுவும் பணி இவ்வாண்டில் நிறைவு பெறும்.*

4.2.22. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் இயங்கும் உயிர் அறிவியல் இணைய வள மையத்தின், செயல்திறன் அடிப்படையில் பல்கலைக்கழக மானியக் குழுவானது உயிர் அறிவியல் சார்ந்த

ஆய்வு செய்யும் இளம் ஆய்வாளர்களுக்குப் பயிற்சியளித்து வருகிறது. மேலும், 2018-2023 ஆம் ஆண்டுகளுக்காக இம்மையத்திற்கு இரண்டாவது கட்டமாக ரூ.10.00 கோடி வழங்கியுள்ளது.

4.2.23. தமிழ்நாடு அரசு, தொல்லியல் ஆய்வுகளைக் குறிப்பாக பழமையான மரபணு ஆய்வினை இணைந்து செய்வதற்காக மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தைத் தேர்ந்தெடுத்துள்ளது.

4.2.24. நமது கலாச்சாரம் தொடர்பான தரவுகளைச் சேகரித்தல், ஆவணப்படுத்துதல், நமது கலாச்சாரம் தொடர்பான அறிவை பரப்புதல் போன்ற முக்கிய நோக்கங்களுக்காக, ஒரு பாரம்பரிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இது ஆராய்ச்சி முடிவுகளை சமுதாயத்திற்கு எடுத்துச் செல்லும்.

4.2.25. மதுரை காமராசர் பல்கலைக்கழகம் EMRCமூலம் 37 இளநிலை பாடப்பிரிவுகளை SWAYAM வழியாக வழங்கியுள்ளது. இதுவரை 3.3 இலட்சம் மாணவர்களின் தகவல்களை தேசிய கல்வி வைப்பு (NAD) இணையதளத்தில் பதிவேற்றியுள்ளது.

4.3. அண்ணா பல்கலைக்கழகம்

4.3.1. இந்தியாவின் தனிப்பெரும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகமான அண்ணா பல்கலைக்கழகம், நாட்டில் தொழில்நுட்பக் கல்வியில் தொடர்ந்து முன்னணியில் உள்ளது. இந்த மதிப்புமிக்க பல்கலைக்கழகம் கிண்டி பொறியியல் கல்லூரி, அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி, சென்னை தொழில்நுட்ப நிறுவனம், கட்டடக்கலை மற்றும் திட்டமிடுதல் பள்ளி ஆகிய நன்கு அறியப்பட்ட நான்கு தொழில்நுட்ப நிறுவனங்களை ஒருங்கிணைத்து ஒரு ஒருமை வகை பல்கலைக்கழகமாக மதராஸ் (தற்போது சென்னை) நகரில் செப்டம்பர் 4, 1978 இல் துவங்கப்பட்டது. இப்போது, இது மாநிலத்தின் அனைத்து பொறியியல் கல்லூரிகளையும் அதன் குடையின்கீழ் கொண்ட இணைவுவகை பல்கலைக்கழகமாகத் திகழ்கிறது.

4.3.2.இப்பல்கலைக்கழகம் 4 வளாகங்களையும் (CEG, ACTech, SAP மற்றும் MIT), 13 உறுப்புக் கல்லூரிகளையும் மற்றும் திருநெல்வேலி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 3 மண்டல

2020 மார்ச் 12]

வளாகங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. 551 அரசு, அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதி பொறியியல் கல்லூரிகள் அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. அண்ணா பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழகத் துறைகள் வாயிலாக 28 இளநிலை மற்றும் 77 முதுநிலை படிப்புகளில் 15,515 மாணாக்கர்கள் (9,129 மாணவர்கள் மற்றும் 6,386 மாணவிகள்) பயில்கின்றனர். இணைப்புக் கல்லூரிகளில் 43 இளநிலை மற்றும் 59 முதுநிலை படிப்புகளில் 3,79,763 மாணாக்கர்கள் பயில்கின்றனர் மற்றும் தொலைதூரக் கல்வியில் 2,297 (1,264 மாணாவர்கள் மற்றும் 1,033 மாணவிகள்) முதுநிலை மாணவர்கள் பயின்று வருகின்றனர். மேலும், அண்ணா பல்கலைக்கழகம் 12,129 (7,229 மாணவர்கள் மற்றும் 4,900 மாணவிகள்) முனைவர் பட்ட மாணாக்கர்களை தன்னகத்தே கொண்டுள்ளதற்குப் பெருமை கொள்கிறது.

4.3.3. அண்ணா பல்கலைக்கழகம், தேசிய தர வரிசைப் பட்டியல் 2019 இல் பல்கலைக்கழகங்களில் 7 ஆவது இடத்திலும், கட்டடக்கலை நிறுவனங்களில் 12 ஆவது இடத்திலும், பொறியியல் நிறுவனங்களில் 9 ஆவது இடத்திலும், ஒட்டுமொத்த பிரிவில் 14 ஆவது இடத்திலும், மேலாண்மை பிரிவில் 43 ஆவது இடத்திலும் உள்ளதாக மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகம் (MHRD) வெளியிட்டுள்ளது. கியூஎஸ் (QS) தரவரிசை 2019 இன்படி, அண்ணா பல்கலைக்கழகம் உலக அளவில் 751—800 வரையிலும், ஆசிய அளவில் 169 ஆவது இடத்திலும், அகில இந்திய அளவில் 13 ஆவது இடத்திலும், பிரிக்ஸ் அளவில் 87 ஆவது இடத்திலும் உள்ளது.

அண்ணா QS தரவரிசையில் 2020 இன்படி உலகளவில் 751—800 வரையிலும், பொறியியல் மற்றும் தொழில்நுட்ப வரிசையில் 373 ஆவது இடத்தை பெற்றுள்ளது. இது சென்ற ஆண்டின் தரவரிசையை ஒப்பிடும் போது 24 இடங்கள் முன்னேறி உள்ளது.

4.3.4. அண்ணா பல்கலைக்கழகம், 720 மாணாக்கர்கள் பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் சேர வசதியாக 4 புதிய இளநிலை படிப்புகளை, திருநெல்வேலி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மூன்று மண்டல மையங்களில் அறிமுகப்படுத்தியுள்ளது.

4.3.5.இந்திய அரசின், மத்திய நீர் ஆணையம், உலக வங்கி வழங்கும் நிதியுதவி திட்டமான அணை மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டு திட்டத்தின்கீழ், திறன் மேம்பாட்டிற்காக ரூ.4.10 கோடியை வழங்கி உள்ளது. அண்ணா பல்கலைக்கழகத்தின் எம்.ஐ.டி. வளாகத்தில் தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டிற்காக சிறப்பு மையம் நிறுவப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக ஐந்து தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டு நிறுவனங்கள் பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி காஞ்சிபுரம், விழுப்புரம், தந்தை பெரியார் அரசு தொழில்நுட்ப நிறுவனம், வேலூர், மத்திய பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, தரமணி மற்றும் முருகப்பா பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, ஆவடி ஆகிய கல்லூரிகளில் நிறுவப்பட்டுள்ளன. பொது தனியார் கூட்டாண்மை (PPP) மூலமாக சீமென்ஸ் மற்றும் வடிவ தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து தமிழக அரசு, அரசின் பங்களிப்புத் தொகையான ரூ.54.68 கோடியுடன் ரூ.546.84 கோடி தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்மூலம் வழங்கியுள்ளது. சீமென்சுடன் இணைந்து தமிழக அரசு எம்.ஐ.டி. வளாகத்தில் 14 ஆய்வகங்களையும் நிறுவியுள்ளது.

4.3.6. அண்ணா பல்கலைக்கழகம், சென்னை மற்றும் சீமென்ஸ் லிமிடெட், மும்பை இடையேயான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் சீமென்ஸ் இயந்திர கருவி தொழில்நுட்ப சாதனங்களை, சினுமெரிக் 828D வன்பொருள் சாதனம் மற்றும் சினுட்ரெய்ன் மென்பொருள் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சித் திட்டத்தை நாகர்கோவில் மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களிலுள்ள பல்கலைக்கழக பொறியியல் கல்லூரிகள் நடத்தியுள்ளன. பயிற்சி உட்கட்டமைப்பை மேம்படுத்த பயன்படுத்தக்கூடிய வன்பொருள் மற்றும் மென்பொருளை சீமென்ஸ் வழங்கும். இந்தத் திட்டங்கள் கல்வி நிறுவனத்திற்கும் தொழில் தேவைக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்க பாலமாக உதவும்.

4.3.7. வான்வெளி ஆராய்ச்சி மையக் குழுவானது, ஏரோ இந்தியா 2019 இன் ஒரு பகுதியாக இந்திய விமானப்படை, பாதுகாப்பு அமைச்சகம் நடத்திய ஏரோ இந்தியா ட்ரோன் ஒலிம்பிக்கில் பல்வேறு பிரிவுகளில் பங்கேற்று, ஒரு தங்கப் பதக்கத்தையும் இரண்டு வெள்ளிப் பதக்கங்களையும் வென்றது.

2020 மார்ச் 12]

4.3.8. தற்போது அண்ணா பல்கலைக்கழகத்தில் 14 துறைகள் பல்கலைக்கழக மானியக் குழு (UGC) சிறப்பு உதவித் திட்டத்தின்கீழ் 5 வருட காலத்திற்கு ஆதரவைப் பெற்றுள்ளது. இதற்காக மொத்த மானியம் ரூ.16.98 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

4.3.9. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை மொத்தம் ரூ.18.04 கோடி உள்கட்டமைப்பு மானியங்களைப் பெறுவதற்காக, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான நிதியத்தின்கீழ் (FIST) பல்கலைக்கழகத்தின் 17 துறைகளை அங்கீகரித்துள்ளது.

4.3.10. உயிர் மருத்துவ பொறியியல் மற்றும் கருவியியல் சாத்தியமான திறனுக்கான பல்கலைக்கழகம் என்று ஒரு புதிய வணிக முன்மாதிரியுடன் வெளிவந்துள்ளது. மேலும் ஆண்டிபயாடிக் தேர்வுக்கான பகுதி தானியங்கி மருத்துவரின் உதவி மற்றும் மருத்துவ சோதனை மற்றும் அளவுத் திருத்த ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தில் அங்கீகாரம் பெற்று புகழ் பெற்ற நுண்ணுயிரியல் ஆய்வகத்தில் மருத்துவ ரீதியாக சரிபார்க்கப்பட்டது. இது இப்போது வணிகமயமாக்கலுக்கு தயாராக உள்ளது.

4.3.11. வீரியமிக்க பாக்டீரியாக்களுக்கு எதிராக திறமையான ஆண்டிபயாடிக் சிகிச்சையை நிருவகிக்க மருத்துவமனைகளுக்கு வசதியாக ஒரு உயர் செயல்திறன் மாதிரி மற்றும் ஆண்டிபயாடிக் தேர்வுக்கான மருத்துவரின் பரிந்துரை உருவாக்கப்பட்டுள்ளது.

4.3.12. சிறிய மூலக்கூறு பகுப்பாய்வு, செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான உயிர் மருத்துவ இமேஜிங் தளம், மின்னணு அமைப்பு வடிவமைப்பு மற்றும் உற்பத்தி வசதி, மின் மற்றும் இயந்திர சோதனை, அளவுத்திருத்த வசதி மற்றும் வரையறுக்கப்பட்ட உற்பத்தி இயந்திர பிரிவு ஆகியவை ஆய்வகத்திலிருந்து சந்தைப்படுத்தக்கூடிய உயிர் மருத்துவ சாதனங்களை முழுமையாக உருவாக்க உதவும் வகையில் ரூ.20.00 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளன. இம்மேம்பட்ட அதிநவீன வசதிகள் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களிலும் மற்றும் புதிய தொழில் அமைப்புகளின் (Startup) உள்நாட்டு வடிவமைப்பு, மேம்பாடு மற்றும் உற்பத்தியை ஆதரிக்க தேசிய வசதிகளாகவும் செயல்படும்.

[2020 மார்ச் 12

4.3.13. மனிதாபிமான உதவி மற்றும் பேரழிவு நிவாரணத்தை நிருவகிக்கும் திறன் கொண்ட கூட்டு ஆளில்லா ஆகாய விமான வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டுக்காக இந்திய விமானப்படை ஏற்பாடு செய்துள்ள மெகர் பாபா பரிசுப் போட்டியின் இறுதிக் கட்டத்தில் பங்கேற்க ஐந்து அணிகளில் ஒன்றாக வான்வெளி ஆராய்ச்சி மையத்தின் குழு பட்டியலிடப்பட்டுள்ளது.

4.3.14. அண்ணா பல்கலைக்கழகத்தில், சர்வதேச உறவுகள் மையத்தின்கீழ் முன்னாள் முனைவர் கூட்டு வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

4.3.15. ஆராய்ச்சி, புதுமை மற்றும் தர மேம்பாட்டுக்காக அண்ணா பல்கலைக்கழகத்திற்கு ரூசா 2.0—க்கான திட்ட ஒப்புதல் வாரியம், ரூ.50.00 கோடி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றுள் ரூ.15.00 கோடி தொழில், புதுமை மற்றும் தொழில் முனைவோர் மையத்தை அண்ணா பல்கலைக்கழகத்தில் உருவாக்குவது இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும்.

4.3.16. வடகிழக்கு மண்டலத்தின் நலனுக்காக, ஆளில்லா வான்வெளி வாகனத்தின் தொழில்நுட்பத்தை (UAV) விரிவுபடுத்துவதற்காக, விண்வெளித் துறையின் கீழுள்ள, வடகிழக்கு விண்வெளி பயன்பாட்டு மையத்துடன் அண்ணா பல்கலைக்கழகத்தின் Centre for Aero Space Research, இடையே யு.ஏ.வி. (Unmanned Aerial Vehicle) தொழில்நுட்பம் குறித்த ஒத்துழைப்பு பணிக்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

4.3.17. அண்ணா பல்கலைக்கழகம் தனது CBCS (Choice Based Credit System) பாடத்திட்டத்தை (ஆர் 2019) அகில இந்திய தொழில்நுட்ப கல்வி குழும மாதிரி பாடத்திட்டத்தின்படி திருத்தி, ஸ்மார்ட் இந்தியா ஹெக்கத்தான் (Smart India Hackathon) போன்ற இணை பாடத்திட்ட நடவடிக்கைகளில் பங்கேற்க கற்பவர்களுக்கு அதிக வாய்ப்பையும், மேலும் ஸ்வயம் (SWAYAM), மூக்ஸ் (MOOCS), எம்ப்டெல் (MPTEL) இணைய அடிப்படையிலான கற்றல் தளங்களுக்கு பங்கேற்கவும் வாய்ப்பை அளிக்கிறது.

4.3.18. அண்ணா பல்கலைக்கழகம் அதன் மதிப்பீட்டு நடைமுறைகளை நெறிப்படுத்தியுள்ளது. இது மாணவர்களுக்கு

2020 மார்ச் 12]

அவர்களின் கல்வி முன்னேற்றத்தை, Student Examination Management System *(மாணவர் தேர்வு மேலாண்மை அமைப்பு) எனப்படும் பாதுகாப்பான நிகழ்நிலை தளத்தைப் பயன்படுத்தி அறிந்துகொள்ள உதவுகிறது.*

4.3.19. இந்திய அரசின், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, "மருத்துவ சாதன மேம்பாடு மற்றும் வணிகமயமாக்கல்" என்ற ஐந்தாண்டுத் திட்டத்திற்காக (2018 - 2023) மொத்தம் ரூ.3.98 கோடி சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் சுகாதார பாதுகாப்பு கருவியியல் மேம்பாட்டுக்கான தேசிய மையத்திற்கு வழங்கியுள்ளது.

4.3.20. அண்ணா பல்கலைக்கழகம் 158 காப்புரிமைகளை தாக்கல் செய்துள்ளது. அதில் பாதுகாக்கப்பட்ட 41 காப்புரிமைகளில் 29 காப்புரிமைகள் தேசிய அளவிலும் மற்றும் 12 காப்புரிமைகள் சர்வதேச அளவிலும் ஆகும். 2019—2020 ஆம் ஆண்டில் அண்ணா பல்கலைக்கழகம் 14 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. அவற்றில் 2 சர்வதேச புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் 14 தேசிய அளவிலான ஒப்பந்தங்கள் ஆகும்.

4.3.21. 2019-2020 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக நிதியிலிருந்து பல்வேறு கட்டுமானத்திற்காக ரூ.1.45 கோடியும், உள்கட்டமைப்பு வசதிக்காக ரூ.1.28 கோடியும் அண்ணா பல்கலைக்கழகம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

4.3.22. 2019-2020 ஆம் ஆண்டின் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில், 16 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளுக்கு உபகரணங்கள் வாங்குவதற்கும், திண்டுக்கல், உறுப்பு பொறியியல் கல்லூரி மற்றும் மதுரை மண்டல வளாகத்திற்கு மாணாக்கர் விடுதி கட்டுவதற்கும் ரூ.40.00 கோடி நிதி ஒப்பளிப்பு அரசால் செய்யப்பட்டது.

மேற்கண்ட 40 கோடியில், 33 கோடி பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளுக்கு உபகரணங்கள் வாங்குவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல், உறுப்பு கல்லூரி மற்றும் மதுரை, மண்டல வளாகங்களில் விடுதிக் கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ.7.00 கோடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 12

4.4. பாரதியார் பல்கலைக்கழகம்

4.4.1. பாரதியார் பல்கலைக்கழகம் 1982 ஆம் வருடம் பிப்ரவரி திங்கள் 9 கல்வித் துறைகளுடன் நிறுவப்பட்டது. தற்போது 13 புலன்களின்கீழ் 39 துறைகளைக் கொண்டுள்ளது. மேலும் இத்துறைகளின்மூலம் ஆய்வியல் நிறைஞர் மற்றும் முனைவர் பட்ட ஆராய்ச்சி படிப்புகளுடன் 54 முதுகலை பட்டப்படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. முதுநிலை பட்டப்படிப்பில் 2,776 மாணாக்கர்களும், 78 ஆய்வியல் நிறைஞர்களும், 210 முனைவர் பட்ட ஆய்வாளர்களும் 2019-2020 கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்டு பயின்று வருகின்றனர்.

4.4.2. இப்பல்கலைக்கழகமானது 13 அரசு கல்லூரிகளும், 1 விமானப்படைக் கல்லூரியும், 3 உறுப்புக் கல்லூரிகளும், 16 அரசு உதவி பெறும் கல்லூரிகளும், 85 சுயநிதி கல்லூரிகளும், 13 மேலாண்மைக் கல்லூரிகளும் உள்ளடங்கிய 131 இணைவுக் கல்லூரிகளைக் கொண்டுள்ளது. பாரதியார் பல்கலைக்கழகத்தின்கீழ் 29 கல்லூரிகள் தன்னாட்சி உரிமையுடன் உள்ளன. மேலும் 33 ஆராய்ச்சி நிறுவனங்களும் இப்பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

4.4.3. தற்போது இளநிலை பட்டப்படிப்பு, முதுநிலை பட்டப்படிப்பு, பட்டயப் படிப்பு, ஆராய்ச்சிப் படிப்புகளில் 1,13,844 மாணாக்கர்கள் பல்கலைக்கழகத் துறைகள், இணைவுக் கல்லூரிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தொலைதூர கல்வி மையத்தின்மூலம் பயின்று வருகிறார்கள்.

4.4.4. போஸ்ட் மெட்ரிக் உதவித் திட்டத்தின்கீழ் 2018—2019 ஆம் ஆண்டில் ரூ.1.10 கோடி பெற்று 1,483 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

4.4.5. இப்பல்கலைக்கழகம் 2018-2019 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்து ரூ.2.51 கோடி மற்றும் இதர நிறுவனங்களிடமிருந்து ரூ.8.06 கோடி நிதியுதவி பெற்றுள்ளது. மேலும், இப்பல்கலைக்கழகம் 2019-2020 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்து ரூ.0.53 கோடி மற்றும் பிற நிறுவனங்களிடமிருந்து ரூ.3.04 கோடி நிதியுதவி பெற்றுள்ளது.

2020 மார்ச் 12]

4.4.6. இந்தியாவின் தேசிய தர நிர்ணய மற்றும் மதிப்பீட்டுக் குழுமத்தால் (NAAC) 2003 ஆம் ஆண்டில் பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு “A” தரத்துடன் அங்கீகாரம் வழங்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டிலும் மீண்டும் “A” தரத்துடன் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இந்த “A” தரமானது, பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு தொடர்ந்து மூன்றாவது முறையாக 2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

4.4.7. மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறையால் நடத்தப்பட்ட தேசிய அளவிலான தரவரிசை மதிப்பீட்டில் பாரதியார் பல்கலைக்கழகம் 2019 ஆம் ஆண்டில் 14 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. இந்திய அளவில் தலைசிறந்த மாநில பல்கலைக்கழகமாக விளங்குகிறது.

4.4.8. பாரதியார் பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் ஆய்வேடுகளை உலகிலுள்ள ஆய்வாளர்கள் அதிக முறை மேற்கோள் காட்டியதற்காக கிளாரிவேட் அனாலிட்டிக்ஸ் (Web of Science) நிறுவனம், ‘இந்தியாவின் தலைசிறந்த மாநில பல்கலைக்கழகத்திற்கான விருதை’ இந்த ஆண்டு (2019) இந்த அமைப்பின் ஏழாவது பதிப்பில் வழங்கியுள்ளது.

4.4.9. பாரதியார் பல்கலைக்கழகம் டிசம்பர் 30, 2019 ஆண்டு நிலவரப்படி ஸ்கோபஸ் தரவுதளத்தின் அடிப்படையில் 8,680 பிரசுரங்களுடன் 93,962 மேற்கோள்களையும், 103 “h” குறியீட்டு எண்ணையும் பெற்றுள்ளது. ஸ்கோபஸைப் பொறுத்தவரை 2014 ஆம் ஆண்டு முதல் இன்று வரை இப்பல்கலைக்கழகம் 57 “h” புள்ளிகளுடன் 29,336 மேற்கோள்களைக் கொண்டுள்ளது. இது தமிழ்நாட்டில் உள்ள கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகங்களில் மிக அதிகமான புள்ளிகள் ஆகும்.

4.4.10. இந்திய அரசு மனிதவள மேம்பாட்டுத் துறையின், டிஜிட்டல் நிதி கல்வியறிவு திட்டத்தினை (VISAKA) சிறப்பாக நடத்தி, நமது நாட்டில் உள்ள 4,896 நிறுவனங்களில், தலைசிறந்த 20 நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்ததில் பாரதியார் பல்கலைக்கழகம் தேசிய அளவில் இரண்டாவது இடத்தினைப் பெற்றுள்ளது (www.b-u.ac.in/visaka). பாரதியார் பல்கலைக்கழகத்தின் இந்த சாதனைக்கு, புதுடெல்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் நடந்த

விசாகா தேசிய மாநாட்டில், 'மனிதவள மேம்பாட்டு நிறுவனம் விருது' வழங்கி கௌரவித்துள்ளது.

4.4.11. பல்கலைக்கழக மானியக் குழு மற்றும் Centre with Potential for Excellence in Particular Area (CPEPA)-ன்கீழ் இப்பல்கலைக்கழகத்திற்கு சூரிய ஆற்றல் குறித்து ஆராய்ச்சி செய்வதற்காக ரூ.3.64 கோடி வழங்கியுள்ளது.

4.4.12. DST—PURSE திட்டத்தின்கீழ் பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு முதற்கட்டமாக ரூ.9.00 கோடியும், இரண்டாம் கட்டமாக ரூ.17.25 கோடியும் ஸ்கோபஸ் "h" தரவுகளின் அடிப்படையில் அதிநவீன ஆராய்ச்சிக் கருவிகளை வாங்குவதற்காக வழங்கப்பட்டுள்ளது.

4.4.13. பல்கலைக்கழகத்தில் பன்னிரண்டு துறைகள் சிறப்பு உதவித் திட்டத்தின்கீழ் பல்கலைக்கழக மானியக் குழுவின் மூலமாகவும், பத்து துறைகள் இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் DST—FIST மூலமாகவும் ரூ.19.81 கோடி பெற்றுள்ளன.

4.4.14. ரூசா முதற்கட்டத்தின்கீழ் பல்கலைக்கழக உட்கட்டமைப்பு ரூ.20.00 கோடி செலவில் மேம்படுத்தபட்டது. ரூசாவின் இரண்டாம் கட்டத்தில் ஆராய்ச்சி கண்டுபிடிப்பு மற்றும் தர ஆய்வின்கீழ் பாரதியார் புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தை அமைக்க ரூ.35.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

4.4.15. இந்திய அரசின் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டு அமைச்சகமும் மற்றும் தமிழ்நாடு அரசும் இணைந்து ஒரு கூட்டு முயற்சியாக பாரதியார் பல்கலைக்கழக வளாகத்தில் Defence Research and Development Organisation — Bharathiar University — Center for Life Sciences என்ற அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. இது ஒரு தன்னாட்சி ஆராய்ச்சி நிறுவனமாக அடிப்படை மற்றும் பயன்பாட்டு ஆராய்ச்சியை செய்து வருகிறது. இம்மையத்தின்மூலம் பாரதியார் பல்கலைக்கழகம் இதுவரை 15 ஆராய்ச்சித் திட்டங்களின் வாயிலாக ரூ.45.37 கோடியை நிதியாகப் பெற்றுள்ளது.

4.4.16. இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறையின் மூலமாக ரூசா (RUSA) 2.0-ன்கீழ் ரூ.15.00 கோடி தொழில்

2020 மார்ச் 12]

முனைவோர் மற்றும் புதுமை மற்றும் தொழில் மையத்தை நிறுவ நிதி வழங்கியுள்ளது.

அ) இந்த மானியத்திலிருந்து 86 திட்டங்கள்/பயிற்சிகள்/பட்டறைகள் அனுமதிக்கப்பட்டு தொழில் முனைவோர் மற்றும் புதுமைத் தொழில் மையத்தால் நடத்தப்படுகின்றன.

ஆ) பாரதியார் பல்கலைக்கழகத்தில் ரூசா இரண்டாம் கட்டத்தின்கீழ் ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் பல்வேறு திட்டங்களை நடத்துவதற்குத் தேவையான வசதிகள் தரவுத்தளம் மற்றும் உட்கட்டமைப்புகளுடன் கூடிய தொழில்நுட்ப தொழில் முனைவோர் மையம் மற்றும் திறன் மேம்பாட்டு மையம் உருவாக்கப்பட உள்ளது.

இ) ரூசாவின் 2.0 திட்டத்தின்கீழ் ரூ.3.00 கோடி செலவில் கருத்துரு மையம் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

4.5. பாரதிதாசன் பல்கலைக்கழகம்

4.5.1. புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் பெயரில் 1982-ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. 'புதியதோர் உலகம் செய்வோம்' எனும் இலச்சினை மொழியோடு உயர் கல்வியில் கற்பித்தல், கற்றல், ஆராய்ச்சி மற்றும் அறிவை விரிவாக்குதலில் சிறந்து விளங்குகிறது. கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் தரமான திட்டங்கள் வாயிலாக மாநில, தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் நல்ல குடிமக்களாக வளப்படுத்தவும், உயர்த்தவும், கற்றவர்களிடையே அறிவார்ந்த விஞ்ஞானத்தை ஊக்குவிப்பதே பல்கலைக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும்.

4.5.2. NIRF *இந்திய தரவரிசைப் பட்டியலில், பாரதிதாசன் பல்கலைக்கழகம் முறையே 67 மற்றும் 60 ஆவது இடத்தை 2017-2018 மற்றும் 2018-19-ஆம் ஆண்டுகளில் பெற்றுள்ளது. இப்பல்கலைக்கழகம் ஏப்ரல் 2019ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத் தர நிருணயக் குழுவால் மூன்றாம் சுற்றில்* A+ *(3.32* CGPA*) தகுதி பெற்றுள்ளது.*

4.5.3. பல்கலைக்கழகத்தில் 4 புலங்கள், 16 பள்ளிகள், 37 துறைகள், 29 சிறப்பு மையங்கள், 8 நடுநிலை மையங்கள், 9

மையங்கள் உள்ளன. பல்வேறு நிலைகளில் நூற்றுக்கு மேற்பட்ட பாடப்பிரிவுகள் நடத்தப்படுகின்றன. பல்கலைக்கழகம் 152 இணைவு பெற்ற கல்லூரிகளைக் கொண்டுள்ளது (அரசு கல்லூரி 25, அரசு உதவிப் பெறும் கல்லூரி 19, சுயநிதிக் கல்லூரி 88, உறுப்புக் கல்லூரி 6, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் 13 மற்றும் 1 'ஒரு துறை நிறுவனம்'. தற்போது 2,232 மாணாக்கர்கள் பல்கலைக்கழகத் துறைகளில் உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சியைத் தொடர்கின்றனர். இந்த ஆண்டில் 1,182 முனைவர் பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. 5,952 மாணாக்கர்கள் தங்கள் கல்லூரிகளில் கல்வி மற்றும் ஆராய்ச்சியினைத் தொடர்கின்றனர்.

4.5.4.பாரதிதாசன் பல்கலைக்கழகதொழில் முனைவோர்,புதுமை மற்றும் தொழில் மையம் (BECH) மாண்புமிகு இந்திய பிரதமரால் 03.02.2019 அன்று RUSA 2.0 திட்டத்தின் ஒரு பகுதியாக காணொலிக் காட்சிமூலம் திறக்கப்பட்டது. DST—PURSE இரண்டாம் கட்ட மானியமாக ரூ.17.35 கோடி பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு நான்கு ஆண்டு காலத்திற்கு அனுமதிக்கப்பட்டது. முதற்கட்டமாக ரூ.6.28 கோடி (உபகரணங்கள் ரூ.5.19 கோடி, இதர செலவினங்கள், உதவித்தொகை, பயணப்படி ரூ.1.09 கோடி) வழங்கப்பட்டது.

4.5.5.பல்கலைக்கழக இரு வளாகங்களிலும் இரண்டு அவசர ஊர்திகள், உள் உறை மருத்துவர்கள், செவிலியர்களுடன் கூடிய 24X7 முழு நேர மருத்துவமனை நிறுவப்பட்டது. தூய்மையான பசுமை முன் முயற்சி மையம் (CGI) அமைக்கப்பட்டுள்ளது. உயிர் கழிவுகளைப் பிரிக்க ஒரு மின் வாகனம் இயக்கப்பட்டு வருகிறது. சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக 76 மிதிவண்டிகள், ஊழியர்கள் மற்றும் மாணாக்கர்கள் வளாகத்திற்குள் பயன்படுத்துவதற்காக இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. நூல் வாசிப்பை மேம்படுத்துவதற்காகப் பல்கலைக்கழக ஊழியர்கள், பொது மக்கள் பயன்படுத்துவதற்காக தோட்ட நூலகம் தொடங்கப்பட்டுள்ளது. புத்தகங்கள் எடுப்பதற்கும் வழங்குவதற்குமான மின்னணு வசதிகள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் புத்தகங்களுடன் கூடிய குழந்தைகளுக்கான சிறப்புப் பகுதி, பொது நூலகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

2020 மார்ச் 12]

4.5.6. பாரதிதாசன் பல்கலைக்கழகம் தேசிய நாட்டு நலப்பணித் திட்டத்தின்கீழ் இந்திய அளவில் சிறந்த முதல் பல்கலைக்கழகத்திற்கான விருதினை மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளது.

4.5.7. பல்கலைக்கழக அறிவியல் கருவியாக்கல் மையம் (USIC) கட்டுமானத்திற்காக *2019* ஆம் ஆண்டில் மாநில அரசு ரூ.*5.00* கோடியைப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கியுள்ளது.

4.5.8. 1.40 இலட்சத்திற்கும் அதிகமான தமிழக பள்ளி மாணாக்கர்களை தொழில் முனைவோர் மற்றும் தொழில் மேம்பாட்டு நிறுவனத்தின் (IECD), தகவல் தொழில்நுட்ப திறன் மேம்பாட்டு திட்டத்தில் சேர்த்துள்ளதற்காக *2019* ஆம் ஆண்டில் பல்கலைக்கழகம் உலகின் நான்கு பல்கலைக்கழகங்களான எலைட் உலக பதிவேடுகள் (Elite World Records, USA), ஆசிய பதிவேடுகள் நிறுவனம் (Asian Records Academy, Singapore & UAE), இந்தியப் பதிவேடுகள் நிறுவனம் (India Records Academy) மற்றும் தமிழன் பதிவேடுகள் புத்தக நிறுவனம் (Tamilan Book of Records) ஆகியவற்றிடமிருந்து உலகச் சாதனைக்கான சான்றிதழைப் பெற்றுள்ளது.

4.5.9. 2019-2020 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு (UGC), அறிவியல் மற்றும் தொழில் துறை ஆராய்ச்சிக்கான சபை (CSIR), அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (DST), உயிர் தொழில்நுட்பத் துறை (DBT), அணுசக்தித் துறை (DAE), பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு அமைப்பு (DRDO), அணுக்கரு அறிவியல் ஆராய்ச்சிக் குழு (BRNS), சமூக அறிவியல் ஆராய்ச்சிக்கான இந்திய கவுன்சில் (ICSSR), மருத்துவ ஆராய்ச்சிக்கான இந்திய கவுன்சில் (ICMR) ஆகிய நிதி முகமைகளிடமிருந்து *34* வகையான ஆய்வுகளுக்கு மொத்தம் ரூ.*28.27* கோடி நிதி உதவி பெறப்பட்டுள்ளது.

4.6. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்

4.6.1. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகமானது தமிழக அரசால், தமிழ்நாடு சிறப்புச் சட்டம் *15* இன்கீழ் முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு திரு.எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களால், நோபல் பரிசு பெற்ற புனிதர் அன்னை தெரசா அவர்களின்

பெயரில், தமிழ்நாட்டின் மகளிருக்கான முதல் பல்கலைக்கழகமாக நிறுவப்பட்டது. உயர் கல்வியின்மூலம் சமுதாயத்தின் அனைத்து படிநிலைகளிலும் உள்ள மகளிரது வளர்ச்சி மற்றும் அதிகாரத்தை மேம்படுத்துவதற்காக இப்பல்கலைக்கழகம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. மகளிருக்காக, மகளிரால், மகளிரது கல்வியினை முன்னிறுத்தி கற்பித்தல், ஆய்வு செய்தல், விரிவுபடுத்துதல் என்ற மூன்று நோக்கங்களின் அடிப்படையில் இயங்கும் தனித்தன்மை மிக்க பல்கலைக்கழகமாக இப்பல்கலைக்கழகம் செயல்படுகிறது. பல்கலைக்கழகம் “சரிநிகர் சமம்” என்ற நோக்குடன் உயர் கல்வியின் வழி மகளிரை மேம்படுத்தி வருகிறது.

4.6.2. இப்பல்கலைக்கழகத்தில் 17 துறைகளும், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 3 இடங்களில் ஆய்வு மற்றும் விரிவாக்க மையங்களும் உள்ளன. தற்போது இப்பல்கலைக்கழகத்தில் 54 ஆசிரியர்கள் உள்ளனர். 747 ஆராய்ச்சி மாணவியர்கள் (பி.எச்.டி.) பயின்று வருகிறார்கள். ஒருமைவகை பல்கலைக்கழகமாக செயல்பட்டுவந்த இப்பல்கலைக்கழகத்துடன் 2002 ஆம் ஆண்டு தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள மகளிர் கல்லூரிகள் இணைக்கப்பெற்று இணைப்புவகை பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது. தற்பொழுது இப்பல்கலைக்கழகத்தின்கீழ் 3 அரசுக் கலைக் கல்லூரிகள், 2 அரசு உதவிபெறும் கல்லூரிகள், ஓர் இணைவு பெற்ற கல்லூரி மற்றும் 6 சுயநிதிக் கல்லூரிகள் என மொத்தம் 12 கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. பல்கலைக்கழகம் மற்றும் இணைப்புக் கல்லூரிகளில் 22,044 மாணவியர்கள் பயின்று வருகின்றனர். கொடைக்கானலில் 1988 ஆம் ஆண்டிலிருந்து தொலைநிலைக் கல்வி இயக்ககம்மூலம் 16 பாடப்பிரிவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. மொத்தம், 3,464 மாணவியர்கள் தொலைநிலைக் கல்வி வாயிலாக தற்போது பயின்று வருகின்றனர்.

4.6.3. மதுரையில் அமைந்துள்ள பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையத்தில் ஒரு பல்நோக்குக் கூடம் ரூ.1.50 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டு 5.9.2017 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் காணொலிக் காட்சிமூலம் திறந்து வைக்கப்பட்டது.

4.6.4. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகமானது தமிழகத்தில் மாநிலத் தகுதித் தேர்வை நடத்தும் முகமை

நிறுவனமாகத் தேர்வு செய்யப்பட்டு, 2016-2018 ஆகிய மூன்று ஆண்டுகளும் உதவிப் பேராசிரியர்களுக்கான தமிழ்நாடு மாநில தகுதித் தேர்வுகளை நல்லமுறையில் நடத்தியுள்ளது. 2017 முதல் 2019 ஆண்டு வரை 210 மாணவியர்கள் ஆராய்ச்சிப் படிப்பில் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

4.6.5. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகமானது, பல்கலைக்கழகத்தின் கணினி அறிவியல் துறைக்கு கணினி பணி நிலையங்கள்/பரிமாறிகள், கணினி முனைகள், LED காட்சி, ஒளிப்படக் காட்டி, அங்க அடையாள அணுகல் மற்றும் அச்சு இயந்திரம் வாங்குதல் ஆகியவற்றிற்காக ரூ.70.00 இலட்சம் வழங்கியுள்ளது. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் இயற்பியல் துறையைச் சார்ந்த ஆசிரியை பல்கலைக்கழக மானியக் குழுவின் இராமன் முதுமுனைவர் ஆராய்ச்சிக்கான நிதியுதவியினைப் பெற்றுள்ளார்.

4.6.6. உயிரி தொழிட்நுட்பவியல் துறையும், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றமும் இணைந்து கொடைக்கானல் மலைப் பூண்டிற்கான புவியியற் குறியீடு பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொண்டு, இப்புவியியற் குறியீடு பெறப்பட்டுள்ளது. முனைவர் பட்ட ஆய்வேடுகளை எண்மயமாக்கும் பொருட்டு பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவிடமிருந்து "சோத்கங்கா" திட்டத்தின்கீழ் ரூ. 15.09 இலட்சத்தை இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. மத்திய அரசு திட்டமான உன்னத் பாரத் அபியான் திட்டம் இப்பல்கலைக்கழகத்தில் செயல்படுத்தப்பட்டு, அத்திட்டத்தின்கீழ் 5 கிராமங்கள் தத்தெடுக்கப்பட்டுள்ளன. காந்திய கல்வி மையம், விவேகானந்தர் கல்வி மையம், அடைகாப்பு மற்றும் தொழில்நுட்ப பரிமாற்ற மையம் ஆகியவற்றின்மூலம் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கச் செயல்பாடுகளுக்கான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4.6.7. பல்கலைக்கழக ஆசிரியைகள் 375 பன்னாட்டு இதழ்களிலும், 66 தேசிய இதழ்களிலும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளனர்.

4.6.8. ICSSR, DST, UGC—DAE, UGC, DST—SERB, CICT, CST—CURIE, UBA, Inspire Fellowship, IPR *மற்றும்* TNSCST

(Student project) போன்ற நிதிநல்கும் நிறுவனங்களிடமிருந்து ரூ.1.40 கோடி நிதியினை பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. மேற்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஆராய்ச்சித் திட்டத்திற்காக ரூ.48.67 இலட்சம் நிதியினைப் பெற்று, ஆராய்ச்சித் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

4.6.9.நூலகம், மாணவியர் விடுதி, கணினி மையம், சிற்றுண்டிச் சாலை, அறிவியல் ஆய்வுக் கூடம் போன்ற உட்கட்டமைப்பு மற்றும் பிற வசதிகளை மேம்படுத்துவதற்கென ரூசா திட்டத்தின்கீழ் ரூ.20.00 கோடி பெறப்பட்டது.

4.6.10. தமிழக அரசு, பல்கலைக்கழகத்தில் கருத்தரங்குக் கூடம், வகுப்பறைகள்,பொது கருவிமயமாக்கல் மையம்,அலுவலர்கள் தங்கும் விடுதிகள் மற்றும் சுற்றுச் சுவர் ஆகியவற்றின் கட்டுமானங்களை மேற்கொள்ள ரூ.30.00 கோடியினை வழங்கியுள்ளது.

4.6.11. 2019-2020 ஆம் ஆண்டு பல்கலைக்கழகம் மற்றும் உறுப்புக் கல்லூரிகளில் படிக்கும் 1,152 மாணவியர்களில், 883 மாணவியர்கள் பட்ட மேற்படிப்பிற்கான கல்வி உதவித் தொகையாக ரூ.57.12 இலட்சம் பெற்றுள்ளனர்.

4.6.12. பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகளில் செயல்பட்டுவரும் தேசிய நாட்டுநலப் பணிகளின் திட்ட குழுக்களால் 27 கிராமங்கள் தத்தெடுக்கப்பட்டுள்ளன. 6 அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் 28 தேசிய கல்வி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இளங்கலை மற்றும் முதுகலை மாணவியர்களுக்கான 400 மணிநேரம் ஒருங்கிணைந்த இலவச UPSC மற்றும் IBPS பயிற்சி வகுப்புகள், திண்டுக்கல் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் நிதியுதவியுடன் ஆகஸ்ட் 2019 முதல் ஜனவரி 2020 வரை நடைபெற்றது.

4.6.13. 2017-2018 முதல் 2019-2020 வரை இப்பல்கலைக்கழகத்தின் 84 மாணவியர்கள் அகில இந்திய / தென் மண்டல பல்கலைக்கழகங்களுக்கிடையேயான கபடி போட்டிகளில் பங்குபெற்று ரூ.6,90,000/- ரொக்க விருது வென்றுள்ளனர். 84 மாணவிகள் 7 கபடி போட்டிகளில் பங்குபெற்று ரூ.37,500/-

2020 மார்ச் 12]

ரொக்க விருதைப் பெற்றுள்ளனர். மேலும், 14 மாணவிகள் ரூ.32,000/— விளையாட்டு உதவித் தொகையினைப் பெற்றுள்ளனர். இப்பல்கலைக்கழகமானது, அகில இந்திய மகளிர் பல்கலைக்கழக அளவிலான போட்டிகளில் 6 தங்கம், 10 வெள்ளி மற்றும் 10 வெண்கலம் மற்றும் ஒட்டுமொத்த தனிநபர் சாம்பியன்ஷிப் கோப்பையுடன் இரண்டாவது இடம் பெற்றுள்ளது.

4.7. அழகப்பா பல்கலைக்கழகம்

4.7.1. அழகப்பா பல்கலைக்கழகம் 1985 ஆம் ஆண்டு மே 9ஆம் நாள் தமிழக அரசின் சிறப்புச் சட்டம்மூலம் மாநிலப் பல்கலைக்கழகமாக ஆரம்பிக்கப்பட்டது. அழகப்பா பல்கலைக்கழகத்தில் 44 துறைகளை உள்ளடக்கிய 4 புலங்கள், 10 இயக்குனரகங்கள்/மையங்கள் மற்றும் 3 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் உள்ளன. மேலும், பல்கலைக்கழகத்தின் ஆளுகைக்குட்பட்ட சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் 43 இணைவு கல்லூரிகளும், 6 மாலை நேரக் கல்லூரிகளும் செயல்பட்டு வருகின்றன.

4.7.2. பல்கலைக்கழகத் துறைகளில் 203 பாடப்பிரிவுகள், இணைவு கல்லூரிகளில் 117 பாடப்பிரிவுகள், தொலைநிலைக் கல்வியில் 66 பாடப்பிரிவுகள் மற்றும் இணைவுக் கல்வித் திட்டத்தின்கீழ் 146 பாடப்பிரிவுகள் வாயிலாக உயர் கல்வி வழங்கப்பட்டு வருகின்றது. மேம்பட்ட கல்வியினை உறுதி செய்யும் வகையில், பல்கலைக்கழகம் மற்றும் இணைவு கல்லூரிகளின் அனைத்துப் பாடப்பிரிவுகளிலும் தொடர் உள்மதிப்பீடு முறையும் (CIA) விருப்பத்தின் அடிப்படையிலான பாடத்தெரிவு முறையும் (CBCS) நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. சுமார் 1.07 இலட்சம் மாணாக்கர்கள் அழகப்பா பல்கலைக்கழகத்தின் துறைவாரியாகவும் மற்றும் தொலைநிலைக் கல்வி முறையிலும் உயர் கல்வி பயின்று வருகிறார்கள். பல்கலைக்கழகத் துறைகளில் 4,880 மாணாக்கர்களும், பல்கலைக்கழகத்தின் இணைவு மற்றும் உறுப்புக் கல்லூரிகள் வாயிலாக 49,076 மாணாக்கர்களும், தொலைநிலைக் கல்வி மற்றும் இணைவுக் கல்வித் திட்டத்தின் வாயிலாக 53,625 மாணாக்கர்களும் பயின்று வருகிறார்கள்.

4.7.3. தமிழக அரசு பல்கலைக்கழகங்களில் முதல் பல்கலைக்கழகமாக, அழகப்பா பல்கலைக்கழகம் மே 2017 ஆம்

[2020 மார்ச் 12

ஆண்டு இந்திய அளவில் தேசிய தர நிருணயக் குழுவின் மூன்றாம் சுற்று தர மதிப்பீட்டில் A+ தகுதியினையும் (ஒட்டு மொத்தக் கூட்டுச் சராசரி புள்ளி 3.64) பெற்றுள்ளது. அழகப்பா பல்கலைக்கழகம் QS இந்தியா 2020 ஆம் ஆண்டிற்கான தரவரிசையில் 24 ஆம் இடத்தினையும், 2019-ம் ஆண்டிற்கான தேசிய தரவரிசைப் பட்டியலில் (NIRF) 28 ஆம் இடத்தினையும் பெற்றுள்ளது.

4.7.4. பல்கலைக்கழக நிதி நல்கை குழுவால் அழகப்பா பல்கலைக்கழகம் முதல் தரப் பல்கலைக்கழகமாக (Category—I University) பிப்ரவரி 2018-ல் (தன்னாட்சி வழங்கும் பொருட்டு பல்கலைக்கழகங்களை வகைப்படுத்துவதன்கீழ்) வகைப்படுத்தப்பட்டுள்ளது. அழகப்பா பல்கலைக்கழகத்தில் (1) அரசியல் மற்றும் பொது நிருவாகம் (2) இதழியல் மற்றும் தொடர்பியல் (3) திரையரங்கு மற்றும் திரைப்படயியல் (4) மீன்வள அறிவியல் மற்றும் (5) பேரிடர் மேலாண்மை உள்ளிட்ட ஐந்து பாடப்பிரிவுகள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன.

4.7.5. மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி, அழகப்பா பல்கலைக்கழகத்தின் உயிரித் தகவலியல் துறையின் பாடத்திட்டத்தின் பாடத்திட்டம் அயல்நாட்டுப் பேராசிரியர்களின் உதவியுடன் உலகத்தரத்திற்கு இணையாக தர மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. அழகப்பா பல்கலைக்கழகம் D.Litt. மற்றும் D.Sc. பாடத்திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. வெளிநாட்டில் உள்ள ஆராய்ச்சி மாணாக்கர்களைக் கவரும் வகையில் ஆய்வுக்கான நிதி உதவிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு 2018-ம் ஆண்டு பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு, 'பண்டிட் தீன்தயாள் உபாத்தியாயா இருக்கை' துவங்குவதற்கு ரூ.1.50 கோடி அனுமதியளித்துள்ளது.

4.7.6. இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் சார்பில் "பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் அறிவியல் செம்மை ஊக்குவிப்புத் (PURSE—2) திட்டத்தின்"கீழ் 2016—2017 முதல் 2019-2020 வரை, ரூ.7.00 கோடி ஆய்வு வளர்ச்சி நிதியாக வழங்கப்பட்டுள்ளது. மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் LEAP (Leadership

for Academicians Programme) திட்டத்தின்கீழ் அழகப்பா பல்கலைக்கழகத்தின் ஏழு பேராசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்திய மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பயிற்சி பெற்றுள்ளனர். பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் STRIDE—1 திட்டத்தின்கீழ் 2019-ம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகம் ரூ.1.00 கோடி நிதி உதவியும், பல்கலைக்கழகத்தின் இரண்டு பேராசிரியர்கள் மத்திய மனித வள மேம்பாட்டுத் துறையின் SPARC திட்டத்தின் வாயிலாக அமெரிக்கா மற்றும் சீனப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் உதவியுடன் உயர் ஆய்வு மேற்கொள்ள அனுமதியும் பெற்றுள்ளனர்.

4.7.7. அழகப்பா பல்கலைக்கழகத்தால் இங்கிலாந்து, அமெரிக்கா, தென்கொரியா, சீனா, ஆஸ்திரேலியா, மலேசியா, தைவான், நார்வே, சிங்கப்பூர் மற்றும் ஓமன் ஆகிய நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்கள்/ ஆராய்ச்சி நிறுவனங்கள்/கூட்டமைப்புகளுடன் கடந்த இரண்டு ஆண்டுகளில் (2018—2020) 9 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், உயர் ஆராய்ச்சி மற்றும் ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்கள் பரிமாற்றம் செய்துகொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4.7.8.தேசிய உயர் கல்வித் திட்டத்தின் இரண்டாம் நிலையில் இந்திய அளவில் அழகப்பா பல்கலைக்கழகம் பத்து பல்கலைக்கழகங்களுள் தேர்ந்தெடுக்கப்பட்டு நவம்பர் 2018- ல் ரூ.100.00 கோடி ஒதுக்கீடு பெறப்பட்டது. இத்தொகையில் 45 சதவிகிதம் மூலதன செலவுகளுக்காகவும் 55 சதவிகிதத் தொகை கற்றல், கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சியின் தர மேம்பாட்டிற்காகவும் பயன்படுத்தப்பட உள்ளது.

4.7.9. ரூசா 2.0 திட்டத்தின்கீழ், 'தொழில் முனைவு, கண்டுபிடிப்பு மற்றும் வேலைவாய்ப்பு முனையத்தினை' மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் காணொலிக்காட்சி வாயிலாக 03.02.2019 அன்று துவக்கி வைத்தார்.

4.7.10. ரூசா 2.0 திட்டத்தின் வாயிலாக, ரூ.27.50 கோடி மதிப்பீட்டில் ஆறு புதிய கட்டடங்கள் கட்டும் பணியும், ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் கட்டட மறுசீரமைப்புப் பணியும் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கற்றல், கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சியின் தர மேம்பாடு கூறு 4 இன்கீழ் 17 QS தரப் பட்டியலில் உள்ள

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலிருந்து 44 பேராசிரியர்கள் வரவழைக்கப்பட்டு, பல்கலைக்கழகப் பாடத்திட்டங்கள் உலகத் தரத்திற்கு இணையாக மேம்படுத்தப்பட்டுள்ளன. அழகப்பா பல்கலைக்கழகத்தின் 101 பேராசிரியர்கள் மற்றும் 51 ஆராய்ச்சி மாணாக்கர்கள் ரூசா திட்ட நிதி உதவியுடன் பன்னாட்டு கருத்தரங்குகளில் கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளனர்.

4.7.11. ரூசா 2.0 திட்டத்தின்கீழ், தகுதியடிப்படையில் 317 முதுகலை மாணாக்கர்கள், 163 முனைவர் பட்ட ஆய்வு மாணாக்கர்கள், 35 முதுமுனைவர் பட்ட ஆய்வாளர்கள் மற்றும் 8 மூத்த முதுநிலை முனைவர்களுக்கு கல்வி/ஆய்வு நிதியும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், 10 ஆய்வு மாணாக்கர்கள் இத்திட்டத்தின் நிதி உதவியுடன் வெளிநாட்டின் தலைசிறந்த ஆய்வுக் கூடங்களில் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். கருத்தியல் அடிப்படையிலான ஆராய்ச்சியை மிக முக்கியமான துறைகளில் மேற்கொள்ளும் பொருட்டு ரூ.25.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

4.7.12. மின்னியல் மதிப்பீடு (Digital Evaluation) வாயிலாக விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் திட்டம் மே 2019 இல் நடத்தப்பட்ட தேர்வுகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு நடைபெற்று வருகிறது. இதன்மூலம் வினாத்தாள்கள் விரைவாக மதிப்பீடு செய்யப்பட்டு 15 நாட்களில் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

4.7.13. பல்கலைக்கழகத்தில், முழு மின் ஆளுமை நடவடிக்கையின்கீழ், கூட்டமைப்பு நாடுகளால் கண்டறியப்பட்ட கூட்டளிப்பு கல்வி நிறுவனங்களுடன் இணைந்து இணையதள வழியில் பாடப்பிரிவுகள் தொடங்குவதற்கு ஏதுவாக இணையதள இயக்குநரகம் தொடங்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் அனைத்துத் துறைகளையும் சேர்ந்த 3,468 மாணாக்கர்கள் SWAYAM திட்டத்தின்கீழ் MOOCs பாடத்திட்டத்தில் சேர்ந்து பயின்றுள்ளனர். இதற்கு வசதியாக ஒவ்வொரு துறையிலும் DTH மற்றும் அதனைச் சார்ந்த வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், இதுவரையில் 3.2 இலட்சம் மாணாக்கர்களின் கல்விச் சான்றுத் தரவுகள்

2020 மார்ச் 12]

NAD (National Academic Depository) இணைப்பில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

4.8. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

4.8.1. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் திறன்மிகு உயர் கல்வி நிறுவனமாக இந்தியத் துணைக் கண்டத்தின் தென்கோடியில் கிராமியச் சூழலில் அமைந்துள்ளது. இப்பல்கலைக்கழகம் தமிழகத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள நான்கு மாவட்டங்களான திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களின் கல்வித் தேவையை நிறைவு செய்வதற்காக செயல்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகமானது 1990 ஆம் ஆண்டு தமிழக அரசால் தொடங்கப்பட்டது. தேசிய தர மதிப்பீட்டுக் குழுவின் மறுமதிப்பீட்டில் 4 மதிப்பெண்ணுக்கு 3.13 மதிப்பெண் பெற்று "A" தரவரிசையைப் பெற்றுள்ளது. தமிழகத்தின் தேசிய தரமதிப்பீட்டுக் குழுவால் மதிப்பீடு செய்யப்பட்ட மாநிலப் பொது பல்கலைக்கழகங்களில் 5 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. 2019 ஆம் ஆண்டில் இப்பல்கலைக்கழகம் இந்தியப் பல்கலைக்கழகங்களின் தரவரிசையில் (NIRF) சென்ற ஆண்டு பெற்ற 194 ஆவது இடத்திலிருந்து 93 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. மனித வள மற்றும் மேம்பாட்டு அமைச்சகத்தால் வழங்கப்பட்ட 2019 ஆம் ஆண்டிற்கான உயர் கல்வி நிறுவனங்களுக்கான தூய்மை வளாக தரவரிசையில் 'அரசு உறைவிட பல்கலைக்கழகங்கள்' என்ற வகைப்பாட்டில் 5 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

4.8.2. 27 துறைகளையும், 5 மையங்களையும் உள்ளடக்கிய இப்பல்கலைக்கழக வளாகத்தில் தொலைதூரக் கல்வி இயக்ககம் மற்றும் தொழிற்பயிற்சிக் கல்வி இயக்ககம் ஆகியவையும் அடங்கும். தொழிற்பயிற்சிக் கல்வி இயக்ககம் 21 சமுதாயக் கல்லூரிகள் மற்றும் 66 விரிவாக்க கற்றல் மையங்கள் வழியாக திறன்சார் பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளை வழங்கி வருகிறது. இப்பல்கலைக்கழகத்தின் ஒரு முதுநிலை விரிவாக்க மையம் நாகர்கோவிலில் இயங்கி வருகிறது. ஆழ்வார்குறிச்சியில் பரமகல்யாணி ஆற்றல்சார் சுற்றுச்சூழல் மையம் இயங்கி வருகிறது. மேலும் இராஜாக்கமங்கலத்தில் கடல்சார் அறிவியல் தொழில்நுட்ப மையமும் இயங்கி வருகிறது.

[2020 மார்ச் 12

4.8.3. ஏறத்தாழ 99,407 மாணவர்கள், இளநிலை, முதுநிலை, ஆய்வியல் நிறைஞர் மற்றும் முனைவர் பட்ட ஆய்வு படிப்புகளை 2019—2020 ஆம் கல்வியாண்டில் 24 உதவி பெறும் கல்லூரிகள், 5 அரசுக் கல்லூரிகள், 5 மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரிகள், 4 உறுப்புக் கல்லூரிகள், 45 சுயநிதிக் கல்லூரிகள் மற்றும் 8 தன்னாட்சிக் கல்லூரிகளின் வாயிலாகப் பயில்கின்றனர்.

4.8.4.இப்பல்கலைக்கழகத்தில் 7 துறைகள், பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் சிறப்பு உதவித் (SAP) திட்டத்தைப் பெற்றுள்ளன. 5 துறைகள் DST—FIST திட்டத்தின்கீழ் உள்ளன. இப்பல்கலைக்கழகம் ரூசா பகுதி—I திட்டத்தின்கீழ் ரூ.20.00 கோடி பெற்றுள்ளது. உடற்பயிற்சிக் கல்வித் துறையின் உள்கட்டுமான வளர்ச்சிக்காகவும், கருவிகளுக்காகவும் மாநில அரசு ரூ.1.68 கோடி வழங்கியுள்ளது. பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் உதவியுடனும், பல்கலைக்கழக நிதி ஆதாரத்தைக் கொண்டும் ரூ.2.09 கோடி மதிப்பில் புதிய பெண்கள் விடுதி கட்டப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகம் ரூ.3.14 கோடி மதிப்பீட்டில், பல்வேறு துறைகள் உயர்தர ஆய்வுகளை மேற்கொள்வதற்கு வசதியாக அதிநவீனக் கருவிகளைக் கொண்ட மையக் கருவியியல் வசதி (CIF) ஒன்றை நிறுவத் திட்டமிட்டுள்ளது.

4.8.5. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் மற்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி ஆகியவற்றோடு இணைந்து ஜூலை 2019 இல் 5 முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை புள்ளியியல், வேதியியல், உயிரித் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் ஆகிய துறைகளில் செய்துள்ளது.

4.8.6. ஒருங்கிணைந்த வகுப்பறை வளாகம், தமிழகத்தின் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு ஆளுநர் மற்றும் வேந்தர் அவர்களால் 22.08.2019 அன்று 5 வருட ஒருங்கிணைந்த முதுகலைப் பட்ட மேற்படிப்பு பயிலும் மாணாக்கர்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த வளாகம் ரூ.9.20 கோடி செலவில் 26 வகுப்பறைகள் கொண்டதாக மொத்தம் 49,592 சதுர அடியில் கட்டப்பட்டுள்ளது.

2020 மார்ச் 12]

4.8.7. பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் பரிந்துரை அடிப்படையில் 2018 முதல் இப்பல்கலைக்கழகம் SWAYAM *இணைய முகப்பு வழியாக இணைய வழிப் பாடப் பிரிவுகளை (*MOOCs*) அறிமுகம் செய்துள்ளது. இதுவரையிலும் 664 முதுநிலை மாணாக்கர்கள் எண்ம இந்தியா திட்டத்தின் (*Digital India Initiatives*) ஒரு பகுதியாக 44 இணைய வழிப் பாடப்படிப்புகள், 26 மின்முதுநிலை பாடசாலா படிப்புகள் ஆகியவற்றில் சேர்ந்து பயனடைந்துள்ளனர்.*

4.8.8. இப்பல்கலைக்கழகத்தில் ரூ.5.25 கோடி மதிப்பில் ஒரு மெகா வாட் சூரிய மின் உற்பத்தி அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. மாநில அளவிலான பல்கலைக்கழகங்களில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகமே முதன்முதலில் இத்தகு முயற்சியை முன்னெடுத்துள்ளது. சூரிய ஒளி மின் உற்பத்திக்காக 3080 சூரிய ஒளித்தட்டுகள் 3.75 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் ஒரு நாளைக்கு 4,000 அலகு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. தோராயமாக ஒரு மாதத்தில் 1,20,000 அலகு மின் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன்மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் தற்போது பல்கலைக்கழக உபயோகத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

4.8.9. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிகளை மேம்படுத்துவதற்காக மாநில அரசு ரூ.20.00 கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

*4.8.10. புத்தாக்க எண்ணங்களையும் பரிந்துரைகளையும் ஆவணப்படுத்தும் வகையில் ஒருங்கிணைந்த ஆற்றல் சார் மையம் (*ICOE*) ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இந்த மையம் பல் துறை சார் ஆய்வுகளை முறைப்படுத்தும். இந்த மையத்தின் முயற்சிகளுக்குத் துணை நிற்க மைய கருவியாக்கல் மையம் (*CIF*) உதவியாக இருக்கும்.*

4.8.11. பல்கலைக்கழகத்தில் அனைத்து வசதிகளையும் கொண்ட உள்விளையாட்டு அரங்கமும், உடற்பயிற்சிக் கூடமும் உள்ளன. மேலும் 'மனோவாணி' இணைய வானொலி நிலையம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 12

பல்கலைக்கழக வளாகத்தில் செயல்படுகிறது. சுகாதார மையம், விருந்தினர் இல்லம், அஞ்சல் நிலையம், வங்கி, ATM, மாணாக்கர் மையம் இவற்றுடன் 24 மணிநேர மருத்துவ அவசர ஊர்தி மற்றும் பெண்களுக்கான மருத்துவ வசதிகளை இப்பல்கலைக்கழகம் வழங்குகிறது. மூன்றாம் பாலினத்தவருக்கு உயர் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு, இலவசக் கல்வியை வழங்குகிறது.

4.9. பெரியார் பல்கலைக்கழகம்

4.9.1. சேலத்தில் செயல்பட்டு வந்த சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவாக்க மையமானது, தமிழக சட்டமன்றப் பேரவையில் இயற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் 1997 ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகமாக மேம்படுத்தப்பட்டது. பல்கலைக்கழக இலச்சினையில் பொறிக்கப் பெற்றுள்ள ‘அறிவால் விளையும் உலகு’ என்னும் குறிக்கோள் வாசகத்தை நெஞ்சில் நிறுத்தி, பல் துறைகளிலும் அறிவு மேம்பாட்டை வளர்த்தெடுக்கும் நோக்கில் பல்கலைக்கழகமும், பல்கலைக்கழகத் துறைகளும் செயல்பட்டு வருகின்றன. பன்முக வளர்ச்சிப் பாதையில் வேகமாகப் பயணித்து வரும் பெரியார் பல்கலைக்கழகமானது, பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு, தேசிய தர நிருணய மற்றும் மதிப்பீட்டுக் குழு, தேசிய தர வரிசை கட்டமைப்பு, இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் ஆகியனவற்றின் ஏற்பளிப்பைப் பெற்ற பல்கலைக்கழகமாகும்.

4.9.2. தற்பொழுது, பெரியார் பல்கலைக்கழகத்தில் 27 துறைகளைக் கொண்ட மூன்று கலைப் புலங்களும், ஐந்து அறிவியல் புலங்களும் இயங்கி வருகின்றன. இவற்றின் வழியாக, 29 முதுநிலைப் பட்டப் படிப்புகளும் 27 ஆராய்ச்சிப் பாடப்பிரிவுகளும் நடத்தப் பெற்று வருகின்றன. பல்கலைக்கழகத் துறைகளில் பல்வேறு பணி நிலைகளில் 153 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். தருமபுரியில் செயல்பட்டு வரும் பல்கலைக்கழக முதுநிலை விரிவாக்க மையம் 8 துறைகள் மற்றும் 20 ஆசிரியர்களுடன் திறம்பட செயல்பட்டு வருகிறது. அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, எடப்பாடி, சேந்தமங்கலம் ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக்கழகத்தின் நான்கு உறுப்புக் கல்லூரிகளும் போதுமான ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்களுடன் நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

2020 மார்ச் 12]

4.9.3.பல்கலைக்கழகமானது, மாணவர் பெறும் திறன் விளைப் பயனைக் கருத்தில் கொண்டு பல்கலைக்கழகப் பாடத்திட்டங்களைச் சீரமைத்துள்ளது. SWAYAM, *இணைய முகப்பு வழியாக இணைய வழிப் பாடப்பிரிவு* (MOOC) *திட்டத்தின்கீழ் வடிவமைக்கப்பட்டுள்ள பாடப்பிரிவுகளுள் இடம்பெற்றுள்ள படிப்புகளும் புதிய பாடத்திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளுக்கான போட்டித் தேர்வுகளில் மாணாக்கர்கள் எளிதில் வெற்றி பெற வகை செய்யும் நோக்கத்துடன், பலவகை விடைகளுள் உரியதைத் தேர்வு செய்தல், பகுப்பாய்வு, விளக்க ஆய்வு முறைகளில் விடையெழுதுதல் என்ற வகையில் வினாத்தாள் முறைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகக் குறிக்கோள்களின் மகுடமாக கணினி அறிவியல் மற்றும் துணி மற்றும் உணவு அறிவியல் துறைகளில் மிகைநிகர் தொழில்நுட்பம்* (Augment Reality), *மெய்நிகர் தொழில்நுட்பம்* (Virtual Reality) *ஆகிய திறன்வளர் தொழிற்பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.*

4.9.4.இப்பல்கலைக்கழகம், 2015 ஆம் ஆண்டின் தேசிய தர நிருணய மற்றும் மதிப்பீட்டுக் குழுவின் மதிப்பீட்டில் 'ஏ' தரச் சான்றிதழையும், 2019 ஆம் ஆண்டின் தேசிய தரவரிசை கட்டமைப்பின் தரவரிசையில் இந்தியப் பல்கலைக்கழகங்களுக்கிடையே 68 ஆவது இடத்தையும் பெற்றுள்ளது. பல்கலைக்கழகத்தின் கணிதம், இயற்பியல், புவி அமைப்பியல், நுண்ணுயிரியல், உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்துணவியல் உயிரிதொழில்நுட்பவியல் ஆகிய துறைகள் இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையினரால் FIST *திட்டத்தின்கீழ் நிதி உதவியைப் பெறும் துறைகளாக ஏற்பளிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. கணினி அறிவியல், வேதியியல், கணிதம், புவி அமைப்பியல், இதழியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் ஆகிய துறைகள் பல்கலைக்கழக மானியக் குழுவின் சிறப்பு உதவி திட்டம்* (SAP)*மூலம் செயல்பட்டு வருகின்றன.*

*4.9.5.*Single crystal XRD, SEM, Solar Stimulator, GCMS *போன்ற அதிநவீன ஆய்வுக் கருவிகள் 2018—2019 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தால் ரூசா திட்டத்தின்கீழ் வாங்கப் பெற்றன. 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையில் பல்வேறு தேசிய*

நிதிநல்கை அமைப்புகளிடமிருந்து 56 ஆய்வுத் திட்டங்களுக்காக, ரூ.5.82 கோடி தொகையைப் பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. பல்கலைக்கழகத் துறைகளுக்குத் தேவையான பொருட்களை அரசு மின் வணிகமுறையில் (GeM) இப்பல்கலைக்கழகம் வாங்குகிறது. அரசின், இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் மாநிலப் பல்கலைக்கழகங்களுக்கிடையே பெரியார் பல்கலைக்கழகம் முன்னணியில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

4.9.6. பல்கலைக்கழக மற்றும் இணைவு பெற்றுள்ள கல்லூரிகளின் ஆசியர்களுக்காக ஆசிரியர் பயிற்சி கருத்தரங்குகளும், பல்கலைக்கழக ஆசிரியர்களுக்காக சிறந்த ஆசிரியர்கள் சொற்பொழிவு கருத்தரங்குகளும் 2018 ஆம் ஆண்டு முதல் நடத்தப்படுகின்றன. இந்தக் கருத்தரங்குகள்மூலம் 2000 ஆசிரியர்கள் பயன்பெற்றுள்ளனர். பல்கலைக்கழகத் துறைகளிலும், இணைவு பெற்றுள்ள கல்லூரிகளிலும் ஆய்வு மேற்கொண்டுள்ள ஆராய்ச்சி மாணாக்கர்களுக்காக பயிற்சிப் பயிலரங்குகள் 2019 இல் நடத்தப்பெற்றன.

4.9.7. தேசிய மற்றும் பன்னாட்டுக் கல்வி நிறுவனங்களுடன் பல்கலைக்கழகத்தின் பல துறைகள் முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செய்துள்ளன. அவற்றுள், பல்கலைக்கழக ஆசிரியர்களைப் பரிமாற்றம் செய்துகொள்வதற்கு பிரான்ஸ் நாட்டின் தென் பிரிட்டினி பல்கலைக்கழகத்துடனும், மாணாக்கர்களின் ஆய்வுத் தொடர்பான இடைநிலைப் பயிற்சிகளுக்கு மலேசிய நாட்டில் சரவாக்கில் அமைந்துள்ள கர்டின் பல்கலைக்கழகத்துடனும், இடைநிலைப் பயிற்சி மற்றும் ஆசிரியர்களைப் பரிமாற்றம் செய்துகொள்ளுதலுக்கு மலேசியா நாட்டு டெக்னோலஜி பெட்ரோனாஸ் பல்கலைக்கழத்துடனும் செய்துள்ள ஒப்பந்தங்கள் குறிப்பிடத்தக்கன. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் பயனாக, 2018—2019 ஆம் ஆண்டில் புவி அமைப்பியல் துறையைச் சார்ந்த ஐந்து மாணாக்கர்கள் மலேசியா நாட்டு கர்டின் பல்கலைக்கழகத்திற்குச் சென்று 30 நாட்கள் தங்கி பயின்று வந்தனர்.

4.9.8. அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களைச் சார்ந்த அறிவாண்மைமிக்க பேராசிரியர்களை அழைத்து, பெரியார்

2020 மார்ச் 12]

பல்கலைக்கழகப் பேராசிரியர்களுடன் இணைந்து, ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் மற்றும் மாணாக்கர்களுக்குக் கற்பித்தலுக்கான திட்டம் 2019-2020 ஆம் கல்வியாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2018—2019 ஆம் கல்வியாண்டு முதல் பல்கலைக்கழக துறைகளிலுள்ள ஏழ்மை நிலையிலுள்ள மாணாக்கர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, அவர்களுக்கான முழு கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணத்தைப் பல்கலைக்கழகமே ஏற்றுக்கொள்கிறது.

4.9.9.சிறந்த ஆசிரியர், சிறந்த ஆராய்ச்சியாளர்களுக்கான விருது வழங்கும் திட்டத்தைப் பல்கலைக்கழகம் 2018—2019 ஆம் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தியுள்ளது. இதுவரையில் 6 ஆசிரியர்கள் இந்த விருதுகளைப் பெற்றுள்ளனர். மேலும், பன்னாட்டுக் கல்விசார் நிகழ்ச்சிகளிலும், கருத்தரங்குகளிலும் பங்கேற்று ஆய்வுக் கட்டுரை அளிக்கச் செல்லும் ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணாக்கர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களுடைய பயணச் செலவில் 50% தொகையைப் பல்கலைக்கழகம் வழங்கி வருகின்றது.

4.9.10. பல்கலைக்கழகம் 143 ஆராய்ச்சி மாணாக்கர்களுக்குப் பல்கலைக்கழக ஆய்வு உதவித் தொகை வழங்கியுள்ளது. முதுமுனைவர் ஆய்வு உதவித்தொகை வழங்கும் திட்டம் 2019—2020 இல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, பல்கலைக்கழகத்தின் 12 துறைகளில் ஆய்வு செய்ய விரும்பும் ஆராய்ச்சியாளர்களுக்கு இரண்டாண்டுகளுக்கு இத்திட்டத்தின்கீழ் நல்கை வழங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

4.9.11. பெரியார் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.15.245 கோடிக்கான உட்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 30.01.2020 அன்று காணொலிக்காட்சிமூலம் திறந்து வைக்கப்பட்டது.

4.9.12. தமிழக அரசு, சேலம் மாவட்டம் எடப்பாடியிலுள்ள பெரியார் பல்கலைக்கழக கலை மற்றும் அறிவியல் உறுப்புக் கல்லூரிக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.5.21 கோடி நிதி ஒதுக்கீடு செய்து கட்டடப் பணி நிறைவடையும் தருவாயில் உள்ளது.

சேந்தமங்கலத்திலுள்ள பெரியார் பல்கலைக்கழகக் கலை மற்றும் அறிவியல் உறுப்புக் கல்லூரிக்கான கட்டடங்கள் கட்டுவதற்கு தமிழக அரசு ரூ.7.875 கோடி நிதி ஒதுக்கீடு செய்து இதற்கான கட்டடப்பணிகள் நிறைவடைந்து 5.03.2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

4.10. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

4.10.1. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், திறந்தநிலை மற்றும் தொலைநிலைக் கல்விமுறையை தமிழகத்தில் சிறந்த முறையில் வழங்குவதுடன், திறந்தநிலை மற்றும் தொலைநிலைக் கல்வி முறையில் வழங்கப்படும் படிப்புகளுக்கு, மரபார்ந்த படிப்புகளுக்கு இணையான கற்றல் அளவெண்களைப் (தகுதிப் புள்ளிகளை) பரிமாற்றம் செய்ய ஆவன செய்வதோடு, கலை மற்றும் கைவினைப்பொருள்கள் சார்ந்த பயிற்சிகளையும் வழங்குதற்காக தமிழக அரசால் தொடங்கப்பட்டது. இப்பல்கலைக்கழகமானது, திறந்தநிலை மற்றும் தொலைநிலைக் கல்வி முறையில் சமகால சமூகத்திற்கு பயன்படும் வகையிலான படிப்புகளை குறைந்த கட்டணத்தில் வழங்கி வருகிறது. குறிப்பாக கல்வி கற்பதற்கான வாய்ப்பு கிடைக்கப்பெறாத கிராமப்புற மக்கள், பணி செய்வோர், இல்லத்தரசிகள், மாற்றுத்திறனாளிகள், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்கும் தரமான சிறந்த கல்வியை வழங்கி வருகிறது. இப்பல்கலைக்கழகம், ஆயத்தப்படிப்பு, சான்றிதழ், பட்டயம், பட்டம் மற்றும் பட்டமேற்படிப்பு உள்ளிட்ட 76 பாடத்திட்டங்களை வழங்கி வருகிறது. தற்போது 31,646 மாணாக்கர்கள் இப்பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பயின்று வருகின்றனர்.

4.10.2. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், 170 கற்றல் வள மையங்கள் (LRC), 243 சமுதாயக் கல்லூரிகள், 75 கற்போர் உதவி மையங்கள் (LSC), 9 சிறைவாழ் கற்போருக்கான கல்வி மையங்கள் (JSC) மற்றும் 35 கூட்டாண்மை மற்றும் பிற நிறுவனங்கள் (PI) உள்ளிட்ட 532 கல்வி மையங்களைக் கொண்டு பரந்துபட்ட கட்டமைப்பின்மூலம் கல்வியினை வழங்கி வருகிறது.

4.10.3. இப்பல்கலைக்கழகம், தகவல் மற்றும் தொடர்பியல் தொழில்நுட்பங்களை திறந்தநிலை மற்றும் தொலைநிலைக்

2020 மார்ச் 12]

*கல்வியில் பயன்படுத்தியமைக்காக, 2017 ஆம் ஆண்டு மும்பை எஸ்ட்ரேட் கல்வி விருதினைப் (*The Estrade Education Award*) பெற்றுள்ளது. மத்திய அரசின் "ஏக் பாரத் ஏக் ஷ்ரேஷ்டா" திட்டத்தின்கீழ், இப்பல்கலைக்கழகம் காரக்பூர் இந்திய தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாடு மற்றும் காஷ்மீர் மாநிலத்தைச் சார்ந்த கலைஞர்களைக் கொண்டு கலை, பண்பாட்டு நிகழ்ச்சிகளை 30.1.2018 மற்றும் 31.01.2018 அன்று நடத்தியது. அந்நிகழ்ச்சியில் தமிழகத்திலிருந்து பங்கேற்றவர்களில் 18 மாணாக்கர்கள் இப்பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.*

*4.10.4. இந்திய அரசின், பல்கலைக்கழகக் கல்விச்சான்றிதழ்களை எண்மப்படுத்துவதற்கான திட்டத்தின்கீழ், தேசிய கல்வித் தரவகத்தின் வழி (*NAD*) இப்பல்கலைக்கழகம், இதுவரையில் 65,637 பட்டச்சான்றிதழ்களை தேசிய பாதுகாப்பு வைப்பு நிறுவனத்தின் (*NSDL*) தரவு மேலாண்மை தளத்தில் பதிவேற்றம் செய்துள்ளது.*

4.10.5. கிராமப்புறங்களில், குறிப்பிடத்தக்க வளர்ச்சி மாற்றம் கொண்டு வருவதற்கான மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் "உன்னத் பாரத்" திட்டமானது, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் 2018—ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்மூலம், தருமபுரி மாவட்டத்திலுள்ள (1) பெரியணஹள்ளி, (2) பைசுஹள்ளி, (3) பூமந்தஹள்ளி, (4) கீரகோடஹள்ளி, (5) கும்பரஹள்ளி ஆகிய 5 கிராமங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான பணி நடைபெற்று வருகின்றது.

4.10.6. புதிய திறன் சார்ந்த/வேலைவாய்ப்புகளை உருவாக்குவது சார்ந்த பாடத்திட்டங்கள், மாணவர் சேர்க்கையை உயர்த்துதல், தரமான கல்வியினை வழங்குவது மற்றும் சென்னை, விழுப்புரம், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், தருமபுரி, நீலகிரி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் இணைய வழி மாணவர் சேர்க்கை ஆகிய மேம்பட்ட நடவடிக்கைகளை இப்பல்கலைக்கழகம் முன்னெடுத்துள்ளது.

[2020 மார்ச் 12

4.10.7. பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் திறந்தநிலை மற்றும் தொலைநிலைக் கல்விக்கான நெறிமுறைகள் 2017 இன் அடிப்படையில், இப்பல்கலைக்கழகமானது 2018 இல் 38 முதுநிலைப் பட்டப் படிப்புகளுக்கும், 42 இளநிலைப் பட்டப் படிப்புகளுக்கும் அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளது. உயர் கல்வி வழங்குவதில் ஒரு பகுதியாக, கடந்த ஐந்தாண்டுகளில், 97,460 மாணவிகள் உள்ளிட்ட 2,25,852 மாணாக்கர்களுக்கு இப்பல்கலைக்கழகமானது பட்டங்களை வழங்கியுள்ளது.

4.10.8. தமிழகத்திலுள்ள சிறைவாழ் கைதிகளின் புனர்வாழ்வுக்காக, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் மகாத்மா காந்தி பெயரில் சமுதாயக் கல்லூரிகளை 9 சிறைச் சாலைகளில் (3 பெண்களுக்கான சிறைகள் உட்பட) நிறுவி, சிறைவாழ் கைதிகளுக்குத் திறன்சார்ந்த பட்டயப் படிப்புகளை வழங்கி வருகின்றது. இதன்மூலம், இதுவரையில் 1,380 சிறைவாழ் கைதி மாணாக்கர்கள் திறன்சார்ந்த பட்டயம் பெற்றுள்ளனர். தற்போது, 51 சிறைவாழ் கைதி மாணாக்கர்கள் திறன்சார்ந்த பட்டயப் படிப்புகளைப் பயின்று வருகின்றனர். தமிழகத்தில் உயர் கல்வியில் மொத்த மாணவர் சேர்க்கை உயர்விற்கு (GER) தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் பங்கு குறிப்பிடத்தக்க வகையில் அமைந்துள்ளது. குறிப்பாக, கடந்த 5 ஆண்டுகளில் பல்வேறு படிப்புகளில் 1,98,692 மாணாக்கர்களைச் சேர்த்துள்ளது.

4.10.9. தமிழ்நாடு அரசின் அறிவிப்பிற்கிணங்க, இப்பல்கலைக்கழகத்தில் இணையவழி படிப்புகள் வழங்குவதற்காக இணையவழிக் கல்வி மையம் ஒன்று நிறுவப்பட்டு உள்ளது. தமிழகத்திலுள்ள 91 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் கற்போர் உதவி மையம் (LSC) மற்றும் தேர்வு மையங்களாகச் செயல்படுவதற்கான ஆயத்தப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

4.10.10. தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் கட்டமைப்பினை விரிவுபடுத்திடும் வகையில் பாடநூல் தயாரிப்பு மற்றும் விநியோகப் பிரிவு கட்டடத்தில் (MPDD Block), ரூ.23.00 கோடி மதிப்பில் கல்விப்புல வளாகத்தில் கூடுதலாக 3 அடுக்குகள், 650 பேர் அமரக்கூடிய கலையரங்கும், 120 பேர் அமரக்கூடிய

2020 மார்ச் 12]

கருத்தரங்கும், விருந்தினர் இல்லமும் கட்டப்பட்டு, 30.1.2020 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் காணொலி காட்சிமூலம் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

4.10.11. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக வரலாற்றில் முதல்முறையாக செப்டம்பர் 2019 இல் துணைத்தேர்வு நடத்தப்பட்டது. இதனைப் பயன்படுத்தி ஏறக்குறைய 600 மாணாக்கர்கள் பட்டம் பெற்றுள்ளனர்.

4.11. திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

4.11.1. திருவள்ளுவர் பல்கலைக்கழகம் தமிழக அரசால், தமிழக சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்டம் எண் 32/2002 இன்படி தோற்றுவிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஆகும். இப்பல்கலைக்கழகம் தற்போது 43 ஆசிரியர்களை உள்ளடக்கிய 7 துறைகளுடன் செயல்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகம் நான்கு உறுப்புக் கல்லூரிகளை முறையே அரக்கோணம், திட்டக்குடி, கள்ளக்குறிச்சி மற்றும் திருப்பத்தூர் ஆகிய இடங்களிலும் மற்றும் விழுப்புரத்தில் ஒரு முதுநிலை விரிவாக்க மையமும் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இப்பல்கலைக்கழகத்தின் முதுகலை, எம்.ஃபில். மற்றும் பி.எச்டி. பாடப்பிரிவுகளில் 286 மாணாக்கர்களும், பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் மற்றும் முதுகலை விரிவாக்க மையத்தில் முறையே 9,523 மாணாக்கர்கள் மற்றும் 364 மாணாக்கர்களும் பயின்று வருகின்றனர். 124 பல்கலைக்கழக இணைவுக் கல்லூரிகளில் இளங்கலை, முதுகலை மற்றும் எம்.ஃபில். பாடப்பிரிவுகளில் 1,55,216 மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். தேசிய தர மதிப்பீட்டுக் குழு (NAAC) திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு 7 புள்ளி அளவுகோளுடைய ஒட்டுமொத்த கூட்டு சராசரி தர புள்ளியில் (CGPA) 2.25 மதிப்பினை வழங்கி தர மதிப்பீட்டில் 'பி' தரச் சான்றிதழ் வழங்கியுள்ளது. இம்மதிப்பீடு 2018 முதல் ஐந்தாண்டுகளுக்கு செல்லத்தக்கதாகும்.

4.11.2. 2018 இல் இப்பல்கலைக்கழகத்தின் உயிரி தொழில்நுட்பத் துறை சிறந்த ஆராய்ச்சி மற்றும் சிறந்த ஆசிரியர் விருதை மலேசியாவின் எய்ம்ஸ்ட் பல்கலைக்கழகத்திடமிருந்து பெற்றுள்ளது. மேலும், உயிரி தொழில்நுட்பத் துறை, மத்திய அரசின்

நிதியுதவியுடன் AYUSH மற்றும் SERB ஆகிய நிறுவனங்களின் ரூ.70.00 இலட்சம் மதிப்புள்ள இரண்டு திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இப்பல்கலைக்கழக விலங்கியல் துறையின், 'A Process for producing silver nano surgical suture thread' என்ற ஆய்வுத் திட்டத்திற்கு, மத்திய அரசின் காப்புரிமை 10.08.2018 அன்று பெறப்பட்டுள்ளது. DST—SERB என்னும் அமைப்பு, இப்பல்கலைக்கழக உயிரிதொழில்நுட்பத் துறைக்கு, முதுமுனைவர் ஆராய்ச்சி உதவித் தொகையாக ரூ.19.20 இலட்சத்தினை வழங்கியுள்ளது.

4.11.3. திருவள்ளுவர் பல்கலைக்கழகம் 3 புதிய பாடப்பிரிவுகளைத் தொடங்கும் பொருட்டும், உட்கட்டமைப்பு வசதிகளான கூடுதல் வகுப்பறைகள் மற்றும் மாணவ—மாணவியர் விடுதிகளைக் கட்டுவதற்காகவும், தமிழக அரசு ரூ.29.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அதன்படி, இப்பல்கலைக்கழகம் ஏற்கெனவே உள்ள 7 துறைகளுடன் புதியதாக, கணினி அறிவியல், இயற்பியல் மற்றும் வணிகவியல் ஆகிய 3 துறைகளை 2020—2021 ஆம் கல்வியாண்டில் தொடங்க உள்ளது.

4.11.4. பல்கலைக்கழகத்தின் 6 உறுப்பு கல்லூரிகள் மற்றும் விழுப்புரத்தில் உள்ள முதுகலை விரிவாக்க மையத்தில், ஆய்வக உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவும் பொருட்டு, மேற்படி ஒவ்வொரு கல்லூரிக்கும் மற்றும் முதுகலை விரிவாக்க மையத்திற்கும் தலா ரூ.50.00 இலட்சம் வீதம், ரூ.3.50 கோடி நிதியை, தமிழக அரசு, திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு ஒப்பளிப்பு செய்துள்ளது.

4.11.5. ரூ.18.10 இலட்சம் மதிப்புள்ள 3 ஆராய்ச்சித் திட்டங்களை செயல்படுத்த 2019-2020 ஆம் ஆண்டு மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் அனுமதி பெறப்பட்டுள்ளது.

4.11.6.பல்கலைக்கழகம் இரண்டு தொழில் முனைவோர் பயிற்சித் திட்டங்களை, Skype மூலமாக CAP Digisoft Solutions Inc. உடன் சேர்ந்து நடத்தியது. இதில், இப்பல்கலைக்கழக மாணாக்கர்கள் 250-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

4.11.7.பல்கலைக்கழகத்தில் இணைய முகப்பு வழியாக இணைய வழிப் படிப்புகள் (MOOC) முதுகலை, ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட மாணாக்கர்களுக்கு அவர்களின் விருப்பத்

தேர்வாக தொடங்கப்பட்டுள்ளது. மேலும், ஆசிரியர்களுக்கு அவர்களின் பாடப்பிரிவு சார்ந்த மின்னணு பாடங்கள் (e—content) உருவாக்கத்திற்கான பயிற்சி வழங்கப்படுகிறது.

4.11.8. இப்பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் சுயநிதிக் கல்லூரியில் முதலாமாண்டு பயிலும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் உதவித் தொகையினையும் (Post Matric Scholarship) மற்றும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்கான உதவித் தொகையினையும் வழங்க ஏற்பாடு செய்து வருகிறது.

4.11.9. கடந்த பத்து மாதங்களில் பல்கலைக்கழக ஆசிரியர்களும் மாணவர்களும் 64 தேசிய மற்றும் சர்வதேச கருத்தரங்குகளில் கலந்து கொண்டு, 138 ஆய்வுக் கட்டுரைகளை பல்வேறு இதழ்களில் வெளியிட்டுள்ளனர்.

4.11.10. இப்பல்கலைக்கழகம் வேலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்துடன் இணைந்து மாணாக்கர்களுக்கு பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகளை நடத்தியுள்ளது.

4.11.11. இப்பல்கலைக்கழக ஆசிரியர்களால் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழக பாடங்கள் தொடர்பான காட்சி வடிவிலான விரிவுரைகள் மற்றும் மின்னணு பாடங்கள் (e—content) ஆகியன பல்கலைக்கழக மற்றும் இணைவுக் கல்லூரி மாணாக்கர்களின் பயன்பாட்டிற்காக பல்கலைக்கழக வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இப்பல்கலைக்கழகம் முதலாமாண்டு முதுகலை மாணாக்கர்களுக்கு இணைப்புப் படிப்புகளையும் (Bridge Course), இரண்டாமாண்டு முதுகலை மாணாக்கர்களுக்காக தேசிய தகுதித் தேர்வு, மாநில தகுதித் தேர்வு, இந்திய குடிமையியல் பணிகள் தேர்வு ஆகிய தேர்வுகளுக்கு தயார் செய்வதற்கான பயிற்சியினையும் நாள்தோறும் அளித்து வருகிறது.

4.11.12. சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான பயிற்சி மற்றும் காட்சியிடத்திற்கான முதன்மைப் பகுதியாக திருவள்ளுவர் பல்கலைக்கழக வளாகம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 12

இப்பல்கலைக்கழக வளாகத்தில், மருத்துவ குணம் கொண்ட மூலிகைச் செடிகளுடன் கூடிய 600 செடி வகைகள் கொண்ட மூலிகைத் தோட்டம் நிறுவப்பட்டுள்ளது. முதன்முறையாக இப்பல்கலைக்கழக வளாகத்தில் தேனீ மற்றும் காளான் வளர்ப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

4.12. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

4.12.1 தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் ஆசிரியர் கல்வியின் தரத்தை உன்னத நிலைக்கு மேம்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டது. கல்லூரி மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர் பயிற்றுனர்களின் அறிவைப் புதுப்பிப்பதற்காகக் கருத்தரங்குகள், மாநாடுகளை அடிக்கடி நடத்துதல் ஆகியன இப்பல்கலைக்கழகத்தின் முதன்மை நோக்கமாகும். இப்பல்கலைக்கழகத்துடன் 7 அரசு, 14 அரசு உதவிபெறும் கல்லூரிகள், 698 சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் உட்பட மொத்தம் 719 கல்வியியல் கல்லூரிகள் இணைவு பெற்றுள்ளன.

4.12.2. தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் 2 ஆண்டு முதுகலை கல்வியியல் பட்டப்படிப்பினை 2017-2018 ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தில் தொடங்குவதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

4.12.3. இப்பல்கலைக்கழகமானது, 2019 ஆம் ஆண்டு, வி.மருதூர் (விழுப்புரம் மாவட்டம்), எடப்பாடி (சேலம் மாவட்டம்) ஆகிய இரண்டு பல்கலைக்கழக உறுப்பு கல்வியியல் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக வளாகத்தில் நான்கு ஆண்டு ஒருங்கிணைந்த ஆசிரியர் கல்விப்படிப்பினை (Upper—Primary to Secondary—Science Stream) 2020-2021 ஆம் ஆண்டு முதல் தொடங்குவதற்கு தேசிய ஆசிரியர் கல்விக்குழுமத்திற்கு இப்பல்கலைக்கழகம் இணையவழிமூலம் விண்ணப்பித்துள்ளது.

4.12.4. 2018 ஆம் ஆண்டு மனித வள மேம்பாட்டு அமைச்சகமானது (MHRD) 'ஆசிரியர்கள் மற்றும் கற்பித்தலுக்கான பண்டிட் மதன் மோகன் மாளவியா தேசிய இயக்கத் (PMMMNMTT) திட்டத்தின்'கீழ் இப்பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் மேம்பாட்டு மையத்தினைத் தோற்றுவிப்பதற்கும், பயிற்சி அளிப்பதற்கும் ரூ.5.38

2020 மார்ச் 12]

கோடியினை ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் ஆசிரியர் மேம்பாட்டு மையத்திற்கான கட்டடம் (FDC) இப்பல்கலைக்கழக வளாகத்தில் கட்டுவதற்காக ரூ.3.90 கோடி வழங்கப்பட்டு இக்கட்டடத்திற்கு 8.1.2020 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

4.12.5. இப்பல்கலைக்கழகத்தில் 2019 ஆம் ஆண்டு, அகத் தர மேம்பாட்டு மையம் (IQAC) தேசிய மதிப்பேற்றுச் சான்றளிப்புக் குழுவின் (NAAC) வழிகாட்டு நெறிமுறைகளின்படி செய்யப்படுவதற்கு முயற்சியை மேற்கொண்டுள்ளது. இப்பல்கலைக்கழகம் "TNTEU News Tracks" என்ற மின்செய்தி மடலினை (e—News letter) டிசம்பர் மாதம் 2019 முதல் வெளியிட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகமானது 2019 ஆம் ஆண்டு, தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் வேண்டுகோளுக்கிணங்க 2018-2019 ஆம் கல்வியாண்டிற்கான செயல்திறன் மதிப்பீட்டு அறிக்கையினை (PAR) இணையம்மூலம் வெற்றிகரமாக பதிவேற்றம் செய்துள்ளது.

4.12.6. இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சித் துறை 2019 ஆம் ஆண்டு, "நகர்ப்புற மற்றும் கிராமப்புற மாணவர்களுக்கான திறன் மேம்பாடு மற்றும் இலக்கு நிருணய உத்திகள்" என்ற தலைப்பில் தேசிய கருத்தரங்குகளை நடத்துவதற்கு ரூ.1.75 இலட்சத்தினைக் கல்வி முறைமையியல் துறைக்கு வழங்கியுள்ளது. மேலும், இத் துறையானது 2019 ஆம் ஆண்டு "Fill the Mind Gap by Occupational Skills" என்ற தலைப்பில் தேசிய கருத்தரங்கினை நடத்துவதற்கு ரூ.2.50 இலட்சத்தினை கல்வி தொழில்நுட்பவியல் துறைக்கு வழங்கியுள்ளது.

4.12.7. 2019 ஆம் ஆண்டில், பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறை "ஆசிரியர்கள் மற்றும் கற்பித்தலுக்கான பண்டிட் மதன் மோகன் மாளவியா தேசிய இயக்கம்" திட்டத்தின்கீழ் "Effectiveness of the Interactive Mathematical Software Geogebra on Achievement in Mathematics among 10th Standard Students" என்ற தலைப்பில் ஆராய்ச்சியினை மேற்கொள்வதற்கு இப்பல்கலைக்கழகத்திற்கு ரூ.1.25 இலட்சத்தினை ஒதுக்கீடு செய்துள்ளது.

4.12.8. மைசூரில் உள்ள இந்திய மொழிகளுக்கான நடுவண் நிறுவனமானது, 2020 ஆம் ஆண்டு, "Item Writing" என்ற தலைப்பில் பயிற்சிப் பட்டறை நடத்துவதற்கு பல்கலைக்கழகத்தின் கல்வி திட்டமிடல் மற்றும் நிருவாகத் துறைக்கு ரூ.40,000/— வழங்கியுள்ளது.

4.12.9. ஆசிரியர் மேம்பாட்டு மையத்தின் வாயிலாக (IQAC) பல்கலைக்கழகத்தின் அகத் தர மேம்பாட்டுக் குழு ஒருங்கிணைப்பாளர்களுக்கு 3 நாட்களுக்கான திறன் மேம்பாட்டுப் பட்டறை (29.08.2019—31.08.2019) நடைபெற்றது. மேலும், கல்வியியல் கல்லூரிகளுக்கிடையிலான மாவட்ட மற்றும் மண்டல அளவிலான விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சி போட்டிகள் 10.2.2020 மற்றும் 11.2.2020 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டன.

4.13. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

4.13.1. அண்ணாமலைப் பல்கலைக்கழகமானது ஒருமை வகை, பல் துறை உறைவிடப் பல்கலைக்கழகமாக 1929 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டம் 2013-ன்படி இப்பல்கலைக்கழகம் மாநில அரசின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டது. தேசிய தர நிருணய மற்றும் மதிப்பீட்டுக் குழு (NAAC), 2014ஆம் ஆண்டு தரமதிப்பீடு செய்து, இப்பல்லைக்கழகத்திற்கு 'A'Grade தரநிலை வழங்கியுள்ளது.

4.13.2. இப்பல்கலைக்கழகம் நேரடிக்கல்வி முறையில் கலை, அறிவியல், கடல்சார் அறிவியல், இந்திய மொழிகள், கல்வியியல், நுண் கலை, பொறியியல் மற்றும் தொழில்நுட்பம், வேளாண்மை, மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் ஆகிய புலங்களில் உள்ள 52 துறைகள்மூலம் முனைவர் படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பு, முதுநிலை, இளநிலை, பட்டம், பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளை வழங்கி வருகிறது.

4.13.3. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1,158 உபரி ஆசிரியர்களும் 2,933 உபரி ஆசிரியரல்லாத பணியாளர்களும் மூன்றாண்டு கால ஒப்பந்த அடிப்படையில் பணிநிரவல்மூலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், அரசு பொறியியல்

2020 மார்ச் 12]

கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், பல்வேறு மாநிலப் பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு அலுவலகங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர்.

4.13.4. 2019—2020 ஆம் கல்வியாண்டில் இப்பல்கலைக்கழகத்தில் பயின்றுவரும் மொத்த மாணாக்கர்களின் எண்ணிக்கை 1,62,985 ஆகும். இவர்களில் 21,866 மாணாக்கர்கள் நேரடிக்கல்வி முறையிலும், 1,41,119 மாணாக்கர்கள் தொலைதூரக்கல்வி முறையிலும் பயின்று வருகின்றனர்.

*4.13.5. பல்கலைக்கழக துறைகளுக்கு இடையேயான விருப்பப் பாடங்களில் தாங்கள் விரும்பிய பாடங்களை மாணாக்கர்கள் தேர்வு செய்வதற்கு விருப்பத்தின் அடிப்படையிலான பாடத்தெரிவு முறை (*Choice Based Credit System*)உதவியாக இருக்கிறது. மாணாக்கர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்துவதற்காக, தற்போது பயிற்றுவிக்கப்படும் பாடங்களோடு, மதிப்புக் கூட்டப்பட்ட பாடங்களும் கூடுதலாக வழங்கப்பட்டு வருகின்றன.*

*4.13.6. பல்கலைக்கழக துறைகளில் பயிற்றுவிக்கப்படும் பாடத்திட்டங்கள் அனைத்திலும் விளைவு அடிப்படையிலான கல்வி வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது."புளூம்டேக்சானமி பாடத் திட்டமிடுதல்" (*Bloom'sTaxonomy*) அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட பாடத்திட்டம் மற்றும் மதிப்பீட்டு முறையால் பாடத்திட்டத்தின் நோக்கமும் செயலாக்கமும் உரிய முறையில் நிறைவேற்றப்படுவதைக் கண்டறிய வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

*4.13.7. தேசிய கல்வி நிறுவனங்களுக்கான தர கட்டமைப்பின் (*National Institute Ranking Framework*) 2019ஆம் ஆண்டு தரவரிசைப்படி அனைத்துப் பிரிவுகளிலும் மற்றும் பல்கலைக்கழகப் பிரிவிலும் இப்பல்கலைக்கழகம் 101—150 தரவரிசையில் இடம்பெற்றுள்ளது. மருந்தாக்கியல் பிரிவில் தேசிய அளவில் 12 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. மருத்துவப் பிரிவில் 25 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.*

4.13.8. "தி டைம்ஸ் உலகப் பல்கலைக்கழக உயர் கல்வி தர வரிசை 2020" ஆம் ஆண்டு தரவரிசைப் பட்டியலில், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அனைத்துப் பிரிவு என்ற வகைப்பாட்டில் 1000+

என்ற தரவரிசையில் இடம் பெற்றுள்ளது. 2019 ஆம் ஆண்டு தரவரிசைப்படி இப்பல்கலைக்கழகம் வாழ்க்கை அறிவியல் என்ற வகைப்பாட்டில் 501-600 தர வரிசையிலும், முன்மருத்துவம், மருத்துவம் மற்றும் சுகாதாரத் துறையில் 601+ தரவரிசையிலும், இயற்பியல் அறிவியல் துறையில் 801+ தரவரிசையிலும் உள்ளது.

4.13.9. “QS உலக பல்கலைக்கழகத் தரவரிசை 2020” ஆம் ஆண்டுக்கான ஆசிய தரவரிசையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 291—300 என்ற வரிசையிலும், தேசிய தர வரிசையில் 39 ஆவது இடத்தையும் பெற்றுள்ளது.

4.13.10. CWTS லெய்டன் தர நிறுவனம் பல்கலைக் கழகங்களில் அறிவியலின் தாக்கம் குறித்தும், அறிவியலின் செயல்பாடு தொடர்பான பல்கலைக்கழகங்களுக்கிடையேயான ஈடுபாடு குறித்தும் தரவரிசைப் பட்டியல் வெளியிட்டு வருகிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள ஆய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை அடிப்படையில் 23 ஆவது இடத்தையும், ஒட்டுமொத்த ஆய்வுக் கட்டுரைகளின் வெளியீடுகளின் விகிதாச்சார அடிப்படையில் 7 ஆவது இடத்தையும் பெற்றுள்ளது.

4.13.11. “SCImago நிறுவனத்தின் தரவரிசை” (2019) பட்டியலில் மாநில அளவில் 9 ஆவது இடத்தையும், தேசிய அளவில் முதன்மை பெற்ற 212 உயர் கல்வி நிறுவனங்களில் 29 ஆவது இடத்தையும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

4.13.12. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 21,549 ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. இந்த வெளியீடுகள், பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு வரும் ஆராய்ச்சியின் முன்னேற்றத்தை உணர்த்தும் சான்றாக உள்ளன. ஸ்கோபஸ் (Scopus) அறிக்கையின்படி ஆராய்ச்சி வெளியீடுகளின் எண்ணிக்கை 12,818 ஆகும். இதற்கான ஹெச்—குறியீடு (h—Index) 118 ஆகும். வெப் ஆப் சயின்ஸ் (Web of Science) அறிக்கையின்படி, இந்த வெளியீடுகளின் எண்ணிக்கை 7,252 ஆகும். இதற்கான ஹெச்—குறியீடு (h—Index) 106 ஆகும். பப்மெட் (PubMed) அறிக்கையின்படி, இந்த வெளியீடுகளின் எண்ணிக்கை 3,129 ஆகும். கூகுள் ஸ்காலர் (Google Scholar) அறிக்கையின்படி ஆராய்ச்சி வெளியீடுகளின் எண்ணிக்கை 19,180

2020 மார்ச் 12]

ஆகும். IEEE- ல் வெளியிடப்பட்ட வெளியீடுகளின் எண்ணிக்கை 315 ஆகும்.

4.13.13. இப்பல்கலைக்கழகத்திற்கு, UGC—SAP, DST—FIST மற்றும் DST—PURSE ஆகிய பல்வேறு அரசு நிதி முகமைகளிடமிருந்து (Government Funding Agencies) மானியமாக ரூ.22.14 கோடி பெறப்பட்டுள்ளது.

4.13.14. தேசிய உயர் கல்வித் திட்டத்தின் (RUSA)ன்கீழ் ரூ.7.50 கோடி மானியமாக பெறப்பட்டுள்ளது.

4.13.15. தொழில் நிறுவனங்களில் பயிற்சி, வேலைவாய்ப்பு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றினை தற்போது பயின்றுவரும் மாணாக்கர்கள் பெறுவதற்கு ஏதுவாக, முன்னாள் மாணாக்கர்களின் அனுபவத்தையும் திறனையும் தேவையான அளவு பயன்படுத்துவதற்காக முன்னாள் மாணாக்கர்களைக் கொண்டு அறக்கட்டளை நிறுவப்பட்டுள்ளது.

4.13.16. உயர்தர கூட்டரங்கினை அமைப்பதற்கும், புராதன கட்டடங்களை புனரமைப்பு செய்வது தொடர்பான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் மாணாக்கர்களிடமிருந்து 2019—2020 ஆம் ஆண்டில் ரூ.2.20 கோடி பெறப்பட்டுள்ளது.

4.13.17. தேசிய உயர் கல்வித் திட்டத்தின் (RUSA)ன்கீழ், சிகப்பி ஆச்சி கட்டடத்தின் (மைய மதிப்பீட்டு அரங்கு) மேற்கூரையில், ரூ.1.92 கோடி செலவில் 2018—2019 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட, 200 கிலோ வாட் திறன் கொண்ட சூரிய மின் சக்தி (Solar Plant) உபகரணம் வழங்கிவரும் மின்சாரம், பல்கலைக்கழகத்தின் மின்தேவையில் ஒருபகுதியை பூர்த்தி செய்கிறது.

4.13.18. அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுவின் பயன்பாட்டு மையத்தின் அமைப்பான தேசிய வேலைவாய்ப்பு மேம்பாட்டு இயக்கத்தால் (NEEM) மாநில அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒரே பல்கலைக்கழகம் ஆகும். இதன்மூலம், அனைத்து பொறியியல் மாணாக்கர்களுக்கும் பயிற்சி வழங்குவதற்கான அங்கீகாரத்தை இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

[2020 மார்ச் 12

4.13.19. பல்கலைக்கழக வேலைவாய்ப்பு முகாம் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெற்றது. இதில் 55 நிறுவனங்கள் பங்கேற்றன. 1,596 மாணாக்கர்கள் பணி நியமன ஆணைகளைப் பெற்றனர்.

4.13.20. பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் ஒப்புதல் மற்றும் நிதியுதவியோடு, 30 மாணாக்கர்கள் பயில்கின்ற வகையில், 2018—2019 ஆம் கல்வியாண்டு முதல் 'பல்கலைக்கழக திறன்மேம்பாட்டு மையம்'மூலம், விமான நிலைய நடவடிக்கைகள் (Airport Operations) மற்றும் மீன் வளர்ப்பு (Aqua Culture) ஆகிய இரண்டு இளநிலை தொழில் படிப்புகள் (B.Voc.Courses) வழங்கப்பட்டு வருகின்றன.

4.13.21. சென்னை பொது நூலக இயக்குநரகத்தோடு இணைந்து, அண்ணாமலைப் பல்கலைக்கழக சர்.சி.பி.இராமசாமி ஐயர் மத்திய நூலகத்தில் உள்ள அரிதான ஓலைச்சுவடிகள், பனை ஓலைக் குறிப்புகள், மிகவும் பழைய மற்றும் அரிதான வெளியீடுகள் ஆகியவை எண்ணியல் (Digital) முறையில் தொகுக்கப்படுகின்றன.

4.13.22. வேளாண்புலம் வழங்கிவரும் அனைத்து இளநிலை, முதுநிலை மற்றும் முனைவர் பட்டப்படிப்புகள், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தரச்சான்றினைப் பெற்றுள்ளன.

4.13.23. கட்டடம், கட்டடம் மற்றும் வடிவமைப்பு, இயந்திரவியல், மின்னணுவியல் மற்றும் தொலைதொடர்பு ஆகிய இளநிலைப் பொறியியல் பாடங்கள், தேசிய தரச்சான்று வாரியத்தின் (National Board of Accreditation) தரச்சான்றினைப் பெற்றுள்ளன.

5. தமிழ்நாடு ஆவணக்காப்பகம்

5.1. தமிழ்நாடு ஆவணக்காப்பகம், மதராஸ் ரெகார்ட் ஆபிஸ் என்ற பெயரில் 1909 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. 1670 ஆம் ஆண்டு துவங்கி பல்வேறு அரசு துறைகள், மாவட்ட நீதிமன்றங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களைச் சார்ந்த ஆவணங்கள், முன்னாள் வருவாய் வாரிய ஆவணங்களை தன்னகத்தே கொண்டுள்ள இக்காப்பகம் வெறும் தகவல்களை மட்டுமே தன்னகத்தே கொள்ளாமல், அறிவுக் களஞ்சியமாக விளங்குகிறது. தமிழ்நாடு ஆவணக்காப்பகம் 1633 ஆம் ஆண்டு முதல்

2020 மார்ச் 12]

பிரசுரம் செய்யப்பட்ட பல்வகை அரிய அச்சிட்ட நூல்களையும் மதிப்புமிக்க டச்சு, டேனிஷ் மற்றும் பெர்ஷியன் மொழிகளின் ஆவணங்களைப் பாதுகாத்து வருகிறது. மேலும், வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்நிலத்தின் சரித்திர அறிவிற்கான கடைசி நிலையாக சந்தேகத்திற்கு இடமின்றி பல்வேறு பரிமாணங்களில் விளங்குகிறது. தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம், நூல்கள் மற்றும் காலமுறை என 2.3 இலட்சம் எண்ணிக்கைக்கும் மேல் புத்தகங்களை தன்னகத்தே கொண்டு ஆய்வாளர்கள், கல்வியாளர்கள், வரலாற்று அறிஞர்கள் என உலகின் பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்தவர்கள் தங்களின் ஆய்வுக்கான தகவல்கள் மற்றும் குறிப்புகளையும் பெற தன்னகத்தே ஈர்க்கிறது.

5.2. தமிழ்நாடு ஆவணக்காப்பகம் இம்மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களின் மாவட்ட விவரச்சுவடிகளை காலக்கிரமமாக தயாரித்து வெளியிட்டு வருகிறது. மாநிலம் முழுவதும் உள்ள மாவட்ட அளவிலான ஆவணங்களைப் பாதுகாக்க வேண்டி தஞ்சாவூர், கோயம்புத்தூர், கடலூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி என 6 இடங்களில் மாவட்ட ஆவணக்காப்பகம் இயங்கி வருகிறது. அறிவினைப் பாதுகாப்பது என்பது மனித குல நாகரிகத்தை பாதுகாப்பது என்பதாகும். இதனை மனதில்கொண்டு எதிர்கால சந்ததியினருக்கு பயன்படும் வகையில் ஆவணங்களைப் பாதுகாக்கும் அரிய பணியினை தமிழ்நாடு ஆவணக்காப்பகம் செய்து வருகிறது. இந்த இலக்கினை அடையும் பொருட்டு மின்படம் எடுத்தல், நுண்புகைப்படம் எடுத்தல், கணினிப்படுத்துதல், ஆவணங்களைப் புத்தகமாகக் கட்டுதல் ஆகிய அறிவியல் தொழில்நுட்பங்கள் மற்றும் பாரம்பரிய முறைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி இக்காப்பகத்தில் பெருமளவில் மையப்படுத்தப்பட்டுள்ள ஆவணங்களைப் பாதுகாப்பதன்மூலம் வரலாற்று அறிவினைப் பாதுகாக்கும் பணியினையும் இக்காப்பகம் செம்மையுடன் செய்து வருகிறது.

5.3. மின்படம் எடுத்தல், செப்பனிடப்பட்ட ஆவணங்களை மின்படம் எடுத்தல் ஆகிய தொடர் முயற்சிகளுக்கு 2016-2019 ஆண்டுகளில் ரூ.40.00 இலட்சத்திற்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. மத்திய அரசின் 75 சதவீத பங்களிப்பு மற்றும் மாநில அரசின் 25 சதவீத பங்களிப்புடன் கூடிய மத்திய அரசின் நிதி உதவி திட்டத்தின்கீழ்

[2020 மார்ச் 12

2016-2017 ஆம் நிதி ஆண்டில் ரூ.47.00 இலட்சம் பெறப்பட்டு ஆவணங்களை மின்படம் எடுத்தல் மற்றும் நுண்புகைப்படம் எடுத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2018—2019 நிதி ஆண்டில் அரிய ஆவணங்களை நுண்புகைப்படம் எடுக்கும் பணிக்கென ரூ.40.43 இலட்சம் ஒப்பளிப்பு பெறப்பட்டுள்ளது.

5.4. மின்மயமாக்கப்பட்ட இக்காப்பக ஆவணங்களை இணையத்தின் வழி பார்வையிடல் திட்டத்தினை நடைமுறைப்படுத்த தமிழ்நாடு புதுமை முயற்சிகள் புத்தாக்கத் திட்டத்தின்கீழ் 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை ரூ.67.00 இலட்சம் பெறப்பட்டு உள்ளிணைப்பு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆவணங்களை கணினிபடுத்துதல் என்பது ஒரு தொடர் பணியாகும். தமிழ்நாடு மின் ஆளுமை கழகத்தால் மின் ஆவணக்காப்பகம் அமைக்க வேண்டி ரூ.105.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ்நாடு மின் ஆவணக்காப்பகம் 2017 இல் துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு மின் ஆளுமை கழகத்தின்மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

5.5. தமிழ்நாடு புதுமை முயற்சிகள் புத்தாக்கத் திட்டத்தின்கீழ் கிழக்கிந்திய கம்பெனி ஆவணங்கள், நில ஆவணங்கள் ஆகியவற்றை மின்னுருவாக்கம் செய்யவும், ஆராய்ச்சி மற்றும் மின்னுரு தகவல் பரவலுக்கான மையம் நிறுவவும் 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.12.68 கோடிக்கு கருத்துரு இக்காப்பகத்தால் அளிக்கப்பட்டு திட்டக்குழுவால் ரூ.2.46 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 2019—2020 ஆம் ஆண்டில் ரூ.1.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனினும், பொதுமக்கள்/பயனாளர்கள் மற்றும் அரசுத் துறைகள் ஆவணங்களை இணைய வழியாக எந்நேரமும் பார்வையிட பயன்தரும் விதத்தில் இக்காப்பகத்தில் உள்ள அனைத்து ஆவணங்களையும் மின்மயமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

5.6. இக்காப்பகத்தில் ஆராய்ச்சிக் கூடம் ஒன்று இயங்குகிறது. இந்தியா மற்றும் பல்வேறு நாடுகளைச் சார்ந்த பல்கலைக்கழகங்களிலிருந்து அங்கீகரிக்கப்பட்ட ஆய்வாளர்கள் இக்காப்பகத்திலுள்ள மூல ஆவணங்களைப் பார்வையிட்டு தங்களின் ஆய்வுகளுக்குத் தேவையான தகவல்கள் மற்றும் தரவுகள்

2020 மார்ச் 12]

சேகரிக்க அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. 2011-ஆம் ஆண்டு முதல் 2,458 ஆய்வாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

5.7. இக்காப்பகம் 2011 ஆம் ஆண்டிலிருந்து தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன்கீழ் தன்னிடம் உள்ள மூல ஆவணங்களில் இருந்து நகல்களை பொது மக்களுக்கு வழங்கி வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 50-80 விண்ணப்பங்களும், மாதம் ஒன்றுக்கு சராசரியாக 1200-1500 விண்ணப்பங்களும் இக்காப்பகத்தால் பெறப்படுகின்றன. இதன்மூலம் கடந்த ஒன்பது ஆண்டுகளில் ஏறக்குறைய 65,400-க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் தங்களின் தேவைக்குரிய தகவல்களைப் பெற்று பயனடைந்துள்ளனர்.

6. தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம்

6.1. மாநில அளவில் உயர் கல்வியினை மேம்படுத்துவதற்கும், மாநிலத் திட்டங்கள் மற்றும் பல்கலைக்கழக நிதிநல்கை குழுவின் திட்டங்களை ஒருங்கிணைக்க உதவும் வகையிலும் தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றமானது 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின்மூலம் சட்டம் இயற்றப்பட்டு தோற்றுவிக்கப்பட்டது. மேலும், இம்மன்றம் உயர் கல்வி வளர்ச்சி தொடர்பான நிகழ்வுகள், நிருவாகச் சீர்திருத்தங்கள், பல்நோக்கு ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல், கலை, சமூக விளையாட்டு மேம்பாடு மற்றும் தொழிலகப் பயிற்சிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றை செயல்பாடாகக் கொண்டுள்ளதுடன் தொழிற்சாலைகளுடனான புரிந்துணர்வுகளை மேம்படுத்தும் பணிகளையும் மேற்கொண்டுள்ளது.

6.2. 2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டுகளின் முக்கிய செயல்பாடுகள்

6.2.1 பாடத்திட்டங்களுக்கான ஒரே மாதிரியான பாட வங்கியினை உருவாக்கி, பல்வேறு பாடங்களுக்கான சமநிலையினை முடிவு செய்யவும் பல்வேறு கல்வி நிறுவனங்களில் படிக்கின்ற மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உதவியாக அமையவும் மாநிலப் பாடத்திட்டக் குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

6.2.2. தேர்வாணையங்களால் எதிர்கொள்ளப்படும் பாடங்களுக்கான சமநிலை குறித்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் பரிந்துரை செய்வதற்கும் மாநில பல்கலைக்கழகங்களிலுள்ள அனைத்து பாடத்திட்டக் குழுத் தலைவர்களின் கூட்டங்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் நடத்தப்பட்டன. 2017—2018 ஆம் ஆண்டில் மட்டும் 280-க்கும் மேற்பட்ட பாடங்களுக்கான சமநிலை குறித்து முடிவெடுக்கும் பொருட்டு, குறிப்புரைகள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தில் செயல்பட்ட சமநிலைக் குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டன.

6.2.3. மாணாக்கர்களின் மென்திறன் பயிற்சியின் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டும், வேலைவாய்ப்பு சதவீதத்தினை அதிகரிக்கவும், 62 அரசு மற்றும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மென்திறன் பயிற்சி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

6.2.4. ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்கள் இடையே மானுடவியல், சமூக அறிவியல் மற்றும் நவீன அறிவியல் ஆகிய தலைப்புகளில் தற்போதைய ஆராய்ச்சி குறித்த அறிவினை மேம்படுத்தும் வகையில் ஆண்டிற்கு இருமுறை ஆராய்ச்சி இதழ்கள் வெளியிடப்படுகின்றன.

6.2.5. 19 தன்னாட்சி பெற்ற அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பட்டப்படிப்பு முதலாமாண்டு பயின்று வரும் மாணாக்கர்களின் ஆங்கில தொடர்பு திறன் வளர்ச்சிக்கு உதவும் வகையில் “The world in your stride” என்னும் இணைப்புப் பாடப் புத்தகம் இம்மன்றத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

6.2.6. இணையவழி இலக்கமுறை நூலக அமைப்பு, பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளில் உள்ள இணைய புத்தகங்களை மாணவர்கள் உபயோகப்படுத்துவதை ஊக்குவிக்கிறது.

6.2.7. Tamil Nadu Innovation Initiatives (TANII) திட்டத்தின்கீழ், மாணாக்கர்களின் தொடர்புத்திறனை அதிகரிக்கும் பொருட்டு, தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் Content and Language Integrated Learning (CLIL) என்ற திட்டத்திற்கு ரூ.62.40 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2020 மார்ச் 12]

6.3. 2019-2020 ஆம் ஆண்டிற்கான செயல்பாடுகள்

6.3.1. 13 மாநில பல்கலைக்கழகங்களுக்கு ரூ.25.00 கோடி ஆராய்ச்சி மானியம் வழங்குவது தொடர்பான மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் 2018-19 ஆம் ஆண்டு அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், 13 மாநில பல்கலைக்கழகங்களிடமிருந்து பெறப்பட்ட 209 ஆராய்ச்சி விண்ணப்பங்கள் முதற்கட்டமாக பரிசீலிக்கப்பட்டு ரூ.14.22 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு ஆராய்ச்சி நிதி வழங்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

6.3.2. உயர் கல்வித் துறை முதன்மைச் செயலரின் தலைமையின்கீழ், வேலைவாய்ப்பிற்கும் உயர் கல்வி பயில்வதற்கும் கல்வி நிறுவனங்கள் வழங்கும் பாடங்களுக்கான சமநிலையை அளிக்க, புதிய சமநிலைக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது வரை 105 பாடத்திட்டக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டு, 372 பாடப்பிரிவுகளுக்கிடையேயான சமநிலை தொடர்பான தீர்வுகள் அளிக்கப்பட்டுள்ளன.

6.3.3. தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தால் 2014 ஆம் ஆண்டில் "மாநில ஒருங்கிணைந்த பாடத்திட்டக் குழு" அமைக்கப்பட்டுள்ளது. அது பல்வேறு பல்கலைக்கழகங்கள், தன்னாட்சிக் கல்லூரிகள் மற்றும் நிகர்நிலை பல்கலைக்கழகங்களும் அளிக்கும் பாடப்பிரிவுகளுக்கிடையேயான இணைத்தன்மை ஏற்பட வழிவகை செய்கிறது. 2019 ஆம் ஆண்டில் மாநில ஒருங்கிணைந்த பாடத்திட்டக் குழுக்களால் பல்வேறு கூட்டங்கள் கூட்டப்பட்டு பாடத்திட்டத்திற்கான வங்கி சீரமைக்கப்பட்டு உலகத்தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்களின் பாடத்திற்கு இணையாக 21 இளங்கலை பாடப் பிரிவுகளும், 20 முதுகலை பாடப் பிரிவுகளும் தயாரிக்கப்பட்டு மன்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டன. அனைத்து மாநில பல்கலைக்கழகங்களும் இவற்றினைச் செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டு பாடங்களுக்கான சமநிலை தொடர்பாக எதிர்காலத்தில் பிரச்சினைகள் ஏற்படாதவாறு வழிவகுக்கப்பட்டது.

6.3.4. ஒவ்வொரு கல்வியாண்டும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி/அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பணியாற்றும் 25 ஆசிரியர்கள் பல்வேறு வளரும் துறைகளில் ஆராய்ச்சி ஆர்வத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு "சிறு ஆராய்ச்சித்

திட்டம்” மூலமாக தெரிவு செய்யப்படுகின்றனர். 2019—2020 ஆம் கல்வியாண்டில் 25 ஆசிரியர்களின் ஆராய்ச்சித் திட்டங்கள், தலா ரூ.1.00 இலட்சம் பெற தெரிவு செய்யப்பட்டுள்ளன.

6.3.5. ‘மாணவர் குறு ஆராய்ச்சி திட்டம்’மூலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் முதுகலை பட்ட மாணவர்கள் இடையே ஆராய்ச்சி எண்ணங்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஆண்டுதோறும் 50 மாணாக்கர்களின் குறு ஆராய்ச்சி திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு, தலா ரூ.15,000/— வீதம் ஆண்டுக்கு ரூ.7.5 இலட்சம் வழங்கப்படுகிறது.

6.3.6. மெதுவாகக் கற்கும் மாணவர்கள் இடைநிற்றலைத் தவிர்க்கும் பொருட்டு மாணவர்களுக்கு சிறப்புக் கவனம் அளிக்கும் திட்டம்மூலம் 24 பல்கலைக்கழக உறுப்பு மற்றும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் பாடங்களில் நிலுவை இல்லாமல் பட்டம் பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு, மாணவர்களின் இடை நிற்றல் தவிர்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு ஆண்டுதோறும் கல்லூரிக்கு ரூ.1.25 இலட்சம் வீதம் வழங்கப்பட்டது. இச்சிறப்பு பயிற்சிமூலம் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் தேர்ச்சி சதவீதம் அதிகரித்துள்ளது.

6.3.7. பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் தேசிய, சர்வதேச அளவில் பயிலரங்கம்/பட்டறைகள்/மாநாடுகள் ஆகியவற்றை நடத்த ‘பகுதி நிதி உதவி’ வழங்கப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் 46 அரசு/அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் இத்திட்டத்தின்மூலம் பயன்பெறும் வகையில் ரூ.7.70 இலட்சம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

6.3.8. கல்வித் துறை—தொழில் துறையினர் இடையே ஒருங்கிணைந்த செயல்பாட்டினை உருவாக்க மாநில பல்கலைக்கழகங்களான சென்னை பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மற்றும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகிய 6 பல்கலைக்கழகங்களில் ‘பல்கலைக்கழகங்கள் தொழில் நிறுவனங்கள் கூட்டிணைவு மையங்கள்’ ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2020 மார்ச் 12]

பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களிடையே மாணவர்களின் முன்னேற்றம், தொழில் துறையின் தற்போதைய தேவையினை எதிர்கொள்ளுதல் போன்ற 150—க்கும் மேற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

6.3.9. உயர் கல்வி மேம்பாடு மற்றும் சர்வதேச அளவில் ஆராய்ச்சி ஒருங்கிணைப்பிற்காக, மாநில பல்கலைக்கழகங்களில் உள்ள “பன்னாட்டுத் தொடர்பு மையங்கள்”, வெளிநாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுடன் இணைந்து, கல்வி சார்ந்த ஒத்துழைப்பினை நல்கி ஆராய்ச்சி, பல்கலைக்கழகங்களுக்கிடையே மாணவர்கள் குறுகிய கால பயிற்சி, மாணவர்களுக்கு நிதியுதவி, வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளுதல், ஒளி நேர்காணல் மூலமாக புதிய ஆய்வுகள் மற்றும் கண்டுபிடிப்புகளைப் பகிர்ந்துகொள்ளுதல், பல்கலைக்கழகங்களுடன் உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி தொடர்பான ஒருங்கிணைப்புகள் செய்யும் பொருட்டு, பல்கலைக்கழக பதிவாளர்கள் மற்றும் பன்னாட்டு தொடர்பு மையங்களின் ஒருங்கிணைப்பாளர்களுடனான கூட்டங்கள் போன்ற நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் கல்விசார்/ஆராய்ச்சி செயல்பாடுகள் தொடர்பாக 70—க்கும் மேற்பட்ட நாடுகளுடன் சர்வதேச கூட்டு ஒத்துழைப்பினை ஏற்படுத்தியுள்ளன.

7. தேசிய உயர் கல்வித் திட்டம் (RUSA)

7.1. தேசிய உயர் கல்வித் திட்டம் (RUSA) என்பது நாடு முழுவதுக்குமான உயர் கல்வியின் தரத்தினை உயர்த்துவதற்கு மத்திய அரசின் பங்கு 60% மற்றும் மாநில அரசின் பங்கு 40% உடன் கூட்டாகச் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இதன் முதல் நிலை 2015 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு, ரூ.428.30 கோடி வழங்க மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட தொகையில் மத்திய அரசின் பங்கு ரூ.256.98 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.171.32 கோடி ஆகும். ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையில் ரூ.357.58 கோடி விடுவிப்பு செய்யப்பட்டுள்ளது. விடுவிப்பு செய்யப்பட்ட

தொகையில் மத்திய அரசின் பங்கு ரூ.220.79 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.136.79 கோடியாகும். விடுவிக்கப்பட்ட தொகையில் ரூ.315.99 கோடி (88.37%) இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ளது.

7.2. ரூசா (நிலை 2.0)

ரூசாவின் இரண்டாம் நிலைத் திட்டம் 2018 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இதில் ரூ.615.78 கோடி மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் 66 கல்வி நிறுவனங்களுக்கு (ரூ.370.58 கோடி மத்திய அரசின் பங்காகவும் ரூ.245.20 கோடி மாநில அரசின் பங்காகவும்) உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் தர மேம்பாட்டிற்காகவும் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையில் ரூ.116.03 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. விடுவிக்கப்பட்ட தொகையில் ரூ.71.73 கோடி மத்திய அரசின் பங்களிப்பாகவும் மற்றும் ரூ.44.30 கோடி மாநில அரசின் பங்களிப்பாகவும் உள்ளது.

7.3. ஒப்புதல் அளிக்கப்பட்ட கூறுகள் ரூசா (நிலை 2.0)

7.3.1. கூறு 4. தேர்வு செய்யப்பட்ட மாநில பல்கலைக்கழகங்களின் தரம் மற்றும் தனிச்சிறப்பு மேம்பாடு

அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு தேசிய தர மதிப்பீட்டுக் குழுவின் புள்ளி 3.64 ஆக இருப்பதனால், இக்கூறின்கீழ் தேர்வு செய்யப்பட்டு, ரூ.100.00 கோடி நிதி ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதில் ரூ.40.00 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. மேலே ஒப்புதல் அளிக்கப்பட்ட ரூ.100.00 கோடியில் ரூ.15.00 கோடி தொழில் முனைவோர் மையத்திற்காகவும் ரூ.85.00 கோடி ஆராய்ச்சி, புத்தாக்கம், தரம் உயர்த்துதல் மற்றும் தனிச்சிறப்புக்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொழில் முனைவோர் மையம்மூலம் இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, காரைக்குடி, தேனி மற்றும் தூத்துக்குடி ஆகிய பகுதிகளில் உள்ள இளைஞர்களின் வேலைவாய்ப்புகள் மேம்படுவது உறுதி செய்யப்படும். மேலும் அழகப்பா பல்கலைக்கழகம், இந்நிதியின்மூலம் வெளிநாட்டுப்

2020 மார்ச் 12]

பல்கலைக்கழகங்களுடன் கூட்டாக இணைந்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. விடுவிப்பு செய்யப்பட்ட ரூ.40.00 கோடியில், ரூ.35.43 கோடி இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ளது.

7.3.2. கூறு 10. ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் தரம் உயர்த்துதல்

ரூ.300.00 கோடி நிதி, இக்கூறின்கீழ் தேர்வு செய்யப்பட்ட 6 மாநில பல்கலைக்கழகங்களான அண்ணா பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மற்றும் சென்னை பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களுக்கு தலா ரூ.50.00 கோடி வீதம் வழங்கப்படவுள்ளது. ஒப்பளிக்கப்பட்ட தொகையிலிருந்து ரூ.15.00 கோடியில் பல்கலைக்கழகத்தில் தொழில் முனைவோர் மையம் உருவாக்குவதற்கு ஒதுக்கப்பட்டு, ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் தலா ரூ.7.50 கோடி வீதம் விடுவிப்பு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு பல்கலைக்கழகமும் ரூ.35.00 கோடி நிதியை ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் தர மேம்பாட்டிற்கென ஒதுக்கியுள்ளது. மேற்கண்ட 6 பல்கலைக்கழகங்களும், அயல்நாட்டு பல்கலைக்கழகங்களுடன் இணைந்து முக்கிய பிரிவுகளில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளை முன்னெடுத்துள்ளன.

7.3.2.1. தொழில் முனைவோர் மையத்தின் செயல்பாடுகள்

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் 3.2.2019 அன்று 7 பல்கலைக்கழகங்களில் தொழில் முனைவோர் மையங்களைத் துவக்கி வைத்தார். இம்மையங்கள் அனைத்தும் இளம் பட்டதாரிகள் வேலைவாய்ப்புகளைப் பெறும் முறைகளை எளிதாக்கும் விதமாக செய்யப்படுகின்றன. மேலும், இந்தத் தொழில் முனைவோர் மையங்கள் மாணாக்கர்களை “வேலை தேடும் நிலையில்” இருந்து “வேலை வழங்கும் நிலைக்கு” உயர்த்தும். இதுவரை, மேற்படி பல்கலைக்கழகங்கள்மூலம் 130 திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டு, அதன்மூலம் 10,012 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

7.3.3. கூறு 3. பல்கலைக்கழகங்களுக்கான உள்கட்டமைப்பு நிதி

தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் சென்னை, தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம் ஆகிய ஒவ்வொன்றிற்கும் தமது உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தலா ரூ.20.00 கோடி வீதம் நிதி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் ரூ.10.00 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் இதுவரை ரூ.6.20 கோடி பயன்படுத்தப்பட்டுள்ளது. நடந்து முடிந்த 16 ஆம் திட்ட ஒப்புதல் குழுவின் கூட்டத்தில் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு இத்திட்டத்தின்கீழ் நிதி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

7.3.4. கூறுகள் 8,9,11 மற்றும் 13

- கூறு 8 இன்கீழ் 7 தன்னாட்சி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு அவற்றின் உயர்சிறப்பு மேம்பாட்டிற்காக ரூ.5.00 கோடி வீதம் ரூ.35.00 கோடி நிதி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- கூறு 9 இன்கீழ் தேசிய தர மதிப்பீட்டுப் புள்ளிகள் 2.5 ஆக கொண்டுள்ள 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.2.00 கோடி வீதம் ரூ.20 கோடிக்கு நிதி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 4 கல்லூரிகளுக்கு ரூ.1.00 கோடி வீதம் வழங்கப்பட்டு முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

- கூறு 11 இன்கீழ் மகளிர் விடுதி கட்டும் பொருட்டு இராணி அண்ணா அரசு கலைக் கல்லூரி, திருநெல்வேலி மற்றும் ஸ்ரீமீனாட்சி அரசு கலைக் கல்லூரி, மதுரை ஆகிய மகளிர் கல்லூரிகளுக்கு தலா ரூ.2.50 கோடி வீதம் ரூ.5.00 கோடி நிதி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையில் ரூ.1.25 கோடி வீதம் 2 கல்லூரிகளுக்கும் வழங்கப்பட்டு முழுவதுமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

- கூறு 13 இன்கீழ் ஆசிரியர்களின் திறன் மேம்பாட்டிற்காகப் பயிற்சி மையம் நிறுவ பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை ஆகிய 2 பல்கலைக்கழகங்களுக்கும் தலா ரூ.3.50 கோடி வீதம் ரூ.7.00 கோடி நிதி ஒப்புதல் அளிக்கப்பட்டு முதற்கட்டமாக

2020 மார்ச் 12]

தலா ரூ.1.75 கோடி வீதம் ரூ.3.50 கோடி இப்பல்கலைக்கழங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ரூசா திட்டம் மத்திய அரசின் ஆலோசனையுடன் கல்வி நிறுவனங்கள் தர அங்கீகாரம் பெறுவதற்கும், தன்னாட்சி நிலையினை அடைவதற்கும் ஊக்குவிக்கிறது.

8. அறிவியல் நகரம்

8.1. முன்னுரை

பள்ளி, கல்லூரி மாணாக்கர்களிடையேயும் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஆசிரியர்களிடையேயும் நவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியைப் பரவலாக்கும் நோக்கத்துடன் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் அறிவியல் நகரம் தோற்றுவிக்கப்பட்டது.

தன்நோக்கங்களை நிறைவேற்றிட அறிவியலாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் கல்வியாளர்களைக் கொண்டு பயிற்சிப்பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள் ஆகியவை அறிவியல் நகரத்தால் நடத்தப்பட்டு வருகின்றன.

8.2. 2019-2020 ஆம் ஆண்டில் அறிவியல் நகரத்தின் செயல்பாடுகள்

8.2.1. கோடைக்காலப் பயிற்சி முகாம்கள்

தமிழக அளவில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் இயற்பியல், வேதியியல், உயிரியல் மற்றும் கணிதவியல் துறைகளில் பயிலும் மாணாக்கர்களில், 75 சதவிகிதம் ஊரகப் பகுதிகளிலிருந்தும், மீதமுள்ள 25 சதவிகிதம் சென்னை மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலிருந்தும் தேர்வு செய்யப்பட்டு 2019 ஜுன் திங்கள் 21 நாட்கள் கோடைக்காலப் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. ஆய்வு மனப்பான்மையையும், அறிவியல் ஆர்வத்தினையும் உருவாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

8.2.2. அறிவியல் பட்டறைகள்

சென்னை மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் மூன்றாம்

ஆண்டு அறிவியல் பட்டப்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்காகத் "தாவரவியல்/விலங்கியல், உயிரி தொழில்நுட்பவியல் சார்ந்த ஆய்வக நுணுக்கங்கள்" பற்றிய பயிற்சி வகுப்புகள் அறிவியல் நகரத்தால் 2019 ஆகஸ்ட் திங்களில் நான்கு நாட்கள் நடத்தப்பட்டன.

8.2.3. அறிவியல் சொற்பொழிவுகளும் செயல்முறை விளக்கங்களும்

அரசு பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் அறிவியலை அடிப்படையாகக் கொண்ட சொற்பொழிவுகளும், செயல்முறை விளக்கங்களும் பல்வேறு துறைகளில் அறிவியல் நகரத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு 14.10.2019 முதல் 31.10.2019 வரை ஆறு அரசு பள்ளிகளில் 13 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

8.2.4. அடிப்படை அறிவியலுக்கான தேசிய கருத்தரங்குகள்

அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் முதுநிலை பட்டப்படிப்புப் பயிலும் மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில், சுற்றுச்சூழலியல், தாவரவியல், இயற்பியல், வேதியியல், உயிரியல் ஆகிய துறைகளில் தொடர்ச்சியாக 5 கருத்தரங்குகள் நவம்பர் 2019 இல் 5 நாட்கள், ஒவ்வொரு துறையின் கீழும் ஒரு நிகழ்ச்சி என அறிவியல் நகரத்தால் நடத்தப்பட்டன. இதில் 900 முதுநிலை பட்டப்படிப்பு மாணாக்கர்கள் பங்கு பெற்று பயனடைந்தனர்.

8.2.5. விருதுகள்

அ. அறிவியல் அறிஞர் விருதுகள்

பல்வேறு அறிவியல் துறைகளில் சிறந்த சாதனை புரிந்த அறிவியலாளர்கள் தேர்வு செய்யப்பட்டு "தமிழ்நாடு அறிவியல் வாழ்நாள் சாதனையாளர் விருது", "தமிழ்நாடு அறிவியல் மூதறிஞர் விருது", "தமிழ்நாடு அறிவியல் இளம் அறிஞர் விருது" ஆகியவை வழங்கப்பட்டு அறிவியலாளர்கள் சிறப்பிக்கப்படுகின்றனர். தங்களது துறை சார்ந்த ஆராய்ச்சியில் தலை சிறந்து விளங்கும் அறிவியலாளர்கள் இவ்விருதுக்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

ஆ. சிறந்த அறிவியல் ஆசிரியர் விருதுகள்

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் மாணாக்கர்களை அறிவியலில் வழிகாட்டி, ஊக்குவித்துச் சிறப்பாகப் பணிபுரியும்

2020 மார்ச் 12]

அறிவியல் ஆசிரியர்களுக்குச் "சிறந்த அறிவியல் ஆசிரியர் விருதுகள்" வழங்கப்பட உள்ளன.

இ. ஊரகக் கண்டுபிடிப்பாளர் விருது

தமிழ்நாட்டில் ஊரகப் பகுதியில் வாழ்வோரின் தனித்துவமான புதிய கண்டுபிடிப்பிற்காக "ஊரகக் கண்டுபிடிப்பாளர் விருது" வழங்கப்படவுள்ளன. சமூக மேம்பாட்டிற்காகப் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்க ஊரக அறிவியலாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு இந்த விருது வழங்கப்படுகிறது.

மேற்கண்ட மூன்று விருதுகளும் "சென்னை அறிவியல் திருவிழா 2020" நிகழ்வின்போது வழங்கப்படவுள்ளன.

8.2.6. தமிழகத்தின் பள்ளி, கல்லூரி மாணாக்கர்கள் மற்றும் பொதுமக்களிடையே அறிவியல் பற்றிய விழிப்புணர்வை வலுவாகப் பரவச்செய்ய "எங்கும் அறிவியல்" என்ற பெயரில் அறிவியல் மாத இதழினை அறிவியல் நகரம் தமிழில் வெளியிட உள்ளது.

8.2.7. தமிழக அளவில் பல்வேறு அறிவியல் தளங்களில் பங்களிப்பு செய்கின்ற ஆற்றல் மிகுந்த அறிவியலாளர்களைக் கண்டறிந்து அவர்களுடைய விவரக் குறிப்புகளைப் பெற்று, அறிவியலாளர்களின் விவரங்கள் அடங்கிய கையேடு ஒன்று தயாரித்து அறிவியல் நகர இணையதளத்தில் விரைவில் பதிவேற்றம் செய்யப்படவுள்ளது.

8.2.8. சென்னை அறிவியல் திருவிழா 2020

சென்னை அறிவியல் திருவிழா 2008 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகிறது. பெரியளவிலான அறிவியல் கண்காட்சி, புகழ்வாய்ந்த சொற்பொழிவுகள், குழு விவாதங்கள், அறிவியல் சார்ந்த போட்டிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய நிகழ்வாக சென்னை அறிவியல் திருவிழா உள்ளது. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளைச் சார்ந்த மாணாக்கர்கள் உட்பட சுமார்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

5000-க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் வருகை புரியும் வகையில் தொடர்ந்து நான்கு நாட்களுக்கு இவ்விழா நடத்தப்படும்.

8.2.9. மாநிலத் திட்டக் குழுவால் 2019-2020, 2020-2021 மற்றும் 2021-2022 ஆண்டுகளுக்காக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள திட்டங்கள்

1. அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் 200 பள்ளிகளில் "அறிவியல் கண்டுபிடிப்பாளர் மையம்" உருவாக்குதல்

2. 200 அறிவியல் கண்டுபிடிப்பாளர் மையத்திலிருந்து சிறந்த கண்டுபிடிப்பாளர்களைத் தேர்ந்தெடுத்து "தமிழ்நாடு மாணாக்கர்கள் அறிவியல் மாநாடு" நடத்துதல்.

3. இயற்பியல்,வேதியியல்,உயிரியல்,கணிதம்,சுற்றுச்சூழலியல், புவிஅறிவியல் ஆகிய ஆறு துறைகளில் முதுகலை முதலாம் ஆண்டு பயிலும் கல்லூரி, பல்கலைக்கழக மாணாக்கர்களுக்குக் கோடைக்காலப் பயிற்சி முகாம்கள் நடத்துதல்.

9. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்

9.1. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், 1983 ஆம் ஆண்டு தமிழக அரசால் ஒரு தன்னாட்சி நிறுவனமாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், அறிவியல், தொழில்நுட்பக் கருத்துகளை பொதுமக்கள் மற்றும் மாணாக்கரிடையே கொண்டு செல்வதை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. 1988 ஆம் ஆண்டு சென்னையில் பி.எம். பிர்லா கோளரங்கம் நிறுவப்பட்டது. தமிழ்நாடு அறிவியல், தொழில்நுட்ப மையமானது தமிழகத்தில் 4 அறிவியல் மையங்களை நிறுவியுள்ளது. 1990 ஆம் ஆண்டு, சென்னையில் எட்டுத் தலைப்புகளில், அறிவியல் தொழில்நுட்ப காட்சிக் கூடங்களைக் கொண்ட பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம் நிறுவப்பட்டது. 1999 ஆம் ஆண்டு அண்ணா அறிவியல் மையம்—கோளரங்கம் திருச்சிராப்பள்ளியில் நிறுவப்பட்டது. 2011 ஆம் ஆண்டு வேலூரில் மாவட்ட அறிவியல் மையம் நிறுவப்பட்டது. 2013 ஆம் ஆண்டு, மத்திய அரசின் பண்பாட்டு அமைச்சகத்தின்கீழ்

2020 மார்ச் 12]

இயங்கும் தேசிய அறிவியல் அருங்காட்சியக மன்றத்துடன் இணைந்து, 4 காட்சிக் கூடங்களுடன் கூடிய மண்டல அறிவியல் மையம் கோயம்புத்தூரில் நிறுவப்பட்டது.

9.2. 2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டுகளில் மையத்தின் செயல்பாடுகள்

9.2.1. அறிவியல் சார்ந்து எழுதும் பயிலரங்கு நடத்துதல்

- *இளம் அறிவியல் ஆராய்ச்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் பொருட்டு, மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறையுடன் இணைந்து அறிவியல் எழுத்தாளர் பயிலரங்கமானது 2018 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.*

- *இத்திட்டத்தின்கீழ், அறிவியல் ஆராய்ச்சி படிப்புகளில் ஈடுபட்டு வரும் மாணாக்கர்களும், உயர் ஆராய்ச்சி பயிலும் மாணாக்கர்களும், தேசிய அளவிலான அறிவியல் கட்டுரைப் போட்டிகளில் பங்கு பெற ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். போட்டியில் வெற்றிபெறும் முதல் 100 மாணாக்கர்களுக்கு தலா ரூ.10,000/- மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது. மேலும் தேசிய அளவில் முதல் மூன்று இடத்தைப் பிடித்தவர்களுக்கு முறையே ரூ.1,00,000/-, ரூ.50,000/- மற்றும் ரூ.25,000/- வழங்கப்படுகிறது.*

9.2.2. சகுரா மாணவர் பரிமாற்றத் திட்டம்

- *ஜப்பானிய அரசின் அழைப்பின்படி, சகுரா மாணவர் பரிமாற்ற திட்டத்தின்கீழ், ஆண்டுதோறும் டெல்லியில் நடக்கும் தேசிய அளவிலான புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதுகளைப் பெற்ற மாணாக்கர்கள் ஜப்பான் நாட்டு அறிவியல் ஆய்வுக் கூடங்களைப் பார்க்கும் வாய்ப்பினைப் பெறுவர்.*

- *இதுவரை இந்த மாணவர் பரிமாற்ற திட்டத்தின்கீழ், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மைய உதவியுடன் தமிழ்நாட்டிலிருந்து 15 மாணாக்கர்கள் ஜப்பான் நாட்டிற்குச் சென்று வந்துள்ளனர்.*

- *இந்த மாணவர் பரிமாற்ற திட்டத்தின்கீழ், திண்டுக்கல் மாவட்டம் சின்னாளப்பட்டியைச் சேர்ந்த மாணவன், 2019 ஆம்*

[2020 மார்ச் 12

ஆண்டு ஏப்ரல் மாதம் ஜப்பான் நாட்டு அறிவியல் ஆய்வுக் கூடங்களை சுற்றிப்பார்த்துவிட்டு வந்துள்ளார். 2020 ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவி ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

9.2.3. மாநில அளவிலான அறிவியல் திறனறிதேர்வு

ஆண்டுதோறும் தேசிய அறிவியல் தினத்தைக் கொண்டாடும் விதமாக தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் தமிழிலும் ஆங்கிலத்திலும் அறிவியல் திறனறி தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட எட்டாம் வகுப்பு மற்றும் ஒன்பதாம் வகுப்பைச் சேர்ந்த பள்ளி மாணாக்கர்கள், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நவம்பர் மாதத்தில் நடத்தப்பட்ட திறனறி தேர்வில், கலந்து கொண்டனர். அதில் வெற்றி பெற்ற மாணாக்கர்களுக்கு தேசிய அறிவியல் தினத்தில் புத்தகங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

9.3. 2019-2020 ஆம் ஆண்டுக்கான செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள்

9.3.1. சென்னை, பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் அரைக்கோள வடிவக் கூரையுடன் புதிய எண்ணிலக்கக் கோளரங்கம் நிறுவுதல்

வான் பொருட்களின் படங்களையும் வானவியல் நிகழ்வுகளையும் வியப்பிலாழ்த்தும் வண்ணம் அழகிய இயக்கப்படங்கள் வாயிலாகக் காட்ட மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் எண்ணிலக்கக் கோளரங்கம் ரூ.10.00 கோடி செலவில் அமைக்கப்பட்டது. இந்த ஒன்றிணைந்த எண்ணிலக்கக் கோளரங்கம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 19.11.2019 அன்று திறந்து வைக்கப்பட்டது.

9.3.2. சென்னை, பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் கோளத்தில் அறிவியல் கருவி அமைத்தல்

கோள வடிவிலான திரையில், பார்வையாளர்களைக் கவரும் வண்ணம் உலகளாவிய தட்பவெப்ப மாறுபாடு, காற்றின்

2020 மார்ச் 12]

திசைகள், வெப்ப மாறுதல்கள் போன்றவற்றை சிறப்பாக விளக்குவதற்கு, "கோளத்தில் அறிவியல்" எனும் கருவி ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வசதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 19.11.2019 அன்று திறந்து வைக்கப்பட்டது.

9.3.3. கங்கண சூரிய கிரகணம்-அறிவியல் ஆர்வலர்களுக்கான பயிலரங்கு மற்றும் பொதுமக்கள் கண்டுகளிக்கும் விதமான நிகழ்ச்சி ஏற்பாடு

2019 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் நாள் ஓர் அரிய வானியல் நிகழ்வான "கங்கண சூரிய கிரகணம்" தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் காணத்தக்க வகையில் நிகழ்ந்தது. இந்த நிகழ்வுக்கு முன்னர், மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறையின் ஒரு அங்கமாக இருக்கும் விஞ்ஞான் பிரசார் நிறுவனத்துடன் இணைந்து அறிவியல் தொடர்பாளர்கள் மற்றும் பயிற்றுநர்களுக்கான இரண்டு நாள் கருத்தரங்கங்கள் மதுரை, உடுமலைப்பேட்டை, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்டன. மேலும் உதகமண்டலம், கோயம்புத்தூர், திருப்பூர், தருமபுரி, ஈரோடு, கரூர், திண்டுக்கல், சிவகங்கை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மாவட்டங்களில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியப் பெருமக்களுக்கு "கங்கண சூரிய கிரகணத்தை பாதுகாப்பாக பார்ப்பது" என்பது பற்றி ஒரு நாள் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டன. மேலும் அந்தக் கல்லூரிகளுக்கு தொலைநோக்கிகள், சூரியகண்ணாடிகள், பற்றவைப்பாளர் கண்ணாடிகள், கிரகணத்தைப் பார்ப்பதற்காக சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கிரகணமரகருவி, நுண்துளை புகைப்படக்கருவி போன்றவை வழங்கப்பட்டன. சென்னையில் பி.எம். பிர்லா கோளரங்க வளாகத்தில் சுமார் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கங்கண சூரிய கிரகண நிகழ்வினை பாதுகாப்பாகவும் தொலைநோக்கிகள் மூலமும் கண்டுகளித்தனர்.

[2020 மார்ச் 12

9.3.4. கோயம்புத்தூர் மண்டல அறிவியல் மையம் மற்றும் திருச்சிராப்பள்ளி அண்ணா அறிவியல் மையம் ஆகியவற்றில் புத்தாக்க மையம் அமைத்தல்

இளம் மாணாக்கர்களிடையேயான அறிவியல் அறிவினை ஊக்குவிப்பது மற்றும் புத்தாக்க அறிவியல் கருத்துகள்பால் அவர்களை ஈர்ப்பதுவுமே புத்தாக்க மையத்தின் நோக்கமாகும். மாணவர்கள் ஆய்வுகளை செய்து பார்த்து புதுமைப் படைப்புகளை உருவாக்க ஆய்வுக் கருவிகள் இங்கு அமைக்கப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் மண்டல அறிவியல் மையத்தில் சுமார் ரூ.1.80 கோடி செலவில் புதிய கட்டடத்துடன்கூடிய புத்தாக்க மையம் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் திருச்சிராப்பள்ளி அண்ணா அறிவியல் மையத்தில் ரூ. 1.50 கோடி செலவில் பொதுப் பணித் துறை (தொழில்நுட்பக் கல்விப் பிரிவு)மூலம் 3000 சதுர அடியில் புத்தாக்க மையக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்கள், மத்திய அரசின் தேசிய அறிவியல் அருங்காட்சியக மன்றம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையமும் இணைந்து 50:50 என்ற அளவில் நிதி பகிர்வு முறையில் நிறைவேற்றப்பட்டு, இந்த ஆண்டு திறந்து வைக்கப்படவுள்ளது.

9.3.5. மானக் புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதுத் திட்டம்

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறை மற்றும் தேசிய புத்தாக்க ஆய்வு நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து தமிழகத்தில் பள்ளிக் கல்வித் துறை உதவியுடன் மானக் (MANAK—Million Minds Augmenting National Aspiration and knowledge) புத்தாக்க ஆய்வு உதவித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. அறிவியல் ஆய்வுகளில் மாணாக்கர்கள் ஈடுபட ஊக்கப்படுத்துவது தேசிய அளவிலான இத்திட்டத்தின் நோக்கமாகும். தற்பொழுது இத்திட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு மாணவருக்கும் அவருடைய அறிவியல் கண்டுபிடிப்பு மாதிரிகளை செய்ய, வடிவமைக்க, உருவாக்க என்று ரூ.10,000/- வழங்கப்பட்டு வருகிறது. கடந்த பத்தாண்டுகளில் தமிழகத்தில் இருந்து 80,244 மாணவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 12]

2019-2020 ஆம் ஆண்டு தமிழகம் முழுவதும் மாநில அளவில் 2,302 மாணவர்கள் இந்திய அறிவியல் தொழில்நுட்பத் துறை மற்றும் தேசிய புத்தாக்க நிறுவனம்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்காக 2019 ஜனவரி மாதம் மாவட்ட அளவிலான போட்டி நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. இதில் 306 மாணாக்கர்கள் மாநில அளவிலான போட்டிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மாநில அளவிலான போட்டி, வரும் 2020 ஏப்ரல் மாதம் நடத்தப்படவுள்ளது. வெற்றி பெற்ற மாணாக்கர்கள் புதுதில்லியில் நடைபெறும் தேசிய அளவிலான கண்காட்சி மற்றும் திட்டப் போட்டியில் பங்குபெறுவர்.

9.3.6. தமிழ்வழி அறிவியல் தொடர்பு முன்னெடுப்பு (அறிவியல் பலகை திட்டம்)

அறிவியல் கருத்துக்களை எளிதாக தமிழ் மொழிமூலம் பரப்புவதற்கென தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், மத்திய அரசின் துணை நிறுவனமான விஞ்ஞான் பிரசாருடன் இணைந்து சென்னையில் "தமிழில் அறிவியல்—அறிவியல் தொடர்பு பரப்புரை விரிவாக்கதளம்" என்ற தலைப்பில் 2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இரண்டு நாள் கருத்தரங்கு நடத்தியது. இந்த அறிவியல் கருத்தரங்கில் சுமார் 200 முன்னணி அறிவியல் வல்லுனர்கள், அறிவியல் தொடர்பாளர்கள், ஊடகவியலாளர்கள், புத்தகப் பதிப்பாளர்கள் என்று பலர் கலந்து கொண்டனர். இதற்காக அறிவியல் பலகை என்ற பெயரில் அறிவியல் செய்தி மலர் மாதந்தோறும் வெளியிடவும், மேலும் சுமார் 20 அறிவியல் புத்தகங்களை, மொழிப்பெயர்ப்பு செய்து வெளியிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கென விஞ்ஞான் பிரசார் நிறுவனம் ரூ.10.30 இலட்சம் நிதி உதவி வழங்கியது.

9.3.7. மாநில அளவிலான கணிதத் திறனறி தேர்வு

கணிதவியல் கருத்துக்களை மாணாக்கர்கள் கற்பதை ஊக்குவிக்க ஒரு மாநில அளவிலான கணிதத் திறனறி தேர்வு ஜனவரி 2020 இல் 5 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்காக நடத்தப்பட்டது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் 11,000—க்கும் மேற்பட்ட மாணாக்கர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொண்டனர். வெற்றி பெற்றவர்களுக்கு

பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும். இதைப் போலவே, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளிலும் ஆண்டுதோறும் சுமார் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மாணாக்கர்கள் இத்திறனறித் தேர்வில் கலந்து கொண்டனர்.

9.3.8. 'தண்ணீர் தகவல்கள்' கண்காட்சி அமைப்பு

'தண்ணீர் தகவல்கள்' என்ற தலைப்பில், சென்னை அமெரிக்கத் துணைத் தூதரகம், அமெரிக்க நாட்டின் ஸ்மித்சானியன் (Smithsonian) நிறுவனம் மற்றும் சென்னை கேர் எர்த் அறக்கட்டளை ஆகியவற்றுடன் இணைந்து தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் ஒரு கண்காட்சியினை நடத்தியது. இந்தக் கண்காட்சி 10.2.2020 அன்று துவக்கி வைக்கப்பட்டது. தண்ணீர் தகவல்கள் கண்காட்சி நீர் மேலாண்மை செயல்பாடுகளைப் பற்றிய செய்திகளை விளக்கும் வகையில் செயல்முறைக் காட்சிப் பொருட்கள் மற்றும் 50—க்கும் மேற்பட்ட தகவல் பலகைகளுடன் 300 சதுர மீட்டர் பரப்பில் அமைக்கப்பட்டது. இந்தக் கண்காட்சி நீரைப் பற்றிய முக்கிய செய்திகளை இளம் மாணாக்கர்கள் கற்க ஊக்குவிக்கும் வகையில் அமைந்தது.

9.3.9. கன்னியாகுமரியில் அறிவியல் மையம் நிறுவுதல்

கன்னியாகுமரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலுள்ள பொதுமக்கள் பயனடையும் வகையில் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையத்தால் ஒரு அறிவியல் மையம் கன்னியாகுமரியில் நிறுவப்படவுள்ளது. இந்த அறிவியல் மையம் நிறுவத் தேவையான மதிப்பீட்டுத் தொகை ரூ.15.20 கோடி ஆகும். இத்திட்டத்திற்கான மூலதனத் தொகை தமிழக அரசாலும், மத்திய அரசின் பண்பாட்டு அமைச்சகத்தாலும் 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்ளப்படும். இதற்கு மத்திய அரசின் பண்பாட்டு அமைச்சகத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இந்த ஆண்டு அறிவியல் மையம் அமைக்கும் பணிகள் துவங்கவுள்ளன.

10. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்

10.1. நமது மாநிலத்தின் அறிவியல் துறைகளின் ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்காக 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு அறிவியல்

2020 மார்ச் 12]

தொழில்நுட்ப மாநில மன்றம், தமிழக அரசால் ஒரு தன்னாட்சி பெற்ற தலைமை நிறுவனமாக அமைக்கப்பட்டது. அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிக்க ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, களப்பணிகள் சார்ந்த பல அறிவியல் தொழில்நுட்ப திட்டங்களை இம்மன்றம் நிறைவேற்றி வருகிறது.

2019-2020 ஆம் ஆண்டில் தமிழக அரசால் இம்மன்றத்திற்கு ரூ.3.52 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும், மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறையிலிருந்து ரூ.4.16 கோடி நிதியுதவி நிருவாகம் மற்றும் குறிப்பிட்ட அறிவியல் தொழில்நுட்பத் திட்டங்களுக்காக பெறப்பட்டது. இதன்மூலம் மன்றத்தின் பல்வேறு அறிவியல் தொழில்நுட்பத் திட்டங்கள், விவசாயிகள், மாணாக்கர்கள், அறிவியலாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் பொதுமக்கள் பயனடையும் வகையில் செம்மையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

10.2. மாணவர் ஆராய்ச்சித் திட்டம்

மாணாக்கர்களிடையே இருக்கும் அபரிமிதமான திறமைகளை அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்குப் பயன்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பில் இறுதியாண்டில் பயின்றுவரும் பொறியியல் மாணாக்கர்களுக்கும் மற்றும் அறிவியல் தொழில்நுட்பவியல், மருத்துவயியல், வேளாண்மையியல், கால்நடை மருத்துவயியல், சமூகவியல், போன்ற துறைகளில் முதுநிலை பட்டப்படிப்பில் இறுதியாண்டில் பயின்றுவரும் மாணாக்கர்களுக்கும் ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கு அதிகபட்சமாக ரூ. 10,000/- வரை நிதி உதவி வழங்கப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டு ரூ.53.68 இலட்சம் செலவில் 722 மாணவர் ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவியளிக்கப்பட்டு, நமது மாநிலத்தின் 1,700 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர். மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறையானது இத்திட்டத்திற்காக ரூ.89.76 இலட்சம் நிதியை 2017-2018 ஆம் ஆண்டு முதல் மூன்றாண்டு காலத்திற்கு வழங்கியுள்ளது.

10.3. தொழில்நுட்பப் பரவலாக்கல் திட்டம்

மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறை, கிராம நகர இணைப்புக்காக தொழில்நுட்பம் பரவலாக்கம் ஆராய்ச்சி மற்றும் வாழ்வாதாரம் எனும் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு 2017-2018 ஆம் ஆண்டு முதல் மூன்றாண்டு காலத்திற்கு ரூ.5.00 கோடியை வழங்கியுள்ளது. இத்திட்டம் குளிர்பதன கிடங்கு, நிழற்கூடம் (Poly house), காளாண் வளர்ப்பு மற்றும் கழிவிலிருந்து ஆற்றல் உற்பத்தி என நான்கு தொழில்நுட்ப பரவலாக்களை உள்ளடக்கியது. மாணாக்கர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் இம்மையங்கள் ஏற்படுத்தப்படும். மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, ஒருங்கிணைந்த சூரிய மற்றும் காற்றாலைமூலம் பசுமை மின்னுற்பத்தி எனும் திட்டத்திற்காக ரூ.1.94 கோடியை 2019—2020 ஆம் ஆண்டு முதல் இரண்டாண்டு காலத்திற்கு மூன்று இடங்களில் செயல்படுத்த நிதியுதவி வழங்கியுள்ளது.

10.4. அறிவியல் தொழில்நுட்ப ஆய்வுத் திட்டங்கள்

இத்திட்டத்தின் நோக்கம் நமது மாநிலத்திற்கு பயனுள்ள ஆய்வுத் திட்டங்களை மேற்கொள்ள அறிவியலாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களை ஊக்குவிப்பதாகும். இத்திட்டத்தின்கீழ் வேளாண்மை, உயிரியல், சுற்றுப்புறச் சூழல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பம், மருத்துவவியல், இயற்பியல், சமூகவியல் மற்றும் கால்நடை அறிவியல் போன்ற பிரிவுகளில் ஆய்வுகள் மேற்கொள்ள அறிவியலறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டு ரூ.35.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 14 ஆய்வுத் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2020-2021 ஆம் ஆண்டில் மேலும் 15 ஆய்வுத் திட்டங்களுக்கு ரூ.35.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படவுள்ளது. மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறையால், ஆராய்ச்சித் திட்டங்களுக்கான நிதியாக 2018—2019 ஆம் ஆண்டில் 25 ஆராய்ச்சித் திட்டங்களுக்கு ரூ.50.00 இலட்சம் வழங்கியுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.1.00 கோடி பெறப்பட்டு புதிய திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

2020 மார்ச் 12]

10.5. இளம் மாணவ அறிவியலறிஞர்கள் செயல் திட்டம்

இத்திட்டத்தின் நோக்கம், 9 ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களை பள்ளிப் பருவத்திலேயே அறிவியல் மற்றும் ஆராய்ச்சித் துறையை நோக்கி ஈர்ப்பதாகும். மாவட்டந்தோறும் 40 மாணவர்கள் இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு, கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்தில் திறமை வாய்ந்த பேராசிரியர்களால் பல்வேறு அறிவியல் தொழில்நுட்பங்கள் குறித்து சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 16 மாவட்டங்களிலிருந்து 640 மாணாக்கர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

10.6. இளம் அறிவியலறிஞர்களுக்கு ஆதரவு ஊதியம் அளித்தல்

இத்திட்டத்தின் நோக்கம் ஆய்வாளர்கள் தமது துறையில் புதிய ஆய்வு மற்றும் தொழில்நுட்பங்களைக் கற்றுக் கொள்வது ஆகும். 40 வயதுக்குட்பட்ட இளம் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொழில்நுட்பங்களின் நுணுக்கங்களை நன்கு கற்றுக் கொள்வதற்காக, பிற மாநில ஆராய்ச்சி மைய முதுநிலை அறிவியலறிஞருடன் சேர்ந்து ஆராய்ச்சி செய்யவும், அதிநவீன கருவிகளின் செயல்முறை தொழில்நுட்பத்தைக் கற்றுக் கொள்ளவும் இத்திட்டத்தின் வாயிலாக ஊக்கப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி, இவர்களுக்கு ரூ.10,000/- இரண்டு முதல் ஆறு மாதங்களுக்கு ஊக்கத் தொகையாக ஏற்கெனவே அவர்கள் பணிபுரியும் தாயக நிறுவனங்களில் பெற்றுவரும் மாதச் சம்பளத்துடன் கூடுதலாக வழங்கப்படும். 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.3.00 இலட்சம் செலவில் 12 ஆராய்ச்சியாளர்கள் பயன்பெறும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

10.7. கருத்தரங்கு, அறிவியல் மாநாடு மற்றும் பயிற்சிப் பட்டறை நடத்துவதற்கு பகுதி நிதியுதவி அளித்தல்

நமது மாநிலத்திலுள்ள கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு அறிவியல் ஆய்வு குறித்து, கலந்துரையாடவும், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் நடத்தவும் பகுதி நிதியுதவி வழங்கப்படுகிறது. 2018-2019 ஆம் ஆண்டில் அறிவியல் கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் நடத்த

நிதியுதவி ரூ.10.00 இலட்சத்திலிருந்து ரூ.25.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டதன்மூலம் 125 நிகழ்வுகளுக்கு 9500 பயனாளிகள் பயனடையும் வகையில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது. 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.25.00 இலட்சம் செலவில் 9,500 மாணாக்கர்கள் பயனடையும் வகையில் 125 நிகழ்வுகளுக்கு நிதியுதவி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

10.8. அறிவியல் தொழில்நுட்பத்தைப் பரப்புதல்

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை பொது மக்களிடையே பரப்புவது இத்திட்டத்தின் நோக்கமாகும். அறிவியல் கண்காட்சிகள், பயிற்சி முகாம்கள், விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், அரசு சாரா தன்னார்வ அமைப்புகளுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சம் செலவில் 56 நிறுவனங்களுக்கு 4,500 பேர் பயனடையும் வகையில் இம்மன்றத்தால் நிதியுதவி அளிக்கப்பட்டது.

10.9. இளம் அறிவியலறிஞர்களுக்கு பயண நிதி உதவி அளித்தல்

இத்திட்டத்தின் வாயிலாக இளம் அறிவியலறிஞர்கள் தாம் செய்த ஆராய்ச்சிகளின் முடிவுகளை பன்னாட்டு மற்றும் உள்நாட்டு கருத்தரங்குகளில் பகிர்ந்துகொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள். இதன்படி பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், ஆராய்ச்சி மையங்களில் பணிபுரிந்து வரும் 40 வயதிற்குக்கீழ் உள்ள இளம் அறிவியலறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள், பன்னாட்டு மாநாடுகளில் கலந்துகொள்வதற்குத் தேவையான விமான பயணத்தொகையில் 50 விழுக்காடு வரை நிதி உதவியும் மற்றும் அத்தகைய தேசிய அளவிலான மாநாடுகளில் பங்குகொள்வதற்கு 100 விழுக்காடு இரயில் பயணக்கட்டணமும் நிதி உதவியாக வழங்கப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் 10 அறிவியலறிஞர்கள் பயனடையும் வகையில் ரூ.2.50 இலட்சம் நிதியுதவி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2020 மார்ச் 12]

10.10. அறிவியல் தொழில்நுட்ப வெளியீடுகளுக்கு நிதியுதவி அளித்தல்

அறிவியல் தொழில்நுட்ப வெளியீடுகளை தமிழில் வெளிக்கொணர்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் பள்ளி, கல்லூரி மாணாக்கர்கள் மற்றும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் நிறுவனங்கள், அறிவியலறிஞர்கள் மற்றும் ஆசிரியர்கள் போன்றோரை தமிழில் அறிவியல் வெளியீடுகளை வெளிக்கொணர ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. இதன் வாயிலாக அறிவியல் தொழில்நுட்ப பயன்கள் மாணாக்கர்கள் மற்றும் மக்களிடையே சென்றடையும். 2018—2019 ஆம் ஆண்டில் அறிவியல் தொழில்நுட்ப வெளியீடுகளுக்கு நிதியுதவி அளித்தல் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.0.50 இலட்சத்திலிருந்து ரூ.3.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டதன்மூலம், சுமார் 15 வெளியீடுகளுக்கு உதவிட வகை செய்யப்பட்டது. 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.3.00 இலட்சம் செலவில் 15 அறிவியல் வெளியீடுகளுக்கு நிதியுதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

10.11. தமிழக அறிவியலறிஞர்கள் விருது

நமது மாநிலத்தில் குறிப்பிடத்தக்க அளவில் பணிகள் செய்த அறிவியலாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களை ஊக்கப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். ‘தமிழக அறிவியலறிஞர்கள் விருது’ ரூ.50,000/— ரொக்கமும், சான்றிதழும் கொண்டதாகும். 1) வேளாண்மை 2) உயிரியல் 3) வேதியியல் 4) பொறியியல் தொழில்நுட்பம் 5) சுற்றுப்புறச் சூழலியல் 6) மருத்துவம் 7) கணிதவியல் 8) இயற்பியல் 9) சமூகவியல் 10) கால்நடை மருத்துவவியல் போன்ற துறைகளில் இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன. 2019—2020 ஆம் ஆண்டில் ரூ.7.00 இலட்சம் செலவில் 10 அறிவியலாளர்களை தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

10.12. அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

இத்திட்டத்தின் நோக்கம் நமது மாநிலத்தில் உள்ள சுயஉதவிக் குழுக்கள், விவசாயிகள் மற்றும் மாணாக்கர்களிடையே இயற்கை முறை நிகழ்வுகளான மண்புழு உரம், கடற்பாசி, மதிப்பு கூட்டப்பட்ட தானிய பொருள்கள் மற்றும் இயற்கை முறையில் தயாரித்த தூய்மை பொருள்கள் தொடர்பாக அறிவியல் விழிப்புணர்வு ஏற்படுத்துவதாகும். 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.6.50 இலட்சம் செலவில் 1,750 மக்கள் பயனடையும் வகையில் 10 மாவட்டங்களில் 10 நிகழ்வுகளை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

10.13. கிராமப்புற பள்ளிகளில் அறிவியல் கல்வியின் தரத்தை உயர்த்துதல்

ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை அறிவியல் பாடங்களை நடத்தும் பள்ளி ஆசிரியர்களுக்கு தற்போதைய அறிவியல் பாடத்திட்டத்திற்கேற்ப தங்களின் திறமையை மேம்படுத்த உதவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் 5 நாட்களுக்கு செய்முறை விளக்கங்களோடு பயிற்சி அளிக்கப்படுகிறது. 2019—2020 ஆம் ஆண்டில் ரூ.9.00 இலட்சம் செலவில் 500 ஆசிரியர்கள் பயனடையும் வகையில் 10 மாவட்டங்களில் 10 நிகழ்வுகளை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

10.14. புதுமைத் தொழில்நுட்பங்களை பரவலாக்குதல்

இத்திட்டத்தின் நோக்கம், நமது மாநிலத்தின் பல்வேறு தரப்பினருக்கு தேவையான வாழ்வாதார திறன்களை அறிவியல் தொழில்நுட்ப பயிற்சிகளின்மூலம் வழங்குவதாகும். 2019—2020 ஆம் ஆண்டில் ரூ.9.00 இலட்சம் செலவில் 480 மக்கள் பயன்பெற 18 பயிற்சிகள் நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

10.15. கிராமப்புற மேம்பாட்டிற்கு அறிவியல் தொழில்நுட்பங்களின் பயன்பாடு

அறிவியல் தொழில்நுட்பங்கள் மற்றும் கண்டுபிடிப்புகளின் பயன்களை தேர்ந்தெடுக்கப்பட்ட கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள்மூலம் கிராமப்புற மக்களுக்கு எளிதில் கொண்டு

2020 மார்ச் 12]

சேர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சம் செலவில் 4000 மக்கள் பயனடையும் வகையில் 10 மாவட்டங்களில் 10 திட்டங்கள் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

10.16. தொழில் துறைக்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப திறன் வளர்த்தல்

இறுதியாண்டு பட்டய மற்றும் பொறியியல் பயிலும் மாணாக்கர்களின் திறமைகளை தொழில் துறைக்கேற்றவாறு மேம்படுத்துவதும், அவர்கள் தாங்களாகவே சுயதொழில் தொடங்குவதற்கு ஊக்குவிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். தொழிற்சாலைகள் மற்றும் கல்லூரிகள் (பலவகை தொழில்நுட்ப கல்லூரிகள் உட்பட) இணைந்து இப்பயிற்சியினை அளிக்கின்றன. 2018-2019 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டினை ரூ.10.00 இலட்சத்திலிருந்து ரூ.22.50 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டதன்மூலம் 15 நிகழ்வுகளுக்கு 4,500 மாணாக்கர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன்படி 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.22.50 இலட்சம் செலவில் 4,500 மாணாக்கர்கள் பயனடையும் வகையில் 15 மாவட்டங்களில் 15 பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

10.17. கல்லூரிகளின் ஆய்வு மாணாக்கர்களுக்கான அறிவியல் ஆய்வு நிதியுதவி பற்றாக்குறையை களையும் திட்டம்

இத்திட்டத்தின் நோக்கம் நிதியுதவி ஏதும் பெறாத கல்லூரி ஆய்வு மாணாக்கர்கள் தங்களின் ஆய்வுத் திட்டங்களை மேற்கொள்வதற்கு நிதியுதவி செய்வதாகும். இதன்படி ஆய்வுத் திட்ட வரைவுகளை பல்வேறு கல்லூரி ஆய்வு மாணாக்கர்களிடமிருந்து பெற்று, அவற்றுள் தேர்வு செய்யப்பட்ட ஆய்வுத் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. 2018-2019 ஆம் ஆண்டில் கல்லூரிகளில் பயிலும் ஆய்வு மாணாக்கர்கள் பயனடையும் ஆய்வு நிதியுதவி திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டினை ரூ.15.00 இலட்சத்திலிருந்து ரூ.30.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டதன்மூலம் 5 ஆய்வு மாணாக்கர்களுக்குப் பதிலாக 10 ஆய்வு மாணாக்கர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது.

2019-2020 ஆம் ஆண்டில் ரூ.30.00 இலட்சம் செலவில் 10 ஆய்வு மாணாக்கர்களுக்கு நிதியுதவி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

10.18. அரசுக் கல்லூரிகளின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வுக் கட்டமைப்பை மேம்படுத்துதல்

இத்திட்டத்தின் வாயிலாக நமது மாநிலத்திலுள்ள அரசு கல்லூரிகளில் அறிவியல் ஆய்வுக் கட்டமைப்புகளான ஆய்வுக் கூட வசதி மற்றும் ஆய்வு உபகரண வசதி ஆகியவற்றை மேம்படுத்த நிதியுதவி வழங்கப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.15.00 இலட்சம் செலவில் 3 அரசுக் கல்லூரிகளில் ஆய்வுக் கட்டமைப்புகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

10.19. பன்னாட்டு இந்திய அறிவியல் விழா

ஐந்தாவது பன்னாட்டு இந்திய அறிவியல் விழாவானது, 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம், 4 நாட்களுக்கு கொல்கத்தாவில் உள்ள அறிவியல் நகரத்தில் நடைபெற்றது. அறிவியல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தின் பங்களிப்பு மற்றும் சாதனைகள் குறித்து விளக்கும் வகையில் மன்றத்தின் அனைத்துத் திட்டங்களும் அரங்கில் காட்சிப்படுத்தப்பட்டன.

10.20. காப்புரிமை தகவல் மையம்

மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறையின் நிதியுதவியுடன் காப்புரிமை தகவல் மையம் இம்மன்றத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தின் வாயிலாக கல்வியாளர்கள் தங்களின் அறிவுசார் உடைமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு, 14 அறிவுசார் சொத்துரிமை பிரிவுகள் பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. இம்மையத்தின் வாயிலாக 2019-2020 ஆம் ஆண்டு "திண்டுக்கல் பூட்டுக்கு" புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது. மேலும் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்துடன் இணைந்து "கொடைக்கானல் மலைப்பூண்டுக்கும்" புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது. மேலும் இம்மையத்தால் நமது மாநிலத்தில் 33 காப்புரிமைகள், 11 வடிவமைப்புகள், 26 பதிப்புரிமைகள் மற்றும் ஒரு வணிகக் குறியீடு

2020 மார்ச் 12]

ஆகியவற்றைப் பதிவு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. நமது மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் 23 விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

10.21.தேசிய கணித தினம் மற்றும் அறிவியல் தின கொண்டாட்டங்கள்

தலைசிறந்த இந்திய கணித மேதை சீனிவாச இராமானுஜன் அவர்களின் பிறந்த நாள் மற்றும் அறிவியல் அறிஞர் பாரத ரத்னா சர்.சி.வி. இராமன் அவர்களின் அறிவியல் பங்களிப்பைப் போற்றும்வண்ணம், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் இந்திய அரசின் தேசிய அறிவியல் தொழில்நுட்ப தொடர்பு மன்றத்தின் நிதியுதவியுடன், தேசிய கணித தினம் (22 டிசம்பர்) மற்றும் அறிவியல் தினம் (28 பிப்ரவரி) கொண்டாட்டங்களை வேலூர், காஞ்சிபுரம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் நடத்தியது. வினாடி வினா, கருத்தரங்கம், கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு ஊர்வலம் ஆகியவை நடத்தப்பட்டன. 2019-2020 ஆம் ஆண்டில் இக்கொண்டாட்டத்தின்போது பல்வேறு நிகழ்வுகளில் பல்வேறு மாவட்டங்களிலுள்ள 100 பள்ளிகளிலிருந்து 5,000 ஆர்வமுடைய மாணாக்கர்கள் நேரிடையாகப் பங்கேற்றனர். ஏறத்தாழ 20,000 மாணாக்கர்கள் மற்றும் பொது மக்கள் பார்வையிட்டனர்.

10.22. பள்ளி மாணவர்களுக்கான STEM செயல்பாடுகள்

STEM *என்பது அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதத்தை செயல்பாடுகள் மற்றும் செயல்முறைகளோடு மாணாக்கர்கள் அறிந்துகொள்வதற்கான ஒரு முயற்சியாகும். 6 முதல் 8 ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு கணிதம், பொறியியல், அறிவியல் தொழில்நுட்பம் செயல்பாடுகளை அறிந்துகொள்ள 3 நாட்களுக்கு அறிவியல் சார்ந்த தொழில்நுட்பங்களில் பயிற்சிகள் அளிக்கப்படும். இப்பயிற்சிக்காக மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறையானது 2019—2020 ஆம் ஆண்டில் ரூ.19.00 இலட்சத்தை வழங்கியுள்ளது.*

[2020 மார்ச் 12

11. தமிழ்நாடு மாநில உருது கழகம்

11.1. மாநிலத்தில் உருது மொழியை வளர்ப்பதற்கு தமிழ்நாடு மாநில உருது கழகம் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டது. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இக்கழகத்தின் தலைவர் ஆவார். தற்போது, மாநிலத்தில் உள்ள கல்லூரிகளில் உருது மொழி பாடம் நடத்தப்படுகிறது.

11.2. இக்கழகத்தின் பணிகள், தேசிய வணிகர் கூட்டமைப்புடன் இணைந்து கவியரங்கம் நடத்துதல் மற்றும் உருது மொழியில் சிறந்து விளங்கும் கவிஞர்களுக்கும் மற்றும் மாநில அளவில் இடம் பிடித்த மாணாக்கர்களுக்கும் விருது மற்றும் பணப் பரிசு வழங்குதல் ஆகியவை ஆகும்.

12. தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம்

12.1. தமிழகத்தில் மிகுதியான அளவில் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் தொடங்கப்பட்டதால், தொழில்நுட்பக் கல்வியின் வருங்கால வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, தொழில்நுட்பக் கல்வியில் அரசுக்கு ஆலோசனை வழங்கிட தனியே ஒரு "தொழில்நுட்பக் கல்வி மன்றம்" நிறுவலாம் என மாநில அரசு முடிவு செய்து, "தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றச் சட்டம் 2010" தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

12.2. செயல்பாடுகள்

- *ஆங்கில மொழிக்கான இணைப்புப் பயிற்சி (*Bridge Course*) எனும் சிறப்புப் பயிற்சி அண்ணா பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டது.*

- *தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி மன்றத்தால் தொழில்நுட்ப ஆங்கிலம், பொறியியல் இயற்பியல், பொறியியல் கணிதம் குறித்த கல்வி தரவு மூலங்கள் 500 பொறியியல் கல்லூரிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன.*

- *அண்ணா பல்கலைக்கழகத்தோடு இணைந்து சென்னை, தொழில்நுட்பக் கல்வி இயக்கக தொழில்நுட்பக் கல்வித் தர*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மேம்பாட்டுத் திட்டச் சேவை மையத்தின் ஒருங்கிணைப்பில், “ஆங்கில மொழி கற்பித்தலில் பிற மொழிச் சொற்களின் இன்றைய நிலை” குறித்து கேம்ப்ரிட்ஜ் பேராசிரியர்களைக் கொண்டு பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

- தமிழ்நாடு மீன்வள பொறியியல் சார்நிலைப் பணிக்கான தொழில்நுட்ப உதவியாளர் தேர்வுக்கென தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையத்திற்காக தொழில்நுட்பத் தேர்வினை 2017-2018 ஆம் ஆண்டில் ஒருங்கிணைத்து நடத்தியது.

- அரசு பணியில் பணி அமர்த்திட உரிய கல்வித் தகுதியை தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம் நிர்ணயிக்க ஏதுவாக பல்வேறு தொழில்நுட்பக் கல்வி பட்டப் படிப்புகளின் ஒத்த நிலை குறித்து 25-க்கும் மேற்பட்ட இனங்களில் தொழில்நுட்பக் கருத்து வழங்கப்பட்டது.

- பணியமர்த்தும் அலுவலர்களுக்கான பயிற்சியினை அனைத்து பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின் முதல்வர்களுக்கும், பணியமர்த்தும் அலுவலர்களுக்கும் அளித்து இந்திய தொழில்நுட்ப நிறுவன ஆராய்ச்சி பூங்கா (IIT-RP) தரமணி மற்றும் சீமென்ஸ் ஆராய்ச்சி கூடம், குரோம்பேட்டை ஆகிய இடங்களில் களச் சுற்றுடன் செப்டம்பர்-அக்டோபர் 2019 இல் நடத்தப்பட்டது.

- தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சிக்கென 10 இன்றியமையா குறியீடுகளில் முன்னேற்றம் அடைய வழிவகுக்கும் பாதை என முன்னோக்குத் திட்டம் வகுக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்கும், அமல்படுத்திடவும் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

————

[2020 மார்ச் 12

அமைப்பு முறை வரைபடம்

- முதலமைச்சர்
 - அமைச்சர் (உயர்கல்வி)
 - தலைமைச் செயலாளர்
 - முதன்மைச் செயலாளர் (உயர்கல்வி)

துறைகள்

- தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்
- கல்லூரிக் கல்வி இயக்ககம்
- தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
- தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்
- தேசிய உயர்கல்வித் திட்டத்திற்கான மாநில திட்ட இயக்குநரகம் (RUSA)
- அறிவியல் நகரம்
- தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்
- தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்
- தமிழ்நாடு மாநில உருது கழகம்
- தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம்

பல்கலைக்கழகங்கள்

- சென்னை பல்கலைக்கழகம்
- மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
- அண்ணா பல்கலைக்கழகம்
- பாரதியார் பல்கலைக்கழகம்
- பாரதிதாசன் பல்கலைக்கழகம்
- அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
- அழகப்பா பல்கலைக்கழகம்
- மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
- பெரியார் பல்கலைக்கழகம்
- தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
- திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
- தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
- அண்ணாமலை பல்கலைக்கழகம்

தொழில்நு

2019-20 ஆம் ஆண்டில் பொறியியல் கல்லூரி

மாணாக்கர்கள்

கல்லூரிகளின் வகைகள்	கல்லூரிகளின் எண்ணிக்கை	பொது		பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (மற்றவர்)		பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்)		மி பிற்படு வகு சீர் ப
		ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்
அரசு பொறியியல் கல்லூரிகள்	10	56	28	968	630	108	26	641
அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள்	3	244	84	956	551	58	27	343
சுயநிதி பொறியியல் கல்லூரிகள்	554	8102	3092	29311	15262	3315	851	14789
அண்ணா பல்கலைக்கழக கல்லூரிகள்	20	320	174	1546	944	194	63	975
மொத்தம்	587	8722	3378	32781	17387	3675	967	16748

...ட்பக் கல்வி
...களில் முதலாம் ஆண்டு பி.இ/பி.டெக்/பி.ஆர்க் ...சேர்க்கை விவரம்

...கவும் ...த்தப்பட்ட ...ப்பினர்/ ...மரபினர்	ஆதிதிராவிடர்		ஆதிதிராவிடர் (அருந்ததியர்)		பழங்குடியினர்		மொத்தம்		மொத்த சேர்க்கை
பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	
277	321	233	66	29	23	5	2183	1228	3411
166	197	110	38	16	14	7	1850	961	2811
6077	8218	5150	1341	979	338	203	65414	31614	97028
489	523	321	60	44	12	17	3630	2052	5682
7009	9259	5814	1505	1068	387	232	73077	35855	108932

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தொழில்நுட்

2019-20 ஆம் ஆண்டில் பலவகை தொழில்நுட்பக்

மாணாக்கர்கள் (

கல்வி நிறுவனங்களின் வகைகள்	கல்லூரிகளின் எண்ணிக்கை	இதர பிரிவினர்		பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (மற்றவர்)		பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்)		மிகவு பிற்படுத்த வகுப்பி சீர் மரபி
		ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்
அரசு கல்லூரிகள்	51	114	26	4081	580	493	31	4415
அரசு நிதிஉதவி பெறும் கல்லூரிகள்	34	308	40	4404	466	589	29	2670
இணைப்பு பெற்ற பயிலகங்கள்	4	13	-	70	-	6	-	82
சுயநிதி கல்லூரிகள்	404	3372	409	17431	1343	2805	107	13587
உணவு மேலாண்மை மற்றும் உணவு வழங்கல் பயிலகங்கள்	14	-	-	12	-	2	-	11
மொத்தம்	507	3807	475	25998	2389	3895	167	20765

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

...ட்பக் கல்வி
...க் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பட்டய வகுப்பு ...சேர்க்கை விவரம்

...யும் ...தப்பட்ட ...னர் / ...பினர்	ஆதிதிராவிடர்		ஆதிதிராவிடர் (அருந்ததியர்)		பழங்குடியினர்		மொத்தம்		மொத்த சேர்க்கை
பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	
556	2403	444	213	86	81	15	11800	1738	13538
239	1093	170	165	37	25	5	9254	986	10240
-	54	-	3	-	3	-	231	-	231
914	12663	1678	1256	237	396	83	51510	4771	56281
-	5	-	-	-	-	-	30	-	30
1709	16218	2292	1637	360	505	103	72825	7495	80320

கல்லூரி

2019-20 ஆம் ஆண்டில் கலை ம

கல்வியியல் கல்லூரிகளில்

கல்லூரிகளின் வகைகள்	இளநிலை	முதுநிலை	ஆ நி
அரசு கல்லூரிகள்	83432	16580	
அரசு உதவிபெறும் கல்லூரிகள்	75519	13992	
பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள்	14399	1325	
சுயநிதி கல்லூரிகள்	145080	19160	
மொத்தம்	318430	51057	

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

க் கல்வி

ற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும்

) மாணாக்கர்கள் சேர்க்கை

சேர்க்கை விவரம்			
...ய்வியல் நிறைஞர்	கல்வியியல்	முனைவர் பட்டம்	மொத்தம்
1286	927	691	102916
1235	1730	612	93088
3	-	22	15749
5148	51350	764	221502
7672	54007	2089	433255

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பல்கலைக்

2019-20 ஆம் ஆண்டில் பல்கலைக்கழ

எண்ண

வ.எண்.	பல்கலைக்கழகத்தின் பெயர்
1	சென்னைப் பல்கலைக்கழகம்
2	மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
3	அண்ணா பல்கலைக்கழகம்
4	பாரதியார் பல்கலைக்கழகம்
5	பாரதிதாசன் பல்கலைக்கழகம்
6	அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
7	அழகப்பா பல்கலைக்கழகம்
8	மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
9	பெரியார் பல்கலைக்கழகம்
10	தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம்
11	திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
12	தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
13	அண்ணாமலை பல்கலைக்கழகம்
மொத்தம்	

கழகங்கள்

க வளாகத்தில் பயிலும் மாணாக்கர்களின்
ணிக்கை

	மாணவர்களின் எண்ணிக்கை		மொத்தம்
	ஆண்	பெண்	
	1,401	1,959	3,360
	729	719	1,448
	4,958	3,359	8,317
	1,221	1,843	3,064
	918	1,314	2,232
	-	726	726
	1,715	3,165	4,880
	771	1,547	2,318
	710	1,276	1,986
	37	45	82
	80	206	286
	35	40	75
	11,739	10,127	21,866
	24,314	26,326	50,640

பல்கலைக்

2019-20 ஆம் ஆண்டில் தொலைதூரக் கல்வி வா

வ.எண்.	பல்கலைக்கழகத்தின் பெயர்
1	சென்னைப் பல்கலைக்கழகம்
2	மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
3	அண்ணா பல்கலைக்கழகம்
4	பாரதியார் பல்கலைக்கழகம்
5	பாரதிதாசன் பல்கலைக்கழகம்
6	அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
7	அழகப்பா பல்கலைக்கழகம்
8	மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
9	பெரியார் பல்கலைக்கழகம்
10	தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம்
11	திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
12	தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
13	அண்ணாமலை பல்கலைக்கழகம்
	மொத்தம்


கழகங்கள்

யிலாக பயிலும் மாணாக்கர்களின் எண்ணிக்கை


மாணவர்களின் எண்ணிக்கை			மொத்தம்
ஆண்	பெண்	மூன்றாம் பாலினத்தவர்	
33,252	37,189	11	70,452
7,063	5,502	-	12,565
1,264	1,033	-	2,297
14,397	13,773	-	28,170
11,888	21,034	-	32,922
-	3,464	-	3,464
27,083	26,542	-	53,625
5,361	5,830	1	11,192
6,914	6,305	-	13,219
13,658	17,985	3	31,646
-	-	-	-
-	-	-	-
70,276	70,843	-	1,41,119
1,91,156	2,09,500	15	4,00,671

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


இந்தியா, தமிழ்நாடு மற்றும் முக்கிய
சேர்க்கை வி




மாநிலங்களின் மொத்த மாணக்கர்கள்
ிகிதம் (GER)



ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின
சேர்




மாணாக்கர்களுக்காக (பாலினப்படி)
க்கை




மாநில வாரியான இரட்டை

(2018-




முறை பல்கலைக்கழகங்கள்

-2019)




2018-2019 ஆம் ஆண்டிற்கான மு
சேர்




TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

...னவர் பட்டத்திற்கான மாணாக்கர்கள்
...க்கை



2018–2019 ஆ


ஆய்வியல் பட்டத்திற்கா



———

ம் ஆண்டிற்கான

ன மாணாக்கர்கள் சேர்க்கை



——

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.